உ.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசற்குருவேதுணை.

வசிட்டமுனிவர் ஸ்ரீராமருக்கு உபதேசித்தருளிய

ஞானவாசிட்ட

வாலராமாயணவசனம்.

இஃது

பி. தெய்வசிகாமணிமுதலியார்

அவர்களால்

[illegible]

சேலம் - கப்பையபிள்ளையவர்கள்குமாரர்

சே. கன்னுசாமிபிள்ளை

[illegible]

சென்னை, [illegible]

வித்வான் - செங்கல்வராய

முருகேசமுதலியாரவர்கள்

முன்னிலையில்

வித்வான் - திருமயிலை

பொன்னிரத்தினமுதலியாரவர்கள் - மாணாக்கர்

மாசிலாமணிமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு,

கொ. மாணிக்கமுதலியாரவர்கள்

சென்னை:

மநோன்மணிவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1892

உ

கடவுள் துணை.

விளம்பரம்.

இப்பரதகண்டத்தின்கண்ணே வசிக்கின்ற ஒவ்வொருமகான்கள் முதலியயாவருக்குந் தெரிவிப்பது யாதெனில், அயோத்திமாநகரத்திற் கதிபதியாயிருந்து மநுநீதிதவறாது நிலைபெற்று அரசுசெய்த தசரதர் திருக்குமாரராகிய ஸ்ரீராமபிரானுக்குத் தவசிரேஷ்டராகிய வசிட்டமுனிவருபதேசித்தருளிய வமலராமாயணமென்னும் **ஞானவாசிட்ட வசனம்**, இப்போது நன்கு மதிக்கத்தகுந்த கடிதத்தில் வெகுதிருத்தமாக என்னால் அச்சிட்டு முடிவு பெற்றிருக்கின்றது, ஆகையால் விருப்பமுடையவர்கள் ஸ்ரீரங்கப்பட்டணம் சுப்பிரமணியமுதலியார்வீதி உ௮-வது எண்ணுள்ளகிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திலும், சிதம்பரம் மேற்கோபுரவாயல் வீதி மண்டபத்தில் வைத்திருக்கும் என்புத்தகஷாப்பிலும் அடியிற்கண்டவிதிதப்படி தொகை செலுத்தி ஷை புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரம்.	விலை.	தபாற் கூலி.
ஆப்பவுண்டு புத்தகம் க-க்கு ... க	ச 0	... 0 ௩ 0
புல்பவுண்டுகலிக்கா புத்தகம் க-க்கு ... க	அ 0	... 0 ௩ 0

இப்படிக்கு,

தொண்ணூர்-மாணிக்கமுதலியார்,

உ௮ - நெ. சீரங்கப்பட்டணம் சுப்பிரமணியமுதலியார் வீதி,

சென்னை.

PRINTED AT THE MANONMONIVILASAM PRESS—MADRAS.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசற்குருவே நம:.

ஞானவாசிட்ட வாலராமாயண கதையின்

சங்கிரகம்.

வால்மீகிமுனிவர், பரத்துவாசருக்கு அநுக்கிரகிக்கப்பட்ட சம்பூரணமானது, அப்போதைய மாய்ப்பொருட்டு வசிட்டமுனிவர், இராம னுக்கு உபதேசம் பண்ணியதாகிய நீதிக்கு முதன்மையாகிய கதையின் சொல் லத் தொடங்கினதாம்.

ஸ்ரீராமர், வசிட்டமுனிவரோடு தசரதர் அநுக்கிரகம் பெற்றுக்கொண் டு தம்பிமார்களோடு தீர்த்தயாத்திரை செய்து மீண்டபின்பு ஞா னமார்க்கத்தில் விருப்பமுற்றவராய் சகலத்தையும் வெறுத்தவராய் இராஜ்யமாகிய சா தனை சகலமும் விடுத்து குருகிருபையுண்டாக அப்போது ஆசாரிய ரையழைக்க, விசுவாமித்திரமுனிவர் யாகசம்ரக்ஷணையின்பொருட்டு எழுந்தரு ளிவந்து, அரக்கரைச் சிதைக்க ஸ்ரீராமரை யஞ்ஞவேள்விக்கு அனுப்புக என்றுரைக்க, தசரதர் குமாரனைப் பிரிய மனமில்லாமல் முனிவர் அவரைத் திருப்பி அனுப்ப ... ஸ்ரீராமர் தீர்த்தயாத்திரைசெய்து வந்தநாள்முத லாக சகலத்தையும் வெறுத்திருக்கின்றனர் என்பதை ... இராமனை அழைத்து வந்து, ... முனிவர் சிந்தையை ... வசிட்டமுனிவரை நோக்கி, இராமர் ஸ்ரீவைராக்கியத்தை ... சித்தத்தில் ... ஆத்ம ஞானத்தை உபதேசித்து, விசுவாமித்திரமுனிவரும் ... செய்யும் தேகத்தை விடுவிக்க ... முனிவர்கள் அபிப்பிராயம் தெரிந்து கொள்ள வேண்டியவராயிருந்தார்.

ஞானமயமான சிதாகாசத்தில், தேவர்கள் முனிவர்கள் ... இராமனைப்போல் இவன் சகலத்தையும் ... திரண்டிருக்கும் சபையில் விசுவாமித்திரமுனிவர் ... வசிட்டமுனிவர் ... சொன்னார்.

ஸ்ரீராமர், மனநிலை ... பொருளே பொருள், வேறுபொருள் இல்லையெ ன்று ... சொல்லவேண்டும், ... ஸ்ரீராமர் ... முனிக்கு ... ஆத்மஞானம் ... அநுக்கிரகித்து ... அப்படியே ... அநுக்கிரகஞ்செய்து ... ஞானக்கதைகள் ... சொல்லவேண்டுமென்று, ... அறிவைக்கொண்டு அத்துவைத ... சாக்ஷாத்காரம் பெறும்பொருட்டு, சனகர

சனருளியபடியே, இராமனறிந்த அறிவைக்கொண்டு அவர் சுவானுபூதி சாக்ஷா
த்கார மாகும்பொருட்டு அவர்க்குதயமான முத்திவிருப்பத்தை வைப்புறுத்தவ
சிட்டமுனிவர் முமூட்சுப்பிரகரணத்தைக்கூறி, சாதனசதுஷ்டயத்தில் மூன்
றுசாதனமு நிறைந்து நான்காஞ்சாதனமான முமூட்சுவில் அதிதீவரனுன இ
ராமனுக்கு அத்துவித ஸ்வரூபத்தையும், அஃதடையு முயற்சியையும், அதற்குக்
கருவியான சுத்தவாசனையையும், அதற்குச்சகாயமான சாந்தியாதிகுணங்களை
யுஞ்சொல்லி, அத்துரியஞானம் பிரசன்னமாம்பொருட்டு சிருஷ்டிக்குமுன், ச
த்தாமாத்திரமாகியும், சதோதயமாகியும், பிரகாசிக்கின்ற பிரம்மத்தின் லீலாச
மீபத்தில் பிரதிபலனமான சைதன்னியமே சகத்துற்பத்தியென்றும், அதன்வி
ளக்கமே சகஸ்திதியென்றும், அதனடக்கமே சகசாந்தமென்றும், இம்மூன்றி
னும் ஒருதன்மயவாகவிளங்கு மதிஷ்டான சைதன்னியமே நிருவாணமாகுமெ
ன்றும் இன்னுன்கு பிரகாரத்தால் சர்வமும் பிரம்மமயமென்பதையும் ராமரு
க்குவுபதேசிக்க, காணப்பட்டயாவுஞ் சைதன்னியவடிவமாகப் பார்க்கும்போது
உதயமானசுகஸ்வரூபமாய் விளங்குவாயென்றும், இக்கணமே ஆத்மாதீதமா
கவிளங்கும் போதாகாரமாய் சகலகிருத்தியங்களுஞ் செய்வாயென்றும், நித்தி
யசுகபோதமான சிவஸ்வரூபமே யாவுமாய் விளங்குதென்னுஞ் சுவானுபூதியே
கருமத்தியாகமென வாக்கியார்த்த உபதேசத்தை வசிட்டமுனி முகித்தார். இக்
தப்பிரகாரஞ் சீவன்முத்தித் தன்மையிலிருந்து, இராமா, இராஜாங்கத்துக் குரி
த்தான துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்வாயென்று சொல்லியபடியே
ஸ்ரீராமர்செய்து பின் விதேகமுத்தியை யடைந்தார், இதைபரத்துவாச முனிக்
கு வால்மீகமுனிவர் அனுக்கிரகஞ்செய்ய, அந்தப்ரகாரம் பரத்துவாசரும் நிர
திசயாநந்த சைதன்ய சாக்ஷாத்காரமான சீவன்முத்தி பதத்திற் சுகித்திருந்து
பின்விதேக முத்தியை யடைந்தன ரென்பதாம்,

ஞானவாசிட்ட வமலராமாயன சங்கிரகம்

முற்றிற்று.

உ

பாயிரம்.

வீரை ஆளவந்தாரென்னும்முனிவர், திராவிடபாஷையிற் பாவினமாக
வருளிய ஆத்மஞானசாஸ்திரத்துக்கு, திருத்துருத்தியென்னும் திருப்பதியின்
கண் ணெழுந்தருளி விளங்கிய ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகி
ய இந்திரபீடம்கரபாத்திர ஸ்வாமிகளென்னும் சதாசிவப்பிரம்மேந்திர யோகீ
ஸ்வருடைய வாதீனத்துக்குரியராகிய திருநாகை-அருணசலஸ்வாமிகளுடைய
பிரதமசிஷ்யராகிய பிறைசை-அருணசலஸ்வாமிகளால் வடநூலாருயிரத்தின்
சமுத்திரதரணியென்னும் வியாக்கியானம், பிறைசை - அஷ்டகோத்திரம்சிங்
கராசாரியாராலும், காஞ்சீபுரம்-இந்திரபீடம் - உபநிடதப்பிர்ம்ம யோகீஸ்வர
ராதீனபரராகிய இராமப்பிர்ம்மேந்திரயோகீஸ்வரர் அனுக்கிரகித்த முப்பத்தி
ராயிரம் திருக்கோட்டியூர் சுந்தராசாரியராலும், தத்துவபோதினியென்னும்
வியாக்கியானம், மோசூர்-சுப்பாசாஸ்திரியாலும் ஒத்துக்கொண்டு அதன்கருத்
தை யனுசரித்த அவதாரிகைமுதலிய வைந்திலக்கணமாகப் பகுத்துச் செய்ததி
ன்படி அவதாரிகை, தாத்பரியம், இவைகளோடு உத்திரம், வசனரூபமாகப் பதி
ப்பிக்கபட்டது.

ஓம்

சிவமயம்.

ஞானவாசிட்டம்.

வயிராக்கியப்பிரகரணம்.

அவதாரிகை.

வடமொழியிலுள்ள ஞானவாசிட்டநூலைத் தமிழ் செய்யுளில் மொழிபெயர்க்கப் புகுந்த இந்நூலாசிரியர் இஃது நிர்விக்கினமாய் நிறைவேறும்பொருட்டு விநாயகமூர்த்தியைச் சகுணமாகவும், நிர்க்குணமாகவும் உபாசனைசெய்கின்றார்.

பெண்மைபாதியன் பெற்றகளிற்றினை
யண்மைதூர மறவகத்துன்னுவாந்
திண்மைஞானச் சிறப்புயர்வாசிட்ட
முண்மையாக வொருங்குரைசெய்யவே.

(இதன்பொருள்.) திடம்பொருந்தியவாக்கியார்த்த போதச்சிறப்பினால் மேன்மையாகவிளங்கிய ஞானவாசிட்டத்தை, கீர்வாணத்திலுள்ளபிரகாரமாக தமிழ்ச்செய்யுளான் முழுதுஞ் சாற்றும்பொருட்டு உமைபாகனாகிய பரமசிவன் ஈன்றருளிய யானைமுகத்தினை யுடைய விநாயகமூர்த்தியை அணிமைசேய்மையின்றி இடைவிடாம லுள்ளத்தின்கண் சிந்திப்பாம்.— ¶

க. கவி. அவதாரிகை. வசிட்டோபதேசமான சுவானுபவத்தைக் கீர்வாண ஸ்லோகமாய்ச் சொல்லப் புகுந்த வடநூலாசிரியர், இந்நூல்நிர்விக்கினமாய் நிறைவேறி யாவருஞ் சிரவணஞ் செய்யும்பொருட்டு ஆத்மஞான சாட்சாத்கார ஸ்வரூபத்தைநிருபாதிக நிலைபெற்ற ஞானப்பிரகாசமே சுவர்க்கலோகத்திலும், பூலோகத்திலும், அந்தரிக்ஷலோகத்திலும், என்னுடைய வகத்திலும், புறத்திலும், விளங்காநின்றது, வெருக்வங்க ளனைத்துமாய் நிறைந்தி— மாகா

¶ இதனதுதாற்பரியம். இந்நூலில் கூடஸ்தபிரமைக்கியத்தி னதுதாம். நின்ற சுவானுபூதி சாட்சாத்காரத்தை விநாயகமூர்த்தியாகக்கூறினர்.

நிட்டையினுலுஞ் சோபாதிக நிட்
டையினுலும் விலட்சண சலட்சண
மாக வுபாசனைசெய்கின்ருர்.

கின்றது, அவ்வஸ்துவை திரிகர
ணங்களாலும் இரண்டறத் தொ
ழுதுவணங்குவாம்.— ‡

உ. கடவுள்வணக்கங் கூறி நூற்பெருமை நுவலுகின்றது.

பிரகாசியாநின்ற பிரமன்முதலிய கடவுளராகிய மும்மூர்த்திகளாலும், சமஸ்தசுருதிகளாலும், சகல சாத்திரங்களாலும், சொல்லப்பட்ட வாசிட்டமென்னுஞ் சிறப்பாகிய ஞானசாஸ்திரம் ஆத்மஞானத்தினுல் நிறைந்திருக்கின்றது.— § நிலைபெற்ற வாசிட்டமாகிய மேலான ஞானசாத்திரமானது

ஙு. இதுவுமது.

முதன்மையாகிய பிரமதேவனது இதயகமலத்துக்கு ஞானசூரியனுகவும், தனுசை யெடுப்பதற்கு மனமில்லாத முமூட்சுப்பருவத்தை யுடைய இராமனது சிறப்பான சிரவணத்துக்கு தெளிவாகிய வானந்தாமிர்தமாகவும், சலனமில்லாத வான்மீகிரிஷியினுடைய அனுபூதிவசனத்தினுதயமாகிய சத்தாகவும் விளங்குகின்றது.— † அறிவிற்பெரிய

ச. இதுவுமது.

மகத்துக்களால் தன்மயமா யறியத்தக்க மேன்மை நிறைந்தது, மனேசங்கற்பம்விரியப்பெற்றவற்பவறிவையுடையவர்களால் அனுபவமாயறியத்தகாதது, அறிவிக்கத்தக்க முறைமையிற்சிறந்தது வாசிட்டநூலானது, அறிதற்கரிய மெய்ஞ்ஞானத்தை யறிவியாநின்ற ஞானசாத்திரங்கள் எல்லாவற்றிலுமேலானதாம்.— ¶ தன்னைத் தெரிந்துகொள்ளும்

ரு. அருள்வடிவமாயிருத்தல்.

அறிவில்லாத புத்திரருக்கு ஞானுகாரத்தையூட்டி ஆத்மசம்ரட்சணை யென்னும் இதத்தைச் செய்யாநின்ற தன்மையினுல் அரியவாசிட்டநூலாகிய அன்னைக்குவிடையாகாரத்தையூட்டி தேகசம்ரட்சணை செய்யாநின்றதாயானவள்சமானமாவாளோ, தேகத்துக்குரித்தான தாயானவள் விடயவாசனையையுண்டாக்கிச் சநநத்தைமாருமல் நிலைபெறச் செய்வள், பெருமைபொருந்திய வாசிட்டநூலென்னுந் தாயா

---

‡ இதனதுதாற்பரியம். அத்தொய்த சித்தாந்தமான வேதாந்தங்களினது மகாவாக்கியார்த்தத்தின்படியே விலட்சணமாகிய கூடஸ்தபிரமைக்கியஞானத்மவியாபகத்தை நிருபாதிகநிட்டையினுலும், பின்பு சலட்சணமான சர்வமுஞ் சச்சிதாநந்த பிரமமென்கின்ற வாத்மஞான சாட்சாத்காரத்தை சோபாதிக நிட்டையினுலும் அவிதமின்றி வணக்கங்கூறியதாம்.

§ இதனதுதாற்பரியம். இந்நூல்சுருதி குருசுவானுபவத்தை விளக்குகின்ற பிரபலச்சுருதியாம்.

† இதனதுதாற்பரியம். இந்நூல், சிவேஸ்வரஜகங்கள் சச்சிதானந்தப்பிரமமயமென்பதை யறிவிக்கின்றதாம்.

¶ இதனதுதாற்பரியம். சகலமும்பிரமாநந்த சாட்சாத்காரமாகவிளங்குமநீதானுபூதியை யுணர்த்தும் பிரபலசுருதியாயிருக்கின்ற இந்நூலென்பதாம்.

௬. நூற்பெருமை நுவன்று அவை யடக்கங் கூறுகின்றது.

௭. அவை யடக்கங்கூறி அதிகாரியி லக்கணங்கூறியது.

௮. அதிகாரி குருமுகமாய் விசாரித்தல்.

௯. விசாரித்த சீடனது மோகநிவர்த்தியின் பொருட்ட தனுற்பத்திகூறல்.

னவள் பிரமானந்தவாசனையை யுண்டாக்கி இச் சநநத்தை நீக்குவாள்.— ‡ எண்ணத்தகுந்த மகா சாந்தகுணத்தையுடைய இராகவன், தனதாத்மஸ்வரூபத்தையுடைய வசிட்டமுனியானவ ரனுக்கிரகஞ்செய்த ஞானார்த்தத்தையே, வான்மீகமுனிவரால் வடமொழியி லருளிச்செய்யப்பட்ட இவ்வாசிட்டமென்னும்ஆத்மஞானசாத்திரத்தை சொர்ண பாத்திரத்தில் வைக்கத்தகுந்த அமிர்தத்தை மிர்த்திகா பாத்திரத்திலும் வைக்கத்துணியு மேழை யேனாகிய யான் இசையமைந்த தென்மொழியினால் சொல்லுவேன்.— § இவ்வாசிட்டநூலுக் கதிகாரியானவன் அஞ்ஞானியுமல்லன், மனோதுன்ப நீங்கும்படி ஞானாத்மாவையடைந்த சீவன்முத்தனுமல்லன்,யான் பந்தத்தையடைந்திருக்கின்றேன்; இதைநீக்கி இனி மோக்ஷத்தைச் சேரக்கடவேனென்று சிந்திக்கும் அந்நிச்சயத்தை யுள்ளவனேயென்று கொள்ளக்கடவது.— முழுதையு முணர்ந்த ஆசாரியராகிய மேலானவான்மீகமுனிவரைபரத்துவாசமுனிவர் நமஸ்காரஞ்செய்து கொடிய பிறவியிற்செறிந்த வெவ்வியசம்சாரதுன்பத்தில் அரிய சத்துவ குணத்தையுடைய இராமனிருந்த தெப்படி ? தேவரீர் கிருபையினா லனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று மிருதுவாகக் கேட்டார்.— †

புதல்வனாகியபரத்துவாசனே!நீகேட்டவினாபரமசுகத்தைவிளக்கு நன்மையுள்ளதாம், நீ நிருவாண சுகத்தைக் கேட்பதற்குரித்தான சாதன சதுஷ்டய சம்பத்துள்ளவன் யானதைச் சொல்லுவேன் கேட்பாயாக ; துன்பஞ்செய்கின்றஅஞ்ஞானத்தை நீ ஜெயஞ்செய்யலாம், மோகமானது ஜகத்சம்பந்தமாய், வளமைதங்கிய ஆகாயத்தில் இல்லாத நீல நிற முண்டானதுபோல, பிரமனிடத்தி லில்லாத

---

‡ இ-ம். இக்நூல்அநித்தியமான விடயாநந்தத்தைமாற்றி நித்தியமானபிரமாநந்தத்தைக் கொடுக்கின்ற கருணையில்மிகுந்தினதாம்.

§ இ-ம். இத்தமிழ்நூல் சர்வத்திரசாதாரணமாயிருந்து பக்குவருக்குச் சுவானுபூதியை விளைவிக்கின்றபடியால், சீவகாருணியமுள்ள சத்துக்கள் மிருந்தவசமகிட்சியோடும் மேன்மையாகக் கொள்வரென்பதாம்.

† இ-ம். பரிபக்குவமானசீடன் சீவன்முத்தித்தன்மையை விசாரித்ததாம்.

௧0. மாயாவிலக்கணங்கூறி அதை நிவிர்த்திக்கு மனுபூதி யிலக்கணங்கூறல்.

௧௧. திருக்குவைச்சொல்லி திரிசிய சிருஷ்டி நீக்கா விடில் பரமசுகமுண்டாகாதெனல்.

௧௨. திரிசிய விஸ்மரணமான வாசனாத்தியாகம் பெரியோர்க்குஞ் சம்மதமாமெனல்.

௧௩. வாசனையை நிவர்த்திக்கும்பொருட்டு அதன் விசேடணநிரூபித்தல்.

தாக வந்துபொருந்தும்.—* நித்தியமாகக் காணப்பட்ட இம்மோகமாகிய ஜகத்தை எவ்வளவேனும் திரும்ப நினையாமல் மறந்துவிடுவதே நன்மையென்றுநிச்சயித்து, ஸ்வரூபசமஸ்காரமான மகாமனாதுக்கு உள்ளதுபோலத்தோற்றப்பட்டசகமானது இதார்த்தமா யில்லவே யில்லையென்று ஞானத்தினால் உண்டாவ தெப்போதோ, அப்போதே மேலானநிருவாணசுகமாம்.—§ சதோதயமாய் ஒருவரா லுண்டாக்குவதற்கு உரியதல்லாததாய் சுயமாகவுண்டானநாசமில்லாத நிருவாணசுகமானது, வழிபடா நின்ற பரமஞானமான இந்த திரிசிய விஸ்மரணத்தைவிட்டு அப்பரஞானத்தை யுண்டா சாத்திரங்க ளென்கின்றபடியுக்திகளினாலுண்டு, அவி வின்மையாகிய குணத்தினால் பிறப்போர்க் கெல்லாம் எக்காலத்திலும் பொருந்தாதாம்.—¶ சஞ்சலத்தை விளைக்கின்ற வாசனையை பற்றறவிடுதலேயே நன்றென்றும் நிலைபெற்ற மோக்ஷமென்றும் மாசற்றமார்க்க மிதுவென்றும் மேலான சற்குருக்கள் சொல்லுவார்கள். அவ்வாசனை இரண்டு விதமாம்; அவற்றில், ஜகத்தைக்கொடுத்து நடுக்கத்தைச் செய்யாநின்ற அசுத்தவாசனையொன்று, அச்சகத்தை நிவிர்த்திசெய்கின்ற சுத்தவாசனை யொன்றும்.—‡ அஞ்ஞானத்திலாயமே தேகமாய்யிருந்த வகம்பாவநிறைந்து பலசனனத்தை மேலுமேலு முண்டாக்குவதை அசுத்தவாசனையென்று

---

* இ-ம். ஆகாயத்தில் நீலநிறமில்லாதிருந்தும் தெரிவின்மையினு லிருப்பதாய்த் தோற்றுவதுபோலப் பிரமஞானத்தில் ஜகத்மோகமித்தையாயிருந்தும் அஞ்ஞானபலமின்மையாற் பரமார்த்தம்போலத் தோற்றப்படுகின்றதென்று அத்தியாரோப யுத்தியாலறிவித்ததாம். அத்தியாரோபமாவது, இதார்த்தமான சச்சிதானந்தப் பிரத்தியட்சத்தை இல்லாத நாமரூபவடிவமான சகமாகவிபரீத பாவனையாற்காண்குதல்,

§ இ-ம். உபதேசித்த மகாவாக்கியார்த்தத்தோன்ற நான் சின்மாத்திரமாக விளங்குந்திருஷ்டியினாற் சகலமுஞ்சின்மாத்திரமாய் விளங்குமென்று மநுபவம்வந்தால் அதுவே நிரதிசயானந்தாபரோட்ச சாட்சாத்காரமாமென்று, இச்சுகமாயபவாத யுத்தியாலறிவித்ததாம், இவைகுருமுகத்தாற்றெரிந்துகொள்க.— அபவாதமாவது விபரீதபாவனையாற்பார்க்கின்ற இல்லாதநாமரூப வடிவமாகிய ஜகத்தை இதார்த்தமான சச்சிதானந்தவடிவமாகத் தெளிவினாற்காண்குதல்.

¶ இ-ம். சாத்திரஞானஞ் சிரமத்தின்பொருட்டேயன்றி திரிசிய விஸ்மரணம்போல நித்தியசித்த பரப்பிரமவிடயாபரோக்ஷானுபவமான விஸ்ராந்தியைக் கொடாதென்பதாம்,

‡ இ-ம். வாசனாத்தியாகமே விதேகமுத்தியெனச்சொல்லி அதன்சாமானிய லக்கணத்தைச் சொன்னதாம்,

பெரியோர்கள் சொல்லுவார்கள். மனுசகத்தின்கண் முனிவில்லாமல் சிறந்தவர்க்கிலியிருக்கின்ற முனி யாக விளைக்கும் சாமானியனை அம்மாமனை சுத்தமானவனென் றெய்துவகள் சொல்லுவார் கள்.— † பிராரத்த தேகத்தைத் தாங்குமனே யாவு தவிடாதவர் சுத்தவாதனைய யுடைத்து ஜனனாதிய வைத்ததில் எப்போதும் செல்லாத வர்களே, முடிவாயுள்ள முறைமையாத்தில் பார்க் கவேண்டிய ஞானவிஷயங்க ளனைத்தையும் பார்த் துகொண்டு சுகத்தையனுபவிக்கும் சீவன்முத்தர்கள் என்னும் பெயர்களென்று சொல்லப்படும்.— *

மட்டிலாப் பெற்றுள்ள சீவன்முத்தித் தன்மையைப் பெற்ற இராகவன் ஞானமுடைய னான் மேன்மேலும் பார்த்ததைச் சொல்லவேண்டு மி டத்தில் மேலேயான அறிவுடையனையும் விச்சிரமனை ந்திலும் சாமானியர்களைக் கீக்குமாப் புகல்வதை யென்று வான்மீகமுனிவராலே சொல்லத்தொடங் கினார்.— § வண்டு வேதங்களையும் கலைகளைக் கையும் அப்பியசித்து விளையாட்டாலும் ஒன்றின் மும் பயமறியாமல் பிறிதகமேலிருக்கும், விளையாட் டேராலும் கிம்பிச பிதாவும் வேதமென்னுமுன தா னைக் கண்டோய்நாடா இராமன், வேதவான இவ னுக்குத் தெரிக்கத்தக்க புண்ணியதீர்த்தங்க ளனைத்தையும், சத்துகங்களையும் புண்ணியாச்சிர மங்களையும், தரிசிக்குமெனறு.— ‡ பிதாவி னது பாதமென்னும் மூலியாக அப்போதுமதை அப்பாற்போல இராம னனைத்து மானவிக்கு, பன்னிரண்டு வருஷங்களாய்ப் புண்ணியதீர்த்தங்களை யும், தேவாலயங்களையும், முனிவர் தபோவனங்க

கஎ. சுத்த வாச னையுடைத்த சீவன் முத்த னிலக்கணங் கூறல்.

கஅ. சீவன் முத் த னிலக்கணங்கூறி இராமன் சீவன்முத் தருளா னெறியைச் சொல்லைத் தொடங் குதல்.

க௯. இராமன் தீர் த்தயாத்திரை விரு ம்பல்.

உ௦. பிதாவை விடுவல்

† இ-ம். அந்தருளான சாமானியனான அகத்தமான வாசனையுள்ளவன் யெத்தனென் றும், ஞானசாமானியனான சுத்தமான வாசனையுள்ளவன் முத்தனென்றும் சொல் லப்பட்டதாம்.

* இ-ம். பிராரத்தம் புசிக்கும்படி முடிவானைந்த தேகத்தைத் தரித்திருக்கு மிடத்தும் சுத்தவாசனையைத் தரித்தவன் இவ்விசாகத்தில் வருந்தா னென்ப தாம்.

§ இ-ம். வான்மீகமுனிவர் பரத்துவாசருக்குத், தம்மாலுரைக்கப்பட்ட கதையானமாரது அபரோக்ஷமாம் பொருட்டு இராமனுகித்த சவுரியமா னபரோக்ஷமாகு மித்தும், கபிட்ட முனிவர் மும்மீதிக்க கதையைச் சொல்லத் தொடங்கினதாம்.

‡ இ-ம். சித்தத்திலிருக்கு அதநுற்சாகமே ரதக்ஷடமாறல்பாய், அதனுற்சாற் முருவெயிப்பிரித்துக் தீர்த்தயாத்திரையையும் புண்ணியபயணத்திலும் த வமிருக்கவே விருப்பமுண்டான தென்பதாம்.

ளேயும், காணவாசையுற்று என்மனது எண்ணியது.— முடிவில்லாமல் யாசிக்கப்பட்ட சகலமும் உம்மால் முடிவுபெறுகுகில்லை, அடியேன் முந்தினதாக விரும்பிக்கேட்ட வார்த்தையுந் தேவரீரருளவேண்டுமென்றுகேட்க, உலகம் புகழாநின்ற வசிட்டமுனிவரோடு தசரதரானவர் ஆலோசித்து சீக்கிரமாகப் போய்வாவென்று சொல்ல, மேகவண்ணனான இராமன் பிதாவினது பதத்தினமஸ்கரித்து தீர்த்தயாத்திரைக்குப்பிரயாணமாகி,— †

கஅ. தீர்த்தயாத்திரைக்குப் பிரவேசித்தல்.

தம்பிமார்களுடனே சுபதினத்தில் பிரயாணப்பட்டு தமது கோசலமண்டலத்தைக் கடந்து நதிகளையும், தபோவனங்களையும், துறவிகளாச்சிரமங்களையும், பாலைவனங்களையும், சமுத்திர தீரங்களையும், மலைச்சார்புகளையும், இவ்வாறிகத்தரிசித்து.—

ககூ. பின்னோர்களோடுந்தீர்த்தயாத்திரையின் மகிழ்ச்சியடைதல்.

தேவர்கள்புகழவும் மனிதர் தோத்திரஞ்செய்யவுந்திரும்பி, தனதுமேலான சிவபுரத்தை அடைகின்ற ஈசனைப்போலவும், தேவலோகத்தை பொருந்தாநின்ற தேவேந்திரனுடைய குமாரனாகிய சயந்தனைப்போலவும், தசரதமகாராசன்வாசஞ்செய்கின்ற அயோத்தியாபுரியில் அனைவரும் புட்பங்களைத்தூவி துதிசெய்ய, இராமர் அடைந்து.— *

உ0. மீண்டேகாமெய்தல்.

தான்பார்த்த தேசாசாரங்களைச் சொல்லியும் உதயமாதற்கு முன்னமே சயனம்விட்டெழுந்திருந்து நித்தியகருமங்களைச் செய்தும், பிதாவான தசரதருடையபாதங்களைநமஸ்காரஞ்செய்தும், நெடிய தவமுள்ள வசிட்டர்முதலான முனிவர்களுடைய வசனங்களினால் ஞானநீதிபொருந்திய நானாவிதமான கதைகளைக் கேள்விப்பட்டும்.— ‡ பிதாவினுடைய வசனத்தின்படியே படைகளுடன் வேட்டையாடியும், பக்தசனங்கள் இஷ்டசனங்கள் தம்பிமார்களோடும் போசனஞ்செய்து இரவைச் சுகமாகத்தள்ளி, குளிர்ச்சியான சந்திரனைப்போலவும் மதுரமான அமிர்தத்தைப்போலவும், யாசகர்களுக்கு இனிமையைச் செய்தும் பதினைந்து வருடங்களை

உக. தினசரிதைகாரணமாக வுண்டான குணங்களையுரைத்தல்.

உஉ. இதுவுமது.

† இ-ம். புத்திரன்முந்தினதாகப்பிதாவினதனுக்கிரகம் பெற்றுக்கொள்ள வேண்டிய விதிப்படிக்குச் சித்தசுத்திக்கேதுவான தீர்த்தயாத்திரைக் கனுக்கிரகம் பெற்றுக்கொண்டதாம்.

* இ-ம். ஸ்நானமுதலியவைகளை நியமமாய்ச்செய்து வந்தாரென்பதாம்.

‡ இ-ம். சரிதை கிரியை யோகமென்னு மிம்மூன்றுபாதமுங்கடந்து ஞானபாதத்தில் விருப்பமுற்றாரென்பதாம்.

உ௩. இக்குணங்களுள்ள இராமனது வயிராக்கிய விலக்கணங்கூறல்.

ப்போக்கினார். அந்நாளில்.— ¶ தனதுநிறைந்த அழகையுடையசரீரமுழுதும்சரற்காலத்திற்குறைந்துவரும் ஆற்றுச்சலத்தைப்போல தினந்தோறுங் குறைந்துவர, நெடிய கண்களையுடைய செவ்விய குளிர்ந்த முகமானது வண்டுகள் மொய்க்காநின்ற வெண்டாமரைப் பூப்போலவெளுத்துவர, ஓர்கரத்தினால் கன்னத்தைத் தாங்கிக்கொண்டு சத்தியாநின்றவீரகண்டையைத்தரித்த பாதத்தையுடைய இராகவன் பதுமாசனத்தில் இருந்து,—

உ௪. நிராசையால் சாதனசதுஷ்டய முதித்தல்.

சிந்தனையைத்தவிர செய்யத்தக்க செயல்களியாவையும் விடுத்து புத்திதளர்ந்து எவர்க்குஞ் சொல்லாதவராய் எழுதினசித்திரத்தைப்போல சதாகாலமும் இருத்தலைப்பார்த்து, பரிசனங்கள் தனதுபாதத்தில் வணங்கி வேண்டிக்கொள்ள மனதுநொந்து பார்த்தற்கரியதளர்ந்தமுகத்தை யுடையவராய்நித்தியகன்மங்களைச் செய்தார்.—

உ௫. ஆசாரியனை அறிவிக்க விசுவாமித்திர னெழுந் தருளுதல்.

‡ பிதாவான தசரதன் ஒருநாள் இராகவனைவரவழைத்து தன்மடியின்மேல் வைத்துக்கொண்டு வருத்தப்படுவதென்னவென்றுகேட்க, பாதத்தைவணங்கி வருத்தமொன்றுமில்லையென்று சொல்லியகன்றார். உலகம்புகழாநின்ற விசுவாமித்திரமுனியானவர் இராஜசபைக்குவரவும் வணங்கித்தோத்திரஞ்செய்து மகுடத்தையுடைய அரசர்க்கரசனான தசரதன் ஆராதனையை விதிப்படிசெய்து,—

உ௬. அரசனுபசரித்தல்.

§ அடியேன்சிந்தியாத காலத்திலும் கிருபையினால் எளிதாக வெழுந்தருளிய தேவரீரது மேலான தரிசனத்தினால் வினைகளைத்துநீங்கி, சூரியனால்விகசித்தலையடைந்த தாமரைப் பூவுக்கொப்பானேன், இப்படிப்பட்ட ஒப்பற்றசுகத்தை எப்போது மடைந்திலேன், மழையின்றியகாலத்தில் வருந்தும் பயிரைகுளிர்விக்கின்றமழையையும் குருடனடைந்த கண்ணையும் நின்காட்சியொத் திருக்கின்றது.—

உ௭. இதுவுமது.

இத்தேகத்தோடு ஆகாயகமனம் பண்ணுநெறிவந்ததுபோலவும், நீங்கியசீவன் அச்சரீரத்திற்புக மீளவந்ததுபோலவும், ஆரவாரிக்கின்ற பாற்கடலின்கண் ணுண்டாகிய

¶ இ-ம். சீவகாருணியமும் பாசவயிராக்கியமு முண்டான தென்பதாம். இதில் ஈசுரபத்தியும், பிரமஞானமு மமைந்து கிடக்கின்ற தெனவறிக.

‡ இ-ம். இராமரது விரத்தியினால் திரிகரணங்களுமெலிந்து, நான்குசாதன முநிறைந்து, குருதரிசனத்திற் கபேட்சையு முண்டாயிற்றென்பதாம்.

§ இ-ம். தீவிரதரபக்குவத்தையுடைய இராமருக்கு விஸ்ராந்தி யுண்டாகும் பொருட்டு யாகசம்ரக்ஷணையை முன்னிட்டு முனிவந்ததாம்.

தேவலோகத்தில் அக்கினிக்கோட்டைக்குள்ளிருக்கும் அமுதகலசமானது என்னிடத்தில் வந்தது போலவும், எமதுபிதாவாகிய தேவரீர் எழுந்தருளிய சுகமானது தேகமுழுமையும் கங்கையைப் போல குளிர்விக்கும்படியிருந்து எனதுள்ளத்தின் றளர்ச்சியெல்லாம் நீங்கினது.—

உஅ. முனிவர்ந்த கருமத்தை யரசன் வினவுதல்.

¶ இராகத்துவேடங்களும், விடயத்துக்கங்களும், நிலையின்மையும், வீணைகோபமும், கொடியசங்கற்பமுமில்லாத மகாதவத்தையுடைய முனிவரே ? இவ்விடத்தில் தேவரீ ரெழுந்தருளிய வரவானது அதிசயமாம், எதுநிமித்தமோ அதைத் தாவினைக்கே னறிவியுமென் றரசன்கேட்டான், மேலான விசுவாமித்திரமுனிவர் தேகத்தில் மயிர்க்கூச்செறிந்து சொல்லுவார்—

உகூ. அவசியஞ் செய்ய வேண்டிய வேள்விக் குதவிவேண்டல்.

‡ அரசர்கள்பணியாநின்ற தசரதமகாராஜாவே ? ஆசிரியராகிய வசிட்டரது வாக்கியத்தை நடக்காதவரோ ? மேலான சூரியவமிசத்தில் வந்துதித்தவராதலால் உமக்குத்தகுந்த வசனத்தைச்சொன்னீர், முதன்மையாகிய சிவத்துவக்கினியையுடையயாகத்தைமுயற்சிப்பதற்குவிக்கினமாய் தீமைசெய்யாநின்ற இராக்ஷதர்களுக்கு அஞ்சிக் கமாட்டாமல்,—

௩௦. நிருதர்க்கு இயமனான விராகவனைக்கேட்டல்.

நீர்கொடுக்கத் தக்கவரென்று உம்மையடைந்தேன், பயப்படுத்துகின்றவியாக்கிரமத்தைப்போல பலமுள்ளவன் தேவேந்திரனைப் போலவீரமுள்ளவன் மயக்குகின்ற இராக்ஷதர்க்கு யமனானவன் சத்தியசந்தனென்னும் உம்முடைய முதல் குமாரனை தெளிவுபொருந்திய இராமனென்கின்ற குழந்தையைத் தருவாய்,—

௩க. இராமனது சத்தியை யுரைத்தல்.

வெல்லுதற்கரிய இராக்ஷதசேனையை இராமனே எளிதாகக்கொல்வான், அரசனே ? பாலனென்கின்ற அச்சத்தைவிட்டுவிடு என்னையொத்த முனிவர்கள் வருத்தமுற்றுந் தேகமான காரியத்தில் மனமற்றவர்கள்.—

௩உ. இராமன் பெருமையை யறிவித்தல்.

இப்புவியினுஞ்சிறந்த இராமனது பெருமையை யானும் வசிட்டர்முதலிய வாசிரியர்களறிவார்கள், பெருமையையும், தருமத்தையும், கீர்த்தியையும், வேண்டுவையாயின் ; அம் மகா குணசாலியான இராமனைக்கொடும், பெருந்தகைமையை யுடையவர்கள் இரப்பவர்க்குக்கொடாதபொருளுண்டோ, கொடுப்பின் சௌரியமுள்ள இராக்ஷதர்கள், இவனைப்

¶ இ-ம். முனிவரவினுண்டான சுகத்தின்பெருமையைச் சொல்லியதாம்.

‡ இ-ம். புத்திரனது மனோதுக்கத்தைத் தீர்க்குமந்தரங்கமுடைய தசரதமகாராஜன் விசுவாமித்திரமுனிவர் கருத்தின்படி நடக்கசம்மதித்ததாம்.

௩௩. புத்திரனது ஸ்வரூபந் தெரியாமல் தசரதன் பரதவித்துக் கூறுதல்.

நாசமடைவது சத்தியமென்று சொன்னார். ¶ —

விசுவாமித்திரருடைய வசனத்தைக்கேட்டு தசரதன் இரண்டுநாழிகைநேரம்வருந்தி, தனியனை ஒருபாலன், பதினைந்து வயதுள்ளவன், யுத்தஞ் செய்தறியான், நடுக்கஞ்செய்யும் வல்லமையையுடைய இராக்ஷதர்களுடன்போர்செய்ய வலியில்லாதவன், சத்துருக்கள் கோட்பாடறிதலிற் றெளிவில்லாதவன் ; ஆதலால், சதுரங்க சேனையோடு போய் அடியேனே அவ்விராக்ஷதர்களோ டரிய யுத்தஞ்செய்வேன்.† —

௩௪. புத்திர வாஞ்சையை யறிவித்தல்.

மைந்தரில் முதல்வனாகிய இராமன்பிரிந்தால்மற்றமூன்றுபேருமுயிருடன்வாழார், நானு மினிய உயிரோடும் வாழமாட்டேன், இப்போது இராவணனீங்க மற்றயாவராயினும் அவர்களுக்குப் பயப்படேன், முன்பு இராவணயுத்தத்துக்கும் பயப்படேன், பகைவர்முதுகுகாட்டப் போர்செய்யும் வீரர்களுடைய வீரங்கள் நிலையாயிருக்குமா.§ —

௩௫. இக்காலத்தில் இராக்கதர்களைக்கொல்லுஞ் சத்தி எங்களுக் கின்றெனல்.

காலவேறுபாட்டினால்சகலவஸ்துக்களும் மயங்கிவேறுபடும், வலியோரெளியராவர், வயோதிகத்தினால் இனிச்செய்வதியாதென்று மிகவுந்துயருறுகின்றேன் என்றுசொன்னான், அதற்கு முனிவர் கோபித்துச்சொல்வார். ‡ —

௩௬. பயபத்தியுண்டாகும் பொருட்டு முனி கோபித்தல்.

நீ விரும்பியதைக் கொடுத்தேனென்றுசொன்ன சத்தியந்தவறினாய், போரிலுயர்ந்த கேசரிபோன்ற அரசனானநீ அற்பமிருகத்தி னியல்பைச்செய்தாய், மனைவி புத்திரர்முதலிய சுற்றத்தாரோடு நீவாழ்வாய், நாமே குருதுமென்று விஸ்வாமித்திரர் கோபிக்க. * —

௩௭. வசிட்டர் பிறதிக்ஞையைக்காக்கும்படி ஞாயங்கூறல்.

அதைப்பார்த்து வசிட்டமுனிவர், மனுவம்சத்திற் பிறந்தவனாய் தசரதச்சக்கிரவர்த்தி யென்னு நாமத்தைப் பெற்றிருக்கின்ற நீ சொன்ன சத்தியத்தைக் காப்பாற்றிக்கொள், உன்வாக்குப் பிறழுமா

¶ இ-ம். இராமன் இராக்ஷதசங்காரார்த்த முதித்தவனெனச் சூசகமாயறிவித்ததாம்.

† இ-ம். புத்திரவாஞ்சையினால் அவனையனுப்பமனமில்லாமல் விசனமடைந்தவராய், இராக்ஷதர் யுத்தத்துக்குச் சத்தியில்லாதிருந்தும் இருப்பதுபோலச் சொன்னதாம்.

§ இ-ம். அறுபதினாயிரம்வருடஞ் சென்றபின்பு யாகத்திலுற்பவமான புதல்வனைப்பிரிந்தால் நமது உயிரும் பிரியுமென்னும் வருத்தத்தை முனிவருக் கிரக்கம்வரும்படி யறிவித்ததாம்.

‡ இ-ம். இக்காலம் பலமுள்ள அரக்கருக்கு இராமனையனுப்ப மனமில்லையென்பதைக் குறிப்பாற்காட்டினதாம்.

* இ-ம். துட்டநிக்கிரகஞ் செய்விக்கும்படியான கோபமுண்டாயிற் றென்பதாம்.

ஞல், வேறேயார்காக்கவல்லவர், திருத்தஞ்செய்[illegible] உம்மால் நிறுத்தப்பட்ட இராஜநீதியை பூமியி லுள்ளவர்கள் கடவாமற்காப்பாராயின், இராஜா[illegible] நீ கடக்குந்தன்மைத்தோ. †—அக்கினியினால் இ[illegible]

௩௮. குருவாக்கியபரிபாலனம்.

கூதிக்கப்பட்ட வமுதத்தைப்போல இவ்விஸ்வா[illegible] மித்திரரிஷி இராமனைமிகவுங்காப்பார், போனா[illegible] யே வாழ்வாகவுடைய இராக்ஷதர்கள் செய்கின்ற தீமைநெருங்காது, என்று வசிட்டமுனிசொல்ல[illegible] கேட்ட வலியபுயத்தையுடைய தசரத மகாரா[illegible] னவன், பெரியோர்கள் இருமையிலுற்றினை[illegible] இராமன் என்னசெய்கிறுனென்று இராமனது [illegible] சனங்களைக்கேட்க, ஏவலாளர் கையைக்குவித்து[illegible] கொண்டு தீர்த்தயாத்திரைசெய்துவந்த நாள்முத லாக அவர் அடைந்திருக்கின்ற துக்கத்தைச்சொ[illegible] லத்தொடங்கினர்கள். ¶—நாங்கள் பாதத்தை[illegible]

௩௯. இராமாநுவிரத்தியைக்கூறல்

ங்கிவேண்டிக்கொண்டபின்பு பறமையானநித்[illegible] கருமங்களை சிலவற்றைச்செய்கின்றார்; இதத்தை[illegible] கொடுக்கின்ற மகளிரும், செல்வமும், வீடுகளும் யாதலினலென்னபிரயோசனமென்கின்றார்; [illegible] ளிய நல்லவஸ்திரமும், ஆபரணங்களும், [illegible] ர்ந்தசலமுதலியவற்றில்கருத்தில்லா திருக்கின்றார்; செருக்குநீங்கிய துறவிகளைப்போல ஆசன[illegible] த்தையும், இராஜப்பிரவிர்த்தியையும், [illegible] சந்தோஷித்தலையும், துக்கத்தில் வருந்துதலை[illegible]

௪௦. இதுவுமது

நீக்கியிருக்கின்றார்.— துன்பமில்லாத [illegible] திப்பதத்தை நீங்கிய ஞானியுமான [illegible] ஞல் ஆயுளானது கழியுமென்று [illegible] சொல்லுகிறார்; [illegible] கிடமாயிருக்கின்றதென்று [illegible] ருக்குங் கொடுக்கின்றார்; [illegible] வையாங்களறிந்திலோம், இவ்வி[illegible] கள் அரசிற்குரிய நற்குணங்களை [illegible] கள், இப்போது தொடர்ந்திருக்கின்ற [illegible] வென்று வணங்கிச்சொன்னார்கள். முனிவ[illegible]

---

† இ-ம். வாக்கிய பரிபாலனஞ்செய்யும் மரபிற்குரிய நீ [illegible] காக்கவேண்டு மென்பதாம்.

¶ இ-ம். இரகுவம்சத்துக்கு எல்லாவுயர்த்தியு முண்டாகும்பொரு[illegible] இராமனைமுனிகாப்பதும் அவன் அரக்கரைக்கொல்வதும் [illegible] படிபடி தசரதருக்கு வசிட்டமுனி குறிப்பினாற்சொல்ல, அப்படியே சம்[illegible] த்ததாம்.

சக. முனிவர் இராம னபிப்பிராயமறிவித்தல்.

கேட்டுசொல்லத்தொடங்கினூர்.¶—இம்மகத்தான செல்வமுள்ள இராமனைக் கூட்டமாயிருக்கின்ற மான்களில் தனித்தமானைக் கொண்டுவருவது போலநீங்கள் இவ்விடத்திற் கொண்டுவாருங்கள், இப்போ துண்டாயிருக்கின்ற இந்த மகாமோகமானது ஆசையினாலும் ஆபத்துக்களினாலும் வந்ததன்று, சொல்லுதற்கரிதாகியஇராகத்தினாலும்விவேகத்தினாலும்வராநின்றஞானசம்பத்தாம், குற்றமற்ற ஆத்மவிசாரணைக்குரியபலயுத்திகளால்மயக்கநீங்கி எங்களைப்போலபிரமத்தில் விஸ்ராந்தியடைவர்.†

சஉ. இராமர் சபைக்கு வருதல்.

—இராமர்மனது பூரணத்தையடைந்து பெருமையோடும் மனிதர்களுக்குத்தகுந்த அனைத்தையும் இன்புற்றுச் செய்வாரென்று முனிவர் சொல்லுகின்றசமயத்தில், ஸ்ரீராகவனும்பிதாவைநமஸ்கரிக்கும்பொருட்டுச் சபைக்குவந்து பிதாவினுடைய ஆரவாரிக்கின்ற வீரக்கழலணிந்த பாதங்களையும், வசிட்டர்விசுவாமித்திரர்களுடைய பாதங்களையும் கலைஞானமுள்ள பிராமணர்களுடைய பாதங்களையும் வித்தியாகுருக்களுடைய பாதங்களையும் வணங்கி, தனதுபயபாதத்தில் நமஸ்கரித்தவர்களைமுகமன்வசனத்தினாலும், சிரக்கம்பத்தினாலும், கண்சைகையினாலும், அங்கீகரித்தார். ‡

சங. முன்பிதா போதித்தல்.

—மடியின்மேல் வந்திருப்பாயென்று அரசன்சொல்ல, வராமல் மடித்தவஸ்திரத்தை பூமியின்கண் விரித்ததிலிருந்த மாத்திரத்தில், அரசனேக்கி மேலானவறிவை யடைந்தபுத்திரனே? முடிவில்லாதசுகங்களிருத்தற்கு நினைக்கத்தகுந்தஸ்தானமானநீ மூடர்கள்போல நொடிநேரமாகிலும் மனஞ்சோர்ந்து பார்த்தற்கழகானதேகம்மெலிந்து, துக்கிக்கவேண்டாம்.§

சச. இதுவுமது

—முநியோராயும், பிரமரிஷியாயுமிருக்கின்ற நம்மாசாரியராகிய வசிட்டர்சொல்லிய நிருவாணபதத்தை, ஆசையைப் பொருந்தாத மனதையுடைய உன்னையொத்தவர்கள் அடைந்தார்கள் நீயேன் விஷயங்களைருசிக்கின்றாய், துன்பத்தைச் செய்யாநின்ற ஆபத்துக்களனைத்தும், வலியமோக

¶ இ-ம். இராமனது விசாரணையாலுண்டான நிராசையை விசனமாகக்கருதிச் சொன்னதாம்.

† இ-ம். இராமன் வருந்துவது நிருவாணசுக மடைவதற்குக் காரணமேயன்றி வேறின்றென்பதாம்.

‡ இ-ம். இராமன் ஜீவன்முத்தியைப்பெற்றும் பூரணமனதுடன் பூமிபாலனஞ் செய்யும்பொருட்டு போதிக்கவழைப்பித்ததாம்.

§ இ-ம். சுகமிருத்தற்கு ஸ்தானமான வறிவுள்ளவன் துக்கிக்கவேண்டுவதின்றென்பதாம்.

நீங்கினால் உனதுடம்பத்திலும் வரமாட்டாதென்று மகா மகுடத்தையுடைய அரசர்க்கரசனுகிய தசரதன்சொன்னபின்பு, வசிட்டமுனிவரானவர் இவைகளைச் சொல்லத் தொடங்கினார். § —ஜயிக்கத்தகரிய கொடிய முயற்சிக்கிடமாகிய விடயங்களென்கின்ற சத்துருக்களை எளிதில்ஜயிக்க வறிஞராகே கலங்குகின்ற வறிவில்லாதவர்களுக்கு உரியதாயிருக்கின்ற அஞ்ஞானமிறைந்த மோகசமுத்திரத்தில் வீழாதேயென்றும், நல்லவீட்டை விரும்பு பறாத்தழிக்கு மழிவைப்போல நீ மோகத்தினுறன்பப்படுங்காரணமென்ன சொல்வாயாகில், அது நீங்கி நீ இச்சித்திருப்பதெதுவோ அதனையடையென்றும். †—இருப்பினையாமல் மனேதுக்கம் நீங்கும்சொல்லென்றுவிசுவாமித்திரரிஷிகேட்க, மோத்தினதுசத்தத்தினுல் உஷ்ணநீங்கிக்களிப்புற்றமாலைப்போல துக்கநீங்கி இராமர்சந்தோஷித்து அருமையாதைமையுடையவென்னை நிருபாவழிவருமிளிட்டமுமுள்ளவராகிய மகாதவத்தையுடையவிசுவாமித்திரரே? தேவரீர்சொல்லென்றுமுன்சொல்லியபடியால்சொல்லுகிறேன்கேட்டருள்வீராக ; பெரியோர்கள்வாக்கியத்தைத்தடுக்கின்றவர் யாவரென்று சொல்லத்தொடங்கினார். ¶ —விதனமெனுஞ்சரதனைதூண்டியிலுறிஞ்து விசர்க்கிகைகண்டு சகலவித்தைகளையும்பயிலாதுசெய்து நல்லவாசாரப்பழக்கதுமேலானபுண்ணியதீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்து சமுத்திரத்தருற்கு பூமியைப் பிரதக்ஷிணஞ்செய்தவராயும், இக்கொடிய ஜகப்பிரமத்தினின் ஆசைகளைவிட்டு நீங்கிற்று. இச்சகத்திலெல்லாமேனுஞ் சகரிப்பிலே நாசமடைதல் ஜநிப்பதற்கேயாம், ஜநிப்பது இறப்பதற்கேயாம், ஆதலால், சகலமு மிக்கதுயாம்.— ஏன்னென்றால்கருதிஇலையாயும், அப்பத்துக்கேசர்வதற்கு ஸ்தானமாகியும், ஒன்றற்கொன்று சம்பந்த மில்லாததாகியும் மனேசங்கற்பத்தினுல் சம்பந்தமாயும், இருப்புச்சலாகைகளைப்போல வன்மையாகியும், மனமாசுப்படுதற்குஸ்தானமாகின்றன. ஆகையால், விடயபோகத்தினுலும் இராச்சியத்தினுலும் என்னபிரயோச

௨௫. விசுவாமித்திரர்இராமர்மனே துன்பத்துக் கேதுவான சிந்தையை நான்கு விதமாக வினவுதல்.

௨௬. முனிவர் வினவுக் குத்தரஞ் சொல்லத்தொடங்குதல்.

௨௭. சித்தாஸ்வரூபமும் அதனளவும் அதனிருப்பும் அதன் காரணமுமான நான்கு சங்கைக் குத்தரஞ் சொல்லி இதனுற் பயனின்றெனல்.

௨௮. இதுவுமது.

---

§ இ-ம். ஆசிரியர் உபதேசத்தினுல் விளங்கு மாத்மஞானத்தினுல் மோகத்தை வெல்லவேண்டு மென்பதாம்.

† இ-ம். துன்பத்தைநிவிர்த்திசெய்யும்பொருட்டு அதின்கேதுவைவினவினதாம்.

¶ இ-ம். துக்கத்தை நிவிர்த்திசெய்து பரமசுகத்தை யடையும் பொருட்டு உத்தரஞ் சொல்வதாம்.

சனம். அகப்பாவெப்பாடிப்பட்டது வந்திருப்பதா லேதோவெப்பாடிப்பட்டதென்றாலோசிக்கில், ஆத் மவிதிக்கான விசாலமுற வித்தையேயாம்.†— அவைத்தாரித்தையாதலால், இவற்றிலொரு தைப் பெற்றாருவென்று இப்படிவிசாரிக்கின்றனைக்கு, [illegible] ஆலோசனையின்றதான [illegible] [illegible], வஸ்துக்களினைத்திலும் இச்சையுள்ளதாக, [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கட்டாத வெள்ளியமோ [illegible] [illegible].‡—உ [illegible] [illegible] இத்துன் [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. §—[illegible] [illegible]

கஅ. [illegible] [illegible] [illegible] [illegible].

௧௦. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

௧௧. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

† இ-ள். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

‡ இ-ள். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

§ இ-ள். [illegible] [illegible] [illegible] [illegible].

¶ [illegible] [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], தேகம், பாலியம், [illegible], [illegible], [illegible], [illegible].

வுடையவரு மெளியவர்களும் வீரர்களு மின்னுஞ் சமானமில்லாதவேனையோரும் செல்வத்தால் புழு தியினுன்மறைபட்ட ஒளிருகின்ற விரத்தினம்போ லீனமடைவார்கள். ¶ —குற்றமற்றசெல்வர்களும் சொற்றவறுத வீரர்களும் சமதிருஷ்டியாய் பார் க்குமரசர்களுமாகிய இவர்கள் மிகவும் அரியர்கள், மனதைக் கிரிகிப்பதாயும் கணத்தி னசிப்பதாயு மிருக்கின்ற தனமானது சர்ப்பஞ்சூழ்ந்த கூபத்தி லுள்ள கொடியினரும்பைப்போல நிட்பலமாம். [ஆயுள்தூஷணம்] தலைகீழாயிருக்கின்ற இலையி னுனியில் தொங்கிய மழைத்துளிக் கொப்பாகிய பிராணனானது உன்மத்தனைப்போலகாலமல்லாத காலத்தில் தேகத்தைவிட் டோடிப்போகும் †— வளர்கின்ற வைம்புலமென்னும் சர்ப்பந்தீண்ட, மனந்தளர்பவர்களும் உண்மைஞானம் அடையா தவர்களுமான இவர்களுடைய ஆயுளானது தளர் வடைவதற்குக் காரணமாம், மட்டிடப்படுஞ் சரீ ரத்தை மெய்யென்றழுந்தி மோகமென்கின்ற மே கத்தில் மின்னலைப்போலு மிருக்கின்ற இவ்வாயு ளில் சந்தோஷியேம், சிரத்தாமான வந்தரத்தைப் பிளக்கவும் சஞ்சலமுள்ள காற்றைப் பிடிக்கவுந் தோன்றித்தோன்றியழியாநின்ற அலைகளைக்கோக் கவும் இலேசாம், இவ்வாயுளைநிலையென விரும்பக் கூடாது. §—சரற்காலமுகிலைப்போலவும், நெய்யில் லாத தீபத்தைப்போலவும், கடலின் அலையைப்போ லவும், நிலையாகக்கெடுகின்றதாயும், எவ்வளவேனும் விஸ்ராந்தியில்லாதசிந்தையாயும், விஸ்தாரமுள்ள மூடமாயும், புருடார்த்த சூனியமாயு மிருக்கின்ற ஆயுளின்பிரயோசனத்தை ஆராயில், ஓட்டியிருக் கின்றவுடலையுடைய இப்பிக்கு உயிரைப்பிரிக்கின்ற கருப்பத்தைப்போல நீக்கக்கூடாத துன்பத்தை

௫௨. இத்தனம் அநர்த்த நிமித்தமே யன்றி யர்த்தநிமித் தமாகாதென முடி த்து, சிறத்தமுறை யான் இத்தனத்தை யனுபவிக்கும் பொ ருட்டு வேண்டிய வாயுளைப் பின்வை த்து அஃதொரு க ண்மு நிலையன்றெ னத் தூஷித்தல்.

௫௩. கன்மிகளுக் காயினுஞ்சுகங்கொ டுக்குமென்னில் அ வர்க்குங் கொடா தென்ல்

௫௪. ஆயுளினிச் சை வியர்த்த மா மெனல்.

¶ இ-ம். செல்வம் சுவர்க்கபோக மறைதயினுல் ஆசமார்த்தத்தைச் சிறிதும் வொட்டாமல் வருத்துமென்றும், அஃதுள்ளவனில் லவனிலக்கணம் இன்ன தென்றுங்கூறினதாம்.

† இ-ம். உயர்ந்தோரை மிக்கிக்கச்செய்யுஞ் செல்வமும், அதையனுபவிக்கு மாயுளுந் துன்பமேயென்பதாம்.

§ இ-ம். கன்மிகளுக் காத்மவிவேகத்தைக்கொடாமல் ஜனனத்தைக் கொடுப் பதுமன்றிக் கணமுநிலையில்லாததினுல் இவ்வாயுளிற் சுகமின்றென்பதாம்.

[illegible]

[illegible]

‖ [illegible]

‡ [illegible]

¶ [illegible]

§ [illegible]

வுடையவரு மெளியவர்களும் வீரர்களு மின்னும் சமானமில்லாதவேனையோரும் செல்வத்தால் புறுதியினுன்மறைபட்ட ஒளிருகின்ற விரத்தியையோ லீனமடைவார்கள். ¶—குற்றமற்றசெல்வர்களும் சொற்றவுறுத வீரர்களும் சமதிருஷ்டியாய் பார்க்குமாசர்களுமாகிய இவர்கள் மிகவும் அரியர்கள், மனதைத் திரிப்பதாயும் கணத்தில் வரிப்பதாயு மிருக்கின்ற தனமானது சர்ப்பத்தினுற்சூழப்பட்டதி லுள்ள கொடியினரும்பைப்போல நிட்டமாம். [ஆயுள் தாதனைம்] தலையிறாயிருக்கின்ற இலையி னுனியில் தொங்கிய மழைத்துளிக் கொப்பாயிரா மனதுடன் ... காலத்தில் தேகத்தைவிட்டோடிப்போமும் †—வளர்கின்ற வைப்புலமென்னும் சர்ப்பத்தினை, மனத்தளர்பவர்களும் உண்மையறியாம லுடையாதவர்களுமான இவர்களுடைய ஆயுளானது தளர்வடைவதற்குக் காரணமாம், பட்டப்பகலிற் சரீரத்தை மெய்யென்றுறுதி போகமென்கின்ற மேகத்தில் மின்னலைப்போலு மிருக்கின்ற இவ்வாயுளில் சந்தோஷமேயம், நிரந்தரமான வாகாசத்தைப் பிளக்கவும் சஞ்சலமுள்ள காற்றைப் பிடிக்கவும் தோன்றித்தோன்றியழியாநின்ற அலைகளைக் கவும் இலேசாம், இவ்வாயுளை நிலையென விரும்பக் கூடாது. §—சாற்கமலமுறிலைப்போலவும், நெய்யில் லாததீபத்தைப்போலவும், கடலின் அலையைப்போலவும், நிலையாகக்கெடுகின்றதாயும், சலனமேனும் விஸ்தாரத்திலில்லாததிமிதையாயும், விரிதாமறையில முடமாயும், புருடார்த்த சூனியமாய் மிருக்கின்ற ஆயுளின்பிரயோசனத்தை ஆராயில், ஓட்டியிருக்கின்றவுடலையுடைய இப்பிக்கு மடிவைப்பிக்கின்ற கருப்பத்தைப்போல நிக்கக்கூடாத துன்பத்தை

௫௨. இத்தனம் அநர்த்த நிமித்தமே யன்றி யர்த்தநிமித் தமாகாதென முடித்து, நிறுத்தமுறை யான் இத்தனத்தை யனுபவிக்கும் பொருட்டு வேண்டிய வாயுளைப் பின்வைத்து அஃதொரு கணமு நிலையன்றெனத் தாபித்தல்.

௫௩. கன்மிகளுக் காயினுஞ்சுகங்கொடுக்குமென்னில் அவர்க்குங் கொடாதெனல்

௫௪. ஆயுளினிச்சை வியர்த்த மாமெனல்.

¶ இ-ம். செல்வம் சுவர்க்கபோக மாதைதயினுல் அவனர்த்தத்தைத் திரிக்க வொட்டாமல் வருத்துமென்றும், அஃதுள்ளவரின் வைவிலக்கமாம் இன்னதென்றுங்கூறினதாம்.

† இ-ம். உயர்ந்தோனை நிந்திக்கச்செய்யுஞ் செல்வமும், அதையடையவிக்கு மாயுளுந் துன்பமேயென்பதாம்.

§ இ-ம். கன்மிகளுக் காத்மவிவேகத்தைக்கொடாமல் தேகத்தைக் கொடுப்பதுமன்றிக் கணமுநிலையில்லாததினுல் இவ்வாயுளிற் சுகமில்லையென்பதாம்.

௨௫. விஸ்ராந்தி யடைய மாயுளே சபல மாமெனல்.

யுண்டாக்கும். †—அடையத்தக்க வாத்மஞானத்தையடைந்து இனித்துன்பநீங்கி ஆநந்தமானது அனைத்துமாய் க்ஷீணவிருக்ஷங்களும் மிருகங்களும் பட்சிகளுமாகிய இவைகளைப்போல விருதா காலத்தைப் போக்காமல்தடையற்ற ஆத்மவிசாரத்தால்ஜீவிப்பதேமேலானவாயுளாம், மறுசநநத்தைத தொழிந்தவருடைய சநநமேமேலானதாம் மற்றவனைத்தும் கிழக்கழுதையின்பிறவியாம்.

௨௬. பாமரின் பிரவாயுளே சுமை யாமெனல்.

‡—விவேகமில்லாதவருக்கு நூலானது சுமையாகும், உண்மை ஞானமில்லாதவருக்கு சரீரஞ்சுமையாகும், சாந்தமில்லாதவருக்குமனஞ்சுமையாகும்,காமாதிதோஷமுடையவருக்கு ஆத்மஞானஞ்சுமையாகும், அழகியதேகமும் ஆயுளும் மனதும் புத்தியும் அகங்காரமும் தொழில்களுமாகிய அனைத்தும் அறிவிற்கும் அடையாதவர்களுக்கு கீழ்மக்களெடுக்கும் சுமையைப்போல நிரண்டசுமையாகும். ¶—

௨௭. இவ்வாயுள் துன்பமிகுந்ததேயன்றிச் சுகமிகுந்ததன்றெனமுடித்தபிற த்துறையான் ஆய் விரண்டு.ஒன்றுக்கு துபோக்கா வென்று மபிமான முண்டாதலை நீக்கலின் அகங்காரத்தை அதையுங்கரித்தல்

எவ்வளவாயுளானது மேலான் தேகத்திற்பழகி தூர்ச்சனருறவை விடுகின்ற ஞானிகள் தன்மையைப்போலவிரியும், இம்பரும்நிலையும் நிலைபெருமல் கபடத்திடமாயிருக்கின்ற வாயுளைப்போல நீதானது மேலொருவ்றில்லையாம். [இனியகங்கார ஆடலைரம்]துன்பமானமோகத்தினால் விருதாவாக வுண்டாய் எவ்விடத்திலும் விருதாவாக நிறைந்திருக்கின்றதான தீமையாகிய மித்தையான வகங்காரமென்னும் சத்துருவினால் அச்சப்படுகின்றேன். §—மகோதுக்கமும் ஆபத்துகளும் விருத்தியாகின்ற வியாபாரங்களும் அகங்காரத்தினாலுண்டாகும், இதைப்போல பெரியசத்துரு வேறில்லை, வெருவனம் சத்துருவான இவ்வகங்காரத்தை அடைந்து கலங்குகின்றேன், அன்னத்தோடு சலத்தையும் புசியேன் அரியபோகத்தை சொல்லுவதென்ன, அகங்காரஞ்சேர்ந்த நித்தியகன்மங்களும்யாகங்களும் புசிப்புகளுமாகிய எல்லாமித்

௨௮. மித்தையா னதுன்பத்திற்கா ரணமாகின்ற அகம் பாவத்தாற் கலங்கு கின்றே னெனல்.

---

† இ-ம். கனைமுறிவையின்றி, விருப்பினவர்களுக்குத்துக்கத்தைக்கொடுக்கின்ற ஆயுளில் என்னபிரயோசன மென்பதாம்.

‡ இ-ம். ஆத்மப்பிரயோசனத்தை யடைந்தபின் ஜீவிக்குமாயுளைத்தவிர மற்றதிலென்ன சுகமென்பதாம்.

¶ இ-ம். அறிவிலின்ப மறுபவியாமல் அநாத்மாவான சகலமுமியானெனதென்று தாங்கிவருந்துகின்றவ ருயுளிலென்னசுக மென்பதாம்.

§ இ-ம். பயனின்றி தேகத்தைச் சுமந்துகெடுகின்ற வாயுளில் எப்போதுஞ் சுகமில்லையென்றும், அதையபிமானித்த வகங்காரத்திலென்ன சுகமென்றுஞ் சொன்னதாம்.

ருக. அகம்பாவ நீங்கும்வகை வினவுதல்.

தையேயாம்,இவ்வகங்காரமானது விடுதலேதத் துவமாம்.¶ —அகங்காரமாகியமேகம் எம்மட்டிருக் கின்றதோ இச்சையென்னும் மலேமல்லிகை அம்மட்டும் விருத்தியடையும், மிகுந்த துன்பமாகிய இந்தவகங்காரத்தினது செயலேவிட்டும் என்னை யறியாமையினல்மிகவும்வருந்தினேன், உலகத்தில் ஆபத்துக்கு ஸ்தானமாயும் நிலேயில்லாததாயும் மனதின்கண் ணிருப்பதாயும் உன்மத்தமாயும் முடிந்த விசாரணேயும் அறிவுமில்லாத அகங்காரமானது தீரும்படி அனுக்கிரகிப்பாய்.† —இராகாதி

ரு0. அகங்காரத்தைச்சொல்லி நிறுத்த முறையான் அவ்வகங்கார வசத்தாற் சங்கற்பவிகற்பாத்மகமான மனதுண்டாதலா லதன்பின் மனதை வைத்ததையுந் தூஷித்தல்.

தோடங்களுக்குச் சிதைந்து பெருங்காற்றி லகப்பட்ட பெரியமயிலின் இறகைப்போல, சாதுசங்கத்தினின்று நீங்கிச்சஞ்சலிக்கும் நகர்நாய்போல் நெடுந்தூரம் மனதுவிருதாவாக விடயங்களிற் சுழலும்பயனனது அற்பமுஞ்சித்தியாது, காப்புற்ற பூங்குடலேயானது சலத்தைத் தன்னிற் றரியாதது போல அரியதிரவியங் கிடைத்தாலும் களிப்புற்றுவுட்கொள்ளாமல் தீயமனமானது சுழலும், ‡—

ருக. மனம் இச்சாவசத்திற் சென்று என்னைவருத்துகின்றதெனல்.

ஆசையென்னு மில்லாளின் பின்றொடர்கின்றமனமென்கின்றகோரமுள்ளநாயானது, பிணத்தைப்பிடுங்கித்தின்னுந்தன்மையைப்போலஅறிவினெடபொருந்தியவென்னே பிடுங்கிப்புசிக்கும், அடிக்கின்ற சண்டமாருதத்தினல் சின்னபின்னமாய்ப் முறிபட்டெழுந்த திரணத்தைப்போல மயக்கமும் துன்பமும் அடையும்பொருட்டு மனமானது மகாசூனியத்தில் விழும்படி அதிதூரத்தின் மலங்கும்படி யென்னைத்தள்ளிவிடும். § —காரணமில்

ருஉ. மித்தையான மனம் என்னைப் பலகன்மத்திற் றள்ளி வருத்துகின்றதெனல்.

லாத மித்தையாகநிறைந்த உருவமாய் விசாரணையால் வேறுபடாநின்ற கொடியமனமானது பிசாசம்பற்றிய பாலரைப்போல என்னைநானுவிதமான விருத்திகளிற் கூட்டிவிக்கும், பூமியினின்றுநீங்கி பாதாளத்துக்குச் செல்லும் பாதாளத்தி னின்று நீங்கிபூமிக்குவரும் கள்ளமனமானது கிணற்றிற்சி

¶ இ-ம். மனேதுக்கமுண்டாவதற்குக் காரணமாகிய நித்தியகன்ம முதலியவற்றிலகம்பாவஞ்செய்யு மித்தையான வகங்காரத்தி லென்னசுக மென்பதாம்.

† இ-ம். ஆசைக்குப்பீசமாயும் ஆபத்துக்குஸ்தானமாயும் மூடசிரேட்டமாயுமிருக்கின்ற வகங்காரத்திலென்ன சுகமெனமுடித்ததாம்.

‡ இ-ம். பிரயோசன மொன்றுமில்லாமல் வீணுகச்சுழல்கின்ற மனதினலென்னசுக முண்டாமென்பதாம்.

§ இ-ம். மோகத்தையுண்டாக்கி வீணுகவென்னே வருத்துகின்ற விச்சாவசமான மனதினலென்ன சுகமிருக்குமென்பதாம்.

டக்கின்ற மரத்தை நைந்தகயிற்றால் கட்டியெடுப்பதுபோல என்னையுயர்வுதாழ்வான விருத்திகளிற் றள்ளும். ¶ —விடம்போன்ற மனமென்னும் வலையபேயானது அக்கினியிலுங் கொடுமையாம்; மலைகளைக் காட்டிலுங் கடத்தற்கரியதாம்; நீண்ட வச்சிரத்திலும் வன்மையாம்; வாரியைக்குடித்தாலுங் குடிக்கலாம், மகாமேருவை யடியோடே பிடுங்கினாலும்பிடுங்கலாம், சுடாநின்றஅக்கினியை விழுங்கினாலும்விழுங்கலாம், இம்மனதை ஓர்நிலையினுநிறுத்தக்கூடாது; விடயங்களனைத்து முண்டாவதற்குக் காரணமாம்; நசிக்காநின்றஜகமானது இம்மனதுண்டானாலுண்டு, இல்லையானாலில்லையாம்; ஆதலால் இம்மனதை நசிப்பிக்கவேண்டும்.

௨௩. வன்மையுள்ளமனதைநசிப்பிக்கவேண்டு மெனல்.

§ —மலையிலுண்டானகாடுபோல சுகதுக்கங்களாகிய இவை யாவும் மனதிலுண்டாகும், குற்றமற்றவிவேகத்தினால்மனநசித்தால் அச்சுகதுக்கங்கெடுமென்று மறிந்தேன், [ஆசாதூஷணம்] கடினமான மோகமென்கின்ற கறுத்த இருட்டினையுடையசெயலிலமைதிபிறவாத ஆசையென்னு மிராத்திரியில் ஆத்மாகாயத்தில் காமக்குரோத மென்கின்ற கோட்டான் கூட்டமானதுவிளையாடும். †—என்னால் விரும்பப்பட்ட சற்குணங்கள் எலியினால் யாழ்நரம்பு கெடுவதுபோல இராகத்தினால் கெடும், ஆத்மஞானத்தையுடைய பலமில்லாதசித்தத்தையுடைய நாங்கள் மேலுள்ள வலையிலகப்பட்ட பறவையைப்போல மெலியும் படியுண்டாகும், அவா வக்கினியானது எரிக்கவருந்தினேன், குற்றமற்ற வமிர்தத்தின் முழுகினாலும் என்னறிவு சீதளமாகாதென்று என்மனதி லெண்ணுகிறேன்.

௨௪. மனோநாடணத்தை முடித்து நிறுத்தமுறையான் அநுசிரந்தரம்போகத்தை இச்சிப்பதனாலதன்பின்னாசையைவைத்து அதனையுக் தூஷித்தல்.

௨௫. ஆசையேயக்கினியாக வருத்துகின்றதெனல்.

‡ —அபரபக்ஷத் தமாவாசை யிருளைப்போல மகாவலிமையுள்ள தீரர்களையும் அச்சஞ்செய்விக்கும் நல்லறிவாகிய கண்ணைக் கெடுக்கும், உபசாந்தமுடையசத்துக்களையும் நடுங்குவிக்கும், ஆந்தைவடிவமான ஆசையென்கின்ற கிழத்தாசியானவள் ஓர்வஸ்துவும் தனக்குக் கிடையாத

௨௬. ஆசையைக் கிழக் கணிகையாகத் தூஷித்தல்.

¶ இ-ம். விசாரமின்றிய விடத்துண்டாய்த் தான்சுழல்வதுமன்றி என்னைப் பவத்திற்சுழற்றுகின்ற மனதினாற் சுகமென்னவென்பதாம்.

§ இ-ம். மனது, அநர்த்தரூபமான ஜகத்துக்குக்காரணமாதலால், அதை எவ்விதத்திலுங் கெடுக்காவிடிற் சுகமில்லையென்பதாம்.

† இ-ம். சுகதுக்கத்துக்குப் பீஜமான மனதை விவேகஞானத்தாற் கெடுக்காவிடிற் சுகமேதென்பதாம்.

‡ இ-ம். இவ்விச்சை விஸ்ராந்தியைக் கொடாதென்பதாம்.

தாயினும் இனிய திரவியத்தை விரும்பி யாவர்க்கும் பின்செல்லுவன், தனதிஷ்டமுறா [illegible] தாம். ¶ —வார்த்திகப் பருவத்திலுண்டாகுங் காளி [illegible] வினால் தன்னுற் சக்தியில்லாத நடனத்தைப் புரி [illegible] பிப்பவனாய் மனக்களிப்பில்லாமல் நடனஞ்செய் கின்ற நாடகக் கணிகையைப்போல என்னையிச்சை வருத்துகின்றது : மேரு [illegible] துக்கங்களை அடையப்போம், [illegible] னும் சுகத்தைப்போமேன், [illegible] ஆசையானது குராங்கைப்போல [illegible] லலைகின்றது. ‡ —பூங்காவின் [illegible] வண்டைப்போல [illegible] திக்குமாகிய வினைகளைத்திலும் [illegible] திக்கொண்டுவரும், [illegible] துன்பங்கள் எல்லாவற்றினு மதிகமான [illegible] துன்பத்தைக் கொடுக்கும் ; [illegible] பவர்களுக்கும் துக்கத்தைச் செய்யும் ஆசையென் கின்ற விஷசிகாவியாதிக்கு [illegible] கெடுக்கும் மந்திரவுஷதமாம் ; [illegible] த்துன்பம் நீங்கும். § —இச்சையானது [illegible] யானை [illegible] வியாதியைப்போலும் [illegible] து [illegible] யுடையவர்களை [illegible] வச்சிரத்தின் முனையையும் [illegible] ளாயுதத்தையும் அக்கினி [illegible] தியையும்போல [illegible] மகாமேருவைக் கொப்பான [illegible] ருள்ள ஞானவான்களையும் [illegible] வீரர்களையும் [illegible] மாக்கும். † —[illegible] இராக்கும்படி [illegible] து பருத்தாலிருக்கின்றதேயானாலும் [illegible]

கஎ. ஆசையொன்றிலுமமைதிபிறவாமல்வருத்துகின்றதெனல்.

கஅ. ஆசாவியாதிக்கவுஷதங்கூறல்

கக. ஆசையாவவையுங்கெடுக்குமெனல்.

எ0. ஆசாதூடண முடித்துவிருத்தமுறையான் இப்போகமனுபவித்தற்குஸ்தானந்தேகமாதலா லதனை யருன் பின்வைத் ததையுக் காஷித்தல்.

¶ இ-ம். யாதிடத்திலுந் தனமேறாத [illegible] ஆசை [illegible] களை மாறுபாட்டில் விழுவதுகின்ற ஆசையினுல், என்பதாம்.

‡ இ-ம். முடியாதவியாதியின் முயன்று [illegible] வருந்துகின்ற வாசையாலென்ன கவலென்பதாம்.

§ இ-ம் தசதிசையிலுஞ்சுழன்று [illegible] தாத்தியாகத்தாற் கெடுக்காவிடில் [illegible] என்பதாம். [[illegible] என்பதாம்.

† இ-ம். யாதிலும்வல்லமையுள்ளவிச்சாத்தியான [illegible]

[illegible]

[illegible]

ழுந்துகளும், மின்னல்களும், இவையனைத்திற்குஞ் சஞ்சலமப்பியாசிப்பது அலையப்பட்ட ஞாளியைப் போல மலத்தைப்புசிக்கும், அற்பவிடயத்தால்சந்

௭௫. சைசவமறியாமைக்கிடமாமெனல்.

தோஷிக்கும்துக்கிக்கும்.§ —மண்ணைப்புசிக்கும்ஆகாயத்திலுள்ளசந்திரனை தன்னிடத்தில்வாவென்று கூப்பிடும்இவ்வறியாமை சுகத்தின்பொருட்டாமா, உபாத்தியாயருக்கும்மாதாவிற்கும்பிதாவிற்கும் உறவினர்க்கும்முன்பிறந்தவருக்கும், மற்றெவருக்கும் நடுக்கமிகுகின்ற ரோதனுள்ள வாலப்பருவமானது அச்சத்துக்கு ஸ்தானமாம், குற்றமெலாம்நிறைந்த கூடாம், குறிக்கப்பட்ட அவிவேகமென்னும் தூர்த்தன்வாழ்தற்குவீடாகும், யாவருக்கும் இப்பருவத்திற்சுகமுண்டாகாது. ‡—இவ்வாலப்பருவத்திலுள்

௭௬. பால னாடனமுடித்து நிறுத்த முறையான் அதின்முதிர்ச்சியே எவ்வனமாதலா லதனையதன்பின் வைத்ததையுந் தூஷித்தல்.

ள அநர்த்தங்களைக்கடந்து துன்பத்தில் விழுகின்ற எவ்வனப்பருவத்தையடைந்துமனமென்னும் இழிவிற்சமானமில்லாத பொந்தில்வசிக்கும்மன்மதனென்கின்றபேயடிக்க மனமெலியும், அறிவானதுசொல்லுதற்கரிய வித்தியாப்பியாசத்தினால்விஸ்தாரமுடையதாய் குருபணியாற் றெளிவுற்று சத்கிருத்தியத்தினாற் பரிசுத்தமாகி சிறப்புள்ளதானாலும் கார்காலத்தினது ஆற்றுசலம்போல எவ்வனப்பருவத்திற் சேருங்காலத்தில் கலக்கமாம். ¶ —மனமென்

௭௭. எவ்வனங் காமத்துக் கிடமாமெனல்.

னும் மானனது மயங்கிப்போய் விடயங்களென்கிற படுகுழியில் வீழும்பொருட்டு தேகமென்கிற பாலைநிலத்தில் எவ்வனமென்கிற கொடிய பேய்த்தேரானது உண்டாகி மிகவும்வளரும், மிகுந்த துன்பமானது, எவ்வனத்தினின்பம் எம்மட்டிருக்கின்றதோ அம்மட்டும்வளரும், ஆசைகளும் இளமை யெம்மட்டிருக்கின்றதோ வம்மட்டும்வேகமுற்

௭௮. சற்குணமுள்ள வெவ்வனமரிதெனல்.

றெழுந்து மிகவுமநர்த்தங்களைச்செய்யும். † —எவ்வனமென்கின்ற விக்கினத்தைத்தாண்டி இலேசாக முத்தியிற்சேர வலியுள்ளவர்கள் எத்தன்மை யுள்ளவர்களோ அத்தன்மையுள்ளவர்களேபுருடர்கள், அப்புருடர்களே எல்லாராலும் வணங்குதற் குரியர், அவர்களேயறிஞர்கள், உண்மை நிலையுள்ளசத்

§ இ-ம். அலைமுதலானவைகளினு மதிகசஞ்சலத்தையுடைய பாலப்பருவத்தில் என்ன சுகமென்பதாம்.

‡ இ-ம். அறியாமைமுதலிய சகலகுற்றமு நிறைந்திருக்கின்ற பாலப்பருவத்தால் என்னபயனென்பதாம். [லென்ன சுகமென்பதாம்

¶ இ-ம். தெளிந்தவறிவையுங்கலக்குகின்ற காமத்தையுடையவெவ்வனத்தி

† இ-ம். மனதுமயங்கி விடயத்திற்சென்று துன்பவின்பங்களில் வருந்துமநர்த்தத்துக் கேதுவான வெவ்வனத்திலென்ன சுகமென்பதாம்.

துகள். சார்தற்கு ஸ்தானமாயும் விநயசம்பத்தைப் பெற்று கருணையினால் பிரகாசியாநின்ற பரிசுத்தமான குணத்தையுடைய யௌவனமானது இச்சகத்தின்கணுண்டோ, ஆகாயத்தில் நிறைந்த

எகூ. எவ்வனதூடணமுடித்து நிறுத்த முறையான் அதற்கு முக்கியமான போகத்துக்குத் தகுந்ததாயுஞ்சுருவவிடயசமஷ்டி ரூபமாயிருக்கின்றதுஸ்திரீகள், ஆகையாலவர்களை யதன்பின் வைத்தவராது தேகசட்சுக்களைத்தூஷித்தல்.

வனமுண்டோ : † —கணுக்களும், நரம்புகளும், எலும்புகளும், மாமிசங்களும்நெருங்கிய பிரதமையை யொத்த மகளிருடைய குத்திரத்திலாடும் சரீரமாகியகூட்டில் என்னசுகம்? வாசனையுள்ள மிருதுவான கூந்தலையுடைய மாதர்கள் நேத்திரத்தில் தோலையும் மாமிசத்தையும் கண்ணீரையும்இரத்தத்தையும் மனதினால்பகுத்துப்பார்க்கில் சிறப்பாயின் இச்சிப்பாம். § —மகாமேருவி னுச்சியினின்றும் வீழாநின்ற விரிந்தவலையையுடைய கங்காசலத்தைப்போல முத்துமாலைபொருந்திவிளங்குகின்ற அழகிய வாபரணத்தை யணிந்த மாதர்களுடைய தனங்களானவை ஊர்ப்புறத்திலுள்ள சுடுகாட்டில் அடைந்தகாலத்தி லிதனை நேராகக்கிடைத்த உருண்டைச்சோற்றின் கவளத்தைப்போல வரிசைவரிசையாகவந்து நாய்கள்புசிக்கும்.

அ௦. மகளிர்தனதூஷணம்.

அக. மகளிரைச்சுவாலையாகவும் இத்தனமாகவுந் தூஷித்தல்.

‡ —அடைதற்கரிய சூடுள்ளதாயும் கூந்தலென்னுந் தூமமுள்ளதாயும் கண்ணென்னுந் தீக்கின்றதொழிலையுடையதாயு மிருக்கின்ற பாவமென்னும் அக்கினியின் மகளிரென்னுஞ் சுவாலையானது சேருகின்ற துரும்பைப்போல எவரைத்தானெரிக்காது; தூரத்தெரிக்கின்ற நரகாக்கினிக்கு மடவாருடைய குளிர்ந்த தேகமானது உலர்ந்தகாட்டமாம்.

அஉ. மகளிரை வலையாகவுந் தூண்டிலினையாகவுந் தூஷித்தல்.

¶ —கரியவிழிகளையுடைய மகளிர்கள் மிகுந்தவறியாமைநிறைந்த மனதையுடைய மானிடராகிய பட்சியைப் பிடிக்கும்பொருட்டு மன்மதனாகிற வேடனானவன் எறியாநின்றவலைக்குச் சமானமாவார்கள், கொடியமனமென்கின்ற சேறுநிறைந்த பிறவியென்னுஞ் சிறுகுளத்தில் மனிதராகியமீனைக்கவர்தற்கியமவாதனையென்னும் பாசத்திற் பூட்டிய தூண்டின் முள்ளி

† இ-ம். விடயசுகத்தை நீக்கிப் பரமசுகத்தை யடைவிப்பதற் கேதுவான யௌவனமில்லாவிடி னென்ன சுகமென்பதாம். [சுகமுண்டென்பதாம்.

§ இ-ம். மாதர்களுடலையும்நேத்திரத்தையும்பகுத்துப்பார்க்கிலிவைகளிலென்ன

‡ இ-ம். ஆபரணங்களா லலங்கரிக்கப்பெற்றும் அந்தத்தினுய்கள் முதலானவை பட்சிப்பதற்கு யோக்கியமாயிருக்கின்றஸ்திரீகளினது தனத்திலென்னவழ இருக்கின்றதாம்.

¶ இ-ம். இம்மையிற் காமாக்கினியினா லெரிப்பது மறுமைக்கு நரகாக்கினியை யுண்டாக்குவதுமான மின்னாரிடத்தி லென்னசுகமென்பதாம்.

௮௩. மகளிர் இன்பத்தைத் தூஷித்தல்

லுள்ள இரையாகிய மாமிசத்துக்கிணையாவார்.‡—மிருந்ததுக்கத்தை பூட்டியிருக்கின்ற பூட்டாகவும் முடிவில்லாத விராகத்துவேஷங்களென்கின்ற இரத்தினங்கள் வைத்திருக்குஞ் சம்புடமாகவு மிருக்கின்றமாதர்களது சுகத்தைவிரும்பேன், இதுமாமிசம், இதுவிரத்தம், ஈதஸ்தி, இதுநரம்பென்று விசாரிக்கில் சந்திரவதனத்தையுடைய மகளிரது ஆசை

௮௪. மகளிரின்பநீக்கலேபேராநந்தமெனல்.

யானது சிலதினத்தில் பகையாம். † —மனைவியையுடையவனெவனோ, அவனுக்கே போகத்திலாசையுண்டாம், மனைவி யில்லாதவனுக்கு புணர்ச்சியினின்ப மெவ்விடத்துண்டாகும், போகத்துக்கிடமான பெண்ணைவிடில் மனதின்கண்ணுள்ள வுலகபந்தம்போம் நாமமாத்திரமான வுலகநீங்கினால்நீங்

௮௫. மகளிரின்பத்தை விரும்பேனெனல்.

காத பேராநந்தமுதயமாம்.§—விசாரமின்றி வருஞ்சமயத்தி னின்பமாகியும் வந்தபின் இசைபாடாநின்ற வண்டினதிறகைப்போல எக்காலமுஞ் சஞ்சலிப்பதாயும் நீக்குதற்கரிதாயு மிருக்கின்ற மகளிரனுபோகத்தினாலுண்டாகும் வியாதியும், இறப்பும், வயோதிகமும் ஆதியான துன்பங்களுக்குப் பயந்து மனதில் இச்சிக்கேன் ; எப்படி இனியடைதற் குரி

௮௬. ஸ்திரீதாடனை முடித்து ஸ்திரீ முதலிய போகங்களையனுபவிக்கசத்துயில்லா திருந்தும் அவைகளில் இச்சையுள்ளதுமூப்பாகையால் அதனை யதன் பின்வைத்து அதையுந்தூஷித்தல்.

யபிரமபதத்தை யடைவேன். ¶ —முடிவுபெறாத பாலப்பருவத்தை எவ்வனமானது விழுங்கிவிடும் இவ்வெவ்வனத்தைவேறுபடுத்துகின்றமூப்பானது விழுங்கும் மயக்கமும் வியாதியும் துன்பமுமாகிய விவைகளை மிகவும் பயனாகவுடைய வார்த்திகம்வந்தால் இரண்டாம் விவாகத்தில் வந்தமனைவியால் முன்னுள்ளமனைவியானவள் புருடன்மனதினின்று நீங்குவதுபோல முதிர்ந்தவறிவு பிரிந்தோடும்*—

௮௭. சரையின் குற்றங்களை யுரைத்தல்.

வார்த்திகம்வரும்போதில் நவத்துவாரமுள்ளசரீரத்தில் தளர்வும் மறதியும் அமைந்திராநின்ற வாசையும் துயரமும் செய்தற் களவுள்ளன வாகிய

‡ இ-ம். அறிவிலரான மனிதரைப்பிடித்து காமத்திலழுத்தி துக்கம்விளைவிப்பதற்குக் காரணமான மாதரிடத்தென்ன சுகமென்பதாம்.

† இ-ம். துக்கத்தைக்காப்பதாயும் இராகாதிதோஷங்களுக் கிடமாயும் இருக்கின்ற மாதர்களினுருவத்தை விசாரிக்கி லதிலென்னசுகமிருக்கின்றதாம்.

§ இ-ம். மகளிரிச்சையை நீங்கும்காரணத்தினால் திரிசயநீங்கிச் சுகமுதயமாமென்பதாம்.

¶ இ-ம். வரும்போதின்பமும் வந்தபின் றுன்பமுமாய் வருத்துகின்றமாதர்கள் சுகத்தைநீக்கிப் பரமசுகந்தை யடைவேனென்பதாம்.

* இ-ம். தெளிந்தவறிவையு நீக்குந்துன்பமயமான வயோதிகப்பருவத்தில் என்னசுகமிருக்கின்றதாம்.

காரியங்களில் செல்லுதற்குச் சத்தியில்லாமையும் கொடியவியாதி யுண்டாதலும் குறிக்கப்பட்ட வஸ்துக்களை சம்பாதிக்கத்தடுமாற்றமும் புத்திரன்முதலியவர்களாற் செய்யப்பட்ட பழிப்புமாகிய விவைகொடாநின்ற துக்கமானது நாலுவிதமாகும் ‡—வயோதிகப் பருவம்வந்து சரீரமெங்கப் பட்டவர்களைப்பார்த்து இஷ்டர்களும், புத்திரர்களும், உறவினர்களும், மகளிரும், அடிமைகளும், சிரிப்பார்கள்; பார்ப்பதற்குச் சகிக்கப்படாத வடிவமாய் துன்பத்தையும் நரையையும்பொருந்தி வலிமையையுநற்குணங்களையும் நீங்கினவார்த்திகத்தைவெட்டுப்பட்டமரத்தில் கழுகடைவதுபோல ஆசைவந்துபொருந்தும். §—பிழையையும் மெலிவையும் பொருந்தி மனதையெரித்து நிறைந்த வாபத்துக்களனைத்திற்கும் பாங்கியான விச்சையைப் பொருந்துகின்ற வயோதிகத்தில் ஒப்பற்ற பரலோகத்தில் பொருந்த நன்மையென்னவென்று நமதிச்சையினுலுண்டான வினைகளை நீக்கக்கூடாததால் அச்சம் மிகவுமதிகரிக்கும். †—வார்த்திகத்தில் விடய விச்சையிற் களிப்புமிகும் அதைப் புசித்தற்குச் சத்தியின்றும் இச்சிப்பதை யனுபவிப்பதற்குவல்லமையில்லாததினால் நினைப்பனைத்து மெரிந்துவாடும் பருவகாலத்தி னீறுபூத்த முதிர்ந்த பூசினியின்பெரியபழம்போல காலனானவன் மனிதர்களுடைய வெண்மையான நரையையுடைய சிரசை புசிப்பான். ¶ இறப்பாகிய அரசன்முன்னே வருகின்ற நரையென்னும் வெண்சாமரையை வீசிக்கொண்டு கூட்டமுள்ள தேகவியாதிகளு மந்துக்கரணவியாதிகளுமான படைகள் நடக்கும், தகுதியில்லாதநரையென்னும் வெண்சுண்ணந்தீற்றியதேகமாகிய வீட்டுக்குள் ஆபத்தும் அறிவினசத்தியம் சோர்வுள்ள

௮௮. நரையிலுள்ள கிழத்தனையும் ஆசையையுமுரைத்தல்.

௮௯. நரையினால் வரும் அச்சத்தை யுரைத்தல்.

௯௰. நரையிற் சத்தியின்மையும் அது வுண்டாதலுங் கூறல்.

௯௧. நரையைமரணவரசனுக் கங்கமாக வருணித்தல்.

‡ இ-ம். சரீரத்தளர்ச்சிமுதலான நாலுவிதங்களாலுந் துன்ப மனுபவித்தற்குரிய வயோதிகப்பருவத்தி லென்னசுகமிருக்கின்றதாம்.

§ இ-ம். எல்லாரானு நகைசெய்வதாயுந் துன்பமயமானவாசை குடிகொண்டிருப்பதாயுமிருக்கின்ற வயோதிகப்பருவத்திற் சுகமின்றென்பதாம்.

† இ-ம். மனதை வேகச்செய்கின்ற வாபத்துகளுக்குச் சகாயமான இச்சையும், இளமையிற்செய்திருக்கின்ற தீவினைகளை இப்போது பரிகரிக்கக்கூடாமையான் மறுமைக்கென்செய்வோமென்னும் பயமுமிருந்திருக்கின்ற வார்த்திகத்திலென்ன சுகமிருக்கின்றதாம்.

¶ இ-ம். விரும்பப்படும் பதார்த்தங்களிருந்து மனுபவிக்கக்கூடாத துக்கத்தையுடையதாயும், காலனழிப்பதற்குப் பக்குவமாயுமிருக்கின்ற வார்த்திகப்பருவத்திலென்னசுகமிருக்கின்றதாம்.

கஉ, சரை தாடணத்தை முடித்திப்பருவத்தைச் சங்கரிக்குங்கால முண்டாதலால் அதன்பின் னதனைவைத் தையுந் தூஷித்தல்.

ரோகமுமானமாதர்கள்வாழ்வார்கள். †—நரைபொருந்தியகொடிய முதிர்வயதாகிய பிசாசோடுங்கூடி வாழ்வதினால்சுகமென்ன, ஈடணாத்ரயங்களையும்அற்பமாகநீக்கும்இச்சையையுடையமூப்பைகெடுத்தற்கு எவர்க்கும் அரிதாகும்.[காலதூஷணம்] வரிசையாகவந்தசகத்தில்அஞ்ஞானமயமாய்விளங்காநின்றஇன்பப்பொருள்களெல்லாம் குற்றம்பொருந்திய எலியால் நூல்போல்கூற்றனாற்கெடும். ¶—மகரமச்

கங. காலம் மகான்களையும் அழிக்குமெனல்.

சங்களுறைகின்ற கடலில் ஜலத்தைப் பானஞ்செய்யாநின்ற வடவாமுகாக்கினியைப்போல எல்லாவற்றையும் புசிக்கின்றகாலனால் உலகத்தின்கண் புசிக்கப்படாத தொன்றில்லை; சொல்லுதற்கரிய மகத்துக்களாயினும் நியதிக்குப் பின்னொரு க்ஷணநேரமும்பொறான், சகலத்தையும் புசித்து அவனேசமஸ்தமுமாயிருப்பன். § —சிறந்தவரசர்களும் நன்

கச. காலம் பலமான சரா சரங்களையுங்கெடுக்குமெனல்.

மை வினையுடைய பிரமாதிகளும் மகாமேருவுக்கிணையான விருத்திராசூரன் முதலிய யாவரையும் சர்ப்பத்தைக் கொல்லாநின்ற கருடனைப்போல காலனழிப்பான்; துகளுடன் இலையும் திரணமும் மகாமேருவும் சமுத்திரத்து வெள்ளமும் செழித்த மயேந்திரகிரியுமாகிய இவைகளை காலனானவன் கெடுத்து தன்வசமாக்குவன். ‡ —

கரு. காலத்தின் சிருட்டியாதியைச் சொல்லுதல்.

விரிந்த சீவமசகங்கள் சப்திக்கின்ற அண்டங்களெனும் பழங்களை உதிர்த்த அத்திவிருக்ஷ மாகியும், சூரியனே நேத்திரமாக மத்தியானமென்னும் பார்வையால் பக்குவம்பார்த்து, உலகமென்கின்ற பழையகாட்டில் உலகபாலரென்னுங் கனிகளைக்கொய்து, தானே புசிப்பவனாயு மிருக்கின்ற காலனானவன் பிரகாசிக்கின்ற வுயர்ந்தோர்களென்னு மிரத்தினங்களை வரிசையாக முக்குணங்களென்னுங் கயிற்றில் கோவையிட்டு தரித்து கெடுப்

---

† இ-ம். மரணத்துக்கங்கமாகியுமாபத்துமுதலியவற்றிற்கிடமாயுமிருக்கின்ற இவ்வயோதிகப்பருவத்திற் சுகமின்றென்பதாம்.

¶ இ-ம். ஈடணாத்ரயங்களாலுள்ள துன்பங்களுக்கு மிகுந்த துன்பங்களைக் கொடாநின்ற சரையினாலும், சகத்திற் சுகம்போலத்தோற்று மதனையுங்கெடுக்கின்ற காலத்தினாலுமென்ன சுகமிருக்கின்றதாம்.

§ இ-ம். பஞ்சபூதத்தைக் கெடுப்பதுமன்றிச் சத்துக்கள்வடிவங்களையுங் கெடுத்துச் சூனியமாகமிஞ்சுங் காலத்தினாலென்னசுகமென்பதாம்.

‡ இ-ம். உலகத்தின்கண் மகத்தாகியுமற்பாகியு மிருக்கின்றவைகளைக் கெடுத்துச் சூனியமாக்குங்காலத்தினா லென்னசுகமென்பதாம்.

௧௬. காலம்உலகத்திலுள்ளயாவையுங் கெடுக்கு மெனல்.

பான். ¶—சிறியவுலகமென்னுஞ் சீரணித்த வீட்டில் சிந்தாநின்ற வுலகத்தாரென்னு மிரத்தினங்களை மிருத்துவென்னுஞ் சம்புடத்திற் சேர்க்கின்ற காலனானவன், உணர்வற்ற பல சீவர்களாகிய மிருகங்களும், பட்சிகளும், அளவின்றி எவ்விடத்திலுங்கெட பசையற்ற வுலகமாகிய பாலைவனத்தில் வேட்டைசெய்து, மகாகற்பத்தில் பிரகாசமுள்ள வடவானலமென்னுந் தாமரையானது சேர்ந்திருக்கின்ற சமுத்திரத்தை விளையாடாநின்ற குளமாகச் சேர்வன். ‡—கசப்பும், புளிப்பு, முறைப்புமாகிய இவைமுதலான அறுசுவையுடைய மிகுந்த வசர வுயிர்களாலும், சமானமில்லாத பால், தயிர், முதலாக சத்த சமுத்திரங்களினாலும், நானாவிதமாகிய சிருஷ்டிகளுள்ள உலகங்களினாலும், உணவையுடைய காலனானவன், சுழன்று சுழன்று நிலைபெற்ற வவ்வவைகளில் மகாகற்பத்தில் எப்போதும் சுற்றிக்கொண்டுவருவான். †—பழமையாகிய ஜகத்திலுண்டாகின்ற தாபரசங்கமமான வஸ்துக்களனைத்தையும் கொன்று வெல்லுதற்கரிய சங்கார சத்தியானவள் மிகவும் பயங்கரமும் மிகுந்த வல்லபமுமாகிய நடையை யுடையவளாய் துற்காதி சத்திகளனைத்தையும் தன்னுடன் பொருந்தப்பெற்று சாரக்கூடாத உலகமோகமென்னும் பொலிவான காட்டில் பெண்புலியைப்போல வாழ்வாள், § —

௧௭. காலம், சகலத்தையு மற்பமாசக் கெடுக்கு மெனல்.

௧௮. காலனுடனமுடித்து அதனையுஞ் சங்கரிக்கின்ற சங்கார சத்தியின் குணங்களை யுரைத்தல்.

௧௯. சங்காரசத்தியினடனச் சிறப்புரைத்தல்.

மிகுந்த சீவர்களைக்கொன்று இரசம்பொருந்திய பூமியாகிய மதுபாத்திரத்தைக் கரத்திலேந்திமூன்றுலகமென்கின்ற இதழ்களையுடையநீலோற்பலஞ், செங்கழுநீர், தாமரை, மலரென்னு மிவைகளாற்றொடுத்த அலங்கலைப்புனைந்து எறியாநின்ற கோடை யிடியைப்போல மந்தாகாசஞ்செய்கின்ற நரசிங்கத்தை, லீலைக்குரிய கிளிப்பிள்ளையாக நீண்டுமிகுந்த பராக்கிரமத்தையுடைய புஜமாகிய கூட்டில் ஏந்திக்கொண்டிருக்கின்ற தன்மையை யுடை

¶ இ-ம். முத்தொழிற் கேதுவாகியுஞ் சூனியமாகியு மிருக்கின்ற காலத்தினாலென்ன சுகமென்பதாம்.

‡ இ-ம். சகலவுயிர்களையு நாசஞ்செய்து மகத்தையு மற்பமாக விளையாடுங் காலத்தினாலென்ன சுகமிருக்கின்றதாம்.

† இ-ம். ஜகங்களை புராதனமாகவும், ஜீவகோடிகளை பதார்த்தங்களாகவும், சத்தசமுத்திரங்களை நெய்பாற்றயிராகவும்,புசித்து எப்போதுஞ்சுழன்றுகொண்டிராநின்ற இக்காலத்தினாற் சுகமின்றென்பதாம்.

§ இ-ம். உலகத்திலுள்ள சகலவஸ்துக்களையுஞ் சங்காரஞ்செய்து பிராக்கிருதவடிவமான ஜகத்திற் சகலசத்திகளுக்குஞ் சத்தியாயெதிரற்றிருக்கின்றது, சங்காரசத்தியென்பதாம்.

௧௦௦. இதுவுமது. யவளாய் §—நிலையான சரற்காலத் தாகாயத்தைப் போல, சரீரத்திற் களங்கமின்றி சுரவீணை யினி சையையொத்த மதுரவசனத்தைப் பொருந்தி யிருக்கின்ற மகாகாலனை, விளையாட்டின் பொருட்டு குயிற்குஞ்சாகக்கைக்கொண்டு சர்வமுமில்லையென் கின்ற வெற்றிபொருந்திய வில்லைத்தரித்து உண்டாகின்ற துன்பங்களாகிய வம்புகளைத் தரித்துக் கொண்டு எவ்விடத்திலும் தனதிச்சைப்படி இருத் தலுஞ்செய்து பிரகாசித்து சுழன்றுகொண் டிருக்

௧௦௧. இதுவுமது. கின்றாள். ¶—அவளுக்கு சுவர்க்கம் சிரத்திற் றரிக்கு மாபரணமாம், தீவினையென்கின்ற தங்குவினால் கோத்துக் கட்டப்பட்ட பலநரகமென்னு நூபுரங்களை பாதாளமென்கின்ற பாதத்திற்றரிப்பள், சூரியசந்திரரென்கின்ற குண்டலா பரணங்களையும் இமயமலையென்கின்ற அஸ்தியாபரணத்தையும், மகாமேருவென்கின்ற சொன்னா பரணத்தையும் தனதிரண்டு செவியிலும் கீழணிமேலணியாகத் தரிப்பள், சக்கரவாளகிரியை அரையிற் றரிக்கப்பட்ட மேகலையாக சங்கார சத்தியானவள்தரிப்பள். ‡—

௧௦௨. இதுவுமது. பின்பக்கத்திற்றூழ்ந்து அசைந்து விளங்குகின்ற சுப்பிரமணியரது வாகனமென்கின்றவருடையும் மயிலையும் தரிப்பள், மூன்று கண்களென்னும் பெரியபள்ளங்களால் அச்சஞ்செய்யப்பட்ட சந்திரனையணிந்த வுருத்திரர்களின் சிரசைத்தரிப்பள், கன்னியாகிய பரமேஸ்வரியினுடைய கூந்தலென்னுஞ் சாமரத்தையும் மலைகிகர் பைரவர்களின் துள்ளுகின்ற கவந்தங்களையும் தரிப்பள், ஆயிரங்கண்களென்கின்ற பள்ளம் பிரகாசியாநின்ற தேவேந்திரனது சரீரமென்கின்ற பிக்ஷாபாத்திரத்தை தரிப்

௧௦௩. இதுவுமது. பள். †—சரீரசம்பந்தமான நரம்புகளாற் கோக்கப்பட்ட சிரக்கபாலமாலைகளால் பிரகாசமிருந்த ஆகாயத்தை யுடையவளாய் தனக்குத்தானே பயங்கரமாய் உலகங்களனைத்தையும் நாசஞ்செய்வள், விஸ்வ ரூபங்கொண்ட விஷ்ணுவினது விருத்தமாகிய சிரங்களென்கின்ற தாமரை மலர்களாற்

§ இ-ம். காளராத்திரி விசுவத்தைத் தன்வயமாக்குமென்பதாம்.

¶ இ-ம் காளராத்திரி சர்வத்தையுஞ் சங்கரிக்கின்ற மகாகாலனையுந் தனது விநோதக்கருவியாய் வைத்திருக்குமென்பதாம்.

‡ இ-ம். சங்காரசத்தி, சுவர்க்கமுத னரகபரியந்தங்களை விசித்திரமான ஆபரணங்களாகத் தரிக்குமென்பதாம்.

† இ-ம். கோரசத்தி உருத்திரன்முதலிய சகலரையுந் தன்வயமாக்குமென்பதாம்.

ளுடுத்த மாலைகளுடன் ஒப்பற்ற நிருத்தஞ் செய்து சர்வசங்கார காலத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பள். ‡ —இப்பொழுது சொல்லப்பட்ட வஸ்துக்களியாவும் நித்திய வஸ்துக்களல்லவாம், கொடியமனமானது அகங்கார நிமித்தமேயாம் தெரியப்பட்ட பொருள்களியாவும் இல்லாததாகப் போகின்றன சநநங்களின் முடிவு தெரியவில்லை ஆதலின், அறிவுமயங்கும், வியாகுலத்தினால் மனம்வருந்தும், இச்சாவியாதிகள் யாவர்க்கு மிகுந்திருக்கின்றன, இருண்ட மயக்கமான விச்சைதீர்ந்த சந்துக்கள் அரியராம். புருடார்த்த சாதனத்திற் குரிய வவ்வனமானது பயனின்றிய முயற்சியினால் தானேகழிகின்றது. ¶ —மகான்களிடத் தன்பானதுநெடுந்தூரமாம் ஆதலின்அடையத்தக்க மோக்ஷமார்க்கமிடையாது, ஆதலின் ஆத்மதத்துவம் பெறுதற்கரிதாம், களங்கமனது பிறர்சுகந் தனது சுகமாயனுபவிக்கு மைத்திரியில்லாமையான் மயங்கும், ஆதலின் பிறர்செய்யுஞ் சத்கிருத்தியத்தி லானந்திக்கு முதிதையின்மையால் அகமகிழ்ச்சி தூரமாம், பிறர்துக்கந் தன்றுக்கமாகப் பார்க்குந் தயையின்மையாற் கிருபையுண்டாகாது, பரவுகின்றஇழிவானது பிறர்செய்யுந் தீவினையினுபேட்சையில்லாததினால் அதிதூரத்திலிருந்தாலும் வரும், தைரியம்போய் அதைரியமாம், கெடும்படி நரகத்தில் வீழ்பவர் திரும்பவுஞ் சுவர்க்கத்திலேறுவார்கள், மூடர்கள் சங்கமெளிதாம், தெளிந்த சாதுக்கள் சங்கமானது அரிதாம். † —தோன்றி நசிக்கின்ற வஸ்துக்களிற்பெற்ற பாவனையானதுபவபந்தமாம், வாசனைசமஸ்காரமுள்ள சீவபரம்பரைகள் கலந்து சுவர்க்க நரகங்களிற்செல்லும். திக்குகள் அறைப்படுக்குஞ் சூரியனின்மையாற் மேருக்குறு வாம், தரிசித்ததேயங்கள் மறுபேருள்ளதாகமாறுபடும், கனமானமலைகள் சிதறிப்போம், சத்தாசாமானியமானது வியாபிக்க அந்தரக்ஷலோக நசிக்

க0௪. ஜகத்தைத்தனமாகவும் சேனை வாயுமுதலிய வொன்பதாகவும் பரத்தைக் காலமாகவும் பகுத்துத் தூஷணித்துமேல் இவைக்கெல்லாங்காரணமான ஈசுரசத்தியைச்சொல்லி அதனையுஞ்சத்தாமாத்திரத்திலடக்கி அச்சத் தொன்றுமே சேடமென்பதை வெளிப்படுத்து நிமித்தம் நியதிசத்திமுதலியவற்றையு மித்தையென நீக்குகின்றது.

க0ரு. சாதுசங்க மரிதெனல்.

க0சு. ஜீவேஸ்வர ஜகங்கள் தத்துவத்தில் அயிக்கிய மாமெனல்.

‡ இ-ம். சங்காரசத்திசெருக்கடி நிறை நிருத்தியமுள்ள பிரமவிஷ்ணுக்களையுந்தன் வயமாக்கிச்சர்வசூனியமயானத்தினிருத்தஞ்செய்யும் பரமேஸ்வரசத்தியாம்.

¶ இ-ம். நித்தியமான வாத்மார்த்தத்தையடைய முயற்சியாமல் வீணுக்கழிக்குங்காலத்துக்கு விசனப்பட்டதாம்.

† இ-ம். சற்சங்கமில்லாததினாற் றத்துவஞானமு மற்சரமுதலிய வற்றுன் மைத்திரி முதலியனவுமில்லாமற் சழல்வார்களென்பதாம்.

கும்,தேவலோகநசிக்கும்,பூலோகநசிக்கும், நெருங்கிய சமுத்திரம்வற்றும், நக்ஷத்திரங்கள் சிதறும், அசுரர்களும் தேவர்களுமாகிய விருவருடைய
௧௦௭. இதுவுமது. கூட்டங்களுநசிக்கும், † —சித்தர்களு நசிப்பார்கள், துருவனுங்கெடுவான், மும்மூர்த்திகளும் பரதத்துவத்திற் கலப்பார்கள்,சிருஷ்டியாதியைச் சங்கற்பந்தா லுண்டாக்கு மீஸ்வரசத்தியான காலமும் விதிக்கிற நியமனசத்தியும் அந்தமாம், பருத்த வாகாயமு நாசமாம், மாயாமயக்கத்தை நிவிர்த்தி செய்யும்பொருட்டு கொடுப்பவராயும், வசனத்துக்கும் கேள்விக்குமெட்டாத தத்துவஸ்வரூபராயும், களங்கரகிதமான ஞானமூர்த்தியராயு மிருக்கின்ற ஒன்றான பரமேஸ்வரனால் நிந்தைபொருந்த பழமையாகத் தோற்றுகின்ற ஜகத்து ஈனமாம். § —

௧௦அ. சகத்துன்மையென்பதை நிந்தித்தல். இக்காலம் மங்கலங்களாம்,இதுவசந்தகாலமாம், தேச யாத்திரைக்கிது நல்லகாலமாம், அவ்வளவு சிறப்புள்ளதே பந்துக்களாம், இந்தச்சுகமிருந்த பிரகாரமும் அதிசயமுள்ளபோகமும் என்னவியப்புள்ளதாகுமென்று விருதாவாகச் சிந்தித்து ஜகத்துளார் நசிக்கின்றார்கள், மகான்கள் சரித்திரத்தை தான்செய்யச்சிந்தித்து முன்னதாயிருக்கின்ற பகற்காலங்களிலெல்லாந்தேடாமல் அக்காலம்வீணாகப் போகுமானால் இரவில்நித்திரையுண்டாமோ ‡ —

௧௦௯. சம்சாரசுகம் முடிவிற்றுன்பமாமெனல். இல்லாளையும்,புத்திரர்களையும்,தனத்தையும் அமுதத்தைப்போல என்னுடையதென் றபிமானித்து மனதினாலிச்சித்து தனது செல்வங்களனைத்தையும் அந்த மனைவி புத்திரர்களுக்காகவே செய்வார்கள். அவ்விருப்ப முள்ளவைகளாகிய வனைத்தும் வினையினால் நசிக்குங்காலத்தில் அதிக துக்கத்

௧௧௦. எதிரற்ற செல்வமு நசிக்குமெனல். தைச்செய்யும். ¶ —சத்துருக்களனைத்தையும் துரத்திவிட்டு செல்வம் அனேகம்வர அவைகளை எதிரில்லாமல் அனுபவிக்குங் காலத்தில் எங்கிருந்தோவந்து கேடற்றகாலன் நாசஞ்செய்வான், மனைவிபுத்திரர் முதலானமாயைகள் நாநாவிதமான வி

† இ-ம். சத்தாமாத்திரத்திற் பாவனையாலுண்டானவனைத்து மித்தையாயிருக்க, காமெப்படி நித்தியமாவோமென்பதாம்.

§ இ-ம். பரிசுத்தமானஞானத்தில் மும்மூர்த்திமுதலிய பேதங்களில்லாதிருக்க, நாமெப்படி யிருப்போமென்பதாம்.

‡ இ-ம். போகங்களை யற்புதமென்று வீணுக்கருதி பிரமவிசாரத்தை விரும்பாம லிருப்பதற்கு விசனப்பட்டதாம்.

¶ இ-ம். தனதுசெல்வங்களைத் தானபிமானித் திருக்கின்றமனைவி புத்திரர்களுக்குக் கொடுக்கும்போதிற்சுகமாயும், அவைநசிக்கும்போது துக்கமாயும் வருத்துமென்பதாம்.

டங்களிலிருந்து மார்க்கத்தில்வந்து கூடிவார் போலவாம் † —கற்பமாகிய க்ஷணநேரத்தில் பிரமாக்

ககக. பிரமராயுஞ மித்தையெனல்.

களுநசிப்பார்கள், சிறிதாகிய காலநுட்பத்தினல் காலசமூகத்தின் அணுத்துவத்தையும் மகத்துவத்தையும் சிந்தித்து அளவுசெய்யும் புத்தியானது மித்தையாம், சொல்லிய சீவர்களனைத்தும நாநாவிதமான தீமையில்மயங்குவர். ‡ —கற்றுணர்ந்த பெ

ககஉ. கருமபல முதலியயாவு மித்தையெனல்.

ரியோர்களரிதாயிருப்பர், வர்ணாச்சிரமத்துக்குரித்தாய் நிறைந்த கிரியைகளும் துன்பத்தினல் சகலமு மில்லாததாம். எப்படி சீவித்திருப்பது, அப்படி சிறப்புள்ள நாள்களும் மேலான சம்பத்தும் அத்தொழில்களுமாகிய யாவுநசித்து நினைப்புமாத்திரமாய்த் தோற்றும் நாமுமந்த மார்க்கத்திற்செல்வோம். ¶ —துன்பஞ்செய்கின்ற வாபத்தும் சம்

ககங. உயர்வுதாழ்வு நிலையன்றெனல்.

பத்தும், சநநமும், மரணமும், என்பனவனைத்தும், கணிதநூலிற் சொல்லுவதான க்ஷணத்தில் நசியாதவையில்லை, கொடியவீரன் வீரமில்லாத ஒருவனல் நசிப்பன், ஒருவனல் நூறுபேர் கொல்லப்படுவார்கள், வணங்கத்தகும் ஈனர்கள் மேலானப்ரபுவாவார்கள், இவ்வண்ணம் வரம்பின்றிச் சக்கரமாகச் சுழலும். §—அப்படிப்பட்ட தோஷங்களென்

ககச. இராசபோகங்களி லிச்சை யுண்டாகாதெனல்.

னும் காட்டுத்தீயினல் மிகவும்வெந்த என்மனதில் ஜலத்தில் கானற்சலந் தோன்றுததுபோலப் பரவிய செல்வாபேக்ஷை யுண்டாகாது, இராஜப்ரவிர்த்தியிற் செல்கின்ற ஆயுளும் இறப்புமாகிய இவ்விரண்டையும் இச்சிக்கேன், இப்படிப்பட்ட தாகிய ஓர்துன்பமில்லாமல் இப்பொழு திருக்கின்ற படியே இருக்கிறேன், ✻—அறிவின் வசமாய்வந்தவு

ககரு. சித்தந்தியாகம்விரும்பல்.

மதபுத்தியினல் என்மனதை நிவிர்த்திசெய்யாமற் போனல் நிவிர்த்திசெய்வது இனியெக்காலம், ஆலகால விடம்விடமன்று விடயமே விடமாகும், துன்

---

† இ-ம். சார்வபூமனனுபவிக்குஞ்சுகமும் சம்சாரமும் மாயாசம்பந்த மாதலாற்கெடுமென்பதாம்.

‡ இ-ம். பிரமன்முதலிய யாவராயுஞ மித்தையாதலால் அற்பாயுசுந் தீர்க்காயுசுமின்றென்பதாம்.

¶ இ-ம். நல்லினங்கள் முதலியயாவு மில்லாதிருக்க நமக்கென்ன கதியென்று விசனப்பட்டதாம்.

§ இ-ம். சுகதுக்கமுதலிய யாவுங் கணத்தினசிப்பதுமன்றி வரம்பில்லாமற் சுழலுமென்பதாம்.

✻ இ-ம். முன்சொன்ன தனமுதலான தோஷாக்கினியினு லெரிக்கப்பட்டிருக்கின்ற நான், போகமுதலியவற்றில் விரும்பாமற் சும்மாயிருக்கின்றே னென்பதாம்.

பஞ்செய்கின்ற விடமானது ஒரு சரீரத்தைக்கெடுக்கும் விடயவிடமானது இனிவரும் தேகங்களையுங் கெடுக்கும் ‡ —சுகமும், துக்கமும், பந்துக்களும், மித்திரர்களும், ஆயுளும், மரணமும், என்பனவினைத்தும் விளங்காநின்ற ஞானவான்கள் மனதைக்கட்டுப்படுத்தாராம், சொல்லாநின்றமையுளானது காற்றினுற்சிந்திய மேகசலத்தி லிலையை யொப்பாரும், சமானமில்லாத விடயபோகமானது போகமிலை யெழுமுகிலி லுண்டாகாநின்ற மின்னலுக் கொப்பாம்.

ககசு. சீவன்முத்தரிலக்ஷணம்.

ககஎ. ஆத்மஞானத்தை யபேக்ஷித் துவிசனப்படுதல்.

† —மனிதர்களுடைய முத்திக்குச் சாதனமெவ்வளவு மிலையில்லாதது இவையனைத்து மனத்தில் சிந்தித்து உபசாந்தத்தையுடைய மகிழுங்களாகிய நீங்களனைவரும் சமாதியிலிருப்பவர். மகா... வீர்கள், ஆராய்ந்தறிந்து என்மனமானது கடலின்குபிரமவைக்கியத்தை யடைதற்கு விவசமாகாது, நாயகனைப்பிரிந்த நாயகியைப்போல ஆத்மவிச்சாந்தியும் விடயவிச்சையிலும் சேராது.

ககஅ. நிச்சயம் விசாரித்தல்.

¶ —ஆசையினால் துன்பமும், பிறப்பும், உபாதிகளும், சந்தேகமுமில்லாமல் போகமில்லாமல் பிரகாசித்து நிலையாணடுகிறது, இச்சிக்கும் கவிழுங்க விடயமாகிய மக்களியில் விழுந்தானுக் குக்கினியிலிலைத்தருமா சருளிகையைப்போல நிலைபெறாத நிலையாகப் பதியாது.

ககக. மெய்யுணர் வினவுதல்.

§ —அலைவுள்ள ஜலத்தையுடைய சமுத்திரம் வேறில்லாததுபோல வாக்கு விபரமாயே யன்றி சம்சாரமானது வேறின்றும், ஒழுக்கமுள்ள சத்துக்கள் எப்படி முற்றுள்ள துன்பத்தை நீக்கினார்கள், தேவரீர் முனைந்திரா நின்ற தியாது, அந்நிச்சயத்தை அடியேனுக் குரைத்தருள் செய்யவும்.

கஉ0. விஸ்ராந்தி வருமளவும் ஒன்றையும் விரும்பேனெனல்,

* —இந்நிலையில்லையா விஸ்ராந்தி பதமில்லையா, இருக்கின்றமெதன்றும் எனாத்தமாகவே பெறாக் கொருவரும் சொல்லமாட்டார்களா, சொல்லுவார்களாயின் அவ்விஸ்ராந்திபதத்தை சமர்ப்பியோ

‡ இ-ம். முன்சாதன சதுஷ்டயமுண்டாய் அதனுல் விடயதோஷ நிருபமுண்டான இவ்விவேகமிருக்கும்போதே மனோநாசஞ்செய்யாவிடில் விடயமெப்போதும் வருத்துமென்பதாம்.

† இ-ம். மித்தையான சுகதுக்கமுதலிய யாவுஞ் சத்துக்களை வருத்தாதென்பதாம்.

¶ இ-ம். விஸ்ராந்தியடையு மிமித்தமனதை யடக்கவேண்டுமென்பதாம்

§ இ-ம். எவற்றிற்கும் விலக்ஷணமா யனைவரிற்கடியும் கடாமலு மிருக்கின்ற வஸ்து யாதென் றுவினவினதாம்.

* இ-ம். மஹான்களினது துக்கநிவிர்த்தியால் நடையற்ற வானந்தத்தைப் பெற விரும்பினதாம்.

அடையமாட்டேன், அப்போது சந்தோஷமின்றியும் ஆகங்காரமின்றியு மிருக்கின்ற யான் மேல்செய்ய வேண்டியதொன்றில்லை, அன்னமும் விரும்பேன், மதுர பானமும் விரும்பேன், அரசையும் விரும்பேன், அற்புதமான ஸ்திரீகளையும் விரும்பேன்.— ஸ்நானம்பானம் முதலான நித்தியகருமங்களையும் செய்யேன் மன்னவனாகிய இராஜசிம்மாசனத்திலும் சுகாசனத்திலும்செல்லேன், சரீரத்தினுடைய பலத்தினால் மகிழ்ச்சியையும் விரும்பேன், மௌனத்தையுடையவனாய் எழுதப்பட்ட சித்திரத்தைப்போல இராமசந்திரனைத் தவிர இச்சையற்றிருப்பேன். ¶ —வாக்கற்று நெகிழ்ந்து பூரணசந்திரனைப்போல இனிமையுள்ளவனும் இனிய வசனத்தினாலும் விசாரிக்கின்ற அந்த விசேஷத்தினாலும் விசித்திரமான மனதை யுடையனாயிருக்கின்ற இராமசந்திரனவர், அங்கிருக்கின்ற முனிவர்கள் முன்னே இப்படியாகச் சொல்லி வைராக்கிய மேகத்தின்முன்னே மேகமொன்று சத்தத்தைக் கொடுத்து மயிலைப்போல அசைவியாமல் மௌனமாயிருந்தனர். †

வைராக்கிய பிரகரணத்தில்

ஸ ர் க் க ம் ௩.

அவதாரிகை.

முன்வைத்ததிற் கவதாரமென்றது சாதனசதுஷ்டயத்தில் இரண்டாவதான வைராக்கிய நிரூபணஞ் செய்யப்படுகின்றது காண்டப்பட்டமையால், அதனைக் கேட்டு முனிவர்களெல்லாம் வியப்படைந்து ஆச்சரியப்பட்டதனையும் சொல்லிய இராமனுடைய வசனத்தினால் இந்த்ரசபையைப் போலொத்திருக்கின்ற அந்த விசுவாமித்திரமுனிவரோடு சகலஜனங்களும் ஆச்சரியமடைந்தனர் என்பதுதான் அந்த அற்புதத்தை இங்கு அறிவிப்பதற்காக முதலில் கவியேயிங்குக் கூறுகின்றார்.

௧. வசிட்டர் முதலியோர் வியத்தல். சகலருமான மகாராஜாக்களும் வெகுவாய்ப் பட்ட அற்புதமான இராமசந்திரன் வசனங்களைக் கேட்டு தசரதன் சபையிலிருந்த சகலரும் இவ்வசனத்தைக் கேட்டவர்களும் மயிர்க்கூச்

¶ இ-ம். கண்ணங்களின் முகமலர்ச்சி கண்மலருடைய தேகத்தை விட்டு வெளிப்படுத்தார்.

† இ-ம். சபையில் இராமன் தன் அபிப்பிராயத்தை முனிவர்களுக்கறிவித்து அவர்களபிப்பிராயம் தெரிந்துகொள்ள வேண்டி மௌனமாக இருந்தாரென்பதாம்.

௩௮. நித்திய கன்மங்கள் செய்யேனெனல்.

௩௨. மௌனியா யிருத்தல்.

செழ களிப்பின்மிருந்தார்கள். ஒலித்தலையுடைய சித்தர்கணங்களும் ஆகாயத்தின்கண் மகிழ்ந்தார்கள். ¶ —நல்லது நல்லதென்னும் வசனமும் நல்லபுஷ்பமாரியும் அரைநாழிகைநேரம் சபையில் நிறைந்த பின்பு சித்தர்கள் கற்பகாலம் வலிய துன்பத்தோடும் விண்ணிற் சஞ்சரித்து மனோமயக்கமுள்ள நாங்களனைவரும் இன்றையத்தினம் இராமன் வசனமென்கின்ற இனியவமுதங் கிடைக்கப்பெற்றோம். ‡ தெளியப்பட்ட சித்தத்தை யடைந்தோம் இதற்கு மேன்மையான முனிவர்கள் போதிக்கும் வஸ்துவை மேலடைவோமென்று சித்தர்கணங்கள் ஆகாயத்தினின்று பூமியிலிறங்கவும் மகாசபையி லிருந்தோரனைவரும் எழுந்திருந் தெதிர் கொண்டுவந்து, § — சித்தர்களனைவர்க்கும் வசிட்டரும் விசுவா மித்திரரும் முந்தியாராதித்தார்கள், பின்பிந்த முனிவர்களுக்குச் சித்தர்களும் பூசித்தார்கள், அரசனான தசரதனும் அச்சித்தர்களுக்கு பூசைசெய்தான், ஆக்கமுள்ள வவ்வரசனுக்கும் அச்சித்தர் கணங்கள் முகமன் வசனத்தினால் ஆராதித்தும், ✻ —வணங்கி தங்கள் முன்னேயிருந்த செவ்விய கண்களையுடைய விராமருக்கும் முகமன் வசனங்களை பழுதற்ற புஷ்பவருஷத்தினாலும் அன்பான வசனங்களாலும், அன்புசெய்து முனிகளே நன்மையான மைத்திரியாதி குணங்களின் மிகுந்த இராமர் துறவாகச்சொல்லிய வசனங்கள் முற்றும் கெம்பீரமுடையதாய் அளவற்ற வதிசய முள்ளதாமென்றுசொன்னார்கள். †—தேவநிர்மாணமாய் அளவற்ற தீமையைச்செய்ய உற்சாகமிகுந்த குற்றம்பொருந்திய சம்சாரத்தில் சுகம்வருவது அரியதாம், சிறந்த வயிராக்கிய சித்தமுள்ளஇராமனுக்கு அச்சம்சாரமிஷ்டமென் றுணை

௨. சித்தர்கள் மகிழ்தல்.

௩. சித்தர்கள் சபைக்குவருதல்.

௪. சித்தரு நாருஞ் சந்தித்தல்.

௫. இராமனது விராகசையைப்புகழ்தல்.

௬. சித்தர்கள்தங்களையிகழ்தல்

¶ இ-ம். ஆகாயத்திற் சித்தர்சபையும் பூமியிலிராசசபையும் இராமனது வைராக்கியவசனத்தைக் கேட்டானந்தத்தை யடைந்தனவென்பதாம்.

‡ இ-ம். இராமன் வயிராக்கியவசனத்தினாற் சித்தர்கள்மயக்கந்தெளிந்ததென்பதாம்.

§ இ-ம். விஷயதோஷதிருஷ்டி நிருபணத்தினால் மனந்தெளிந்த சித்தர்கள் மேலாத்மானுபவத்தையுந் தெரிந்துகொள்ள ஆத்மாராமன் சபைக்குவந்ததாம்.

✻ சித்தர்களுஞ் சபையிலுள்ளோரு மொருவருக்கொருவர் வணங்கும் க்ரமமறிவித்ததாம்.

† இ-ம். இராமனது வயிராக்கியவசன மாச்சரியகரமுள்ள வாழ்ந்தகருத்தாக விருக்கின்றதென் றதிசயித்ததாம்.

றும் பகுதியதாயின், நமக்கு மிஷ்டத்தைக்கொடுக்குமென்று சொல்லப்படும்; அவரால் வெறுக்கப்பட்டவைகளை விரும்புதலின் தேவரிஷிகள் முதலிய யாவர்களினும் அறிவில்லாதவர்களென்று அப்பிரசர்கள் சொன்னார்கள். §—விசுவாமித்திரர் சொல்லுவார், இராகவனே யண்டாகப்பார்த்து மேம யாகவே குற்றமற்றவறிவினால் குற்றமற யாவையு மறிந்தாய், இனி தெளியவேண்டியதென்றிய பொருள் வேறொன்றுமில்லை, ஞானமிறைந்த சுகமுனியும் நீரும் அறிவினால் சமானமானவர்கள். †—எவர்கள் ஞானத்தைப் பெற்றவர்களும் விஷயாந்திரைய யனுபவ விரும்புவார்களென்று சொல்ல, இதைக்கேட்ட இராமர் சொல்வார், என்னையோ? சுகமுனிக்கு அதன்பின்னைறற்ற வறிவுண்டாயிருந்தும் விஷயாந்தியானது முன்னிலையாம் இன்பமுற வின்புண்டான தெப்படி. சொல்லுங்கே. ‡—முனிவர்சொல்லுவார், எழுமியர்பைக் கெடுக்கின்ற ஞானமானது நிறைந்து சுகப்பிரமரிஷியும் உன்னைப்போல் முன்னுள்ள ஜகத்தமைச்சைவிசாரித்து நிலைபெற்ற விவேகமுள்ளவராய் களங்கமற்ற ஞானத்தை யடைந்தும் அதன்சம்பத்தில் சந்தேகமுள்ளவராய் விஷயாந்தியடைந்திலன். ¶—விவேகமுள்ள சுகதேவர்த்தமிக்கு விடாமோகத்தினின்றும் திரும்பிய மனதையுடைய அவரும் மகாமேருவில் வசிக்கின்ற தன்பிதாவான வியாசர் பக்கத்திலடைந்து இத்துக்காமமான மாயையானது எப்படியேற்பட்டது, விரிபதெப்படி? தொடக்கமேல் ஆதாரமுடையது? எவ்வளவுள்ளது? எப்போது அழிவுண்டாயிற்றென்று கேட்டார். *—அந்தக்கதையான விருஷிவரனைத் தான்அவனறிவில் பொருக்கு உரைக்கும்போது முன்பேயறிந்தறியாமயே சொன்னீரென்றுசொல்ல, அவ்வசனத்தினால் நன்னிச்சயமடையாமையைப் பார்த்து அவபோதமானது எனக்குத்தெரியாது, அதற்குமேல் சகலமொன்னவர் குற்றமற்றஞானத்தில்

எ. இராமருடைய சித்தநிலையை நிச்சயமெனல்.

அ. சுகமுனிவிஷயத்தைவிசாரித்தல்.

கூ. சுகமுனிவிஷயத்தை யுரைத்தல்.

க௦. மாயாஸ்வரூபவிசாரதல்.

கக. அதனுடைய விளக்கமை.

§ இ-ம். மகாமதியாளர் இராமருக்குச் சுகாசாரியரென யாவர்களிலும் சமானமானவனென்பதாம்.

† இ-ம். ஞானமுண்டான பிறகும் போகத்தையுடைத்தைக் கொடுக்குமென்பதாம்.

‡ இ-ம். பலமோகத்தைப் பெறவிரும்பினதாம்.

¶ இ-ம். களங்கமற்ற ஞானத்தை யடைந்தும் அதிசியமாகத் தன்னைப்பட்டவைகளை சேடிக்கவேண்டியதனால் விஷயாந்தியுண்டாகவில்லையென்பதாம்.

* இ-ம். மாயையினதும்பத்தியின்நிலையத்தைவிசாரித்ததாம்.

கஉ. பக்குவசோதனை. மிருந்தவர். † —அவரைக் கேட்கக்கடவாயென்று
கிருபையுடன் பிதாவானவரனுப்ப, மகாமேருவி
னின்று பூமியிற்சென்று ஜனகராஜன் வாழாநின்ற
பொன்மயமான வீட்டினது வாயிலிலடைந்தார்,
மேலான சுகப்பிரமரிஷியினுடைய வரவைத் தூத
ர்களாற் கேட்டு சோதிக்கும்பொருட்டு நினைத்து
அரசன் காணச்சென்றானில்லை, விகற்பமின்றிய சுக
முனியானவர் ஏழுநாளிருந்தார். ‡ —பின்னு மே
கங. இதுவுமது. ழுநாள் மற்றோரிடத்தி லிருக்கும்படி வைத்தபின்
பு, அந்தப்புரத்தில் ஏழுநாளிருத்தி சிறிய இடை
யையுடைய மடவார்களால் சந்தனபுஷ்பமுதலான
போகங்களையும் அறுசுவை யுண்டிகளையும் கொடு
ப்பிக்க புசித்தான், குளிர்ந்த பூர்ணசந்திரனுக்கு
சமானமுள்ள சுகமுனியானவர் இவ்விடயங்களின்
குற்றத்தையும், குணத்தையும், ஆராய்ந்திலர்.
¶ —அரசனாகிய ஜனகராற் கொடுக்கப்பட்ட
கச. சுகதுக்கங்களிலழுந்தாமை. போகங்களின் சுகமனைத்தும் அவன் முன்செய்யப்
பட்ட அவமானமான துக்கமனைத்தும் இச்சுக மு
னியினது மனதை எவ்வளவேனு மசைக்கவில்லை,
இளமையு மேன்மையுமுள்ள தென்றலானது அழ
கியமலைகளில் பெரிதாகிய மேருவை அசைக்குந்
கரு. சந்தித்துவினவுதல். திறத்ததோ. § —ஜனகராசன் அவ்விடத்தவ ரக
மகிழ்ச்சியைப்பார்த்து நமஸ்கரித்துதுதித்து தாங்
காநின்ற சகவியாபாரத்தை நீங்கி இலாபமனைத்
தையுமடைந்த சுகப்பிரமரிஷியே, இவ்விடத்தியெ
ழுந்தருளிய காரியம் என்னவென்று கேட்க, எப்
படி மாயையுண்டாயிற்று, எப்படிவளர்ந்தது, எப்
படிநசிக்கும், உள்ளப்பிரகாரம் குருவேயருளு மெ
கசா. சனகர் வாக்கியத்தை யொப்புக்கொள்ளுதல். ன்று, ✻—உண்மையாகக் கேட்கவேண்டியகிரமத்
தை சுகப்பிரமரிஷிகேட்க, ஜனகராசனும் வியாசர்
முன்சொல்லிய அவ்வண்ணஞ் சொன்ன மாத்திரத்
தில், ஞானவானாகிய சுகரும் சுய விவேகத்தினால்

† இ-ம். ஆசாரியரறிவிப்பதெல்லா மனோதீன்றிய வனுபூதியெனக் கொள்ள வேண்டுமென்பதாம்.

‡ இ-ம். சுகமுனிவரது சாத்வியாதிகுணங்களைச் சோதிக்கும்பொருட்டு முன்வாயிலிற் றடைசெய்ததாம்.

¶ இ-ம். இடையேழுநாளோர் வாயலிற்றடுத்தலாற் குரோத சோதனையை யும் கடையேழுநா ளந்தப்புரத்திற் போகங்களைக் கொடுத்தலாற் காமசோதனை யையுஞ்செய்ததாம்.

§ இ-ம். மனமானது போகாபோகங்களிற் சலியாமற் சமதிருஷ்டியி லிருந்ததாம்.

✻ இ-ம். ஸ்வரூபப்பிரத்தியக்ஷம் விளங்கும்பொருட்டு மாயாவுற்பத்தி ஸ்திதிலயந் தெரியவேண்டுமென்பதாம்.

முன்னமே இவ்வண்ணம் தெரிந்தேன், நீரும் என் பிதாவைப்போல அவ்வருத்தத்தையேசொன்னீர், நிறைந்த வேதாந்த சாஸ்திரங்களனைத்தும் சொல்லப்பட்டவாக்கியார்த்தங்களேகமேயென்று சொன்ளுர். § —ஆத்மாவில் ஸ்புரணரூபமாய் வேறுபட்டு நித்தமாயாவேற்றுமையாளது உதித்தவிடத் தொடங்குமாயின், கெடாநின்ற மாயையி னிடத்தில் பிரயோசனமோரணு வளவாகிலுமில்லை, அஃதித்தன்மைத்து, சகலருடைய மயக்கங்களையுங் கெடுக்கின்ற குருவே ஒப்பற்ற நிச்சயமான வாத்மஸ்வரூபத்தை சொல்ல வேண்டும் என்றுகேட்க, அதற்கரசன் சொல்லுவான், சுகரே, நீரேவ்வையறுத்தறிந்தும் பிதாவாகிய வியாசமுனிவர்சொல்ல தடுத்துங் கேட்டாய், அந்தநிலையேசத்தியம், ஆனாலும் இவ்விடத்தில் பரிபூரணமான சிதாகாயமேசாக்ஷாத் கரித்த ஆத்மாவே யுள்ளது, வேறொருவஸ்துவுமில்லை.

கஎ. சங்கற்ப மயமான மாயா ரூபத்தைச் சுருதிப் பிரமாணமா யறிந்தும், வியாசா ஜனகர் அப்படியே போதித்தும், தனக்கு விஸ்ராந்தி வாராததினாற் றனதனுபவத்தைச் சொல்லி, மேலதைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு வினவின சுகருக்கப் பிரகாரமே விஸ்ராந்தியடையும் பொருட்டு அபரோக்ஷானுபவத்தை யரசனுபதேசித்தல்.

கஅ. இதுவுமது.

¶—அந்தஞானமானது தனது சங்கற்பத்தினாற் பந்தப்படும், அச்சங்கற்பநீங்கினாற் பந்தநிவிர்த்தியாம், அப்படிப்பட்ட வாத்மஞானத்தை செவ்வையாக நீ யிப்போதறிந்தாயாதலால் போகங்களிடத் தாசையையும் திரிசய திருஷ்டியாவையும் விட்டுநீங்கினாய், துன்பநீங்க பூரணமனதினால் பெறத்தக்க சர்வத்தையும் பிரமமயமாகப்பெற்றாய், காண்பதற் ககோசரமாகிய வஸ்துவினிடத்தில் இரண்டறக்கலக்கின்றாய், ஜீவன்முத்தனானாய், மனதிலுண்டான மாயாமயக்கமென்கின்ற கவலையொன்றினையும்விடுவாய். †—ஜனகனென்கின்ற நாமத்தையுடைய அரசர்க்கரசன் இந்தப்பிரகாரமுபதேசிக்க, தனக்குத்தானே யிடமாயிருக்கின்ற பரவஸ்துவில் விஸ்ராந்தியடைந்து, களங்கமற்ற சுகப்பிரமரிஷியானவர் சந்தேகச் தவிர்ந்து மரணதுன்ப நீங்கி, மனவருத்தமற்று, விசாரிக்குந் தொழிலொழிந்து, அனுபவத்திற் சந்தேகநீங்கி, மகம்மேருவி னுச்சியிற்சென்று, நிருவிகற்பமாகிய நிச்சலமான சமாதியில், சூரியனைக் கொண்

க௯. விஸ்ராந்தியடைதல்.

---

§ இ-ம். மகாவாக்கியார்த்தங்கள் அபேதமென்றறிந்ததாம்.

¶ இ-ம். ஆத்மஸ்புரணத்திலுதித்த திரிஸ்யத்தை ஆத்மசாக்ஷாத் காரமாகவறியின், விஸ்ராந்தியுண்டாமென்றுபதேசித்ததாம்,

† இ-ம். யாதொன்று தனதுவிஸ்மரணத்தான் மறைப்பட்டதுபோலவும் அதன் விடுதியில் வெளிப்பட்டதுபோலவும் விளங்குகின்றதோ, அச்சைதன்னியமே சர்வமாய்விளங்குகின்றதென்றறிந்தாற் சந்தேகநீங்குமென்பதாம்,

டகணக்கினால் ஆயிரம்வருடத்தில், திரியுநெய்யுஞ் சுவறி வியோமாக்கினியி னசித்த விளக்குக்கொப்பாக, ஞானகாசத்திற் கலந்தான். ‡ —சிந்தையாகிய குற்றநீங்க பரிசுத்தனாய் அலைகளையுடைய சமுத்திரத்தில் சேர்ந்தொன்றாகின்ற துளிகளைப்போல, தன்னிடத்துண்டான ஸ்புரணம் தன்னிற் கரைந்து பிரமத்திலிரண்டறக் கலந்தான், மாயா சம்பந்தமான மோகம்விட்டு விஸ்ராந்தியடைந்தான், அம்மார்க்கம் உனக்குமாகும், அறியத்தக்கசகலமும் அறிந்திருக்கின்றமனதுக்கு உரிமையான விரமம் யாதென்றால், சதாகாலமும் களிப்புமிருந்த போகங்களனைத்தும் எனதென்கின்ற சுதந்தரபாவத்தை விட்டிருக்கையாம். ¶ —விடயபோகத்திற் பொருந்திய பாவனையினால் அனாத்மவஸ்துவில் உண்டாகாநின்ற பந்தமானது நிலைபெற வலிமையாகும், துன்பமிருந்த பாவனையானது நீங்கினால்துன்பமயமான பந்தமானதுகுறைந்து நாசமடையும், இராமா ? வாசனாக்ஷயமே மோட்சமாம், இகத்திலுள்ள விடயவஸ்துக்களின் வாசனையினால் கெட்டிப்படுவதே பந்தமாம், வாசனையின் வலிமைபற ஜெயித்தவர்களுக்கு தபசுவிரதமுதலிய காரணமின்றி போகசமூகங்களில் வெறுப்பாகின்ற மகான்களேசீவன்முத்தரென்று சௌநகர்சொன்னார். §— மகான்கள்வசனத்தினால், ஸ்ரீராகவன், மனதினாற் றீர்ப்பாயறிந்த வஸ்துவே வஸ்துவாம், வேறொரு பொருளில்லையென்று வசனிக்கக்கேட்டு மஹாமனதில் விஸ்ராந்தியடைந்து, சந்தேகந்தீராநின்ற மஹாத்மாவா யிருக்கின்ற இந்த இராமனுக்கு வரையறுத்துச் சொல்லுபவன், மயக்கமுள்ள மூன்று காலங்களையுந் தெளிந் தறிந்தவராயும் இப்பூலோகத்தின் கண்ணுள்ள மானிடர்களுக் காசாரியராகியும், சர்வஞ்ஞராயும் நாமரூபமுள்ள சகலத்திற்கும் சாட்சியாகியு மிருக்கின்ற நல்ல வசிட்டனேயென்று, அரசன்சபையில் விசுவாமித்திரர் சொன்னபின் † —விசுவாமித்திரமுனி வசிட்டருடைய வதனத்தைப்பார்த்து ஞாபக மிருக்கின்றதா, முன்ன நம்மிருவருடைய விரோதந்தீரவும்,

௨௦. விஸ்வாமித்திரமுனி யனுபவ விலக்கண முரைத்தல்.

௨௧. பந்தமுத்தியி னிலக்கணங் கூறல்.

௨௨. அருளிறை யறிவித்தல்.

௨௩. பக்குவர்க் குபதேசிக்க வேண்டுமெனல்.

‡ இ-ம். சீவன்முத்தித்தன்மையில் விதேகமுத்தியடைந்ததாம்.

¶ இ-ம். அனுபவிக்குயானெனதென்னுமகம்பாவமற்றிருக்கவேண்டுமென்ப [தாம்.

§ இ-ம். வாசனையுதயலயமே பந்தம் வீடென்பதாம்.

† இ-ம். சீடனறிந்தவறிவினால் அவனமைதிபிறர் தனுபூதி யடையும்பொருட்டு அறிவிக்கத்தக்க ஆசாரியரையறிவித்ததாம்.

நன்மார்க்கமுள்ள சகலரும் பழயசஞ்சிதம் விடுபட்டு மோட்சமடையவும் தாமரையில்வசிக்கும் பிரமாவினால் ஆத்மசாக்ஷாத்காரம் விளங்கும்படி யனுக்கிரகித்த ஒப்பற்ற ஞானத்தின் கதைகளைத்தையும், அறிவுமிகுந்த இராகவனுக்கு போதிக்கவேண்டும், ஆசைநீங்கிய சீடனுடைய மனதில் அனுக்கிரகிக்கின்ற பிரமவுபதேசம்யாதொன்றோ, அவ்வுபதேசமே செழுமையாகிய ஞானத்தை யுணர்த்தும் சாத்திரத்தின் அருத்தமுமிது சிறப்புமிதுவே யென்றுசொன்னார். ‡ —

உச. அபக்குவனுக்குபதேசிக்கலாகாதெனல்.

ஆசைமிகுந்த துஷ்டசீடனுக்குப்போதித்த வுபதேசமானது கரியசுணங்கன் சருமத்துள் வைக்கின்ற மேலான பாலைப்போல சுத்தமாகாதென்று மேலான விசுவாமித்திரர் நாநாவிதங்களாலுஞ்சொல்ல, தீமைநீங்கியநாரதரும், வேதவியாசர்முதலான இரண்டமுனிவர்களும் இதைக்கேட்டு இதுவே நல்லதென்று அவ்வசனத்தையே சிறப்பித்தார்கள். கௌசிகரைப்பார்த்து பிரமாவுக்குச் சமானமான பிரமபுத்திரரான வசிட்டமுனி இவைகளைச் சொல்லத்தொடங்கினார். ¶ —

உரு. உபதேசிக்கத்தொடங்கல்.

சகலஞானங்களையுணர்ந்த விசுவாமித்திரரே? நீர் சொன்னபடியே யுபதேசிப்பேன்; அறிவையாராய்ந்தறிந்த மகான்கள்வசனத்தைக் கடக்கப்பட்டவரெவர், நிலையில்லாத சநமயக்கந் தீரும்பொருட்டு தாமரையில்வசிக்கும் பிரமாவாலே பிரதமலேமே விருந்தனுக்கிரகஞ்செய்த நிருமல ஞானக்கதைகளானவை சஞ்சலமில்லாத பரிசுத்த மனதின்கண் ணிருக்கின்றதை சொல்லுவேனென்றுசொல்லி, அஞ்ஞானக் குழாங்கணசிக்க பூரணஞானமான பரமபதமானது யாவருக்குமுதயமாம் பொருட்டு, பரிசுத்தமான தருமத்தோடுஞ் சொல்லத்தொடங்கினார். §—

சு க ர் க தை

முற்றிற்று.

---

‡ இ-ம். ஆசாரியருபதேசம்பெற் றனுபவமான மார்க்கத்தைச் சீடனுக்குபதேசிக்க வேண்டுமென்பதாம்.

¶ இ-ம். பக்குவனுக் குபதேசிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொன்னதாம்.

§ இ-ம். பிரமவுபதேசமான வகண்ட சாக்ஷாத்காரானுபவத்தை இராமனிமித்தஞ் சகலருக்குந் தோன்றும்படி போதிப்பதாம்.

முமுட்சுப் பிரகரணம்.

அவதாரிகை.

முற்கதையிற் சுகமுனியறிந்த வறிவைக்கொண்டேயவர் சுவானுபூதிசாக்ஷாத்கார மாகும்பொருட்டு அரசனருளியபடியே இராமனறிந்த வறிவைக்கொண்டு அவர்சுவானுபூதி சாக்ஷாத்காரமாகும் பொருட்டு அவர்க்குதயமான முத்திவிருப்பத்தை வற்புறுத்த வசிட்டமுனி முமுட்சுப் பிரகரணங் கூறுகின்றார்.

க. சாஸ்திரியமுயற்சியே முத்திசாதனமெனல்.

இராமா? நீயிதைக்கேட்பாய், இச்சகத்தில் எப்போதும் ஒழுக்கமுள்ள சாஸ்திரயுக்தமானதுநல்லவெத்தனத்தினால் எவர்க்கும் புருடார்த்த முள்ள சகலமும்வரும்; ஆக்மஞான சாஸ்திரியமான எத்தனமொன்றாகும்; சாஸ்திரிய வெத்தனமானது ஒன்றாகும்; மற்றிவ்விரண்டில், துன்ப மின்றிய ஞானசாஸ்திரிய மார்க்கமானது மோக்ஷநிமித்தமாம்; அசாஸ்திரியமார்க்கமானதுபந்தநிமித்தமாம்; பாலப்பருவத்திற்றானே தொடர்ந்துவருகின்ற இந்தஞானசாஸ்திரங் களினாலும் மயக்கமில்லாத சத்துக்கள்சங்கத்தினாலும், மைத்திரியாதி சற்குணங்களினாலும், முயற்சிபெற்ற சத்துக்களுக்கு மோக்ஷவிலாபமுண்டாகுமென்றார். ¶—

உ. பூர்வவாசனையேமுக்கியமாயிருக்கின்றதெனல்.

இராகவன், முற்சநநவாசனையின் வசத்திலிருந்தேன், சன்மார்க்கவெத்தனமில்லாதவனானேன், யானென்ன செய்வேன் எனதாசிரியரே யென்றுசொல்ல, குணாதிசயமுள்ள இராமா? தனது சுயப்பிரயாசமான எத்தனத்தினால் பிரமபதத்தைபெறலாம், இதைத்தவிர வேறொன்றுமின்று, சொல்லப்பட்ட வாசனாசமூகத்தின் வேற்றுமையைக்கூறில், சுபவாசனை, யசுபவாசனையென் றிரண்டுவிதமாம், அவ்விரண்டில்சொற்பமாகிய சநநங்களிலெல்லா நட்புற்றுவந்தவாசனையெதுவோ அதொன்றுமே பொருந்தியிருக்கும். ‡—

ங. சுபவாசனையையடையவேண்டுமெனல்.

சுத்தவாசனை தொடர்ந்தால் அதினாலே மிருதுவாக பரிசுத்தமாகிய பரமபதத்தையடைவாய், பரி

¶ இ-ம். புருடார்த்தத்தை விரும்பினவன் சாஸ்திரியமுயற்சியையே செய்யவேண்டுமென்பதாம்;

‡ இ-ம். மதிவிதியென்றிரண்டு, முற்பிறப்பின் வாதனையென்பது விதியெனவும், தன்முயற்சியென்பது மதியெனவுங்கொண்டு, அவ்விதிவருவதுங் கெடுவதும்இம்மதியினாதலின் அதனாலாத்மவிசாரமான சுத்தவாசனையைக்கொண்டு அவ்விதியினால்வரும் அசுத்தவாசனையைக்கெடுத்து அபரோக்ஷசாக்ஷாத்காரமாகவேண்டு மென்பதாம்.

சுத்தமாகாத பந்தவாசனை தொடர்ந்தால் துக்கத்
தைவிளைக்கும், மிகவும் வருத்தமுற்றாயினும் இவ்
வாசனையை நீக்கவேண்டும், விதித்தநன்மை தீமை
யென்கின்ற இரண்டுமார்க்கத்தினால் வாசனையாகிய
வெள்ளமதிகரிக்கும், பிரமவித்தையிற்பயிலும் ப்ர
யாசத்தினால் மெத்தமுயற்சித்து தீயவிடயவாசனை
யைநீக்கி நன்மையுள்ள ஸ்வரூபவாசனையில்பொரு
ந்தியிருப்பாய். ¶—முயற்சித்து வருத்தப்படாமல்
சமத்துவமாகின்ற வேண்டுகையினால் தனதுமுயற்
சியினால் நயமான விளையாட்டினால் மனமென்னும்
சிறுகுழந்தையை அசுபவாசனையிற் செல்லாமற்ற
டுத்து சுபவாசனையினிறுத்தவேண்டும், முன்னெடு
த்த நாநாவிதமான சநநங்களில்பழகிய வசுத்தவாச
னைகளை நீங்கச்செய்து மகத்தான சுத்தவாசனை யுத
யமாயின் முயற்சிக்குப் பிரயோசனமாம், சுபவாச
னையென் செய்யுமோவென்னுஞ் சந்தேகம்வரினும்
சுபவாசனையையே யடைவாய், அச்சுபவாசனையின்
மிகுதிகொடிதல்ல, விளங்குகின்ற மனஞ்சென்று
பிரமஸ்வரூபத்தை தெளிகின்ற பரியந்தம் ஆசாரி
யரும், வேதங்களும், பிரமோபதேசத்தையு மகா
வாக்கியார்த்தத்தையும் போதிக்கின்ற மார்க்கத்
தில் அனுபவமா யனுஷ்டிப்பாய். ‡—பரிசுத்தமா
யும், இப்பிறப்பி லினிமையாயும், சத்துக்கள் விரும்
பப்பட்டதாயு மிருக்கின்ற சுபவாசனையினால் மன
தை களங்கமும் துக்கமுமில்லாத ஆத்மபதத்தை
யடைவித்து அச்சுத்தவாசனையையும் விடுத்து, சா
க்ஷாத்கார நிலையிலிருப்பாய், அவை திரும்பிவா
ராத முறைமையாக மாயாபாவனையைநீக்கி பூரண
சாந்தத்தையும், ஆநந்தத்தையும் தவறாமல் விடய
வாசனாத் தியாகமுள்ள அறிவினாலடைந்து சிறந்த
தத்துவமசியென்னும் வாக்கியத்தின்பொருளை கூ
டஸ்தபிரமமென்னு மிரண்டையும் விசாரிக்கும்,
மனதை ஆனுயென்னும் பிரமத்தி லமரும்படி ய
யிக்கியஞ்செய்து, இராமா ; நீயநுசந்தானஞ்செய்

௪. சுபவாசனையிற் செல்லுதலினுண்டான பலனுரைத்தல்.

ரு. ஆத்மானுசந்தானக்கிரமமுரைத்தல்.

---

† இ-ம். ஜநநாந்தரங்களிற் றொடர்ந்துவருகின்ற வாசனைகளின் பலாபலங்களையும் அதிற்றள்ளுவதையுங் கூட்டுவதையு மறிவித்ததாம்.

‡ இ-ம். மனது செலுத்துமிடத்திற் செல்லுவதாகையால் அதனையபரோட்ச ஞானமடைகின்ற பரியந்தஞ் சுருதிகுரு சுவானுபவமான மார்க்கத்திற் செலுத்தவேண்டு மென்பதாம்.

௬. குருபரம்பரையையறிவித்தல். வாய். ¶ —மதுவையுடைய தாமரைப்பூவில் வீற்றிராநின்ற பிரமதேவன்சொல்லிய வாக்கியத்தைக் கேட்பாயென்றுசொல்ல, அவர்சொல்லியகாரணம் என்னவென்று இராகவன்கேட்க ? வசிட்டமுனி அனுக்கிரகஞ்செய்வார். அந்தமற்றதாய், எவ்விடத்திலு நிறைந்திருப்பதாய் சலத்திற்கும் இருப்பிடமாகி சகலவஸ்துக்களிலும், பிரகாசமாய் விளங்கிய உள்ள சிதாகாயத்திலிருந்து விஷ்ணு வுதயமாயினர், அவருடைய இதயதாமரையில் பிரமனுதயமாய் பூமிமுதலிய வேறுபாடுகளை மனத்தின் கற்பனையைப்போல் சிருட்டித்தார்.

௭. இதுவுமது. —ஜகத்தையுண்டாக்கின பிரமதேவனை நானாவிதமாக உயர்வாகிய பாரதவருடத்தி லுண்டான சீவர்களியாவும், அளவில்லாத துன்பமுறுவதைப் பார்த்து, புத்திரனது துன்பத்துக்கு இரக்கப்படுகின்ற பிதாவைப்போல இரக்கப்பட்டு, அவ்வுயிர்கள் மோட்சமடையும் பொருட்டுச் சிந்தித்து செபமுதலான நானாவித கிரியைகளும் தேகத்தைவருத்தும் தபசுகளும், சமஸ்தானங்களும், கங்கைமுதலான தீர்த்தங்களும், பிறவுமாகிய வினைத்திறனும், சகதுக்கந்தீராது, ஆத்மஞானத்தினால் சகதுக்கம் விடுமென்று கலக்கமற்றமனதினால் தன்னைப்போல காமனற்றதையும் செடமாலிகையையும் காத்திர்களனைப்படியாக நன்மை உண்டாக்கினர்.

௮. இதுவுமது. —அப்படிபிறந்து நமஸ்கரித்தவடியேனை தான் மகிழ்ச்சியுடன் வசிக்கும் தாமரையினது உத்தரதிசையில் ஒரு தளத்தின் மேலிருத்தி என்னுடையமனதை ஒரு முகூர்த்தமா மாயையடையச் சடவென்று சாபமிடவும், கலக்கமடைந்து பத்திமோடும் உண்மை ஞானத்தை மறந்து கல்வியில்லாத மூடர்களைப்போல புலம்பாநின்றவென்னைப் பிரமன்பார்த்து, வெய்யதுக்கமென்னவென்று கேட்க, சம்சாரமானது உண்டானமார்க்கமும் அதுநீங்கி மோக்ஷமடையு மார்க்கமும்யாது, அதுநன்றாய் விளங்கும்படி யநுக்கிரகஞ்செய்தார்

௯. இதுவுமது. —ஞானத்தைவருத்தத்தை யறிந்து சலனமற்றிருந்த வென்னை, பிரமதேவன் பார்த்து நாமே நின்னறிவைமாற்றி ஈனமான மாயையைக் கொடுத்து பின்பதை யறிவினால் நீக்கினோம், ஆத்மாக்களியாவும் நின்னுடைய தேசம்பெற்று, மோக்ஷ

¶ இ-ம். சுத்தவாசனையால் சித்தசுத்திவந்து, அச்சித்தசுத்தியா லறிவுதயமாய், அவ்வறிவுதயத்தால் கூடஸ்தபிரமைக்கிய நிரதிசயானந்தாநுபவ சாட்சாத்காரந் தானென்றனுஷ்டானஞ் செய்யவேண்டுமென்பதாம்

மடைய உபாயஞ்செய்தோம், ஞான முதிர்ச்சியின் கெடுகின்ற கிரியைகளினைந்து சம்புத்தீவில் மேலிய பாரதவருடத்தில் சீக்கிரத்திற்சென்று யாவென்றும் மனசீங்காத கிரியாகாண்டிகளுக்கு கிரமமாக கருமகாண்டத்தைப் போதித்து, சாதனசதுஷ்டயமுள்ளவர்களுக்கு ஆத்மஞானத்தைப் புபதேசஞ் செய்யென்றருள்செய்தார். †—அப்படியே பாரதவருடத்தில்வந்து ஆச்சிரமங்களிருக்கின்ற காலங்களிலெல்லாம் இருப்பேன், இவ்விடத்தொரு கிரியைகளிலும் விருப்பமில்லை, இவ்விடத்திலிருந்து கனவின் சமுத்திரையமடைந்த ஒருமைக்குத்திலும் துன்பமுள்ள மனதைத்தாண்டி. தெசரதிலக னாலேத்தையுஞ்செய்வேன், அபிமானத்தைக்கெடுக்கின்ற ஞானச்செய்கை யாதொன்றுமில்லை, ஞானனை இராமா? ஆசாரியர் ஞானபூர்த்தியையும், அந்தஞானத்தையும், ஆசாரியிலக்கணங்களையுங்குறித்தோதிக்கிலக்ஷரித்து உபாயமான சற்குருவைப்பெற்று ஆத்மாவையறிபவர்கள் அறிவிலிருக்கிறார்கள். ‡—ஆசாரியரதைச்சிரகஞ் செய்கின்ற அருக்கங்க வியாமையும் துக்கருங் கருத்தையு முடிக்கும் கருத்தையுஞ்சேர்த்து அறிபவர்க்கேயன்றி பார்த்தவிடம் மயமாகும் பசுக்கள்போல ஞானமா சீடர்க்களையேயுடைய சகலருக்கும், குற்றமற்றவரியர், அத்துவைதஞானத்தைச் சொல்லார், பிரகாசியாநின்ற சாந்தியும், விசாரணையும், சந்தோஷமும், சாதுசங்கமும் என்றுசொல்லப்பட்ட மோக்ஷத்தின் வாயிலைக் காக்கின்ற நான்கு பேர்களும் இஷ்டமாகும், மோக்ஷமடைதற்கு விக்கினம் மேயன்றோ, பூமியைக் காக்கின்ற அரசர்களினிடப்பட்டவாயிலைக்காப்பவர்கள் இராஜகிரகத்துக்கு விடுவதுபோல மோக்ஷத்தில் அவர்கள் விடுவார்கள். ¶—அந்தவாயல்வர்களில் ஒருவனைப்பற்றல் நல்லது தொத்தன் பரமமாங்கள்; அவைகளில், சகலமாகவுறும் முயற்சித்து அதற்பெட்ட நானவைகளில் சாலனுக்கினி அவர்களில் ஒருவனையாவது பிடித்துக்கொண்டு பழக்கஞ் செய்யவேண்டும், நிலையில்லாத சரீரத்தைக்கெடுக்க சத்துக்கள் சங்கத்திலும், ஆத்ம

௧௦. சற்குரு சற்சீடரிலக்கண மறிவித்தல்.

௧௧. ஆசாரியர் அபக்குவனுக்கு உண்மையை யுபதேசியாரெனல்.

௧௨. சாந்திமுதலிய நான்கினி லொன்றையாவதடைய வேண்டுமெனல்.

† இ-ம். உலகத்திலுள்ளவர்கள் துக்கத்தமைவதுவத்தில் ரமிக்கச்செய்யும் பொருட்டு ஆசிரியர்திருவடி ஞானவுபதேசம் புரிவித்ததாம்.

‡ இ-ம். பாத்திரமானவனை மாணாக்கனாசாரியனிடத்திற் பிரயோசனம் பெற்றமுத்தானவைக்குமானுஞ் செய்யவேண்டுமென்பதாம். [மென்பதாம்;

¶ இ-ம் முமுட்சுக்களுக்குச் சாந்திமுதலிய நான்குகுணங்களும் வேண்டு

ம

ஞானசாஸ்திர விசாரணையினாலும், மகாநிஷ்டையினாலும், அறிவைமுதன்மையாக விருத்திசெய்யவேண்டும், துன்பமாகிய சம்சாரமென்கின்ற விஷமானது ஞானமென்கின்ற கருடமந்திரத்தினால் திரும்பும்.

௧௩. விஷயத்தைக்கெடுத்த விடத்துஉண்டான நன்மையையும், அதைக்கெடுக்கா விடத்துள்ள விபரீதத்தையுங் கூறல்.

¶ —அம்புவருஷங்கள் ஆம்பல்புட்பவருஷத்தைஒப்பாகும்; அக்கினிப்படுக்கை பன்னீர்தெளித்த மெத்தையை யொப்பாகும்; சிரசையறுப்பது சுகம்பொருந்திய சுழுத்திநித்திரையைஒப்பாகும்; உடலை யறுப்பது சந்தனம்பூசுதலை ஒப்பாகும்; ஒழுங்காகிய கணக்கற்ற சலாகைகள் மார்பிற்றைப்பது நீண்ட வேனிற்காலத்தில் துருத்தியினால் வீசும்குளிர்ந்த சலத்தை யொப்பாகும்; சேரக்கூடாத விஷயமென்கின்ற விடவிநோயானது விவேகஞான மதிகரித் தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு விலக்கக்கூடாது.

௧௪. ஆத்மவிசார விலக்கணங்கூறல்.

† —குறைவில்லாத ஆத்மஞான சாஸ்திரங்களின் தெளிவான விசாரணையினால்மேலான நிருவாணசுக முண்டாகுமென்பது உள்ளதல்லவா, தானறிகின்ற வனுபவமும், ஆத்மஞான சாஸ்திரங்களின் முடிவான வாக்கியார்த்தங்களும், சற்குருவினுபதேச வாக்கியார்த்தங்களுமாகிய இந்தமூன்று பிரிவும், தம்மிடத்திற் பொருந்திய பிரகாரம் அனுஷ்டிக்கில் ஒன்றையும் விட்டு நீங்காத ஆத்மஞானம் பிரகாசிக்கும். அற்பவறிவை யுடையவர்கள் அப்பியாசித்த அரியஞான சாத்திரமானது இழிவுள்ள. வஞ்ஞானத்தைக் கொடுக்கும், இந்த ஞானநூலைப்போல பத்திகாண்டங் கருமகாண்டமுதலிய யெச்சாத்திரங்களும், அஞ்ஞானத்தைக் கொடாது.

௧௫. அஞ்ஞான விழிவும் முத்திக்குச்சகாய வசகாயமுமுரைத்தல்.

§ —இப்படிப்பட்ட அஞ்ஞானத்தோடு வாழ்கின்றவாழ்விலும் சண்டாளர்கள் வீடுகடோறும் ஓட்டிம் பிச்சைவாங்கிச் சுழல்வது சீரானவாழ்வாகும்; மிகுந்த திரவியங்களும், மித்திரர்களும், பந்துக்களும், காசிமுதலான புண்ணியதேசங்களும், கங்கைமுதலான தீர்த்தங்களும், முனிகளின் வாசஸ்தலங்களும், சரீரத்தை வருத்துந் தபசுகளுமாகிய எல்லாவற்றாலும்,

¶ இ-ம். சாந்தியாதிகுணங்களைப்பெற்று சுருதிகுரு சுவானுபவங்களினால்வளருஞானத்தினால் மாயையைக் கெடுக்கவேண்டு மென்பதாம்.

† இ-ம். மனதைப் புலன்வழியிற் செலுத்தாமல் ஆத்மவிசாரத்திற் செலுத்துவதானாற் சுகமுண்டாய் அம்புவருடமுதலிய வுபத்திரங்கள், புட்பவருடங்கள், முதலியவைபோலச் சுகமாய்ச் சகிக்கத்தக்கவைகளா மென்பதாம்.

§ இ-ம். ஆத்மஞானம் பிரத்தியட்சமாவதற்குச் சுருதிகுருசுவானுபவ மொத்து விசாரிக்கவேண்டும் அஃதின்றேற் துன்பமுண்டாமென்பதாம்.

எப்பொழுதும் பரகதியைத் தொடரத்தகுந்தசகாயங்களில்லை, மனவருத்தத்தால் பரிசுத்தமான பரமபத முண்டாகும், மோக்ஷவாயற்காக்கின்ற நான்குபேர்களுக்கு எப்போது நீங்காமலிருக்கின்ற குணங்களை இராமா? நீ கேட்பாய்? மேலானசாந்தங்கிடைத்தால் ஆசையும், துக்கமும், சூரியன் முன்னே இருளைப்போல நீங்கும். ¶ —சிஷ்டர்களும்,

௧௬. சாந்தியும் அதை யடைந்தவ னிலக்கணமுங் கூறல்.

துஷ்டர்களும், தாயைப்போல நம்புதற்குத் தகுந்ததாகி அமுதமானது தான் புசிக்கும்படி கிடைத்தாலும், வளப்பமுள்ள பங்கயமலரிலுறையும், இலட்சுமியானவள்வந்து பொருந்தினபோதிலும், சமானமாகாத ஆனந்தத்தைக் கொடுக்கின்ற சாந்தியையுடையவர்கள், நசித்தலும், வாழ்தலும், கொலைசெய்கின்ற யுத்தங்களும் வந்தாலும், சஞ்சலியார்கள்; பஞ்சவிடயங்களினுலும், அசுபத்தையும்,சுபத்தையும்புசித்து துக்கியார்கள்,சந்தோஷியார்கள், முதிர்ந்த வறிவுள்ளவர்கள், யாகதீக்ஷதர்கள், கலைமறையோர், பலத்தையுடையவரசர்கள், பரிசுத்தமுள்ளவர்கள், மற்றெவர்களிலும், இச்சாந்தகுணமுள்ள பரிசுத்தவான்கள் மேன்மையாகப் பிரகாசிப்பார்கள். § —அறிவை யுடையவர்கள் விரும்பு

௧௭. சாந்தியையடைதலும் ஆத்மவிசாரமுமுரைத்தல்.

வதாகி ஏனையோரனைவர்க்கு மரியதா யிருக்கின்ற சாந்தாமுதத்தைப்புசித்து மகான்கள் சிறப்பாகிய மோக்ஷத்தையடைந்தார்கள். இராமா? நீயும் அவ்வொழுக்கத்தின்படி செய்யக்கடவாய், நல்ல ஞானசாத்திரத்தினுல் தெளிவான பரிசுத்தமுள்ள நுட்ப வறிவினுல் ஆத்மவிசாரணையை பூரணமாகச் செய்க. அவ்வாத்ம விசாரணை பூரணமானுல், சமானமில்லாத வறிவானது அதிகநுட்பமாக பரமபதத்தையறியும், இவ்விசாரணையே, காரியகாரணங்களைக் குறித்தறியும் அறிவுள்ளவர்களுக் குண்டான கொடிய சநநவியாதிக்கு அரிதான மருந்தாம். † —கறுத்த அந்தகாரத்தில் மறையாததாயும்,

௧௮. விசாரணையின் பலமுஞ் சந்தோட விலக்கணமுங் கூறல்.

பிரகாசத்துக் கொளிமழுங்காததாயும், பார்ப்பதற்கரிய வஸ்துக்களியாவையும் பார்ப்பதாயு மிருக்கின்ற விசாரதிஷ்டியினுல் தெளிவுற, யானெப்படிப்

¶ இ-ம். அறியாமையையுந் தபமுதலான கிரியைகளையு நீக்கி சாந்தியைக் பெற்று மனதை யாதமாவிற்கரையும்படி சிந்திக்கவேண்டுமென்பதாம்.

§ இ-ம். சகலசெல்வங்களும் வலியவருமகிழ்ச்சிக்கு மேலானமகிழ்ச்சியைக் கொடுக்கின்ற சாந்தியுள்ளவன் ஒன்றினுலுஞ் சுகதுக்கமடையாமல், அறிஞர் முதலான சகலருக்கு மேலாவனென்பதாம். [தாம்

† இ-ம், சாந்தியைய டைந்து ஆத்மவிசாரஞ்செய்தாற் சநநங்கெடுமென்

பட்டவன், சகத்தான சம்சாரமுண்டானபிரமமெ ன்ன, மிருந்தசம்சாரம் யாவையுடையது, என்கிற பரிகாரயுத்தியோடும் விளங்கிய ஆடம்பிரத்திலும், விசாரிக்கத்தக்க விசாரணையானது, அஞ்ஞானந் தகாரமான ஆபத்தென்னும் வியாதிக்கு மருந்தாம். [இனிச்சந்தோடம்.] அதன்பின்பு மேலாகிய சந்தோஷமானது யாதென்று சொல்லில், நன்மை தீமையான வஸ்துக்களில் விருப்பு வெறுப் பில்லாமற் புசித்து வாராதவஸ்துக்களில் ஆயாசமில்லாது ஆநந்தந்தான். ¶ —சமானமில்லாத அச்சந்தோஷாமிருதத்தைப் பொருந்தப்பெற்றால் விடயபோகம் விஷமாகும், அப்பூரண மகிழ்ச்சிநீங்க விடாமலத்திலமூழ்ந்துகின்ற மனது ஆத்மஞானத்தைப் பார்க்கில், அழுக்குறு கண்ணாடியில்காணும் முகத்தைப்போலத் தோற்றாமல் சந்தோஷகுணத்தை யடைந்த புருடசிரேஷ்டனை, மகாதவசிகளும், நரேந்திரரும் வணங்குவார்கள். [இனிச்சாதுசங்கம்] உலகமென்னு மாயையை ஜெயிக்கத்தக்க சகலமுங் கும், சாதுக்கள் சங்கமானது, தவிராத சகாயமாகும். † —மிகவு மற்பமானவழியை பூரணமாக்குவதாயும் விடயங்களால் வருமாபத்துக்களை சம்பத்தாக்குவதாயும், ஒன்றிலுஞ்சலியாத அமங்கலத்தை சர்வத்திலுஞ் சுகிக்கின்ற மங்கலமாக்குவதாயுமிருக்கின்ற சிறந்த மகான்கள் சங்கமென்கிற கங்கையினது குளிர்ந்த சலத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுக்கு, அக்கினிகாரியமானயாகங்களும், கொடிய தவசுகளும், மஹாதானங்களும், புண்ணிய தீர்த்தங்களும் வேண்டுவதில்லை, துக்கமாகிய பந்தனாசஞ்செய்து யாவர்க்கு மினிமையுள்ளவராயும் சகலமென்னுஞ் சமுத்திரத்தைக் கடப்பதற்கு கப்பலாயிருக்கின்ற அறிவுநிறைந்த மஹான்களை, எவ்விதத்திலும் விரும்பவேண்டும். ‡ —பெருங்கிய சம்சாரத்தைத் தீர்க்கின்ற சாதனங்கள் நால்வகையாம்; இந்நால்வர்களுடன் மிருந்தவன்புள்ளவர்கள் சகலசாகரத்தைக் கடந்தார்கள், அச்சாந்தி யாதி

க௯. சந்தோடத்தின்பலமுஞ் சாதுசங்கமுங் கூறல்.

உ0. சாதுசங்கத்தின்பலன் கூறல்.

உக. சாந்தியாதியுள்ளோர்க் குரிய இந்நூலின் பயனுரைத்தல்.

¶ இ-ம். விசாரஞானத்தினும் சித்தையுஞ் சடத்தையுஞ் சிற்சடமானமாயையும் விசாரித்து அஞ்ஞானத்தைக்கெடுத்து ஆநந்தத்தை யடையவேண்டு மென்பதாம்.

† இ-ம். முமுட்சுக்கள் சகலபோகங்களுங்கைக்குப்படியானசந்தோஷத்தையும் சம்சாரத்தைவெல்லத்தக்க சாதுசங்கத்தையு மடையவேண்டு மென்பதாம்

‡ இ-ம்; ஞானாநந்தச் செல்வத்தைக்குறைவற நிறைவுசெய்கின்ற சாதுசங்க மெவ்விதத்திலுஞ் சேரவேண்டுமென்பதாம்.

குணமுள்ள இராமா ? இனிக்கின்ற மனோமயக்கந் தீர்க்கின்ற இக்கதையைக்கேட்பாய். இதன்குணத்தை விரும்பாமல் இக்கதைமாத்திரம் குறிப்பாகக் கொண்டவர்களுக்கு வேதத்தின்முடிவாகிய ஆத்மஞானமானது தானேவரும், இராகத் துவேஷமுதலான மயக்கங்கள் தீரும், சரற்காலத்தில் தடாக சலத்தைப்போல களங்கமற்று சித்தந் தெளியும், வச்சிராயுதந் தரித்தவர்களை பாணங்கள்போல தரித்திரமுதலாகிய துன்பந் தாக்காது. ‡—

௨௦. விசாரணையுள்ளவிசாரணையின் பலன் கூறல்.

நல்லகர்மத்தைச்செய்கின்ற மனையினால் விசாரமுள்ள மனோபலமுண்டாகும், அலையில்லாத சமுத்திரம்போல சமத்துவத்தை அடையும், விசாரணையினால் திருத்தமானவர்களும், சமுத்திரத்தினுடைய போல கம்பீரமும் மகாமேருவின் வலிமையைப்போல வலிமையும், நிறைவாகிய பூரணசந்திரனைப்போல சீதளமும், ஆத்மஞானசாத்திரத்தின் ஒழுங்கில் நற்குணமுள்ளவர்கள் அறிவானது அநேகவகையான சமயமுதலிய கன்மத்தில், களங்கமற்ற நற்புள்ளவன் அனேகப்பட்டாத்தில் தனதாய கனியே தெய்வமாகக் களிக்குமாறுபோல இன்பமடைவன். § —

௨௧. சீவன்முத்தனுசாரச்சிறப்பு.

ஆச்சரியங்க ளியாவுமில்லாத இராகமுடைய விவேகம் முன்சொன்ன வழிதான சீவன்முத்தி ஸ்தானம் நிரமமாகமுதிரும், வசனத்துக் கெட்டாதவனும் உலகத்தாரைப் போலக் காணப்படுவான், அறிவில் தான் சுகமங்களிலும் பிடிப்பற்றவன், நல்லவிரோசனத்திலும் பொல்லாத விரோசனத்திலும், சுகமுந்துக்கமு மில்லாதவன், கொடுத்ததை அன்பாக அனுபவித்து சகாசனத்தில் விருப்பமவன், அறுபயாதத்துக்கொழுக்கத்துக்கு வேறுபிய போகங்களிடத்தில் எவ்வளவுஞ் சம்பந்தப்படாதவன். ¶ —

௨௨. சீவன்முத்தெவிசாரணையி னுயர்வு மகிழ்வின்றிய விடத்திறிவல் கூறல்.

இருசசுவைமுமும் நீங்கா இன்பத்தை யுடையவனுமாயும் தேகஸ்மரணம் வரும்படி. பதிக்காமியமாமல் சத்துக்களிடத்தில் வினைவுதவிருவல்லவர்க்கு இம்போகஷாரர்க்கத்தை விசா

‡ இ-ம். சாத்திரமிருவைவிலா மதுவதித்தவர்களுக்குக் காயாதி தோஷங்களொத்தித்து ஆத்மஞானத்தை வெளிப்படுத்துகின்ற யிக்கதைகளை அவசியஞ் சிரவணஞ் செய்யவேண்டு மென்பதாம்.

§ இ-ம். ஆத்மவிசாரமுள்ள மனது மாயையினால் கெடாமல் சமபாவம் பொருந்தி கம்பீரமுதலான குணங்களோடு சத்துருத்தியத்தில் மகிழ்ச்சியை யடையுமென்பதாம்.

¶ இ-ம். விசாரத்தாலுற்கினமாக ஜீவன்முத்தி பதத்தைப்பெற்றவனும் மகான்களா ஆசாரங்களுக்கும் பிரீதானபோகங்களை விரும்பக்கூடாதென்பதாம்.

ரிப்பவன், சகலந்தீர்க்கின்ற ஆத்மஞானத்தை யடைந்தவனாய் மயங்குகின்ற மஹாசமுத்திரத்தை யடைந்து மாதாவினல்குலினால் வேதனையைப் பொருந்தான். அற்பமாய் விளங்குகின்ற விடயானுபவத்தில்மயங்குகின்ற மனதையுடைய பாவிகளாய்முன் சொன்ன உபாயங்களில் மருட்சி யுடையவர்கள், மாதாவினுடைய கருப்பத்திலிருக்கின்ற மலத்திற் புழுத்த கிருமியென்றே சொல்லுந் தன்மையை

உரு. விசாரணையினளவு கூறல்.

யுடையவர். § —அறிவிற்சிறந்த அச்சத்துக்கள் சங்கம் இல்லாதசமயத்தில், தருமத்தோடன் தான் சம்பாதித்து அடையப்பட்ட திரவியங்களால் சேகரிக்கும் ஆகாராதியைச்செய்யுந் தொழிலையுடையோராய் குற்றமற்றவாத்மாவில் விஸ்ராந்தியடைந்து நீங்காத துரியமென்கின்ற உபசாந்திநிச்சயம் உதயமாகிறபரியந்தம் ஆத்மஞான சாத்திரங்களும் உபசமனமும், நன்னடையும், உயர்ந்தவறிவும், சாதுக்கள் சங்கமுமாகிய இவைகளினால் ஆத்மவிசாரஞ் செய்யவேண்டும்,சமானமில்லாத விசாரணையினால் உண்டாயிருக்கின்ற நிருமலமான துரியநிச்சயத்தை சொல்லுந்தன்மையையுடையது. ¶ —

உசு. துரியநிலை பெற்றவன் அனுபவமுரைத்தல்.

பாவனைநீங்கிய துரியத்தில் விஸ்ராந்தியடைந்து சகலமென்கின்ற சமுத்திரத்தைத்தாண்டி மோக்ஷத்தை யடைந்தவன், சீவத்தன்மையோ டிருந்தாலும், சீவத்தன்மைதீர்ந்து சிவமாயிருந்தாலும், குடும்பத்தில் பொருந்தினாலும், தனிமையான துறவியா யிருந்தபோதிலும் விளங்குகின்ற சுருதிஸ்மிருதிகளின் பிரமையினால் கட்டுப்பட்டாலும், அனைத்தையும் செய்தாலும், தவிர்ந்தாலும்,அவைற்றாலாகிய பிரயோசனமொன்றில்லை, இமோத்பர்வதமில்லாதசமுத்திரம்போல ஆத்மசுபாவத்தி லிருப்பான் ‡ —

உஎ. தன்னையறியுமுத்தியுந் திருஷ்டாந்தமும்வேண்டுமெனல்.

சுருதிகுரு சுவானுபவமென்னு முத்தியி லிருக்குமாயின், குழந்தைகள் வசனத்தையுங் கொள்ளக்கடவாய், அந்தயுக்தியில்லாததைப்பிரமதேவன்சொன்னாலும், துரும்புக்கொப்பாகத் தள்ளு

§ இ-ம். சத்துக்கள் சகாயமாய் ஆத்மவிசாரஞ்செய்வதே ஞானமாகும், இதன்றிப் போகத்திற்செல்வதே ஜநநதுக்கமாதலால் இதை நீக்கி அதைப்பெறவேண்டுமென்பதாம்.

¶ இ-ம். துரியஸ்தானமான விஸ்ராந்தி யுண்டாகிறபரியந்தம் விசாரணைவேண்டுமென்பதாம்.

‡ இ-ம். ஜநநசாகரத்தைக்கடந்த பாவனாதீதமான துரியத்தையடைந்தவனுக்கு வன்னாச்சிரம வுசிதவாசாரங்களால் வருந் தருமாதருமங்க ளொன்றுமில்லையென்பதாம்.

வாய், பிரமஞானம் எளிதிலுதய மாம்பொருட்டு சொல்லப்பட்ட காரணமுள்ள வுவமைகளியாவும் ஏகதேசமென்று கருதுவாய், உருவமற்றவுண்மை ஞானமானது நாமரூபாகாரமாகிய திருஷ்டாந்தத் தத்துக்கு பொருந்தாதென்று சொல்லும்மூடர்கள் பிரத்தியக்ஷ ஞானமில்லாத தனதுபேதஞானத்தி னால்சொல்லுகின்ற குதர்க்கயுக்தியானது ஞானவி சாரஞ்செய்யு மறிவைக்கெடுக்கும்; இராமா! அதில் முயற்சிக்காதே. ‡ — நாம்பிலுண்டாகும் நாதம் போல சாந்திமுதலாகிய சற்குணங்களில் ஆத்ம ஞானமுதயமாம், ஞானத்தினாற் சற்குணங்களும் அச்சற்குணங்களால் ஞானமும் விளங்குவனவாம், இவ்விரண்டும் தடாகமும் தாமரைப் பூவும்போல நன்றாய்வளரும், சற்குணமு ஞானமுமாகிய இவ் விரண்டையும் சமமாக அப்பியாசஞ்செய்யவில் பிர மப்ரயோசனமுளதும், வேறுவேறாக இவ்விரண் டையு மப்பியாசிக்கில் வருகின்ற ப்ரயோசன மொன்றுமில்லாததாம், இவ்வுண்மையான கதையின் கேள்வியானது முதலான சகலத்தியாக மென்னும் தருமமும் அழிவற்ற பொருளும் நித்தியானந்தமும் சத்துக்களாற் புகழ்ச்சியும், சுகஜீவனமுமாகிய யா வையுங்கொடுக்கும், அதுவன்றி மனத்தினது செய லின்றல் கிரியையானந்தமென்னு மோக்ஷத்தையுங் கொடுக்கும். ¶ —

௨௮. ஞானமுண் டாவதற் கேது வறி வித்தல்.

முமுட்சுப்பிரகரணம்

முற்றிற்று.

உற்பத்திப்பிரகரணத்தில்

ஞானவிண்மகன்கதை.

அவதாரிகை.

முற்பிரகரணத்திற் சாதனசதுஷ்டயத்தில் மூன்றுசாதனமு நிறை ந்து, நான்காஞ் சாதனமான முமுட்சுவிலுதித்தவனை இராமனுக்கு அத்துவித ஸ்வரூபத்தையும், அதையடையு முயற்சியையும், அதற்கு

‡ இ-ம். அநுபவயுக்தியினு லுவமிக்கப்படாத வஸ்துவை யுவமானங்களைக் கொண் டறியக்கூடாதென்றுமாம் குதர்க்கயுக்தியைத் தள்ளவேண்டுமென்பதாம்.

¶ இ-ம். சற்குணத்தையு ஞானத்தையு மொன்றுக்கொன்று சாப்பாந்தமாக கற்கின்றதனாலுண்டாகும் இந்த வைராக்கியமயமுள்ள கதைகள் சீவன்முத் தியையும் விதேகமுத்தியையுங் கொடுக்குமென்பதாம்.

கருவியான சுத்தவாசனையையும், அதற்குச்சகாயமான சாந்தியாதி குணங்களையுஞ்சொல்லி, அத்துரியஞானம் பிரசன்னமாம்பொருட்டு சிருஷ்டிக்குமுன் சத்தாமாத்திரமாகியும், சதோதயமாகியும்,சதாநந்தமாகியும், பிரகாசிக்கின்ற பிரமத்தின் லீலாசங்கற்பத்திற் பிரதிபலனமான சைதன்னியமே, சகத்துற்பத்தியென்றும், அதன்விளக்கமே சகஸ்திதியென்றும், அதனடக்கமே சகசாந்தமென்றும், இம்மூன்றிலுமொருதன்மையவாகவிளங்கு மதிஷ்டான சைதன்னியமே நிருவாணசுகமென்றும், சொல்லிய வின்னுன்கு பிரகரணத்தாற் சர்வமும்பிரமமயமென்பதை யுபதேசிக்கவேண்டி, ஒன்பது கதைகளா னிறைந்த வுற்பத்திப் பிரகரணத்தில் சைதன்னியத்தி லுண்டான சங்கற்பஞ் சைதன்னியமேயென்பது தோன்றமுந்தின ஞானவிண்மகன்கதையை சைதன்னிய வுருவமாக நிரூபிக்கிறார்்.

---

௧. ஆத்மஸ்வரூபப் பிரத்தியக்ஷ நிருபணம்.

மோக்ஷமடையவிரும்பின முமூட்சுக்களின் ஆசாரத்தைநீயனுசரிக்கும்படி கிரமமாகச்சொன்னோம், இனி யுலகங்களுண்டாகின்ற காரணத்தை நன்றாகச்சிரவணஞ் செய்யக்கடவாய்; சுவானுபூதியாகிய பெருமையினை பொருந்தினதாயும் ப்ரத்யக்ஷமென்று மதஸ்தர்களிடப்பட்ட நாமங்களை பெற்றதாயுமிருக்கின்ற அபரோக்ஷஞானமே நமது சீவன், இச்சீவனை பிரமஞானத்துடன் கூடஸ்தனென்றும், கருத்தத்துவ வீஸ்வரனென்றும், பிரத்தியக்ஷ சிதாபாசனென்றுஞ் சொல்வர். ‡ —

௨. ஆத்மாவேசகமாக விளங்குகின்றதெனல்.

சீவனுனவன் எந்தவறிவோடும் ப்ரகாசிக்கின்றானோ அந்தஞானமே வியோமாதியான வஸ்துக்களாம், தோன்றியழிதலிற்றுவாகின்ற நானாவிதமான சங்கற்ப விகற்பங்களை பொருந்தியிருக்கின்ற மயக்கத்தினுல், பரவியசலமே திரையானதுபோல, சொல்லிய சீவனுனவன் பூமிமுதலான சகலவஸ்துக்களாய் பிரகாசித்தது. ¶ —

௩. ஆத்மாவேஜகத்தாயின் அதற்குக்காரண மியாதெனில்.

சிருஷ்டிக்குமுன்னமே சொல்லப்பட்ட அகாரணமான சத்தாமாத்திரமே சிருஷ்டிக்க வேண்டுமென்கிற லீலாசத்தினுல்பொருந்தின காரணமாய் ப்ரத்யக்ஷமான சாமானிய திருஷ்டியே பொருட் கூட்டங்களாகி யிருக்கின்ற உலகமாய் தனது வியாபகத்திலுண்டாய் ஞானத்தில்வாயுவினிடத்திற் சலனசத்தியைப்போல தங்கி

---

‡ இ-ம். சுயம் சைதன்னிய பிரத்தியக்ஷப்பிரகாசமே நான்கு சைதன்னியமாகவுந் திரிபுடியாகவுந் தோற்றுகின்றதென்பதாம்.

¶ இ-ம். ஆத்மசங்கற்பமே சகம்போலத் தோற்றப்படுகின்றதாம்.

௪. பிரமங்காரணமாயில் ஜகங்காரியமாம், அதனாற்றுவிதமும்அதன் வியாபகத்துட்சகம் விளங்குகின்றதெனில், விசிட்டாத்துவிதமும் ஆமேயெனின்.

௫. அப்படியாயில் ஜகத் தோற்றப்படுகின்றதேயெனின்.

௬. அப்படிப்பட்டபிரமம் எப்பொழுது வெளிப் படுமெனின்.

௭. இப்படிப்பட்ட சயஞ்சைதன்னியத்திற்குச்சத்தியாதிநாமம்வந்ததென்னெனின்.

௮. அச் சைதன்னியமேமனமாயதனாற் சகமெப்படியாயிற்றெனின்.

யிருக்கும். ¶ —அளவில்லாத திக்குகளும் காலங்களும் பிரத்யேகமென்கின்ற இச்சர்வாத்மஞானத்துக்கு இசைந்த நாநாவித வடிவங்களாய் எவ்விடத்தெப்படி யுண்டாயிற்றோ அவ்வண்ணம் அவ்விடத்தாரும், நடக்கின்ற விவ்விதத்தினால், இவ்வுலகமென்கின்ற பிரமகும்பிதமானது வேறுகாரணமில்லாத வஸ்துவென்று அறியக்கடவாய். † —

இச்சகத்தை பிரத்தியக்ஷமாகிய ஆத்ம சைதன்யமே நொடியளவில் சிருஷ்டித்துதாரும் ; அநுமானமுதலிய பிரமாணங்களியாவும் அதன் வடிவாகி விளங்கும், நாநாவிதமாகிய திரிஸ்யத்தி னுண்மையே பந்தமாம் ; அஃதில்லாமையே மோக்ஷமாம் ; திரமில்லாத வித்திரிஸ்யமானது நீங்கும்படிசொல்லுவோம், நன்றாய்த் தெரியக்கேள். ‡ —மிகுந்த சமுத்தியவத்தையில் வாராநின்ற சொப்பனங் கெடுவதுபோல, காணப்பட்டனவாகிய சகங்களியாவும் கற்பாந்தத்திற்கெட, எண்ணத்தின லுண்டான சஞ்சலமும், உருவமும்,நாமமுமாகிய இயாவுமில்லாமல் கெம்பீரமாய்த்தடையற்ற அஞ்ஞானந்தகாரமும், விருத்திஞானபிரகாசமும், இல்லாமல் தானேதானா யிருக்கின்றதாகிய ஒப்பற்ற தத்துவஞானமானது மிஞ்சியிருக்கும். § —வாக்கினால் வியவகரிக்கும் பொருட்டு சத்தியமும், பிரமமும், ஆத்மாவும், பரமும், முதலாகிய இத்தன்மையவாகியநாமங்களை, சத்துக்களாற் றரிக்கப்பட்ட இவ்வாத்மாவானது அதிசயமாகத் தானொன்றேமற்றொன்றுபோற் பிரகாசித்து குற்றம்பொருந்தி, இனிவருவதான சீவநாமத்தைப் பொருந்தினது போலவாரும். * —சீவனென்கிறசத்தமும், அதனருத்தமுமாய்நிறைந்த வாத்மாவானது பாவித்தலுள்ள சங்கற்பத்தினால் அடித்தெழாநின்ற மனமாம் ; அகோசரமானபிரமத்தில்சமுத்திரத்தின் றிரையைப்

¶ இ-ம். பரமப்பிரகாசமே சத்தாதலின் அதற்கதுவேகாரணமானதாம்.

† இ-ம். எவ்வெவ்விடங்களி லெப்படியெப்படி ஸ்புரிக்கின்றதோ, அப்படியப்படிதானே விளங்குகின்றபடியாற் சகங்காரியமாகாது, அதனாற் பிரமங்காரணமாகாது, இக்காரியகாரண மின்மையினாற்றுவிதமும், காரணத்துட்காரியம் வேறுபடா மலபேதமாயிருத்தலின், விசிட்டாத்துவிதமுமின்றித் தானே சகலமுமாய் விளங்குதலின், அத்துவிதமேயாமென்பதாம்.

‡ இ-ம். பிரத்தியக்ஷ சைதன்னியத்தைத்தவிர வேறுவஸ்து தோற்றமில்லை யென்பதாம்.

§ இ-ம். அத்யந்தப்பிரளயத்திற் சங்கற்பரூபமான சகலசகங்களுநீங்கி, ஞானஞ்ஞானரகிதமான சயஞ்சைதன்யமே விளங்குமென்பதாம்.

* இ-ம். ஆத்மாவானது, மகான்களால் விவகரிக்கும்பொருட்டு பரி... நாமங்களைப்பெற்றுத் தானே சீவனைப்போல விளங்குமென்பதாம்.

போல உண்டாக்கி, சஞ்சலிக்கின்ற மனது தானே தனது சங்கற்பப்படியே உலகத்தை யுண்டாக்கும். ¶—நினைக்கப்பட்ட மனோசங்கற்பத்தினாலே

௯. அப்படியாயின் வேறுபாடாமேயெனின்.

சகமென்னு மிந்திர சாலமானது உண்டாயிருக்கும், ஆபரணமென்னுஞ் சத்தத்துக்கு அருத்தமானது கனகத்தையல்லாமல் வேறின்று, கனகத்தினால் ஆபரணமென்று சொல்லவேண்டாம், சொல்லிய சகமென்னுஞ் சத்தத்துக்கு பிரமமேயல்லாமல் அருத்தம்வேறில்லை. ‡—ஓடாநின்றகானலாற்

௧௦. அசத்தாகிய மனதினாற் சகத்தெப்படி யுண்டாயிற்றெனின்.

றிற்றோற்றும் அலைகளைப்போல, அசத்தான மனதில் உண்டாகாத தாயிருந்தும் உள்ளதுபோலத் தோற்றுகின்ற இச்சகமானது, துன்பத்தைச்செய்யாநின்ற மோகமென்றும், பந்தமென்றும், தமமென்றும், மலமென்றும், அவித்தையென்றும், மாயையென்றும், சம்சாரமென்றும், அறிஞர்களால் சொல்லப்பட்டன. †—நான்சொல்லாநின்ற பந்தஸ்வ

௧௧. பந்தரூபமும் அதனிவிற்தியுஞ்ஞானதையமும் யாதெனின்.

ரூபத்தை நீ கேட்டறிவாயானால் மேலாகிய மோக்ஷஸ்வரூபம் இனி நன்றாய்வெளிப்படும், இவ்வுலகத்தையும் நீ நான் முதலாகிய விப்பேதங்களையும் உள்ளதென்பது பந்தரூபமாகும், அச்சங்கற்பமான திரிஸ்யமிருக்கின்ற பரியந்தம் மோக்ஷமானது அரியதாம், விதையினிடத்தில் அடங்கியிருக்கின்ற விருக்ஷத்தைப்போல திருஷ்டாவினிடத்தில் திரிஸ்யங்களியாவும் உண்டாகாம லடங்கியிருக்கும். §—

௧௨. திருஷ்டாவிற் றிரிஸ்யம் எப்படியிருக்கின்றதெனின்.

பிரிவுள்ள வடபீசமுதலிய காரணவஸ்துவின் கருப்பத்தில் அதற்குள்ளிருந்த பத்திர புட்பாதிகளான பேதப்பிரகாரமே, சிருட்டியின் ஆச்சரியசத்தியானது கெடாமல் உண்டாயிருப்பதுபோல, ஞானாத்மாவென்னும் வஸ்துவினுடைய வியாபகமான கருப்பத்தில்முளையாகி, முறையாகப் பொருந்திய உலகத்தினுடைரூபமான சகலமும், நீங்காமல் சுபாவமாக நிறைந்திருக்கும். ✳—பக்குவமான கால

௧௩. திருக்குவினுண்டான சகலமுந்திருக்குவேயென்பதற்குத்திருஷ்டாந்தமியாதெனின்.

லதேசங்களில் வித்தானது முளைக்கின்ற தன்மையைப்போல, திரிஸ்யத்தை சங்கற்பிக்கின்ற மனதும்தேவதிரியக்குமுதலியவடிவமாம், ஞானகாயத்துதயமானவன் சரிதையினால் அந்தகாரமயமான

¶ இ-ம். சிவசப்தார்த்தமானவாத்மஸ்மரணமேமனமாய், அதின்சங்கற்பமே, சகமாயிற்றென்பதாம்.
‡ இ-ம். சகம்பிரமப்பிரகாசமேயன்றிவேறின்றென்பதாம்.
† இ-ம். இல்லாத கானற்சலத்தி லலைதோன்றுவதுபோல இல்லாத மனதினாற் சகத்தோற்றுகின்றதாம்.
§ இ-ம். விசாரிக்குமட்டுஞ் சகமாயிருந்து, உடனேகெடுக்கின்ற பந்தாசசத்திற் சுயஞ்சைதன்னியம் பிரகாசிக்குமென்பதாம்.
✳ இ-ம். வித்தில்விருக்ஷமிருப்பதுபோல, திருஷ்டாவிற் றிரிஸ்யசத்தி யடங்கியிருக்குமென்பதாம்.

சகசிருஷ்டி லகுவாயுனக்குப் பிரகாசிக்கும், இக்கதைதனைய நீ கேட்கக்கடவாய். சிறந்தபிரம வசிசத்தையுடையவன் வியாபகமான ஞானகாசமே தானுண்டாவதற்குக் காரணமாகஞானவிண்மகனுண்டானுன். ¶ அவன்பிரிவற்ற சமாதியும் சிவகாரு

சச. ஞானபுருடன்சரிதையை யினுவுதல்.

ணியமும் தருமமுமாகிய விசையைகளை யுள்ளவனேககாலஞ் சீவித்திருக்குமளவில், ஈனமாகுமிச்சகத்தைப் புசிக்கின்றயாம் இவனைப் புசிக்காமலிருக்கதென்ன, அனைத்தையும் கிப்பிக்கு மெனதுவல்லபம்,பாடாணத்திலுறைகின்ற கத்திறனையைப் போல மிகவு மழுங்கிப்போயிற்றென்று நினைத்து காலனுனவன் அவனுாரிற் சீக்கிரத்திற்சேர்ந்து, †

சரு. அப்புருடனைக் கப்பட்டானே வெனின்.

—ஒருதொழிலில் முயற்சிப்பவர்கள் அதுதொழிலைவிட்டு விடுவார்களோவென்று பிராணனுடைய வீட்டுவாயலில் காலனுனவன் புகுந்தமாத்திரத்தில், மிருகின்ற கொடிய ஜுவாலைத்தியைப்போல சத்தியாகின்ற அவரது மகிமையென்னும் கொடிய தீயானது எரிக்கவும், அதைப்பிளந்துகொண்டு பிரவேசித்து பார்த்தவப்புருடனை பனைக்கொப்பாகிய ஆயிரங்கைகளிஞலும் பிடித்திழுத்து பிரயோச

சசு. இயமனுக் கியுரைத்தல்.

னம் பெருதவனுயினன். ‡ —அந்த ஞானவின்மகன், சங்கற்பத்தைதயே வடிவமாயுள்ள புமானைப் போல அசையாமலிருக்க, வெல்லக்கூடாமல் இக்காலனவ்விடத்திலின்றுகேய்மி யமனிடத்திற்சென்று இங்கேகாடக்கப் பிரகாரஞ்சொல்ல, அதற்கு யமன்சொல்லுவான், கன்மத்திஞலுண்டாகியசகத்து கன்மத்திஞலல்லாமல் கிலயாது, நமக்குச்சகாயமானவஸ்துக்கள் மிக்குரம்படி முன்செய்தகன்மங்களேயாம், அக்கன்மங்களையே கொல்வதற்குச்சகாயமாகக் கொண்டுபோவென்று சொன்னன். § —

சஎ. கருமமகப்பட்டதாவெனின்.

காலனிவ் வசனத்தைக்கேட்டு அப்பிராமணன் முன்செய்த கருமங்களைத்தேடி தீர்த்தங்களிலும், தடாகங்களிலும், பூமண்டலத்திலும், திக்குகளெலைத்திலும் அலைந்தும் அகப்படாததாக திரும்பி வந்து அறிவுள்ள யமனுக்குச்சொல்ல, வெருவேரமாலோசித்து அந்தயமனும்சொல்லுவான், கேவலாகாயத்தில் உதித்ததிஞல் கிர்ப்பீல்லாத அப்பிராம

¶ இ-ம். அந்தவல்லாசத்தில் அதன்சுபாவமாயுண்டான சகலமும் ஆத்மசாக்ஷாத்காரமாகவெளிப்படுத்தற்கு,இஞ்ஞானவிண்மகன்கதையே திருஷ்டாந்தமென்பதாம்.
† இ-ம். காலன், வெருபடாதவனை வேறுபடுத்தச்சென்றதாம்.
‡ இ-ம். காலாதிதனுகையாற் காலனுற்பிடிக்கப்படவில்லையென்பதாம்.
§ இ-ம். தேகத்தைக்கெடுத்தற்கு முன்னுள்ளசஞ்சிதகன்மத்தானியமித்தமான கன்மத்தைப் பரிசோதித்து, அதைக்கொண்டு செல்லவேண்டு மென்பதாம்.

கஅ. ஆனலவன் காரியப் படுதலின் றேவெனின்,

ணனும் ஞானகாயமல்லவோ. †—ஞானகாயத்தை துதித்தபிராமணன், ஜககாரிநிமித்தங் காரணத் தைபொருந்தாததனல், கருமங்களைச்செய்துஞ்செய்தானில்லை. காரணமேயில்லையாயின், அவன்செய்கின்ற கருமங்களுள்ளதாமோ, நீ நினைப்பதற்கு உரித்தான அவனது சஞ்சிதத்தால் விதிக்கப்பெற்ற மரணகருமமென்னு முதவியானது உனக்கில்லையென்று தருமராஜன்சொல்ல, அவனைக் கிட்டக்கூடாதென்று மேன்மையாகிய காலனனவன் தனதி

க௯. பிரமாவை இப்புருடனகக் கூறிற்றேவெனின்,

டத்தில் மிகவுமதிசயித்துப்போயினன். ¶—இப்படியென்றுசொல்லிய வசிட்டமுனியின் வதனத் தைப்பார்த்து இராகவர்சொல்லுவார், தேவரீ ரனுக்கிரகித்த அந்தஞானவிண்மகனை, தானேயுண்டானவனும், விஞ்ஞானமே வடிவமானவனும், ஒன்றாகநிறைந்திருக்கின்றவனுயு மிருக்கின்றபிரமாவாகநிச்சயித்தே னென்றுசொல்லவும்,பரிசுத்தமாகியவசிட்டமுனி,முன்னுஞ்சொல்லியது பிரமாவையேசொல்லிய கதையின் முறைமையை இராமா?

௨0. காலன் பிரமனையழிக்கத்துணிந்தானே வெனின்.

நீ கேட்பாய். ‡—நாசத்தொழிலை செய்யாநின்ற காலனனவன், யமனுடனேசொல்லும் ஞாயங்களையாமறிந்தேம், மேலான மனுவினுடைய முடிவில் சகங்களனைத்தையும் புசித்தெழுந்த சோம்பலில்லாத காலனனவன், பிரமாவையும், செகுத்தற்கு எத்தனஞ்செய்த அச்சமயத்தில், துக்கமில்லாத காலனது முகத்தைப்பார்த்து உயர்வாகிய இயமனிவைகளைச் சொன்னன். ✻—சமானமில்லாதபிர

௨க. ஆனலவர் ஸ்வரூப மியாதெனின்.

மாகாயமே நிருமலாகாரமாயிருக்கின்ற எதிரில்லாதபிரமாவை அழித்தற்கென்று நினைக்கின்றநினைவு எளிதின் முடியுமோ, பிரகாசிக்கின்ற ஆகாயமே வடிவமாய் பூதவடிவமில்லாதவனய் முன்சொல்லியசங்கற்ப புமானைப்போல நசியாமல் பிரமதேவனும் பிரகாசிப்பன். §—சிதாகாயமாகியும்,தனிமை

௨௨. ஆயின்வேறு வடிவ மின்றேவெனின்.

யாகியும், முதலும்,மத்தியும், அந்தமும், இல்லாததான சுயம்பாயிருக்கின்ற பிரமமானது, அடுத்திருக்கின்றதனதுசங்கற்பவசனத்தினல்பிரமாணமான

---

† இ-ம். சஞ்சிதவினை காரணமாகவுதியாமல் ஞானங் காரணமாகவுதித்தலாற் பூர்வகன்மமகப்பட வில்லையென்பதாம்.

¶ இ-ம். சிதாகாயத்தினிமித்தகாரணமுஞ் சககாரிகாரணமுமின்றி யுபாதானகாரண மாத்திரமாயுதித்தவனதலாற் காரியமும், காரணமும், காரணகாரியமும் மரணகன்மமுமின்றி நித்தியனயிருப்ப னென்பதாம்.

‡ இ-ம். பிரமத்திலுண்டான பிரமனையே யோர்புருடனக வுருவகப்படுத்தின்தாம்.

✻ இ-ம். பிரமனது ஸ்வரூபத்தையுணராமற் கெடுக்கநினைத்ததென்பதாம்.

§ இ-ம். பஞ்சபூதவடிவமின்றிச் சிதாகாயமேவடிவமாகப்பிரகாசிக்கின்றதாம்

சரீரமுடையது போலவும், இலையாகிய புருடனைப் போலவும், இம்மூன்றுமையினால் பிரகாசிக்கும், பிரகாசியாத வந்தியாபுத்திரனைப்போல வடிவில்லாததாம். †—இப்படியென்று பிருகுவுக்குமன் சொன்னான் என்றுசொல்லிய வசிட்டருடைய வதனத்தைப்பார்த்துநின்றதான ஆதிவாகியசரீரமாயும், பிரகாசித்த

௨௮. பிரமனுக்குச் சிருஷ்டியாதி தொழில் இருக்க, பௌதிகசரீர மில்லாதகாரண மியாதெனில்.

ஆதிபௌதிகசரீரமாயும், பொருந்தியசரீரங்கள் ஆத்மாக்களுக்கிருக்கும் இரண்டுவிதமாயிருக்க, பிரமாவுக்கு ஆதிவாகிய சரீரமாகிய ஒட்டுமசரீரமொன்றுமே தென்னவென்று இராமன்கேட்க,—

௨௯. இதுவுமது.

பிரமாகாசத்தில் உண்டாகிய எல்லாருண்டாகுஞ்சீவர்களுக்குங் காரணமாகப்பொருந்துகின்ற தனால், சீவர்களுக்கிருக்கும்பொருந்தியசரீரம் இரண்டாமாம்; மேலான பிரமனுக்குக் காரணமாகச்சொல்லப்பட்டகாரணம் மேலில்லாததினால்வேறுசுவயம்பு தபிரமனுக்கு ஆதிவாகியமானதுஞ்சரீரமாகப்பொருந்தும். §—உலகத்துக்குக் காரணமாகிய பிரமனிடத்தில் சுயமாகவுண்டாகின்ற மனதின்ஸ்வரூபமாயுள்ளதுமுண்டாகிப் பார்த்தபடியால், அப்படிப்பாகியசுகங்களியாவும்மனோரூபமேயென்று அன்போடுசொன்னவசிட்டமுனிவைப்பார்த்து, சகமென்னுமாயையைமனமானதினது உருவைத்தைப்பருத்துச் சொல்லுமென்றிராமன்கேட்க, வசிட்டமுனிசொல்லுவார்

௩௦. ஜகத்தைச் சிருஷ்டிக்கு மனோரூபமாமெதனின்.

¶—அவித்தையமாயும்உருவமில்லாததாயுமெல்லாவற்றிலும் சேர்ந்திருக்கின்ற தனித்தமனதுக்கு, மாயாதத்திரமேயன்றி அனைத்துமடைகின்ற ஆகாயத்தைப்போல அகத்திலும், புறத்திலும், வடிவில்லாததாம்; குற்றமற்ற மெய்யும், பொய்யும், என்கின்ற வஸ்துவில் பொருந்திய தோற்றமே மனதாகும், தொடர்ந்த சங்கற்பமானது எங்கேயுள்ளதோ உண்டாகின்ற மனதும் அங்கேயுண்டானதாம்.

௩௧. இதுவுமது.

—மனதினதுவடிவம் சங்கற்பமேயாம், இவ்விரண்டு மொன்றேயாம், அனித்தமும், மோகமும், மலமும், பந்தமும், அவித்தையும், மாயையும், தமசும் முதலான கட்டமாகிய நாமங்கள் சங்கற்பத்துக்குத் தருந்த நாமங்களாம், இச்சங்கற்ப ஸரிக்

௩௨. இதுவுமது.

---

† இ-ம். ஆதிமத்தியாந்தாதிதமான சையுஞ்சைதன்னியமே தனதல்லாச சத்தியிலுள்ள வடிவைமூன்றைப்போலத் தோற்றினாலும், அதுபிரமமேயன்றி மாமருமைமல்லாதம்.

§ இ-ம். உயிர்களுக்குப்பிரமமுதலானகாரணமானமையால் ஆதிவாகியசரீரமும் சகத்து, காரணகாரணமானமையால் ஆதிபௌதிகசரீரமுமாக இரண்டாம்பிரமனுக்குப் பிரமமேகாரணமானமையால் ஆதிவாகியசரீரமொன்றேயாமென்பதாம்.

¶ இ-ம். சகமாகத்தோற்றுகின்ற பிரமசங்கற்பத்தை விசாரித்ததாம்.

கில், பருத்ததிரிஸ்ய திருஷ்டியுநீங்கும், பிரமஸ்வ

உஅ. ஆத்மாயெந்தவிடத் தெப்படி விளக்குகின்ற தெனின்.

ரூபமானது ஒளிவிட்டுப்பிரகாசிக்கும். † —சராசரமென்கின்ற சமஸ்தத்தின் சாயையானது புணர்ந்தும் புணராமல் கேவலமாயிருக்கும், கண்ணுடியானதெப்படியோ அந்தப்பிரகாரமே சைதன்னியமாத்திரம் பிரகாசிக்கும், கற்பனைபொருந்திய நீநானென்பது முதலாகக் காணப்பட்டனவாகிய வேற்றுமைகளனைத்து மடங்கி, அற்பமாகிலும் திரிஸ்யமானதுசேடமின்றிநசிக்கில், அங்கசிப்பே ஒப்பற்றகைவல்யநிச்சயமாம்

உகூ. மனோநாசமுண்டாகுங் காலமியாதெனின்.

‡ —சொற்பனங் கொடுக்கின்ற சொற்பனத்தைப்போல, பார்ப்பதற்கு வுருவமில்லாதமனது இல்லாததிரிஸ்யவஸ்துக்களனைத்தையுங்காட்டும், ஒன்றிலுந்தரியாத மனமானது சஞ்சலசத்தினல் பிரகாசிக்கும், சஞ்சலிக்கும், கலங்கும், செல்லும், திரும்பும், வீணுகப்பொருந்திய களிப்பின்மிகும் அகங்காரத்தை யடையும் வேறு வடிவமாகிய மகாப்ரளயம் பொருந்துங் காலத்தில் ஆகாயமுதலிய சகலவஸ்துக்களும், ஒருங்கே யழிந்து பூரணமானசாந்தமே மிச்சமாம். ¶ —அத்

௩0. ஆத்மஸ்வரூபவிலக்கணமியாதெனின்.

தமானமாகாத சுயஞ்சோதி யென்னும் சூரியனும்,எல்லையற்றதாயும்,அற்பதுன்பமு மில்லாததாயும், உற்பத்தியில்லாததாயும், எவ்விடங்களினும் எக்காலத்திலும், சகலமுமாய் சகலத்தையு முண்டாக்கியும், சகலமும்விடுபட்டதாயும், வியாபித்திருக்கின்றமுதன்மையானபிரமஸ்வரூபமானதொன்றுள்ளது.

௩க. ஆத்மவிலாசமியாதெனின்.

§—வசனதீதமாயும், சத்துக்களால் வசனிப்பதாயும், பிரமமுதலிய கற்பிதமாகிய பலநாமங்களிடப்பெற்று, மிகவுமறிவுள்ள சாங்கியர்கள் ஆத்மாவென்றும் பரிசுத்தவேதாந்தஞானம்விளங்கினவர்கள் பிரமஸ்வரூபமென்றும்,குற்றமற்றவிஞ்ஞானிகள் விஞ்ஞானஸ்வரூபமென்றும், சூனியவாதிகள் சூனியஸ்வரூபமென்றும் உரைக்கப்படுவதுமன்றி, சூரியப்பிரகாசத்துக்கும் பிரகாசமாயிருந்து யாவற்றிற்கும் பிரகாசத்தைக்கொடுத்துபிர

† இ-ம், சங்கற்பரூபமாய்ச் சடசித்துக்களிற் சஞ்சரிக்கின்ற மனதுக்குமோகமுதலிய நாமமாத்திரமேயன்றி யுருவமின்றென்பதாம்.

‡ இ-ம். சகமுதலான பேதபாவனை நீங்கியவிடத்தில் தானய்விளக்குகின்ற வனுபவமே சுயம்பிரகாச மென்பதாம்.

¶ இ-ம். மித்தையானமனது மித்தையான ஜகத்தைக் காட்டிக்கொண் டிருந்து அத்தியந்தப்பிரளயத்தி னசிக்குமென்பதாம்,

§ இ-ம். உதயாத்தமனமின்றி சுயமாய்ப் பிரகாசிக்கின்ற பிரமம்சர்வவியாபகமான சத்தாமாத்திரமா யிருக்குமென்பதாம்,

௬௨. ஆத்மவிவகாரமியாதெனின்.

௬௩. ஆத்மசமாவேசமியாதெனின்.

௬௪. ஆத்மதரிசனத்தில்யாதடங்குமெனின்.

௬௫. அதிருட்டமான பிரமதரிசனத்தெப்படியடங்குமெனின்.

காசிப்பித்துப் பிரகாசரூபமாய் விளங்கும். ‡ — வசனிப்பவனையும், ஆராய்பவனையும், கேட்பவனையும், பார்ப்பவனையும், புசிப்பவனையும், நினைப்பவனையும், சகத்தில், தேகத்தில், இடமாகப் பொருந்தியும், பொருந்தாததாயுமிருக்கின்ற வஸ்துவினின்றும், சூரியப் பிரகாசத்தைப்போல ஞானப்பிரகாச முண்டாகும், ஆகாயத்தினின்றும் வாசனை பொருந்திய மனதேதேவோராகவும், இந்திரியங்களே புட்பங்களாகவும், அண்டங்களே காயாகவும், உதயமாகும், மனையொன்றும் வல்லிணை அசைக்கும் நிலமாயும், குற்றஞ்செய்யாநின்ற சரீர சம்புடங்களுக்குள் இரத்தினமாயிருக்கும் புரியட்டகசரீரத்தை, சித்தானது போக்குவரவைச் செய்விக்கும். † — பரிசுத்தஞானமாதலால் அதுநிறைந்த வாகாயமாம், அப்பிரகாரமே எவ்வஸ்துவையும், பாவனைசெய்த போது அவ்வஸ்துக்களே உளதாயிருக்கும், அந்த ஞானத்தில் திரிபுவனமும், கானற்சலம்போல எப்போதும் உண்டாகிக்கெடும், இவ்வளவையும் செய்தும் தானிவ்வளவையுஞ் செய்யாமல் இருந்தபடியிருக்கும். ¶ — நிருவிகற்பமான ஆத்மஸ்வரூபத்தில் உலகத்திற்றோற்றமான இவைகள் வேறேயுண்டாகவில்லை, விகற்பமேதும் பொருந்தாத பராபரமாகிய அவ்வஸ்துவை பிரகாசிக்கத் தரித்தால் பெரிய மேருபர்வதமும், சந்தேகங்கெடும், சகல கருமங்களுங்கெடுமென்று முனிவர்சொல்ல, இராமர், துர்க்கிருக்குள்ளே மகாமேருவானது தழைந்ததாலல்லவோ பிரமாண்டமானது அணுவுக்குள் வானப்பிரமத்திலடங்குமென்று கேட்க. * — அரிய கதைத்தொடையை வசிஷ்டர்சொல்லுவார், ஆத்மஞான சாஸ்திரங்களினாலும், சாதுக்கள் சங்கத்தினாலும், மாதத்தினாலல்லாமல் தினங்களினால் இச்சங்கைக் குத்தாக்கெரியும், பலசாஸ்திரங்களினது நிச்சயமும் இதுவேயாம், இவ்வருத்தமுள்ள இக்கதையை விசாரிக்கில் கிட்டவேயாம் பூரணஞானத்தை விரும்பியவர்களுக்கும் கற்பித்தசகமானது இருக்கக்கூடும் மேலான சீவன்முத்தியது த்தையடையலாம், இச்சீவன்முத்தியே விதேகமுத்

‡ இ-ம். அசோசரமானபிரமம், அவரவர் நிச்சயித்தபடி விளங்குவதன்றியும் யாவையும் பிரகாசிப்பிக்கின்ற ஸ்வயம்பிரகாசமாய் விளங்குமென்பதாம்.
† இ-ம். யாவுமாய்விளங்குகின்றபிரமத்தனது சித்தத்தியில் [illegible] தவிபாவனைத்தையுமாட்டிவிக்குமென்பதாம். [ய் தாஞ்செய்யவில்லையென்பதாம்
¶ இ-ம். சித்தானதுபாவித்தபடியமாய் விளங்குவதன்றியுந் திருட்டியாதிகளைச்செ
* இ-ம். பிரமதரிசனத்திற்சங்கற்பமுதலிய வண்டங்களடங்குமென்பதாம்

௩௬. சீவன்முத்த ரிலக்கண மியாதெனின்.

தியாம் என்றார். ¶ —இராமர், விதேகமுத்தியை யும், சீவன்முத்தியையும் நல்ல பழமையான சாஸ் திரமார்க்கத்தில் யான்முயற்சிக்க சொல்லுமென்று கேட்க. வசிட்டர்சொல்லுவார், வலிமையான பல விபகாரங்களில் கூடியும்,சிதாகாயமானது பிரத்தி யக்ஷமாய் திரிஸ்யந் தோற்றுததான வகையை யு டையவர்கள்,சதாநந்தம் பொருந்தவருகின்றசீவன் முத்திப்பதத்தை அடைந்துயர்ந்த சுபாவமுடைய

௩எ. இதுவுமது.

வர்கள், § —வாராநின்ற ராகத்துவேஷாதி களி னல் உண்டாகின்ற விகாரஞ் சேர்ந்தும் ஆகாயத் தைப்போல மிகவுஞ் சொச்சமானவர்கள், அகம் பாவமென்பதில்லாமல் தொழில்களைச்செய்தாலும் விட்டாலும், அதிலழுந்தாதவர்கள், உலகாசாரங் களைச் செய்தாலும்,பிறரைப்போல அதைப்பார்த் து குளிர்ந்த தன்மையைச் சார்ந்தவர்கள், பிரகா சிக்கின்ற மனமும், கருத்துமிருந்தும், அம்பமும்

௩அ. இதுவுமது.

பற்றில்லாதவர்களும் ; † —துன்பங்களில் மூழ்கி இன்பங்களில் மேற்கொள்ளாத அறிவினிச்சயமே இயல்பானவர்களும், அடைந்த சுழுத்தியவத்தை யில் சாக்கிரமாகி சாக்கிரத்தில் அஃதில்லா திருக் கின்ற வாசனையிறந்த சுழுத்திஞானத்தை பொருந் தினவர்களும் மேலானசமமாகி, சகத்தினல் பயப் படாமல் சகத்தையும் பயமுறச்செய்யாத மகான்க ளும் சம்சாரபந்தமற நற்சிந்தனையிருந்தும்சிந்தனை யில்லாதவர்களுமாகிய இவர்களே, சீவன்முத்தர்க

௩௯. விதேகமுத் தியிலக்கண மியா தெனின்.

ளாம். ‡—நிச்சயமாகிய இந்தச்சீவன் முத்திபதத் தை நீங்கி சரீரநசித்தால், பூரணமான காற்றான து அசைவற்றுகாயமா யிருப்பதுபோல, விதேக முத்தியையடைவன். அதனியல்பானது, நசியாது மறைவுபடாது தோற்றது சமீபமன்று, சேய்மை யன்று,நசிங்காதது,முடிவில்லாதது,யானன்று,பிற

௪0. இதுவுமது.

னன்று, ஒன்றுமன்று. —இருளுமல்லாமல், பிரகா சமுமல்லாமல், அலைவுமல்லாமல்,பிரமாணமு மில் லாமல், ஒருகுணமு மில்லாமல், ஒன்றுங் கொன்று பொருதுகின்ற பஞ்சபூதங்களும் நாநாவிதமான வஸ்துக்களும் அல்லாமல், நிறைந்திருக்கின்ற பூர ணஸ்வரூபமாயும் உருவமு மில்லாமல் அருவமு

¶ இ-ம். அணுவுக்கணுவானபிரம்மசத்துக்கு மகத்தென்கின்ற சுருதியுத்தி யனுபவத்தாற் பரோக்ஷஞான முண்டா யதனுற்சமாதியைக்கொண்டு அபரோக்ஷ ஞானமுதிக்கிற் சுகமிருக்துமில்லாமற் சீவன்முத்தி யுண்டாமென்பதாம்.

§ இ-ம். அபரோட்சானுபவமுள்ளதே சீவன்முத்தித் தன்மையென்பதாம்.

† இ-ம். யாவுங்கூடியுங் கூடாமற் சித்திவாயிருப்பவனே சீவன்முத்தனென் பதாம்.

‡ இ-ம். சீவன்முத்தர் சகசானுபவமாய் விபகரித்ததாம்.

மில்லாமல் சத்துமல்லாமல் சத்து சத்துமல்லாமல்
ஏகமாயும், வாராநின்ற ஞாதுரு ஞான ஞேயங்க
ளின் மத்தியிற்றோன்றுவதை நீ மறவாமல் வரை
சக. வஸ்துவினிலக்கண மியாதெனின். யறுத்தறிவாய். ¶—அத்தன்மையாகிய சிதாநந்த
மான பிரமஸ்வரூபத்தை, ஞானம் பூரணமாம்பொ
ருட்டு விபரமாயனுக்கிரகஞ் செய்வாயென்றுகேட்
ட அழகுள்ள இராமருக்கு, வசிட்டமுனிசொல்லு
வார் ; மகா கற்பம்வந்தபோது எவ்வகைப்பட்ட
காரணங்களுக்கும் காரணமான பிரமஸ்வரூபமே
ப்ரகாசிக்கும், விடையங்களைக் கிரிகிக்கின்ற மனோ
விருத்தியை நீக்கி அகங்காராத்மாவைக் கொடுத்
சஉ. இதுவுமது. தால்நாமமற்ற பிரமவஸ்துவாகும். †—எதிரிட்ட
கின்ற சகத்தைப்பாராத சீவசைதன்னியத்தை
அப்பிரமமாகச் சொல்லலாம், பரவிய விடயங்களை
யனுபவித்தும் அனுபவியாதமனதை அப்பிரமமா
கச்சொல்லலாம்;உண்டானவிடையஞானமும்,சூரி
யாதிப்ரகாசமும்,மனமும்,திரிஸ்யமுமாகிய இவை
களின் சர்வசாக்ஷியாகிய அறிவை அப்பிரம்மாகச்
சொல்லலாம் ; கருமங்களைச்செய்தாலும் மலைபோ
லிருக்கின்ற நிச்சயத்தை அப்பிரமமாகச் சொல்ல
சங. இதுவுமது. லாம். §—அந்தமும்,சொற்பனமும்,சடமுமில்லாத
நீண்டயோக நித்திரையானது அவ்வஸ்துவாகும்,
மூன்றாகி நெருங்கிய ஞாதாவும் அறிவும் விடய
மென்னும் திரிபுடியானது உண்டாகி யடங்கும்
ஸ்தானமானது அவ்வஸ்துவே யாம் ; பூதாகாயம்
அல்லாததாயிருந்தும், ஞானகாயமான நிலைமையா
னது, அவ்வஸ்துவாகும் ; சித்தமும், புத்தியும், ம
னமுமாகிய விவைகள் நீங்கி மரங்களைப்போல பெ
ற்ற உள்ளுணர்வானது, அப்பிரம ஸ்வரூபத்தை
சச. இதுவுமது. ஒக்கும். ‡—பிரமாவோடும் விஷ்ணுவும், உருத்தி
ரனும், சதாசிவனும், தேவேந்திரனும், சூரியனு
மாகிய விவர்கள் உபசாந்தர்க ளாகின்றகாலத்தில் ;

¶ இ-ம் சர்வமும் பிரமமயமான வபரோக்ஷஞானத்ம சாட்சாத்காரமாய்
விளங்குமனுபவமே விதேகமு தியென்பதாம்.

† இ-ம் அத்தியர்திகப் பிரளயத்திற் சத்தாமாத்திரமாய்ப் பிரகாசிக்கின்ற
பிரமம் அகம்பாவமற்றவிடத்தி லகோசரமாய் விளங்குமென்பதாம்.

§ இ-ம் திரிஸ்யதிருஷ்டியின்றித் திருக்குதிருஷ்டியிற் சீவிக்கின்ற சீவனும்,
விடயானுபவமின்றி யாத்மானுபவமா யனுபவிக்குமனமும், திரிபுடிக்குச்சாக்ஷி
யானவறிவும், ஸ்வானுபவத்தினாற் கன்மங்களைச்செய்துஞ் செய்யாமலிருக்கின்
றநிச்சயமும் பரமார்த்த ஸ்வரூபமேயென்பதாம்.

‡ இ-ம். அறிதுயிலும் திரிபுடியினுதாரமும் ஞானகாசமும் அந்தக்கரணஞா
னமின்றிசுழுத்தி ஞானமுள்ள தாவரவறிவும் பிரமஞானத்துக் குவமானமாகச்
சொன்னதாம்.

மேன்மையில்லாத உபாதிகளியாவையும் விடுபட்டுப் பிரயோசனமில்லாத உலகமென்கின்ற இச்சையை விட்டு ஞானமயமாகிய பிரமஸ்வரூபமானது, மேலான நிர்விகற்பஸ்வரூபமாய் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கின்ற சிவஸ்வரூபமாய் அத்துவிதமாயிருக்கும். ¶—

ஞானவிண்மகன் கதை

முற்றிற்று.

லீ லை க தை.

அவதாரிகை.

முற்கதையில், சுயஞ்சைதன்னியனான பரமாத்மாவே ஜீவேஸ்வர சகமாகத் தோற்றப்பட்டாலும், அவை அப்பிரமத்துக்குப் பின்னப்படாமையைக் காட்டி, அச்சைதன்னிய வல்லாசமாயுண்டான மனோமாயையின் பலவானதுர்க்கடகடனா சாமர்த்தியங்களைப் பிரகாசமாயறிவித்து, அம்மாயையை நிவிர்த்திப்பிக்கும் பொருட்டு லீலைகதையைச் சொல்லுகிறார்.

௧. லீலை பதுமன் குண நிரூபணம்

இவ்வருத்தத்தில் சந்தேகந்தீர்ந்து விஸ்ராந்தியடையும்பொருட்டு; ஒரு பழமையான கதையை இராமா? நீ கேட்பாய்? பூமியின்கண் சத்துவகுணமுதிர்ந்து விவேகம்பெற்றவன், விசாலமடைகின்ற புயத்தை யுடையவன், பதும நாமத்தை யுடைய வோராசனுளன்; அவ்வாசன் மனைவியானவள் அவர் மனதுக்கினிமையான குணத்தையுடைய லீலாநாமத்தை யுடையவளாம் —

௨. லீலை சுகிக்கு முபாயம் விசாரித்தல்.

அவ்வாசனைத்து சாயைப்போலவும், மனைதப்போலவும், பிரிவற்ற அத்துவிதலீலையானவள், கல்லுனைவன் சாமானமில்லாமல் நல்ல எவ்வளவுள்ளவராய் எப்போதுங்கூடிச்சுகிக்க என்னவுபாயமென்று பழமையானசதுர்வேதப் பிராமணர்களுக்குச் சொன்னாள்.

௩. லீலை சிந்தித்தல்.

அதற்கு, ‡—செபங்களும் தபசுகளும் முதலிய வனைத்தும் சித்தியைக்கொடுக்கும், உலகங்களில் மரித்தலை யாவருக்கும் நீக்கக்கூடாது என்றந்தணர்கள்சொல்ல, இந்த லீலைசிந்திப்பாள், நாதனாயகனிறத்தற்கு முன்பு நாமிறந்தால் நமக்கோர் வ

¶ இ-ம். ஜீவேஸ்வரசகமென்னும் வாசனைக்ஷயமே நிருவிகற்ப ஞானமான சிவஸ்வரூபமென்பதாம்.

‡ இ-ம். சத்தத்தைவிட்டு நீங்காதசுகத்தை விரும்பினதாம்.

ருத்தமுமின்றி, நிர்வாணசுகமானது கிடைக்கும்.—

௪. இதவுமது.

எனது நாயகன் முன்னேயிறந்தால், அச்சீவாத்மாவை, இம்மனையில் வசிக்கும்படிசெய்து, அச்சீவன் என்னைச் சந்தோஷித்துப்பார்க்க பூரணமந்தத்தை அடைந்திருப்பேன்; இந்நிலைவரும்பொருட்டு வேதார்த்தங்களைப்போதித்த சரஸ்வதியினது பாதங்களைத்துதித்து, தோத்திரஞ்செய்வேன் என்றுநினைத்து.

௫. சரஸ்வதியை மூர்த்தியாகக் கொண்டுபாசித்தல்.

† —தன்னரசனுக்குச் சொல்லாமல் நல்லமந்திரங்களிலும், நல்லசாஸ்திரங்களிலும், வல்லமையுடைய பெரியோர்கள் அனுக்கிரகஞ் செய்த மார்க்கத்தினின்று, தேவரையும், பிராமணரையும், ஆராதித்து, அசனத்தை திரிராத்திரி நீங்கிய நான்காந்தினத்தில் ஓர்போது கொஞ்சமாகப் புசித்து இனிதான நிஷ்டையினால் பத்துமாதஞ் சென்ற காலத்தில்.

௬. பிரசன்னமான வுபாசனாமூர்த்தியைத் துதிசெய்தல்

—ஆகாயத்தில் தோன்றிய பூர்ணசந்திரனைப்போல நிறத்தையுடைய சரஸ்வதியானவள், சந்தோஷித்துப் பிரத்யக்ஷமாய், லீலையே? நீ விரும்பிய காரியமென்னவென்றுகேட்க? நீண்ட சுகமாகிய அக்கினிக்கு நீங்காத சந்திரகிரணமே, மனோ துக்கமென்கின்ற இருட்டை நீக்குகின்ற சூரியப் பிரகாசமே, என்று பதத்தைத்துதித்து, —

௭. தேவியனுக்கிரகித்தல்.

என்கணவனிறக்கில் அத்தச்சீவன் இவ்வீட்டிலிருக்கவும், பிரத்யக்ஷமாகும்படி உன்னை நினைக்குஞ்சமயத்தில், என் முன்னே பிரத்தியக்ஷமாகவும் ஆகிய இரண்டு வரங்களையும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று லீலைகேட்க; நல்லசரஸ்வதியானவள் கிருபையுடனனுக்கிரகித்து சுகமாயெழுந்தருளினாள்.

௮. காலசக்கிரத்தினால் ஆயுளோய்தல்.

‡ —பக்ஷத்துடன் மாதமும் ருதுக்களுமாகிய வண்டில்களுங்கூடி, தினங்களாகிய மேற்பாட்டுகளுஞ் சேர்ந்தவருடமாகிய வொப்பற்ற வச்சிரங்களைப்போதாகிய அதனுடனும், ஆதிமுதலான விளைவுகளையுடைய காலசக்கரமானது வேகமாகச் செல்லவும்.

௯. சத்தன் பிரிந்த கிலேசத்தைத்தேவி மாற்றுதல்.

—ஆநந்தமானது எல்லை யறும்படி லீலையானவ ளிருந்தகாலத்தில், தனது நாயகன் சிறிதுதினத்தில் மரணமடைந்தான். ஒதிமத்துக் கொப்பான லீலையானவள், சோகாக்கினி யெரிகின்ற வெப்பம் பொறுக்க மாட்டாளென்று சீவன் பிரிவதற்குமுன்னமே பிரத்யக்ஷப்படாமல் ஆகாயத்தினின்றுக் கொண்டு சரஸ்வதியானவள் இத்த

---

† இ-ம். சத்தைவிட்டு நீங்காத சித்தே யாலந்தமாதலால், அஃதைப் பிரிவற்றிருக்கும் யுத்தியைக்கருதினதாம்.

‡ இ-ம். விரும்பினவண்ணமடையும் வரத்தைப்பெற்றதாம்,

௧௰. சத்தன்புரிந்தவிடத்தும் பிரியாதிருக்குமுத்தியுரைதல்.

லீலையின் மோகத்தைக் கெடுத்து. — மரணமடைந்தவரசனை புட்பங்களினால் மூடிவைப்பாய், பொருந்திய புட்பங்கள்வாடும்,சரீரங்கெடாது,சீவனீங்காமல் சொன்னமயமான அந்தப்புரத்தை அடைந்திருக்கும், இவ்வரசனதுபுயத்தை பொருந்தி சீக்கிரந் துக்கந்தீரக் கடவாயென்றருளி சரஸ்வதிமறைந்தனள். † —அசரீரியானசரஸ்வதியின் வசனப்படிக்கு அரசனைப் பூவினால் மறைத்துவைத்தாள் ; பிரியாத வுயிரையுடைய லீலையானவள், உள்ளத்தின்கட் சிந்திக்க, சீக்கிரத்தில் வந்தவளாகிய சரஸ்வதியைநோக்கி எனதுநாயகனை பிரிந்து வாழ்வதுகூடாது, அவர் சேர்ந்தவிடத்தில் சீக்கிரத்திற் சேர்ப்பாயென்று லீலைசொன்னாள். — மனகாயமும், பூதாகாயமும், களங்கமற்ற ஞானகாயமும், என்கின்ற மூன்றுகாயத்தில், முந்தினவிரண்டாகாயமு மில்லாமலிருக்கின்ற மகத்தானசிதாகாயமானது, காணப்பட்ட வொருவஸ்துவில் அடைதலைவிட்டு, மிகவுந்தெளிவாக பக்கத்திலிருக்கின்ற வொருவஸ்துவை யடைந்தால், அப்போது மத்தியகதமான சிதாகாயமாம். §— சங்கற்ப சமூகங்கள் ஒழிந்தால் சாந்தமாகவும், பரிசுத்தமாகவும்,சகங்களனைத்துமாகவும் விளங்குவதாகிய சிற்பிரகாசமுதயமாம். இவ்விடத்தில் எவ்வளவும் திரிஸ்யங்களில்லையென்று வெறும்பொய்யென்றறிந்தால், அச்சமயத்தில் அந்த ஞானத்தினால் அச்சிதா காயத்தை யடையலாம். ‡ —நமது கிருபையினால் அச்சிதாகாயத்தை யடையக் கடவாயென்று சரஸ்வதியனுக்கிர கித்துச்சொல்ல, பின்வந்த லீலையானவள் நிர்விகற்ப சமாதியையடைந்து, தங்களால் வசிக்குங் கூட்டைவிட்டு நீங்கிய பறவைகளைப்போல, அவாவுகின்ற மனமானது, களங்கமும் விருப்பமுமுள்ள சரீரத்தை அந்தக்ஷணத்தில் நீங்கினபின்பு, ¶—

௧௧. விசேடத்தோடுஞ் சேர்ந்திருக்க விரும்புதல்.

௧௨. விரும்பினதடையத்தேவி மத்தியகத ஞானத்தை யுபதேசித்தல்.

௧௩. மத்திய கத ஞானம் விளக்குமுத்தி யுரைத்தல்.

௧௪. நிஷ்டைகூடல்.

௧௫. சத்தன்பேத பாவனா ரூபத்தைத் தரிசித்தல்.

தான் ஞானகாயமத்தியில் ஒருபெரிதான பட்டணத்துக்கு விருப்பமுள்ள புருடனானவன், பதினாறுவயதுள்ள வீரமுள்ளவரசனாய் அரியணையின் மேல் நெருங்கியவரசர்களும், நான்குபடைகளும், மிருந்தவாசையையுடைய ஸ்திரீகளும்,புகழும்படி

† இ-ம். பிரிந்தவிடத்தும் பிரியாதிருக்கு நிலையைப்பெற்றதாம்.

§ இ-ம். சத்தனதுபேதஞானமறிவித்தற்கு அபேதஞானத்தைப்போதித்ததாம்.

‡ இ-ம். பேதபாவநீங்கிச் சர்வம்பிரமமயமாய் விளங்கும் ஸ்வயம்பிரகாசமாயின் சங்கற்பநிறைவேறு மென்பதாம். [விசேடஞானம் வெளிப்பட்டதாம்.

¶ இ-ம். தேவியனுக்கிரகத்தினை னிட்டைகூடி, சாமான்யஞானத்தினின்றும்

ரி சித்தமீ
ஷி யைச் சி

வீற்றிருக்கவும். —தனது பிராணநாயகனைப்பார்த்து அவனிருக்குஞ் சபையையடைந்தாள் ; மிகவுமதிசயித்தாள் ; சபையைச்சூழ்ந்திருக்கின்ற மேற்குவாயலிலரசர்களும், கீழ்வாயலில் முனீஸ்வரர்களும், வேதங்களில் வல்லமையையுடைய பிராமணர்களும், தென்வாயலில் ஸ்திரீகளும், உத்தரவாயலில் சதுராங்கசேனைகளும், ஏனையோரும், நல்ல பூமியும், மலைகளும், நகரங்களும், நாடுகளும், நதிச்சமூகமும், பலவஸ்துக்களுமாகிய விவைகளை யெப்பார்த்து, மின்னற்கொடிக் கொப்பாகிய லீலையானவள், திரும்பி தனதந்தப்புரத்திலுள்ள சரீரத்திற்புகுந்து, வெண்ணிறத்தையுடைய சரஸ்வதியை பிரியத்தோடும் சிந்தித்தாள். —ப்ரத்தியக்ஷமான

வன் மரித்
ருக்க மறு
ற தியாதெ

மேலானசிங்காசனத் தெழுந்தருளிய சரஸ்வதியை நமஸ்கரித்து, எனதுநாயகனுக்கு இறந்தபின், இந்திரிஸ்யமான சர்க்கத்தைக்காட்டிலும் முன்போலவே பந்தமுள்ள பிரமாத்மகமாகியும், அமூர்த்தமாகியுமிருக்கின்ற வேறான சர்க்கமானது உண்டான பிரகாரமிப்படிப் பட்டதென்றும், இச்சர்க்கத்தினுடைய சத்தியத்துவபிரமை நீங்கும்பொருட்டும் அருள்வாயென்று லீலைகேட்கவும், சரஸ்வதியுரைப்பாள். முன்னுயர்வான பிராமண சிருட்டியின் அரசப் பிராந்தியினளவே பதுமனென்னும் வடிவமான இந்தச்சிருட்டியானது வேறாகத்தோன்றினதாகும். ¶ —அவ்வண்ணமே உனது நாயகனுக்கு

முன்சிருட்
டி விக்கத்
கல்.

இரண்டாவதான விரோதசங்கம் உண்டாயிற்று, இதனது வரன்முறையைச் சொல்லத் தெரிந்துகொண்டுசங்கையுண்டானுங்கேளென்றுரைப்பாள். களங்கமற்ற நின்மலமான சிதாகாயத்தில்,ஓர்பக்கத்தில் மாயாமண்டபமானது ஒன்றுண்டாயிருக்கின்றது ; அதிற் சொல்லுதற்கரிய ஆகாய மென்கின்ற மயிலிறகின் றிரையினால் மூடியிருக்கும் மகமேருவாகிய கிளைகளையுடைய சொன்னஸ்தம்பத்தில் வசிக்கின்ற இந்திரன்முதலிய வுலக பாலர்களுடைய இந்திராணிமுதலிய ஸ்திரீகளென்னும் சித்திரப்பதுமைகள் பதித்திருக்கும். —ஒருபக்கத்திற்பிருதிவியென்னும் புற்றுகளும், அவ்விடத்தில் வசிக்கின்ற சத்தகுலாசங்களென்கின்ற ஓடுகளுமுண்டாயிருக்கின்றன ; ஆசையுள்ள மரீசிமுதலான புதல்வர்

) துவமது.

டம். அபேதஞான மிருந்தவிடத்திருக்க பேதஞானமான முன்சிருட்டி
மனோமயக்கமே இச்சிருட்டியாகி, இச்சிருட்டியின் மனோமயக்கமேமேற்
டியானதை யறிவித்ததாம்.

சூழ்ந்திருக்கின்ற, வாய்த்திகழும் பரிசுத்தமுமுள்ள பிரமாவாகிய ஒருபுருடன் வசிக்கின்ற இடமாகும், பெருமை பொருந்திய ஆகாசமென்னும் வேணுவில் சஞ்சரிக்கின்ற அழகிய விமானத்தையுடைய தேவஸ்தானங்களினது கூட்டங்களைப்பொருந்தும், சமீபமாகிய ஆகாயத்தில் வசிக்கின்ற சித்தர்களுமாகிய மசகங்கள் சப்திக்கின்ற கும்மென்கின்ற சப்தம்

௨௦. இதுவுமது. பொருந்தியிருக்கும். —தேவர்களும் அசுரர்களும் என்கின்ற துஷ்டப்பிள்ளைகளினது செருக்குற்ற விளையாட்டி லுண்டாகிய சப்தமாறுத லிருக்கும், இப்படியான ஒப்பற்ற மகாமாயா மண்டபத்தில் அவ்விடத்தொரு பக்கத்தில் ஒருதிக்காகிய ஒருவிகமத்தியில் பெருமையிருந்த வசாரமென்கின்றதொரு பூமியில், மலைகளினாலும், நதிகளினாலும், கானங்களினாலும், மேலாகிய வளப்பங்களைநிறைந்து கிரிக்கிராமமென்னுமொரு பட்டணமுண்டு, அதனிடமாக வாழ்கின்றவன் அக்கினியோத்திரத்தை யுடையவன் பிராமணர்களில் மிகவு மேன்மையானவன். ¶ —

௨௧. முன்சிருட்டியினுமக்களும் அவர் குணங்களு முரைத்தல். அழகிலும், செல்வத்திலும், வயதிலும், அடக்கத்திலும், செய்கையிலும், கல்வியிலும், வசிட்டனுக்குச் சமானமானவன்; அவ்வசிட்டனென்று சொல்லும்படியான குணம்பொருந்திய அறிவையுடையவனல்லன்; நாமத்தினால் இப்பிராமணனையும் வசிட்டனென்று சொல்லலாம்; அவனதுபாதத்தைப் பணிகின்ற அருந்ததிக்குச் சமானமானவள்; அவ்வருந்ததியினது அறிவையுடையவளல்லபொருந்திய நாமத்தினால் உயர்ந்தவருந்ததியானவள், இவ்வசிட்டனுக்கு நாயகி பூலோகத்திலிவளும் தெய்வலோகத்திலவளுமாம்; இவர்களுக்குச் சமானம் வேறில்லை.

௨௨. அவர் பிராக்கிருபணம். — இவ்வருந்ததியுடன் என்றுசொல்லிய இவ்வசிட்டனானவர், அவ்வரையில் விளங்குகின்ற தாழ்வரையில் முன்னொருநாளிருக்க, வேட்டை நிமித்தம் அவ்விடத்தில் ஒரு கிரீடத்தையுடைய அரசன் படைகளுடன் முன்போக, அவ்வரசனைப் பார்த்து வசிட்டன் யோசிப்பான். அரசர்கள் செல்வம் மிகவுநன்மையாம், அழகானசேனையத்துக்கு இராசாவாய்ப்படைகள் சூழ்ந்துவர இரண்டுசாமரங்களைவீச எக்காலத்தில் சுகத்தையடைவோம். —

௨௩. இதுவுமது. வெற்றிக்கொடிகள் நெருங்கும்படி. வெண்கொற் றக்குடைநிழலில் வாழ்ந்து மகளிருடைய செஞ்சா

† இ-ம், முன்சிருட்டியை யறிவிக்குமிமித்தம், செல்வமார்க்கத்தி லுண்டான வதிசயங்களைச் சொல்லியதாம்.

ந்துவரிந்து அனங்களில் படிந்திருப்ப தெந்நாள், முடிவில்லாத இப்பிரயோசனத்தை எப்பொழுது அடைவோமென்று நினைந்துமனை ஆசனைக் கண்டவன்றவனாக உண்டாயிருக்கின்ற மனையுடையவன், இப்படி விடாத தனது மனத்தினிருந்தான். வாக்கினானது, தாமரையைச் சேர்ந்த பனியைப்போல அவனுக்குண்டாக, அவர் தேனியானவன், உன்னைப்போல பாதத்தையணைந்து எனை விரும்பிக்கேட்ட சிலைவீட்டினின்று நீங்காத மார்த்தையும் வெரடுக்கேன்; பிராமணருமியமைவிட்டனும் இராசபோக விச்சைபோமிப் பாவமனைந்து. ‡ —அப்படிப்பட்டவன், பிரகாசயத்தில்

உ௬. இச்சித்தவடிவமாதல். சிவாகாய வடிவமாயிருந்தான். குணகாய வடிவமான வரிட்டமே முன்றுணில் இராசவெல்லைத்தெ வெறுத்திய மகேசுவரப்பந்திறல் அரசனுப் பொருந்தியிருந்தான். தனக்கையுடைய பிராமணன்பி தோதானவைதக்கண்ட காயமியானவன், ஆம்பமடைந்து தன்மனதில் இரண்டெகுதாமகிழ்ந்து தனதுதாவனீரத்தை சமானமிய மாயகனுடன் பிரேதமாகத்தன்னி, மேலான ஆட்டம சரீரத்தோடு

உ௭. இதுவுமது. அந்தமாயகனுடன் போய்ச்சேர்ந்தான். —இத்தன் மையான பிராமணனுடைய புத்திரரும், வீடும், பூமியும், வனங்களும், மலைகளும், சகலமும், அவ்விடத்திலிருக்க, அவருக்கு பொருந்திய சிவன்மிதந்து சரீரமுமாகும், நெஞ்சமுமானவை சிலவும் அந்த வீட்டிலிருக்கும், முன்சனத்தில் உனக்கு நாமகுணிய அப்பிராமண னாசனுடி பொருந்தினன். அப்போது பரிசுத்தமாகிய அருந்ததிபென்று மாமுன்ன பிராமணஸ்திரீயாடு, அவள் மனைவியாய் யெடுத்து மடமையில்போன்ற பெண்ணானவள் நீதான். ¶ —புதுமையான சக்கரவாகப்புள் சேர்க்கை

உ௮. முன்கூறிய சந்தியிதுவன்ன வடிவமும் பிராக்கிய னல். போலவும், பூமியின்கண் இடமாகத்திற் சேரும் பாய்வதி பாமேஸ்வரனைப் போலவும், கன்றுவின் சந்திரியாகுசு இருவருமாய் இவ்விடத்தி லாசாட்சிசெய்கின்றீர்கள் அந்த அருந்ததியென்ப்பட்டோ; அமைமால், முன்றுமிவறுபோன்ற வெற்றியையுடையமேவாய்? முன்பிராமணனிருந்தபின் இராசனாய் கினைத்து பிராக்கியமைக்கப்பிரோரும், இப்படிகாகிருந்தும் பிராக்கியத்திரமோமாம், சவ்ராதிவிப்பாயக

‡ இ-ம். சீவனதியேதருமான மக்கிடத்திருக்கவும், மேருருமனமான மனது செல்லுறித்தான வெல்லையும் கடவேழ்நன வென்பதாம்.

¶ இ-ம். பிராமணனது சாமானிய ஞானமக்கிடத்திருக்க, விசேடஞானமே யாசிருட்டியை யடைந்ததென்பதாம்.

யம்போல வடிவமான விரோதகங்கள் உனக்கு ப்ரகாசமாகத்தோற்றியது, என்று லோகமாதாவாகிய சரஸ்வதிசொன்னாள். † —இவ்வசனத்தைக்கேட்டவளவில் லீலையுரைப்பாள், தேவீ ? அசத்தியமேசொன்னாய், இஃதெப்படி பொருந்தும், பிராமணன்மனையில் வசிக்கின்ற சிவனெங்கேயிருக்கின்றது ? இவ்விடத்து வேறாயிருந்த நாங்கள் சேர்ந்ததெங்கே ? முன்பொருந்திய அந்த வேறாயகத் திருக்கின்றவர்கள் அந்த பெருங்கிரியாமலைகளும், பத்துதிக்குகளும், முழுதும் கூடிவந்து இனிமையாக இவ்விடத்தில் நாங்களிருக்கின்ற வீட்டுக்குள் பொருந்தும்படி யெவ்விதமென்று கேட்டாள் ? —

௨௭. வசிட்டரது சிவஞனை நிற்க, இக்கணம் பத்மஞனென்ப தெங்ங னமெனின்.

௨௮. இதுவுமது. மதர்த்த இந்திரன்யானையானது ஒருகடுகினுடையவொருபக்கத்தில் கட்டப்படுமோ ? மகமேருவானதுவந்து ஒரு தாமரைவிதைக்குள் அமைந்திருந்து ஓர்வண்டின் குஞ்சால் மிகவுமெலியுமோ ? மசகமானது கோபித்து அடித்து போர்செய்ய சிங்கங்கள் பலவற்றுடன் பயந்தோடுறுவதற்கு நுழையுமோ ? சொல்லிய உனதுவசனம் இவ்வண்ணமே, ஒன்றுக்கும் பொருந்தாதென்று லீலை கூறவும், தேவிகூறுவாள். —

௨௯. சிருஷ்டிகளின் பிராந்தி நீங்க தத்துவமுபதேசித்தல். நான் பொய்சொல்லவில்லை ; இதனுண்மையைச் சொல்லக்கேட்பாய். என்போலொத்தவர்கள் சம்பாஷணையை சத்தியமாகக் கொள்ளுவதேயன்றி பேதிக்கார்கள், பிராமணனுடைய சிவனானது அவனகரத்திலுள்ள மனையில் அதிரிஸ்யமாய் வசிக்கின்றது இந்நாடுகளும், இப்பத்மவரசாங்கமும் ; ஞானமயமாகுமேயாம், இவையனைத்தையும், மைதீட்டிய கண்களையுடைய லீலாய் ? அச்சிதாகாயமே வடிவமாகிய அவ்வசிட்டனே சங்கோசித்து மனகாயத்திற் பார்ப்பான். ‡—

௩௦. இதுவுமது. பழமையாகிய அந்தவீனரை, இப்பொழுது உங்களுக்குத்தோற்றாமல் வேறுதித்தோன்றும், நானாவிதமானசாக்கிரஸ்பிரமணம் சொற்பனத்தில் வேற்றுற தன்மையைப்போல, அந்தவசிட்ட ஸ்பிரமணத்தின்றன்மைதோற்றாமல், இப்பதுமஸ்மரணத்தின்றன்மைதோற்றும், தானுதயத்திலும் பிரகாசிக்கின்றமுற்கூறியவியாபகமான ஞானகாயத்தில், ஒருகணித்தபக்கத்தில் மனோசங்கற்பத்திலும் கண்ணாடி.

† இ-ம். முன்வசிட்டபிராந்தியே பதுமனுகவும், அப்பதுமப்பிராந்தியே, விதூரதனுகவுமானதேயன்றி, எதார்த்தமாயிவர்களுக்கோர் வடிவமுமின்றென்பதாம்

‡ இ-ம். சர்வமுந் தானாய்விளங்குகின்ற சைதன்யமே, தனதபேத ஞானத்தினும் பேதஞானத்தைத் தானுகப்பார்க்குமென்பதாம்.

யில் அடுத்தசாயை ப்ரகாசிக்கின்றதுபோல, கடின மாயிருக்கின்ற இவ்வுலகமானது தோற்றும் † —

௬௪. இதுவுமது.
ஒளியுருவாய் பொருந்திய உலகங்களனைத்தும் தெளிந்த பரமாணுவாகிய ஞானஸ்வரூபத்தில் ப்ரகாசமாக உள்ளுக்குள்ளே நெருங்கியிருக்கும், ஆதலினால் முற்கூறிய பிராமணனிருந்த பூமி முதலானவைகளும் ஞானத்துள் தோற்றும், ப்ரத்தியக்ஷமாக இதைத் தெரிவாயென்று சரஸ்வதி சொல்ல, அப்பிராமணன் எட்டாந் தினத்தில் மரித்தானென்று சொன்னாய், எளிதாக வெங்களுக்கு அநேக வருடங்கள் சென்றன, என்னவென்று கேட்ட லீலைக்கு, திரும்பவும் தேவியுரைப்பாள். ¶ —

௬௫. எண்டின மநேக தினமான தென்னமெனின்.
முன்சொல்லிய சித்துவிலாசமாய் விளங்கிய தேசத்துக்கு விபுத்துவ மில்லாததுபோல காலத்துக்குமற்பமும் விபுத்துவமில்லை, மாயா விகற்பமில்லாத ஞானப்ரகாசமானது தோற்றுதல் மாத்திரமன்றி காலதேசத்தினளவு வேறில்லை, பொருந்திய மித்தியா மரணத்தினால் ஒருகண மெய்மறந்திட்ட ஜீவன் பிரிந்துபோனது, முன் சரீரபாவனையை மறந்து இச்சநநத்திற் பொருந்திய பாவனையை யடையும். —

௬௬. இதுவுமது.
இவ்விடத்தில் இது நம்மைத் தாங்குகின்றது, இதனால் மிகவுஞ் சுமக்கப் படுகின்றவனும், ஈதுபருக்கின்ற நமதுசரீரம், இவன் நமதுதந்தை, இறப்பது இத்தனைவருடத்தில், இது இங்குவிருத்தியாகின்ற நமதுபந்துக்கள், இது பிரியமாய்வசிக்கின்ற ஸ்தானமென்று பொய்யாகியமரணமூற்சையின் றன்மைதெளிந்தபின்பு ஜீவன்சிந்திப்பன். —

௬௭. இதுவுமது.
ஆகையினால் முற்சொன்னமறைபட்டு இப்பிறப்பு அறியப்பட்டதென்று சரஸ்வதிசொல்ல, ஞானமாகிய கண்ணை நீ யநுக்கிரகஞ்செய்யப் பூர்ணமாகத் தெளிந்தேன், இச்சை தீரும்படி இவ்வசிட்டாதிகள் வசிக்குமிடத்தைக் காண்பியென்று இந்த லீலை சொல்ல, வேதஸ்வரூபியாகிய சரஸ்வதி சொல்லுவாள், அதைக் காண்பதற்கு இவ்வினை வடிவமான

—௫. முற்பவத்
தூலசரீரந் தடையாகும். ✳ —இச்சரீரத்தை மற

† இ-ம். சத்தாமாத்திரமாக விளங்குஞ் சைதன்னியத்தின் ஏகதேசஸ் புரணமே உலகமுதலிய யாவுமென்பதாம்.

¶ இ-ம். சைதன்னிய வியாபகத்திற் ப்ரதிபாமாத்திரமாய்த் தோற்றுகின்ற சகலசகத்தும், அதன் சுப்ரகாசமேயென்பதாம்.

✳ இ-ம். ஜீவனானவன் விஸ்வநுய்நனவினின்று சித்திரையக்கத்தாற்கனவிற் சென்றஃதைமறந் திஃதிலோர்கடிகையி லநேகங்கடிகையின்சங்கதிகளைச் சத்தியமாகக் காண்பதுபோலச் சித்தானதுபிராணனாய் முற்பவத்தினின்றுமரணமயக்கத்தாற் பிற்பவத்திற்சென் றஃதைமறந்திஃதில் விழித்துச்சிந்தித்தசங்கற்பஞ்சத்தியமாகவேண்டின வெருதினமாகத்தோற்றினதேயன்றி வேறின்றென்ப

[தாம்

தை யறியவேண்டு மென்றதற் குபதேசித்தல்.

ந்து வேருக அறிவின்றி விளங்காநின்ற ஞானப்பிரகாசமாகியும் சத்தாகியு மிருக்கின்ற அவ்வானந்தபோதமே ஸ்வரூபமாய் மாயாமலத்தை நீக்குவையாயின் அவ்விடத்தைப் பார்க்கலாம், அங்ஙனுக்கென்றேருருவம் பிரமத்தையன்றி வேறில்லாத சகங்களாக, பொன் ஆபரணமாய் வந்த வகையைப்போல, உங்கள் மயக்கத்தினால் அறியப்படும். § —

கூசு. இதுவுமது.

உண்மை ஞானத்தைப் பயிற்சிசெய்கின்ற சுத்தவாசனையைத் தவிர உலகங்க ளாத்மஸ்வரூபமாகாது, மிருதுவாகச் செய்கின்ற ஜலவிருத்தியை நீக்கினாயில்லை, ஆகையால் உன்னா லடையப்படாது. பரிசுத்தமான பிரமத்தில் எம்போன்றவர்க ளிருப்பது உன்போன் றவர்களுக்கு மமேரு ரூபமாக வைத்திருக்கின்ற சூட்சுமசரீரம் மிருந்த பாவனையினால் வளர்ந்து தூலசரீரமாகும். ‡ —

கூஎ. இதுவுமது.

பனிக்கட்டியானது சூரியகிரணத்தினால் கரைந்து சலமாகின்ற முறைமைபோல, உனது மெய்ஞ்ஞானத்தைக் குறித்துப் பார்ப்பதினாலும் வாசனையை விடுதலினாலும் ஸ்தூலசரீரத்தை விட்டு சூக்குமசரீரம் நிலையாகநிற்கும் இவன் முத்தியுமாம், பூர்ணஞானமே நிறையும், உனதிச்சரீரத்தை யகற்றிவிட்டு நிறுத்தி ஆதிசூக்கும சரீரத்தால் முந்தினதிருஷ்டியைப் பார்ப்பாய். † —

கூஅ. அந்தநிலையுமப்பியாச விலக்கணமியாதெனின்.

இப்படியென் றனுக்கிரகித்த சரஸ்வதியை அந்தப்பிரகாரம்வா முயற்சிக்குந் தன்மை யென்னவென்று இந்த லீலையானவள் கேட்க, சிரவணமும்மனனமும்நிதித்தியாசனமும், அப்பழமையான வஸ்துவினிடமான நிஷ்டையாய் நிலையான வானந்தமும், சகலத்தியாகமும், நிராசையும் பூரணமாய் நீண்ட வுலகமென்பது எப்பொழுதும் ஒன்றுமில்லையென்று வேதநூல் மார்க்கத்தினால் யுத்தியாய் அப்பியாசி யானவர்கள் அனுபவமா யறிவார்கள். * —

கூகூ. இதுவுமது.

யானிதுவென்னுமந்சயங்கள் இந்தச்சிருட்டியாதியில் உண்டாகாதபடியினால் எப்பொழுது மில்லவே யில்லையென்று,தெ

---

§ இ-ம். திரிஸ்யநீக்கிச்சிருக்குவடிவமாயிற் றெரிசிக்கலாமென்பதாம்.

‡ இ-ம். சாதனமன்றிச் சாத்தியங் கூடாதென்பதாம்.

† இ-ம், ஞானதிருஷ்டியினு லாதிபௌதிக சரீரங்களைத் தாதிவாஹிகசரீரமாகிச் சங்கற்பித்ததைப் பார்க்கவேண்டு மென்பதாம்.

* இ-ம். இந்திரியமுதலிய காணங்களியாவையு மசமுசப்படுத்தி யதனுக் சுகசென்னிய மானவிடத்திற்றிரிஸ்யமில்லையென் றனுஷ்டிப்பதே சாதகமென்பதாம்.

ளிந்த ஞானமும், திரிஸ்யதிருஷ்டி நீங்கி ப்ரகாசிக்கின்ற ஞானத்தினால் ராகத்துவேடாதிகளென்னுஞ் சத்துருக்கள் பிரிந்திட, இன்பமும் வந்தடையுமென்று, இவை அப்பியாசமாகவே தொடர்வார்கள், பிரமாப்பியாசிகள். § —

௬0. சாதன முதிர்ந்து சாத்தியமாதல்.

திரிஸ்ய ஸ்மரணமில்லாத அறிவே ஞானமும் மேலடைகின்ற ஆத்மலாபமுமாய்சிந்தித்து, அப்பிரம நிச்சயத்தை அப்பியாசஞ் செய்வதே முத்தியென்று அதிலப்பியாசிப்பதே பரிசுத்தமான ஞானோதயமென்று, அவ்விராத்திரியில் பேசின சரஸ்வதியும் லீலையும் சரீரவாதனையின்றி ஸ்வரூபசமாதியிற் பொருந்தி நிச்சலமா யிருந்தார்கள். † —

௬௧. தனதுவியாபகத்தி லுண்டாயிருக்கின்றபிரமசிருஷ்டியை யாதிவாகிக சரீரத்தாற் காணச் செல்லுதல்.

பத்தங்குலப் பிரமாணமென்னும்படி ஞானாகாரமான லீலையோடும் முன்புள்ள ஞானசரீரத்தால் ப்ரகாசித்த சரஸ்வதியும், உயர்வாகிய ஆகாயத்தில் எழும்பினார்கள், வெகுதூரம் நீங்கும்படி சென்று பொங்காநின்ற பிரளய மகா சமுத்திரத்துக்கு ஒப்பாகிய ஆகாயத்திற் சென்று அடியில்வரும் அவைகளைப்பார்த்தார்கள். —

௬௨. இதுவுமது.

அளவில்லாத தாயும் தெளிந்திருக்கின்ற மிருதுவாயும் தென்றற் காற்றினது சுகம் தடையில்லாததாயு மிருக்கின்ற சிதாகாயத்தில், மனோவேகத்திலும் வேகமாய்ச் சஞ்சரிக்கின்ற சித்தர்கணங்களிறைந்து எட்டுத்திசைகளிலும் இராட்சதர்களும், பிசாசர்களும், கணக்கற்றிருக்கின்ற ஞாளியைப்போலவும், காக்கையைப்போலவும், ஒட்டையைப் போலவும், கழுதையைப் போலவு மிருக்கின்ற வதனங்களையுடைய யோகினிகள் வரிசையாக ஆகாயத்தில் சுழன்று —

௬௩. இதுவுமது.

களிப்புள்ள நிருத்தத்தையுடைய இடாகினிக் கூட்டங்களும், வேகமுள்ள வாயுவினும் சஞ்சரிக்கின்ற வெண்மையான கங்காநதியும், சுவரில்லாத வீட்டிற்பொருந்தி வீணாகானத்தில்தெளிகின்றநாரதர், தும்புரு, கானங்களும், எழுதப்பட்ட சித்திரத்தைப்போல, சத்த மில்லாமல் வருஷிக்கின்ற கற்பாந்த மேகங்களும் மகளிர் கூட்டங்களும் உண்டாகி. —

௬௪. இதுவுமது.

அளவில்லாத பதின்கடிகை தூரங்களில் எவர்க்கு மடையக் கூடாத தாகியும் கல்லுக்கொப்பாய் மிகவும் கெட்டி

§ இ-ம். சகலமுமத்தியந்தா பாவமென் றெதிரற்றறிந்த ஞானத்தினால் ஆனந்தத்தையடைய வனுஷ்டிப்பதே சாதகமென்பதாம்.

† இ-ம். முன்போதித்திருந்த பரோக்ஷஞானம் அபரோக்ஷமாம்பொருட்டு சாதகரிலக்கணம் போதிக்கும்போதே சாதன முதிர்ந்து சாத்தியமா யாதிபௌதிகங்களைத் தாதிவாதிகஸ்வரூபமா யபேதமானதென்பதாம்.

யாகத் திரண்டிருக்கின்ற கருமையான விருளை யுடையதாயும், சீக்கிரமாகச் செல்கின்ற இரதத்தை யுடைய சூரியனும், அக்கினியும், சமானமாகிய பிரகாசத்தை யுடையதாயும், சொல்லப்பட்ட இக்கூட்டங்களியாவையுமுடைய பலபலவிடங்களிலும் தொடர்ந்து. —கொசுகின் பெருங்கூட்டங்கள் அத்திக்கனியிடத்தில் சப்திப்பதுபோல, எவ்விடங்களிலும் பிரமனுண்டாக்கிய ஜீவர்களியாவும் சேர்ந்திருக்கும் குணமுள்ள திரிபுவனங்களையுடைய ஆகாயத்தைத் தாண்டினார், இருப்பவும் ஒருபூமியைச்சேரச் சிந்தித்து பிரமாண்டத்தைக் கடந்து வசிட்டனிருந்த லோகத்தில் கிரிக்கி ராமமென்னும் பட்டணத்தை யடைந்தார்கள். ‡ —அங்கே ஏவற்காரரும், உறவினரும், புத்திரரும், அன்பாக வாழுகின்ற அப்பிராமணனது வீட்டிலுறைபவர்கள் அவர்களுக்கு அதிரிஸ்யமாயிருக்கும் சமயத்தில், சத்திய சங்கற்பத்தை அடைந்த லீலையானவள் வீட்டின்கணுள்ளவர் எங்களைப்பார்க்கக் கடவார்களென்று சங்கற்பஞ் செய்தாள். — இலட்சுமியையும் பார்வதியையும் ஒத்த லீலாதேவிகளை வனதேவதைகளைப்போல விருக்கின்றதென்று தாங்கள் தரிசித்துப் பூசித்தார்கள், அதில் மூத்தகுமாரன் பார்த்து எங்கள் மாதாபிதாக்கண் மரிக்க, நாங்களடைந்திருக்கின்ற துக்கத்தை நீக்குகிறீர், மேலானவர்களை தரிசித்தவர்களுக்குக் கிடையாததுமென்றுண்டா, பேரறிவையுடையவர்களே யென்று சொல்ல, பிரகாசிக்கின்ற லீலையானவள் சிரசைத் தொட்டு அவர்கள் துக்கத்தை நீக்கி —சரஸ்வதியும் லீலையென்னும் இருவரும் அவ்விடத்தில் அந்தர்த்தானமானார்கள். சகத்சத்தை இவ்வண்ணமாய் நினைத்ததை பார்த்துமுடித்தோம், மேலுஞ்செய்ய வேண்டுவதென்னவென்று சரஸ்வதிகேட்க, அவளடைந்திருக்கின்ற சமாதியினிடமாய்ப் பார்த்த ராசசபையிலுள்ளவர்கள் என்னைக் காணுவதையும், இவ்வழகியவீட்டிலுள்ளவர்கள் பார்த்ததுபோலும், என்னவென்று தெய்வத்தாய்போன்ற லீலையானவள் சொல்லென்று கேட்டாள். —ஞானாப்பியாசத்தினாலல்லாமல் அவிதமத்துவிதமாகாது, நானென்னும் பாவனையைப் பிரியாமல் ஞானத்தையடைந்தபடி.

சரு. இதுவுமது.

சசு. புத்திரனைக் காண்டல்.

சஎ. துக்க நிவிர்த்திசெய்தல்.

சஅ. லீலையை முற்றுவிஞுவுதல்.

சகூ. தேவி லீலை

‡ இ-ம். ஆத்மவியாபகத்திலுண்டான ஸ்புரண விசித்திரங்களை யது தானே பார்த்ததிசயித்ததாம்.

யினையு நீக்கப்போதித்தல். யால் மெய்ச்சங்கற்பமானது உனக்குண்டாக வில்லை, ஆதலால் அச்சபையி லுள்ளவர்க ளுன்னைப் பாரார், இப்பொழுது நானென்னும் பாவனை யிறந்தஸ்வரூப ஞானத்தை உணர்தலினுல் பேதமாக நீ சங்கற்பிக்க இப்புத்திரர் முதலாயினோர் பார்த்தார்களென்று சரஸ்வதிசொல்லியவுடன், ¶—சரஸ்

௫௰. முற்பவக்கலைக் காண்டல். வதியே? உனது கிருபையினுல் வெட்ட வெளியாக எனது பூர்வசென்மம் யாவையுமறிந்தேன், திரிகுணங்களினு லுண்டான பாவமு நீக்கினேன், பிரமத்தினின்றும் வேறுருவமாய் நீங்கி யெண்ணூறு சரீரம் நாநா விதங்களா யெடுத்தேன், முன்னமே, மாயாவிகற்பத்தினு லுண்டாகிய வுலகங்களாகிய தாமரைபுட்பத்தில் வசிக்கின்ற வண்டு களைப்போல, சகலவுலகங்களிலுஞ் சஞ்சரித்த வித்தியாதரஸ்திரீயாகவும் வாசனையின் றீமையால் நரவடிவாகவுமானேன் —மற்றொரு மாயாவிகற்பமான லோ

௫௧. இதுவுமது. கத்தில், இந்திராணியாகவும், பத்திரவஸ்திரத்தைத்தரிக்கின்ற வேடஸ்திரீயாகவும், வலையை அறுத்தபறவையாகவும், சவுராஷ்டர் தேசத் தரசனுகவும், கொசுசாகவும்பிறந்து, இவைமுதலாகிய பலசநங்களி லுழன்றுவாடி, சமுத்திரத்தி னலையிலலைகின்ற துரும்பைப்போல மாயாவசத்தில் ஊர்த்தகதியும் அதோகதியுமாகக் கலங்கினவென்னை, முத்திதீரத்தி லேற்றுவித்தாயென்று இந்தலீலைதோத்திரஞ் செய்தபின் இரண்டுபேர்களும் ஆகாயத்தி

௫௨. பின்சிருஷ்டியைக் கண்டதிசயித்தல். லெழும்பினுர்கள். †—யோகமார்க்கத்தினுல் ஆகாயத்திற்சென்று பதுமவரசனிடத்திலடைந்து அவனது சரீரத்தைப்பார்த்து பின்பு அப்புறஞ்சென்று இப்பதுமனிரண்டாஞ் சனனமாகிய விதூரதவரசனை அடையவும், அத்தருணம், அவ்வரசன் மேலெதிர்ந்துவந்து கடுமையான போரையுடையவனுய் ஒப்பற்றவேலையுடைய சிந்துவரசன்யுத்தத்தைத் தொடங்கி மிகவுமடிக்க, ஆகாயத்திலிருந்து மயிலையொத்த சரஸ்வதி லீலையானவர்கள் பார்த்தார்கள், இரண்டுசேனையும் யுத்தம்பண்ணின. —அளவற்ற

௫௩. இதுவுமது. யிருவர்சேனைகளும் நமனடுங்கும்படியாக கொடியசண்டை பொருதுங்காலத்தில், எட்டிலொரு பங்

¶ இ-ம். அகம்பாவத்தோடும் அஃதின்மையோடும் பெற்ற ஞானத்தின் பலாபலனை யுரைத்ததாம்.

† இ-ம். பிரமத்தினின்று நீங்கினமுதலிதுபரியந்தம் வியாபித்திருந்த பூரணஞான முதயமானபடியினுல் அதில் குமிளித்தவடிவங்களியாவுந் தனதுவடிவமாகத்தெரிந்ததாம்.

காரும்படி எதிரியினால் இவன்படை மரித்தமாத்தி ரத்தில், மரித்தவர்களது பிரேதமலையினால், மறைந்தானோ போரைக்கண்டு பயந்தானோ வென்று சொல்லத்தக்கதாய்க் குற்றமற்ற சூரியன்போக அந்தகாரம் நிறைந்தது, இரண்டு சேனையும் பிரிந்து போயின.—

௬௪. இதுவுமது.

சத்துருவாகிய அரசனது சேனை நீங்க தனது சிலசேனையுடன் மனமுறிந்து திரும்பி, தன்னையுடைய விரோதவரசன் மேன்மாடியில் நித்திரைசெய்யவும், இந்தச் சரஸ்வதியும் லீலையும் அவ்விடத்திலிருக்க, பிரகாசம்பொருந்திய சந்திரனது அமுதகிரணத்தை யொக்க இவர்கள் பேசியதினால், சிரமந்தீர்ந்து கண்களென்னும் தாமரைமொக்குமலர விழித்தெழுந்து, தோத்திரஞ் சொல்லி வணங்கி முன்னேயிருந்த சரஸ்வதி லீலையை பூசித்தான்.—

௬௫. மாயாவிசித்திரத்தைக் காண்பிக்கப் பின் சிருஷ்டியின் வமிசாவளியை யறிவித்தல்.

இவ்வரசனுடைய நல்ல வமிசபரம்பரையை லீலைக்குச் சொல்லும்படி நினைத்து, சரஸ்வதியானவள் அவனது சமீபத்தில் நித்திரைசெய்யு மந்திரியானவன் விழிக்கக்கடவதென்று சங்கற்பிக்கவும், அம்மந்திரியானவ னப்பொழுதே அன்னைக் கவர்ந்திருக்கு நித்திரையைவிட்டு எழுந்திருந்து வணங்க, பார்த்துசரஸ்வதியானவள் அவனிடத்திற் றிருவை மிகுந்து இப்பூமிக்கரசராகிய இவன் குலத்தின் பூர்வசரித்திரத்தைச் சொல்லென்று கேட்டாள், அதற்குமந்திரி இனைகளைச் சொல்லத்தொடங்கினான்.—

௬௬. இதுவுமது.

அரசரில் மதிக்கப்பட்ட வைவசுதமனுவின் வமிசத்தில் அரசனாகிய கும்பரதனென்பவன் இராசாதிராசனாகிய அவன் புத்திரனைப் பெற்றான், இவ்வரசன் அதிலாதனைப்பெற்றான், இவ்வரசன் பிறகத்ரதனைப்பெற்றான், இவ்வரசன் சிந்து ரதனையீன்றான், சொல்லியவவ்வரசனது புத்திரன் சைலரதனும், அவ்வரசனுக்கு காமரதனென ன்றினான்.—

௬௭. இதுவுமது.

இப்படிப் பட்டவனுடைய புத்திரன் மகாரதனும், இவனுடையபுத்திரன் விஷ்ணுரதனும், இவனுடையபுத்திரன் போர்வீரருக்கு மனோரதனும், இவ்விடத்தி லென்பெற்ற விரோதனைராசாதிராசனும், இவருக்கு தாயானவள் சமுத்திராபென்னும் பெயரையுடையவளாம், பத்துவயதில் இவருக்கரசாக்ஷியைக் கொடுத்து மனதடங்கிய பிதாவானவர் தபோவனத்திற்சென்றார். இவனீதிமார்க்கத்தால் பூமிபாலனம் பண்ணினான்.—

௬௮. விரோதமயக்கநீக்கி ஞானமுத

என்றுமந்திரி சொன்னமாத்திரத்தில், இராசாவை உனது

யமாம் பொருட்டு முற்பவம் அறிவித்தல்.

மூற்சனனத்தை ஞானக்கண்ணினால் இலேசாய்த் தெரிந்துக் கொள்ளக் கடவாயென்று அன்பினுடன் தனதஸ்தத்தினால் அவ்வரசனதுசிரசை சரஸ்வதியானவள் ஸ்பரிசித்து அனுக்கிரகித்தவுடன், தனதுபகையாகிய மனதிலிருக்கின்ற மாயாந்தகார நீங்கி, லீலையோடுங்கூடிச் சுகிக்கின்றபதுமவரசன் தனதுவடிவமாகப் பார்த்தான், ஆநந்தம்பொருந்த வியப்புற்றான், மகாமாயையானது இருந்தவிதமென்னவென்று அதிசயித்து,—† மாதாவாகிய இவர்களால் மாயையைத் தெரிந்தேனென்று சிந்தித்து

௮௯. ஒருகாலே முபது வருடமான மயக்கத்தை விசாரித்தல்.

அவர்கள்பாதத்தைச் சிரசின்மேற்றரித்து, போனசனனத்தின் சரீரநீங்கி நாளொன்றாகவும் இச்சரீரத்தில் வந்தபின்பு அதிகமான வெழுபதுவயது நடந்தபடியால் நடந்த சகலமுந்தெரிந்தேன், இதென்ன மாயாவிசித்திரமென்று அரசன் கேட்கவும், இருடையே வடிவமாயுள்ள சரஸ்வதி யனுக்கிரகஞ்

௯௰. மயக்கத்தைப் போதித்தல்.

செய்வாள். —மரணமென்கின்ற பெரியமயக்கம் வந்தபின்பு, அக்காலத்தில் அவ்விடத்திலேயே சனனமென்கின்ற மகாமோகமானது மிகவுமுண்டாயிருக்கும், ஆகாயத்தைப்போல நிறைந்து பரிசுத்தமான சிறப்பையுடைய நின்மனதில், செய்கன்மமாகிய பிராந்தியே காண்கின்றதான எழுபது வருடமானது உனக்கு நீங்கினதென்பதை நீ யறிந்து பார்ப்பாய். ‡ —ஒருமுகூர்த்தகாலத்தில் அநேககால

௯௧. இதுவுமது.

மவருகின்ற சொப்பனத்தை யொத்திருக்கும். நீங்கிய ஆயுளானது, மாயையின் விகற்பத்தினால் சாக்கிரத்தில் நாநாவிதமாக விரிந்துதோற்றும், பிறந்து சனனமரணங்கள் எப்போதுமுனக்கில்லை, உண்மை ஞானமே உனக்கு ஸ்வரூபம், அந்தமில்லாத பரமபதத்தி லிருக்கின்றாய், உலகங்களியாவையும் பார்த்தும் ஒன்றையும்பாராய். § —சமஸ்தமுமா

௯௨. இதுவுமது.

யிருக்கின்ற சுபாவத்தினால் உனதறிவினால் உனதாத்மஸ்வரூபத்திலிருந்து ப்ரகாசிக்கின்றாய், பேசத்தெரியாத குழந்தைகளைத் தொட்டிலி லிருக்கும் பருவத்தில் பிடித்த பிசாசானது மயானத்தி னீங்குகின்ற பழமையைப்போல, தீமையையுடைய

† இ-ம். தேவியனுக்கிரகத்தினால் ஞானமுதயமாய் மாயாவிசித்திரத்தைப் பார்த்ததிசயித்ததாம்.

‡ இ-ம். இறந்து பிறக்கு மயக்கத்தினுண்டான மனோவிகற்பத்தாற் காலவளவுதோற்றினதேயன்றி எதார்த்தமாயின் றென்பதாம்.

§ இ-ம். ஆயுளானது மாயாவிசித்திரத்திற் றோற்றினதேயன்றி ஆத்மஸ்வரூபமான சித்திலின்றென்பதாம்.

மூடர்களுக்கு சகமானது சத்தியமாகத் தோற்றும் சுவணமென் றறியாதவர்கள் பொன்னல்ல அப்பொன்னை ஆபரணமென்று சொல்லுவார்கள், அவை போல ஸ்வரூப திருஷ்டி யில்லாதவர்கள் சகமென்
௬௬. இதுவுமது. பார்கள். ‡ —யானெனதென்று மகங்கார முதலாக பாரா நின்ற உலகங்களியாவும் நீண்ட சொப்பனமாய் உலகத்தினிடத்தில் தோன்றா நின்ற இப்படிப்பட்ட வஸ்துக்களும் சொப்பனத்திற் காணா நின்ற வஸ்துக்களாமென்று உணர்வாய். அப்படிப் பட்ட வஸ்துக்களுங்காணுத ஞானமே ஸ்வரூபமா யெவற்றிலுங்கூடி தொழிலில்லாத நிறைவாய் மகத்தாய் பரிசுத்தமாய் பரமாகாயமேயிருக்கும். †—
௬௭. இதுவுமது. எல்லாமாகியும் எல்லா முடையதாகியும் சத்திகளெல்லா மிருக்கின்ற ஸ்வரூபமே பழுதுபடாமல் காலகன்ம பரிபாகத்தினால் எந்தவிடத்தி லெப்படி தோன்றுமோ அங்கவ்வண்ணமே தோற்றும். குற்றமற்ற உண்மைஞான நிலையை லீலையிடத்தும் நாமுபதேசிக்க நீயடைந்தாய், கொடாத தத்துவத்துடன் தெளிந்தாய், நாங்களே குருவென்று சரஸ்
௬௮. மும்பவம் அடைதற்கு வினவுதலையும் அதற்குத் தரத்தையுங் கூறல். வதிசொல்லவும், § —இவ்வுபதேசத்தைப் போதிக்க சிரவணஞ்செய்து விரோதன், என்னை யாசையாயடைந்தவர்களும் வேண்டியதைப் பெறுவார்கள், புதுமையான சிந்தாமணியையொத்த வுங்களை வணங்கி தோத்திரஞ் செய்தவனுகிய நான் அடைய வேண்டிய தடைதல் ஆச்சரியமாமா, முற்பழமைசரீரத்தை யானடைவ தென்றென்றுகேட்க, நீ இந்தயுத்தத்தின் மரிப்பாய், மரித்தால் அச்சரீரத்தை யடைவாயென்று சரஸ்வதி யநுக்கிரகித்த பின், மேல்வீட்டி லொருவன்வந்து சொல்லத்தொடங்கி
௬௯. முற்பவம் அடைதற் கேதுவான சரித்திர முரைத்தல். னன். —அம்புமழைபொழிந்து சொரிந்துவருகின்ற நிறைந்த சேனாசமுத்திரமானது எவ்விடத்து நிறைந்திருக்க, வெம்மையாகிய அக்கினிச் சுவாலையினால் அப்பட்டணம் சாம்பலாகவேகின்றது, இவ்விசேயத்தைக் காணவில்லையோ பலம்பொருந்திய அரசனே என்று சொல்லுஞ் சமையத்தில், பகைவர் படையானது மூன்றுலகங்களு நடுங்கும்படி வெற்றிக்கின்ற சப்தத்தை காது செவிடுபட வரசன கேட்

‡ இ-ம். திருக்கை தரிசித்தவர்கள் திரிஸ்யபேத மறியாரலரென்பதாம்.
† இ-ம். சகத்தென்னுந் தீர்க்கசொற்பனத்தில் வஸ்துக்களென்னும் பேதந் தோற்றுவதேயன்றிச் சுயஞ்சைதன்னியத்தி லின்றென்பதாம்.
§ இ-ம். சைதன்னியஸ்புரண மெக்காலத்தெப்படித் தோற்றுவதோ வப்படிச் சகலமுந் தோற்றுவதேயன்றி வெடித்து குறிதென்னு மாயுளின் பேதமின்றென்பதாம்.

௬௭. இதுவுமது. டான்.—சத்துருக்களின் படையினது சப்தமும், அலைவுற்றலாகின்ற பட்டணத்தி லுள்ளவர்களின் சப்தமும், இடியைப்போல எதிர்த்தெழ வடவாக்கினியைப்போல சப்திக்கப்பட்ட அக்கினியினது புகையெங்கு மூடிக்கொள்ள, நேத்திரமுஞ் சுரோத்திரமும் அழிந்தன, ப்ரகாசிக்கின்ற பட்டணமழிந்தது, இக்கேடனைத்தையும் ப்ரத்யக்ஷமாக லீலையும், சரஸ்வதியும், அரசனும், அமைச்சனும், பிரத்தியட்சமாகப்பார்த்தார்கள்.

௬௮. இதுவுமது. —யுத்தத்தில் வீரமுள்ள அரசனுடைய மனைவியானவள் பிரமித்து நடுக்கமுற்றுவந்தாள், இவளுடன் வாராநின்ற தோழியானவள், அரசனே? அரண்மனையிலுள்ள மாதர்களனைவரையும், மிகுந்த தனங்களையும், சத்துருக்கள் கொள்ளையிட்டார்களென்று சொல்ல, அதைக்கேட்ட விடூரதவரசன் என்பக்கத்திலுள்ள தேவியானவள் உங்களடைக்கல மென்றுசொல்லி யுத்தத்துக்குப்போயினன்.

௬௯. லீலைவடிவமாகவேவந்த புதிய லீலையின் காரணம் வினவுதல். —கண்ணாடியி லெதிரிட்டதனது சாயையைப்போல வந்தவிடூரதன் மனைவியாகிய லீலையை, பதுமன் மனைவியான இந்த லீலையானவள் ஆச்சரியமடைந்து அருமையான சரஸ்வதியைப்பார்த்து நூதனமாக நானே யிவ்விடத்தில் வந்திருக்கின்ற வுண்மை யென்னவென்று கேட்டவுடன், சந்திர நிறத்தையுடைய சரஸ்வதி யானவளம்மயக்கத்தை நீக்கிச் சொல்லத் தொடங்கினள்.

௭௦. தேகாந்தஸ்புரணமே இப்புதியலீலை யாயிற் றெனல். —நினது புருடனாகிய பதுமன், உன்னிடத்தி லிருக்கின்ற வாஞ்சையினால் உன்னைப்பிரியாமற் சுகித்திருக்கு மரணசமயத்தில் நினைத்தான், அந்நினைவின் படியே அவ்விடத்தி லுன்னைப்பெற்றான், முன்பமிகுந்த மரணத்தில்யாவருக்கும் சிந்தித்து அடையும், தன்முன்னிருந்ததன்றி கண்ணாடியில் வேறு தோற்றுமோ.

௭௧. இதுவுமது. —மரணமும், சநநமும், மனோமயக்கமும், சாக்கிரமும், சொப்பனமும், சுழுத்தியுமாகிய இவைகளனைத்தும் குற்றம்பொருந்து மொன்றினிடத்தில் ஒன்றில்லாத படியினால், இல்லையென்பது உள்ளதென்பது களங்கமுற்ற பிரமையினளவே, அளவின்றி விருத்தியாகின்றது, குற்றமற்ற வனுபவங்க ளானவை இரண்டு விதமாம், அவைகளைக்கேட்பாய்.

௭௨. இதுவுமது. ‡—முன் னனுபவத்துக்குத் தகுந்தமுறையாக சிலவுண்டாயிருக்கும், பின்புள்ள நூதனமாகி பேதமாகச் சிலவுண்டா யிருக்கும், ஆகையால் உனதுவடிவம் உனது ஆசாரம் உனது

‡ இ-ம். மயக்கத்திலுண்டான சந்தாவத்தையு நிலையற்றன வென்பதாம்.

குலம் உனதுநடை என்னும்படி இந்த லீலையானவள் முன்றோற்றிய உனது நிழலைப்போல பேதமில்லாம லிருந்தாள். ¶—இராசாவினினைவினால் நின்னைப்போலவே இவளுமுண்டானாள், கலந்த இந்த யுத்தத்திலிறந்து விரேதனனவன் பதுமனென்கின்ற வரசனுவனென்று சொல்லிய சரஸ்வதியினது வாக்கியத்தைக்கேட்டு, நூதனலீலையானவள் வணங்கி யிதைச் சொல்லத்தொடங்கினாள் —முற்காலத்தில் நான் பூசித்த சரஸ்வதியைப் போலிருக்கின்ற நீயே, சத்துருவினால் எனது புருடனிறந்தால் எவ்விடத்தில் வசிப்பதோ அதைப்பார்த்துயானந்த விடத்தில் இச்சரீரத்துடன் போய் வாழும்படி தடையில்லாதவரத்தை அருளெனக்கேட்க, அப்படியே கொடுத்தேனென்னவும்,--இப்படிசொன்ன சரஸ்வதியைப்பார்த்து பழையலீலைசொல்லுவாள், எனதாதிபௌதிகசரீரத்துடன்செல்லாமல் இருந்தவேறான ஆதிவாதிகசரீரத்தைப்பொருந்தி, உயர்ந்த மறுலோகத்திலும் மேலானகிரிக்கிராமத்திலும் நானிங்கின விதமென்னவென்றுகேட்க,வேதமாதாசொல்லுவாள். §—ஒருவருக்கானாலும் யாதொன்றுங் கொடுப்பதில்லை நினைவின்படியே சீவர்களடையும், முன்னமேநினைத்து நீ ஞானத்தையாசித்தாய் விரும்பின ஞானதிருஷ்டியைக் கொடுத்தோம், மிகுந்தவாசையினால் இந்தப்படி இப்பெண்விரும்ப இவ்வரத்தைக்கொடுத்தோம், மனதில் கருதினது எம்முடைய கிருபாநோக்கினால் யாவர்க்குங் கிடைக்கும் என்றுசரஸ்வதிசொன்னாள் †—

பலமுள்ள விதேரவரசன், |கோபமிகுந்தவனாய் இரதத்திலேறி சேனாசமுத்திரத்துடன் யுத்தகளத்திற்சென்று இயமபுரிக்குச்செல்கின்ற மார்க்கமானது நெருங்கும்படி சத்துருக்களனைவரும் கெட அடித்தான். மரிப்பானென்று சிந்தித்து நாயகனிடத்திற் பிரியமாறாத லீலைகள் சரஸ்வதியினது பாதத்தைத் துதித்து, எமதுதாயே? வீரத்தன்மை மிகுந்திருந்தும் உனது கிருபையிருந்தும் எமதரசன் இப்போரின் மரிப்பரோ என்று கேட்க.—

கல்வியையுடைய விரேதனனவன், பரகதியையிச்சித்தால் இரண்டற்ற பரமபதத்தை கலந்

எ௩. புதியலீலை வினவுதல்.

எ௪. புதியலீலை விரும்பின வரத்தைத் தேவி யனுக்கிரகித்தல்.

எ௫. பழைய லீலை வினவுதல்.

எ௬. தேவியுத்தரம்.

எ௭. ஈஸ்வரானுக்கிரகம் பெற்ற மகான்மரிக்குங் காரணமியாதெனின்.

எ௮. தேவி யுத்தரம்.

¶ இ-ம். பாவனாப்ரகார முன்னனுபவத்திற் கொத்தவண்ணம் புதியலீலை தோற்றினாளென்பதாம்.

§ இ-ம். எனக்குச் செல்லக்கூடாதென்னுந் தூலசரீர மிவளுக் கெட்படிசெல்லு மென்பதாம்.

† இ-ம். ஆத்மாக்கள் பாவனைப்படி யீஸ்வரன் கூட்டிவிக்கின்றதென்பதாம்

கும்படியாயினன், எதிர்த்துவந்த இச்சிந்துவரசனென்பவன் தனது வல்லமையினலிவனைச் செயிக்க வேண்டுமென்று என்னைப்பூசித்ததினல் நியமித்தபடியே செயித்து அவனரசனுவனென்று சொல்லுஞ் சமயத்தில், உதயகாலமாகவும் அதிரும்படி யுத்தஞ்செய்து மேனெருங்கிய வெம்மையாகிய யுத்தகளத்தில் இரண்டிடத்திலுஞ் சேனையொன்றுமில்லாமலிறந்தது. ¶ — சிந்துவென்னும் பெயரையுடைய வரசனும் வீரமுள்ள விதூரதனுகிய சம்பத்துள்ள வரசனும் வில்லுகளையெடுத்து, சந்திரனுஞ் சூரியனும் திக்குகளும், ஆகாயமும், விடப்பட்ட அம்புகளினல் எவ்விடத்துநிறைந்தார்கள் ; முன் னெதிர்க்கின்ற வெப்பமான பாணங்களின் கூட்டங்களெரிந்து அக்கினிச்சுவாலை வியாபித்து யுகமுடிவைப்போ லிருக்குமளவில், தேரை நடத்தாநின்ற சாரதியும், இரதமும், தனுசும், அறுபட்டு மேன்மையான விதூரதவரசன் தனியனுக,—

எக. முற்பவம் அடைந்த சேதுவானை யுத்த முனைத்தல்

அ௦. புதிய லீலை புருடன் செல்லுமிடத்திற்செல்லுதல்

அர்த்தசந்திர பாணத்தினல் வச்சிரகவசஞ் சிதறிவிழும்படி பிளந்து, தேகத்தினவயவங்கள் யாவும் பிளக்கப்பட்டுச், சின்னபின்னமாய்ச்,சிதறு மளவில், வலிமைநீங்கி பூமியிற்சாய்ந்த விதூரதனைப் பார்த்து, வெண்டாமரையாளை நாதனலீலை நோக்கி என்னுயக ளுயிர்பிரியுஞ் சமயத்தை யடைந்தான், இவரைப்பொருந்த யான்செல்ல அருளென்று சொன்னமாத்திரத்தில், அந்தாயாகிய சரஸ்வதி யனுக்கிரகித்தாள், அந்தலீலையும் ஆகாயத்தில் லேசாகிப்போனள். —மேக மண்டலத்தைக் கடந்து,வாயுமண்டலத்தைக்கடந்து, வெம்மையான சூரிய மண்டலத்தைக் கடந்து, சமீபமான நக்ஷத்திர மண்டலத்தைக் கடந்து,மேற் சத்தியலோகமுதலிய தேவலோகங்களைக் கடந்து, பொருந்தாநின்ற இவ்வண்டத்தைத் திறந்துகொண்டு போய் சலமுதலான வேழாவரணத்தையும் ஊடுருவி, அளவும், அந்தமும், இல்லாததான தத்துவசிதாகாயத்தை சீக்கிரத்தி லடைந்தாள் — அளவில்லாகாலம் வேகமாகக் கருடனேடினும் கடக்கக் கூடாததாயும், அத்திவனம் காய்த்திருக்கின்றன போல், உதித்த அளவற்ற பிரமாண்டங்கள் ஒன்றையொன்று பார்க்கக் கூடாததாயு மிருக்கின்ற அவ்வண்டங்களுக்குள், பெரிதாக ஆவரணபேதமானது அருகில் வளைந்துகொண் டிருக்கின்ற ஓர

அக. இதுவுமது.

அஉ. இதுவுமது.

¶ இ-ம். அமரவர்பாவனையே யிதற்குக் காரணமென்பதாம்.

ண்டத்தினுள் ஞானகாயத்தைக் கடந்துபோய் பதுமவரசனது ப்ரேதமிருந்த அந்தப் புரத்தைச் சேர்ந்தாள். ‡ —

அங. விரேதன் முற்பவ மடையச் செல்லுதல்.

பெருங்கானஞ் செய்யும் வண்டுகள் நிறைந்த புட்பங்களினல் மறைக்கப்பட்ட ப்ரேத தேகமாகிய பூபாலனே? எம்முடைய கணவன், கிருபையுள்ள சரஸ்வதியினல் எப்படியோ முன்னமே யிவ்விடம் வந்தோமென்று நன்ருய்ச்சிந்தித்து, வெண்சாமரம் வீசிக்கொண்டு அவ்விடத்தில் தனது நாயகனுடைய வொருபக்கத்தில் அப்புதியலீலை யிருந்தபின்பு, நின்மலஞானியான மகாஞன விரேதவரசன் பொருந்திய சீவனனது ஆகாயத்திற் சென்றது.—

அச. முற்பவத்திற்புகுவிக்கு நிமித்தம் அபேதஞான த்தாற்பேதஞானத் தைத்தடுத்தல்.

ஞான திருஷ்டியை யுடைய லீலை, சரஸ்வதி யென்னுமிருவர் அவ்விரேத சீவனைப்பார்த்து ஆகாயத்திற்சென்று பின்வருகின்ற சிறந்தமாதர்களைத் தானறியாமல் நீங்கின சீவனனது நகரத்திற்சென்று பதும ப்ரேதமிருந்த வந்தப்புரத்தை அடைய, உடன்சென்ற இவ்விரண்டு ஸ்திரீகளும் புதிதானலீலையை விரும்பிப் பார்த்தார்கள். சுவணத்தினற்செய்த மண்டபத்தில் பொருந்திய சீவனைத்தடுத்து திரும்பவும் நிறுத்தினள் மேற் செல்லாமற் றடுத்தாள். † —

அரு. ஆதிபௌதிகசரீரமறைந்ததி யாதெனின்.

பழையலீலையானவள் தனதாதிபௌதிக சரீரத்தைக்காணமல் சரஸ்வதியை வணங்கிக் கேட்கவும், கற்பனைமிருந்த மனேநாசமாய் பூரணநிஷ்டையினல் மரித்து கீழேவிழுந்தசரீரத்தை இறந்ததாமென் றெண்ணிக்கொண்டு மந்திரிகள் கொடியவக்கினியினல் தகனம் பண்ணினர்கள். இவ்வாதிவாகிக சரீரத்துடன் நீ யிப் பூமியின் கண்ணிருந்தால் தேவலோகத்திலிருந்து முன்மரித்த லீலையானவள் சரீரத்துடன் வந்தாளென்று யாவரும் வியப்பார்கள். —

அசா. இதுவுமது.

ஆதிவாகிக சரீரத்துட னிருந்து வாசனையை நீக்கினபடியால் ஆதிபௌதிக சரீரத்தை நீ தள்ளத் தக்கதென்று இந்த லீலைக்குச்சொல்லி, அந்நூதன லீலையானவள் இப்போது நம்மைக் காணக் கடவளென்று சரஸ்வதியானவள் மனதிற் சங்கற்பித்த மாத்திரத்தில், தெரியாதிருந்தவர்கள் ப்ரத்தியக்ஷமான வளவில், தான்பெற்ற செல்வங்களைப்போல தெரிசித்த லீலையானவள் அத்தேவிகளின் பாதங்களை வணங்கித் தோத்திரஞ்செய்தாள். § —

அஎ. முற்பவம்

ஞானஸ்வரூபி

‡ இ-ம். தேவி யனுக்கிரகத்தினும் புதியலீலை பதுமனிடஞ் சேர்ந்ததாம்.

† இ-ம். விரேதஸ்புரண முன்னுள்ள பாவனஸ்தான மடைந்ததாம்.

§ இ-ம். பிரமாப்பியாச முதிர்ச்சியர் லாதிவாகிக சரீரம்பெற்றவர்களுக்காதிபௌதிக சரீரமறையு மென்பதாம்.

அடைந்து முத்த ஞதல். யாகியசரஸ்வதியும், புராதனலீலையும், நூதனலீலையும், கூடியிருந்தவிடத்தில், மிருதுவாகிய சாதிபுட்பமானது வாசனையைவிட்டதுபோல, சரஸ்வதியானவள் சீவன்றனையை விட்டுவிடவும், பிராணரூபமாய் மூக்கினுட்சென்று உலர்ந்தசரீர மியாவும் பரந்து வியாபிக்க, குளிர்ச்சியர்கி இரத்தமுண்டாய்கண்விழித்துமரித்தவரசன் எழுந்தான்.†—

௮௮. வினுவிடை. இவ்விடத்தி லிருக்கின்றவர்கள் யாரென்று பேரிடியின் சப்தத்துக்கொப்பாக இப்பதுமவரசன் கேட்கவும் அங்கிருந்த லீலையானவள் அரசனை நமஸ்கரித்து யான் இத்தேகத்துக்குத் தகுந்த மனைவி, உன்பக்கத்தில் வணங்கின இப்பெண்ணுரென்றுகேட்க, என்வடிவத்தைப்போல நீர் மனதி நினைத்ததினுல் நீ சுகிக்கவந்தவள், இவ்விடத்திருப்பவள் பரிசுத்தமாகிய சரஸ்வதியென்று பழைய லீலையானவள் தெரியச் சொன்னுள் —

௮௯. தேவியனுக்கிரகித்தெழுந்தருளுதல். இப்படியென்று லீலை சொன்ன மாத்திரத்தில், பாதத்தில் வணங்கிய இப்பதுமவரசனை சரஸ்வதியானவள், தனது ப்ரகாசிக்கின்ற வழகியவத்தத்தினுல் சிரசைத் தொட்டு நீ பாரியர்களோடும் சிறந்துவாழவும், நல்லகீர்த்தியும் மேலானசம்பத்து வளரவும், சகத்திலுள்ள சனங்கள் விளங்கவும், தீமைகளனைத்து நீங்கவும், எவ்விடத்தும் ப்ரகாசிக்கின்ற மகான்கள் நிறைந்திருக்கவும், நீ சுகித்திருப்பாயென் றருள்செய்து, நின்மலமான சரஸ்வதி தனதிடத்திற் கெழுந்தருளினுள். —

௯௦. விதேகமுத்தனுதல். சரஸ்வதிவாழ்க, நாமகள்வாழ்க, கலைமகள் வாழ்கடவதென்று இனிமையாகத் தோத்திரஞ்செய்து, சக்கரவர்த்தியான பதுமவரசனும் பாரியர்களும் எண்பதினுயிரவருடம் பூபாலனஞ் செய்தபின்பு, எழுவகையாகிய பெரிய சநங்களை யிப்போதே கெடுத்து சரஸ்வதியானவள் முன் னனுக்கிரகஞ்செய்த சீவன்முத்தி பதத்துடன் பூமியிலிருந்து பின்பு மகாகற்பமிறந்தாலும் அற்பமாகிலுங்கெடாத விதேகமுத்தியான மோக்ஷத்தை யடைந்தார்கள். ‡—

லீலைகதை-முற்றிற்று.

---

† இ-ம். சத்தாமாத்திரமாய் விளக்குஞ் சைதன்யத்தின் அபேதஞானத்திலுண்டான பேதஞானமானது, நூதனம் புராதனமென்னு மிரண்டிற் புராதனவடிவமானதாம்.

‡ இ-ம். சுத்தவாசனையோடுஞ் சீவன்முத்தர்களாயிருந்தாபி ன்வாச னுக்ஷயமான விதேகமுத்தியைப் பெற்றதாம்.

உ

கற்கடிகதை.

அவதாரிகை.

முன்பு சைதன்ய வுல்லாசமாய்த் தோற்றின ப்ரபஞ்சம் சைதன்ய திருஷ்டியால் நசிக்கும்பொருட்டு, அச்சகத்தை மாயாவிசித்திரமென்பதைப் பூரணமாயறிவித்து, அதற்கதிஷ்டானமான சைதன்ய திருஷ்டி ப்ரசன்ன மாம்பொருட்டு, அதன்விலாசத்தைக் கற்கடிகதையி னிரூபிக்கிறார்.

க. பிரமமே நித்தியமெனல்.

திரிஸ்யமென்கின்ற களங்கம் நீங்க சொல்லிய லீலையின் கதையினால், அற்பமாகிய சகமென்கின்ற தோற்றமுடைத்தாய் அபேதமாக மகத்தான சத்தும், சித்தும், ஆநந்தமுமே ஸ்வரூபமாய் ப்ரகாசிக்கின்ற பிரமஸ்வரூபமே யுள்ளதென்றறிந்து, கெடுதற்குரித்தாகிய உலகமென்கின்ற பெரும்பாரத்தை ஒருங்கே நீக்குவாய். ¶ —

உ. பிரமமொன்றே நித்திய மெனில், சீவன் யாதெனின்.

அப்பிரமத்துக் கொப்பாகியும், வசனிப்ப தற்கரிதாகியும், வியாபித்து, பரிபூரணமாய் கெம்பீரமா யிருக்கின்ற நின்மலமாகியும், சத்தை யுணர்ந்தவர்களும் அதின் குணத்தைச் சொல்லக் கூடாததாகியும், உபசாந்தமாகியும், ஸ்திரம்பொருந்தி, அலைவற்ற சமுத்திரத்தைப்போலவும், காற்றில்லாத தீபத்தைப்போலவும், ப்ரகாசிக்கின்ற முதன்மையான பிரமப்ரகாசமே, முடிவில்லாத மேலானசீவனும். † —

ஈ. பிரமப்ரகாசமே சீவனுயின், மனமென்பதுயாதெனின்-

அக்கினியை யுண்டாக்குகின்ற நீண்டவிறகினால் அற்பமானவக்கினி மிகுவதுபோல, சீவன் வெகுற் முகத்தில் விரிந்தவுணர்வினால் நானென்று பேதமாகவறிந்து சங்கற்பநினைவினால் அகங்காரத்தை யடையும், பூரணமான சீவனுக்கு இவ்வகம்பாவங் காரணமாக சிந்தனைசெய்கின்ற சித்தமும், மனமும், பிரகிருதியும், மாயையும் என்கின்ற நாமங்களைசத்துக்கள் பகுத்துச்சொல்லுவார்கள். ‡ —

ச. பிரமப்ரகாசபேதமே மனமாயில், சகத்தென்ப தியாதெனின்.

சங்கற்ப விகற்பங்களினால் விரிகின்றமனமானது, பிரமங்காரணமாய் இந்தப்ரகாரமுண்டாகும், மனதினால்தோன்றிப் பரவியவுலகங்களியாவும் மனோரூபமே வேறில்லை, மிகுதியினு ளவில்லாதவிருத்தி ஞானமாகிய பேரலையையுடைய ஞானசாகரம் ப்ரகாசிக்கும், காலங்களினால் நெடியசொற்பனத்துக் கொப்

¶ இ-ம். சகத்துப்ரமாணிகமல்ல, அதுவாகவிளங்கு ஞானனந்தமே ப்ரமாணிக மென்பதாம்.

† பிரமப்ரகாச மானவபேதஞானமே சீவனென்பதாம்.

‡ இ-ம். பிரமப்ரகாசத்தைப் பேதமாயறியுஞ் சங்கற்பமேமனமென்பதாம்.

௫. இப்படியாயில் பேத மாகாதோ வெனின்.

பாக மனதின்வயத்தினல் உலகமானது நிச்சயமாம். ‡ —கட்டையென்றறியாத வறிவினல் கள்ளன் றேற்றுவதுபோல, சர்வம் பிரமமெனத்தெளி வுண்டாகாமையின் சகமுண்டாகும், நாசமற்ற பிரமத்துக்கும், சீவனுக்கும், மறந்தவிடத்தும் பேதமில்லாததுபோல, நீங்காதசீவனுக்குஞ் சித்தத்துக்கும் பேதங்களில்லை, இதைப்போல நிலையாத மனதுக்கும், உலகங்களுக்கும், அற்பமும் பேதமுண்டாகாது.

௬. இதற்குத் திருஷ்டாந்த மியாதெனின்.

† —இதுகாரணமாகிய ஒருகதைமுன்னமே பலம்பொருந்திய இராட்சதியானவள் சொல்லிய முதிர்ந்தவினவினல் அறியவேண்டிய அருத்தங்களியாவையும் தெளியும்படி தெளியச்செய்வதாம், அதை நீ கேட்கக்கடவாய். இமயகிரிக்கு வடபக்கத்தில் இருப்பவள், கற்கடியென்னு நாமத்தையுடைய இராக்ஷதி பிறைபோன்ற தந்தங்களும் பெரியவாயும் மின்போன்ற விழியுமுடையவள்.—

௭. இதுவுமது.

கறுத்த பருப்பதத்தையே பெண்வடிவாக காசரணங்களாகச் செய்ததென்னும்படி சஞ்சரிப்பவள், இடியையொத்த புன்சிரிப்பை யுடையவள், ஓடாமற் சுழலு மச்சத்தைப்போல சுழலப்பட்ட கண்களையுடையவள், பெரிதான சரீரத்தைச் சுமக்கின்ற இரண்டு தொடையும் பேரீச்சமரமென்னும்படி பருமனுடையவள், வாராநின்ற முகிலைக் கிள்ளுகின்ற நகம் வயிரேரிய முறத்துக் கொப்பாக வுடையவள்.

௮. கற்கடி சிந்தித்தல்.

§ —விசாலமான பூமியின் கண்ணுள்ள பிராணிக ளனைத்தையும் பகலுமிரவுமாகப் பெய்யும் ஊழிக்கனல்போல் தணியாத உதராக்கினியினல் மனநொந்து, கடினமாக ப்ரகாசிக்கின்ற சம்புத்தீவில் பார்க்கப்படுகின்ற பிராணிகளனைத்தையும் சமுத்திரத்தினிடத்தில் விழுகின்ற வாறுகளைப்போல புசிக்கில் அற்பாகாரமாக சீவன்மெலிவுற்றிருக்கும்.

௯. மூர்த்திதியானஞ் செய்தல்.

¶ —வருஷத்தினல் தணியுங் கானலைப்போல உதராக்கினியுங் கொஞ்சந்தணியும், குற்றம்வாராமல் இவ்வுதராக்கினியை தணிப்பதற்குத் தவஞ்செய்து பிரமதேவ னனுக்கிரகத்தினல் பெற்றுக் கொள்ளுவோமென்று, இமயமலைக்குப்

‡ இ-ம். பிரமசங்கற்பாகாரமே சகம்போலத் தோற்றுமென்பதாம்.

† இ-ம். பிரமப்ரகாசமே சீவன்முதலிய யாவுமாய் விளங்குதலின், அபேதமேயாமென்பதாம்.

§ கற்கடியின் வினவை யறிவிக்கும்பொருட் டவளுடைய வவயவங்களை வருணித்ததாம்.

¶ இ-ம். போகங்கைக்குநிமித்தமதை மிகவுமனுபவிக்கத்தோற்றினதாம்,

போய் ஸ்நானஞ்செய்து ஒருபாதகம் பூமியிற்பொரு
ந்தநின்று கண்ணினால் ஆகாயமத்தியில் ப்ரகாசி
க்கின்ற சூரியனை பகலில் நேரேபார்த்து. ¶ —

௰. உபாசனாமூர்த்திப் பிரசன்னமாதல்.

வருத்தமுற்று நின்று மேலான தவத்தினால் ஆ
யிரவருடம் நடக்க, இருத்தமாகிய தாமரையில் வ
சிக்கின்ற பிரமன் ப்ரத்தியக்ஷமானார். ஜீவமயமு
டையவராயினும் அரியதவத்தினால் அடையக் கூ
டாத வஸ்துக்களுண்டோ, பிரமன்வரவும் முன்னி
ருந்தபடியேயிருந்து இராக்ஷஸியானவள் மனதி
ல்வணங்கி இதைச்சிந்தித்தாள்.— தாவுகின்ற பசி

கக. கேட்க வேண்டுமெனப் பிராயத்தைச் சிந்தித்தல்.

தணியும்பொருட்டு அம்பமான இரும்பால் உண்
டான ஒருசிறுள்ள ஒருவடிவமானாலும், உலகத்திலு
ள்ளவர்களுடைய சரீரங்களில்நுழைந்து உள்ளுக
ள் வேண்டுமானவைகளை புசிக்கலாமென்று என்
னுடையனே, ஆகவேண்டியதினையுமன் உனக்கென்ன
வென்றுகேட்ட பிரமனுக்கு, இக்கற்கடிகையானவள்

க௨. விரும்பின வரங்கொடுத்து, அதை யடையும் பிரம மருளுதல்.

—தோத்திரஞ்செய்கின்ற அடியார்களுக்குச் சகா
யமான வரண்டவரே? அடியேன் உயிர்சூசியாகவே
ண்டுமென்று கேட்க, வியாபிப்பாய், வி பென்னுமே
டசாத்தை முதற்கண்ணுள்ளதான விஷமாகச் ச
ரீர மெடுத்துக்கொண்டு பாய்வாய், அற்பிருத்திய
முள்ளவர்களும், மூடர்களும், துஷ்டர்களும், கொ
டிதான விடத்தில் இருப்பவர்களும், மனதுயினா
ல் விரும்பக்கூடாத துர்ப்புசிப்பைப் புசிப்பவர்களு
மாகிய இவர்களுடைய மனதில் பிராணவாயுவோ

க௩. இச்சையினாலற்ப வடிவமாதல்.

டுங்கலந்து, — அவிருதர்களிடத்தில் நீ சென்றால்
நாம் வியாபித்த வனது சிகிச்சையென்னும் மந்திரசெ
பத்தினால் கொலை செய்யாதிருப்பாய், அவியில்லா
தவர்களைக் கொன்றுண்பாயென்று பிரமன்சொல்
லி மறையுமளவில் முன்பு மலைக்கொப்பானவள்
சிவசூசி யுருவமெடுத்து, மூர்க்கரும், மனதிலச்ச
மிருந்தவரும் நசிக்கும் வண்ணம் அகத்திற் பிரவே
சித்தாள்.—வாயுவடிவாகி பூமியிலும் ஆகாயத்தி

க௪. உணவின் இச்சைவெறுத்தல்

லுமுள்ள பலசீவர்களின் உள்ளே பிரவேசித்து
அவர்கள் வாழுநாளைத்தையும் சிவசூசி, வாதசூசி,
யென்னு பிரண்டுவடிவமாய் வெகுகாலம் புசித்த
பின்பு தளர்ந்த மனதையுடையவளாய், வீணாகவே
அழன்று, நைந்து, சலிப்புமாய்த் தேய்ந்துபோகும்
படி. அவாவானதுமனமை அழித்தது, சீ, சீ, என்
றுமையங்கினாள். ‡—கொடியமனதுடன்நான் வீணாக

க௫. நிஷ்காமதவஞ்செய்தல்.

¶ இ-ம். தவச்சின்ன முறைத்ததாம்.

‡ இ-ம். மிகவு மனுபவித்த புசிப்பிற் கைப்புண்டானதாம்.

அநேக ஜெயிர்களைப்படுத்தேோம், அவ்வாசையை நீக்கிடுமென்று இமயபருவதத்தில் அரிதான தவத்தை அடைந்து, ஒரு சங்கற்பமு மில்லாமல் சவனாக்கைநீக்கி புரிட்பின்றி மனம் ஒன்றுபட்டு சகஸ்திரவருஷங்கள் நடத்தவும், கொடிய இருவினையும் நீங்கிற்று.

௧௬. இல்லறமது பயிலுல் ஞான மூண்டாகுதல்.

¶—இப்படி இவை நீங்கி மனது தெளிவடைய பிரமத்தியானம் தனதிடமாகப் பொருந்தவும், இச்சகத்தை மிதித்து சாகத்துவேட மில்லாதவனாய் சகஸ்திரவருடம் தவமிருந்தபின்பு, ஞானகுருவை முதித்ததென்று பிரமதேவன் தானேவந்து இக்கற்கடிக்கு ஒருவன்மையைச் சொன்னான்.—

௧௭. பிரமாவநுக்கிரகித்தல்.

நீ சிவன்முத்தியை யடைந்தாய், மனந்தெளிந்தாய் ஆகிலும் பழையவிராயத்தி னுடையாய் பூமியில் ஞானமில்லாதவர்களும், கொடியவர்களும், தீர்மக்களுமாகிய இவர்களுடைய சரீரங்களை உனக்குணவாக சேவாக்குசெய்து சுகமாயிருப்பாயென்று அநுக்கிரகஞ்செய்து பிரமன்மறையவும், அத்தவிதப்பிரமமே பாவிகளுக்கு சர்வமென்னும் பாவிகளைப்பொருந்தி நிஷ்கிரியையான அந்தத்திலிருந்தான்.

௧௮. சிவன்முத்தி நன்மையில் நின்று விதியான வுணவை யபேக்ஷித்தல்.

†—இப்படி நிர்விகற்பசமாதியில் அநேக காலமிருந்து சமாதியினின்றும் திரும்ப, நீங்காத ஆகத்தூத்தேகம் மனதுடன்சேரவே பழைய பசியை நினைத்து நானென்னும் தன்மை சகத்தின்கணுள்ள பரிமத்தம் சரீரத்தலுண்டாகிய காமம் நீங்காதபடியிருதல் உலகத்தில் இராக்ஷதகுலத்துக்குத் தொழிலாயிருக்கின்ற மாமிசாகாரம் புசிப்பதென்றும்.—

௧௯. உத்தேசித்த புசிப்பெடுத்திடல்.

பிரமனனுக்கிரகித்ததும் அப்பிரகாரமாதலால் அவ்வண்ணப்படியே முறட்கள் சரீரத்தை ஆகாரமாகப் புசிப்பேனென்று மகிழ்ந்து இமயமலையின் சாரலிற்சென்று வெற்பிலிருந்த வேடர்களின் நாடடைந்து அதிலுள்ள கானகத்தில் வசிக்குங்காலத்தில், நீதியுள்ள வனமக்களுடன் அவ்விடத்தோராசன் வந்தனன்.—

௨௰. இடைத்தலைவனின் றுண்மை மையவிசாரித்தல்.

சோமகுலி யாக்கினிகனென்றுக வந்தடைந்தாலும், அவைகளெல்லாம் மறைந்துக்குருந்த மிருந்த விருட்டிருதல் முடிக்கொண்டிருக்கின்ற இராத்திரியில் பயப்படாத அரசமந்திரிகள், பசாசங்கள்முதல் துஷ்டர்களைப் பரிசோதித்துவரவும், அவ்விடத்து அந்தக் கற்கடியாகிய மாத்திரத்தில் பசுமையான புசிப்பான், இவர்கள்

¶ இ-ம். நிர்விகற்பசமாதியிருந் சகலவினைகளு நீங்கினவென்பதாம்.

† இ-ம். பிராரத்தசேட மிருந்ததென்பதற்கு விதியான புசிப்பை யநுபவிக்க வசித்ததாம்.

உண்மை ஞானமில்லாதவர்கள் மூடராயிருக்கின்றவர்கள் இவ்வுலகத்தின்கண் சீவித்திருக்கின் இகத்திலும், பரத்திலும், மற்றெவ்விடத்தும் துன்பமாமென்று,—திரும்பவு நினைப்பாள், பிரமன்முன்

உக. துற்சனரோ வென்றுலோசித்தல்.

னியமித்தது மிவ்வண்ணமே, தீங்கறக் கிடைத்த பலனைக் கொள்ளாதவர்கள் அற்பமன துள்ளவர்களென்று மிகவும் ஆலோசித்து, தெளிந்த வறிவையும்,நற்குணமுள்ள சுபாவத்தையும், அடைந்திருக்கின்றவர்கள் கெடும்படி கொலைசெய்ய மனமெழுமோ, அன்றியும் இவர்கள் வலிய துன்ப மடைவ

உஉ. சற்சனரிலக்கண முணர்தல்.

ரோ.—தெளிந்த வறிஞர்கள் மெய்யான மிகுந்த கீர்த்தியையுடைய நீண்டவாயுளெல்லாம் பிரிக்கக்கூடாத சுகத்தைப் பொருந்தினவர்கள் யாவரும் வணங்கத் தக்கவர்களாவர்; குறைவில்லாத தனதுயிரைக்காட்டிலும் இனிமை யுள்ளவர்களாதலால் அக்குணவான்களுக்குத் துன்பம் வருமாயின் பயப்படாதேயென்று பிராணனையாவதுகொடுத்து இரட்சிக்கத் தக்கவராவர்,தங்களிடத்தில் அன்பையுடையவர்களுக்கு வணக்கமாக யமனையும் உறவுபடுத்

உங. சற்சனர்க்கன்புசெய்பவரிலக்கணமறிதல்.

தும் சுபாவமுள்ளவர்கள் —இராகூதி யென்கின்றநாமுதலாக சத்துக்களைப் பூசிக்கின்ற பக்தியைப் பார்க்கில், அன்பாக சுவணத்தைப்போல யார்தானன்பு வையாதவர்கள். இப்பூமியில் இரட்சிக்க வருகின்ற பூர்ணசந்திரனைப்போல அடுத்தவர்கள் மனதை சத்துக்கள் சுகிக்கச்செய்வார்கள், அவர்களைச் சாராதவர்களே மிகவுமிழிவுபட்டு மரித்தவராம்; சார்ந்தவர்களே மோக்ஷமுதலிய ப்ரயோசனத்தைப் பெற்றவர்கள். † — ஆகையால் இவர்

உச. பரிசோதிக்கு நிமித்தமதட்டிப்பேசுதல்.

களை ஞானிகளோ, அஞ்ஞானிகளோ யாரோ வென்று ஆராய்ந்தறிகின்ற கேள்விகளைக் கேட்போமென்று நினைத்து, இடிகளும் திடுக்கென்று பயப்படும்படியாக ஆகாயத்தினின் றுரவாரித்து கொடிய இடி யிடித்தபின்பு, மழைபொழியு மேகத்தைப்லச் சொல்லுதற்கரிய கொடிதாகிய காடென்னும் ஆகாயத்துக்கு சந்திரசூரியர்களுக் கொப்பாவீர்க

உரு. நீங்களாரென்று வினவுதல்.

ளென்று,— திரும்பவுஞ் சொல்லுவாள், மாயையென்கின்ற வெவ்விய விருண்டகல்லின்கீழ் விளங்கியழிகின்ற கூட்டமாகிய கிருமிக் கொப்பானவர்களே? எனக்குணவாக இந்தக்ஷணத்தில் மரிக்கவந்தீர்கள், மேலானவர்களைப்போலு மிருக்கின்றீர், தீமை யுடையவர்களைப்போலு மிருக்கின்றீர், நீங்க

† இ-ம். நேரிட்டவர்கள் சற்சனரோ துற்சனரோ வெனப்பரிசோதிக்கு நிமித்த மாலோசித்ததாம்.

ளார் சொல்லுமென்று கற்கடி கேட்டமாத்திரத்தில், ஜீவ இம்சையையுடையவிராவதநதியே கேட்பாயென்று வலிமையுள்ளவரசன் சொல்லத் தொடங்கினான்.—எவ்விடத்திலிருக்கின்றாய்? நீ யிவ்விடத்திற்சொல்லிய சகலமும் இளவண்டின் இரைச்சல்போல அழகாகக் கேட்டோமென் றரசன்சொல்ல, இராவதநதியும் மன்று யிருக்கின்றதென்று எதிரே நின்று நகைத்தமாத்திரத்தில், கொடிய தந்தப்பிரகாசத்தினால் அவளது வடிவத்தைப்பார்த்து, எவ்வளவும் பயப்படாமல், மேகம்போல வாயைத்திறந்து வீணாக நீ வருத்தப்படாதேயென்று அரசன் சொல்லுவான்.— அடைகின்ற ப்ரயோசனத்துக்கு முயற்சியாதவர்கள் இல்லையென்று சொல்லியபோதும் அற்பகாரியத்தில் அற்பமானவர்கள் துரிதப்படுவார்கள், மெய்ம்மைதோன்ற அட்டமையினால் விஸ்ராந்தியடைந்த ஞானவான்கள் கனமானகாரியத்தைச் செய்வார்கள், கொடிதாயிருக்கின்ற உன்னையொத்த அநேகர்களை மசகம்போல எனது வீரக்காற்றானது தள்ளிவிடும்.— ஆகையாலுனது ஆரம்ப வேகத்தை விடு, உனதெண்ணத்தைச்சொல், எங்கள் சமீபத்தில் வந்தவர்கள் ஆசையினாலியாசித்த பொருள்களைசொப்பனத்திலும் கொடுப்போமென்று அரசன் சொன்னவுடன், ஞானமும், வித்தையும், வல்லமையும், சாந்தமுமாகிய இவைகளில் மட்டில்லாதவர்களென்று அறிந்து, மேன்மையாகிய அவர்கள் வசனத்தை மிகவுமதிசயித்து குறைவற்ற வுண்மையைப் பார்த்து.—

வசனத்தினாலும், வதனத்தினாலும், விழிகளினாலும், வேறுபடாமல் மேலானவர்களுடைய களங்கமற்ற மனமானது மிகவுமுயர்ந்திருக்கும், இக்குணங்களா லபிப்ராயத்தையுந் தெரியலாம். மகான்களே செல்வம்போலவரில் ஐயந்திராதவர்கள் மேற்மக்களாவர் ஆதலால்அடைவுமுறையினால் இவர்களையறிவோமென் றன்னி நீங்களார் கூறுமென்று,—

கற்கடியானவள் கேட்க மந்திரி சொல்லுவான். வேடர்களுக்கெல்லாம் இவர் அரசனும், மந்திரி நானும், இராக்காலத்தில் எவ்விடத்தும் பார்த்து உனக்கொப்பான துஷ்டர்களை ஆராய்ந்து அலைக்கவும், பிராணனையடக்கவும், சிஷ்டர்களுடைய பிராணனை இரட்சிக்கவும் வந்திருக்கின்றோம், இவ்விடம் வந்ததற்குச்சங்கற்பமி துவென்றுசொல்ல, திரும்பி அந்த இராவதிசொல்வாள்.—துஷ்ட மந்திரியினால் நல்லவரசனும் தியவரசனும், பொல்லாங்கி

௨௬. அரசனச்சமற்றுரைத்தல்.

௨௭. அரசன்றமது வீரமுரைத்தல்.

௨௮. அரசன்கற்கடிகருத்தை வினுவுதல்.

௨௯. கற்கடியின் ஞாயம் நீங்களிங்களாமானவினுவுதல்.

௩௰. மந்திரிசொல்லுதல்.

௩௧. கற்கடிமறுநீதி சொல்லுதல்.

ல்லாத பரிசுத்தமான மந்திரியினுல் தீயவரசனும் நல்லவரசனுவன், இத்தொடர்வைப்போல நீதியுள்ளவரசரால் மந்திரிகளு மப்படியேயாவர், ஆக. விஞல் நல்ல விவேகமுள்ள மந்திரி உண்டாயிருக்கில் எந்தப்பிரயோசனமும் அரசர்களுக் குண்டாகும்.— அரசனெப்படியோ சகத்திலுள்ள பிராணிகளு மப்படியேயாகும்,

௩௨. இராச மந்திரிகளென்றால்ஞானமிருக்க வேண்டுமேயெனல்.

இராச மந்திரிகளென்பவர்கள் பெருமையும் நல்ல சமதிருஷ்டியும் ஞானசாஸ்திரங்களை ஆராய்ந்தவர்களுக்கே பொருந்தும், அந்த ஞானநூலை கல்லாதவர்களென்றால் பொய்யராவார்கள், இத்தன்மையான ஞானநூலின் அப்பியாசம் இல்லையானல் நீங்கள் எனக்குணவாய எவ்வனத்தி னன்மைகளை இப்போதே இழந்தீர்கள்.—

௩௩. வினுப்பஞ்சரத்தி லடக்கத்தொடங்கல்.

சிங்கமெனு மங்களை நான் சொல்லுகின்ற கேள்வியாகிய கூண்டில் காவல்செய்கிறேன், உங்களிவெண்ணும் திறவுகோலினல் அக்கூண்டின் வாயலை நீங்கள்திறந்தால் பிராணனேடுஞ் சீவிப்பீர்களென்று இராக்ஷதி சொல்ல, அதென்ன பிரித்துச் சொல்வாயென்று பரிசுத்தமுள்ள அரசன்சொல்ல, இராக்ஷதி நல்லவமுத வருஷங்களைப்போல அவ்விராச மந்திரிகளுக்குக் கூறுவாள். அவ்வாக்கியங்களனைத்தையும்,இராமா ? நீ கேட்பாயென்றுவசிட்டமுனி யனுக்கிரகிக்கத் தொடங்கினர்,—

௩௪. ஆத்மஸ்வரூபத்தை வினுவுதல்.

(௧) பரவிய சமுத்திரத்தில் குமிழிகள்போல் ஒன்ருன எந்தவணுவுக்குள் அளவிறந்த அண்டபங்திகள் நாநாவாகியும், உற்பத்திஸ்திதிலயமாம். (௨) ஆகாயமாகியும், (௩) ஆகாயமல்லாததெது. (௪) வரையறவுள்ளதா யிருந்தும், (௫) இல்லாததெது. (௬) சஞ்சரித்தும், (௭) சஞ்சரியாததெது. (௮) காணமிற்காததாகியும், (௯) நிற்கின்றதெது. (௧௦) சித்தாகியும், (௧௧) கல்லானதெது — (௧௨) ஆகாயத்தில் சித்திர மெழுதுகின்றதெது. (௧௩) விதையினிடத்தில் விருக்ஷங்களைப்போல குறைவில்லாத எந்தவணுவில் சகங்களியாவு மிருக்கின்றது. (௧௪) எதினிடத்திருந்தும் சமுத்திரத்தி லுண்டான அலை நுரைகளைப்போல ஒருவஸ்துவும் வேறுபடாமல் நிறைந்த சலத்தையும் குறைவற்ற நெகிழ்ச்சியையும்போல உண்டாய், (௧௫) இரண்டும் எங்கொன்

௩௫. இதுவுமது.

௩௬. அனுபவனு பதியுண்டாகு

ருயிருக்கும். ¶—ஆகிய இக்கேள்வியின் பிரயோசனத்தை நும்முணர்வால் தெரியச் சொல்வீர்களா

¶ இ-ம். பிரவஸ்வரூபத்தைச் சகசத்தினவநவமா யனுபவிக்கும்பொருட் டனுதப் பதினேர்து சங்கையாதப் பகுத்துவினுவினதாம்.

ங் கச்ச முனை — யின் வாசனைபொருந்த எனது கூந்தலின்மேல் எக் காலத்திலு மிருக்கின்ற மணக்கின்ற புஷ்பமாவீர் கள், அற்பமாகிய அறிவினால் பிரித்துச்சொல்லக் கூடாமல் கலக்குவீர்களாயின் எரிந்த வுதாரக்கி னிக்கு விறகாவீர்களென்று இராசஸ்திரி சொல்ல வும் †— அவளைக்கண் முன்புசொல்லுவான், கள

ரு. மந்திரி மு க்கைக்கும் ப நன்முந்த் சங் நும் உத்தமீய ம். — ங்கமற்ற பிரமவஸ்துவை பகுத்துக்கூறினும் அம்ஃ தியாகேயலின், மனமுதலாகிய ஆறிந்திரியங்களினு லும் எட்டுதற்கரிய தன்மையினால் முடிவில்லாத துராணமாத்திரமாயிரும், ஆகாயத்திலும், தட்பமா யிரும் பரமாணுவைக் கொட்பமாயு மிருக்கும். அந்த அணுவுக்குள் முந்திரை பிரமவண்டங்க ளனைத்தும்

ச. ஆகாசங்கக குகாசமாகல். — உண்டாகியனாய்க்கு மிக்கும். § —(உ) விசால மு ள்ள அப்பிரமத்துக்கு புறம்பில்லாத படியால் ஆ காயமாம். (௩) மேலெழுந்தளவாக விருத்தலின் விரி ந்த பூதாகாயமாகும். (௪) இப்படியென்று கட் டுப்படுத்தற்கரிய தன்மையினால் ஸ்திரமாக இல்லாத தாம். (௫) சத்தமிருத்தலால் உள்ளதாகச் சொல் லப்படும். (௬) சொச்சமாகப்பரகாசித்தலினால் ஞான மாகும். (௭) அறியுந்தன்மையில்லாத சிமித்தத்தி

௬. பின்வேங்கு யக் குத்தாய் ய. — னால் சடமாகிய கல்லேப்போலுமாம். ¶—(௮) மிக வொய்தாம் சொச்சமாயும் தானேயு மிருக்கின்றமி தாகாயத்தில் உலகங்களெனு சித்திரத்தைத் தா னே யெழுதும். (௯) மிக்காத சகங்களனைத்தும் த னது சொரூபமாதலினால் அவ்வஸ்துவுக்கு அ ன்னியமொன்றுமில்லை. (௰) தீசாவென்கிற உலகமே ழுதலை மருவாம்ருயும் இருக்கின்ற அச்சத்திலைரு வமாய் வெப்மேயதும் பிரியமதாம். (௰௧) நாநாவாகிய வஸ்துக்களின் சம்பந்தத்தினால் சஞ்சரித்ததாம். (௰௨) சஞ்சரிக்க வேறுஸ்தான மின்மையின் சஞ்சரி

ஏ. பின்பு இர சக்கைக்குத்த டற, மேலசா கயம். — யாததாம் ‡—(௰௩) தான் பொருந்துவதற்கு வே றேரிடமில்லாதபடியால் நிற்கவில்லையாம். (௰௪) ச தாகாலமும் சகலபொருள்களிடத்தும் சத்தாமாத் திரமா யிருக்கின்றதினால் நிற்கின்றதென்று அரச னுக்குமனதும் கல்லறிவுள்ள மந்திரிசொல்ல,தந்த

* இ-ம். இத்தப்பதிலினாத பிரமமும் குணமயப்பித்தவேண்டுமென்பதாம்.
† இ-ம். அணுவுக்குள்ளே கோடிமிருக்கின்ற பிரமமே யண்டகோடிகளாக மற்று மென்பதாம்.
§ இ-ம். இவ்வாதத்தாதிலே ககம்பிரமஸ்வரூப மெல்லாமாயும் அல்லவுமா கக்கின்றதன்மையை விளக்கினதாம்.
¶ இ-ம். இவ்வைகத்தாதிலேதான் பிரமதுசத்தைத் தானுசாவண்டாக்கித் தகவிளக்கித் தானதுபோலவே பிருமையின்றித் தன்மயமாய் விளங்குகின்ற தலித்தத்தை விளக்கினதாம்.

௪௧. பின்பாறுத் தரக்கூறல்.

௪௨. பின்பிரண் டுத்தரக்கூறல்.

௪௩. சத்துக்கள் தரிசனத்தைப்புகழ்ந்து கைம்மாறு வினவுதல்.

௪௪. சேவகாருண்யமே கைம்மாறெனக்கூறல்.

டியானவள்கேட்டு மிகவுமதிசயித்து அதற்குப்பின் இராசாவே? உனதறிவை சொல்லென்று கேட்க, அவ்வரசனுங் கூறுவான். சுமமானது இன்றொன்றின்ற உறுதியே, அகண்டாகார வஸ்து வென்றென்னும் உறுதியாம், பிரமத்தின்றன்மையை மேலுஞ் சொல்லக்கேட்பாய் § —மனதினால் சங்கற்ப விகற்பங்க ளனைத்தையும் கைவிடுவதே பிரமத்தைக் கைவசப் படுத்துவதாம், இருத்தமாகிய தனது சங்கற்ப முதித்தொடுங்குதலே சகமுற்பத்திலயமாம், ஒன்றாகிய வேதாந்தங்களினது சர்வார்த்தங்கள் பொருந்திய மகாவாக்கியத்தினிடமாம், அச்சுருதி வாக்கியத்துக் கந்தரங்கமான வநுபூதி யானகையால் புறம்புமாம், வடிவமாக விளங்குகின்ற சத்தசத்திரண்டுக்கும் மத்தியுமாம், அந்த விரண்டினது ஸ்வரூபமுமாம் — தாவரசங்கமான சகங்களெல்லாம் மனோசங்கற்பத்தினால் தானியற்றும் லீலையாம், உலகமாயிருந்தும் பழமையான ஏகத்துவத்தினால் பிரிவற்றதாயிருக்கின்ற பரிபூரண ஞானமாத்திரமாய் விளங்குகின்ற பிரமவஸ்துவையே யுரைத்தாய், இராகமனதை யுடையவர்கள் உணர்கின்ற பிரமஸ்ரூபமேயிதுவென்று அரசன்சொல்ல, அரக்கியானவள் மனதிற்களித்து, மலர்ந்த வெண்டாமரையையருஷிக்க சகலமும் குளிர்ச்சியடைந்த தன்மையைப் போல மிகவுமகிழ்ந்து, உபசாந்தமடைய சொல்லத்தொடங்கினள். ¶— அதிசயமாகியும் கொடாததாகியும் உதயமும் அஸ்தமனமும் இல்லாத ஞானசூரியனுக் கொப்பாகிய யிருக்கின்ற அழகு மிகுந்த அறிவையுடைய வுங்களுக்கொப்பான சத்துக்களுடைய அறிவுபாதங்களை யிடமாக சகலமுந் தரித்தார்களல்லவா, முத்தியுலகத்தை யடைகின்ற அரசர்களாகிய ஆத்மஞானிகளைக் கூடினால் சேரா வண்டாகுமோ, ஆத்மலாபத்தைப்போல வராநின்றவுங்களுக்கு இவ்விடத்திலெல்லாம் வைத்திருந்தாலும் யானியற்று முபகாரத்தை இன்னதென்று சொல்லுமென்று கேட்டாள். — தனையையுடைய விராட்சதவமிசமென்கின்ற எட்டிவனத்தில் பொருங்கிய தீமாங்கனிக்கு ஒப்பானவளே? உலகத்தின்

§ இ-ம். இவ்விரண்டு சங்கையினுத்தரத்தால் பிரமஞ்சத்தாயும் அசத்தாயு மிருக்கின்ற பூரணஸ்வரூபத்தைவிளக்கிப் பதினெட்டுசங்கைக்கு மொருமையாகப் பதினொன்றுத்தரத்திற்சொல்ல, அஃதன்றி யரசனொருத்தரத்திற் பிரமவிசாரத்தை விளக்கினனென்பதாம்.

¶ இ-ம். இவ்வெட்டுத்தரத்தால் ஆத்மாவிலாவல்லாச விசாரங்களை விளக்கி அக்கற்கடி பதினெட்டுசங்கைக்கு இவ்வொன்பதுத்தரத்தா லொருமைப்படுத்திச்சொல்லியதாம்.

கண்ணேனுருயிரையும் கொல்லாமல் இருப்பாயென்று அரசன்சொல்ல, அப்படியே கொலைசெய்வதை விட்டேனென்று இராட்சஸிசொல்லவும், அளவற்றமாமிசாகார முள்ளவளாகிய நீ பசிக்குச் செய்யுந் தன்மையென்ன கூறென்று அரசன்கேட்க, முன்னுளில் நிர்விகற்ப சமாதியிலிருந்து எனதுதராக்கினியைக் கெடுத்தேன், அவ்வண்ணமே இப்பொழுதும் சமாதியிலிருந்து தணிப்பேன். — தெளிவாகிய அமுததாரணையினுல் வேண்டிய காலமட்டும் சீவன்முத்தியிலிருந்து, அதற்குப்பின் விதேகமுத்தி யடைவேன். அகத்தில் பூரணஞானத்தையுடைய நான் ஒருயிரையும் வதையேன், இது சத்திய மென்றுசொல்லி போக நினைப்பவளை, பெறுதற்கரிய விஷ்டத்தை எளிதாகப்பெற்றோம், நீ பெரியவள் குலப்பெண்ணாக எமதரண்மனைக்கு கூடவருதால், கொலைசெய்யுங் கள்வருடைய சரீரத்தை யுனவாகக் கொடுப்போம், இத்தேகம் நீக்குமளவும் நினைப்புறுகவாகிய வாதனைகள் நீங்காது.—ஆகையினுல் பாவிகளின் சரீரமென்னும் புசிப்பைக்கொண்டு ஆரிய புதராக்கினி நீங்கி நிஷ்டையிலிருப்பாய், இவ்வண்ணம் அன்போடு எப்போது மியற்றுவாயென்று அரசன் சொல்லவும், இராக்ஷஸி மகிழ்ந்துசெல்ல, பின்குட்டியையொத்த இராசமந்திரிகள் தமது பட்டணம்போய் சுவணமயமாகிய வரண்மனையை யடைந்தார்கள். சூரிய குலயமானுன், மூவாயிரம்பாவிகளை ஆறுதினத்தில் அரசன்கொடுத்தான், இராக்ஷஸி பெற்றுக்கொண்டாள்.— இலட்சுமியைப்போல அவ்வரண்மனையிலிருந்த வடிவத்தை இராத்திரியில் நீக்கி, இராக்ஷஸியாகி,முடரான கொலைக்காரரை புயத்தின்மேல் வைத்துக்கொண்டு, அரசனுடன்மந்திரிக்கும் உபசாரங்களைச்சொல்லி கனகமயமான இமோர்ப் பருப்பதத்தில் நிஷ்டையி லிருக்கப்போயினுள், இன்றையவரைக்கும் இவ்வண்ணமே அரசனும், கற்கடியும், சினேகமானுர்களென்று இராமனுக்கு வசிட்டமுனி யானவர் சொன்னுர். ‡—

௬௫. அமுத தாரணையே புசிப்பா மெனல்.

௬௬. மகான்களுக்கஞ்செய்தல்.

௬௭. அன்பிற்பிரிவற்றிருத்தல்.

கற்கடி-கதை முற்றிற்று.

---

‡ இ-ம். ஆப்த்தர்கள் பிராரத்த கன்ம சேடத்துக்குள்ள வ்யாதியை நீக்கி யன்பிற்கலந்திருந்தனராம்.

அயிந்தவர்கதை.

அவதாரிகை.

முன் பிரமப்பிரகாசமே சீவன்முதலான சகலமுமென்பதைச் சொல்லி, அதுதிடமாகும்பொருட்டு அதனுல்லாசமான மனமே சகமென்பதை யறிவிக்கவேண்டி அயிந்தவர்கதையைச் சொல்லுகிறார்.

௧. மனமே சகத்தென்பதற்குத் திருஷ்டாந்த முரைத்தல்.

சொல்லிய கர்க்கடிகதையினால் தத்துவமாயுயர்ந்து வசனாதீதமான பிரமஸ்வரூபமே உள்ளதாம், திரிஸ்யவஸ்துவென்பதொன்றில்லை, அனவற்ற சிருஷ்டிகளிலும் காரணமாக மனமே பிரகாசிக்கும். இதுதெரியவிசித்திரமாயுள்ள ஒரு கதையைக் கேளென்று வசிட்டமுனி இராமனுக்குச் சொல்லுகின்றார்.—

௨. மனஞ் சகத்தென்றவதனுலதற்குக் காரணமான சிற்சத்தி வெளிப்படல்.

இக்கதையினால் ஞானசத்தியினுடைய விலாசமே சகமென்று சொல்லப்பட்டதென்றுமுண்டாம், அவாவியெழாநின்ற மனமென்னுஞ் சிறுகுழந்தையும் அறியாமையினால், முழுதுமசித்தையாக உலகப்பிரகாசம் பார்க்கும், அசத்துருவத்தைத் தெரிவிக்கில் பிரமஸ்வரூபமாயிருந்து துன்பநீங்கும், இராகத்துவேஷாதிகளென்ற நானாவிகாரங்களை மனமடையின் சமமாம், அவ்விகாரங்களை நீக்கிவிடுதலே மோக்ஷமாம். ¶—

௩. நூதனசிருஷ்டியைப் பார்த்ததிசயித்தல்.

ஒருகாலத்தில் பிரமதேவன் சிருஷ்டிகளனைத்தையு மடக்கி இராத்திரியில் நித்திரைசெய்தபின்பு, உதயகாலத்தில் திரும்ப சகத்தை சிருஷ்டிப்பதற்கு ஆகாயத்தைப் பார்க்கவும், மனதினால்விரிய மாயையில் நானாவித சிருஷ்டிகள் சமீபமானதைப்பார்த்தான். யார் சிருஷ்டித்தாரென்று வியப்புற்று, —

௪. சிருஷ்டியுண்டான காரணமுரைத்தல்.

அதிலொரு சூரியனை வாவென்றழைத்து என்னுளையும் இந்தச் சகத்தையுஞ் சிருஷ்டித்தவர் என்றுகேட்க, சூரியனமஸ்கரித்துச் சொல்லுவான், முடிவில்லாத சகத்துக்குக் காரணமாகிய பிரமனாகிய நீர் இதையறியவில்லையாயின், சொல்லக்கேட்பாய். வெள்ளியங்கிரியிடமாகிய சம்புத்தீவில் விரிந்தவிடத்தில் ஓர் பக்கத்தில், —

௫. தவத்துக்கேகல்.

சிறப்புள்ள கனகமென்கிற ஒரு நாடு, உனது புத்திரர்களால் சிறந்த சிருஷ்டியைப்பெற்றது, அத்தேசத்தில் பாரம்பரியமான காசிபனுடைய வமிசத்தில் உண்டான பிராமணன், இந்துவென்னும் பெயரினும் சிறந்தவன், புத்திர சம்பத்தில்லாமல் பரபரப்பான மனதினல் நாயகி

¶ இ-ம், சிற்சத்தியில் விருத்தியான மனோப்பிராந்தியே திரிஸ்யமும், அதனிவிர்த்தியே திருக்குவமாமென்பதாம்.

௬. தவத்தால் மகப்பேறுண்டாதல்.

யுடன் பரமேசுவரனுடைய கயிலாயமலைக்குப்போய். — தவமேற்கொண்டு விருட்சத்தைப் போல நீரையே பானஞ்செய்து வருந்துகின்ற காலத்தில், பரமசிவன் மனமகிழ்ந்துவந்து உமக்கு வேண்டியதென்ன சொல்லுமென்று கேட்க, சிரசில் வணங்கி எங்கள் துன்பந்தீரும்படி பதின்மர்கள் வயிற்றெரிந்த புத்திரர்கள் வேண்டுமென்று கேட்க, அவரவ்விடத்தி லப்படியே யருளிச்செய்ய, இந்த ஸ்திரீபுருடர்கள் மகிழ்ந்து வந்திருக்கும் போது புத்திரர்கள் அவதரித்து, — வேதசாஸ்திரப் பியாச மிகப்பி வளர்ந்ததன்பின்பு, மாதாபிதாக்கண்மரிக்க, புத்திரர்கள், கைலாச மலையினிற்சென்று விசாரிப்பார்கள். நமது தரித்திர நீங்கும்படி மேலான சாமந்தர்களாவோம், அச்செல்வம் கொடுத்தாலும்படியால் பெருமையையுடைய வாசராவோம், — அதுவுமற்பமாம், பூமிக்கெல்லாம் சக்கரவர்த்தியாவோம், அதுவுமற்பமாம், லவிதிகணிறைந்த தேவேந்திரராவோம், சொல்லிய விச்செல்வமும் பெரிதல்ல, தாமரைமலர் லெழுந்தருளிய பிரமாவாகுதல் குற்றமற்ற செல்வமென்று நிச்சயித்தார்கள். தோன்றினமனதில் பத்துபேர்களுமொருமித்து மேலாகிய பத்மாசனத்தி லிருந்து, —

௭. உபாயவாராய்தல்.

௮. உபாய வைப் பரோக்ஷமாகத்தெளிதல்.

யாமேபிரமதேவன், சிருட்டிகளியாவும் உண்டாருதல் நம்மிடத்தென்று அகத்திற் சலனமற்ற மனதினால் தியானித்து தேகப்பிராணனின்றி விருட்சத்தைப்போல இருக்கவும், வருகின்றகாலங்க ளெல்லாமகச்சென்று, மனோபாவனையுறுதிக்கு, அப்படின்மரும் பிரமாவானார்கள், பத்துலகங்க ளுண்டாயின, — மனுகாயத்தில் இவர்கள் பத்துவிதமாக சிருஷ்டியைச் செய்தார்கள், கூட்டமாகிய அப்பத்து சிருஷ்டிகளில் நானும் ஒரு சூரியனென்று சொல்லி போயினன். கனமாகிய மனதினது விசாலத்தினால் பார்க்கப்பட்ட வுலகங்கள் உள்ளனவாமென்று அன்னவாகனத்தையுடைய பிரமதேவன் மனதினால் சிருஷ்டித்தானென்று, இராகவருக்கு வசிட்ட ரனுக்கிரகித்தார். † —

௯. உபாயமபரோக்ஷமாதல்.

௰. மனமே சகத்தென்பது திருஷ்டாந்தமாதல்.

அயிந்தவர்கதை முற்றிற்று.

---

† இ-ம். மனோபாவமே சகத்தென்பதை யறிவித்ததாம்.

வஞ்சவிந்திரன்கதை.

அவதாரிகை.

முன் சித்சத்தி யுல்லாசமாயுண்டான மனோபாவமே சகமென்பதைத் திருஷ்டாந்தமாகவறிவித்து அக்காரணமான மனதைத்தவிர காரியமானதேகம் வேறின்றென்பதை பாகியேந்திரிய விஷயாகாரத்திலே ஸ்திதிக்கு நிமித்தமும், விடயாநந்தாநுபவமுள்ள வஞ்சவிந்திரன் கதையை நிரூபிக்கின்றார்.

௧. மனோவிசால நிரூபணம்.

ஒப்பில்லாத உலகங்களைச் சிருஷ்டிப்பவனும், ஆத்மாவும் சொல்லப்பட்ட மனமேயாம்; நினைக்கின்றமனதினது தொழிலே தொழிலாகும்; தேகத்தின் றொழில்கள் தொழில்களல்லவாம்; முன்கதையில் சூரியன்சொன்ன புத்திரராகிய பிராமணர்கள் பதுமாசனத்தையுடைய பிரமதேவர்களாய்ப் பூமியைச் சிருஷ்டித்தார்கள். மகாமனதினுடைய மேலானசத்தியை வேறொருவரா லறிதற்கு இயலே சாருமோ.

௨. பிரமாநந்தா னுபவிக்கு விடயா னந்தானுபவ மின் றெனல்.

— மனது சரீரத்தைப் பாவனைசெய்ய சரீரமாய், அச்சரீரத்தினால் மனம்வருந்துவதும் பூரண ஞானியர் அகத்தில் பொருந்துகின்ற பிரமபாவனையினால் வைத்துவாரமுள்ள சரீரத்தில் நன்மைதீமைகளை யறியார்கள். முன்னாளில் சோரத்தொழில்செய்த அகலிகையென்பவளும், சோரவிந்திரனும், இதற்கொப்பானவர்கள். §—என்றுசொல்ல,

௩. திருஷ்டாந்த மறிவித்தல்.

இவர்களாரென்று இராகவன்கேட்க? வசிட்டமுனி சொல்லுவார். முன்னாளில், மகததேசத்தையுடைய இந்திரத்யும்னனென்னும் பெயரையுடைய இராசனும், அவனுக்குப் பிராணனைப்போல கூடிய வளிக்குமனைவி அகலிகையென்னும் பெயரையுடையவளாம். முன்சொல்லிய பட்டணத்தில் ஒருவனன்றி, அவனுமம் இந்திரனும்.

௪. இருதலைக்கா மமுமொத்தே கமாதல்.

— அக்காலத்தில் அவ்வகலிகையும், அப்புரந்தரனும், புணர்ந்தகதையைக்கேட்டு, இந்நாளில் இவ்வரசியென்னு மகலிகையும், இத்தூர்த்தவிந்திரனை இனிமையாகக் கூடினள், நெடுங்காலம் நீங்கினவர்கூடிய கூட்டத்தைப்போல, விடசிரேஷ்டனுடன் சிலநாட் கழித்து ஏகமா யிருக்குங்காலத்தில், நீதியையுடைய வரசனுக்கு அறிவித்தார்கள்.

௫. சிற்றின்பத் தில் பிரிவற்றிருத்த லின் துன்பந் தோ ன்றாமை.

— கேள்விப்பட்ட வரசன் மிகவுங்கோபித்து அவர்களை மிகுந்தசலத்தில் அமிழ்த்தியும், தந்தங்களையுடைய மதயானையை மேலேவிட்டிடறுவித்தும், கொடிய வக்கினிச் சுவாலையில் மூழ்கச்செய்தும், வருத்தாநின்ற குறி

---

§ இ-ம். மனதைத்தவிர சரீரத்துக்கோர் சுகதுக்கமில்லையென்பதாம்,

ரைச் சம்மட்டிகளா லடிக்கச்செய்தும், இப்படி பலவருத்தங்களைச்செய்ய, அவர்கள் வருத்தப்படாமல் இருவர்கண்ணு மொன்றுக்கொன் றெதிர்பார்த்து மனமொன்றாய் வருத்த மறியாதவர்களாய் நகைத்துக்கொண் டிருக்க, — இராசன் பார்த்து அதிசயித்து, மிகவுந் துன்பப்படுத்த துன்பப்படாத விதத்தைச் சொல்லுங்களென்று கேட்கவும், மனமகிழ்ச்சியையுடைய விருவரும் சொல்லுவார்கள், மலைபோன்ற தோள்களை யுடையோனே? எங்கள் வதனமாகிய சந்திராமுதத்தை கண்கள் புசிக்க, தடைசெய்யக்கூடாத மகிழ்ச்சியினால் உடலையே காணாது யாம் வருத்தங்களைப் பார்ப்போமோ. — அறுத்தகாலத்திலும் சரீரவருத்த மறிந்திலம், ஒன்றிற் பிரியமாய் பிடிக்கின்ற மனத்தினுக்கு சரீர நசிக்கவந்தாலும் துன்பந் தோன்றாது; தெரிந்த வஸ்துவில் மனமுழுகினால் சரீரத்தினது செயலை, வேறே யாவர்பார்ப்பார்கள். வியாபித்த முனிவர்கள்சாபமும், பலகன்மங்களும் அதைத் திருப்பக்கூடாது. — இறந்து வினைகக்கழிந்த சரீரம் ஓரளவில்லை, அச்சரீரங்களியாவும் தாவாகின்ற மனதினாற்றோற்றும், நீரையன்றி வனமுண்டோ, சகலத்தையு நடத்தாநின்ற மனதே முதன்மையானசரீரமாம், இத்தூலசரீர நீங்கினாலும், இச்சிக்கின்ற சரீரங்களை விரிகின்ற சொற்பனத்திற்றோன்றுந்தொழிலைப்போல வேகமாயெடுக்கும். — இம்மனமாத்திரமடங்கினால், சரீரமொன்றையு மறியமாட்டாதென்று தூர்த்தாள்சொல்லக் கேட்ட அவ்வரசன் பரதனென்கின்ற பக்கத்திலிருக்கின்ற முனிவரன் வதனத்தைப்பார்த்து, சித்தத்திற் காமமயக்கமடைந்திருந்தும் இவர்கள் ஞானபாவனையைச்சொன்னார்களென்று மனமகிழ்ந்து, பரதேயத்திற் போங்களென்று அவர்களைத் துரத்திவிட்டான். ‡ —

௬. விடயானுபவ முரைத்தல்.

௭. மனவுறுதியின் பெருமையை யறிவித்தல்.

௮. மனதின் விசால மறிவித்தல்.

௯. இதுவுமது.

வஞ்சவிந்திரன்கதை முற்றிற்று.

மனத்தின் கதை.

அவதாரிகை.

முன்னகத்திற் சுகதுக்கவிருத்தி ரூபமானமனமேபுறம்பிலிருப்பதெனக்காட்டி, அம்மனமகமுகப்படிற்சித்தாகவும், பகிர்முகப்படிற்சகத்தாகவுமிருப்பதை யறிவிக்கும்பொருட் டதனுருவத்தைநிரூபிக்கிறார்.

‡ இ-ம். பிரமாகத்தானுபவமுள்ளமனது விகாரங்களினு மவ்வனுபவமாயிருப்பதேயன்றிப் பேதிக்க மாட்டாதென்பதாம்.

௧. உயிர்களின் தூலசூக்கும தேகத்தின் குணங்களை யறிவித்தல்.

பிரமாநந்தத்தைக் குறிப்பாலுணர்த்து மிவ்வநூசவிந்திரன்கதையை, விடயாநந்த மனுபவிக்கும் லீலையாகச் சொன்னோம். இயாவருக்கும் அம்மனதிற்குரிய சூட்சுமசரீர மொன்றும்; வேறானதூலசரீரமொன்றும்; அவ்விரண்டில், மனோசரீர மானது, சீக்கிரத்தில் தொழில்களனைத்தையுஞ் செய்து அதிற் றிருந்தமாய்ச் சஞ்சலிக்கும், மற்ற தூலசரீரமானது ஒன்றையு மறியமாட்டாது. —

௨. அவற்றில் மனோ சரீரத்தின் குணங்களை விசாரித்தல்.

இப்படியென்றுசொன்ன வசிட்டமுனியை, சடமாகவும் ஸ்வரூபமில்லாத தாகவுமிருக்கின்ற இந்த மனதுக்குரிய வுருவத்தை விரித்து நன்றாகச் சொல்லுமென்று இராமன்கேட்க, பிரமன் வாக்கியப்படியே ஞானஸ்வரூபியான வசிட்டமுனி சொல்லுவார்.—சகலசத்திகளு முடையதாய் முடிவற்றிருக்கின்ற வாத்மாவானது, சங்கம்பத்துடன் கூடுகின்ற உருவமே மனமாகும். வலியுள்ளசத்தும், அசத்துமாகிய இரண்டின் மத்தியிலுமுண்டாகி சொல்லப்பட்ட செயல்களோடும், பழரும்பாவனையும், அந்த மனதினுருவமே. † —எவ்விடத் துண்டாயினு முண்டாகட்டும், எந்தவுருவமாகத் தோற்றினுலுந் தோற்றட்டும், இப்படிப்பட்டமனதை மோக்ஷமடையுங் குறிப்பில் உபாயங்களிலும், ஆத்மாவிலும் சேர்க்கில் நன்மையாம். பிரமதேவன் சொன்னதாகிய ஒரு புராதனமான கதையை நீகேள்,

௩. அம்மனதினுருவத்தைப் பகுத்துக் கூறுதல்.

௪. அம்மனதைச் சித்திற்சேர்க்கதிருஷ்டாந்த முரைத்தல்.

கொடிய துன்பமும் பயங்கரமுமா யிருக்கின்ற முழுதுமித்தையாகிய ஓர் காடுள்ளதாம்.— அவ்வனத்தினது ஒருகடைப்புறத்தினளவு அளவற்றகாதமாம், இவ்வனத்தில் ஒருபுமான் நேத்திரங்களும், கைகளும், அளவில்லாததையுடையவன், பலவாகச் சிதறுகின்ற கருத்துடையவன், ஆகாயம்போன்ற விரிந்த வுருவமுள்ளவன், விரைவிற்செல்கின்ற வளைதடிகளநேகங்களையுங்கைகளிற்றரித்துக் கொண்டு,—

௫. இதுவுமது.

தன்னைத்தானே சிதறும்படி யடித்து ஓடித்துவெருண்டு கதறிக்கொண்டு எல்லாத் திக்குகளிலுமோடி வகந்தப்பி சகலத்திலுந்தாக்கி அந்தகாரமாகி பயமதிகரித் திருக்கின்ற தீவினையாகிய ஆழமுள்ள பாழுங்கிணற்றில் விழுந்து வெருகாலம்மெலிவான்.— திரும்பவு மெழுந்திருந்து வந்து சரீரத்திலடித்து கதறிக்கொண்டு ஓட்டத்திற் சுழலுவான், நீண்ட முட்கணிறைந்த கருவேலங் காட்டில் முறியும்படி விழுந்து, அக்கினியில் விழுந்து

௬. இதுவுமது.

௭. இதுவுமது.

† இ-ம். பிரமஸ்புரணமேமனமாம், அந்த சடாசடங்களிற் றோற்றியதையே பாவித்த தன்மயமாயிருக்கின்றதாம்.

விட்டிலைப்போல பதைபதைப்பான், இப்படிவாடு
தலைநீங்கி கதலிவனத்தில் களிப்புற் றிருப்பான்.—
அ. அம்மனத்தை ச் சித்திற்சேர்க்கு திருஷ்டாந்த முறை த்தல். வாழை வனத்தைநீங்கி கருவேலங்காட்டிற் சுழ
லுவன், விரைந்து கூபத்தில் விழுவன்: இப்படி ய
நேகங்காஞ் சுழலுதலைப்பார்த்து நடுங்காவண்ணம்
நாம் பிடித்துக்கொண்டு விருதாவாக வருந்துகின்ற
நீரெவர்? என்னசெய்கின்றாய்? உனதுகருத்தியா
கூ. இதுவுமது. தென்று கேட்க, அவனிதைக் கூறினன்.— நா
னொன் றொருவனுமில்லை, இவ்விடத்தொரு தொ
ழிலையுங் கண்டிலன், நீயிரும் பேதங்களைச்சொ
ல்லக்கருதி உன்னாலொழிகின்றேன், ஈனம்பொருந்தி
யவெமது சத்துருநீ, நின்னாற் சுகதுக்கங்களை யா
னெனத் தெரிந்தேனென்று அடிபட்ட தனதுதே
கத்தைப்பார்த்து,—
க0. இதுவுமது. காய்கின்ற மேகத்தினது வருடம்போல இரக்
கமுற்று ஓவென்று அலறி கூப்பிட்டழுதான், ஒ
ருகணத்தி லவ்வழுகையைவிட்டு தண்மையான
தனது ஸ்வரூபத்தைப்பார்த்து வெகுநேரமாக வ
யிறு பிளக்கும்படி சிரித்தான், திரும்பவும் எம
க்கு முன்பு பருத்திருக்கின்ற தனது வடிவங்களை
யெல்லாம் தானே கிரமமாக நீக்கினன்.—
கக. இதுவுமது. விதியின்வசத்தால் இவனோரிடத்தி லடைந்தா
ன், எனக்கெதிராகவந்து ஒருபுருடன் சமீபத்தில்
முன் சொன்னவனைப்போல் அடித்துக்கொண்டு
போக,முன்வந்தவனைப்போல காமுறுதியாகப்போ
கின்க, அவ்வழிச்செல்வோனும் முன்வடிவம் நீங்க
ச்சென்றான்.—
கஉ. இதுவுமது. வேறு மொருவன்வந்து அப்பெரிதான பாழு
ங் கிணற்றில் விழுந்தான், வெகுநாள் திரும்பி
யேறிவரப் பார்த்திலம், கலக்கமிருந்த வக்காட்டி
ல் மற்றொருவன்வரவும், அறிவோமென்று தடுத்து
கங. இதுவுமது. கூடியமட்டுங் கூறினோன்.—சொன்னதி லொன்று
ங்கேளாமல் அதட்டி நிந்தித்து மேலு மேலுமடித்
துக்கொண்டு போயினன். ஊர்க்கரும் அவனையொ
த்தவர்களுமாகிய அன்பாயுள்ளவர்கள் மிகுந்து
கூர்ந்த முட்களாலெருக்கி பாழ்த்துக் கிடமாயிருக்
கின்ற அந்தகாரக்குழிக்கு காரணியமானது இப்
கச. இதுவுமது. பொழுது மிருக்கின்றது.— மிகவுங் கொடியதாகி
வெந்துபோன காடானாலும், ஞானிகள் வாசனைவீ
சிக் குளிர்ந்திருக்கின்ற புஷ்பவனத்தைப்போல சந்
தோஷிப்பார்கள், என்றுசொல்லிய வசிட்டரிஷியை
ப்பார்த்து, இக்கதையை விளங்க வருளவாயென்று

கரு. உருவகத்தை வெளிப்படுத்தல். இராமன் கேட்க, ¶— மகாமுனியான வசிட்டர்
சொல்லுவார் (க) ஸ்தாபிப்பதற்கு ஆதிமத்தியந்த
மில்லாமல் மித்தியாசங்கமாகியும்,கெம்பீரமாகியும்,
கொடியதாகியும், விகற்ப மிகுதியாகியு மிருக்கின்ற
கூட்டமுள்ள சம்சாரசுபாவமே, நாமுன்சொல்லிய
கசு. இதுவுமது. காடாம்.—(உ)கோபாக்கினியின்புகை நிறைந்த உ
லகமென்னுங் காட்டில் புருடனென்றவன், துன்பு
ற்றுச் சுழலாநின்ற மனமேயாம். (௩) தடுக்கின்ற
யாழும், ஒப்பற்ற விவேகமேயாம் (௪) பகையா
கிய விவேகத்தினால் மனமானது, பிரமத்தை யு
ணர்ந்து விஸ்ராந்தி யடைந்ததாம். (௫) குற்றம்
பொருந்திய மனங்கள், விவேகத்தை நிந்தித்து வி
கஎ. இதுவுமது. ஷயவாசனை வயத்திற்சென்றன.— (௬) அடித்துக்
கொண்டு செல்லாநின்ற மனங்களானவை வீழுங்
கிணறென்றது நரகமாம். (எ) கதலிவனமென்றது,
போகநிறைந்த சுவர்க்கலோகமாம். (அ) முட்கணி
றைந்த கருவேற்காடென்றது,மோகமுள்ளஸ்திரீபு
ருடர்கணிறைந்த பூலோகமாம்.(௯) சிதறிவீழ்ந்த
கிணற்றினின்றும் திரும்பவேறுமற் கிடந்தவனென்
றது, விரைவில் நகரத்திற்பிரவேசித்து பாவஜன்ம
கஅ. இதுவுமது. ம் நீங்காதமனமாம்.—(௰)கூர்மைபொருந்திய முள்
ளென்றது, காமாந்தகாரத்தையுடைய ஸ்திரீபுருட
ர்கள். (௧௧) நினைக்கின்றசுகதுக்கங்களை உள்ளுற்பெ
ற்றேன் (௧௨) நீயே யெனக்குச் சத்துருவா மென்
றது, அறிவினால் நசிக்கின்ற மனது துன்புற்றுச்
சொன்னது. (௧௩) அவர்களழுதார்களென்றுசொல்
லியது, இச்சையைக் கெடுக்கின்ற அருத்தமாம்.—
க௯. இதுவுமது. (௧௪) கூப்பிட்டழுததென்றது,ஞானம் அரைவ
ரிசையுண்டாகி ஞானநிறையாத மனமானது ஆ
சையை விடும்போது துன்பப்பட்டு வருந்துதல் அ
வ்வருத்தமேயாம். (௧௫) குளிர்ச்சியாகச் சந்தோஷி
த்து நகைத்திருந்ததென்றது, குற்றமற்ற ஞானத்
உ0. இதுவுமது. தில் ஒன்றுசுவாநந்தமாம் — (௧௬) அந்தமில்லாத
ஞானத்தினால் ஆசையைவிடுத்த மனமானது தன
துவுருவத்தை நாசஞ்செய்யும்பொழுது சந்தோஷி
ப்பதே சந்தோஷமாம். (௧௭) மிகுந்தவலியினால் த
டுத்துக் கேட்டோமென்று சொல்லியது, அழிவற்
ற ஞானோபதேச பலத்தினால் மனமொருமைப்பட்

¶ இ-ம். பாவித்தவடிவமாகிய மனது ப்ரவிர்த்திநிவர்த்திகளிற் சடமாயுஞ் சித்தாயுமிருப்பதை யறிவித்தற்கு, அதுசெல்லும் விடயப்ரபஞ்சத்தை வனமாகவும் அதிற்சஞ்சரிக்குமனதைப் புருடனாகவு முருவப்படுத்தி யதன்கிரியையைப் பதினெண்விதமாகப் பகுத்துக்கூறினதாம்.

௨௧. ஆதலால்மனதைக் கெடுக்க வெனல்.

டது,—(௩) சரீரத்தி லடித்துக்கொண்ட தென்றது, பிரும்மகற்பனைகளின் கெடுதிப்படுகின்ற வலியறுண்டங்களாம். (௪) கெடுந்தூர மோடின தென்றது, கொடுந்துக்க வாசனையாலடிபட்டு மயங்கித் திரிவதாம். ஆதலால், சங்கற்பங்களும் வாசனைகளும் தன்னைத்தானே வலையைப்போல பிணைப்படுத்தும். †

௨௨. இதுவுமது.

—கோசகாரக் கிருமியைப் போலத் தனது கொடிய சங்கற்பவாசனைகளால் யாவரும் பாசத்தை யடைவார்கள் சொல்லிய இம்மனத்தின் சரித்திரத்தை களங்கமற்ற மனதினால் வரையறுத்தறிந்து, களங்கமனதைக் கெடுப்பாய், தெளிவையுடைய இராமாவென்று தெளிவுள்ள வசிட்டமுனிசொன்னார். ‡—

மனத்தின்கதை முற்றிற்று.

பாலன் கதை.

அவதாரிகை.

முன் மனமானது கற்பனையாற் கெட்டது, கற்பனையாற் சுட்டு மனதையறிவித்து, அதன் சங்கற்பரூபமான சகத்தை யாராய விசாரமில்லாதவர்கள், சதாசத்தமாகப் பார்ப்பதைப் பாலன்கதையி னிருவிசனமாகச் சொல்லுகிறார்.

௧. அறிஞர்கள் மனது பிரமமே யெனல்.

குற்றமற்ற ஞானிகளுடைய மனமானது, சகல சத்திகளையுமுடையதாயும், பரிபூரணமாயு மிருக்கின்ற எப்பொழுதும் நாசமில்லாத பிரமஸ்வரூபமாயிருப்பதன்றி, அதையன்றி வேறின்று. பிரமஸ்வரூபமாகிய இதனிடத்தில் இல்லாததொன்றுமில்லை, எழுந்துதிரிகிற சிற்சத்தியானது சகலமுமாய்ப் பிரகாசிக்கும், இச்சத்திகளில் ஒருகாலத்தில் ஒரு சத்தியுண்டாம், குறைவில்லாத பிரமத்தினுடைய ஞானசத்தியானது அறிகின்ற சரீரங்களிற் றோற்றும்.

௨. இதுவுமது.

— வாயுவில் சலனசத்தியும், கல்லில் கடினசத்தியும், அக்கினியில் உஷ்ணசத்தியும், ஆகாயத்தில் சூனியசத்தியும், சலத்தில் திரவசத்தியும், நாசத்தில் நாசசத்தியும், வெயிலுள்ள வித்திலங்கிய விருக்ஷங்களைப்போல பிரமத்தினடங்கி

† இ-ம். முன்னெருத்தக்சொன்ன பதினெண்பருப்பையு முறைப்படியிலக் கம்வைத்து வருத்தனைத்ததாம்.

‡ இ-ம். மனதை யகமுகத்திற்செலுத்தி பகிர்முகத்திற் செல்லாமற் றடுக்கின் ஞானமயமாமென்பதாம்.

யிருக்கின்ற பிரமசத்தியெனான இவை பலவிருந்து காலதேச விசித்திரத்தினால் பூமியில் பயிர்களைப் போலத் தோற்றும்.

௩. அசத்தைச் சத்தாகக்காணுதல். ¶—பிரமஸ்வரூபமே எவ்விடத்திலும் எப்போதும் உண்டாயிருக்கும். அப்பிரமமே, சொல்லப்பட்ட மனனத்தினால் மனமாகவும், இதனிற் சமானமில்லாத பக்குவமுள்ள சீவாத்மாவாகவும், வீடுள்ள பரமாத்மாவாகவும், பெரியவுலகமாகவும், சத்திகளெல்லாமாகவுமிருக்கும், ஸ்திரமில்லாத குழந்தைகளுக்குத்தாய் சொல்லப்பட்ட கதையைப்போல, சொல்லிய விகற்பங்களனைத்தும் நிலையாகும். கைகளொன்றுமில்லாத தாமரைமலர்களையுடையவோமே, என்று வசிட்டர் சொல்லவும், அச்சரித்திரத்தை இராமர் கேட்க,

௪. அசத்தைச் சத்தாகவுணர்தல். †—மனவஞ்சனைக்கு காரணமான கதையை இராமனுக்கு, அரியதவமுள்ள வசிட்டர் சொல்லுவார். மெய்யறிவில்லாத வொருபாலனானவன் விருப்பமுற்று, தாயே நீ ஒருகதையை யெனக்குச் சொல்லாயென்று கேட்க, உள்ளதுபோல முழுதுமிக்கையான வோர்கதையைச் சொல்லுவாள். இராசகுமாரர் மூன்றுபேர்கள் பரிசுத்தமாகிய வீரத்திலும் நல்ல குணங்களிலும் மிகுந்தவர்கள், குணவிமலர் விருப்பமுள்ளவர்கள்,

௫. இதுவுமது. —மூன்றுபேர்களில் இரண்டுபேர்கள் பிறந்ததேயில்லை, ஒருத்தன் கர்ப்பமாகிய கருப்பத்திலுமில்லை, இவர்கள் சகலமாமுமென்னரின் சஞ்சரிப்பவர்களாய், ஆகாயத்தில் பட்டணங்களையுடையவனத்தில் பொருந்தவும், அதிற் செழுமையான பழவகைகளைப்புசித்து வெப்பமானபரிதி மீதில் போயினார்கள். அக்கானகத்தின் பக்கத்தில் மூன்று ஆறுகளை கரையின்மேனாகின்ற அலைகளுடன் பார்த்தார்கள்.

௬. இதுவுமது. —வேகமாகச் செல்கின்ற நல்ல மூன்றாற்றினுள் இரண்டிற்சலமில்லை, ஒன்றுவற்றியவெண் மணலையுடையதாம், இந்த நதியில் ஸ்னானஞ்செய்து சலத்தைப் பானம்பண்ணினார்கள். சாயங்காலமாய் இனியுண்டாகும் பட்டணத்தைச் சேர்ந்து, அதில் மூன்றுவீடுகண்டார்கள், அம்மூன்றிலிரண்டிடில்லவேயில்லை, மேலேமரங்களுந்தூணும் சுவருமில்லாத வீடொன்று, சேர்ந்தவம்மனைகளில் சுவரில்லாமனையில் இராசகுமாரர்கள் குடியாகப்புகுந்

¶ இ-ம். பிரமத்துக் கபின்னமான சிற்சத்தியுல்லாசமே, விசித்திரமான சகமாகத் தோற்றுகின்றதாம்.

† இ-ம். சத்திலுபாசமாகத் தோற்றுகின்ற மித்தையாரூபமான சகம், அறிவின்மையாற் சத்தாகப் பார்க்கப்படுகின்றதாம்.

எ. அசத்தைச்சத்தாகவுரைத்தல். திருந்தார்கள் — ஒருவரும் பாராதபட்டணத்தில் ஆகாயமனையி லிருப்பவர்கள் மூன்று கனகபாத்திரங்கள்தனதுபக்கத்தி லிருக்கப்பார்த்தார்கள், அதிலிரண்டோடாகும், மிகவுந் தூளாயிருப்பதொன்று. உருவமில்லாத இப்பாத்திரத்தில் ஆறுமரக்காலில் தூணிபதக்கைத்தள்ளி மிருந்திருந்த பருத்த தண்டுலத்தை தாங்கள் பாகஞ்செய்து, வாயில்லாத பிராமணர் அளவற்றவர்களுக்கு முன்பு பரிமாறினார்கள்.—அப்பிராமணர்க ளனைவரும் பூரணமாகப் புசித்தபின்பு, சேடத்தை ப்ரசாதமாகப் புசித்து வேட்டைகள் செய்துகொண்டு, இம்மூவர்களும் அத்தலத்தில் வசித்தார்களென்று அன்னை சொல்ல, பாலப்பருவத்தினால் குழந்தை எதார்த்தமாக நம்பினான். சகத்தையும் இவ்வண்ணம் அஞ்ஞானிகள் பார்ப்பார்கள், சொல்லப்பட்ட மனதின்விசாலமே சங்கற்பமாம், பகுத்துச்சொல்லுகின்ற இச்சங்கற்பத்தாற்சகமாம், இச்சங்கற்பத்தை நீக்கு, நீ நிருவிகற்பனாகக்கடவாய். ¶—

அ. இதுவுமது.

பாலன்கதை முற்றிற்று.

சித்தன் கதை.

அவதாரிகை.

முன்பு திருக்கு திருஷ்டியில்லாதவர்களுக்குத் திரிஸ்யமுண்டுபோலத் தோற்றுமென்பதை யறிவித்து, அத்திரிஸ்யஞ் சுகதுக்கானுபவமாயிருத்தலாற் கேவலமித்தையன்றிச் சிற்சத்தி விலாசமாயிருக்குமென்பதையும், அம்மனமே காலவளவா யிருத்தலையு மறிவிக்கு நிமித்தம், சித்தன்கதையை நிரூபிக்கிறார்.

க. பிரமத்துக்குப் பந்தமின்றெனல்.

அஞ்ஞானிகள் தமதுசங்கற்பத்தினால் மிகவுமயங்குவார்கள், சுகஞானிகள் ப்ரகாசிக்கின்ற ஆத்மவிசாரஞானத்தினால் மயங்கார்கள், அறிவினால்மித்தையை நீக்கி பரிசுத்தமானவுண்மையை அறிந்துக்கொள்ளக்கடவாய், பந்தமில்லாதிருந்தும் பந்தமுண்டா யிருக்கின்றதென்று வேறுபட்டுத் தளராதே, நின்மலமாயும் நாசமில்லாததாயு மிருக்கின்ற பிரமவஸ்து கட்டப்படுமோ? †—தேசகாலவஸ்துக்களால் முடிவிறந்து ஏகமாயும் பேதமிறந்து சின்மாத்திரமாயு மிருக்கின்ற கெடாத பிரமவஸ்து

உ. மனதுக்கே பந்த முத்தி யுண்டெனல்.

¶ இ-ம். பிரமத்திலாரோபிதமாகத் தோற்றினகற்பனைகளை நீக்கி அப்பிரமவடிவமான எதார்த்தமாய் சஞ்சரிக்கவேண்டுமென்பதாம்.

† இ-ம். சைதன்ய மொருதன்மையதாக ப்ரகாசிக்க அதற்குப் பந்தமெப்படி யுண்டாமென்பதாம்.

லிருக்க, பந்தத்தை யடைந்தவரியார்? வீடடைந்தவரியார்? சகலமும் பாவனாவிகற்ப விசாலமேயாம். நினைப்பின் விசாலமேபந்தமாகும், அதுவின்மையே மோக்ஷமாகும், மனதினது தொந்தமான வினையாட்டினால் சமீபமுஞ்சேய்மையாம், வெகுதூரமும் சமீபமாய்த்தோற்றும்.

௩. மனமேதேசகாலமா யிருத்தலைத்திருஷ்டாந்தமாகவறிவித்தல்.

‡—மனத்தின்வலியினால் கற்பகால மொருக்ஷணப்போதாம் க்ஷணங்கற்பகாலமாம், இவைகளை தெளிவாயறிவிக்கின்ற ஓர்கதையாய், அக்கதையால் உலகமென்கின்ற இந்திரசாலமானது பெருமைபொருந்திய மனத்திலிருக்கின்ற தன்மையானது வெளியாகத்தோற்றுமென்று, வசிட்டர் சொல்லுவார். இப்பூமியி லொருபுருடன் அரிச்சந்திர வமிசத்திற் பிறந்தவன், உத்தரபாண்டவனென்னுந் தேயத்தையுடையவன்,

௪. சித்தன் மயக்குதல்.

§— இலக்குமியும் சரஸ்வதியும் வசிக்கின்ற இராசகுமாரன், விசயலட்சுமி வசிக்கின்ற புயங்களை யுடையவன், லவணனென்னு நாமத்தை யுடையவன், ஆலோசனையள் மிகுந்த மந்திரிகள் தன்னைச் சூழும்படி. நவரத்தினங்களினாற்செய்த சிங்காதனத்தில் வீற்றிருக்க, இந்திரசால வித்தையில் வல்லமையுள்ள வொருபுருடன்வந்து வணங்கிப் புகழ்ந்து, மதிக்கொப்பான கண்களிறைந்த மயிற்றோகையினசைவினால், அரசனே, இவ்வித்தையைப் பாருமென்றசைத்தது,—

௫. குதிரைதோற்றல்.

பரிசுத்தமாகிய பிரமத்தினால் நநாவிதமான சிருட்டிகளை தோற்றுவிக்கு மாயையானது தோற்றுவிக்கின்றதுபோல, சித்தனென்பவன் வித்தைமுதலானவற்றைக் காண்பித்தசைத்து கின்ற மயிலிறகின்வட்டத்தை அரசன்பார்த்தான், அவ்விடத்தில் சமீபத்தேசத் தரசனனுப்பிய ஒருதூதனானவன், தாவுகின்ற ஒரு குதிரையைக் கொண்டுவந்து தேவேந்திரன் குதிரைக்கு சமானமென்று,—

௬. அறிவு மயங்கல்.

அரசனே, உமக்கென்று எங்களரசனாலனுப்பிய வெற்றிக்குதிரையென்றுசொல்லவும், சித்தன் இக்குதிரையையொத்ததினையாது நீர்கவிலேறுமென்றுசொல்லினன். இத்தன்மையுள்ள சித்தன் கூறியவைகளைக்கேட்டு, ஓவியம்போல குதிரையே நோக்கான அரசன் முகூர்த்தநேரம் ஞானிகள் துன்பமற்ற சமாதியிலிருந்ததுபோல, அங்கிரு

‡ இ-ம், மதிக்கின்றமனதுக்கே சகதுக்க முண்டாமென்பதாம்.

§ இ-ம். ஒன்றிற் பிரியம்வைத்ததிற் சுகிக்கும்போது கற்பக்கணமாகவும் அதையடைய முயற்சிக்கும்போது கணங்கற்பமாகவு மிருப்பது மனதேயன்றி வேறின்றென்பதாம்.

௭. அறிவுதெளிதல்.

ந்தான்.—இராசசபையி லிருந்தவர்கள் சந்தேக முமதிசயமுமிருந்து, தடாகத்தில் குளிர்ந்த தாம ரைமலர் கூட்டத்தைப்போல முகஞ்சுருங்கியிரு ந்தார்கள், அறிவுடனும் உபாயத்துடனும் உறன்று நான்குபடியை நீக்கினபின்பு, சிங்காதனத்தினது முன்பாகவிருகின்ற இராசானை, அருகிலிருப்ப வர்கள் தாங்கிக்கொள்ள விழித்துறல்கின்ற மனது தெளிந்திருந்தான்.

௮. மனோராக்ஷி யஞ்செய்த சரிதை யையுரைத்தல்.

¶—அப்படிப்பட்ட வாசகனே, நின்மலமான மனதையுடைய நீர் வருகும்படியாக்கு தென்னவென்று வணக்கமுள்ள மந்திரிமார் கேட்க வும், அரசன் விழித்துக்கொண்டு இதைக்கேளு ங்களென்று சொல்லுவான். சமீபமாக மயிற்றோ கையைச்சுற்றி இப் பித்தன்சொல்ல அறிவுமயக்கி இக்குதிரையின்மேல் நின்றபடியேறி வேட் டையாட நினைத்தால் வெகுதூரம் சென்றதிப்போ யினேன்,

௯. இதுவுமது.

—விவேகமில்லாத மனதிலுள்ள வருத்தத் தையுடைய செல்வத்தில் அற்பருகவிகள் மயங்கிச் செல்வதுபோல, வெகுதூரம் குதிரையிலுற்போய் அக்கினியிலும் சகலமும் வெந்து பொறிகள் சிதறு கின்ற பாலைவனத்திலுறைந்து, குதிரையும் நாவு ஞ்சீரவொங்கு, சூரியன்மேற்றிக்கில் அடையும்படி யாக்கம் துன்பத்துடன் மயக்கமுற்று மனந்தளர்ந் தேன்.

௰. இதுவுமது.

—சம்சாரமென்னும் ஞானிகள் துறந்து செ ல்கின்ற தன்மையைப்போல, பாலைவனத்தைத் தா ண்டி, நீண்டநிழல்களையுடைய சம்புவிருக்ஷமும், கடம்பவிருக்ஷமும், எலுமிச்சவிருக்ஷமும், நிறைந் தும், பக்ஷியின் சத்தங்களினுடன் விருந்து விருக்கி ன்ற துன்பமில்லாத வனத்தில்போகவும், அவ்வி டத்தில் ஓர் ஈளக்கொடியானது எனதுகண்டத்தில் சுற்றிக்கொண்டது, கம்சாதியின் ரூப்பினைவர் களுடைய பாவத்தைப்போல வேகமுள்ள குதிரை யானது என்னைவிட்டு நீங்கிற்று.

௧௧. இதுவுமது.

—கண்டத்திற் சு ற்றிய கொடியால் ஊசலைப்போல தொங்கிக்கொ ண்டு, காளகத்திற்பொருந்திய தென்றற்காற்றினால் குளிர்வுற்று மயக்கத்தின்முறுறு மனந்தளர்ந்தேன். ஸ்நானமும், பூசையும், தியானமும் நல்ல புரிப்புக ளும் இல்லாமல் இரவெல்லாம் கழிந்தவ்வளவில், அப்பொழுது இருட்டும், துக்கமும், குளிர்ச்சியும், பல்லக்குத் தேசையும், சமயமா யிருக்க,—

௧௨. இதுவுமது.

மகேஷ்விருடன் நீக்குகின்ற ஞானத்தைப்போல, அப்பொழுதுட்டை சூரியனுதயமாகி நீக்க, கண்டத்தில்

¶ இ-ம். வாசனையில் தெரியும்பொருட்டு அரசனுக்கு மந்திரிமாரையில் வல்லமையைத் தெரிவித்ததாம்.

சுற்றிய வல்லியைத் தவிர்த் தவ்விடத்தினின்றிறங்கி சோலையுணுழைந்து அவ்விடம் தொருவரையும் பார்த்திலன். கனமானவொரு மத்தியானத்தில் மூன்றேமுக்கா னாழிகை கழிந்தபின்பு, காதுகுலமல்லாத ஒரு நீசப்பெண்ணை இருளைச் சந்திரனொளிர்ந்ததுபோல, அவள்முன் னெதிர்ப்பட்டேன். —

கங. மனோராச்சியஞ் செய்த சரிதையை யுரைத்தல். கறுத்த நிறமும் கருநிறமுள்ளவஸ்திரமும் அஸ்தத்தில் அமுதுள்ளவாய் என் பக்கத்தில்வரவும், பசிநோய் தாங்காமல் அப்பெண்ணை, யான் அன்ன மடைபாளே அமுதைத்தருவாயென்று யாசித்தேன், உடனாக்கினியினால் யாவருக்கும் இழிவுவருமென்பதை தெரிந்தேன், சிந்தித்தது வாய்க்கக் கவலையுற்றதவர்கள் இச்சித்த வஸ்துபோல, அப்பெண்ணானவள் அமுதை கொடுத்திலள். —

கச. இதுவுமது. தோப்புக போல்து சுத்தாகின்ற அவள்பின்னே தொடர்ந்து வாடுகின்ற என்பசியின் வருத்தத்தைச்சொல்ல கரியள்சொல்லுவாள், நான் நீசப்பெண், உனக்கு எனது அமுதமாகுமென்றால் எங்களூரில் என்றந்தையின் முன்வந்து கலியாணஞ்செய்து என்னுடன் சேர்வையாயின், இச் சமயத்திற்கொடுப்பேன் என்று சொல்லவும் அதற்குச் சம்மதித்தேன், அவளோபோடும் அமுதைகொடுத்தாள். —

கரு. இதுவுமது. கொடுத்த பாதியமுதையும் புசித்து, நாவும்பற விசமுங்குடித்து, தளர்ந்த பசித்துன்பநீங்கி, இருக்கவும், புறத்திற் சஞ்சரிக்கின்ற கப்பிராணியென்று என்னை கைகளினாற்பிடித்து, துட்டமசரீரத்தை மிகவும் பயத்தைச்செய்கின்ற நரகத்திற் கொண்டுபோய் வருத்துவதுபோல மனம்வருந்தத், தன் றந்தையுடன் கொண்டுபோயினள். —

கசு. இதுவுமது. எனைக் கிஷ்டமுள்ள விப்புருடனை என் கொழுநனாக கொடுப்பாயென்று அப்பெண்கேட்க, பிதாவுஞ்சம்மதித்து, குரைப்படமிரண்டுபேர்களையும், பாசபந்தமுள்ள காலைகத்தினின்று நீங்கி விழிக்குத்தோற்றுகின்ற எமபடரைப்போல, கரிய நீசனுமவளை மறைத்துக்கொண்டுபோய் புசிக்கின்ற மாமிசவாசனையைப் பரிமளிக்கின்ற தனதூரிலடைந்து, ஒருமையானகலியாணம் செய்வித்து, —

கஎ. இதுவுமது. குரங்கும், குதிரையும், கோழியும், காக்கையும், பன்றியும் என்றுசொல்லப்பட்ட மாமிசவகைகளை அறிந்தெடுக்கவும், மாமிசங்கள் நாம்பில் தோரணங்களாக காயவும், பக்ஷிகளைாயும் தலைக்கவும், நடக்கின்ற குறவுகளையுடைய காத்திலிருக்கும் மாமிசங்களில் இழிவுள்ள ஈக்கள் சத்திக்கவும், இரத்தமும், அஸ்தியும், அவ

வசித்திருக்கின்ற பறைச்சேரியில்வந்து, வாழைகளை
யே காலாக நட்டிருக்கின்றபந்தலில் சந்தோஷத்தி
னால் புதுமையான கல்யாணஞ் செய்யத்தொடங்கி
கஅ. மனோராச் சியஞ் செய்த சித் தையையுரைத்தல். னார்கள்.— இப்படியுள்ள மாமிசமெருக்கிய சிறிய வி
ழிகளாற்பார்த்து மருமகன் நல்லவனென்று, பல்ல
ளிலுங்காறித்த கூனையுடைய கிழமாமியானவள்
களித்தாள், சண்டாள ரனைவருஞ்சேர்ந்து சத்திக்
கின்ற வாத்தியங்களடித்தார்கள், கள்ளையும் மாமி
சங்களையும் பாகஞ்செய்தார்கள், அப்பெண்ணை
அழிவுசெய்கின்ற பாவமானது நரகத்தில் வருந்து
கின்ற யாதனாசரீரத்தைக் கொடுப்பதுபோல, அ
ககூ. இதுவுமது. ந்த நீசன் கன்னிகாதானஞ் செய்தான்.—கொடிய
பாவங்களானவை வடிவுகொண்டதுபோல, சண்
டாளர்களுடைய விவாகமானது ஏழுதினத்தில் நி
றைவேறவும், அந்த நீசப்பெண்ணுடனேயும் கெட்
டொழுக்கமுற்றேன், முலைபோன்ற தனங்களுட
ன் புஷ்பவதியானவள் என்னுடன்புணர்ந்து சுகித்
திருக்காலத்தில், கொடுமையான வோராபத்து கொ
டுக்கின்ற துன்பத்தைப்போல, ஒரு குழந்தையை
ப்பெற, அக்குழவியும் தன் உருவுகொண்டு வி
றகைப்போலிருக்கின்ற கரிகுத்தோடும் மூடர்க
உ0. இதுவுமது. ளுடைய மனதைப்போல வளர்ந்தது.— பின்பு
மூன்று வருஷத்தில், அறியாமையைக் கொடுக்
கின்ற காமத்தைப்போல, ஒரு புத்திரனையீன்றாள்.
அவள் இரும்பையும் தாரமையிலுண்டாகிய அனர்
த்தத்தைப்போல ஒரு குழந்தையையும் பெற்றா
ள், இப்படியே புத்திரர்களோடும் அநேகம் காலங்
கடந்திருந்தேன், சம்சாரத்தினது துன்பங்களா
லும், அவர்களுடைய வருத்தத்தினாலும், நான் வரு
த்தப்படுகின்ற துன்பத்தினாலும், எனது சரீரம் மூ
உக. இதுவுமது. ப்புவடைந்தது.— வருந்துகின்ற வியோகத்தினால்,
பிழைக்கின்ற காலத்தில், அவ்விந்தியமலையின் அடி
வாரத்தில் பரியமேகம் வருஷியாமல் பூமியிற் சல
மில்லாமற் காய்ந்து, உஷ்ணக்கிளியினால் உயிர்களை
யெடுத்துக்கொடுக்க, இலைகளையுடைய விருக்ஷங்களு
டன் படர்கின்றகொடிகளும் புல்லுகளும் எரிந்து,
எங்கேயும் வெய்யிலினால் புழுதியாகும்படி. வா
னும், எமதூதயினத்திகள் வெகுபேர்மரித்தார்
கள், பலர் பலதேசங்களிலுந்திகழ்ப்போனார்கள்.—
உஉ. இதுவுமது. புத்திரர்களிரண்டுபேர் பசிகளிலும் மற்றொ
ருவனை சிறிதென்றேனும் இருக்கும்படி. காமந்துவ்
வெண்டு, எனது பாரியாருடன்போய்,சரீரத்தை
யுஷ்ணமேசபொறிக்க இறவாமல் அந்தேயத்தை ீ

கடந்து ஒரு பனைமரத்தடிணீழலில் புத்திரர்களையி
ழித்து, தீவினைவடிவமான நரகத்தினின்றுங்கரை
யேறி, பழைய நல்வினையுடன் பொருந்திய சுகத்
தைப்போல சற்றுநேரம்சிரமந்தீர்ந்திருந்தேன்.—

௨௩. மனோராச்சியஞ் செய்த சரிதையையுரைத்தல்.

மூப்பினாலும் வழிநடந்துவந்த துன்பத்தினாலு
ம் இரண்டு பிள்ளைகளையுங் கட்டிக்கொள்ள, களை
தானோ நித்திரைதானோ வென்னும்படி எனது த
லைவியிறந்தாள், அதைப்பார்த்து மனமுருகியானி
ருந்தேன், இளையபிள்ளையுறங்காமல் என்மடியிலே
றி யிருந்துக்கொண்டு இரண்டுகண்களிலுஞ் சலம்
பெருகவழுது உண்டாகின்றபசிக்குச் சகிக்கேன்,
இரத்தமும் மாமிசமும் யான்புசிக்கவேண்டும் இப்
போதுகொடென்று கேட்க,—பிரியமுள்ள இளைய

௨௪. இதுவுமது.

குழந்தையானவன் என்கண்முன்னே துடிக்க, நா
ன்செய்வதொன்றுமின்றி பிராணன் பிரிந்திருக்கி
ன்ற சவத்தைப்போ லிருந்தேன், அவன் ஓயாமல
ழுது கண்ணீரைப்பார்த்து, மிகவுங்கரைந்து, மிதத்
தில் இவன் பிழையானென்றெண்ணி யானும்பிரா
ணனை விடும்பொருட்டு காட்டாக்கினியை வளர்த்து
அவ்வக்கினியில் விழும்படி சமீபத்திருந்து எழும்
பினேன், இச்சிங்காதனத்திலிருந்து கீழே விழுகி
ன்ற சமயத்தில். † —என்னைத் தாங்கினவர்களாகி

௨௫. சீவ வதைகளை யறிந்தேனெனல்.

ய நீங்களனைவரும் சயசயவென்றுசொல்ல, அடிக்
கப்பட்ட சகல்வாத்தியங்களுஞ் சத்திப்பிக்க, இவ்
விடமறிந்தேன், சண்டாளனல்லாதவனாய் லவண
னென்னு மாசனானேன், குற்றம்பொருந்திய சித்த
னதுவித்தையினால் மயங்கினேன், சீவாத்மாவுக்கு
அவத்தைகளானவை பலவுரிமையாக வுண்டாயி
ருக்கின்றனவென்று தெரிந்தேனென்று சொல்லு

௨௬. சித்த னிங்குதல்.

ஞ்சமயத்தில், சாம்பரிகன்மறைந்தனன்.—சபையி
லிருந்த மந்திரிகள் சித்தனென்ற இவனேனென்
று விசாரிக்கவும் கண்ணிமைக்கு முன்னொளித்தா
ன், அடைந்தசகமானது மனமேயென்று பிரிவாகத்
தெரியக்காட்டும்பொருட்டு, அனுபவதேவமாயை
யானது இதுவாகும், சொல்லப்பட்ட இச்செய்கை
களினால், இராமுள்ளவரசனே, பிரமத்தின் தற்பிரகா
சமே மனமாகிய பெரியசகமாம், என்றுசத்துக்கள்
சொன்னார்கள் என்று வசிட்டமுனிசொன்னார்.—

சித்தன்கதை முற்றிற்று.

---

† இ-ம். மனோராச்சியத்திலுண்டான சம்பவங்களை வியப்புற்றுசாரியர் முதலியோர்க் கறிவித்ததாம்,

உற்பத்திப்பிரகரணம்.

அவதாரிகை.

முன்பு சிற்பாதிபலனமான மனதுக்கே யற்பநேரம் அநேககாலமான சம்சாரம் வந்ததென்றுச் சித்திக்கின்றதென்றறிவித்து, இம்மனதைச் சித்திர்க்கைத்துச் சின்மயமாய்ப் பிரகாசிக்குமிடத்தும், ஞானவிண்மகன் முதலிய வெண்கதையின் சாரமுள்ள உற்பத்திப் பிரகரணத்தைச் சொல்லுகிறார்.

௧. மனோ வல்லமையாதெனில்.

மனத்தினது தொழிலேதொழிலாம், அம்மனதினால் விடப்பட்டதே விடப்பட்டதாம், உண்டான மனோசாஞ்சல்யத்தை விடுத்தவர்கள் மிகவுமுத்தமமான நிஷ்டையுள்ளவர்கள், பரிசுத்தமாகமனக்கெட்டால் மந்தரகிரியினால் அலைபடாத க்ஷீரசமுத்திரம்போல அறிவுமிக்கலமாய் சமமானவமென்கின்ற சம்சாரமயக்க நாசமாமென்று, வசிட்டமுனி திரும்பவுஞ் சொல்லுவார்.—

௨. இதுவுமது.

பக்கித் திருக்கும் நானாவித போகங்களினது சங்கற்ப மடைந்திருக்கின்ற மனவிருத்தி யென்னும் முனையால், மகாமாயா மயக்கமென்கின்ற விஷவிருக்ஷமானது விருத்தியடையும், வைராக்கின்ற மனோவியாதிக்கு சத்துக்களையழிக்க அவுஷதமானது, வருத்தமில்லாமற் சுலபமாக அம்மனதினால் செய்யப்படும், இதைக்கேட்பாயாக. § —

௩. அம்மனோநாசவுபாய மியாதெனின்.

இச்சிக்கப்பட்ட சகலவஸ்துக்களையும் விரும்பாமல் நீக்கினவர்கள் மனதைச்செயித்தவர்கள், சுகமாகவும், லெகுவாகவும், தனக்குரியதாகவு மிருக்கின்ற அக்கமற்ற வயிராக்கிய ஞானம் பெற்றவர்கள், உலகத்தினகனுள்ள மாணிடகிரிகிக் கிணையானவர்கள் ; அறிஞர்க ளுபதேசத்தாலும், சுஸ்வான்கூறிய சுருதிமுடிவாகிய மகாவாக்கியார்த்தத்தாலும் ஆத்மாவை சந்தானஞ்செய்து, நானென்னுஞ் சங்கற்பமியந்தமனதினால் பயிர்முகமாய் வருத்தும் மனதை அந்தர்முகத்திற் சுகிக்கத் திருப்பலாம். ‡ —

௪. அம்மன இறக்கிற் பலனியாதெனின்.

இரும்பால் இரும்பு திருந்துவதுபோல் சன்மார்க்கத்தின் முயற்சிக்கின்ற சுத்தமனதினால் அசுத்தமனம் திருத்தப்படும், மீளாதவிராசையுருவாகியும், தனதுமுயற்சியினால் சாதிக்கத்தக்கதாகியும், மோக்ஷவிச்சையுடையவர்களுக்கு லேசாகியுமிருக்கின்ற வெய்யமனத்தினெழிலே பெரும்பாரநீக்கிய பாக்கியமாம், வேறே ஒருத்தியு நல்

§ இ-ம். மனோசங்கற்பமே மாயைமுதலியவைகளாகத் தோற்றுமென்பதாம்.

‡ இ-ம். சுருதியுத்தியநுபவமுள்ள மனதினாலவையின்றிய மனதைக்கெடுக்கவேண்டுமென்பதாம்.

ரு. அப்பரமசுகம் எப்படியுண்டாமெனின்.

மையாகாது. ¶—ஒன்றைவிட்டொன்றில் தாவிக்கொண்டிருக்கின்றமனதை சங்கற்பாஜிதமென்னுங்கத்தியினாற்கெடுத்தால், எவ்விடத்தும் பரிபூரணமாய் சகலமுந்தன்மயமாய் விளங்குகின்றவஸ்து ப்ரசன்னமாம். இம்மார்க்கத்திலிருந்து ஞானத்தினால் விரும்பத்தக்க மனதைப்புசித்து, அதற்குமேலானதாய் சம்சாரவிகற்பமில்லாத சகலத்தியாகமானவறிவினால் ஆத்மஞானத்தையடைந்து, மனதை ஐக்கஞ்செய்கின்ற ஸ்வரூபஞானத்தை யறிந்துக்கொள்வாய்.

சு. எம்முயற்சியினாலம்மனதைக் கெடுக்கலாமெனல்

† —பிரவ்ருத்தியில் வருத்தப்பட்டு அப்பியாசித்து மனதைக்கெடுத்து சத்தசத்தென்றுரைக்கக்கூடாமல் சுபமாயிருந்து பிரமபதத்திலிருப்பாய். துன்பமற்ற மோக்ஷசம்பத்தைத் துன்பமின்றி தைரியத்தினாலடையவேண்டும். இப்படி மனோநாசமானால் மூன்றுகாலமுந் திரணமாம், இனிமையென்று சொல்லப்பட்ட விஷயங்களியாவும் தீமையாகத் தோற்றினால் மனதுநாசமாம். ‡ —

எ. அவ்விடய திருஷ்டி யாதினாற் கெடுமெனின்.

இருதயாகாயத்தில் ப்ரகாசிக்கப்பட்ட ஞானநிஷ்டையா லுண்டாகும் பரமஞானமென்கிற கூரித்தாகிய சக்ராயுதத்தினால் சந்தேகங்கொண்டமனதைக்கெடுப்பாய். கெடுத்தபின்பு நிருந்த துன்பமிங்கும். அவனென்றும் இவனென்றும் பொருந்தப்பட்ட சகலமும், அதுவெனதாகவும் இதுவெனதாகவும் வைத்திருக்கின்ற இவைகளேமனமாகும். இம்மனதை அபாவனமென்னும் கத்தியினால் கெடுப்பாய்.

அ. மன மிறந்ததற் கடையாள மியாதெனின்.

§ —கூட்டமான மேகங்களனைத்தும் சண்டமாருதத்தால் நீங்குவதைப்போல, வராநின்ற கல்பக்ஷயத்தினால் மனமானது நித்திய சென்று நசிக்கும், மனதுநசித்தலே மோதாநின்ற ஆழிக்காற்றும் பிரளயசமுத்திரமும் பூமிமுழுதும் உருகும்படி எரிக்கின்ற பன்னிரண்டு சூரியர்களும் ஏககாலத்தில் வந்தாலும் துன்பமுண்டோ. ※ —

கூ. பரம சுகத்திற்கு விக்கின மியாதெனின்.

மனதைக்கொண்டே மனதைக்கெடுக்கில், தானே உலகங்களனைத்திற்கும் முதன்மையான சர்வபூமனைப்போல ஆநந்தமானது பூரணமாகப் பெருகி, கற்பனையற்ற மோக்ஷசாம்ராஜ்யத்துக்கே

¶ இ-ம். மனோநாச மானவிடமே பரமசுகமென்பதாம்.

† இ-ம். மனோசங்கற்ப மிறந்தவிடத்தப் பரமசுகமுண்டாமென்பதாம்.

‡ இ-ம். விடயதோட திருஷ்டியினாலம்மனதைக்கெடுக்கவேண்டுமென்பதாம்

§ இ-ம். ஞான திருஷ்டியினா லவ்விடயங் கெடுமென்பதாம்.

※ இ-ம். அநந்தவிடர்களுண்டாயினு மவ்விடரில்லாதிருப்பதே மனமிறந்தகுறியென்பதாம்.

நெருங்கி ப்ரகாசிக்கின்ற பிரமபதத்தைச் சேர்ந்து நிரதிசயானந்தத்தைப் பெறுவாய். நாநாவிதமாக நினைத்து இருந்த மித்தையென்னும் சம்பத்துள்ள மனமே ஆத்மாவுக்கு விரோதமாம். ¶—மனமென்னுஞ் சத்துருவானவன், நாநாவிதமாக விடயானுபவங்களால் உன்னைக்கெடுக்காமல் தெளிவாதற்குரிய சந்தோஷமென்கின்ற வாழ்க்கையுடைய இராகத்தினால், குற்றமுள்ள தனிமையான மனதைக் கெடுப்பாய்; அறிஞர்களுக்கும் பிரியமாகியும் நின்மலமாகியும் மிகவுங் குளிர்ச்சியாகியு மிருக்கின்ற பூரண பாவமானது அகம்பாவத்தினால் பின்னப்படாது. §—குறைவு நிறைவுமில்லாத பூரணபாவத்தினால் சங்கமில்லாத பரமானந்தத்தைக் கொடுக்கின்ற பிரமபதமானது, அழிவற்ற பதமாகும்; சஞ்சலத்தினால் கெடாதமன மரிதாம்; உஷ்ணமானது அக்கினியை நீங்காததுபோல துக்கத்தைச்செய்கின்ற சஞ்சலமானது மனதைவிட்டு நீங்காது. ஞானத்தினுடைய சலனசத்தியே மனமாம், ‡—சலிக்கின்ற அம்மனமே சகமாகும், சலனமற்றால் மனதழியும், இந்நிச்சயமே நிட்காமதபமாம், ஆத்மஞான சாத்திரத்தின் அந்தரங்கமும், நிருமலமான மோக்ஷமும், தெளிந்த வஸ்துவுமாம். மனத்தினது நீங்காதசலனமே மாயையென்றும், தொடாநின்ற வாசனையென்றும், அச்சலன சத்தியினாமங்களாம், சலிக்கின்றமனதும் அச்சஞ்சலசத்தியேயாம்; அம்மனோசலனசத்தியை நீங்காதவாத்மஞானவிசாரணையால்கெடுப்பாய்.—†

க0. அச்சங்கற்பமியாதினாற் கெடுமெனின்.

கக. நிராசையானசமதிருஷ்டியெதைக் கொடுக்குமெனின்,

க௨. சஞ்சலமானமனதைக் கெடுக்கு முபாய மியாதெனின்.

அற்பமாகின்ற இஷ்டவஸ்து வியாகத்தினால் பரமனின்பமுண்டாகும், உள்ளதாகிய பிரமத்துக்கும், இல்லாததாகிய சகத்துக்கும், நடுவிலிருந்து சித்தியும் சடத்தியும் பொருந்தி, மத்தியிற் சலித்துக் கொண்டிருப்பதே மனமாகும். இம் மனமானது அறிவின் முயற்சியால் ஞானஸ்வரூபமாம், அறியாமையின் முயற்சியினால் சகத்தாம். *—முயற்சியுள்ளதாய் மனமானது ஒன்றிலொன்றில் அப்பொருளேயாம், ஆதலால் விடயத்திற் பாய்கின்ற மன

க௩. மனோ ருவமியாதெனின்.

க௪. அம்மனதையாதினா லடக்கலாமெனின்.

¶ இ-ம். சங்கற்ப விகற்பாத்மகமான மனதே யாத்மசுகத்திற்கு விக்கினமென்பதாம்.
§ இ-ம். நிராசையானவ்விகற்பங்களைக் கெடுக்கவேண்டுமென்பதாம்.
‡ இ-ம். பரமபதத்தைக் கொடுப்பதற்கு நிராசையேகாரணமாம்.
† இ-ம். ஆத்மவிசாரத்தால்மனோசஞ்சலத்தைக் கெடுக்கவேண்டுமென்பதாம்.
* இ-ம். மனது சடசித்து வடிவமாமென்பதாம்.

௧௫. மனதினாலாத்மாவுக்குச் சகாயமுண்டாவெனின்

௧௬. மாயா மயமான மனதைக் கெடுக்குமார்க்கமியாதெனின்.

௧௭. விடய மயமான மாயாசங்கற்பமியாதினால் கெடுமெனின்.

௧௮. அஞ்ஞான திருஷ்டி நீங்கு முபாயமியாதெனின்.

தை ஆத்மஞானமனதினால் நீக்கி, மேற்சென்று சோர்வில்லாமல் செல்வமென்னு மழிவற்ற பரமபதத்தை சீக்கிரத்திற்பெறுவாய்; சலனமுள்ள மனதை நிச்சலமானமனதினால், சார்வபூமனுனவன் அரசர்களைத் தமதாக்கினையில் நிறுத்துகின்ற நீதியைப்போல, நீக்கித் தன்வசியிலேநிறுத்தற்கு வல்லமையான தன்மையையுடையதாம். §—சமூகமென்னுஞ் சமுத்திரத்தில் ஆசையென்கின்ற முதலையானது பிடித்திழுக்க, மனமென்னுஞ் சுழலில் அகப்பட்டுச் சுழல்கின்றோமென் றறிபவர்களுக்கு மனமென்னுங் கப்பலானது எட்டும், வீரமுற்று மலினமனதை நிர்மலமனதினால் கெடுத்து, சமுத்திரத்தில் மையாமல் பரிசுத்தமனதை யுறவுசெய்து ஆத்மனை நீ ஆகந்தனைப்பற்றி வைபடுவிப்பாய் ஆத்மவுக்கு வேறெருவரால் வாழ்வுண்டாமோ ‡—சேவ் வெய்யாதவைகள் மனதின்கண்ணுதித்தவையோ அவ்வாதவைகளியாவையும், அத்தருவிடத்தில் கெடுக்கில் அந்மாசமே மாயநாசமாம். முதன்மையனை போகமென்றும் யோகமென்றும் சொல்லிய நீங்கிரண்டுவாதவைகளையுநீக்கி, வந்திருக்கின்ற பாவமென்னு மிரண்டையுமாற்றி, நிருவிகற்பமாய் நிலைபெறுவாய். †—நிலையாத்திறமுள்ள இச்சை நீக்கினால், அவ்விச்சாத்தியாகமே அஞ்ஞானமுமனதும் நசித்ததாம், விடயத்திற் பழகுகின்ற இச்சையே துன்பமாகும், நிராசையே சொல்லுதற்கரிய நிருவாணமாகும், மிகுமற்ற தனதெத்தனத்தால் அதுண்டாகும் அறிவில்லாதவர்கள் உடலெடுப்பதாயும், நிறைந்த பித்தையதாயும், பெயமாத்திரமாயிருக்கின்ற அறிவானமானது, சலமற்ற சைதன்யமென்னுமனதில் பிரித்ததாம். ¶—

இப்படியென்று விரிட்டச்சொல்லவும், இராமனவர், அறிவானமனதை சொல்லத்திலுண்டாகுவதும்பெருங்கிருக்கின்ற இவ்வறிவானமானது, இவ்விடத்தில் அற்பமுமில்லாமல் எப்படியொழிவிடுகின்றதெனில்லவேண்டுமென்றுகேட்க; வசிஷ

§ இ-ம். சித்தருவமானமனதினுற் கெடுருவமானமனதைக் கெடுக்கவேண்டுமென்பதாம்.

‡ இ-ம். சித்தருவமான மனதைத்தவிர, ஆத்மாவுக்கு வேறுசகாயமின்றென்பதாம்.

† இ-ம். சங்கற்பமுதித்தவிடத் தொடுக்குவதே மனதைக் கெடுக்குமார்க்கமென்பதாம்,

¶ இ-ம். நிராசைவடிவமான ஞானதிருஷ்டியாலச்சங்கற்ப நீங்குமென்பதா

யான தன்மையுடைய வசிட்டர் சொல்லுவார். வலியதுன்பமென்னும் முட்கணிறைந்த கொடிகாகிய சகமென்கின்ற மலைச்சாரலில், நிலைபெற்றவாத்மாவை பொருந்தத்தள்ளி, அவ்வாத்மாவுடன் கூடத் தானும் விழுகின்ற மனமேயானது, உள்ளதென்னுமாற்கின் தத்துவதிருஷ்டியில்லையாம் —

கக. அஞ்ஞான திருஷ்டி நீங்கு முபாயமிதுவென்பது.

சகமென்கின்ற அவித்தையின்முடிவாய் எவ்விடத்தும் நிறைந்திருக்கின்ற பரவஸ்துவானது உதயமாயின், கிரிக்கின்றமனைக்கு ஆசையேயில்லாதுபோம், இம்மாயாசகமே யோகமாம். நிறைவில்லாத சங்கற்பமானது கரிக்கில் இவ்வவித்தையானது நாசமாம்; ஞானமென்கின்ற சூரியன் உதயமாகுதல், இதயாகாசத்தில் வாசனையாகிய அந்தகாரத்தைநாசமானது நீங்குமென்று சொல்லுவார். §—ஞானமேயாம் வஸ்துக்களியமாதல் மனைபென்கேற சொல்லில், ஞானமென்கின்ற ஆத்மபாவனையிலும் நீக்கொமின்றி அந்தாமையானது கெடுமென்று சொல்லுவர், ஆத்மாவென்பது ஏதுவென் றிராமன்கேட்க, என்னைத்துக்க தமக்கின்யுடைய வசிட்டர்சொல்லுவார். திரிஸ்யத்தி வைடத்திலேயே யவைடயாததாயும், எவ்விடத்திலும் பரிபூரணமாயும், உள்ளதென்று சொல்லப்பட்டதாயும், பெயரில்லாததாயுமிருக்கின்ற மேலானதானமே, பிரமஞானமேயாம். ‡—இவை யென்று கட்டப்பட்ட சகமுறும் ஞானசாரமாயும் நித்தியமாயுமிருக்கின்றது பிரமமேயாம், எப்பொருளும் ஆத்மமுள்ள மனமாகிய கற்பனையின்றும், மனமுறும் சகமுமென்று சொல்லப்பட்ட அவை களைத்தும் முன்று லோகங்களிலுமில்லை, அது வானவிகாரமுமில்லை, இரண்டில்லாத பூரணமாகிய அகண்டமானம் பெற்றிருக்கின்ற சின்மாத்திரமே பிரத்தியக்ஷமாயிருக்கும். †—சலனமாயும், அசலிதமாயும், அறிவற்றதாயும், பரிசுத்தமாயும், விமலமாயும், பிரிவில்லாத ஞானமாத்திரமாயும், அன்பற்ற சற்சமில்லாததாயும், உபசாந்தமாயும், இவையாவான வஸ்துக்களை த்துக்கும் கலந்து விகாரமற்றதாயு மிருக்கின்ற ஞானத்தாலில், தாவரத்திலிய தனது சங்கற்பத்தையே யிச்சித்து, தனதுவசத்தில் தானே உண்

உ௦. திரிஸ்யத் தை கெடுகுக் திருஷ்டியாதெனின்.

உக. ஞானமே பேடிப்பட்டதென்பது.

உ௨. அறிவுருவாத்திரு மேரும னென்றும் பின்பேறுவதென்.

§ இ-ம். ஞானப்பிரகாசவுதயத்தி லந்தகாரனுக்கு கூரா நீங்குமென்பதாம்.
‡ இ-ம். சாதிருஷ்டியான ஞானமே இதுவாமென்பதாம்.
† இ-ம் சகாதியெல்லாமிக சுத்தமேதுமிருவான பரிபூரணமேயாம்

௨௩. ஆயினப்போதம் வெளிப் படவில்லையோ வெனின்.

டாயிற்று. ¶—சொல்லிய ஞானமானது அளவற்ற சங்கற்பத்தைச்செய்து அதிற்செல்லும் அவ்வறிவானது இந்தப்பிரமத்தின் மனமேயாம்; இப்பிரமத்துக்கு அளவற்ற சத்திகளுண்டா யிருக்கும், இரண்டில்லாமல் எவ்விடத்திலுஞ் சமமாகச்செய்கின்ற வேகமான விம்மனத்தில், சலத்திலுண்டான அலைகளைப்போல, நாநாவிதமாகிய வல்லபசத்தி யுண்டாகும்.

௨௪. ஆயினப்போதம் பந்தமாகாதோ வெனின்.

‡—உள்ளே பொருந்தப்பட்ட சங்கற்பத்தினு லுண்டாகிய மனோரூபமானது, அச்சங்கற்பத்தினால் மோதுகின்ற வாயுவினால் உண்டாகிய வக்கினிச்சுவாலையானது வாயுவினாலணைவதுபோல நசிக்கும். யான் மத்தியமாயிருக்கின்ற பிரமஸ்வரூபம் அல்லவென்று பார்ப்பதே மனத்திலுள்ள பந்தமாம்; எள்ளளவாகிலும் பிரிவில்லாத பிரமஸ்வரூபமே நானென்கின்ற திடபாவனையே முத்தியாம்.

௨௫. ஆயின் மாயாகாரிய மின்றோ வெனின்.

§—யான் அஞ்ஞானமும், துன்பமும் உறுப்புகணிறைந்த வுருவங்களுமாகிய இவைகளை உள்ளவென்று பாவியிருக்கின்ற அறைவைகளுக்கிசைந்த நாநாவிதமாகிய நடைகளினால், ஆசையும் கட்டுப்படுதலும் உண்டாகும்; சடமாகிய விவைகளில் யாதொன்று நானல்லேன், ஊன்களும், நரம்புகளும், அஸ்திகளும், புண்ணீரும், நானல்லேன், தேகத்தினதீதமாகிய பிரமஸ்வரூபமே யானென்கின்ற நிச்சய முடையவர்கள் மாயையை யறுத்து தன்னை யறிந்தவர்கள்.

௨௬, அவ் வனுபவ மியாதினு லுண்டா மெனின்.

†—தானல்லாததாகிய சரீர முதலிய வஸ்துக்களில் நானென்கின்ற பாவனையாகிய சனமாகியமாயையை, அறிவில்லாதவர்கள் உண்டென்று நியமிக்க உண்மையாம்; அறிவையுடையவர்களுக்கு அம்மாயை யில்லாததுதாம் மனதெண்ணினதை அரசர்களுக்கு மந்திரியைப்போல, சித்தத்தில் பஞ்சேந்திரியங்கள் செய்யும், ஆகின்ற நல்லறிவினாலும் நன் முயற்சியினாலும், போகத்தின் அவாவென்னும் வாசனையை வேருட

¶ இ-ம். சின்மாத்திரமான பிரமத்தினின்றும் தனது ஸ்மரணமான சொர்போத முதித்ததன்றென்பதாம்.

‡ இ-ம். போதமானது மனோருபமாய்ச் சகலசத்திகளோடுங்கூடிச் சகலத்தையும் பேதம்போலத் தோற்றுவித்ததாம்.

§ இ-ம். போதமான தழித்தவிடத்தொடுங்கிச் சகலமுந் தன்மயமாய்ச் சிக்கிற் பந்தமாகாதென்பதாம்.

† இ-ம். தானே பிரமமென்று மனாபவத்தினாற் பாஞ்சபூதபொதிக மயைத்தும் வேறின்றென்பதாம்.

உஎ. போக விச்சை யாதினு னீங்குமெனின்.

ன்கெடுப்பாய் ¶—என்னுடைய புத்திரனென்றும், என்னுடைய திரவியமென்றும், யானென்றும், இவனென்றும், அவனென்றும், இதுவென்றும், அதுவென்றுஞ் சொல்லப்பட்ட வாசனையானது, மின்னலைப்போல அழிகின்ற நிலைமையுள்ள இந்த்ர சாலத்தைப்போலவாகும்; நன்மையுள்ள ஞாதாவாகி அஞ்ஞானமான குணத்தைப்போக்கி அழிவுள்ள திரிஸ்யத்திலிருக்கும் நினைப்பைவிடுவாய்; உன்னுடைய ஸ்வரூபமில்லாத புத்திராதியான அம்மாயாசம்பந்தங்களை நீயென்றெண்ணி அஞ்ஞானிகளைப்போல வருந்தப்படுவதென்ன. ‡—மூடமாகியும் சடமாகியுமிருக்கின்ற தேகமென்பதார்?

உஅ. ஆயினித் தேக னாமல்லவோ வெனின்.

அதனிமித்தஞ் சுகதுக்கங்களில் அமிழ்ந்தி ஓர்பிரயோசனமுமில்லாமல் துன்பப்படுகின்ற நீயென்பதார்? ஆச்சரியமாச்சரியம்!!! இந்த வொருவிசித்திரமானது இருந்த ப்ரகாரம்பாராய், ஒன்றாகியும் சத்தியமாகியும் ப்ரகாசித்த பிரமஸ்வரூபமானது எவ்விடத்திலு நிறைந்திருக்கவும், தோற்றாமல் துன்பமாகியும் மித்தையாகியும் விளங்குகின்ற மாயையானது உண்டாகாமலிருக்கவுந் தோற்றும். §—நல்ல படிகமணிகள் பற்றிப் பாய்ந்திருக்கின்ற பஞ்சவன்னங்களை பற்றாமல் பற்றியிருக்குந் தன்மையைப்போல, அளவில்லாத செய்கைகளிலிருந்தும் பிசுபில் லிருப்பதின்றி அத்தொழிலை நடத்தியென்று அறியுந்தன்மையுள்ள வசிட்டர் மிகவுஞ்சொல்லவும், பாக்கியவானவேர? கேட்பாய்; நிறைந்த சாத்குணத்தையுடைய இராமன்கேட்டுருற்றமற்ற இதயாமமை வெளிதமாய் வசிட்டரிஷியைப்பார்த்து, இதைச்சொன்னார். †—ஈதோர் ஆச்சரியம்! இருக்கப்பிரகாரமென்ன, தாமரைத்தண்டினாலிறல் மலைக்கூட்டங்கள் கட்டப்பட்டு நெரிபடுவதுபோல, முழுது மித்தையாகிய மாயையினால் பிரபஞ்சமானது ஞானவிசாரமாகிய துன்பத்தை அடையப்படுதாம். துரும்பானது பருத்தவயிரத்திலும் வலிமையை யடைவதுபோல, சுகவிருட்டியானது மித்தையாய் விளங்கும், அம்மாயையினால் இடத்தைப்பொருந்தும், என்றுசொல்லு

உகூ. ஆயினிருக்க வேண்டிய ரீடமி யாதெனின்.

௩0. இல்லாதமாயை வருத்துவதும் அதனால் லவனன் துன்புற்றது மியாதென்கின்ற சங்கைகளிரண்டிற்கு முத்தரங்கூறல்

¶ இ-ம். விடயபோக விச்சாத்தியாகத்தாற் பிரமாநுபவமுண்டாமென்பதாம்.

‡ இ-ம். சடதேகத்ரயங்களை யானெனதென்பது நீங்கி விராகையுண்டாமென்பதாம்.

§ இ-ம். ஆத்மஸ்வரூபமேயாமன்றி மித்தைகமன் றென்பதாம்.

† இ-ம். ப்ரத்தியகாத்மஸ்வரூபமே யொன்றிருப்ப பற்றற்று கொச்சமாயிருக்கவேண்டுமென்பதாம்.

௩௧. இல்லாதமாயை வருத்துவதும் அதனால் லவணன் றுன்புற்றது மியாதென்கின்றசங்கைகளிரண் டினுக்கு முத்தரங்கூறல்.

திரும்பவும் இராமர் சொல்லுவார். —இதுவும் இன்னமொரு சந்தேகமும் என்மனத்தி லுண்டாயிருக்கின்றது, முன்சொன்ன லவணவரசன் பெரிய துன்பமடைந்தது என்னகாரணமென் றிராமன் கேட்க, அக்கேள்விக்கு வசிட்டமா முனியானவர் சொல்லுவார். குற்றமற்றமனதினால் செய்கிறதல்லத்தொழிலின் ப்ரயோசனத்தை தேகமனுபவிக்கவில்லை; சொல்லப்பட்ட அவ்வரசன் ஒருதினத்தில் சிங்காசனத்தில் தனியனா யிருந்துகொண்டு,—

௩௨. இதுவுமது.

மனதிற் சிந்திப்பான், நமது பாட்டனாகிய அரிச்சந்திரன் தேகத்தோடுஞ்செய்த பெருமையான விராசசூயயாகத்தை நாமனதினாற் செய்வோமென்று நினைத்துமனதினால், யாகத்துக்குரித்தாகிய உறுகின்றவைகளையும் சகலதிரவியங்களையும் சங்கற்பித்து, வேதசாஸ்திரமார்க்கமாக யாகசாலையிற்போய் முனிகளை வியமித்து பூசித்து வாருங்களென்று தேவர்களை வேதமந்திரங்களினால் வரச்செய்து, மிகவு மக்கினியைவளர்த்தி, —

௩௩. இதுவுமது.

தேவர்களுக்கும், தபசிகளுக்கும், அந்தணர்களுக்கும், ஆராதனைகளை ஒவ்வொருவருக்கும் தொடர்ச்சியாக நடப்பித்து, தனது திரவியங்களையெல்லாம் தொலையாத நிதியாகக்கொடுத்து, இராமனே மனதினால் யாகத்தை நிறைவேற்றினபின்பு, பகற்பொழுது நீங்கிற்று, அரசனையுமவனும் விட்டெழுந்தான், இக்காரணத்தினால் ஒன்றிலொடுங்கியமனதே சுகதுக்கங்கள் அடையும்படி யநுபவிப்பதென்றறிவாய். ¶—

௩௪. சித்தன் றுன்பங்கொடுத்ததென்னெனின்.

சாம்பரிகனுடைய குணத்தை யான் சொல்லக் கேட்பாய், தெளிந்த லவணவரசனது சபையின் முன்னடைந்து இந்த்ரசாலவித்தையினால் மயக்கத்தைச் செய்திருக்கின்ற சாம்பரிகனென்பவன் மறைந்தான், அவ்விடத்தில் இவ்வளவு நடையையும் பார்த்து கூடவிருந்த நம்மை இதென்னகாரணமென்று, அவ்வல்லமையுடையவரசனும் மந்திரி முதலிய சகலருங்கேட்க, உள்ளத்திற் றிரிகாலத்தையுந் தெரிந்துகொண்டு,—

௩௫. இதுவுமது.

இவ்விடத்துத் துன்பம்வந்த காரணத்தைச்சொல்ல, இராமனேகேள்? இராசசூய யாகத்தைச்செய்த யாவரும், பன்னிரண்டுவருஷம் வலியதுன்பத்தில் மிகவருந்த மடைதலால், லவணனும் தனக் குரித்தான மனதினால் இராசசூயங் கூட்டிச் செய்தபடிக்கு, இந்திரன் துன்பங்கொடுக்கு நிமித்தம் விண்ணுலகத்தி னி

¶ இ-ம். சகதுக்க மனதுக்கேயன்றித் தேகத்துக் கின்றென்பதை யறிவித்ததாம்.

ன்று ஒருத்தனைப்பற்ப, அத்தேவதூதன், சித்த
ஞய்வந்து யாகஞ்செய்த லவணராசனுக்கு அரிய
துன்பத்தைக்கொடுத்துத் திரும்பிப்போயினன். †—

௩௪. ஞானத்தைக் குறித்தோன்ற ஞானஞ் ஞானபூமிகளைத் தொகுத்துக்கூறல்.

ஸ்ரீராமா? இன்னமொன்றுசொல்ல நீகேட்பாய்
அஞ்ஞானபூமி ஏழுமார்க்கமாம், முடிவாகியஞான
பூமியானது ஏழுமார்க்கமாம்; சொல்லிய இவ்விர
ண்டு மார்க்கங்களும் தம்மிற்றாம் பற்பலவாகும்,
அவற்றி லொன்றுக்கொன்று சம்பந்தமாம், ஒன்
றோடொன்று வியாபித்து பொருந்துவனவாகிய
மார்க்கங்களானவை அனேகமில்லனவாம்; ப்ரத்தியட்
சமாகியஸ்வரூப நிச்சயத்தைப்பெறுவதே மோக்ஷ
மாம்; அச்சொரூபத்தைவிட்டு நழுவுதல் தேகாபி
மான நாமென்கின்ற பந்தமாம். ¶—இப்பூமிகளைச்
சுருக்கமாகச் சொல்லுவோம், அவ்வஞ்ஞான பூமி

௩௫. ஆத்மஸ்வரூபத்திலை மனந் மாறாதலை மறிவித்தல்.

களைக்குறித்தும் ஞானங்களைக்குறித்துஞ் சொல்லுவதை
யாகிலேயெனின், அநாதியாகச்சத்தமாத்திரமாயுள்
ளதான ஸ்வரூபத்திலிருந்து சஞ்சரிக்கின்றவர்களேவி
ஷயத்தியானமுடைத்தியவுக்கென் றுமுறைக்குற்றங்க
ளையும் செய்தவர்களாம், உண்மைஞானமில்லா
தவர்கள் காமநாதியோங்களைச் செயிக்காதவர்க
ளாம், தேகேந்திரியங்களிலே செல்கின்ற ஞானமே
பார்த்தற்குரிய ஸ்வரூபத்தினின்று நீங்குதலாம்.—

௩௬. இதுவுமது.

ஆத்மஸ்வரூபத்தைவிட்டு நீங்குதலே மோக
மென்று சொல்லுவதின், வேறே மோகமென்றெ
ன்று சொல்ல முன்னும் பின்னுமில்லையாம், ஒருவி
ஷயத்தினின்று நினைவைவிட்டு மேலொரு புறத்தி
லிருக்கின்ற விஷயத்தை நினைக்கும் இடத்தில்,
அவ்விரண்டினுக்குள் மத்தியிலுஞ் சங்கற்பரஹி
தமாயிருக்கின்ற ஞானமே ஸ்வரூபத்தின்றன்
மையாம். இந்தஞானம் சுத்தமானதாய், சலனமி
ல்லாததாய் பாஷாணத்துக்கு ஒப்பாயிருக்கின்ற நனவி
லுள்ள நிருத்திஞானமும் சுழுத்தி யவத்தைகளிலு
ள்ள அஞ்ஞானமும் நீங்குவதுமாம், §—தேக

௩௭. மோக்ஷவிஷயமாகிய அஞ்ஞானபூமி ஞானங்களைப் பகுத்துரைத்தல்.

ம் நானென்கின்றதிலும் வேறானதேஞ் ஞானமு
ம்மிக்க, சகலோபாதமாய் சர்வசாக்ஷிச்சயமே
ஆத்மஞானஸ்வரூபமாகும், முன்னுரைத்த அஞ்
ஞானமாகிய பூமிகளைக்கேட்பாய், இதிலாகிய விசு
த்தசாக்கிரமும், மோசாக்கிரமும், மகாசாக்கிரமும்
அதிர்சாக்கிர சொப்பனமும், சொப்பனமும், இச்
சொப்பனசாக்கிரமும், சுழுத்தியுமென்று சொல்ல

† இ-ம். லவணனை அபிசாரமாக துன்பஞ்செய்ததை முன்னாமுரைத்ததாம்.
¶ இ-ம். ஆத்மஸ்வரூபஞானபூமியேழும், அஞ்ஞானமயமாகஞ்ஞானபூமி ஏ
§ இ-ம். ஆத்மானாத்ம விவேகமறிவித்ததாம். [ழு மறிவிக்கப்பட்டதாம்.

௪0. அதன்முதற் பூமியி னிலக்கணம் அறிவித்தல்.

ப்படும்.— இத்தன்மையையுடைய அஞ்ஞான பூமிகளேழும் ஒன்றேடொன்று கலந்து இப்பூமிகளநேக நாமங்களையடையும், ஆத்மஞானத்தி லிருந்து ஒருஞானமானது, நாமமில்லாததாயும், களங்க மில்லாததாகியும், இனியுண்டாகிவந்து விருத்தியடையாகின்ற மனது சீவன் முதலாகவருகின்ற நாமக்கிரிகைகளுக்கு ஆதாரமாகியும் பீசரூபமாகியும் நிற்கின்றவதனால், முதற்பூமியானது விந்துசாக்கிரமாம். ¶—இவ்விந்து சாக்கிரமானது பிரமஞானத்துக்கு முதன்மையான அவத்தையாம்,

௪க. இரண்டாம்பூமி மூன்றும் பூமியின் இலக்கணங்கூறல்.

சீவனுண்டானபின்பு இவனென்றும் இதென்னுடையதென்றும் முன்னில்லாததான இப்பொழுதற்பமாக உண்டாயிருக்கின்ற நிச்சயமே, சாக்கிரமாம். இதையன்றி இவனென்றும் அவனென்றும் இதுவென்னதென்றும் அதுவென்னதென்றும் சிந்திக்கப்பட்ட இதுமுதலாகிய சநநாந்தரங்களில் தொந்தமாக பெருக்கின்ற இந்நிச்சயமானது மகா சாக்கிரமாம் ‡—முன்வாதனையினால் அறிந்ததா

௪௨. நான்காம் பூமியி னிலக்கணங்கூறல்.

னலும், அறியாததானலும், தோற்றினநிலமூந்த தானந்தமயமாகி சாக்கிரத்தில் மனோராச்சியஞ்செய்வது சாக்கிரசொற்பனமாகும். அலைகள் வீசாநின்ற கானலிற்சலமும் கிளிஞ்சிலில் ரசிதமும் இரண்டு சந்திரனுமாகிய இவைகள்முதலாக நானாவிதங்களாக நீங்கின வேற்றுமைகளை சாக்கிரத்தி லனுபவிக்கின்ற தன்மையால் சொற்பனம் நானாவகைப்படும். §—க்ஷணகாலத்தில் அளவில்லாததொ

௪௩. ஐந்தாம் பூமி யாறும்பூமி களின் இலக்கணங் கூறல்.

ழில்களை பார்த்துணர்ந்தோமென்னும் சொற்பனம்நீங்கி முன்னடைந்தசங்கதிகளை சிந்திப்பது சொற்பனமாம். முன்பார்த்தபொருளை அநேகநாள்கழிந்து பின்பு பார்க்கின்ற அவ்வஸ்துக்களை மறந்தவனாய் வெகுநேரம் அறிவுவரப்பார்க்கின்ற சொற்பனமானது சாக்கிரத்தைப்போல சாக்கிரத்திற்கே தோற்றுகின்ற இத்தொழிலே சொற்பனசாக்கிரமாம். —ஆறுவிதமாகிய வவத்தைகளை நீக்கியசீவ

௪௪. ஏழாம் பூமியி னிலக்கணங் கூறல்.

னனவன் பெற்றிருக்கின்ற அவத்தைகளின் றன்மையானது சடத்துவமாகி மேலுண்டாகின்ற துக்

¶ இ-ம். பிரமத்தினுமருபாகிதமா யுண்டானவறிவே சகலசிருஷ்டிக்கும் ஆதாரமாகையா லதுவிந்துவெனவெ நாமமிடப்பட்டதாம்.

‡ இ-ம். பொதுவாயுண்டான வறிவிக்கு முன்னில்லாதபேதஞ் சூட்சுமமாயுண்டானவிடமே சாக்கிரமென்றும், அவ்வாசனைவளர்ந்தவிடமே மகாசாக்கிரமென்றுங் கூறப்பட்டது.

§ இ-ம். சாக்கிரத்தின்முன் பார்த்ததையும் பாராததையுங்கற்பித்து பயனின்றி வீணாக மனோராச்சியஞ்செய்வதே, சாக்கிரசொற்பன மென்பதாம்.

கமிருந்த அறிவுள்ளதான விதுவே சுழுத்தியாம். உலகங்கள் இவ்வவத்தைகளிலுண்டான மாயாந்தகாரத்தில் உண்டாகி நசிக்கும்; இவ்வஞ்ஞான பூமிகளேழும் அடையப் பலவனவாகிய பேதங்கள் ஒன்றுநூறாகும்; இந்தவேழும் அஞ்ஞான பூமிகளாம். ¶—ஞானபூமிகளை அளவில்லாத பேதங்களாக வாதஞ்செய்பவர்கள் சொல்லுவார்கள், அவைகளில், இப்படி சொல்லப்படுபவை நமக்கிஷ்டமுள்ளதாம், இந்த ஞானபூமியின் ஸ்வரூபத்தை புணர்தல் ஆத்மஞானமாம்; அறிந்த விவைகளின் முடிவே அழிவற்ற நிருவாணமாம்; பிரமாணமுள்ள சுபம் விரும்பல், அடைகலாகிய விசாரணை, மனஞ்சிறுகல், உண்மையிற் பொருந்திநிற்றல், இழிவற்ற சங்கற்பமறல், பதார்த்தபாவனை யறுத்திடல், துரியம், என்று எழுவகைப்படும் — இந்த ஞானபூமிகளை புணர்ந்தவர்கள் மயக்கமென்கின்ற சேற்றி லழுந்தார்கள், இவைகளின் குணமாகிய மோக்ஷம் வருமானால் துன்பமானது இனியில்லை, குற்றம்பொருந்திய மோகத்துடன் யாம் பெறவேண்டியதென்ன; பிரமவித்துக்களாலும், ஆத்மஞானசாஸ்திரங்களினாலும், அனுபவஞான விரசத்தை அடைவோமென்று வயிராக்கியத்தினால் எப்போதும் நாடுகின்ற விருப்பமே சுபேச்சையாம்; இச்சுப விருப்பமுதிர்ந்து இரண்டில்லாத சத்துக்களினது குணங்களும், ஆத்மானுசந்தானங்களும், கைகொள்ளுதலே விசாரணையாக நினைக்கவேண்டும். †—இப்படிப்பட்ட சுபேச்சையோடு விசாரணையென்று சொல்லிய இரண்டு பூமிகளின் சாதன நிறையவும் விடயவாசைகளைத் தள்ளி மனதொருமிப்பது சித்தஞ் சிறுகலாகும். சொல்லிய இந்த மூன்றுபூமியின் சாதனத்தினாலும் மனதினிடத்தில் உண்டாகப்பட்ட அந்த நிராசையினால் தத்வஞானம் பொருந்துதலே உண்மையில் மருவலாகும். அத்தன்மையவான இந்நான்கு பூமியினப்பியாசத்தினாலும், மெய்ஞ்ஞான நந்தானுபவத்தில் அழுந்தி வேறுபிய விடயசங்கமில்லாததே சங்கற்

௨௫. மாயாவிசித்திரத்தை யறிவிக்கு நிமித்தம் அஞ்ஞானபூமியைச் சொல்லியதை நீக்கிச் சித்தை யடையும்பொருட்டு ஞான பூமியைப் பகுத்துக் கூறல்.

௨௬. முதற் பூமி இரண்டாம் பூமிகளின் இலக்கணங் கூறல்.

௨௭. மூன்றும்பூமி நான்காம்பூமி ஐந்தாம்பூமிகளின் இலக்கணங் கூறல்.

¶ இ-ம். ஆத்மப்ரதிவிம்பமாயெதிரிட்ட விடயத்தைச் சுகமென்றறி வழுந்திப்போவதே சுழுத்தியென்பதாம்.

† இ-ம். எப்போதும் பந்தத்தைக்கெடுத்து முத்தியையடைய விரும்புவதே (சுபம்விரும்பல்) சுபேச்சையென்றும், அஃதடையு நிமித்தமாத்மாநாத்மவிசாரமே விசாரணையென்றுஞ் சொல்லப்பட்டதாம்.

௨அ. ஆறும்பூமி ஏழாம் பூமிகளின் இலக்கண மறிவித்தல்.

பம் அறலாகும். ‡—இவ்வைந்து பூமியின்முதிர்ச்
சியினாலும் தானாகிய ஆத்மஞானத்திலழுந்திய ஆ
நந்தத்து அமைதியால் புறம்பிலு முள்ளிலு மிருக்
கின்ற விடயங்கள் விடுபட்டு, பக்கத்திலிருப்பவர்க
ள் வலிமையினால் அறியவருவதே பதார்த்தாபா
வனையாம். நிறைவாகிய இவ்வாறு பூமியினனுபவ
த்தினாலும் திரிஸ்ய வேறுபாட்டை நீக்கி நிரமுள்ள
தனது சுபாவஸ்வரூபத்திலிருப்பதே மறைபட்டிரு
க்கின்ற தனதாத்ம ஞானஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷ
ப்படுத்துந் துரியமாகும். ஜீவன்முக்தர்
களது மார்க்கமித் துரியமேயாம். ¶—துரியவாழ்வா

௨கூ. இவ்வேழாம்பூமியி னிலக்கணங் கூறல்.

னது சொல்லிய ஜீவன்முக்தித் தன்மைக்கு மேலா
ன விதேகமுக்தர்கள் பொருந்தாநின்ற துரியாதீத
மாகியபதமாம்; ஆத்மஞானத்தினால் தனதுஸ்வரூ
பத்தையுணர்ந்த மகான்மியத்தையுடைய புருடனு
ல் அடைகின்றதன்மையையுடையதாம்; நிலைபெ
ற இத்துரியபதத்தைபெற்ற ஜீவன்முக்தர்கள் சு
துக்கங்களில் முழுகார்கள்; இம்முறைமையினால்
க்கத்திலுள்ள ஜீடன்முதலானவர்களால், தேகசம்
ரக்ஷணையையு நித்தியகன்மங்களையுஞ் செய்யும்படி
சொல்லுகின்ற மார்க்கத்தின்படியே நித்திரையை
விட்டு எழுந்தவர்களைப்போல நிகழ்காலத்துக் க
த்த குணங்களைச்செய்துஞ் செய்யாதவர்களாய் நி
வாணசுகமாய் வாழ்வார்கள். †—இந்தஞான பூமி

௩௦. ஞான பூமியின் பெருமையை யறிவித்தல்.

ளேழும் பரிபூரணஞான மடைந்தவர்களுக்கேய
றி மற்றவர்களுக்குத்தோற்றாது, இஞ்ஞான பூமி
ளையடைந்தால் அஞ்ஞானத்தையுடைய மிருகங்
ளானாலும், ஆசாரமில்லாதவனானாலும், சரீரத்தே
டு கூடினவனானாலும், மரணமடைந்தவனானாலு
முத்தனென்பதற்குச்சந்தேகமில்லை; தத்துவஞான
மென்பது தன்மனோடாந்தம்விடுதலாம், இப்பத
வர்த்தியைப்பெற்றால் இதுதானே மோக்ஷமாப
ம். அஞ்ஞானமானது, யானைச்சலமுதலாகிய மயக்
ங்களை பொய்யென்றுபார்க்க வதின்ப்ராந்திபோ
அறிவின்மையும் மித்தையென்றுபார்க்கில் அஞ

‡ இ-ம். மனம் ஆத்மவிசாரத்திற்கரைவதே (மனம்பிரிதல்.) ஞானமாகுமெ
ன்றும், தத்துவஞானமாதலே (உண்மையிற் பொருந்தியிருத்தல்.) சத்துவாபத்தி
யென்றும், அஃதொன்றிலும் பற்றற்றிருப்பதே (சங்கற்பமறல்.) யசம் சத்
யென்றுஞ் சொல்லப்பட்டதாம்.

¶ இ-ம். திரிஸ்யதிருஷ்டிநீக்கி இருக்குமாயிருப்பதே பதார்த்தாபாவனைெ
ன்றும், சுசாதிக விசாதிக சுகதபேதரகிதமான சைதன்யமே துரியமென்று
சொல்லப்பட்டதாம்.

† இ-ம். இப்பூமியான துரியமே துரியாதீதமாயும் விளங்குமென்பதாம்.

௫௧. ஞான பூமியை யடைந்தவர்கள் பெருமையும் அடையாதவர்கள் சிறுமையு மறிவித்தல்.

நாசமாம்,—தனதாத்மஞான ஸ்வரூபத்தையுணரா நின்ற சமாதியுடையவர்களுக்கு அடையத்தகுந்த உண்மைஞானபூமிகளை உணர்ந்து முதன்மையான சத்துக்கள், சகலருந் தியானிக்கவும், வணங்கவும் உரியராம். இந்திரியங்களென்கின்ற வெகுகாலமாயுள்ள சத்துருக்களை செயித்தவர்கள் அழிவற்ற நிலையிலிருந்தவர்கள், பலசீவர்களும்வணங்க மேன்மையாக வாழுகின்ற தேவேந்திரர்களும், சக்கரவர்த்திகளும், திரணமாகத் தோற்றுகின்ற அத்தன்மையான பரமபதத்தை அடைந்தவர்கள், அப்பூமிகளை யடைந்தவரேயாம். ஞானபூமியை யடையாதவர்கள்சம்சாரசமுத்திரத்தில் மூழ்கிக்கிடப்பவர்களாவர்.

௫௨. அத்துவிதத்தை யடையுமார்க்கமிந்தஞானபூமியைத் தவிர வேறின்றெனல்.

—மனதடங்குகின்ற தந்திரமேஞானமாம், ஞானபூமிகள் அம்மனமடங்குமுபாயமாம், மாட்சிமைமிகுந்த இந்தஞானபூமிகளையல்லாமல்,இப்பொழுதுசொல்லிய மகத்தாகியபிரமபதத்தை அடையக்கூடாது.மட்டின்றி,நீயென்றும்,நானென்றும்,தானென்றும்,அன்னியமென்றுஞ் சொல்லப்பட்ட ஒன்றுமாகாமல், அபேதமாகியும், தோஷமில்லாததாகியும்,காரணமில்லாததாகியும், ப்ரகாசிக்கு நிரதிசயானந்தமாகியும்,உபசாந்தமாகியும், ஞானமாகியும், ஏகமாகியும்,நாசமில்லததாகியும்,நாமமில்லாததாகியும்,உயர்வுதாழ்வில்லாததாகியும்.

௫௩. ஞான பூமியினு லுண்டான வஸ்துவி னிலக்கணங் கூறல்.

—பாவமும், அபாவமும்,ஆதியும்,அந்தமும்,பற்றுதலும், உள்ளதும், இல்லாததும்,அனேகமும், ப்ரகாசமும், ஞானமும், அறிவின்மையும் என்றுசொல்லப்பட்ட விகைகளில்லாததாகியும், சிதாகாயத்தி லிருக்கின்றதாகியும், வியாபகமாகியும்,சகலமுமாகியும்,அல்லாததாகியும் மனதினாலும்,வாக்கினாலும் தாவக்கூடாததாகியும், ஆனந்தங்களுக்கானந்தமாகியும்,நீங்குதற்கரியபூரணத்துக்குப்பூரணமாகியும்,அவாவிறந்ததிடமாகியும், தானேதானுயர்வதாகியும் விளங்குகின்றவஸ்து ஒன்றேயாம்.

௫௪. ஞான பூமியினு லுண்டான பிரம நிச்சயத்தைச் சொல்லி அஞ் ஞான பூமியினு லுண்டான மாயா விசித்திரம் ப்ரத்யக்ஷமான தறிவித்தல்.

¶—ஏழுவிதமாகிய ஞானபூமியினால், அடையப்பட்டபிரமஸ்வரூபம் இத்தன்மையது.இனிமாயையின்பெருமையை, இராமா நீகேட்பாய்? திடப்பொருந்தியவனையாசனனாவான், சரீரத்தை மறந்து மனமென்னுங்கண்ணாடியில் முன்னமேபார்த்தவிந்தமலையினது பக்கத்திலுள்ளகாடுகளை இச்சரீரத்துடன்போய்ப்பார்க்குமிடத்தில் கண்ணிற்காணப்படுமென்பதை மந்திரிகளுடனாலோசித்து, ப

௫௫. இதுவுமது.

டைகளோடும் அமைத்து,—தெற்குத்திசையினட

¶ இ·ம். மனதடங்கின விடத்துண்டான ஸ்வாநுபூதிவிலாசத்தை யறிவித்ததாம்.

ந்தான், திரும்பவுந்திக்குகளைவெல்ல நடப்பவனைப்போல எதிரிற்ப்ரகாசிக்கின்ற விந்தமலைக்கு முன்வந்தான், வடதிசையல்லாத மூன்றுதிசைகளிலுங்காடனைத்துஞ்சுற்றிப்பார்த்தான், மிகவும்வருந்தினான், குறிப்பானவோரிடத்தில், அப்பொழுதுவினைத்துமினைப்பு உருவெடுத்ததுபோலிருக்கின்ற முன்னனுபவித்தவனத்தைப்பார்த்து,—இயமபுரத்தையொத்த அந்தக்கொடிதானகாட்டிற் சஞ்சரிக்குமளவில், நீசர்கள்தொழிலைப்போல அந்தலவணன்முன்சஞ்சாரஞ்செய்தபூமிகளையும், அவ்வூர்களையும்நன்றாய்ப்பார்த்தான், மிகவுமதிசயித்தான், முன்கண்டநீசர்களையும் நீசஸ்திரீகளையும், குடிசைகளையும், கவிராதபாடிக்கு பூமிக்கரசனானலவணன்பார்த்து அதிசயத்தினால்மனமயக்கமடைந்திருந்தான்,—மனந்தளர்கின்றதுன்பங்களைக் கண்களையும்படிநீர்பெருகி சரீரமிளைத்த தகதியழுகின்ற மூப்புள்ளநீசமாதர்கள்குழாத்தில், மிகுந்தவிசனத்தினால்வாயைத்திறந்து தேம்பித்தேம்பி ஒருஸ்திரீமுதனுள்மரித்ததன்மக்கள்நாமங்களியாவையுஞ்சொல்லி மிகுந்தசத்தத்தினால் இப்படி நானாவிதமாக அழுதாள்.—எனதுமடியிலிருந்து நீங்கி இறந்துபோகின்ற குழந்தைகளே! இவ்வினையினால் என்னைப்பிரிந்து எவ்வளவுதூரம்போனீர்களோ! யார்முகத்தைப்பார்த்து பரதவிக்கின்றீர்களோ! சரசமாகச்சிவந்த குன்றிமணிமாலையைத்தரித்திருக்கின்றபுயங்களினால் குளிர்ச்சியாகத்தழுவித்தணியாத எனதுவிசனக்கினியை, பெண்ணே? தணிப்பாயோ, ஐயோஐயோ!!—யாங்கள்பூர்வத்திற்செய்ததவறினால் தோடமற்றிடைத்தரித்திரியத்தைப்போலஎங்கள்முன்வந்தடைந்து, இலகுருமிசோரனேறவராகியவுனதந்தப்புரத்துஸ்திரீகளினதுமோகத்தைத்தவிர்த்து, எனதுபெண்ணைக்கூடிச்சுகித்த அரசனேயெமதுமைனே? எங்களைமறந்துவிட்டாயோ! சந்திரனையொத்த வனதுவதனத்தை இவ்விடத்திலவந்துகாட்டுவையா! இலக்குமிபோன்ற வெனதுபெண்ணுக்குநாயகனே? உமக்கெனதுபெண்செய்கின்ற அற்பகுற்றங்களினால்மனம்வேறுபட்டாயோ!—வலியசமுத்திரமென்னு மகாநதியில் கொடியவினைகளாகியவலைகளானவை வந்துபொருந்தி தனக்குண்டான பூபாலனத்தைவிட்டு, எனதுமகளுக்குநாயகனும், அற்பமான சமுத்திரத்தையடைய சண்டாளரைப்போலவேந்திரனும் சண்டாளத்தன்மையையடைந்தான், மின்போன்றசஞ்சலமில்லாதது, ஊழானது மிகவுங்கொடியது, மிகவுங்கொடியது, என்றழுதாள்.—

௧௬. ஞான பூமியினு லுண்டான பிரம நிச்சயத்தைச் சொல்லி அஞ்ஞான பூமியினு லுண்டான மாயா விசித்திரம் ப்ரத்தியக்ஷமான தறிவித்தல்.

௧௭. இதுவுமது.

௧௮. இதுவுமது.

௧௯. இதுவுமது.

௨௦. இதுவுமது.

௬௧. ஞான பூமியினுண்டான பிரம நிச்சயத்தைச் சொல்லி அஞ்ஞான பூமியினுண்டான மாயா விசித்திரம் ப்ரத்தியக்ஷமானதறிவித்தல்.

௬௨. இதுவுமது.

இப்படியென்றழுது,—அவள்ப்ரலாபித்துச்சொல்லியசகலத்தையுங்கேட்டவனரசன், அவ்விடத்திற் கூடவிருக்கின்ற ஜனங்களால், அவளது துன்பத்தைத்தணித்து, அன்புடன்வருந்தினவுனது துன்பமென்ன? நீயெவள்? உனதுபுத்திரியெவள்? உனதுபுத்திரர்களார்? ஒன்றையும்விடாமல் சொல்லுவாயென்று அரசன்கேட்க,புலைக்கிழவியானவள் கூறுவாள்,—இதுபறைச்சேரி இதிலொருசண்டாளன் எனதுபுருடன், இச்சண்டாளனுக்கு இவ்விடத்தொருபெண்பிறந்தாள், அப்பெண்ணைதேவேந்திரன்போலிருக்கின்ற ஓரரசன்வந்துபுணர்ந்தான், வெகுகாலங்கூட்டியவுறவினால் அப்பெண்மூன்றுபிள்ளைகளையீன்றாள், காரணமாகியவல்லவுழைப்போல கொடியவறுமைவந்து எனதுமக்கள் மரணமடைந்தார்கள்.—அநேககாலம் என்மகள் முதலானவர்கள்வாழ்ந்திருந்தபின்பு, கரியமேகத்தினால்மழையில்லாமல் கல்லசாலமுற்றி கொடியயமனையொத்த கருப்பினால் திக்குதிக்காகச்சென்று சண்டாளர்களெல்லாரும் இறந்தார்கள், நடுங்குகின்றதுன்பத்தையுந்தணித்திருப்பதையும் யாங்கள்சகாயமாகப் பெற்றோமென்றுசொல்ல, வேலாயுதத்தையுடைய அரசன்தனதுமந்திரிகளைப்பார்த்து, பரவசனாய்வியப்புற்று, †—அவர்களுக்கு வேண்டியவைகளைக்கொடுத்து இந்நீசஸ்திரீயினுடைய கொடியதுன்பத்தை நீக்கி அயலூரினின்றுந்திரும்பி தன்னகரில்வந்து நெடியகாலத்தின் தன்மைகளையும், மாயையினுடைய வல்லமைகளையும், அந்தலவணவரசன் நன்றாகப்பார்த்து,சாத்துக்கள் அறிவிப்பதற்குரிய பிரமவஸ்துவையும்யாம்போதிக்கத்தெரிந்து அமைதிபெற்றான். அருட்கொண்டையுடைய ஸ்ரீராமா? இம்மகாமாயையானது தான்செய்தற்கரிய வலியரோகத்தைக்கொடுக்கும்.—இம்மாயைவல்லமையினால் அசத்துசத்தாகும்,சத்துஅசத்தாகும்,என்றுவசிட்டமுனிசொல்லவும், கலக்கமுள்ளமேருவாச் சித்தில் பார்த்தவனைத்தும் ப்ரத்யக்ஷத்திற்பார்த்ததென்ன,நமதுகுலத்துக்காசிரியரேயென்றுகேட்ட, ஸ்ரீராமருக்கு,வசிட்டமுனிசொல்லுவார்.கொடியதானமாயையானது அளவற்ற மயக்கத்தைச்செய்கின்ற காதிகதையினாலே இம்மாயாவிசித்திரத்தை இனியறியலாம், §—காக்கையேற பனம்பழம் வீழ்ந்ததுபோல, வாசனைப

௬௩. இதுவுமது.

௬௪. மாயையை வருத்து மென்பதையு மதனாற் பிரமத்தை யடைந்ததையு மறிவித்தல்.

௬௫. சாக்கிர சொற்பனஞ் சத்தியமான தென்னலெனின்.

௬௬. சாக்கிர சொற்பன மெய்

† இ-ம். சாக்கிரசொற்பனத்திலுள்ள மயக்கங்களைச் சாக்கிரத்திற் றெளிவாகப்பார்த் ததிசயித்ததாம்.

§ இ-ம். இவை மேற்கதையினன்றாய்த் தெரியுமென்பதாம்.

யாகத் தோற்றின தற் கனுபவஞ் சுக் குமமா யுரைத்தல்.

த்தில் மனமானது தமக்குள்ளேதாம் ஒன்றாகக்கல
ந்திருக்குமென்று அறிவினிச்சயத்தினின்றவர்களா
கிய சத்துக்கள் சொல்லிக்கொண்டிருப்பார்கள், ஆ
கையினால்முன்னாளில் இந்திரசாலவித்தையுள்ளசா
ம்பரிகனால் கடையனாகக் காணப்பெற்ற மயக்கத்
தையே யான்சொல்லியிருக்கின்ற லவணவரசன் பி

சுஎ. இதுவுமது.

ன்றினத்திலுங்கண்டதேயன்றிவேறல்ல.—அரசன்
பார்த்திருக்கின்ற சாக்கிரசொற்பனத்திலுண்டான
அறிவின்மயக்கத்தையே, வரையின்பக்கத்தி லிருக்
கின்ற அச்சண்டாளரும்நல்லறிவினால் அறிந்தார்க
ள். லவணவரசனென்னும் அறிவினுதயமானது ச
ண்டாளர்களின் மனங்களிற்றோன்ற, சண்டாளரெ
ன்றுதோற்றுகின்ற வறிவானது இவ்வரசனுடைய
மனதில் உண்டானபடியால்,மகாமாயையானதென்

சுஅ. ஆத்மஸ்வரூபநிரூபணம்.

னசெய்யமாட்டாது. ‡—தோற்றப்பட்ட மாயாவஸ்
துக்களானவை ஞானப்பிரகாசத்தினால் உள்ளனவா
கும்,பஞ்சேந்திரியங்களுக்கும்சம்பந்தமாயிருக்கின்
றவஸ்துக்களியாவும் ஞானத்தினாலல்லாமல் உள்ள
வைகளாகமாட்டாவாம், உண்டாகிவரு ஞாதாவும்
ஞேயமுமாகிய இரண்டினுடையமத்தியில்ஞானத்
மாவுக்கு இசைந்தவடிவம், சார்ந்தறியப்பட்ட விட
யவஸ்துக்களும் இவைகளையறியப்பட்டஞாதாவும்,
ஞானமும்,இல்லாததாகியும், இவைகளைப்பொருந்
துவதாகியுமிருக்கின்றதே,மேலானமோக்ஷமாம். §

சுகூ. ஆத்மானுசந்தானநிரூபணம்.

ஒருவிடயத்தினின்று மற்றொன்றில் மனம்பொரு
ந்தினால் அவ்விரண்டின்மத்தியில், சுத்தமாத்திர
மாகியும்,நாமமில்லாததாகியும்,அறிவில்லாததாகியு
ம்,விடயமில்லாததாயுமிருக்கின்ற, அதுவென்னும்
பிரமமும்,நீயென்னுங்கூடஸ்தரும், ஐக்கியமான சி
தாநந்தஸ்வரூபமாய் எக்காலமும்பிரிவற்றிருப்பாய்;
மிருந்ததுட்டமாகிய அறிவினால்யுத்தியாய்விசாரித்
து, நான் சம்சாரியென்கின்ற கருத்தைக்கெடுத்து
வேரோடேகெடும்படிமனதின்றொந்தங்களைக்கெடு
த்துசுபாவமாயிருந்தபடியேதெளிந்திருப்பாய்✻—

எ0. ஆத்மானுபவநிரூபணம்.

சநநமரணமாகிய வற்றத்திற்கடாங்களைகட்டிச்சுற
ற்றுகின்றவாசனையென்னும்பெருங்கயற்றை மிகவும்

---

‡ இ-ம். ஒருவன்சொற்பன மற்றொருவனுக்குச் சாக்கிரமாகவும், ஒருவன் சாக்கிர மற்றொருவனுக்குச் சொற்பனமாகவு மாவதுபோல, அரசன்மனோரா ச்சிய முன்னுள்ள சண்டாளருக் கிநார்த்தமாகவுஞ் சண்டாளர் சாக்கிரமரசனு க்குச் சாக்கிரசொற்பனமாகவுந் தோற்றிவித்தது, மாயாவிசித்திரமேயன்றி வே றின்றென்பதாம்.

§ இ-ம். திரிபுடிக்கு விலக்ஷணமாகியுஞ் சலக்ஷணமாகியு மிருக்கின்றவஸ்து [மத்தியகதஸ்வரூபமாய் விளக்குமென்பதாம்.

✻ இ-ம். மனதை யாத்மாவிற் கரைக்கவேண்டுமென்பதாம்.

பெரிதான எத்தனத்தினால் அறுக்கப்படவாய். மேலானவாத்மஞானத்தில் முன் உண்டாகியிருக்கும் மித்தையாகியமனது, உலகவேற்றுமையை யொன்கின்ற அசத்தியத்தை சிறப்பையுடைய ஆகாயமானது வடிவமில்லாததாயிருந்தும் இல்லாததாகியநீலநிறத்தை பொருந்துவதுபோல காண்பிக்கும் ‡— தன்பம்பொருந்திய சங்கற்பாசத்தினால்மனதினது நாஸ், பறவையாகத் தொடர்ந்துவந்த மோகமென்கின்ற முன்பனியானது விட்டுநீங்கும், சரற்கால முதிருப்படிவந்தால் ஆகாயம்ப்ரகாசிப்பதுபோல, ஆநந்தபோதமாத்திரமாகியும், அப்ரிவற்றதாகியும், ஒன்றானதாகியும், உருவமிலாததாகியும், சலனமான மில்லாததாகியு மிருக்கின்ற பிரமமானது சொச்சமாய் ப்ரகாசிக்கும். †—

எக. ஆத்மப்ரகாசநிரூபணம்.

உற்பத்திப்பிரகரணம் முற்றிற்று.

திதிப்பிரகரணத்தில்

சுக்கிரன் கதை.

அவதாரிகை.

முற்பிரகரணத்திற், சைதன்யத்தினுண்டான மேனுமெல்லாசமே சகமென்பதற்கு அநந்தஞானபூரிணையும், அதை நிவிர்த்திப்பதற்கு ஞானபூரியாதிகையுமறிவித்து, அச்சகத்தை சைதன்யமயமாக விளங்குமென்பதை, மையந்தகைகளினைந்த திதிப்பிரகரணத்தி லறிவிக்கு மிவித்தும், அவைகளின் முதலிலுள்ள சுக்கிரன்கதையில் சைதன்யத்தினுண்டான மனதிற் சகம்விளங்குவதை நிரூபிக்கிறார்.

க. சகஸ் திதிவிலக்கண மறிவித்தல்.

எழுகின்றதைனும், எழுகின்றவிடமும், எதிராயக்கரண்கின்ற திரவியங்களும், இல்லாமல்குற்றமற்றிருக்கின்ற சிதாகாயத்தில், சகமென்னும் சித்திரமானது உண்டாகித்தோற்றும், உண்மையாகத் தோற்றிய தன்னைத்தானே பார்த்துக்கொண்டிருக்கும்; ஆதலின்னானாவிதமித்திரியங்களும்நீங்குகின்ற சித்திரையில்லாமல் சகம்சாக்கிரத்திற் றோற்றும் சொப்பனத்தை யொத்திருக்கும். —*சாட்சியாகியும், பரிபூரணமாகியும், சொச்சமாகியும், வியாபித்தி

உ. ஆதியிற் சகமின்றோன்மையின்.

‡ இ-ம். ஆத்மப்ரகாசத்தை மனசங்கற்பமானமனது, சகம்போலத்தோற்றுவிக்குமென்பதாம்.

† இ-ம். பிரமசங்கற்பமாயுதித்த மனதைப் பிரமத்திற்கரைத்து தானுமப்பிரமப்ரகாசமாய் விளங்கவேண்டு மென்பதாம்.

* இ-ம். ஓர்காரணமின்றி ஆத்மாவிற்றோற்றுகின்ற சகத்தானது ஆத்மப்ரகாசமாய் நிற்றலின் அச்சகத்திர்க்க சொப்பனமென்பதாம்.

ருக்கின்றபோதுமற்ற வாத்மஞானத்தினால் தாங்காமின்றசகங்களெனைத்தும் ப்ரதிபலித்தல், கண்ணாடியில் தெரிகின்ற நிழலைப்போலாகும், பெருங்காரணகாரியசம்பந்தமில்லாமல் சொல்லாநின்ற சகங்களெனைத்தும் பிரமத்தினிடத்தில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். §—சகங்களுக்கு வடிவமானது தோன்றாநின்ற ப்ரதிபலிமாத்திரமேயாம், பின்னமில்லாததாகியும், சர்வாத்மகமாகியும், பூரணஞானமாயும், வியாபகமான சிதாகாசமாகியும், நிலைபெற்றிருக்கின்றபிரமஸ்வரூபமும் ஏகமேயென்று, வுறுதித்துடன்முயற்சிசெய்து, ஸ்ரீராமா! நீ சிந்திப்பாய். அத்தன்மையுள்ள நிச்சயமானது கைவசமாயின், மனமானதுசலனமற்று நிச்சலமான ஆத்மஞானஸ்வரூபமாகும். ¶—சித்திரங்களனேகந் சேர்ந்திருக்கின்ற ஒருகல்லைப்போல ப்ரகாசிக்கின்ற ஜலகங்களானவை ஒருபிரமமானது தோற்றிக்கொண்டிருக்கும், இரண்டென்பதற்கு சககாரியாரணம் வேறில்லாதபடியினால்சகங்களென்று சொல்லுதற்கொன்றில்லையாம், ஆத்மஞானமேயுள்ளதாம்; சகலசகங்களும்நிச்சயமானபிரமனிடத்திற் ப்ரதிபாமாத்திரமாயிருக்கும், இவை தெளியும்பொருட்டு சுக்கிராசாரியருடையகதையை, ஸ்ரீராமா! நீ கேட்கக்கடவாய். †—முன்பொருகாலத்தில் பிருகுமுனியானவர், பழமையுமுயர்வுமுள்ளமந்தரகிரியினதுபக்கத்தில், நிலைபெற்றதவத்தைச் செய்யுமிடத்தில், அவருடையபுத்திரன், அறிவையுடையவன் சுக்கிரனெனப்பெயருடையவன்றன் பிதாவினுடைய பாதத்தினின்றுநீங்காதவன் ஒப்பற்றஞானஞ்ஞானமென்கின்ற இரண்டுபொருளையின்மத்தியில்விளங்காநிற்கும்மகாபுத்தியையுடையவனான சுக்கிராசாரியார்.—ஆகாயமத்தியி லிருக்கின்ற திரிசங்குமகாராசனைப்போல அறிவறியாமையின்மத்தியி லமர்ந்திருக்கின்றகாலத்தில், அவருடையபிதாவாகியபிருகுமுனியானவர் நிர்விகற்பசமாதியிற் பொருந்தும்படியிருக்க,பிதாவைவிட்டு நீங்காதசுக்கிரனானவர் தனித்திருந்து சுத்தமாகிய வாகாயத்

௫. ஆயிற் சகம் வேறுமேயெனின்.

௬. ஆயிற் சகத்தனியே தோற்று இன்றதே யெனின்.

௭. இதற்குத் திருஷ்டாந்தம் பார்க்க வரலுபவத்தை நிருபித்தல்.

௮. சிதாகாயத்தி லுதித்த சங்கற்பமே ஸ்திர வடிவமாதல்.

§ இ-ம். பிரமத்திலதின் ப்ரதிவிம்பமான சகத்தானதோ ரேதுவுமன்றி விளக்குமென்பதாம்.

¶ இ-ம். சகமானது வேறுயிருப்பதுபோலத் தோற்றுவதேயன்றி வேறன்றென்பதாம்.

† இ-ம். கல்லைவிளக்கும் ப்ரதமை யக்கல்லாயிருந்து முரூபதிருஷ்டியால் வேறாகத் தோற்றுவதுபோலச் சித்தைவிளக்குஞ் சகஞ்சித்தாயிருந்தும் இரிஸ்ய திருஷ்டியாய் வேறாகத் தோற்றுமென்பதாம்.

ளும், ஒருதேவஸ்திரீயானவளைப்பார்த்தனன்.—

எ. அச்சயிக்கற்ப வடிவமாய் மனோராச்சியஞ்செய்தல்.

தென்றற்காற்றலேகின்ற மந்தாரபுட்பங்க ணிறைந்த அளகத்தையுடையவள் ; பெண்யானையைப் போலத் தனித்துவரவும், எதிரேபார்த்து சித்தாங்கிராங்கதனாய் அந்தப்பெண்ணினுருவத்தைச்சிந்தித்து இருவிழிகளையுமூடிக்கொண்டிருந்து, மூந்துமோனையினல் அளவிறந்தமனோராச்சியத்தில் முயற்சித்து,—

அ. விண்ணுலகமாகக் காண்டல்.

இந்தப்பெண் தெய்வலோகத்து ஸ்திரீயேயென்றுநிச்சயித்து, அந்தத்தெய்வலோகத்தில் நானும்போயடைந்து, இந்தவுலகத்துக்குத் தேவர்களாகிய இவர்கள்துதிக்க, அமுருமிருந்தசிங்காதனத்தின்மேல் மின்னல்கணிறைந்த மேகத்தைப்போல இவன்தேவேந்திரனும், இவ்வாசனைச்சூழ்ந்து ஆகாயத்திலுற்களிக்கின்ற தெய்வமாதர்களின் கூட்டமிதுவென்று மனதிலெலித்து,—

கூ. விண்ணுலகத்திற் சங்கற்பமானதைக் காண்டல்.

தேவேந்திரனை இந்தச்சக்கிரன்வணங்க, இந்தச்சக்கிரனை அந்தத்தேவேந்திரனும்வணங்கியபின்பு இடைதற்கரியசுகத்தையுடையதெய்வலோகத்தில் நீங்காமற்சஞ்சரிக்கின்ற அந்தருணத்தில், பருத்துயர்ந்த ஸ்தனங்களையுடையதெய்வப்பெண்களுள்முன்சொல்லிய அந்தப்பெண் முன்னேதோற்றினமாத்திரத்தில், சகிக்கமுடியாதவிச்சையினல் இரண்டுகண்களுங்களிக்கும்படி சக்கிரன்பார்த்தான் ; அத்தெய்வப்பெண்ணுமப்படியே பார்த்தாள்.—

க0. அத்தசங்கற்பஞ்செய்தல்.

அவ்விருவருடையகண்களும், மனங்களும், ஒன்றுக்கொன்று அறுகின்றசமயத்தில், சங்கற்பித்தகாரியங்களில் ஒன்றுந்தப்பாதபெருமையையுடையசக்கிரன், கரிய அந்தகார மூடிக்கொள்ளக்கடவதென்று சங்கற்பிக்கவும், சூரியன்கைப்பாரத்தைப்போலும் அந்தகாரமூடிக்கொள்ள, அவ்விடத்திலுள்ளசகலரும்பலதிக்குகளிலும் நீங்கினார்கள்.—

கக. விடயானந்த மனுபவித்தெய்தல்.

அத்தெய்வப்பெண்ணின்று சக்கிராசாரியரை வந்துபொருந்த, அமுருபொருந்தியகற்பகவிருக்ஷத்தின்கீழே ஒருபக்கத்தில்நெருங்கிச்சேர்ந்து, இருவருமோருயிராக இடையூறில்லாதவிடமாகத்தில் பலகாலமாக எட்டுசதுர்யுக முங்கழிந்தபின்பு, முன்னேசெய்த கருமங்களனைத்தும் முடிந்துபோமுடிந்துபோம் என்கின்ற நிந்தையினல்,—

கஉ. தன்னை மறந்து பிராமணனாதல்.

தேவலோகத்திலின்று பூலோகத்தில்வந்துசேர்ந்தான் ; ஆனாலுமடிமைத்தநமறந்தான் ; இந்தச்சக்கிரனையடைந்தவேதனையாகியதுவாகிய பூர்ணசந்திரகலையைச்சேர்ந்து குளிர்ச்சியையுடைய பாவையாகி, அந்தப்பாவையினல்செல்லாகி, அந்தச்

செழுந்தாளையுடையநெல்லை தேசார்ணதேசத்தி லுள்ளபிராமணன்சமையற்செய்துபுசிக்க, உண்டாகின்ற விந்திரியரூபமாய் சுக்கிராசாரியர்வந்து இப் பிராமணன் மனைவியினிடத்தில் புத்திரனாய்ப்பிறந்

கங. புத்திரன்வடிவமாதல்.

தான்.—அக்காலத்தில் தபசிகளின் றொடர்பினால் அரிதாகியதவத்தை, ஒருமனுவுள்ளபரியந்தம் கனகமயமான மகாமேருவை சூழ்ந்திராநின்ற வாரணீயத்தில்செய்தான்; அச்சுக்கிரனவ்விடத்தில் ஒரு பெண்மானினால் ஒருபுத்திரனை மனிதவடிவமாகப் பெற்றான்; அப்புத்திரவாஞ்சையினால்பந்தப்படுத்துகின்ற அறியாமையினால்கொடாதவண்மையிலேயி

கச. முனிவடிவமாதல்.

னின்றுநீங்கினான்.—பின்னும் அளவில்லாதஜனனங்களில் மயக்கம்பொருந்தியவாசனையினால், சனித்து மரித்து மேலாகியகங்காதீரத்தில் ஒருமுனிபுத்திரனாய்த்தவத்தோனாயினான். முன்பற்றியவுயிரானதுநீங்கி சுக்கிராசாரியருடையமுந்தினசரீரமானது, காற்றினாலும், சூரியகிரணத்தினாலும், நன்றுவளர்த்த பிதாவாகிய பிருகுமுனியின்பக்கத்தில் மிகவுமுலர்

கரு. பிருகுமுனி புத்திரனைக் காணாமை.

ந்து அஸ்தியாகி, ¶—பிதாவாகிய பிருகுரிஷியினுடையதவமகிமையினால், விலங்குகளும், பறவைக்கூட்டங்களும், பக்கத்திலுநெருங்காமல், பூமியின்மேல் சரீரமுழுமையும் அக்காலத்திலழியாதிருக்க, நிருவிகற்பசமாதியில் தேவதாவருட மநேகமானபின்பு இரண்டுகண்ணும் விழிக்க, தவமுள்ள பிருகுமுனிவர் இஷ்டமுள்ளபுத்திரனை எதிரேபார்த்து,—

கசு. புத்திர வடிவத்தைப்பார்த்தல்.

தருமஸ்வரூபமாய் தொழுதுக்கொண்டு பக்கத்திலிருக்கின்ற புத்திரனைக்காணாதவராய் உலர்ந்தசரீரமானது முழுவென்புகளாகவும், தரித்திரவுருவமாய் உண்டானதுபோலவும், தோற்றுகின்ற நிர்ப்பாக்கியமேவடிவாகி இருப்பதுபோலவும் முன்னேயிருக்க, துறந்தமனதையுடையவனாகிய பிருகுவென்கின்றபரிசுத்தமான தவத்தையுடையவன் தனி

கஎ. புத்திரன்மரித்தானென்றெண்ணல்.

யேபார்த்து,—உலர்ந்துமெலிந்த சருமத்தினால்மூடப்பெற்ற என் வீட்டில், நவத்துவாரங்களிலெல்லாம் சிச்சிலிக்குருவி நடந்தோடுவதையும், வயிறாகியகுகையில் தவளைக்கூட்டங்கள் ஒன்றுடனொன்றுபாய்ந்து விளையாடுவதையும்பார்த்து, வந்த காரணமென்னவென்று தனதறிவினால் நின்றாராய்ந்து பாராதவராய், அன்புள்ளபுத்திரனை இறந்தானென்

கஅ. காரணந்தெரி

றெண்ணித்து.— நியமித்தகாலத்தையல்லாமல் என

¶ இ-ம். ஆத்மசங்கற்பமே விடயமா யநிச்சயித்த சங்கற்பனேயெப் பூமியா யதிலளவற்ற வடிவமெடுத்த முடிவான வாசுதேவவடிவமான தென்பதாம்.

யாமற் காலனைச்சபிக்க நினைத்தல்.

க்கரிதாகியபுத்திரனை அகாலத்திற்கொன்ற யமனை ஒருக்ஷணத்தில் கெடுப்பேனென்று, இடபத்தைநடாத்துகின்றவுருத்திரன் பெருங்கோபங்கொண்டதுபோலபிருகுரிஷியானவர் கோபித்துசபிக்கும்படி நினைக்க ; இவரதுகோபமுணர்ந்தயமனுனவன்கடுமிங்கிரணங்களின்றபஞ்சபூதவடிவமெடுத்து,—ஆயுதங்களும், ஆடைகளும், கத்தியும், பாசமும், குண்டலமும், பாதுகாக்கும் வச்சிரகவசமுமாகிய விளைவுகளைப்பொருந்தி, பிருங்குசேனைகள் பக்கத்திற்சூழும்படி வியசனத்தையுடையபிருகுமுனிவிடனித்திலவந்துசேர்ந்து வேண்டிக்கொள்ளும்பொருட்டு மிருதுவாக சகலத்தையுமழிப்பதற்குகாரணமென்றுசொல்லப்பட்டயமனுனவன், நின்மலனுகியபிருகுமுனிக்கிவைகளைச்சொன்னுன். †—உண்டாகப்பட்ட சவ்வரணியதியைப்பரிபாலனஞ்செய்கின்ற நாங்கள், உன்னை அவமதிப்பாட்டினைப்பட்டதபதிருல் தூஷிப்பதேயன்றி மேன்மேன்றினுலென்று, ஆகையினுல் பூரணமானதபசை வெகுவியர்கோபாக்கினியினுல் எரிப்பதுதகுதியல்ல, உண்டாகின்ற பிரளயாக்கினியுமெங்களைச்சுடாது, உமதுசொல்லா சடத்தக்கது.— சம்சாரமாகியவலையில் கட்டுப்பட்ட அளவில்லாத வுருத்திரர்களும், கோடியுகாமரைக்கண்ணையுடைய மகாவிஷ்ணுக்களும், நிலையாகிய என்னுல் நாசமடைந்தார்கள். அண்டமாகியசங்கங்களில் என்னைச்செயித்தவர்களில்லை,சகலரும் எனக்குப்புசிப்பாவர், உண்டாகின்ற சகலவுயிர்களையும்நாமழிப்பதுபரமேஸ்வரனுல் பகுக்கப்பட்ட அநாதியமம். ¶—என்னுடைய நியதியல்ல, இந்தநியதியானது என்றுமுள்ளபடியாரும் ; நின்மலமானஞானதிருஷ்டியில்கருத்தாவும், போக்தாவும், இல்லையாம்; அஞ்ஞானதிருஷ்டிக்கு இக்கருத்தாவும், போக்தாவுமிகவுமுண்டாயிருப்பர் ; மன்மதத்தினுல்சகலபிராணிகளும், தங்கள் சங்கற்பத்தினுல் பிறக்கும் கற்பாந்தத்தில்லயிக்கும்.—அத்தியயனஞ்செய்யதகிய வேதங்களாற்கொடுக்கப்பெற்ற ஞானதிருஷ்டி எங்கே, உறுதியாக இருப்பதெங்கே, உமதுமகிமை எங்கே, பெரியோர்கட்பரகாசிக்கின்ற இந்நெறிக்கு அற்பவறிவையுடையவராகிய அந்தகனைப்போலநீர்தளர்ச்சியடைவதென்ன, உனதுபுத்திரன் தனது சங்கற்பத்தினுல் உண்டானசெய்கையை யனுபவ

௧௯. காரணந் தெரிவிக்கக் காலனெழுந் தருளுதல்.

௨0. காலனியதி வல்லமையையுந் தனது வல்லமையையு மறிவித்தல்.

௨௧. இதுவுமது.

௨௨. ஞானநிச்சய முரைத்தல்.

௨௩. முனிவின் விசாரமின்மையை வெளிப்படுத்து மித்தன் காலன் இருவையுடன் கோபித்தல்.

† இ-ம். பிருகுமுனிவினது மனதைத்தெளிவிக்கக் காலனுபதேசிக்கத் தொடங்கினனென்பதாம். [காலன் கூறினனென்பதாம்.

¶ இ-ம். அகமடங்குவிமித்தம் நியதியின்படி நடக்கும் தனது வல்லமையைக்

உச. காலனுபதேசித்தல்.

ல்லோபித்துநீசபித்தற்குரியவனே!—மனமே! ஆத்மாவாம்வேறின்று, மனத்தினதுதொழிலே தொழிலாகும், சீவிக்கின்றதினால் சீவனுமாகும், கிரகிக்கின்ற நிச்சயத்தினால் புத்தியுமாகும், நினைக்குறிப்புடன் யானெனதென்னு மபிமானத்தினால் கொடிய அகங்காரமுமாம்; தனதுவேற்றுமைமிகுதியினால் தனித்தமனதே உலகமாகும்.§—அதினால், உமது

உரு. சுக்கிரன்மனே சங்கற் பத்தாலெடுத்த வடிவங்களை யறிவித்தல்.

புத்திரனும் நீ நிருவிகற்பமாகிய சமாதியைப்பொருந்தினகாலத்தில், ஆசையினால் சுக்கிரனென்னும் தனதுசரீரத்தை இவ்விடத்திலேவைத்து, ஆகாயத்தில் விச்சுவாசியென்னும் பெயரை யுடைய தேவலோகஸ்திரீயைமனதினுலடைந்தபின்பு, சொல்லும்பூமியில்தசார்ணதேசத்திலுள்ள ஓரந்தணனிடத்திற் புத்திரனாகப்பிறந்தும்,—கோசல நாட்

உசு. இதுவுமது.

டில் அரசனாகப்பிறந்தும், விசாலமானகாட்டிலுள்ளவேடனாகப்பிறந்தும், கங்காசலம்பொருந்திய கரையில் அன்னமாய்ப்பிறந்தும், பௌண்டரதேசத்தில் உயர்ந்தசூரியவம்சத்திற்பிறந்தும், சொல்லற்கரிய அரசனாகியும்,—சாலுவதேசத்தில் சூரியவ

உஎ. இதுவுமது.

ம்சத்துக்கு ஆசாரியனானான். பின்புமிருந்தகற்பகாலவளவும் வித்தியாதரருக்கு அரசனானான், பரிசுத்தவறிவுள்ளவனாய் அவ்விடத்தில் ஒருதபோமுனிவனுடையபுத்திரனானான்; சேர்ந்தெண்டைகள் கழகிற்குவி தடாகத்திற்குதிக்கின்ற சவ்வீர நாட்டில் சாமந்தனாகப் பிறந்தான்;—திரிகர்த்தமென்னுந் தே

உஅ. இதுவுமது.

சத்தினிடத்தில் சைவசமயத்துக் காசாரியனானான்; வாசனைசூழ்ந்த வேடுவர்பட்டணத்தில் மூங்கிற்காடானான்; சீனமானசிறுகாட்டில் ஒருமான்பிறப்பாய் அமர்ந்திருந்தான்; விரிவாகச்சூழ்ந்திருக்கின்றதாலவனத்தில் வெவ்விய கோபத்தையுடையமலைப்பாம்பாகவும்பிறந்தான்;—இந்தப்பிரகாரம் அள

உகூ. இதுவுமது.

விலலாத யோனிகளில், தாழ்வாகவும்மேலாகவுமிருக்கின்றஜனனங்களை அடைந்து, களங்கமுள்ளமனதினுல்வாசனையைத்தினின்று, மெய்ம்மையான கங்காநதியின்பக்கத்தில் ஒப்பற்றவன்மையானரிஷிபுத்தி

ஙo. இதுவுமது.

ரனாய், அசத்தியவடிவமான இந்திரியங்களென்கின்ற ஈனமாகியசத்துருக்களைக்கெடுத்துவெற்றியடைந்து,—நீண்டசடைகள்முதலிய அனைத்தையுந் தரித்து, வாசுதேவனென்னு நாமத்தைப்பொருந்தி தபசில் எண்ணூறுவருடம் அமைந்திருந்தான். உனதுபுத்திரனாகியசுக்கிரன், சுழலாநின்றசொற்பனத்துக்கொப்பான மனதிலுண்டானமயக்கத்தை அ

§ இ-ம், பிரமசங்கற்பமான மனதே சகலமுமாய்விளங்கு மென்பதாம்.

ன்பாகப்பார்க்க வேண்டுமேயாயின், ஞானதிருஷ்டியினுற்பார்ப்பாயென்று.○—யமனுனவன்சொல்ல

௩.௧. வியாபக திருஷ்டியாற் பார்த்துமயக்கந்தெளிந்துரைத்தல்.

கேள்வியுற்றகல்வியுள்ள பிருகுமுனியானவர்தனது ஞானதிருஷ்டியினுல் மேன்மையான ஞானப்ரகாசத்தினுல் ப்ரதிபாமாத்திரமாகப்ரகாசித்து, நல்லொழுக்கமுள்ள அறிவென்கின்ற தெளிவுற்றகண்ணுடையிற்பிரதிபலித்ததாகிய தனதுபுத்திரனுடைய விருத்தாந்தங்களியாவையும் நொடியளவில்பார்த்து —

௩.௨. இதுவுமது.

கங்காதீரத்திலிருந்தும் மந்தரகிரிபக்கத்தில் தனது சரீரத்தில் வந்துபொருந்திய உண்மையுள்ளபிருகுரிஷி, மிகவுமதிசயித்து, குற்றமற்றகாலனை பலவிதமாகிய வேண்டுதலினுல் ஓராசையுமில்லாத முனியானவர்சொல்லுவார்.—சாவற்றதேகமுடையகாலனே?

௩.௩. காலனைத் துதித்தல்.

நியதிக்கு முதன்மையானவன் நீ யொருவனே, திரிகாலங்களையும் தெளிவுடனறிவாய், எம்போன்றவர்கள்குழந்தைகளாய் பிரமஞானமானது தங்காத இளையோர்களானவர், என்றுமுனிசொன்னவளவில், நிலைமையுள்ளயமனுனவர், §—பிருகுமுனி கரத்தைப்பிடித்துக்கொண்டு மந்தரமலையின் குகையினின்றும்வெளியில்வந்து தேவதிகளைப்பொருந்தி, இவர்களில் ஆயவிடத்தில் வேறுனவாசுதேவனாமத்துடன் இருந்தபுத்திரனை ஆசையினுல் பிருகுரிஷியார்த்தான், யமனுமிச்சங்கற்பத்தைச் செய்தார்.—இ

௩.௪. காலர் சுக்ரனிருக்கு மிடத்திற்சென்று முனிவருக் கறிவித்தல்.

௩.௫. காலனுனவர் தங்களைக்காண ச் சங்கற்பித்தல்.

வ்விடத்திற்பொருந்திய சமாதியைவிட்டு இந்தவாசுதேவன் எங்களைப்பார்க்கக்கடவனென்று சங்கற்பித்தமாத்திரத்தில் [illegible]த்திரனுனவாசுதேவன் சமாதியைவிட்டு அவர்களைப் பார்த்துவணங்கவும், இருதயமாயுடையவர்களாகிய மூன்றுபேர்களும் ஒருவருக்கொருவர் விருப்பமுற்று ஒருகல்லின்மேல் கூடியிருந்தார்கள்.—வாசுதேவனென்னும் புத்திர

௩.௬. வாசுதேவன் றுதித்தல்.

னுனவன் மற்றிவ்விருவர்களையும்பார்த்து ப்ரகாசம் பொருந்தியவுங்களுடையகுற்றமற்ற [illegible]த்தினுல், களங்கமற்றதவத்தினுலும், சாஸ்திரத்தினுலும், யாகங்களினுலும், கிரியங்களினுலும், நீங்காதருப்பம் பொருந்தியவைகளீங்கினேன், இதைப்பார்க்கிலும் அமுதவருடம் இன்பத்தைக் கொடுக்காது.—என்

௩.௭. புத்திரனுக் கு ஞானம் வெளிப்பட விதித்தம் முனிவர் ஞானதிருஷ்டி வைத்தல்.

றுசொல்லியவாசுதேவனை, பிருகுமுனியினிமையாகப்பார்த்து, உனக் கின்பம்பெருகும், ஞானமடையக்கடவது, குற்றமுள்ள அஞ்ஞானந்தீரக்கடவது,

---

○ இ-ம். சுக்ரனிறக்கெடுத்த வடிவங்களின் காரணத்தை ஞானதிருஷ்டியாற்பார்க்கும்படி காலன்போதித்ததாம்.

† இ-ம். மனேசங்கற்ப வடிவத்தை எதார்த்த திருஷ்டியாற் பார்த்ததென்பதாம்.

§ இ-ம். காலனெதார்த்தவடிவத்தை முனிவனுணர்த்தனனென்பதாம்.

என்றனுவ் கிரகிக்கவும், ஊனக்கண் ணிரண்டையு மூடிக்கொண்டு சமற்ற ஞானதிருஷ்டியினால் முன்னடந்தவைகளையெல்லாம் பார்த்தான்.— ஒருநிமிஷத்தில் ஜநநங்களனைத்தையுமீக்கினான், ஞானதிருஷ்டியினால் பார்த்தபின்பு அதிசயித்துரைப்பான். பிரகிருதியான மிருத்யுமோகமானது மூடிய சங்குளாகி, கோரமாகிய என்மனத்தினிடத்தில் இஷ்டமாய்வளருகின்றது இதுவொன்று, என்னவதிசயமென்னவதிசயம் !—அறியவேண்டுவனவெல்லாம் அறிந்தேன், காணவேண்டுவனவெல்லாங் கண்டேன், ஜநநத்தில்வெருகாலஞ்சுழன்ற வெவ்விய துன்பமும் நீங்கினேன், பரப்பிரமோபனமாகியவாத்மஞானத்தையடைந்தேன், ஐயனே ? யாமினிபோய் மந்தரமலையிலிருக்கின்ற சரீரத்தைப்பார்ப்போம்.— கருமமே காரணமாகின்ற சரீரமாகிய என்புவடிவத்தை இரண்டுகண்களினாலும்பார்த்து அகத்தையடையும்பொருட்டு சிந்தித்தவனக்கு, யாதொரு தொழிலிலும், விருப்புமின்று, வெறுப்புமின்றுவாருமகளென்று வாசுதேவன்சொல்ல, அம்மூவரும் மந்தரகிரியில்க்ஷணத்தில்வந்துசேர்ந்தார்கள்.¶—

௩௮. சுக்ரனுக்கு ஞானமுதித்தல்.

௩௯. ஆத்மாவிலுண்டான மனோசங்கற்பத்தா லெடுத்த வடிவங்களை ஞானதிருஷ்டியாற் காண்டல்.

௪௦. இதுவுமது.

முதன்மையாகிய சுத்தினுடையபிரமாணத்தைத் தெளிந்த மூவர்களும்வந்தவிடத்தில், முன்பார்த்த வசநத்தில் பொருந்தியசரீரத்தை, புத்திரனாகிய வாசுதேவன் அளவில்லாத சந்தோஷத்தினால்பார்த்து, அரியதவமுள்ளதந்தையைப்பார்த்து, இந்த வலிமையான முழுவெண்மையா மீபெற்றவளர்த்த தென்றுகேட்டான்— பின்பும், எனதுபிதாவே ? பெறுதற்கரியசுகங்களினால் முன்பு நீ வளர்த்தசரீரமானது துன்பமின்றிநீங்கி, துன்பமிருந்து துறையும், சந்தேகமும், இதமும், அகிதமுமாகிய வினைத்துயிலலாமல், நிலைபெற்றவனாய் மனமிருந்திருந்து.—மனமிறந்த நிலையையல்லாமல் பெரியர்களுக்கு சுகமுண்டாமோ, போராங்காலுபவமாகிய சமுத்திரத்தில் முழுகப்பட்ட களங்கமற்ற வியாபகஞானத்துக்கும், உபசாந்தத்துக்கும், ஞானவான்கள் துன்பநீங்கியிருக்கின்ற தனதுமேலான ஆத்மநிச்சயத்துக்கும் ஒப்பாக, இத்தனிமையானசரீரமானது சுகத்தையடைந்திருந்தது. ‡—அரியதபோபலத்தினால் இந்த ஆச்சரியத்தைப் பார்த்தேனென்று வாசுதேவன்சொல்ல, சமீபத்திலிருந்த அந்தக்காலனை

௪௧. சரீரத்தின் சடத்தன்மையைப்பார்த் ததிசயித்தோதல்.

௪௨. அமன்ஸ்க பாவத்தைச் சடத்தின்மேல் வைத்துத் துதித்தல்.

௪௩. அசாரீதத்தைச் சடத்தின்மேல்வைத்துரைத்தல்.

௪௪. காலன் அச்சுக்ராசாரியராகக்க

¶ இ-ம். சுக்கிரன்றனது சங்கற்பத்தை நசிப்பித்து ஞானவடிவமாய் முன்னுள்ளசுக்கிர வடிவமெடுக்கப் பற்றின்றிச் சங்கற்பித்தனனென்பதாம்.

‡ இ-ம். சங்கற்பநாசத்தினுண்டான பிரமசுகத்தை யறிவித்ததாம்.

டவதேன் றனுக்கிர கித்தல்.

வர்பார்த் திந்தவார்த்தையையுமெடுத்து, அடுத்திரு க்கின்ற இச்சரீரத்தில், அரசர்கள் தனதுபட்டண த்திற் ப்ரவேசிப்பதுபோலப் புகுந்து, அனைவர்களை னைவர்க்கும் திருத்தத்தையுடைய ஆசிரியக்கிரிகை யைச்செய்வாய்,—என்று சுக்கிராசாரியருக்கு ஆக் கியாபனஞ்செய்து, இந்தப்பிருகுமுனிவையுஞ் சுக் கிராசாரியரையு மாசீர்வாதஞ்செய்து, காலனானவ ர்நின்றவிடத்தில்மறைந்துபோனார் ; காலனைவிட்டு ப்பிரிந்தவர்கள்வியசனமடைந்திருந்தார்கள். பின்பு, அந்தவாசுதேவனென்று நாமத்தையுடைய பிராம ணைத்தள்ளி, வலியபெருமையையுடைய சுக்கிரா சாரியரானவர் முன்பொருந்தியிருந்த சரீரத்திற்பு குந்தார்.—விதியின்வசத்தினல் சுக்கிரனடைந்த ச ரீரத்தைத்தனக்குத்தானே சமானமாகியபிருகுமுனி வர், கமண்டலத்திலுள்ளவேதமந்திர தீர்த்தத்தில் ஸ் நானஞ்செய்விக்க, 'நவீனயமும், நரம்புகளைத்தும், ந யத்தையுடைய பிராணனைத்தரித்து அச்சுக்கிராசா ரியரெழுந்து பிதாவின்பாதத்தை வணங்கி பக்க த்தினின்றான்.—பிதாவாகியபிருகுமுனியும், புத்தி ரனுகியபார்க்கவமுனியும், உயர்ந்த மந்தரமலையிலு ள்ளவனத்தில் குற்றமாகியமனமென்கின்றதீமையா னசத்துருவை நிர்ப்பாகஞ்செய்து, அலையற்றசமு த்திரத்தைப்போல குற்றமற்றசீவன்முத்தனிலை யில்வாழ்ந்தார்கள். இருமைப்படியான மகாமேகம் போன்றவரேயென்று கல்வித்ஞானத்தையுடைய வ சிட்டமுனியானவர் சொன்னார். §—

௬௫. சுக்கிரனது வடிவத்திற் புகுதல்.

௬௬. சுக்கிராசாரியராக வெழுதல்.

௬௭. சீலன் முத் தனுகச் சஞ்சரித் தல்.

சுக்கிரன்கதை முற்றிற்று.

தாமவியாளகடர் கதை.

அவதாரிகை.

முன்புசுகமாத்மசங்கற்பமாய் விளங்குமென்பதை யறிவித்து, அ ச்சுகம் ஆத்மானுசந்தான விசேஷமின்றி யனாத்மானுசந்தானமாக வி ளங்கின் விருத்தியடையுமென்பதை யறிவிக்குமிடத்தும், தாமாதிக ளுக்கதையைச் சொல்லுகிறார்.

௧. சத்துக்களது படிவிலக்கணை மறி வித்தல்.

வசிட்டமுனி பின்னுஞ்சொல்லுவார், முழுதும் விசாரணையையுடையவர்களும், மலினவிருத்திநீங் கின மனமுடையவர்களும், ஒப்பற்ற சங்கற்பத்தை விடுத்தவர்களும், ப்ரகாசிக்கின்ற ஆநந்தபோதத் தையுடையவர்களும், சங்கற்பத்திலுற்றவித்திருக்கி

§ இ-ம். சுக்கிரன் அசத்தசங்கற்பத்தை நீக்கிச் சத்தசங்கற்பத்தி லாசிரியத் தன்மையைச் செய்தனனென்பதாம்.

ன்றதிரிஸ்யவஸ்துவில் போகவேண்டியவனுர்கசட
துக்கத்தைப் போக்கிக்கொள்ளவேண்டிய சச்சிதா
நந்தஸ்வரூபத்தைக் கொண்டவர்களும், திருஷ்டா
வான ஆத்மஸ்வரூபத்தைக் கண்டவர்களும், அதி
ருஷ்டாவான அநாத்மஸ்வரூபத்தைக் காணுதவர்க

௨. சத்துக்களனுபவலக்கண மறிவித்தல்.

ளும், — சீவிக்கின்றவனுகவிருந்துபாராநின்றஞான
மாகியபரதத்துவத்தில் சாக்கிரத்தையடைந்தவர்க
ளும், கொடியசம்ஸார மயக்கமென்னும்வழியில் நீங்காத
நித்திரையை யடைந்தவர்களும், ஒப்பற்றமுதிர்ந்த
பக்குவமானநிராசையினால் பாவிக்கப்பட்ட நன்மை
யிலும், தீமையிலும், பழகினவாசனையைக்கெடுத்த

௩. இதுவுமது.

வர்களும், — வாசனையென்னும் வலையைக்கெடுத்து
மனத்தினதுகட்டை அறுத்துவிட்டால் தேற்றாங்
கொட்டையினால் கலங்கியசலமானது தெளிவது
போல, மேன்மையாகத்தெளிந்த மெய்ஞ்ஞானத்தி
னால் உண்மையாகியதற்சுபாவமே, முன்சொல்லிய
குணங்களை யுடையவர்களுக்குதுன்பமற்ற நிரதிச

௪. வாசனாக்ஷயவுபாய மியாதெனின்.

யாநந்தமாகப்பிரகாசிக்கும். ¶ — விடயத்திற் சேரு
கின்ற இச்சைநீங்கி சுகதுக்கமானவிரண்டு நீங்கி ஒ
ன்றையும்பற்றாமல், சிக்கற்செய்யும் கூண்டிலிருந்
தும் ஆகாயத்திற்செல்லுகின்ற பறவையைப்போல
மகாமோகத்திலிருந்தும் பரிசுத்தமாகிய மனமான
துவெளிப்பட்டு, வேறுபாடாகியசந்தேக நீங்க, ஆ

௫. அச்சகலத்தியாகம் மனதுக்கெப்படியுண்டாகுமெனின்.

சையென்கின்றபாவ நீங்கும். † — மாட்சிமையான
அம்மனமானது, பரிபூரணத்தைப்பெற்று களங்க
மற்ற பூரணச்சந்திரனை யொப்பாகப்பிரகாசிக்கும், இந்
நிலையிற் பிரகாசித்தவர்கள் மும்மூர்த்திகளாகியதெ
ய்வத்தன்மையின் முதன்மையானவர்களுக்கும் கி
ருபைசெய்வார்கள். உறுதியாகிய விசாரணையினால்
மேன்மையாகிய பரமவஸ்துவை யடையவேண்டு

௬. அவ்விசாரமியாதெனின்.

ம். ‡ — இந்தச்சகமெப்படிப்பட்டது நானெப்படி
ப்பட்டவனென்று உறுதியாய்விசாரித் தறிகின்ற
பரியந்தம், கலக்கிறைந்த சம்சயமானது அந்த
காரத்தைப்போல மூடிக்கொண்டிருக்கும். களங்
கில்லாத வுலகங்களும், ஆத்மாவும் அழிவில்லாத
ஞானப்பிரகாசமென்று சலனமற்றஞானக்கண்ணின
ற்பார்த்தவர்கள் தத்துவநிச்சயத்தைத் தரிசித்தவ

௭. இதுவுமது.

ர்கள். — சகலசத்திகளாகியும், ஏகமாகியும், அளவி
ல்லாததாகியு மிருக்கின்ற ஆத்மஞானமே, சமஸ்த

¶ இ-ம். மனோநாசமும் வாசனாக்ஷயமும் வந்தவிவ்வனுபவத்தினால் தத்துவ ஞானம் விளங்குமென்பதாம்.

† இ-ம். மனம் விடயசம்பந்த நீங்கித் தன்மயமாய்த் தனித்திருத்தலே வாச[னாக்ஷய மென்பதாம்.

‡ இ-ம். விசாரணையால் விடயபற்று நீக்கம் வருமென்பதாம்.

பாவனைகளுக்கும் ஆத்கரியமாமென்று பார்த்தவர்கள், ஆத்மஸ்வரூபத்தைத் தெரிந்தவர்கள்சொல்லப்பட்ட நாமொன்றின்ற ஞானாவுமில்லை, அதற்கு வேறுகிய சுகமென்னுவேறுபடுமில்லை, பிரமமேயுண்டாயிருக்கின்றதென்று இவ்விடத்திற்பொருந்த சத்தாக்கும். அசத்தாக்கும்மத்தியிற்பொருந்த பார்த்தவர்களே ஆத்மாவைத்தரிசித்தவர்கள். ‡—ருயாற்றியில்லாமல் தானேதோற்றுகின்ற இந்துகளிலுள்ள விடயவஸ்துக்களில் இச்சையில்லாமல் செல்கின்றஇருஷ்டியைப்போல களங்கமற்ற பிரமவித்தக்க ருடைய புத்தியானது தொழில்களிற் செல்லுமென்றதெளிவற்ற பலபோகங்களைப்புசித்தால் அதுதன்பற்றுசெய்யாது. தெளித்தசேர்கிருட்டு வட்டாவர் †—மார்க்கமத்தியில்வந்த கலியாணக்கூட்டங்களை பெரிய்வினடப்பவர்கள்காணின்ற தன்மையைப்போல, பிரும்தபோகவஸ்துக்களேதையும் அறிவன்மோர்பார்ப்பார்கள் ; ஆத்மஞானத்திலுண்மையைச்செய்தவர்கள் அற்பபோகத்தைப் பெரிதாகப்பார்ப்பார்கள் ; பின்பது துன்பமாமென்று நினைத்து விடயபோகத்தைவிரும்பார்கள். ¶—வருத்தமுற்ற நிறைச்சாலையினின்று நீங்கினவராசன்தனதுநாட்டணைவானிலும் மகிழ்ச்சியடைவன் ; தொந்திமாலையையும், வேலையுந்ததையுந்தரித்த சொம்பொருந்தியவராசனுவன் பூமிமுழுதையும் ஆம்பெனுமினைப்பன். சுவக்கம்பொருந்திய மனதைச்செய்ப்பவர்கள்காதலைக்காத்திலுலும், கால்களைக்கால்களிலுலும்பல்லைப்பல்லிலுலுஞ்சரீரமுழுதையும் இறுடிவேறுன்சேர்க்கக்கடவது.—சத்தருவாயினமேனுபோமவன்றிசகமமுற்றியத்தைக்கடக்குமோதற்கு கூடாதவென்று, இருவைப் புத்தினிடத்தில் தொழிகளாலவிதைவிதைக்க பொல்லாக்காகிய மனச்சார்ப்புத்தைசெய்தேதாரொப்பவர்கள், வனையுள்ள மோக்ஷவுலகத்திற்போவார்கள் ; கல்லொழுக்குள்ளவர்கள் குற்றமற்றவர்கள் மிகவுமேலானயாஸாபுமாவர்கள் புகழ்றிருக்கவர்கள், §—மனமென்கின்றபலகையைச் செய்த்தவர்களது தாமரைமலர்போன்றபாதங்களைச்சிரமேற்கூட்டுவோம் ; கட்டமாகிய கனாக்கமொன்கின்றவைத்திருந்து சுகித்தமுனர்

அ. விடய சுகமே னுபவிக்க லாமோ வெனின்.

௯. அப்படி ம் பாராவிடி லென்ன வருமெனின்.

௧௦. துன்பமீக்கு தெரியாதெனின்.

௧௧. இதுவுமது.

௧௨. அப்பேறு காலமியாதினுல் வருமெனின்.

‡ இ-ம். மிச்சையுந் சொடுத்தையும் விசாரித்துச் செடுத்தைநீக்கின் மீத்தாயிருப்பதே ஆத்மவிசாரமென்பதாம்.

† இ-ம். பிரமாநந்தவிலாசமே விடயமாக்குமென்றுணர்ந் துபேயமிகில லஜவேசகாயமென்பதாம். [பமென்றுமென்பதாம்.

¶ இ-ம். ஆத்மநிருவிகடியிலின்று அனாத்மாவைப் பற்றுப்பமாவிடித்துன்

§ இ-ம். மசிரூவிக்கிரகமே துன்பத்தை நீக்குதற் குபாயமென்பதாம்.

னுள்ள பாவமென்கின்ற காமவெகுளிமயக்கமென்னு
மூன்றுமதங்களையுடைய யானையினுலும், பேராசை
யென்னுமாயுதங்களினுலும், கெம்பீரமுடையவிந்தி
ரியமென்னுஞ் சத்துருக்களை செயஞ்செய்வாய்.‡—
துன்பமுள்ள மனவகங்காரத்தைக்கெடுத்து தொ
கங. அவ்விந்திரியநிக்கிரகமியாதினுல்வருமெனின். டராகின்ற விந்திரியங்களென்னுஞ்சத்துருக்களைவெ
ன்ருல், பனிதோய்ந்த தாமரைக்காட்டைப்போல,
விஸ்தாரமானவாசனைக ளுசமடையும். ஒப்பற்றஞா
னம் ஏகமேயென்றுசாதித்து இந்தமனதைச்செயிக்
கின்றளவும்பழுத்த இருட்டினிடத்தி னெருங்கியிரு
க்கின்ற பசாசைப்போல், மனதின்கண்வாதனையான
கச. விவேகிகளுக்கு வாசனாத்தியாகம் வந்தமனதின்சகாயமியாதெனின். து வரமாட்டாது.*—துன்பத்துடன் கூழலாத மன
மானது, சகலத்தையுந் தனது ஸ்வரூபமாகப்பார்த்
த ஞானிகளுக்கு, தத்துவத்தையடைகின்ற விசார
ணையினுல் அமைச்சனென்றுசொல்லப்படும். இந்தி
ரியங்களென்கின்ற துன்பமென்னுஞ் சத்துருவைக்
கெடுத்ததினுல் உபாயமுள்ள சாமந்தனென்று சொ
ல்லப்படும். தனக்கிஷ்டமுள்ளவைகளைச் செய்கின்ற
கரு. இதுவுமது. தினுல் பரிசாரகனைச் சொல்லப்படும்.¶—விவேகிக
ளுக்கு பகுத்த தொழில்களில்லாத பரிசுத்தமனமா
னது, களிக்கின்றசுகத்தைக்கொடுப்பதினுல் ஆசை
யுள்ள பாரியாளாகும் ; இரக்ஷிக்குந் தன்மையினுல்
பரிசுத்தமுள்ள பிதாவாகும் ; குணமுள்ள விருப்பி
கசா. இதுவுமது. னுல் தேடுதற்கரியநேயனுமாகும். †—சத்துக்களு
க்கு, மனமானதுநல்ல ஆத்மஞான சாஸ்திரங்களி
னுல் நன்மையான மார்க்கத்தைப்பார்த்து, நன்மை
யான வாத்மத்தியானஞ்செய்து, நன்மையானவனு
பவத்தையடைந்து, நன்மையாகத் தனதுருவத்தை
க்கெடுக்கும். நல்லவொப்பற்றபிதாவாகி நல்லஞான
கஎ. இதுவுமது. சித்தியைத்தரும். §—தெளிவுள்ளஸ்திரமாக குற்ற
மின்றிப்பார்த்து எவ்வளவேனும் தடையில்லாமற்
பார்த்து பூரணஞானத்தைப் போதிக்கப்பட்டால்,

‡இ-ம். இந்திரிய நிக்கிரகத்தான் மனோநாசம் வருமென்பதாம். [மென்பதாம்.
* இ-ம். விவேகத்தாற்பெறும் வாசனாத்தியாகத்தா லவ்விந்திரியத்தியாகம் வரு

¶ இ-ம். மனமானது ஆத்மவாசனுக்கெதிரற்ற பிரமானந்த முண்டாக்கு மி
த்தம் விசாரஞ்செய்தலின் மந்திரியும், அகமுகப்பட் டிந்திரியங்களைக்கெடுத்தலி
ற்றந்திரியும், சின்னபின்னமான விடயரசங்களைக்கிரகித்த பின்னமான பிரமா
சமாக்கி யூட்டிவித்தலின் ஏவலாளுமாகுமென்பதாம்.

† இ-ம். மனமானது ஆத்மாவை நீங்காதிருந்து நிருவாணசுகத்தைத் தருத
லின்மனைவியும், விடயத்திற் செல்லுவதைத்தடுத்து பிரமத்திற் செலுத்துதலி
ன்பிதாவும், உண்மையிற் பிரப்படுத்தலிற் சினேகிதனு மாகுமென்பதாம்.

§ இ-ம். மனமானது புத்திரனுக் கிராசபோகத்தைக் கொடுத்திறக்கின்ற பி
தாவைப்போல, ஆத்மாவுக்கானந்த ராட்டியசாங்கத்தைக் கொடுத்திறத்தலிற் பி
தாவுமாமென்பதாம்.

இதயாம்பரத்தில் குற்றமற்றதனது சுபாவத்தினால் க
ளங்கமற்றமனது இரத்தினம்போலப்பிரகாசிக்கும்.‡
கஅ. ஆயின் மனோகளங்க நீங்குமுபாய மியாதெனின். மனமென்னுமிரத்தினமானது, வேறுபாடென்னு
மலினவாசனையாகியகும்பியில் மறைபட்டு ஒருவருக்
குந்தோற்றாது, சுமமானஞானசலத்தினால் சுத்திப
ண்ணினால் தனதுப்பிரகாசமாகிய தேசசத்தைக் கா
ட்டும். சொல்லுகின்றவிவேகவலிமையால் எதார்த்
தஞானத்தை அறிவினாற்றரித்து அகங்காரமுள்ள
அவித்தியைத்தைச் செயித்து நீங்குதற்கரியசகத்தை
கக. அம்மனோமேலக்கூடில் பந்தமாகாவோ வெனின். நீங்குவாய்.†— இக்காரணத்தினாலேயேனென்றும் நா
னென்றும்இடமுள்ளபிச்சயம்விருதாவாம்; அத்தன்
மையை அறிவினால் விடமாகத்தள்ளி அதற்குவேறு
ஙிய உள்ளகாரணத்தைப்பிடித்து உணர்ச்சமாகிய
தற்பதத்திலிருந்து இச்சித்தபடிநடப்பாய். பொய்த்
திறாமையைமனமேகாடெரித்த அந்தவஸ்துக்கள்பந்தமா
உ0. இவ்வுண்மை பலம் வரும்பொருட்டு இருஷ்டாந்தம் கூறல். கா. §— காமமுடையவியாளன்சடனென்றுசொல்லப்
பட்டவசுரர்கள் சார்ந்திருக்கின்ற குநாயத்தை, இரா
மா? நீயடையாமல்விட்டுவிடு. வீமன்பாசன்இடனெ
ன்றமசுரர்களுடைய குநாயத்தைப்பொருந்தி துன்
பந்தீரக்கடவாயென்று சொல்லவும், இப்பெயர்களா
ற்சொல்லப்பட்ட அசுரர்கள்யாவரென்று ஞானவீர
னாகிய இராமன்கேட்க, மகாரிஷியானவர் ஙாமதைச்
சொல்ல ஆசையாயிருக்கின்றதெனதுவோ நீயதிற்பொ
உக. சுமாசுரரின் யுத்தம் பிறப்புரைத்தல். ருந்துவாயென்று சொல்லுவார்.— சந்தசாருசெய்
து பாதாளவியாதகானத்திற் பொருந்தியிருக்கின்றசு
ம்பரனென்னும் ஒரசுரன், வஞ்சனைமுதிர்ந்தமாயை
யிலேவளர்ப்பட்டவன், வலியசேனை சமுத்திரத்தினா
ல்தேசவேந்தியனை குறைசெய்ய, தேவர்களும் இவ
னித்திசை யடைக்கபோதிலும், திசைகளிலடைந்த
போதிலும், மிகவுங்கோபித்து அசுரர்கள் கெடும்ப
உஉ. இதுவுமது. டியடித்தார்கள் —"இப்படியானதேவர்களல்லவமை
யை விடாது சம்பராசுரன்தெரிந்து அருவுணவுள் நாரு
மனும், பலத்தையுடைய முன்டிகனும்பொருந்திய
விவர்களுடைய சேனைகள்முன்னேபோக அனுப்பி
னான்; மிகவும் அஞ்சிடத்திறமையாயுள்ளபடிய, தே
வர்கள் சமயம்பார்த்தும் போர் செய்தார்களென்று
சொல்லவும், கோபமிருக்கசம்பராசுரன் தெய்வலோ
கம்வர, மாயாவித்தையில் பிருந்தவனென்று அவன்

‡ இ-ம். மனமானது ஆத்மாவுக்குதன் ஞானமாக விளங்குமென்பதாம்.

† இ-ம். மனதுவிவேகஞானத்தால் மறைப்புநீங்கிச் சுயமாய் விளங்குமென்பதாம்.

§ இ-ம். மனமானது ஆத்மப்பிரகாசமாதலால் லக்ஷியமாகத்தோயன்றி வேறு யாதென்பதாம்.

டினார்கள் ; ஓடாநின்றதேவர்கள் பின் காமனும் மற்று முள்ளவசுரர்களும் திக்குகள் முழுதும் தேடினார்கள்.

உ௮. தேவர்கள் பிரமனிடத்துச் சென்று முறையிடுதல்.

தேவர்களோடி மறைந்ததை காணாதவர்களாய், உயர்வானமுனிவர்களும் தெய்வலோகத்தினின்று இரும்பொம்பாரசுரனுக்கு முன்பாகவந்தார்கள் ; கட்டமாகிய தேவர்கள் என்னசெய்வதென் றெண்ணிக்கொண்டு பதுமாசனருகான பிரமன்முன்போய், அன்புடன் வணங்கி அறிவின்றனைக்கிளிக்கொட்பான சம்பாரசுரனது கொடுமையையும், கொடிய கண்களையுடைய காமவியாளகடர் தொடர்ந்து துரத்தினதையும் சொன்னார்கள்.—இவைகளைக் கேட்ட பிரமா சிந்தித்துப் பயப்படவேண்டாமென்று இந்த வார்த்தையைச் சொன்னார்.

உ௯. பிரமதேவன் முனிவரைச் செயிக்கு முபாயமுரைத்தல்.

ஆயிரம்வருடத்துக்குமுன் மெய்ச்செய்கின்ற சம்பாரசுரன்யுத்தத்தில் அசுரர்களை தேவேந்திரன் கொல்லுவான், அந்தக்காட்சிகள் செய்யத்தக்கதைச் சொல்லுவோம் — மேற்சொல்லியகாமன், வியாளன், கடனென்று சொல்லப்பட்டவர்களை போய்க் கூப்பிட்டு யுத்தஞ்செய்வதாகவும் மீள்வதாகவும் தூவத்தினமுதல்கீக்கள் தொடர்ந்தாகடத்தால், அசுரர்களைத் தொடர்ந்து இருக்குகன்றுடியின் சாயைப்போல அவர்கள் மனதில் உண்டாயிருக்கும்.—

௩௦. வாசனையே முபாயத்தை யறிவித்தல்.

இலையையடையும்படியாக காலென்கின்றவாதனையிருந்தால் : வலைக்குள கப்பட்ட பக்ஷியைப்போல, முன்றுபோர்களு மாள்வார்கள் ; கொல்லுதலும் வெளிதாகும் ; இச்சையே ஆத்மாக்களெல்லார்க்கும் காலனும் நீக்காதவைகளாகும், இராகமே துக்கமில்லாதவாகத்தகும்.—

௩௧. உயிருக்கிச்சையே கூற்றெனல்.

வாதனையென்னும் கயிற்றிலுள்ளிருந்த பிராணிகள் இயாவர்க்கட்டுப்பட்டுண்டானவைகளும், அங்கவானுக்கு கஷ்டமாகும் துயரமாக்கொடுக்கும், பற்றற்றவமாகுஞ் துன்பமில்லையாம்.

௩௨. இச்சையா லுயிர்களுக்குப் பந்தமாமெனல்.

ஆசையிலுள்ளுற்றமாற்றவர்களாயினும், சர்வஞ்ஞர்களாயினும், தீரர்களாயினும் பந்தப்படுவார்கள்.—தனிபூண்ட கேசரியைப்போல, ஆசையில் மேன்மையுள்ளவர்கள் தாழ்மையை யடைவார்கள். நீங்கள் கவலையிருங்களென்று பிரமனால் பார்த்தகளிடத்தின் மறைந்துபோனபின்

௩௩. வானவர்யுத்தத்துக் காரம்பித்தல்.

பு, இப்படிப்பிறையப்படியாக சகலத்தையுங்கேட்ட தேவர்கள் தெய்வலோகமடைந்துபூமியிலேந்து அன்று மகிழ்ந்துப்படி. பெரியபேரிகையுடன் சத்தித்தார்கள்.—சத்தித்ததைக்கேட்ட அவ்வசுரர்கள், பாதாளத்திலிருந்தும் மிகுந்தவேகத்துடன் சோபித்து

௩௪. அசரருக்கு வாசனையேற்றல்.

வந்துகொடிதாகிய வாயுக்களை தேவர்களின்மேற் பெருகிச்சார்கள் ; கால்நுதலைக்கழிக்கின்ற தேவர்கள் யுத்தமுனைக்கோடிப்போய், மீளவும்வந்து யுத்தஞ்

ஙரு. மனதுவாசனையிற் கட்டுப்படல்.

ஙசா. தேகாபிமான முண்டாதல்.

ஙஎ. மனோமயக்கமாதல்.

ஙஅ. தானவிறத்தல்.

ஙகூ. அவிவேகத் தன்மை யுரைத்தல்.

சய. தாமாதிகள் பிரமத்தி லுதித்த தெவ்வனமெனின்.

சக. அவின்யா மெப்படி விளங்குவமெனின்.

செய்து ஓடிப்போய், திரும்பவும்வந்து அந்தயுத்தத்தைச்செய்தார்கள்.—இந்தப்பிரகாரம் நானாவிதவுபாயங்களால் வழிந்தவெகுகாலமாகயுத்தஞ்செய்ய, வெடாயின்றதிரமாகிய நானென்கின்றபுறக்கத்தினால் உண்மையாக நானென்றாயிளைக்கின்ற ஆசையை இச்சித்தார்கள் ; அவ்விதத்தினால் மனமானது பந்தப்பட்டிருந்தது.— அச்சம்வந்து பற்றிக்கொள்ளவும், மிகுந்தமயக்கம் தழைந்துக்கொள்ளவும், வருந்துகின்ற மாயாபாசத்தின்றூற்றி என்னசெய்வோமென்று துன்பம்வரமெலிந்து, தேகமாசமாகாம லிருக்கும் வண்ணமும், மயக்கம்பொருந்திய திரவியங்களினால் சுகம்வருவதும் எவ்வண்ணமென் றாலோசித்தார்கள். —எப்போது மிந்தப்பிரகாரமிளைக்க பந்தப்பட்டமனதையுடையவராய் முடிவுற்றிடமில்லாமல் போரென்றால் மிகவும்பயந்து மனமொடுங்குவிப்போமென்றும், ஆதாரமானவிடம்மக்கெதுவென்றும், தினைவினாலாகிய தீயமனதினால் கலக்குற்று வாடினார்கள் — தாங்கள் வல்லமைகளையெல்லாம்போக்கி தங்கள்முன்னொருவன்வந்து நின்றாலும், அறிவுசெய்யமாட்டாதவர்களாய் நடுக்கமடைந்தார்கள் ; சரித்திலலாமற்போனால் ஆதுரிகொடுக்கின்ற தேவருணவை அக்கினியானது புசிக்கும்படி வல்லமையுண்டாமோ, சத்தமாகச்சொல்லியென்ன, பயந்தோடி. இறந்தனர் —தாமனென்பவனும், வியாளனென்பவனும், கடனென்பவனும், முன்னடந்தவழியை முற்றமற்ற ஞானமுண்டாகும்படி உமக்குச்சொன்னேன் ; வினையாட்டினால் மயாமனமானது அஞ்ஞானத்தில் தடையில்லாமற்பறியினால் அறிவின்மையாகியபயத்துன்பமானது இப்படிப்பற்றது.†—ஆகையால், இந்தத்தாமாதி அசுரர்களுடைய தீதிகளை, ஸ்ரீராமா? நீ இவ்விடத்தில் பொருந்தாதே என்றுசொல்லவும், அவர்கள்பிரமத்திலிருந்தும் உண்டானதன்மையை அறியவேண்டும், சொல்லுமென்று இராமன்கேட்கவும், வசிட்டமுனிசொல்லுவார். அச்சமுள்ளதாமன் முதலானவர்கள் பரத்தினது தோற்றமாத்திரமே சரீரமானவர்கள்.¶ —எதிரேகாணப்பட்டதோற்றமே சரீரமாயிருக்கின்ற இத்தாமாதிகளைப்போல, இவ்விடத்திலுள்ளாரும் உண்மையாகவிதாகாசத்திற்றுப்

† இ-ம். பிரமவிஷ்டையுள்ள சம்பாசுரனுடையனடாக்கின தாமாதிமூவரும் தீரமுள்ளவராயிருந்தும் யானென தென்னும் வாசனையாற் றேகாபிமானமடைதலி லழிவிழந்தார்க ளென்பதாம்.

¶ இ-ம். பிரமப்ரதிபாமாத்திரமாய்த் தாமாதிகள் தோற்றினரென்பதாம்

புறம்பாக வொன்றினும் பொருந்திலம். சுத்தவீரனே? உனதுபிறவில்லாதெனென்பதும், அசத்தியமே; நீயென்பதும் அசத்தியமே; நாமென்முதலியவைகளுண்டென்பதும் அசத்தியமே.§—பிரமத்தினது விளக்கமே உருவமாய் வியாபித்திருக்கின்ற ஆத்ம சத்தியானது, இதமுள்ள சம்பாரசாரனுடைய நினைவினுஞ் சலனமடைந்து நாமாதிமுன்னுவடிவங்களாய் நிமானைவல்லாசத்தைத்தடைந்துசொல்லிய இக்குணத்தினால் வாராநின்றவர்களும், யாரும் உண்மையாகவே எவ்விடத்துமில்லை.¶—பாவைபுகுதாட்டிய பதியைதாயும் போதாகாரமாயும் நின்மலமாயுஞ்சமஸ்தமாயும் உபசாந்தமாயும் வேற்றுமையுமாயாஸ்தமனமும் இல்லாததாயு மிருக்கின்றபிரமஸ்வரூபமே யுள்ளதாகும். ஆப்பூரணவஸ்துவினுடைய சித்சத்தியினது உண்டாதலேயுலகமாயிருக்கும், இத்திரியங்களாலறியப்பட்ட காலாதிகளாகிய திரிஸ்யங்கள் அசத்தியமே, பிரமவஸ்துவே சத்தியமென்று நீ சுகித்திருப்பாய்.‡—

௭உ. சம்பாரஞ் சூனியமாகிய ஞானமுடையனிருமையாதெலின்.

௭௩. ஆபிரகாமனித்தியர் தானே யெனலின்.

தாமவியாளகடர்கதை முற்றிற்று.

வீமபாசநிடர் கதை.

அவதாரிகை.

முன்சம்பாரகரான் பிரமத்தியானத்துதித்தும் விரோதிருந்தும் இத்தயுத்தத்தைத் தங்களனுபவ வுல்லாசமாய்ப் பாராமல் வேறுபட்டு, யானெனென்னும் பழக்கமேறித் தன்னை மிறந்ததையக்கூறி, எப்படிப்பட்ட இடமுவந்தவிடத்தும் வேறுபட்டு தேகத்தி லகம்பாவம் வாராமல், தனதுல்லாசமாய்ப் பார்க்கு மித்தகம் வீமாதியர்கதையை நிருபிக்கின்றார்.

க. விடயமிருப்பதில் பயமின்றெனல்.

இப்படித்தொதிகள் மாக்கென்றும் இப்பூமிமுதலானவைகள் மாக்கென்றும்வாரேதின்ற நிர்ப்பாக்கியத்தினால், சகாயமானது ஒருசாம்பாளவாவது கொடுக்காது. உதாரமிருந்திருக்கின்ற புருடர்கள் நாசமடைகின்றவைகளைத்தும் திரணம்போல காண்பவர்களிடத்தில், மான்கள் மைக்கோலைத்தொடாததுபோல, துன்பங்களியாவும் தொடாவாம்.†— உள்ளத்திற்

௨. உலைத்தைய

§ இ-ம். யாமுமப்பிரமப்பாகசமாய் விளங்குவமேயன்றி வேறன்றென்பதாம்

¶ இ-ம். சம்பாரனதாத்மவுல்லாசமே யப்படிதோற்றின தென்பதாம்.

‡ இ-ம். சகலமும்பிரமப்பாகசமாய் விளங்குதலிற்சகித்தலேயென்பதாம்

† இ-ம். பயமின்றிய சகத்தை யற்பமாகப்பார்க்கில் சுகமுண்டா மென்பதாம்.

ணுவாகப் பார்க்குந் திருஷ்டியா தெனின்.

பொருந்த சமத்காரசத்திசேர்ந்த பிரமத்தை அறிய வர்களை, அளவிடுதற்கரிய பிரமாண்டத்தைப்போல எண்டிசைசப்பாலர்காப்பார்கள், சொல்லற்கரியகுணங்களில் அன்பாயும்விசாரணையில்விருப்பமாயும் தத்துவத்தை விளக்குகின்ற வஸ்துவில்பிரயாசமிருந்தவர்களாயு மிருக்கின்றவர்களே புருடர்களாவர், மற்றவர்கள் விலங்குகளாவர். ‡—செய்தற்கரிய துன்பமடைந்தாலும் செய்யக்கூடாததொழில்களைச் செய்யக்கூடாது; ஒழுங்கல்லாதமார்க்கத்திலேற்படுகிற இராகுவென்பவனை அமுதமானது கொலைசெய்தது,

௩. உண்மையை யுணருமுயற்சி யாதி னு லுண்டாகு மெனின்.

முயற்சிக்கின்ற சற்குணங்களினல்லிருந்த கீர்த்தியை அடைந்தசத்துக்களுக்குமங்கலமானவைகளைத்தும் வைமாகி, ஆபத்துக்களென்றுசொல்லப்பட்ட சகலமுநீங்கி,எப்பொழுதும் அளவற்றசம்பத்துண்டாம். †—

௪. அவ்விசார மெதைக்கொடுக்கு மெனின்.

நீங்காதமுயற்சியினாலும் யுக்தியினாலும்மேலான ஞானசாஸ்திரங்களினாலும் குற்றமற்றபவர்களுக்கு எத்தப்பிரயோசன மெனிதிற்கிடையாது, வழிபாடாகிய ஆத்மஞானசாஸ்திரத்தை யனுபவிப்பவர்கள் வரப்பட்டப்பிரயோசனத்தை விரைவிலடையச்சித்தியாமல்கிரமமாகவுண்டாகித்தால் கொடாமைமுழுதுமுகிர்ந்து முடிவற்ற ஆத்மலாபத்தைக்கொடுக்கும். ¶—துன்பமில்லாமல் பயமும்சோம்பலும் செருக்குமில்லாமல் ஆத்மஞானசாஸ்திரார்த்தங்களின்பின்சென்று ஒருவனால் எவ்விதவில்லாமல் சஞ்சரிக்கக்கடவாய், செவிப்படிவிரும்பாதே; இராவியங்கள்பயனில்லனவாம்; மிருத்தபோகங்கள் துன்பமாம்,செல்வமானது பெரியபயத்தை யுடையதாம்; இராசையேபோகந்தமாம். §—துன்பமிருத்தகட்டமில்லாமல் இயல்பானவொழுக்கமடைந்து சம்சாரமானதுன்பத்தையுடையவிடயங்களை கருதாதபெருமையையுடைய சத்துக்களுக்கு, மிருத்தகீர்த்தியையும் செல்வமும்சற்குணங்களுமாகிய சகலமுமுண்டாகி, பிரயோசனமானது காற்றினால் பூங்கொடிகளைப்போலக் கிடைக்கும். *—அடவிகளிலும், புண்ணிய தீர்த்தங்களிலும், நாடுகளிலும்,தீங்காதசனங்களை, மகான்களாநிரும்படியவனை

௫. ஆத்மாவின் ஸ்வரூப மியாதெனின்.

௬. அப்போகந் தத்தாலியாது வரு மெனின்.

௭. பவத் துன்ப நீக்குமுபாய மியாதெனின்.

‡ இ-ம். தத்துவத்தையறிகின்ற முயற்சியால் சமற்பாதந் தோற்றுமென்பதாம்.

† இ-ம். மயித்திரியாதி குணங்களுண்டாவதால் அப்பர்வளிலும் விசாரமுயற்சி யுண்டாகுமென்பதாம்.

¶ இ-ம். சுருதியுத்தி யனுபவத்துடன் விசாரிக்கும் விசாரனை யாத்மலாபத்தைக் கொடுக்குமென்பதாம்.

§ இ-ம். நிரதிசயமாகிய போகந்தமே யாத்மஸ்வரூபமாம்.

* இ-ம். பவர்துன்பநீங்கி பரகதியுண்டா மென்பதாம்.

ங்கிப் பாசங்களைக் கெடுக்கவேண்டும். பயனின்மை யான நானென்னுமோகமும், சினமும், மிகவுங் குறைந்து இயல்பாகிய சன்மார்க்கங்களிற்சென்று, ஆத்மஞானசாஸ்திரமார்க்கத்தினின்றவர்கள் மேன்மை யானசத்துக்கள்.

௮. மகான்களாரெனின்.

†—நானென்பதற் கருத்தமாகியபிரமத்தைக் காணுதவர்கள், சிதாகாயத்தைப்பாரார்கள்; நானென்பதினருத்தமாகியபிரமத்தைக்கண்டவர்கள்சிதாகாயமாவார்கள், நானென்கின்ற வகங்காரமேகமானது ஞானுகாயத்திங்களைமறைக்கில் யானென்று சொல்லப்பட்ட பிரமமென்னும் அல்லிப்புட்பமானது மலராது.

௯. நானென்பதியாதினும்கெடுமெனின்.

‡—அளவற்ற துன்பமுள்ள வகங்காரமானது, அங்குரமாகமுளைத்து ஜீங்காதசாகமென்னும் தருக்கூட்டங்களானவை யானெனதென்கின்ற கின்டகிளைகளாகவிரித்து நரகமென்னும் காய்களைக்காய்க்கும், அத்தருக்களானவை குறைவற்றஞானத்தினியினுல், வேருடனெரிந்துபோகும். § — என்றுவசிட்டர்சொல்லவும் இந்த வகங்காரமானது என்னவடிவுறுடையது, எப்படி செயத்துசெய்யலாம், தேகவாசனையைப் பொருந்தினவனுனுலும் பொருந்தாதவனுனுலிருந்து, ஒருபொழுது செயத்செய்தால் வருகின்ற ப்ரயோசன மென்னவென்று, இராமர் கேட்க, வசிட்டமுனி சொல்லுவார். —

௧௦. அகங்காரத்தின்ஸ்வரூபமும் அதைஞானத்தாற்கெடுக்கு முபாயமும் அஃது நீங்கினவிடத்துண்டாகும்பயனுமியாதெனின்.

மூன்றுவிதமாகியவுலகங்களில், இவ்வகங்காரமானது மூன்றுவிதமாம்; அவற்றுள் எப்பொழுதும் இரண்டகங்கார நன்மையையுடையதாம், ஓரகங்காரம் இழிவையுடையதாம்; சகலசங்களும் பரமாத்மாவும்நானேயாம்,நானுமுடிவிலம், நன்மையன்றி வேறுபாவனையுமில்லை என்று ஆராய்ந்தறிகின்ற ஞானமேமேன்மையாகிய வகங்காரமாம்,—கேல்வால்துனியிலுந்த நுட்பமாகியும்சகலவுலகங்களுக்குப்புறம்பாகியும் நாம் எப்பொழுதும் நிலையாயிருக்கின்றோமென்று கொள்ளப்பட்டஞானமே இரண்டாவதாகிய அகங்காரமாகும்,

௧௧. அவ்வகங்காரமூன்றின் முந்தின வகங்காரவிலக்கணங் கூறல்.

௧௨. இரண்டாமகங்காரவிலக்கணங்கூறல்.

இந்தநிச்சயத்தையுடைய விரண்டகங்காரமும்வென்முத்தர்களிடத்திலிருந்து ஊனமேற்றி அடைதற்கரிய மோக்ஷத்தைக்கொடுக்கும், கூறுகின்ற பந்தத்தைக் கொடுக்கமாட்டாது.¶ — இப்படிப்பட்ட யானே பாவனையாதிகளாகிய சரீரமாத்திரமாம் என்றறிகின்ற உறுதியே மூன்றாவதகங்காரமாம். உலகத்திலுள்ள

௧௩. மூன்றாமகங்காரவிலக்கணமறிவித்தல்,

† இ-ம். மகான்களைப்பணிவதே பவத்துன்பநீங்கு முபாயமென்பதாம். [ம்.

‡ இ-ம். நானென்பதை நீக்கித்தானுகவிளங்குபவர்களே மகான்களென்பதா

§ இ-ம். ஞானத்தினுலகம் பாவங்கெடுமென்பதாம். [ம்

¶ இ-ம். இவ்விரண்டகங்காரமுமோட்சமடைவதற்குச் சகாயமாமென்பதா

அனைவர்க்கும் உரித்தாகும், மிகவுங்கொடியது, சமுசாரமென்கிற விடவிருக்ஷம் வளர்தலுக்குக் காரணமாம், வருத்தமுற்றுவது இதனைக் கெடுக்கவேண்டும்.—

கச. இவ்வகங்காரத்தைக் கெடுக்குமுபாய மறிவித்தல்.

கொடியதுகொடியது மிகவுங்கொடியது, இவ்வகங்காரத்தின்கொடுமையினால் அனைவற்ற வர்த்மாக்களை யெத்தும் மயக்கத்தையடைந்து அறிவிழந்தார்கள், இக்கிரகத்தில் முன்சொன்ன அவ்விரண்டகங்காரங்களாலும் இந்த மூன்றாவதான அகங்காரத்தைக் கெடுத்து இதை யொவ்வொருத்தினேயோ அவ்வளவே மோக்ஷமானப்பிரமவஸ்துவானது வரும். ¶ —

கரு. அகங்காரங்களிரண்டின் விடத்தக்கும் பயனுரைத்தல்.

மேலாகிய இரண்டகங்காரங்களினால் பிரமத்தையடைந்து அவ்விரண்டகங்காரங்களையுந்தள்ளி மூன்றாவதான வேறகங்காரமுமில்லாமல் உறுதியாகநிற்பாயாயில், அந்நிலையே முத்திக்கு பிரமபதமாம்; தோற்றுகின்ற சரீரத்தை நானென்றுசொல்லானமையே வேதங்கள்முறையிடுகின்ற நிருவாணமாம். ‡ —

கசு. இவ்வுபாயமறிவிக்கதிருஷ்டாந்த மறிவிக்கத்தொடங்கல்

இவ்வகங்காரங்களின் குணத்தைச் சொல்லக்கேட்பாய், முன்சொல்லியிருக்கின்ற தாமன்முதலியவசுரர்கள் அதமாக நசித்தபின்பு, மாயாவித்தையில் வல்லமையுள்ளவனான அச்சம்பராசுரனவன் கோபித்து வெகுவித் திருக்கின்ற தேவர்கள்சேனையை கொல்லும்பொருட்டு தந்திரத்தைதாகாவிதமாய இக்கப்பிரகாரம் நினைத்தான்.—

கஎ. விவேகிகளைச் சிருஷ்டிக்கவினைத்தல்.

அசுரர்களென்று சொல்லும்படி முன்புமாத்திருஷ்டித்த தாமன்முதலிய மூவர்களுக்கும் ஆத்மஞான மின்மையால், யானெனதென்று அகத்தியத்தை யுடையவர்களாய் தேவர்கள் யுத்தத்திலிறந்தார்கள். ஆகையால் இனிமேல் ஆத்மஞானசாஸ்திரத்தில் தெளிந்தவர்களாகவும் ஞானத்தையுடையவர்களாகவும் பொருந்திய வொருமாயையினால் சிருஷ்டிப்பேன்.—

கஅ. விவேகிகளுதித்தல்.

சத்தியஞானம் பொருந்தியின்றதினால் முற்றுமறிந்தவர்களாகிய வகம்பாவத்தினால் விடப்பட்டார்கள், தேவர்களுடைய சேனையைக் கெடுக்கும்படி செய்பவர்களென்று களங்கமற்ற மனதிற்றிகழ்ந்து மாயையினால் வரைகளையுண்டாக்கினான்; நீரினைச் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தி லுண்டாகப்பெற்ற குமிழியைப் போல மூன்றுபேருண்டானார்கள்.—

கக. அந்த விவேகிகளியல்பைக்கூறல்.

சகலத்தையுமறிந்தவர்களும் தங்களை ஞானவடிவமென்று ஞானத்தினாற்கண்டவர்களும் சத்தியவழியைத் தொடர்பின்

¶ இ-ம். இவ்வகங்காரஞ் சமுசாரணத்தைக் கெடுக்குமென்றறிந்ததையவ் விரண்டகங்கார ஞானத்தால் கெடுப்பதே யுத்திவென்பதாம்.

‡ இ-ம். தேகத்தை நானென்பதொன்றும், பிரமத்தை யானென்பதிரண்டும் ஆகியமூன்றுங் கரைந்தாற்றான் மாத்திரமான மோட்சமாய முண்டாமென்பதாம்.

லாதவர்களும், ஒருவஸ்துவில் ராகத்துவேஷமில்லா தவர்களும், நினைக்கப்பட்டகாலத்தில் அடைந்தஸ்தி தியிலிருப்பவர்களும் இனியபோவாயினும் சந்தேகமி

௨௦. தேவர்களிடத்தசுரர் சென்று யுத்தஞ்செய்தல்.

ல்லாதவர்களும், தெளிவுள்ளவர்களும், — காமத்தினுல்வீடமென்றும், பாசமென்றும், திடமென்றும், தங்கள் செல்வத்தினுற் சுகங்களைத்தையும் அருளும் பாயுகின்ற பரிசுத்தர்களுமாகிய இவர்களை, தேவயுத்தத்திற்போம்களென்று சம்பராசுரன் சொல்லப் போய், ஒப்பற்ற தேவர்களுடன் பெரிதாகிய யுத்தத்

௨௧. ஆத்மதிருஷ்டி வழிஅம் அதை நீக்கிநிற்றல்.

தைச் செய்யத்தொடங்கி, — அளவில்லாத வருஷம் கொடிதாகிய யுத்தத்தைச்செய்தார்கள்; இவர்களுடையமனதில் அறுக்கென்று யாதொன்றெதன்னும் தோற்றுமல்பானபொழுது ஞானத்தால் விசாரணைத்தினுல் காமெப்படிப்பட்டவனென்று கண்டுகட்டார்க்களும், தருமமில்லாதவர்களது செல்வம்போல, அந்த யாதொன்றுதன்னும் தோற்றமானது அகற்றியாய்ப்

௨௨. அவர்களுடைய திருஷ்டியைக் கூறல்.

போம்; — பலவிதமாகிய ஆத்மவிசாரணையினுல்விரிக்தலைங்கார பிறந்தவர்கள், பிறப்பிறப்புகள் வருமேயென்று பயப்படுந் சலனமில்லாதவர்கள், களங்கமற்றவர்கள், எளிதாய்க்கிடைத்தபொருளைக் கிரிகிட்டவர்கள், இப்பொழுது கடக்கவேணத்தும் பழமையாகிய புதுமையாகிய ஞானதிருஷ்டியினுல் குற்றம

௨௩. தேவர்கள் பயமடைதல்.

றச் சமமாகப்பார்ப்பவர்கள். — ஆகையினுல் சூரர்களாயிருக்கின்ற அந்தரிஷிகளால் தேவசேனையானது, ஆகையினுல் புதித்துத் துலேக்கின்றகாலியனது செல்வத்தைப்போல, ஓடிப்போதலேயே விரும்பி திசைகளிற்போய் மறைந்து, பூமியைப்பிளந்து திருமாலே அபயமென்று விழுந்துவிட்டிற் போயடை

௨௪. அவர்களாத்மசித்தி யடைதல்.

ந்தார்கள். — சரணுகதியென்றடைந்த தேவர்களுக்கு பயப்படாதிருங்களென்று அபயங் கொடுத்து, கோபித்தவந்து யுத்தகளத்தில் அடிக்கின்ற விஷ்ணுவோடும் அரிதாகியயுத்தத்தைச்செய்து, சக்கராயுதத்தையுடைய, அநிவனின்றும் பயப்பட்ட அக்கினிச்சுவாலேயெரிக்க பெரிந்து, அசுரபாஜ்ஜையை பாவிக்கமார்மையுடைய விஷ்ணுவாலுகின்ற சேனைவரு

௨௫. மனோசந்தான நீக்கத்தை யறிவித்தல்.

க்குத்தையு படைக்தார்கள். ¶—சேவிக்க ப்ரகாரத்தினுல் வாசனையினுல் பாசமானது பிடித்துக்கொண்டும்; அம்மாதிரியான கீழ்நிலையினுல் பாசமானது நீங்கும்; விசேஷஞானத்தால் இராமா? நீ அன்றுயறிவாய். அப்

¶ இஃது: ஸம்பாஸரனது பிரமத்தியானித்தினுடைந்த ஸ்ரோதிகளென்னும் விவேகிகள் யுத்தத்தினுல் நீங்கப்பெற்ற திருக்குணங்களே யிருந்து முடிவில் வியாபகப்ரத்தாவென்னு ஞானப்ரகாசத்திற் கலந்தனரென்றறிவித்ததாம்.

படியறிகின்ற தத்துவத்தினால் உபாதியாகிய வாசனாக்ஷயம்வரும்; வாசனாக்ஷயம்வந்தால் அச்சமற்றமனமானது நெய்யில்லாத தீபத்தைப்போல உபசாந்தமாகும். §—

வீமபாசதிடர்கதை முற்றிற்று.

தாசூரன்கதை.

அவதாரிகை.

முன்பு அகங்காரத்தியாகம் ஆத்மார்த்தத்தின் பொருட்டாமென்பதையறிவித்து, அவ்வாத்மசங்கற்பத்தால் விளங்கிய சகஸ்திதியை விபரமாயறிவிக்கு நிமித்தம், தாசூரன்கதையை நிரூபிக்கின்றார்.

க. மாயையைக்கெடுக்கு முபாயமியாதெனின்.

நீங்காத துன்பத்தைக் கொடுக்கின்ற மாயையென்கின்ற ஆபத்தைக்கெடுக்க மனோநாசமே ஒப்பற்ற தந்திரமாகும்; குறைவில்லாத தத்துவஞானார்த்தங்களனைத்தையும் நான்சொல்ல இராமா? நீ கேட்டு மறதியில்லாமல் உளத்திற் றரித்துக்கொள்வாய். குற்றமாகியபோகத்தினது ஆசைபேயாத்தமாகும், அவ்விச்சையைவிடுவதே பிரமஸ்வரூபமான மோக்ஷமாம்; இதாமார்க்கமான பலசாஸ்திரங்களாலும் ப்ரயோசனமென்ன, வருத்தப்படாமல் இச்சாதியாயமுள்ள இந்த மார்க்கத்திலே வரவேண்டும். ¶ — ஈதின்பமாம் ஈதின்பமாமென்று சொல்லப்பட்ட விஷயங்களையும் அக்கினியைப்போலவும் விடத்தைப்போலவும், ஸ்ரீராமா? நீ நினைக்கக்கடவாய். உயர்வுதாழ்வாயிருக்கின்ற துன்பமுள்ள போகங்களைப் பலகாலும் விசாரித்து மனதிற்கலவாமல் இலேசாகப் புரிந்தால் இன்பமாகவே யிருக்கும்; வன்மையாகச் சொல்லப்பட்ட மனதுண்டாகுதலே ஆத்மநாசமாம்; மனோநாசமே மகத்தான ஆத்மோதயமாம்; நல்ல பிரமஞானிகளது மனது நாசத்தையடையும்; அஞ்ஞானிகளுக்குக் குற்றமிருந்த மனமானது கால்விலங்காகும். †—ஆநந்தமும், ஆநந்தமில்லாததும் இவ்விரண்டுமில்லாதது அசைதலு மசைவில்லாததுமான அய்

உ. அம்மனதிற்கு முபாயமியாதெனின்.

௩. ஞானிகள் மனதும் ஆத்மா

§ இ-ம். வாசனையுதித்தலேபந்தமும், அதனிவிர்த்தியே முத்தியுமாதலின் அவ்வகங்காரவாசனையை நீக்கல் ஞானசாகமாய் மனோசஞ்சலநீக்கு மென்பதாம்.

¶ இ-ம். விடயவாசனையுள்ள மனதைக்கெடுத்தலே மாயாநாசவுபாயமென்பதாம்.

† இ-ம். விடயசுகந்துன்பமென்றறிவதே மனமிறக்குமுபாயமென்பதாம்.

விற்சகத்தும் இருக்குந் தன்மை எப்படியெனின்.

விரண்டுமில்லாதது, குறைவில்லாத சத்து மசத்துமல்லாதது, இவைகளனைத்திற்கு நடுவுமல்ல, ஞானிகள்மனம் என்று சொன்ன மாத்திரத்தில், முடிவில்லாத வாத்மஞானமாகியும் சகத்துக்கு மேலாகியுமிருக்கின்ற தத்துவஸ்ருபத்தில் சகமிருக்கின்ற தன்மையை, அறிவானது வளரும்படியாக சொல்லுவாயென்று ஸ்ரீராமன்கேற்க, வசிட்டமுனி சொல்லத் தொடங்கினார். § —

ச. தத்துவவிலக்கண மறிவித்தல்.

வேறுகாமல் எந்த விடங்களிலும் பொருந்தியிருந்தும் பொருந்தாமல் சூட்சுமத்தினால் வேறுபடுகின்றவாகாயத்தைப்போல, வேறுபடாத ஞானஸ்வரூபமானது எவ்விடத்திலும் பூரணமாகவிருந்தும் வேறுபடுகின்ற அவ்வஸ்துக்களிலொன்றிலும் பொருந்தமாட்டாது. பயனின்றிய சங்கற்பங்களியாவு மில்லாததாகியும், நாமமில்லாததாகியும், நாசமில்லாததாகியும், வேற்றுமை யில்லாததாகியுமிருக்கின்ற வாத்மஞானமானது, இடையூறில்லாத அம்பரத்தை நாலிலக்கம் பங்குசெய்து அவைகளிலொருபங்குக்கு சமானமாகச் சூட்சுமமாம் —

ரு. சந்தேசகத்தாகத்தோற்றுதல்.

நன்மையைக் கொடுக்கின்ற ஆத்மாமுதலாகிய நாமங்களிடப்பெற்றும், ஞானவான்கனிடத்தில் நிருமலமாகியஞானமாகி, பொருந்து மஞ்ஞானஸ்வரூபமாகிய சம்சாரரூபத்தோடும் ஏகமாயிருந்து, தனதாத்மஸ்வரூபத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்ற ஞானமே, சத்தியமாய் தனக்குத்தானே யொப்பாயிருக்கின்ற ஞானமாத்திரத்துக்கு வேறில்லாமல் இச்சத்தாமாத்திரமே யாகாரமாயிருக்கின்ற உலகங்களனைத்தும், நெருங்கிய வலைகண்முதலாக உண்டாகிய சகலமும் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தில் வேறுபடாமற்றொடர்ந்து நின்றது போலவாம். —

சு. சித்தெவரெவர்க்கெப்படியோ வப்படியேயிருக்குமெனல்.

ஆத்மாவையறியாதமூடர்களுக்கு, துன்பத்தைக் கொடுக்கின்ற நானாவிதமாகிய சகமாகியும் கொடிதாகியும் ஈனத்தன்மையாகியுமிருக்கும். எப்பொழுதுந் தனதுஸ்வருபத்தைத் தெரிந்தவர்களுக்கு, ஞானப்பிரகாச மாகியும், சகலமும் ஏகமாகியும், தானகவே யனுபவியா நின்ற சுபாவத்தினால், கருத்தாடன், கருத்தாவும் கருவியும் தொழிலுமாகிய விம்மூன்றையும் ப்ரகாசிப்பிக்கும் பாவனைசெய்த நினைவுகளனைத்திற்கும் அந்தாசமாகவேயிருக்கும்; பிறவிச்செல்வத்தை யனுபவிப்பவர்களுக்கு அந்தப் பிறவிச்செல்வமாகவே யிருக்கும். —

எ. சகலமுஞ் சிற்ப்ராகாச மாகவேவிளங்குதல்-

உதயாஸ்தமானமில்லாததாகியும், எழுகின்றதும், நிற்கின்றதும், பக்கத்திற்போதலும், வருதலுமென்கின்ற

§ இ-ம். ஞானிகள் மனமானது ஒன்றிலும் பற்றற்று தன்மயமாய் விளங்குமென்பதாம்.

சகலருமில்லாததாகியும், இவ்விடத்தில் இல்லாததாகியும், இருப்பதாகியு மிருக்கின்ற இக்குணங்களையுடைய ஞானமானது, களங்கமில்லாதவடிவமாய்ப் பரிசுத்தமாகியவாத்மாவே ஞானதேகமாகி வெட்டவெளியிலிருக்கும்; இப்பொருது சொல்லியமார்க்கமே உலகமென்றுசொல்லப்பட்ட நாமத்தினால் நானாவிதவடிவமாகும்; தன்னுடைசக்தியினால் எவ்விடத்தும் ஞானமென்னுமமிர்தமாய் வெளிவிரும். ¶ — இத்தன்மையானது ப்ரகாசமாகியும் நிற்கின்றகைங்கரமாகியும், ஏகமாகியும், அநேகமாகியுமிருக்கின்ற தனதுசெய்கையினால் தானே பூரணஞான தத்துவஸ்வரூபத்தை விட்டு: இவனென்றும், அவனென்றும், நானென்றுஞ் சொல்லுகின்ற குணத்தை நினைந்த பாவனையினால், மெல்லச் செவருமியாய் சஞ்சாரியென்கின்ற நினைவினால் சொல்லிய நானாவிதமாகிய சங்கற்பவிகற்பங்களி லெழுந்து பாவமும், அபாவமும், பற்றுதலும் விடுதலுமாயிருக்கின்ற பேதரூபமாகியபதத்திலிருக்கும். § —

௮. சித்தசக்தி இருப்பதை யறிவிக்கத் தொடங்கல்.

அந்தப்பேதமான இடத்திலிருந்து புரியட்டகவுடலே அனவற்றவிகற்பங்களினால் செய்யும் செய்யாததாம்; இக்குணத்திலிருந்து சவிப்பதே ஸ்வரூபமாகிய சராசரமான ஜெகப்பிரபஞ்சத்தை எவ்விடத்தும் செய்யும், அமானமற்ற தானுகிய பிரமத்தினால், சொல்லியபாவமுற்பத்தியாம், ஜீவாகாசத்தையமையும்; நிசவடிவமில்லாத பூதாகாயத்தில் காணற்சலம் பரவுவதைப்போல, மனோசங்கற்பத்தினால் உலகம் பாவித்தோற்றும். † — இருக்கமுத்தினால் தன்னை யயலானைப்போல தோற்றுகின்றதுபோல பிரிவில்லாத அந்த ஞானஸ்வரூபமேகருக்குகின்ற பொய்போலத்தோற்றிற்று; சத்தமுதலிய பஞ்சவிடயங்களையும் பாதெரன்றிலு வறிகின்றதோ, அதுவே ஸ்ரீராமா? முன்சொல்லிய இந்த ஞானதேகஸ்வரூபமாம். தோற்றப்பட்டசகலமும் தானாகவே நிறைந்திருக்கின்ற வியாபகமான பரப்ரமஸ்வரூபமானது இப்படி சொல்லப்பட்ட தேகமாகும். இதற்கு இந்தப் பிரமமென்னு நாமமானது சபாவமாம். இதற்குவேறானதொன்றுமில்லை. ‡ — சமுத்திரத்தில் அலைமுதலா

௯. ஜீவனேமனமாய் அநாசகத்தாக விரிதல்.

௧௦. ஆத்மாவே யநாத்மாவாகத் தோற்றிவிளங்குதல்.

௧௧. திரிஸ்ய

¶ இ-ம். தத்துவவிலாசத்தைச் செம்மையறிவித்ததாம்.

§ இ-ம். சயஞ்சித் திருக்கப்பட்டிருக்க வுதன்சங்கற்பமே ஜீவனுமெப்பேதமானத்திலமுந்தின தென்பதாம்.

† இ-ம். ஆத்மா தனதுசங்கற்பமாகிய மனதினால் நானாவித நாமரூபமாகி சரீரங்களையுண்டாக்கிக் கெடுக்குமென்பதாம்.

‡ இ-ம். ஆத்மா தனதுசங்கற்பத்தினால் விஷ்டமான மாயன்டாகிய தன்னைமறந்து ஆரோபிதமான சகத்தாகத் தோற்றப்பட்டாலும் தானாகவே விளங்கிக் கொண்டிருக்குமென்பதாம்.

விலக்கண மறி விந்தல்.

கவுண்டான சகலமும் சலமாகிவிளங்காமல் புருஷி யாமோ ; அதுபோல, ஒப்பற்றவஸ்துவாகிய பிரமஸ்வ ரூபமாத்திரமேயல்லாமல், இரண்டென்கின்ற ஆகா சாதி கற்பனாமங்கள் ஒன்றுகிலுமில்லை. அக்கினி யின்கிட்டத்தில் உஷ்ணமாத்திரமேயன்றி இரண்டென் டாயிருக்குமோ, அத்தன்மையைப்போல எப்போ தும் பிரமசொரூபமானசகம் பிரமத்தி லபின்னமே யாம் ; சரியை கிரியா யோகமென்கின்ற மார்க்கங்க ளில்முதிர்ந்து நான்கு சாதனங்களு நிறைந்தவர்களு க்குச் சொல்லவேண்டும். §—முன்னமே பேசுது இயல்பானபக்குவங்களைப் பரிசோதித்து பின்பு சர் வமுமாய்விளங்கிய பிரமஸ்வரூபமே நீயென் றுப தேசிக்கவேண்டும். அதிசயிக்கும்படி. விருப்பத்தில் கருவுடயவர்களுக்கு இக்குப்பிரகாரஞ்சொன்னால் நிரம் பாத நரகக்கினியில் தள்ளிவிட்டதாம். கலங்கம்பொ ருந்திய செல்வத்தினது பிரியத்தைதவிட்டு அறிவுதெ ளிந் திருக்கின்ற உனக்குஞ் சமான மானவர்களுக்கே பிரகாசமாய்த்தோற்றும். மயக்கமில்லாமல் அறிவி க்க வல்லமையுடைய வசாரியாரைப்பிடி வருத்தமுற் றுவரும் ஜனனமரணத்தை நீக்கிக்கொள்ளும் பேறும் முன்சொன்ன பிரகாரமே யிருக்கவேண்டும். †—

கஉ. பிரமவுப தேச விலக்கணங் கூறல்.

தீபமும், குளிர்ச்சியும், புஷ்பமும், உண்டாயிருக்கும் போதே வீசப்பட்டப்பிரகாசமும் பரிமளமும் வாச னையும் உண்டானதுபோல, நித்தியமுண்டாயுள்ள சகமு ண்டாயிருக்கும் ; மேலாந்தத்தன்மாத்திரமே அதற்குவ டிவாயிருக்கும் ; சொல்லிய விகாரத்துக்குக்கால் இல்லை யென்று வசிட்டமுனிசொல்ல, ஸ்ரீராமன் கேட்டு க்ஷீரசமுத்திரத்தைப்போல கெம்பீரத்தால் அனேக க்கடாக்ஷமும் குளிர்ச்சியும் நிறைவுமாயிருக் கின்ற தேவரீர்வாக்கியம் அதிசயமாகுமென்று சொ ல்லுவார். ‡—இக்குவாகுவம்சத்தில் இமயமேருவில் மறைப்பட்டதும் நிரம்ப இமயமேருவில் வெளியாகி ய பிருக்கின்ற இப்பிரகாசமாய் சுதைக்குமேகத்தி லும் அற்பமாக வெண்மையும் குளிர்ச்சியும் அடிக்கடி வருவதும் போவதுமாயிருக்கின்ற காய்காலத்தைக் கொண்டாமேகன். உன்னையுமான வசிட்டமுனியே? முடிவில்லாததாகியும், அநேகமாகியும், ஏகமாகியும்,

கங. நிர்க்குண மேம சகுந் தெளல்.

கச. சர்வமு மாய் விளங்குகி ன்ற வஸ்துவை யுக் குஞ் சங்கற்பமா ன்காரண மியா தெனில்.

§ இ-ம். பிரமத்தினுண்டான சகம் அப்பிரமப்பிரகாசமாய்விளங்குமென்பதாம்

† இ-ம். சர்வம் பிரமமயமென்கின்ற வுண்மையைச் சாதன சதுஷ்டயமுள் ளவர்களுக்கே யுபதேசிக்க வேண்டுமென்பதாம்.

‡ இ-ம். சகமானது நித்தியமாகத் தோற்றி யப் பிரகாசமாகவே விள ங்குமென்பதாம்.

கெடாத சத்தியையுடையதாகியும், அளக்கக்கூடாதுதாகியும், ப்ரகாசத்தையடைந்து பெருமையுள்ளகுணத்தை யுடையதாகியு மிருக்கின்ற ஆத்மஞானத்துக்கு, இக்கிரியைகளானவை உண்டான ப்ரகாரம்

கரு. அக்காரண மனுபவத்திற் றேற்று மெனல். சொல்லுமென்று இராமன்கேட்டார். — மெய்யானப் பொருளுடைய மஹாவாக்கியத்தினது தத்துவார்த்தமாய், முன்னுக்குப் பின்விரோதமில்லாமல் ப்ரத்தியக்ஷமாகக் காட்டவல்லமையுடைய நாம், இவ்விடத்திற்சொல்லியவைகளும் உறுதிவசனமேயாம், உண்மையான ஞானதிருஷ்டியானது, ரட்சன்னமாய் அறிவுவியாபகமாகவுதயமானால், எனது வாக்கியமென்கின்றஞானத்தை கையிற்பொருந்தும்படியாக வலிதென்றும், எளிதென்றும், உள்ளப்ராகாரமாய் கலக்கமின்றி நிலையாகவிருந்துபார்ப்பாய். ¶ — தனதுருவ

கசு. மாயாகாச னிருபணம். மானது கெடுவதற்கே எத்தனஞ்செய்வதாய் அந்தகாரத்தைநீக்கிய உத்தமமாகிய வித்தையினால், சகலதுன்பமும் பொருந்திய குற்றமற்ற ஞானம்வரும். எய்யாநின்ற அம்புகளை அம்புகளாலும், மந்த்ரசை மந்த்ராலும், நெருங்கிய சத்துருவைச் சத்துருவினாலும், தீயவழுக்கைத் தீயவழுக்கினாலும், கெடுப்பதுபோல், அஞ்ஞானத்தைக் கெடுக்கவேண்டும். கருதிவிசாரித்துப்பார்த்தவளவில் இவ்வித்தையினது சுபாவ நீங்கி தனது அவித்யாகாசத்தினால் ப்ரமாநந்தத்தைக்

கஎ. மாயையானது எதார்த்தமாகவே யின்றெனல். கொடுக்கும். † — உண்மையாய் மாயையில்லையென்று இப்ப்ராகாரஞ்சிந்தியாய். ஞானத்தை யுடையவனாய் ஸ்வேஸ்வரவைக்கியமான ஸ்வரூபஞானத்தைப்பெற்றால், துன்பத்தைச்செய்கின்ற இந்தவித்தையின் சுபாவத்தையறிவாய்; குற்றமற்ற சுகஞானமானது உதயமாகுமளவும் நடுக்கஞ்செய்யு மாயையானதில்லையென்பதை, எனதுவாக்கியத்தினால் தடையில்லாத நிச்சயமாக பிடித்திருப்பாய். சகலமும் பரிசுத்தமுள்ள பிரமஸ்வரூபமேயென்று அறிவினும் தரிசித்தவர்கள் மோக்ஷமடைந்தவர்கள். — பேதமு

கஅ. மாயையைக்கெடுக்குமுபாயத்தை யறிவித்தல். ள்ளஞானமே மாயையாம்; மிகவும் வருத்தமுற்றுவது இம்மாயையைக் கெடுக்கவேண்டும்; ஞானமுள்ள வாத்மலாபத்தாலல்லாமல் மாயையென்னும் அலைகளடிக்கின்ற வாற்றின்கரைசேரார்றாவாம்; நன்றாகத்தோற்றினால் குற்றமற்றவைப்படுமே நசியாத நிருவாணமாம்; இந்த மாயையானது உண்டாகிய தெந்தவிதமென்று விசாரிக்கவேண்டாம். கெடும்படி.

¶ இ-ம். சங்கற்பமுதித்தகாரணம் அச்சங்கல்ப மொடுங்கின விடத்தொளிருமென்பதாம்.

† அசுத்தமாயையைச் சுத்தமாயையாற் கெடுக்கவேண்டு மென்பதாம்.

கெடுக்கின்றமார்க்கமெதுவென்று ஸ்ரீராமா? விசாரித்
தறிவாய், கெடுமாகுல் இம் மாயையுண்டானகுணங்
கக. பிரமத்தில் பின்னமானவாத்ம சத்தியுண்டான தறிவித்தல்.
தெரியும். ‡—இந்தமாயையான தெதிலுண்டானதெ
ன்றும், இதெப்படிப்பட்டதென்றும், ஈதிறந்தமார்க்
கமெதுவென்றும், ஙசித்தாற்சேரன்றும், ஆகையால்
வலியதுன்பத்தி னிருப்பிடமான அஞ்ஞானமென்னு
ம்வியாதிக்கு மருந்தாகிய ஞானத்தைப்புசிக்கக் கொ
டுத்தால், இமையுள்ள சமமென்கின்ற சமுத்திரத்தி
ல் ஸ்ரீராமா? நீயமுந்தமாட்டாய். பெருங்கிய வாயுவா
னது தனக் காதாரரூபமான விண்ணிலுண்டாகிச் ச
ஞ்சரிப்பதுபோல, பிரமத்திலுதித்த சிற்சத்தியால்
உ0. ஆத்மசத்தியிற் பின்னபானகாலதேச கிரியாசத்தியுண்டாதல்.
ஆத்மசத்தை விளங்கும். — சொச்சமாய் வியாபித்
திருக்கின்ற ஞானசாகரத்தில் அப்பனைசயினுல் ஓ
வேஸ்வரசகமென்னும் குறாங்கள் பரவாநிக்கும், சூ
ட்சுமஞான திருஷ்டியினுல் சந்தேகமின்றி பிரமஸ்
வரூப மென்றையுமே அகண்டாகாரமென் றெண்
ணி அந்தஞான சமுத்திரத்தில் மூழ்குவாய் ; சற்
றேயசைவுற்று வியாபகஞானமாகிய ஞானசத்தியா
னது க்ஷணநேரத்தில் சர்வசத்தியினுலும் ஓலிக்கவு
ண்டாகி, துய்ய இடமும் காலமும் தொழில்களுமா
கிய மூன்று பரிசுத்தமுள்ளசத்திகளை சகாயமாகச்
உக. இதுவுமது.
சேர்த்துக் கொள்ளும். — தனது ஸ்வரூபத்தையறி
ந்து முடிவில்லாத பிரமபதத்திலிருந்தும், ஞானசத்
தியானது எனதுவடிவ மிவ்வளவு பிரமாண முள்ள
தென்று அறிந்ததுபோல பாவிக்கும். இந்தப்ரகாரம்
இந்த சிற்சத்தி தனது ஸ்வரூபத்தைப் பாவனைசெய்
யில் தொடர்பாக அக்காலத்தில் நாமங்களின் அளவு
முதலிய கோக்காலவை வந்தடையும் ; இருந்த விகற்
பங்களை கொடுக்குமாகாரமாய் சிற்சொரூபமானது
கிரிக்குமிடத்துக்கும், காலத்துக்குஞ் செயலுக்கும்,
உஉ. ஆத்மாவில் அகங்காரமுதலிய பேத முண்டான தறிவித்தல்.
சேர்ந்தபந்தமாம். — இவ்விடத்திற் சொல்லாநின்ற
ஞானத்தினது ஸ்வரூபத்தை சகலரும் சீவனென்று
சொல்லுவார்கள் ; அச்சீவனும்வாதனையைச் செய்து
கொண்டு அகம்பாவனையை அடைந்திருக்கும் ; வண
ங்கக்கூடாத வகங்காரமும் நிச்சயிக்கும் தொழிலையு
டையதாய் களங்கமுள்ளபுத்தியாம் ; களங்கமிறைந்த
புத்தியானது இருந்த கற்பனுகாரமாய் மனனமுள்ள
மனதாம் ; விகற்பமிருந்தமனமே மெதுவாகவந்த இந்
உங. ஆத்மசத்தி பந்த மடைவதறிவித்தல்.
திரியங்களாம். — பஞ்சவிந்திரியங்களை பாணிபா
தாகாரமான சரீரமென்று சொல்லுவார்கள். இப்படி
யல்லவா, கலந்திருக்கின்றசீவனுனவன் கலப்பு சங்க

‡ இ-ம். மாயையிலிருப்பவ னம்மாயையைக் கெடுக்காவிடி னம்மாயாதீதம்
வெளிப்படாதென்

ம்பமென்கின்ற கயிற்றினும் கட்டுப்பட்டு துக்கமென்
னும் வலையினுலெறியப்பட்டு தரரின்றி யிழிவை யிர
மமாகவடையும். சத்தியமாகிய மனமானது இவ்வ
ண்ணமாய்ப் பொருந்துதற்கு அகம்பாவத்தைப் பொ
ருந்தி கோசகாரக் கிருமியைப்போல தனதாசையி
உச. ஆத்மசத்தி பந்த மடைவதறிவித்தல்.
னுல் பந்தத்தைத்தரிக்கும். — தானே யுண்டாக்கி
யிருக்கின்ற பஞ்சதன்மாத்திரையினுல் தளித்தவலை
யாகிய உள்தொழில்களானவை தன்னைப் பந்தனஞ்
செய்ய, கட்டியிருக்கு மான்சிங்கமானது காலிற்ற
ளைபூண்டதுபோல, துன்பத்தினுல் மனங்கரைந்துவரு
கும். நீங்காத மனமென்றும், புத்தியென்றும், ஞான
மென்றும், தொழிலென்றும், அகங்கார மென்றும்,
யாதனு சரீரமென்றும், பிரகிருதியென்றும், மாயை
யென்றும், இழிவாகிய மலமென்றும், கன்மமென்று
ம், பந்தமென்றும், சித்தமென்றும், சொல்லப்பட்ட
வவித்தையென்றும், ஆசையென்றும், பெரியோர்க
உரு. மனத்தினது துன்பமறிவித்தல்.
ள் சொல்லுவார்கள். ‡— அந்தப்பிரகாரம் ஒவ்வோரிட
த்தில் ஒவ்வொன்றாக ஆசாபாசங்களினுல் உண்டாக்
கிச் சொல்லிய சாமானியமில்லாத உலகத்தினது விருத்தி
யான இவைகளியாவையும், அகத்திற்றரித்திருக்கின்
ற மனதுக்கு ப்ரயோசனமானது இதனிடத்தி லொ
ன்றுமில்லை. பிணிகளையுடைய நீண்ட வாலவிருக்ஷத்
தை ஆலம்பித்தையானது ஒளித்துவைத்திருக்கின்ற
துக்குச் சாதனமாம்; துன்பாக்கினியினுல் வெதும்ப
யிருந்த சினமென்னு மலைப்பாம்பினுல் எடுத்து விழு
ங்க ஆசையென்கின்ற சமுத்திரத்தலைகளால் மனங்க
உசு. மனதை இராக்ஷிக்க வேண்டுமெனல்.
ளர்வடையும். † — இத்துன்பங்களினுல் தனது சங்
கற்பித் தன் பிரமஸ்வரூபத்தைமறந்து யிருந்தது
ன்பத்தையடைந்து தீதலுற்ற இந்தமனதை, சே
ற்றிலழுந்தியயானையை கரையிலெடுத்து விடுவதைப்
போலமானையினின்றும் கரையேற்றுவாய்; பயங்கர
முள்ள மூப்பு மரணமென்கின்ற விஷாக்கினியினுந்
றகிக்கப்பட்டு, நன்மைதீமைகளென்னும் சத்துருவி
னுல் தளருகின்றமனதுக்கு கிருபைசெய்யாத மனி
தர்கள், கிருபையே வடிவமாயிருக்கின்ற ஸ்ரீராமா!
உஎ. மனம் வெளிமுகப் படுதலி னுண்டான
கரவடிவமாயிருக்கின்ற இராக்ஷதர்கள்; ¶ — இப்
ப்பிரகாரமே சித்துவிலாசமாயிருக்கின்ற யோனனன்
வேற்றுமையான வாகாரமாய்ப் பிரமத்தி னிடத்திலிரு

‡ இ-ம். ஆத்மாதனது சங்கற்பசத்தியினுல் பஞ்சபூதபௌதிகமா யதனுற்ற
ன் மறைப்பட்டதுபோலத் தோற்றுமென்பதாம்.

† இ-ம். தனது சங்கற்பரூபமான விடயங்களிலகம்பாவஞ் செய்வதனுன் ப
ணம் வருந்துமென்பதாம். [மென்பதாம்

¶ இ-ம். மனதை விடயத்தினின்று திருப்பிப் பிரமத்தில் சேர்க்கவேண்டு

சிருஷ்டிக்கிரம மறிவித்தல். ந்து, மேருமலையினின்று வருகின்ற அருவிநீர்த்துளிகள்போல, தாம் கொண்டபாவனையால் வந்திருக்கின்றவைகள் அளவில்லனவாம், வருகின்றவைகள் அளவில்லனவாம் ; இனி வரப்பட்டவைகள் அளவில்லனவாம். வந்தவர்களிற் சிலர் சகத்தை ஒன்றை இரண்டை மூன்றை அடைந்தார்கள் ; நான்பத்தைக் கொடுக்கின்ற சகங்கள் சிலர்நூற்றிலு மதிகப்பட்டார்கள் ; அளவிடுதற்கரியபிறவிகளை சிலரடைந்திருந்தார்கள்.—

உஅ. இதுவுமது. சிலர் கின்னரராகவும், சிலர் கந்திருவராகவுமானார்கள் ; சிலர் வித்தியாதரர்களாகவும், சிலருரகர்கள் கூட்டமாகவுமின்றார்கள் ; சிலர் சூரியராகவும், சந்திரராகவும், சிலர் வருணனுமாகவுமானார்கள் ; சிலர் பிரமாவாகவும், சிலர் விஷ்ணுவாகவும், சிலர் சிவனுமாகவுமின்றார்கள் ; சிலர் பிராமணர்களாகவும், சிலர் அரசராகவுமின்றார்கள் ; சிலர் வைசியராகவும், சிலர் உபகாரத்தொழிலையுடைய சூத்திரராகவுமின்றார்கள் ; சிலர் மிருகங்களாகவும், சிலர் பட்சிகளாகவும், சிலர் ஊர்வனவாகவும் வந்தார்கள் ; சிலர் பத்திரமாகவும், சிலர் காயாகவும், சிலர் கனியாகவும், சிலர் வேராகவும், சிலர் துரும்பாகவுமானார்கள்.—

உ௯. இதுவுமது. சீவரானவர்கள் சிலர்கள் மயேந்திரபருப்பதமாகவும், சையபருப்பதமாகவும், மகாமேருவாகவும், பொதியமலையாகவும், மந்தரமலையாகவும், சிறப்பாகவின்றார்கள் ; சிலர்கள் கடம்பவிருக்ஷமாகவும், ஈலிபிச்சமரமாகவும், பனைவிருக்ஷமாகவும், ஆச்சாமரமாகவும், பச்சிலைமரமாகவும், நெருங்கி நின்றார்கள் ; சிலர்கள் உவராகவும், நதியாகவும், வெய்யாகவும், பாலாகவும், கருப்பஞ்சாறாகவும், தேனாகவும், சுத்தசலமாகவுமிருக்கின்ற பெருங்கடலாகவும், அடைந்திருந்தார்கள் ; சிலர் திக்குகளாகவும், சிலர் ஆறுகளாகவு மிருந்தார்கள் ; சிலருயர்ந்தவர்களாகவும், சிலர் தாழ்ந்தவர்களாகவு மிருந்தார்கள்.—

௩௦. இதுவுமது. கையிலெறிபடக்கப்பட்ட பந்தைப்போல்காலனுலடிக்கப்பட்டு அளவற்றசரீரத்தில் பிரவேசித்து சலித்து விசேஷமடைந்தார், அறிவில்லாத சிலபேர்கள் சகத்தில் திரும்பவும் பிறந்தார்கள் ; அஞ்ஞானத்தினுல் இரிஷேரனமை திருட்டியைச்செய்து உற்பத்தி ஸ்திதியைமாறும்படி விரித்து சமுத்திரத்தின் அலைகளைப்போல் பிரமபதத்திற்சொல்லிய மாயையானது சீவருக்கு சித்தைதியினுல் மிகவும் விஸ்தாரமாம்.‡—

௩௧. ஆத்ம ஸ்வரூபமான ம சகலமும் தெளிந்தறிந்தவசிட்டமுனியானவர் இவ்வண்ணமாய் சொன்னமாத்திரத்தில், சிவனுனவன்மனை

‡ இ-ம். சைதன்யத்தில் பின்னமவன்டாகிய சித்தத்திலே பின்னமானா மிருதிமுதல் சீவேஸ்வரசகங்களாகத் தோற்றினதை யறிவித்ததாம்.

கியயாவரும் தங்கள்தங்கள் சங்கற்பத்தினால் சகத்தையடைந்தார்கள்; இப்படியுணர்ந்து அச் சங்கற்ப நசிக்கில், நெய்யில்லாதவிளக்கைப்போல சகநமடையார்கள்.

சஉ. சகமுமித்தையென் றுரைத்தல்.

¶ — ஆகாயத்தையொத்த சகலமும் சங்கற்பமாத்திரத்தில் விருதாவாகவேயாகும். இப்படியுண்டாகிய வுலகமானது சாக்கிரத்திலுண்டாகுஞ் சொப்பனத்தைப்போல, ஸ்ரீராமா ? நீ யறிந்துகொள்வாய். எந்தவிடங்களிலேயும் எப்பொழுதும் ஜனமாகச் செனித்ததுமில்லை, மரித்ததுமில்லை, ஏகமான பரமார்த்தஞானத்தினால் இவையாவும் மித்தையாகச்சாரும்.§

சங. சம்சாரமித்தையெனல்.

ஆசையென்னு மகாசர்ப்பமானது தெளிகின்ற புற்றாகிய சம்சாரபாரமானது, முழுதுமசத்தியமென்று சம்சாரபாசத்தை முழுதுங்கெடுத்து அளவற்றபிரமபதத்தில், ஸ்ரீராமா ? நீ நிலைபெற்று வாழக்கடவாய், அழகாகத்தோற்றுகின்ற கந்தருவநகரமானது இருந்தென்ன நாசமடைந்தென்ன, அதனால் நன்மையோ தீமையோ, வேறுபாடாகிய பாசமாயையான மனைவி புத்திரர்கள் வாழ்ந்ததினாலென்ன, கெட்டதினாலென்ன.

சச. தனதுசங்கற்பமே துன்பமாமெனல்.

— மனைவியிடத்தும் பொருளினிடத்தும் பாசமிருமாகில் விலங்காகும்; அவ்வாசையைக் கட்டிக்கொண்டால் ஆசையைக்கெடுத்து நீக்குகின்ற உபாயமுடையவர்கள். அஞ்ஞானிகள் இச்சையிருந்து மிகுதியான அந்தப்போகத்திலழுந்தி, கலக்குகின்ற கொடியதுன்பத்தை நினைத்தபோது, தீரமுள்ள ஞானிகளுக்கு நிராசையுள்ளதாய் மனமானது தெளிவையடையும்.†

சரு. தத்துவத்திற் சகத்திருக்கின்ற தன்மையைக்கூறி அத்தத்துவ முணர்ந்தமகான்களிலக்கணங் கூறல்.

— இப்படியான நன்மையினால் சம்சாரபாரமாகிய தொழிலினொருங்குங்காலத்தில், நீங்கின பொருளுக்கு துன்பப்படாமல் வந்தடைந்த பொருளை மாத்திரம் அநுபவித்து சீவன் முத்தனாக வாழக்கடவாய். இப்போதில்லாமையாக இனி வருகின்றபொருள்களை நினையார்கள்; வந்தபொருளைக் குற்றமாகநினையார்; பூரணஞானத்தையுடையவர்களுக்கு, தாமரைக்கண்ணனே ? இதுவே யியல்பான குணம்.

சசு. சத்துக்களிலக்கணங் கூறி யனுபவமுண்டாகுஞ் சாதனங் கூறல்.

— காணப்பட்டவைத்தும் மித்தையே யென்று மனதில் சகலவிடயங்களிலும் பொய்மையான வாசனையை நீக்கின பண்டிதரானவர் சர்வமுந்தெரிந்த சத்துக்களை, பாசமாயையானது, வாதிக்கமாட்டாது. சத்தசத்தென்று சொல்லப்பட்ட அவ்விரண்டின்மத்

¶ இ-ம். சங்கற்பநாசமே சகமான நாசமென்பதாம்.

§ இ-ம். பிரமசங்கற்பத்தி லுண்டாயிருக்கின்ற சகலமும் அப்பிரமதிருஷ்டியி லில்லையென்பதாம்.

† இ-ம். மித்தையாகியசம்சாரத்தைச் சத்தாகப்பார்த்து வருந்து மூடர்களைப்பார்த்தாவது தான் தெளியவேண்டுமென்பதாம்.

தியில் பரிசுத்தமான பரமபதத்தில் அறிவைத் திடமாகவூன்றி வேறானசரீரத்துக்கு உள்ளும் புறம்புமான சகத்தை, ஸ்ரீராமா ! நீ பிடித்தலும், விடுத்தலும் வேண்டாம். — எந்ததொழில்களிலும் இராகத்துவேஷ மில்லாம லிருந்து ஆத்மஞானத்தை யடைந்தவர்களுக்கு, அத் தொழில்களில் தாமரை யிலையிற் சேர்ந்திருக்கின்ற சலத்தைப்போல அறிவானது பற்றமாட்டாது. தேகவிந்திரிய விடயங்களின்நன்மையான விரசத்தைவிடும்படி. ஸ்ரீராமா ! உனதுமனம் பொருந்தவுண்டானால், அறியத்தக்க வாத்மஞானத்தை யறிந்தவனாய் சம்சாரசாகரங் கடந்து அப்போதே பதத்தை நீங்கினாய். —

௩எ. இராகத்துவேஷநீக்கத்தின் பலன் கூறல்.

மேலான பரமபதத்தை விரும்பினால் சகலவாசனைகளிலுமிருந்த மனதை மெய்யாகிய ஆத்மஞானத்தினால் பட்டத்திலின்றும் வாசனை நீங்குவது போலப் போக்குவாய், ஈனமுள்ள வாசனையாகிய அலைகளையுடைய சலநிறைந்த சமுசாரசாகரத்தில் அமிழுபவர்க்கெல்லாம் பயமின்றி சுகபோதம் கட்டலாகிய கரையேற்றுமேயன்றி வேறொன்றுண்டாமோ. — ஆத்மஞானப்ரத்யக்ஷமானவர்கள் சகலத்தையும் அநுசரிப்பார்கள் ; சகத்தின்குணங்களைப் பொருந்தார்கள் ; நீங்கார்கள் ; அவர்க்கத்திலுள்ள புட்பவனத்தையும் இச்சிக்கார்கள் ; சூனியமான விடத்திலும் துன்பமடையார்கள் ; சூரியனைப்போல வியதிகாயமுந்தள்ளமாட்டார்கள் ; மேன்மையான சத்துக்கள் சகலத்தையுமநுசரிப்பார்கள். ஸ்ரீராமா ! இந்தப்ரகாரம் நடப்பாயென்று வசிட்டமுனிசொன்னவளவில். ‡ — வான் மீகர் பரத்துவாசரே ! கேளென்றுசொல்லுவார் ; இந்தப்ரகாரம் வசிட்டமுனியானவர் பிரமபதத்தைச் சொல்லக்கேட்டஇராமர் பூரணமானவரைப்போல ஸ்ரீராமர் களங்கமற்றவராய் மனதுநீங்கி வலிமையிற் சமானமில்லாத அத்துவிதஞானமென்று நல்லவமிர்தத்தினனிறைந்து குளிர்ச்சியாய் திரமுற்று வளராநின்ற பூரணசந்திரனைப்போல பூரணத்தை யடைந்தார். வசிட்டமுனி திரும்பவுஞ் சொல்லத் தொடங்கினார் — சகங்களனைத்தையும் ஒருகாலத்தில், சிவன்சிருஷ்டிப்பார் ; ஒருகாலத்தில் பிரமன்சிருஷ்டிப்பார் ; ஒருகாலத்தில் விஷ்ணுசிருஷ்டிப்பார் ; ஒருகாலத்தில் முனிவர்சிருஷ்டிப்பார்கள் ; மேலான பிரமாவானவர் ஒருகாலத்தில் குமனையிற் பிறப்பார் ; ஒ

௩அ. வாசனையுள்ள மனதைக் கெடுக்க வேண்டுமெனல்.

௩௯. சகநிஷ்டை யறிவித்தல்.

௪௦. அநுபவத்தில் மகிழ்தல்.

௪௧. சகஞ்சங்கற்ப வடிவமாமென்பதை வைப்புறுத்து மிமித்தஞ் சிருஷ்டி க

‡ இ-ம். திருக்குதிருஷ்டியினும் திரிஸ்யதிருஷ்டியைக்கெடுக்கிற் சிற்சுபாவமாய் விளங்குவரென்பதாம்.

ளிலொவ்வொன்றுக்கு நியமமின்றெனல்.

ருகாலத்திற் சலத்திற் பிறப்பார் ; ஒருகாலத்தில் அண்டத்திற்பிறப்பார் ; ஒருகாலத்திலாகாயத்திற் பிறப்பார்.—

௫௨. இதுவுமது.

ஒருசிருஷ்டியில் வலிமையானதருக்களே நிறைந்திருக்கும் ; ஒருசிருஷ்டியில் மானிடரே நிறைந்திருப்பர் ; ஒருசிருஷ்டியில் பலமலைகளே நிறைந்திருக்கும் ; ஒரு சிருஷ்டியில் மிருந்த மண்ணுகவே நிறைந்திருக்கும் ; ஒரு சிருஷ்டியில் கல்லுமயமாய் நிறைந்திருக்கும் ; ஒருசிருஷ்டியில் மாமிசமாய்ப்பார்க்கப்படும் ; ஒரு சிருஷ்டியில் தங்கமயமாயிருக்கும் பூமியானது இவ்வண்ணம் நானாவிதமா யிருக்கும். —

௫௩. இதுவுமது.

ஆகாயமுதலாரும், பிருதிவிமுதலாரும், அப்புமுதலாரும், அக்கினிமுதலாரும், வாயுமுதலாரும், இவ்வண்ணமே சிருட்டிகடோறும் ஒவ்வொன்றுமூ தன்மையாகும். நான்முகற்கன் ஒரு பிரமசிருஷ்டியை சுருக்கமாக உனக்குச்சொன்னேன் ; இத்தன்மையால் முன்பு உதிக்குநியமமானது இச்சிருஷ்டிக்கொருவிதமாகவில்லை நானாவிதமாகத் தோற்றும்.—

௫௪. இதுவுமது.

திருதமுதலியனான்குயுகங்களும் திரும்பித்திரும்பிப்பிறந்துவரும், சகத்தின்கணொருவஸ்துவாவது வனைந்துவனைந்து அனேகந்தரம் பிறந்து அழியாததில்லை ; அந்தகாரமிருந்த மஹாமாயையினது வாஸிப்புக்கு, முன்னிலையான அரியவேதங்களையாராய்ந்தறிந்த தாசுரமுனிவன் கதையை நானிவ்விடத்திற் சொல்ல, ஸ்ரீராமா ? நீ கேட்கக்கடவாயென்று, வசிட்ட முனி சொல்லுவார். ¶ —

௫௫. இவ்வுபகத்துக்குத் திருஷ்டாந்தங் கூறவேண்டி மலையின் சிறப்பு கூறல்.

௫௬. தாசுர முனிவன் பெருமையைக்கூறல்.

இந்தப் பூமிக்குள் அமுருநிறைந்த பட்டணத்தில் குளிர்ந்த தென்றற்காற்று பரிமளிக்கின்ற மகததேசத்தில் கருப்பூரவாசனை பொருந்தியவாஸைகளும், கடம்பவிருக்ஷங்களும், கோங்கு விருக்ஷங்களும், நெருங்கியிருக்கின்ற கருத்துக்கினிமையான ஒரு சிறந்தமலையினிடத்தில், — மோக்ஷவுலகத்தை யடைவதற்கான தவத்தைச்செய்து பிரமானைப்போலுயர்வாகிய சரலோமனென்னும் பெயரையுடைய முனிவனது புதல்வனுகிய தாசுரனென்னும் நாமத்தையுடைய முனிவன், தேவலோகத்திலுள்ள பிரகஸ்பதிபகவானுடைய குமாரனையாகிய கசனுக்குச்சமானமானவன், மானிடலோகத்தின் மேலானவன், குற்றமற்றதவத்திலும் பெரியவன் ;—

௫௭. பிதாபூரணமாதல்.

ஒரு புத்திரனுடன் சரலோமனென்னுமுனியானவன் அந்த மலையின் கண்ணுள்ள கானகத்தில் பல

¶ இ-ம். சிருஷ்டிக்குஞ் சிருஷ்டிப்பவருக்குஞ் சிருஷ்டிக்கப்பட்டவைகளுக்கும் பிரமசத்தியி னியமப்படியேயன்றி யோர்வரன்முறையான நியமமின்றென்பதாம்.

யுகங்கழித்தபின்பு, செய்ததுன்னைவிட்டுப்புறமைவசெல்வதுபோல, வினையிற்றுஞ் சரீரநீங்கிப்போய் தேவருபங் கொண்டான். — தனியனுக அக்காலத்தில் தாரூரனென்னும் புதல்வனுனவன், இனிமையான பிதாவின்மரணத்துக்கழுது, நீராற்செய்கின்ற பரிசுத்தமாகிய பிராமணுள் பூசைமுறைகளுஞ் செய்யாம லிராங்கியமனதுடையவனுய் புருடனைப் பிரிந்த அன்றில் பட்சியானது கதறுகின்றதுபோலக் கதறிக்கொண்டு. — மாதாபிதாக்களின்பிரிவினுல் மிகவும் வெப்பத்தோடு தளர்வுற்ற புத்திரனுகிய தாரூரனை, கிருபையினுல் வனதேவதைபார்த்து கிருபைசெய்து ப்ராத்தியமாக மாயாமனின்று, மகாமுனியின் குமாரனே ? முனியானவரே ? மனத்தெளிந்தவரே ? தெளிவில்லாத மூடர்களைப்போல துன்பமுற்றுத் தளர்ச்சியடையாதே ; — அநித்தியமாகிய சம்சாரத்தினுடைய பொய்மை நீயறியாததென்னகாரணம், பிறந்தபொழுதே மரணமென்பதைவுந்தப்பமாட்டாது, கண்ணீர்சொரிய வழுகின்றவனே ? குரியதுயமாகுல் மேறு நனதுநிலையான அஸ்தமனத்தை அடையமாட்டானென்று சொல்வாருண்டோ. ¶ — வீணுகத் துன்பமடையாதேயென்று மறைந்திருந்து வனதேவதைசொல்ல : கேட்டறிந்து சோருகின்ற துன்பத்தைக்கெடுத்து, ஸ்திரமாய் வேதசாசனத்தின்படியே உதகபூருவமாய்ச் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து, திரும்பாத லோகத்திற்சேர்கின்ற தவரின் மிகவும் விருப்பமடைந்து. — தனக் குரியவேத சம்பந்தமான கருமத்தினுல் தவத்தைச்செய்யும் பொருட்டு, மிகுந்த சங்கற்பத்தினுல் பரிசுத்தமான வாசரத்தின் மிருந்தான். பூரணஞானமில்லாதவன் பரிசுத்தமுள்ள பூமியில் போனவிடங்களியாவுஞ் சிலமல்லவல்லவென்று, — விருட்சத்தினதுமூலையே சத்தமென்று அழகிய பட்சியைப்போல அவ்விடத்தில் தவத்தை செய்யத்தொடங்குவோமென்று மனதிற்பொருந்தச் சிந்தித்து வெவ்விய அக்கினியைவளர்த்து தேவதைகளைக்குறித்து, — தனதுதேகத்தை யரிந்தெடுத்து யாகஞ்செய்த ராத்திரத்தில், தேவர் களுக்கு ஏனதிடமாக கலைஞானத்தையுடைய பிராமணன் சரீரத்திலுள்ள மாமிசங்களால் கண்டமும் தோள்களும் முதலானவைகள் வேகவேண்டிய தென்னவென்று ப்ரகாசமுள்ள அக்கினிதேவனிலைத்து

௫௮. தாரூரன்விசனமடைதல்.

௫௯. வனதேவதை தெளிவித்தல்.

௬௦. இதுவுமது.

௬௧. சாதனசதுஷ்டய முதித்தல்.

௬௨. ஞானஸ்தானம் விசாரித்தல்.

௬௩. தேவர்களைக்குறித்து யாகஞ்செய்தல்.

௬௪. அக்கினிதேவன் வெளிப்படுதல்.

¶ இ-ம். மாதாபிதாக்கள்பிரிவுக்காற்றுமல் வியசனப்பட்டு தெளிவுற்றதென்பதாம்.

சுரு. அக்கினி தேவன் வரங் கொடுத்தல்.

மறையவர்முன்பு உதயமாய், — நீ யெண்ணியகாரிய மென்னவென்றுகேட்க, கரங்களைக் கூப்பிக்கொண்டு தோத்திரஞ்செய்து பரிசுத்தமான விடத்தை இப் பூமியிற்கண்டிலனுதலால், விருட்சத்தினது நுனியி லிருக்கின்ற நுனியின்மேல் இடங்கொடுத் தனுக்கிர கஞ் செய்வாயென்று தாருகமுனிகேட்க, வரத்தை முழுதுங்கொடுத்து அக்கினிதேவன் சமுத்திரத்தி னலையைப்போல மறைந்தனன். —

சுசு. பரிசுத் தமுள்ள ஸ்தா னத்திருத்தல்.

காட்டினிடத்து ள்ள ஒரு கடம்பவிருக்ஷமானது, மேகமண்டலத்தை த்தாண்டி ஆகாசத்தை யளாவியிருக்கின்றது ; அந்த விருக்ஷத்தின்மேல் வளருகின்ற நுனியென்கிற வாசன த்தினது இடத்தில் சந்தேகமின்றி தாருகமுனிவரி ருந்து நல்லதவஞ்செய்ய மிகவும்விரும்புகின்ற மன துடையவன். —

சுஎ. யாக மானசிகமாகச்செய்தல்.

ஒரு க்ஷணநேரத்தில் திக்குகளை யெல்லாம்பார்த்து சொல்லப்பட்ட பத்மாசனத்தி லிருந்து விரிந்த திக்குகளைத்திலுமின்று நீங்கி, பி ரமஞானத்தை யறிதற்கரிதானவனாய்க் கருமமட்டி லிருப்பதாய் ப்ரயோசனமாகிய காம்பண்ணியத்தை விரும்பாதமனதினால் பன்னிரண்டுவருடம் யாகங்க ளைச்செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத் தான். —

சுஅ. ஞான முதித்தல்.

கோமேதங்களாலும், அசுவமேதங்களா லும், நரமேதங்களாலும் செய்யாநின்ற முற்ற மற்ற யாகங்களை யெல்லாம் வேதவிதிப்படி செய்து, வெகுகாலம் விக்கினமின்றியடக்கத்தினால், ஸ்திரமா கியமனமானது மிகவுந்தெளிவுற்று பூரணமானதினு லும், அவ்விடத்தே கண்ணுகியஞானமானது நல்ல மனதில் தானேவந்தடைந்து பூரணமாயிற்று.‡—

சுகூ. வனதேவதை தெரிசித்தல்.

சகல மறையானது நீங்கி வாசனைகளின் நாமமும் மிகவுங்கெடுத்துள்ள மகானுகிய தாருகமுனி, தேன் கூடிகளுள்ள கிளைகளின் நுனியின்மேல் இருந்தகால த்தில், ஒருதினத்தில் நிருமலமாகிய கண்களுக்கு மு ன்னே விரிந்த புஷ்பவஸ்திரங்களைத்தரித்த உயர்ந்த வனதேவதையானவள்தோற்ற, ஞானவானுன முனி வனும்பார்த்து நீயாரென்றுகேட்க, அழகுள்ள தெய் வப்பெண்சொல்லுவாள். —

எ௦. வனதேவதையுரைத்தல்.

மகான்களிடத்தில் பெ றுதற்கரிய அன்புடைத்தவர்கள் ஆதித்தனைத்தும் அருமையாகுலும் கனத்தில் இலகுவாய்க் கிடைக்கு மென்று சங்கேதமற்றுணர்ந்தேன், ஞானுனுக்கிரகஞ் செய்கின்றமுனியே ? நீசெழுந்தருளியிருக்கின்றவிவ் வாரணியத்தின் வனதேவதையாம் : இவ்விடத்தில் மலர்ந்த புட்பக்கொடியாகிய விநோதமுள்ள வீட்டி

‡ இ-ம். நிட்காமமாகச் செய்தகிரியாபலத்தினுற் பூரணஞானமுதித்த தெ ன்பதாம்.

னிடத்தில் யான் பிரியத்துட னிருக்கின்றவள்.—

ஏக. வனதேவதை தனது சிறுமையையுரைத்தல்.

சித்திரை மாதத்தில் சந்திரனானவன் பதின்மூன்றுக லையைப்பொருந்திய திரியோதசியில் பார்த்தற்கரிய மன்மதனுடைய மகோற்சவகாலத்தில், புஷ்பவனத் தில்வந்துசேர்ந்த வனதேவதைகளினது கூட்டத்தை நெருங்கினேன்; தோழிகளனைவரும் தேடுதற்கரிய புத்திரர்களுடன் களித்திருந்தார்கள்; குழந்தையில் லாத நான் தளர்வாயினேன். —

ஏஉ. வனதேவதை புத்திரனை வேண்டல்.

இச்சித்தவர்களுக்கு எண்ணியதைக் கொடுக்கின்ற கற்பக விருக்ஷத்தை யொத்து நீயிருக்க, நாதனே? இரட்சகரில்லாதவர்க ளைப்போல யான் புத்திரனுக்கு வியசனப்படுவது ந ன்மையோ, புத்திரனை நீர் கொடுக்கவேண்டும், அப் படியல்லாமல் உமதுதிருவுடைய என்னிடத் தில்லாமற் போனால், புத்திரனில்லையென்னுந் துக்கத்தை மிகுந்த வக்கினியில் பிரவேசித்து நீக்குவேன்,— என்று வனதேவதை சொல்லவும்,

ஏஙு. வனதேவதைக்குப்புத்திரனை யளித்தல்.

தாருகமுனிசிரித்து ஒரு பூ வைக்கொடுத்து ஒருமாதத்தில் இலேசாக, அன்னம் போன்றவளே? புத்திரனைப்பெறுவாய். நீ முன்பு அக் கினியிற் பிரவேசிப்பேனென்றுசொல்லிய அன்பத் தினால் வலிமையாக புத்திரனை வேண்டினபடியால், இனிமையாக நீ பெற்றிடும்புத்திரனும் பின்னைப்பட் ட வருத்தமானமார்க்கத்தினால் ஞானத்தையடை வானென்று மகானுபாவ தாருகமுனி சொன்னார்.—

ஏச. புத்திரனை வளர்த்தல்.

கேட்ட அந்த வனதேவதையானவள் புத்திரன் செனித்ததென்று பிரகாசிக்கின்ற முகமென்னுஞ் சந் திரன் ஒளிவிளங்க திரும்பவு மந்தமுனியைப் பார்த் து, உமதுபாதங்களையர்ச்சித்து இவ்விடத்தில் வசிப் பேனென்று சொல்ல, தாருகமுனியானவர் சம்மதி க்காமலனுப்ப, தெய்வப்பெண்ணானவள் தனதிடத் தில்வந்தாள்; உயர்வுள்ள புத்திரனைப்பெற்றாள்; கிர ணங்களினது நிறையைப்பெற்ற சந்திரனைப்போலவளர் த்தனள். —

ஏரு. புத்திரனே முனியை த்தரிசித்தல்.

வருஷமென்கின்ற குறிப்பினால் பன்னி ரண்டுவருடம் கழிந்தன; பின்பு அம்மிய முனிவரு டைய பாதத்தை புத்திரனுடன்சேர்ந்து வணங்கி முன்னுக நின்று உயர்வையுடையாய்! அனுக்கிரகஞ் செ ய்கின்ற எனாதியே? நீ அனுக்கிரகஞ்செய்ய ஞானீ ன்ற இப் பெரிதான குணத்தையுடைய புத்திரன், அரிய வேதசாஸ்திரங்களியாவையும் யாவனே யறிவி க்க தனதறிவினாற் றெரிந்துகொண்டான். —

ஏசு. புத்திரன்குருபணியினிற்றல்.

கலைக் கியானங்களியாவும் பூரணமாயறிந்தும் ஜனிக்காத வாத்மஞானத்தைத் தரிசித்திலன், சமுத்திரத்தை யொத்த சம்சாரத்தினால் சலனமடைகின்றான், தன்னை யறிகின்றஞானத்தை அனுக்கிரகஞ் செய்வா

யென்று வனதேவதைசொல்ல, இவனை எமக்கு நிலைத்தசீடனாக்கி நீ நீங்குவாயென்று முனிசொல்ல, அந்தவனதேவதையானவள் புத்திரனைவிட்டு நீங்கினாள். பெருமைபொருந்திய முனிவருடைய உபயபாதங்களைவிடாமல் சற்குணசீடனாயிருந்தான், † — வருத்தப்பட்டு, தத்துவஞானத்தைப்பெற்றுய்யும்படி, தாசூரமுனிவனது கிருபையினால் மெதுவாக திருஷ்டமானகதைகளும், ப்ரமாணங்களும், இதிகாசங்களில்சொல்லிய காரணங்களும், மிகவுஞ் சகாயமான வேதாந்தத்தில் தெளிந்துசொல்லிய மகாவாக்கியார்த்தங்களும், இன்னுஞ் சேர்ந்திருக்கின்ற மார்க்கங்களுமாகிய விஷயங்களை பலவாகவிரித்து பூரணஞானத்தையேசொன்னார்.

எஎ. ஞானத்தை யுபதேசித்த தெனல்.

— யாம் கங்காஸ்நானஞ் செய்ய அந்தமார்க்கமாக வானிலேமறைந்துபோய் ஒருதினம் சத்தரிஷிகளுடைய இடத்தினின்று தாசூரன் வாழ்கின்ற கடம்பவிருக்ஷத்திற்சேர்ந்து, இராக்காலத்திலிருந்து முனிவர் சீடனுக்கனுக்கிரகித்த ஞானார்த்தங்களைக்கேட்டோம்; அதையா முனக்குள்ள ப்ரகாரஞ்சொல்லுவோம்.

எஅ. அந்த ஞானோபதேசத்தைப் போதித்தல்.

§ — சஙகமில்லாத பிரமஸ்வரூபமானது ஈதென்று நிச்சயமுண்டாவதாகிய இந்தவொருகதையை நீசேட்பாய். சிறந்தவனாகிய வொரு மஹாராஜன், வீரத்திலும் கீர்த்தியிலும் சிரேஷ்டமானவன், தெளிருனெனுநாமத்தையுடையவன், நாசமடைகின்ற ஜகரக்ஷகராயுள்ளவர்கள் அந்தத்தெளிருனுடையபணியை சிரசின்மேல் ப்ரகாசிக்கின்ற விரத்தினத்தைப்போல தரிப்பர்கள், யாவர்க்கும் திரமாகிறுத்தற்கரிய வியாபகன்,

எகூ. பிரமசங்கற்பத்தை யரசனாக வுருவப் படுத்தல்.

— மெய்மாத்திரம் விரும்புகின்றவன்; நாநாவிதமாகிய அதிசயத்தைவிளைக்குஞ் செயலையுடையவன்; துன்பவின்பமுங் கொடுக்கப்பட்டதாய் முயற்சிசெய்கின்ற தொழில்களின் கூட்டத்தை அளவுசெய்யில், பெரியசமுத்திரத்தினலைகளை எண்ணினு மெண்ணக்கூடாது; விளக்கமுள்ள ஆயுதங்களும், காற்றுகளும், அக்கினிகளுமாகிய விஷயங்களில் ஒன்றும் இத்தெளிருனை நெருங்கக்கூடாததாம். இருகரங்களா லாகாயத்தை யென்செய்யலாம்.

அ0. அரசனது வலியைக் கூறல்,

— அளவின்றிப் பரவிய விளையாட்டினாற் செய்கின்ற அளவற்ற எத்தனங்களியாவும் நிலைபெற்றிருக்கின்ற தேவர்களாகிய மும்மூர்த்திகளாலேயும் எவ்வளவும் பின்றொடர்வதற்குக்கூடாதாம். மகத்தா

அக. அரசன் முயற்சியின் பெருமை யறிவித்தல்.

† இ-ம். தமதுகிருபையினால் வனதேவதைக்குப் புத்திரனைத்தந்து சீடனாக்கிக்கொண்ட தென்பதாம்.

§ இ-ம். தாசூரமுனி சீடனுக்குப்போதித்த நெறியை இராமருக்குப்போதிக்கத்தொடங்கின ரென்பதாம்.

யிருக்கின்ற இவனுக்குத் தேகங்களாய் யானையுஞ்சு
மக்கத்தக்க மூன்றுபேர்களுண்டு, அவர்கள் வலிமை
யுள்ளசகத்தை யதிக்கிரமித்திருக்கின்றவர்கள் ; உத்த
மன், மத்திமன், அதமனென்றுஞ்சொல்லப்பட்டபெ
யரையுடையவர்களாம். — ஞானசாயத்தில் உதித்த

அஉ. அரசன் சஞ்ச பூமியையு ம் அவனாலமைக் கப்பட்ட நகரச் சிறப்பையுங் கூறல்.

வவ்விடத்தில் வசிப்பவன் மூன்றுவிதமாகிய சரீரத்
தையுடையதலைவன், அந்த ஞானகாயத்தில் அவனா
ண்டாக்கிய பட்டணத்துக்கு நீளமான தெருவுகள்
பதினொன்காம் ; கெடாத மூன்றுவகைகளோடும் அழ
குள்ள சிங்காரவனங்கள் சோலைகள் லீலாபருப்பதங்
கள் கொடியையொத்த முத்துமாலைகள் வழுதடாகங்
கள் குளிர்ச்சியுஞ் சூடுமுள்ள இரண்டுவிளக்காம்.—

அங. அரசன து லீலாக்கிரகங் களின் சிறப்பு கூறல்.

என்றுசொன்னவைகள் நிறைந்திருக்கின்ற இந்தப்
பட்டணத்தில், இவனுண்டாக்கப்பட்ட கூடாரங்கள்
மூன்றுள்ள கீழ்மேல் நடு என்கின்ற சொர்க்கமத்திய
பாதாளமென்னு மிடங்களெல்லாம் சுழலும்படியுண்
டாக்கின அவற்றிற்கு வலிமைபொருந்திய தூண்கள்
மூன்றிருக்கின்றன ; அஸ்திமரங்களினால் நெருங்கியி
ருக்கின்றன ; உதிரத்தினாலு மிருதுவாகப்பட்டிருக்கிரு
க்கின்ற சருமத்தினாலு மூடைந்து விரிந்த மயிர்க்கற்
றையினாற் பரப்பப்பட்டன. — எப்பொழுதுமில்லா

அச. அம்ம னையின்காவலாகிய பேய்களைக் கூறல்.

தமாயையினால் அந்தத்தெளிந்தஞான வரசன் உண்
டாக்கின பாவனைகளானவை, தென்றற்காற்று சூழா
நின்ற பலகணிவாயிலொன்பதாம் ; பஞ்சேந்திரியங்க
ளென்னும் அழகிய தீபங்களினால் ப்ரகாசிக்கின்றன;
இரண்டு புயங்களென்னும் தோற்றங்களையு முடை
யன ; முடிவில்லாத பிரமபாவனைக்குப் பயப்படுகி
ன்ற அகங்காரமென்னும் பேய்களானவை காத்திரட்
சிக்கப்பட்டன. — சஞ்சரியாநின்ற பாவனைக்கூட்

அரு. அக்காவ லரோடும்மனை யில்விளையாடல்.

டத்தில் அகம்பாவமென்னும் பசாசுடன் விளையாடி,
சந்தோஷத்தைத்தருகின்ற விளையாட்டுகளை நாநாவி
தமாகநடத்தி, கூண்டில் வாசஞ்செய்யும் பறவையை
ப்போல இருந்து, வேகத்தினா லந்தப்பாவனையை
விட்டுநீங்கி பக்கத்தில் மேல்வருகின்ற பாவனையையு
ண்டாக்கி, ஆசையுடன்போய்ப்போயாவேசத்தையடை
ந்தவர்களைப்போல அவ்வரசனானவன் நடனஞ்செய்

அசு. புதுவீட் டிற் குடிபுகுந்து லாவுதல்.

வான். — இப்பாவனையைவிட்டு அதையடைவோ
மென்று நினைக்க அவ்வண்ணமடையும் : அதிலிரு
ந்து மரணமடைவோமென் றெண்ணுகின்ற எண்ண
த்தினால் அப்படியே மரணத்தை யடையும் ; மனமா
னது வருத்தத்தினாற் சுழல, சனித்து மரித்துச் சுழ
லும் ஞானகாசமே யிவைகளுக்குஸ்தானமாம் ; மர
ணத்தையடைந்து, தவழ்கின்ற அலைசலத்திலுண்டா

அஎ. இவ்விளையாட்டினாற் சுகதுக்கமடைதல்

வதுபோல திரும்பவுமுண்டாகும்.— மூன்று சரீரங்களையுடையவன் சிறப்புபொருந்திய கந்தர்வநகரத்தையொத்த தனதுநகரத்தில் தானினிமையாக விருந்து நீங்காமல் மேலுமேலுந்தழைக்கின்ற தொழில்வயப்பட்டவனாய் ஒருதரங்குறைவாவன், ஒருதரங்கொமையாவன், ஒருதரம் என்னசெய்வோமென்பான், ஒருதரம் அபிமானியாவன், அநேகந்தரம் மயங்குவன், தெளிவான், துன்பப்படுவான், சந்தோஷிப்பன், ¶—யான் றளர்ச்சியானேனென்பன், பருத்தேனென்பன், தாழ்ந்தேனென்பன், உயர்ந்தனனென்பன், வளர்ந்தனனென்பன், குறைந்தேனென்பன்;

அஅ. தெளிருனென்பவனுருவத்தை யறிவிக்கவேண்டுமெனல்.

பெருங்காற்றடிக்கின்ற சமுத்திரத்தைப்போல மனதினால் அவ்வரசன் சுழல்கின்றதைச் சொல்லுவதெவ்வாறென்று முனிசொன்ன மாத்திரத்தில், புத்திரனானவன், சொல்லியபிதாவை நீர் தெளிருவென்று சொல்லிய கீர்த்தியை யுடையவனென்று கேட்டான்.—

அகூ. மாயாவிலாசத்தையோர் கதையாகச் சொல்லியதெனல்.

உண்மையினால் அவ்வரசனைச்சொன்னால் வருகின்ற ஜநநமரணமென்னும் அசத்தியத்தின் உண்மையை நன்றாய்த் தெரிந்துகொள்வாயென்று தாரூர முனிவன் தன்மையாகிய பிடனுக்குச் சொல்லுவார். சங்கற்பமாய் அசத்தியமாயுண்டாய் விஸ்தாரமாக விரிந்து முயற்சியையுடையதாய் அறிவின் மயக்கமான சகத்தின்றன்மையை உவமைமொழியாக முன்சொன்னோம். —

கூ0. பிரமசங்கற்பமே யரசனெனல்.

பரமாகாயத்தில் உதயமாகிய சங்கற்பமே முன்சொன்ன தெளிருனென்னுமரசன், பலபலகாலமும் தானேயுண்டாகியும் தானேமறையும்; விரிவாகிய சகமானது அதன் ஸ்வரூபமாம்; அற்பமாகியசங்கற்பமானது உண்டானாற்சகமுண்டு; அதில்லையானால் சகமில்லையாம்; முதன்மையாகிய மும்மூர்த்திகண்முதலான தேவர்களும், அச்சங்கற்பத்துக்கு நெருங்கிய சரீரவுறுப்புகளாவார். —

கூக. சங்கற்பத்தினாலுண்டா மூவுலகச்சிறப்புரைத்தல்.

ஆத்மாவினது புத்தி பாச்சல்மாத்திரத்தால் பிரமனென்னும்பாவனையைப் பொருந்தினதாகிய சங்கற்பமானது, ஞானகாயத்தில் உண்டாக்கினது மூன்றுலகமென்னும்பட்டணமாம்; உலகபாலரென்பது பதினன்கு மனுக்கள்பெயராம்; மேலாகிய பட்டணத்திலுள்ள பதினன்கு வீதிகளென்றது பதினன்குலகம்; பரிசுத்தமான பூமிகள்நெருங்கிய பூந்தோட்டங்களும் ஊர்சூழ்ந்த சோலைகளும் நந்தனவனங்களுமாம். —

கூஉ. இதுவுமது.

மகம்மேரு மந்தரமுதலியகிரிகள் அந்நகரத்திற் பொ

¶ இ-ம். வீடுகேட்டுவது மதைக்கொடுப்பது மறிவொன்றை விட்டொன்றிற் றாய்வதுமாகிய விவற்றாற் சகதுக்கமுதலிய வருத்தமடைந்தன ரென்பதாம்.

ருந்திய லீலாபருப்பதக் கூட்டங்களாம் ; சூரியசந்திரர்கள் வாயுவினுஞ்சலியாத தீபங்களென்பதாம் ; சலமிறைந்த நதிக்கூட்டங்களையே முத்துமாலை யென்பதாம் ; வடவாமுகாக்கினியை தாமரையாகமலர்ந்திருக்கின்ற பெரியவேழுகடலையுமே சொல்லியதடாகங்கள் எறெனப்பட்டவைகளென்பதாம். — இப்படிப்பட்ட மகாநகரமாகிய சகத்தினிடத்தில் முன் சொல்லிய சங்கற்பவாசனையால் வினைகளினால்வந்த சரீரங்கள் பாவனைகளென்பதாம் ; தேவர்களையே மேலோகபதமென்றும், நரகர்களையே அலங்காரமாகிய பாதாளலோகத்திலென்றும், மனிதர்களையே மத்தியலோகத்திலென்றும், அச்சந்தரும் உயிரென்னுஞ்சூத்திர வேகத்தினால் மாயிசக்கவரான கிரகங்கள் சுழன்றிருப்பன. — பலவிதமாகவே உலாவிய சரீரமாகிய பாவனைதோறும் ஆன்மாசன், நன்மார்க்கமுள்ள ஆத்மஞானத்தை பார்க்கவொட்டுகின்ற நன்மையில்லாத அகங்காரமென்கின்ற இந்தப் பசாசங்கள் மித்தைகளாயிருந்தும் வாஸ்தவமையைப் போலத் தோன்றும் ; அதவேறுகி துவசாயின்ற வினையாட்டைச்செய்யும்க்ஷணத்தில் உள்ளதாகியும், இல்லாதாகியுமிருக்கும். — சரீரமென்று சொல்லிய கிரகங்களோ அம் சமுத்திரத்தின் திரைகளைப்போல உண்டாயழியும் ; மேற்செய்யப்பட்டகிரகங்களிலும் இடைவிடாமல்வருகின்ற இந்தச் சங்கற்பாசனையவன் சங்கற்பித்தகாலமுதற்கொண்டு ஒருக்ஷணத்தில் வீணைகளாசத்தையடையும் ; வீணைச்சத்தமிக்கப்பட்ட இந்தச் சங்கற்பவாசனை உண்டாகிய தன் சங்கற்பத்தினால் உண்டாயிருக்கும் : அந்தமட்டும் அரியதுன்பத்தினையுறுக்கும் —சற்றுமொருகாலில்லாமல் வியசனப்படுபவன், தானுமன்பென்பதாகிய ஒருபாவனையினால் மிருந்தவுலகத்தை யுண்டாக்கும், தானில்லையென்று கருதினால் அந்தக்ஷணத்திற் சகமிறந்து சூரியன்முன்பு அந்தகாரத்தைப்போல நீங்கும் ; கருதியவிடய மின்பத்தையடைந்துமுந்திய வாசத்தைசெய்கின்ற இச் சங்கற்பமுருடைக்கு சரீரங்கள் உத்தமமத்திம மதமமென்று மூன்றுள்ளனவாகும். ¶ —மூன்றுகுணங்களே மூன்றுசரீரமாய் மூவுலகங்களுக்குக் காரணமாம் ; அந்தக்குணங்களில்தாமதகுணத்தையுடை—

கூகூ. உடலைப் பாவமறை யெனல்.

கூச. தேகோகமென்பவையைய கங்காரப் பேயெனல்.

கூரு. சகமானத்திற் சுழன்றுவருந்துயரைத் சசுதுக்கமடைதலெனல்.

கூசு. மூன்று சரீரத்தை முக்குணமாகக் கூறல்.

கூஎ. சங்கற்பவிலக்கணங் கூறிக்கூறிய வற்றையிவித்தி

¶ இ-ம். பிரமமயமாய் விளக்கியவுயிரானது பிரமமென்றறிய வந்தவைசாரத்திற் சங்கற்பமாய்த் தனக் காதாரமான பிரமத்தை மறந்தின் பாதிவிம்பமா யிருக்கின்ற ஜீவேஸ்வர சகங்களாயதனே யானெனவென் றபிமானித் துவ்வகம் பாவத்தோடு விடயவுன்முகனாய்ச் சகமரணமென்னுந் துக்கசாகரத்தி லமூழ்கின தென்பதாம்.

க்கும்பொருட்டதற்குப்பலமா யிருக்கின்றமுக்குணங்களைநிவிர்த்திக்கவேண்டியவற்றின் குணங்களைக் கூறல்.

யசங்கற்பமென்பது, ப்ரகிருதியின்செயலினுல்துன்பத்துடன் வருத்தமுற்று பாதாளக் கிருமிகளாம். பரிசுத்தமாகிய சாத்துவிதகுணத்தையுடைய சங்கற்பமென்பது, நல்லதருமங்களையும் ஞானங்களையு முடைய மோக்ஷத்தையுடையதாய் சக்ரவர்த்தியைப் போல ப்ரகாசிக்கும். —இராசதகுணத்தையுடைய சங்கற்பமென்பது, இச்சகத்தில் இயல்பாகியசம்சாரத்தையுடையதாய் விளங்கும். சேர்ந்திருக்கின்ற இம்மூன்றையும் நீங்கி உண்மையாக சங்கற்பமில்லையாயின், வருத்தமில்லாதவனுக அச்சங்கற்பமானதுநின்மலமாகிய பரமபதத்தையடையும். துராசையாகிய திருஷ்டிகள் யாவையும்விடுத்து குற்றமுள்ள மனதை சுத்தமானமனதினு னிலைப்படுத்தி, — அகத்திலும் புறத்திலும் உதயமானசங்கற்பத்தை ஒருமிக்கக்கெடுக்கச் சிந்திப்பாய். நிந்திக்கப்படாத தபசுகள் கற்பகோடிகால நீ செய்தாலும் பாதாளத்தையும், பூமியையும், நீங்கற்கரிய சுவர்க்கத்தைப் பொருந்தினுலும், உனக்குச்சொல்லிய சங்கற்பநாசத்தையன்றி தெளிவான பரமபதத்தையடைய கலக்கமின்றிய யுத்தியானது வேறில்லையாம்,— துன்பங்களும் வேற்றுமைகளுமில்லாத, பிரமாநந்தத்தைச் செய்கின்ற சங்கற்பத்தைக் கெடுக்கமுயற்சிப்பாய். சங்கற்பமான பாசத்தில் அளவற்றபாவனைகளனைத்தும் இயல்புள்ளசரமாயுண்டாகும், அப்பாசத்தை இலகுவாயறுத்துவிட்டால் மயக்கத்தையுடையபாவனைகள் எப்படிதுகளாய் நசிக்குமோ, புத்திரனே? தெரிகிலேம்.—

கூஅ. முக்குணங்கள் முதலியயாவையு நீக்கி முத்தியையடையுமுயற்சியறிவித்தல்.

கூகூ. சங்கற்பநாசமே முத்தியாமெனல்.

க00. பிரமாநுபவத்திற்சங்கற்பநீக்கினவதிசயமுரைத்தல்.

துன்பஞ் செய்கின்ற சங்கற்பமில்லாமல் எதிரே வந்துதோற்றிய தொழிலின்மார்க்கத்தி லிருப்பாய். சங்கற்பமானது இறக்குமாகில் ஞானமானது திரிஸ்யங்களனைத்திலும் பற்றமாட்டாது. ஒப்பற்றுயர்ந்திருக்கின்ற பிரமபதத்தைச்சேர்ந்து சகவேறுபாடான விகற்பங்களியாவையும் நீக்கி இனிமையுடையவனுய் சுழுக்திமனத்தையடைந்து அத்துவிதத்தில் பரமசுகத்தையேயடைவாய்.† — என்றுசொல்லவும் சங்கற்பமாவதேதென்றும், அதுவுண்டானதும், விருத்தியானதும், மாய்ந்துதேய்ந்ததும், எப்படியென்றும், தாசூரமுனியை யீடனனவன் விபரமாய்க் கேட்க: அதற் கவர்சொல்லுவார். மேலானதாகியும், உண்டெனல்வடிவாயும், விளங்கியசமமானவாத்மஞான

க0க. திருக்குதிருஷ்டியாற்றிரிஸ்ய ஸ்வரூபங்களாயிருக்கின்ற சங்கற்பத்தைக் கெடுத்துச் சுகத்திலிருப்பாயெனல்.

க0உ. சங்கற்பத்தைக் கெடுக்குமித்தாற் அதினுற்பத்திநாசமியாதெனின்.

---

† இ-ம். சங்கற்ப முகித்தவிடத் தொடிக்கித் தன்மயமாக நிற்கவேண்டுமென்பதாம்.

மானது,இரிஸ்யத்தில் உண்டாகுமே சங்கற்பமாம்.—

கoரு. சங்கற்பவுற்பத்தி கூறல்.

சிறிதாக வுண்டாய்த் தானொரு முதலாயிருக்கும், கிரமமாக மெல்லமெல்லவளர்ந்து பரமாத்மா வாகிய தெளிவை மறைத்துச் சடபாவமானது, திரமாயுண்டா கும்படி உதித்தமேகத்தைப்போல வளரும். குழந்தாய் ? அறிவானது இரிஸ்யத்தை பாவித்திருக்கின்ற தனக்கு வேற்றுமைபோலப்பார்த்து நடந்து சங்கற்பமாய்விளங்கும்.—

கoசு. பாவனை யிதமாக வேண்டுமெனல்.

ஞானமென்னும் வித்தானது சங்கற்பமென்னு மங்குரமாம் ; அந்தச் சங்கற்பமானது, தன்னை வேற்றுமையாகத் தானேயுண்டாக்கி, தானுண்டாகும் தானே பெரிதாய்வளரும், இது பிறருக்குத் துன்பமேயன்றி இன்பமாவதொன்றுமில்லை, ஆகையால் சொல்லிய சங்கற்பத்தின் மார்க்கத்திற்செல்லக் கருதாதே. நிற்கின்ற சகத்தினிலேயில் கணமும் பாவனை செய்யாதே.—

கoஎ. சங்கற்பம்வருத்த மின்றிக்கெடுமெனல்.

இவ்வாறாகிய பாவனையின்றால் பரமசுகமாம். இப்படிப்பட்ட சங்கற்பமானது, சுவறாமடையபிருக்க வைக்கவேண்டுவதில்லை ; துக்காதின்ற பாவனைகளியாவையுங்கெடுத்தலாகிய [illegible]யால் அம்மனது நசிக்கும், விகசிதமான புட்பத்தைக் கசக்கவேண்டுமானால் கரத்திற்கோர் வருத்தமுண்டாயிருக்கும் ; சொல்லிய வித்தச்சங்கற்பநாசத்துக்கு அவ்வளவு வருத்தமும் வேண்டுவதில்லை.—

கoஅ. சங்கற்பவடிவமான மனதைக்கெடுத்தாத்மஞானமானவின்றுயா வெனல்.

உண்டாகிய சங்கற்பமானது பாவனையைவிட்டுவிட்டால் நாசமடையும் ; இந்த பகிர்முகசங்கற்பத்தை இவ்விடத்தில்லாத அந்தர்முகசங்கற்பத்தினால் திடமாகக்கெடுத்து பரிசுத்தமனதினால் ஆத்மாவையுங்கெடுத்து உனது ஸ்வரூபஞானத்தில் நீ நிலையாயிருப்பாய் ; கடத்தின்பின்னைத்தெரிந்து பிறகுசேர்த்திற்கூடும், இதரியதோ, முழுதுமசத்தியமாம் ; அந்தஞானவிகற்பத்தினால் உதித்ததையன்றி முன்பில்லாததினால் சகமும் ஆகாயமும் ஒத்திருக்கும். ‡ —

கoகூ. அத்துவிதானுபவங் கூறல்.

அரிசிக்குமியும், தாமிரத்துக்குக் களிம்பும், அபாவமாயிருந்தும் கருமவிசேடங்களினால் நீங்கிப்போம் ; அதுபோல ஆத்மாவும், அந்தஞானத்தையடைந்து விசாரத்தால் விளங்கிக் கொள்ளுதலியல்பாம் கொண்ட சந்தேகத்தை விட்டு ஆசாரியன் சொல்லபான விசாரத்தால் நீ முயற்சிசெய்வாய் : கண்டோமென்று சொல்லப்பட்ட சகலமும்வீணாம் ; குருவுந்நீயுமாகும், பரப்பிரமசொரூபமே நிலைத்தோம். —

கஉo. உபதேசத்தை முடித்தல்.

இப்படியென் றந்தத் தாருமுனிசொல்லிய யாவையுங்கேட்டு, அவ்விதமே அந்

‡ இ-ம். சங்கற்பத்தியும்புத்தி காசத்தையும், அதற்குப் பிரமப்பிரகாசமாய் விளக்கினை வனுபவத்தையுமறிவித்ததாம்.

விடத்தில் அம்முனியை யானடைய, மனமகிழ்ச்சியாய்ப்பூசித்து என்னுடன் அத் தூளிரின்மேலிருந்தான், நாங்களிருவரும் உண்மையான வநேககதைகளினால் விடப்புருடர்களைப்போல இரவை க்ஷண நேரமாகத்தள்ளி அத்தாசூரனைப் பிரிந்து யான் கங்காநதியை யடைந்தேன், இவ்வுலகமானது அவன் சொன்னகதையை யொக்கும். ¶ —

நாசூரான்கதை முற்றிற்று.

கசன்கதை.

அவதாரிகை.

முன்கதையிற் சித்துவிலாசமான சங்கற்பமே சிவேஸ்வரசயங்களாக விளங்குவதை நிரூபித்து, இவைகள் சித்தேயாமென்பதை யநுபவமா யறிவிக்கு நிமித்தங் கசன்கதையை நிரூபிக்கிறார்.

க. கணமுமிலையின்றிய வாயுளின்விடயவிச்சையைக் கெடுக்க வேண்டுமெனல்

அளவில்லாதகாலத்தில் சொல்லப்பட்ட நூறுவருடமும் நொடிநேரமென்றாலும்போதாது ; இதைநெடுங்காலமாகப் பார்த்து கெடாத மிகுந்த வாசையை பொருந்துவதென்ன, விடயங்களைச் சிந்தித்து விரிவதாகிய மனதினிச்சை பற்றில்லாமற் கெடுத்திருப்பாய்.— ஆசையிறந் தத்தன் மையனாய் நின்றாயோ

உ. விடயவிச்சை கூடாததேனெனின்.

அத்தன்மையனாகவே நீ வாழக்கடவை : பூமியின்கண் அழகிய நல்லமணிகள் விரும்பாதிருந்தும் பெருங்கிப்பாய்கின்ற நல்லொளியைப்போல, சத்தாமாத்திரமாக உண்டான வுலகமும் பிரமத்தினிடத்தில் நன்றாகத்தோற்றும்.§— ஆதலினால், பிரமத்தினிடத்

ங. சகத்திற்றுன்பமின்றிச்சஞ்சரிக்கு நெறியாதெனின்.

தில் அகர்த்தாவென்றும் கர்த்தாவென்றும் பாவனைகளுண்டாம் ; ஆசையில்லாததினால் உண்டாகாத அகர்த்தாவாம் ; சன்னதானமாத்திரத்தினால் மேன்மையானகர்த்தாவாம் ; இந்த விரண்டையல்லாமல் ஆத்

ச. இதுவுமது.

மாவில் வேறொன்று மடையாவாம். — அகர்த்தாவிலும் கர்த்தாவிலும் உனக் கிசைந்ததெதுவோ அதனிடமாயிருப்பாய் ; ப்ரசன்னமான அந்தவிரண்டுமெல்லாமல் தோன்றிவளராநின்ற மனதைவிழுங்கி ஒப்பின்றித் திடமாயிருப்பாய். அகர்த்தாவாகவும் ஒப்

¶ இ-ம். இக்கதை திருஷ்டாந்தமாக ஆத்மதிருஷ்டியிற் சங்கற்பமுதலிய சகமித்தையென் றறியவேண்டு மென்பதாம்.

§ இ-ம். பிரமப்ரதி பலனமானசகத்தை வேறாக்கக் கண்டிச்சிக்கக் கூடாததாம்.

யில்லாத நல்லகர்த்தாவாகவும் நின்றாலும் இதுவேக ன்மையாம், துன்பமானது சற்றுமில்லை, † — நினைக் கப்பட்ட அகர்த்தாவாய் நான் சகத்தினெழுங்கின் படி நடக்கின்றேன், வேறான கருத்தில்லாமையால் அவ்வகத்திலேயில் வேறுபாடில்லை. என்னதென்றும், நீயென்றும், நானென்றும், செய்தேனென்றுஞ்செய் யவில்லையென்றும், மதித்தபோதே துக்கமாம்; சரீர த்தை நானென்றபவருறாண்டோ. — சரீரத்தைநானே யென்று சொல்லில் இருபத்தொருநரகமு மதுவே யாம்; மெய்யிய வலியதுன்ப மாகுலும் உடலே நா னென்றுசொல்லவேண்டாம். சந்தேகமில்லாத நல்ல கேள்வியையுடைய சந்துக்கள், நீர் சகல மாமிசங்க ளையும் கைவசமாகப்புசிப்பவராயினும், நாயினதுமா மிசத்தை புசியார்கள்: அதுபோல, தேகநானென்று கருதுவார்களோ. — சரீரமானது யாமென்றால் கன ங்கத்திலும் ஞானதிருஷ்டி. தெரியாததாரும், ஞற்ற மிருந்த அக்ஙனங்கத்தை தாரத்தன்னுவார்களாயின், ப்ரகாச ஞானமானது கருத்தமேக மில்லா விடத்து விளக்கு நிலைமைபோலப் பிரகாசிக்கும். இப்படிப் பட்ட திருஷ்டியினால் மிருந்து சாகசமுத்திரத்தின் அமருள்ள முத்திரமெனிதா யுண்டாம். ‡ — சகல த்திலும் நான் கர்த்தாவல்ல, அவனென்பதும் இவ னென்பதும் யானல்லவென்று நிந்தித்து மனதிற்றி டமுண்டாய் அகர்த்தாவாயிரு: அப்படி யில்லையா யின், சகலத்துக்குங்கர்த்தானாமே அனேவில்லாதஅப் பொருள்களும் நானென்று நிந்திந்தாலையென்று மில்லாமல் உறுதியாயிருப்பாய். — அப்படி யல்லா விடின், இவ்விரண்டிமென்று நானல்லயாம், வாக்கு மனதீதமாகிய வொன்றேயாம், இருந்த விப்புதங்க ளுள் உத்தமமாகிய உணதுபதத்தில் நீ யிருப்பாய். ஏகமென்கின்ற பாமபதத்தை அபிஷிக்த சந்துக்கள் அன்னியோந்றி யிருப்பார்கள். நெருங்கிய வாசனையே பந்தமாம்; அவ்வாசனாக்ஷயமே பரமையானமோக்ஷ மாம். ¶ — சத்தமுதலிய விடயங்களிற்பற்றி மனமா னது தரிக்கவாசனைகளை முன்பு அவர்வரும்படி. வெ

ரு. தேகோக நீக்கிற் பயனியா தெனின்.

சு. தேகோகந் துன்ப மாமெனல்.

எ. தேகோகந் தை நீக்க வேண்டுமெனல்.

அ. தேகோகத்தை நீக்குதற் குபாய மியாதெனின்.

கூ. இதற்கு மூன்று விச்சயக்கூறல்.

ய. வாசனாத்தியா கமியா தெனின்.

---

† இ-ம். கர்த்தத்துவ வகர்த்தத்துவமென்னு மிரண்டி. லொன்றேனு மிருக்கிற் றுன்பமின்றென்பதாம்.

‡ இ-ம். பஞ்சபூதவிகாரமான வெளதிகத்தை யானென்பதே பவத்துன்பமா மென்றறிந்ததை நீக்கிற் சுயஞ் சித்ததமாமென்பதாம்.

¶ இ-ம். ப்ரவிருத்திமுதல் விச்சரீரபரியந்தமுள்ள சகலவிடயமும் யானல்லவெ ன்பதற்கு விலக்ஷணமே நானென்றும், அனையானுஞ் தன்மையனாய் விளங்குஞ் சலக்ஷணமே நானென்றும், இவ்விரண்டு மின்றித் தன்மையனாய் விளங்குதலெ ன்றுஞ் சொல்லப்பட்ட மூன்றுவழையுமே, தேகவாசனையை நீக்குதற்கு யு த்தியாமென்பதாம்.

டுத்து மோகத்துக்கதித்த அந்தவாதனையையும்விட்டுவிடுவாய். நன்மைபிரகாசிக்கின்ற அருளும், சந்தோஷமும், நட்பும், உதாசீனமுமாகிய இந்நான்கும் மாசற்றிருக்கின்ற குணங்களாக அதன்றொழிலே மனதிற் பற்றுமறச்செய்வாய். ¶ — உள்ளத்தின் கண்ணுள்ள செயல்களை முழுதுங்கெடுத்து, நட்பற்ற சின்மாத்திரவாசனையையும்பிடித்துக்கொண்டு, மெல்லமெல்ல விடுத்தி லந்தச் சித்துவாசனையையும் அந்தக்கரணங்களோடுங்கெடுத்து, தள்ளப்பட்டயாவும் எங்குமுடிந்தியினுனிக்கினையோ அம்முமுற்றினையுந்தள்ளி, தெளிவானவறிவும் மனதும் தொழிலும் ஞானப்பிரகாசமும் அந்த ஞானுந்தகாரமுமாகிய சகலமு நீங்கி,—

கக. பிரமசுபாவமாய் விளங்குவதெங்ஙனமெனின்.

கஉ. இதுவுமது.

வாசனாரூபமாகிய இப்பொழுது சொல்லப்பட்ட வினைகளும், இவைகளை வேற்றுமையாக பழகுகின்ற சிதாபாசனும் பிராணவாயுவின் சலனமும் எதுவும் காரணத்துடன்கெடுத்து, ஆகாயத்தைப்போல நிற்பாயாயின், சகலமுந்தீர்ந்தவுபசாந்தனுய் எதுவாயினையோ உண்மையாக அதுவே நீயாம். ‡— மனதிலுள்ள சகல வாசனைகளையுங்கெடுத்து, உலகில் ஒருபற்றில்லாமல் ஆசையற்ற நிலையினின்றவர்கள் குற்றமற்ற சீவன்முத்தராவார்கள். அச்சீவன்முத்தர்களே எவ்வுறுதற்கரிய உயர்வுள்ள ஈசராவார்கள்; சமாதியையும் கொள்ளுதற்குரிய கன்மத்தையும் சேர்ந்தாலும் விட்டாலும் சீவன்முத்தர்களாம். † — மனதின்கண் ஆசையொன்றும் இல்லாமையால் குறிக்கப்பட்டதொழில்களை செய்தாலும் விட்டாலும் வைதிகமான ப்ரயோசனமொன்றுமில்லை; ஒருமார்க்கமாய் அநேககாலமாய் மனதொருமைப் படுகையால் வளருகின்ற வாசனை நீங்கியமனதில் சாஸ்திரங்களெல்லாம் வேண்டாவாம். § — எதுவும் வாசனைக ணீங்கிய மோனநிலையை யல்லாமல் பொருந்துதற்குரிய வேறொருகதியாவது நன்மையானதில்லையாம்; அறியத்தக்கதை யறிந்தவனாயும் பொருந்திய பந்தத்தினும் சுழன்று திரும்பினதாயும் பழமையாகிய சகத்

கங. அங்ஙனம் விளங்கிய சீவன்முத்த லிலக்கணமியாதெனின்

கச. ஆயின் வேதத்திற் சொற்றதை வேண்டாவோவெனின்.

கரு. முத்தியடைவா ருறுதியாதெனின்.

¶ இ-ம். பிரமசுபாவமாய்ப் பிரகாசிப்பதே பெத்தமுத்தியின் வாசனாத்தியாகமென்பதாம்.

‡ இ-ம். விருத்திஞானத்திலுள்ள சுத்தவாசனையுஞ் சமாதிஞானத்திலுள்ள சுத்தவாசனையுமிறக்கிற் கூடஸ்த பிரமமயிக்கியமான அத்துவிதம் விளங்குமென்பதாம்.

† இ-ம். ஸ்வரூபதிருஷ்டியாற் சகலத்திலும் பற்றற்றதிற்கூடியுங் கூடாததாயுமிருக்கின்றதே, சீவன்முத்தர்களுடைய இலக்கணமென்பதாம்.

§ இ-ம். மனமான அனுபூதிவடிவாதலின், அதனாற் செய்யும்விதி விலக்கின் ப்ரயோசனப்ரயோசனம் விதிக்குஞ் சாஸ்திரவாசனை வேண்டாவாம்.

கசு. மோகத்தி னீக்க முறைத்தல்.

கஎ. பவங்கடக்குஞ் சுளுவையும் பளுவையுங் கூறல்.

கஅ. சர்வம்பிரம மயமாய் விளங்குதலாற் சகலமு மின்றெனல்.

க௯. சமாதியனுபவ முரைத்தல்.

உ0. இதுவுமது.

தின் நிச்சயமாயிருக்கின்ற தத்துவத்தைத்தெரிசித்தவர்கள் சிலர், மற்றவர்கள் அவ்வுலகமயக்கத்திற் கெடுகின்றவர்கள்.— சரீரத்தைப்பார்த்தல்லவா சகத்திலுள்ளயாவரும் சஞ்சரிப்பதேயன்றி ஒன்றுன வாத்மாவைப்பார்த்தல்ல, எவ்விடத்தும் பஞ்சபூதமே யல்லாமல் தேவலோகத்திலும், பூலோகத்திலும், பாதாளலோகத்திலும், தேடியும் ஆருவது பூதம்கண்டதில்லை ; மோகத்தைவிடுவோமென்று திரமடைந்தவர்கள் யாவையும் பற்றமாட்டார்கள்.—அனுபவயுத்தியில்லாத மூடர்களனைவர்க்கும் சுகமானது, பிரளயகாலத்தில் வெப்பமான சமுத்திரமாம் ; மயக்கமில்லாத வனுபவ யுக்தியையுடையவர்களுக்கு முன்னிருக்கின்ற பசுவின்குளம்படியாம் ; துக்கமில்லாத ஞானவானுடையமனதில் தொடர்புற்ற விடயசுகம்பற்றாது ; போகமில்லாத குறிஞ்சி நிலத்திலிருக்கு மழிவானபெண்கள் ப்ரகாசிக்கின்ற பட்டணத்திலுள்ள புருடர்களுக் கென்ன பிரயோசனமாம். — பிரமமாகிய பரிசுத்த சமுத்திரத்தில் மலைகளியாவும் நுரைகளாம் ; பிரமசூரியன்முன்பு சமுத்திரஞ்சூழ்ந்த பூமியானது பேய்த்தேராம் ; திரமுள்ள விவ் வருத்தத்தை பிரகஸ்பதிபெற்ற வரபுத்திரனை கசனென்னு நாமத்தையுடையவன் முன்னேசொல்லினன் ; அதை ஸ்ரீராமா ? நீ கேட்பாய். †—கசமுனியானவர் மேலாகிய சமாதியினின்றும் பிரிந்து ஒருபோது களிக்கின்ற மனத்தையுடையவன், பரவசனுயகமுகமுத்தவசனத்தையுடையவன், எதைச்செய்வேன், திக்குகளிற் பொருந்த எங்கேபோவேன், விடப்படுவதெது, கிரிகிப்பதெது, மேலாகவளர்கின்ற பிரளயசமுத்திரத்தைப்போல உலக மெவ்விடத்தும் எனது ஸ்வரூபமே நிறைந்திருக்கின்றது. — சரீரத்தினது புறம்பிலும், உள்ளிலும், திக்குகளிலும், ஆகாயத்திலும், பூமியிலும், எவ்விடத்திலும் எனது ஸ்வரூபமல்லாமல்வேறொன்றுமில்லை ; எனது ஸ்வரூபமில்லாத விடங்களுமில்லை ; எனது ஸ்வரூபத்தி லில்லாதவைகளுமில்லை ; தானேவிளங்குகின்ற வஸ்துக்கள் வேறேயில்லை ; சச்சிதாநந்தஸ்வரூபமே ப்ரகாசிக்கின்றதென்று கசமுனிசொன்னர். ‡ —

கசன்கதை முற்றிற்று.

---

† இ-ம். சீவன்முத்தர்க ளப்பியாசத்தையு மாரூடத்தையு மறிவித்ததாம்.

‡ இ-ம். சமாதியிலிருந்து சாக்ஷாத்காரமான மனதினுற் பார்க்குமிடத்திற் சர்வம் பிரமமயமாய் விளங்குகின்றதென்பதாம்.

திதிப்பிரகரணம்.

அவதாரிகை.

முன்கதையிற் சர்வம் பிரமமயமாய் விளங்குமென்பதையறிவித்து, அவ் வனுபவம் வரும்பொருட் டவ்வைந்துகதைகளின் சாரங்களைச் சுருக்கி, உபதேசப்பிரகாரந் திதிப்பிரகரணஞ் சொல்லுகின்றார்.

௧. அநுபவிக லிலக்கண மியாதெனின்.

பெறுதற்கரிய சாத்துவிககுணமான பிறப்பையு டையவர்கள், பூமியினிடத்து பிரமப்பிரகாசமாக வாழ் கின்றது ; ஆகாசத்திற் பிரகாசிக்கின்ற பூரணச்சந்தி ரனையொப்பாரும். வருந்துகின்றதுயரத்தில் அவர் கள் வாடார்கள், இராத்திரிவந்தாலும் சிறப்பானசுவ ர்ணதாமரைமலர் சற்றுங்குவியுமோ.

௨. இதுவுமது.

— பிரசித்தமா கிய தொழில்களையல்லாமல் வேறான செய்கைகளிற் பற்றார்கள் ; அறிவாகிய சத்துக்களுடைய மார்க்கத் தில் நடப்பார்கள் ; பூரணமாகநிறைந்து சலனமற்ற மனதினால் மேன்மையானவர்கள் ; நட்பு அருள்முத லாகிய சற்குணங்களினாற் பிரகாசிப்பார்கள்.

௩. இதுவுமது.

— இயல் பாகிய குணத்தையுடையவர்கள், தாழ்வு உயர்வெ ன்னு மிரண்டையும் இச்சியாதவர்கள், சமத்துவமு டையவர்கள், சன்மார்க்கத்திற்செல்பவர்கள், தனதெ ல்லையைத் தாண்டாத சமுத்திரத்தையொத்தவர்கள், மோகமில்லாதவர்கள், சூரியனைப்போல நியதியையு முடையவர்கள். §

௪. அநுபவ முதிப்பதற்கப்பியாசங்கூறல்.

— கொள்ளத்தக்கது துன்பமற்ற வர்குணத்தை, சுருங்கும்படியாகத் தள்ளத்தக்கது கொடியவர்களுடைய மார்க்கமென்னுங் குற்றத்தை, உலக மெப்படிப்பட்டதென்று விசாரித்து நிந்திக்கத் தக்கது ; யாமெப்படிப்பட்டவனென்று ஆசாரியரா லும் தனதறிவினாலும் சீர்விசாரித்து தெளியத்தக் கது ;

௫. இதுவுமது.

— வருத்தப்படுகிற ஆத்மாவையறிகின்றமார் க்கத்தில், மனதினால் திருத்தஞ்செய்வது வியவகாரத் தில் அழுந்தியற்றதொழிலே, அடையத்தக்கது நிமை யற்ற நல்லோர்களிடத்திற்கலத்தல், புசிக்கத் தக்கது நானென்பதுண்டாகின்ற அகத்தை,

௬. இதுவுமது.

— நீக்கத்தக்கது நரம்பு என்பென்கின்றசரீரமயக்கம் ; காணத்தக்கது சகலவாத்மகோடிகளுள் நிறைந்திருக்கின்ற பிர மம் பச்சைப்பரவியினா லிழுக்கத்தக்க இரதத்தையு டைய சூரியனிடத்திலும், பூமியிற் றள்ளத்தகாத கி ருமியினிடத்திலும், ஞானமொன்றே நிலையாயிருக் கும். ¶

௭. அநுசந்தானத்திற்குரிய

— தாமதகுணமென்றும், இராசத குணமெ ன்றும், சாத்துவிககுணமென்றும் பெயரையுடைய

§ இ-ம். ஸ்வாநுபவமாய்ச் சஞ்சரிக்கும் விளக்கத்தைக்கூறினதென்பதாம்.

¶ இ-ம். பிரமாநுசந்தானங்களின் சாரங்களைச் சுருக்கமாகக் கூறினதாம்.

குணத்தை யறிவித்தல்.

மூன்றுகுணங்களாகிய சங்கமும் முயற்சியாலடையும். பரமசுகமான மோக்ஷத்தை சாத்திகத்தொழிலானது செய்விக்கும். உத்தமமான ஸ்ரீராமா வென்றுசொல்லி, திரும்பவும் வசிட்டர் சொல்லுவார். †—

திதிப்பிரகரண முற்றிற்று.

உபசாந்தப்பிரகரணத்தில்

சனகராசன் கதை.

அவதாரிகை.

முற்பிரகரணத்திற் சித்துவிலாசமே சகமென விளங்கு மென்பதை நன்றாயுணர்த்தி, அச்சித்தே சகமாகவிளங்குதலா லச்சக மெப்போது மின்றெனத் தெரிவிக்குநிமித்த மொன்பது கதைகளானிறைந்த உபசாந்தப்பிரகரணங் கூறத்தொடங்கி மனவுபசமஞர்த்தஞ் சனகராசன் கதையை நிரூபிக்கிறார்.

க. சர்வம்பிரமமய மென்பதைப்போதித்து அச்சர்வக் கிரிகுணாத்மகமென் றுரைத்தல்.

உ. பிரமத்திலெதார்த்தமாய்ச்சர்வ முமின்றெனல்.

ங. பிரமமேயுண்டென் றறிந்துவேறுண் டென்பதைச் சத்துவகுணத்தாற்கெடுப்பாயெனல்.

தேவகுருவின் புத்திரனாகிய கசமுனி சொல்லிய ப்ரகாரமே இச் சகங்களனைத்தும் ஆத்மஞான ஸ்வரூபமாம்; சநநமரண மென்னும் மாயையானது, இராசததாமதமென்னுங் குணங்களை பொருந்திய புருடர்கள் தரிக்கத்தக்கதாய் தூண்கள் தாங்குகின்ற மண்டபத்தைப்போல நிலையாயிருக்கும்; திரமான சாத்துவித குணத்தையுடைய உன்னையொத்தவர்கள், பிறவியச்சரீங்கியிருப்பார்கள்.— குறைவற்ற சாத்துவித குணத்தையுடையவர்கள், சருமத்தையுரிக்கின்ற சர்ப்பத்தைப்போல மாயாபாசத்தினின்று நீங்குவார்கள்; சமஸ்தமும்பிரமம் நாமுமந்தப் பிரமமேயென்றுசிந்தித்துயாமும் வேறுசகலசகங்களையும்வேறென்கின்ற மயக்கத்தைக்கெடுப்பாய்; காரணமான பிரமஞானத்தில் உண்டாகின்றனவாகிய கற்பனைகளியாவும், சமுத்திரத்தி லுண்டாகிய திரையைப்போல உண்மையாகவில்லை —துன்பமுமில்லை, இன்பமுமில்லை, சநநமுமில்லை; சநநமரணமென்னுஞ் சுழலிற் சுழல்பவர்களுமில்லை, ஒன்றென்று எப்போது மிருக்கின்றவஸ்துவே யிருக்கின்றது. வியசனப்படவேண்டுவதில்லை, அநுபவயுத்திபொருந்தும்படி, வருபவைகளையும் போனவைகளையும் சிந்திக்காதே, இராக

† இ-ம். பவமாய் விளக்குங்குணங்களை நீக்கிச் சிவமாயிருக்குங் குணத்தை யறிவித்ததாம்.

த்துவேஷமென்னுந் துவிதங்க ளொன்றுமில்லாத மேன்மையாகிய சாத்துவிதகுணத்துடன் ஏகனாய்து க்கங்களனைத்தையும் நீக்கிவிடுவாய்.— சர்வத்திர சமமாய் ஆத்மஞான ஸ்வரூபத்தில் நிச்சயமுடையவனாய் திடஞானமுள்ளவனாய் உபசாந்தனாய் பொருந்தின மனதையுடைய மௌனியாகி, இரத்தினத்தைப் போலத் தெளிவையடைந்து, துன்பங்களி யாவையும்விடுவாய்; நிருமலமானது பொருந்ததொழில்களனைத்திலும் இச்சையில்லாமல்செய்வாய், எனதென்றுகொள்ளுதலும் விடுதலும் இவ்விரண்டு மில்லாமல்துயரனைத்தையும், ஸ்ரீராமா? நீ கெடுப்பாய். †—

ச. பிரமமாய் நின்றுயானென தென்கின்ற துன்பத்தைக் கெடுக்கவேண்டு மெனல்.

ரு. பிரமானுபவமுதிக்கும் பக்குவமறிவித்தல்.

மேற் சங்கமில்லாத அந்தமான சங்கத்தில் ஆத்மஞானமானது எளிதினுதயமாம்; ப்ரகாசத்தையுடைய வெண்முத்துகள், உத்தமமான மூங்கிலல்லாமல் உண்டாவதுண்டோ. பிறந்தவர்களில் மேன்மையுள்ளவர்களாகியும், நன்மையுள்ளவர்களாகியும் அன்புள்ளவர்களாகியும், தெளிந்தவர்களாகியும், நித்தியமான சீவன்முத்தர்களாகியும் ஆத்மஞானிகளாகியுமிருக்கின்ற குணங்கள் அம்முடிவான பிறப் புள்ளவர்களைச்சேரும். — மிருதுவானதையுள்ள அச்சத்துக்களை சகமனைத்தும் விரும்புகின்றகுணமானது, கானகத்தில் ஒருகொத்தில் வேணுவினுற்செய்த பிள்ளாங்குழலின நிராகத்தினுல் களிக்கின்ற பசுவின்கூட்டம்போலும், இக்குணமானது சகலருக்கும் பொதுவாக சொல்லியதாம். இக்குணங்களிற் றனிமையாக எழுவகைப்பிறப்பையுங் கெடுப்பவர்களுக்கு மோக்ஷமார்க்கமிரண்டு; அம்மார்க்கஞ்சொல்லக்கேளும். — ஆசாரிய ருபதேசவாக்கியங்கள் தவறாம லப்பியாசஞ்செய்யில், மெல்லமெல்ல மயக்கம்விட்டு ஆசாரிய ரனுக்கிரகஞ்செய்த சென்மத்திலாவது அதற்கடுத்த சில சநநங்களிலாவது வீடானதுண்டாம் களங்கமற்ற விற்பன்னமானது கொஞ்சமுண்டாகிய மனதினுல் தான் மனனஞ்செய்வதினுல் ஆகாயக்கனியானது விழுவதைப்போல, உண்மைஞான மெளிதிற்கிடைக்கும். § — இந்த விரண்டுமார்க்கத்தில் ஆகாயக்கனியைப்போல தத்துவஞானமானது பொருந்தியகுணத்தை, நல்லவுதாரத்தையுடைய இராமா? முன்னடந்த வொருகதையினுல்நான்சொல்லமனந்திருந்தும்படிகேள், சகத்தில்

சு. பாவந் தீர்ப்பதற் கிரண்டு மார்க்கமுண்டெனல்.

எ. சத்மார்க்கமிரண்டிற் சுருவென் பதையும் பரு வென்பதையும் பகுத்துக்கூறல்.

அ. ஞானஞ்சுருவி லுதித்தற்குத் திருஷ்டாந்தமறிவிக்கத் தொடங்குதல்.

---

† இ-ம். சர்வம்பிரமமயமாய் விளங்குவதேயன்றி வேறன் றென்பதாம்.

§ இ-ம். ஆசிரியர்வாக்கியப்படி யனுசந்தித்தலும், அவ்வாக்கியத்திற் சுயவிற்பத்தியுண்டா யனுசந்தித்தலுமாகிய விரண்டையு மறிவித்ததாம்.

௯. சனகராசன்பக்குவ மறிவித்தல்.

சத்துருவினால் ஆபத்தென்ப தொன்றுமில்லாதவன், உதாரத்தை யுடையவன், செல்வத்தில் மிகுந்தவன், பொறுமையில்லாத விதேகமென்னும் பூமியை அரசாட்சிசெய்பவன், சனகனென்னும் பெயரையுடைய விராசராசன், —சற்குணத்தில் சமுத்திரத்துக்கொப்பானவன், விஷ்ணுவைப்போல பூமியை இரட்சிக்கின்ற குணத்தையுடையவன், நல்லகுணங்களைச் செய்கின்ற வசந்தகாலத்தில், வாசனையுள்ள புட்பங்கணிறைந்த சிங்காரவனத்தில் சந்தோஷத்துடன் போய், தனக்குரிய மந்திரமுதலிய சேனைகள் வெளியினிற்க தனித்துச் சஞ்சரிக்கின்ற சமயத்தில், சித்துக்குரித்தான மனதையுடைய சித்தர்குமாரங்கள் பாடுங் கீதங்களை காதிற்கேட்டான் ; † — வாசனைநிறைந்த மலையி லிருப்பவர்கள், நேத்திரவிடயத்திற் பொருந்தாத சித்தர்கணங்கள் தங்களனுபவத்தைப் பேசாநின்ற கீதையை நீதிகணிறைந்த சனகராசன் கேட்டவண்ணமே யாருஞ்சொல்ல, ஸ்ரீராமா ? நீ மனதிற்றரிப்பாய்.

௰. இருக்குவேத மகாவாக்கியார்த்த நிரூபணம்.

ஞாதாவும் திரிஸ்யமும் கூடுங்கூட்டத்திலுண்டாகின்ற ஞானசுகமானது, பிரிவுபடாத ஆத்மஞானத்தி லுண்டானதாம் ; அவ் வாத்மஞானசுகத்தை, விரும்பவேண்டுமென் றொரு சித்தர் சொன்னார்.

௧௧. எசுர்வேத சாமவேத மகாவாக்கியார்த்த நிரூபணம்.

—காண்பனவும் ஞானமும் வாசனையோடு நீங்கச்செய்து, உயர்வான பார்வைக்கு முதற்பிரகாசமாகிய அவ் வாத்மஸ்வரூபத்தை தியானஞ் செய்வோமென் றொருசித்தரும், நிலையானகுணமுடைய சத்அசத்தென்னும் இரண்டினுவான வியாபகத்தை யடைந்து முடிவில்லாததாய் மாட்சிமையான ப்ரகாசங்களுக்கெல்லாம் ப்ரகாசஞ் செய்விப்பதாகிய வாத்மஞானஸ்வரூபத்தை சிந்திப்போமென் றொரு சித்தர்சொன்னார்.

௧௨. அதர்வணவேத மகாவாக்கியார்த்த நிரூபணஞ்செய் திவைகளைத் தவிர வேறனுபவங் கூடாதெனல்.

— நானென்று சகல வாத்மாக்களிடத்துமிருந்து சதாகாலமுஞ் சொல்லுவதாய் ப்ரகாசமாக விளங்காநின்ற ஆத்மஞானமாகிய வஸ்துவை சிந்திப்போமென் றொரு சித்தர்சொன்னார். விளங்காநின்ற தனதுளத்தி லெழுந்தருளியிருக்கும் தெய்வத்தைவிட்டு வேறானதெய்வந்தேடுதல், கையிலிருக்குங் கவஸ்துவாத்தினத்தையெறிந்து சங்குமணிதேடுகின்ற ஆசையையொத்திருக்கும்.

௧௩. நிராசையுள்ளவர்க் கிவ்வனுபவங் கிடைக்குமேயன்றி யஃதில்லாதவர்க்கின்றெனல்.

— முடிவில்லாத வாசையென்கின்ற விடவல்லியின் காட்டையெரித்துமிருந்த விச்சைகளியாவையும் கெடுத்தவர்களுக் கல்லவா இவ் வாத்மவிலாபமானது கிடைக்கும் ; தீமையான வஸ்துக்களைத்திலும் முன்னும்பின்னு மின்ப -

† இ-ம். மகான்களனுபவஞ் சனகனுக்குச்சிரவணமாயிற் றென்பதாம்.

மில்லாம லிருக்கின்ற குற்றத்தைப் பார்த்திருந்து
திரும்பாத பாவனையினால் பந்தப்படுபவர்கள் கழு
தையேயல்லாமல் வேறொன்றுமல்ல — எழும்பியெ
கச. மனதுவிடயசுகத்தை நீக்கிப் பிரம சுகத்தையடைய வேண்டுமெனல். ழும்பிச் சீறுகின்ற இந்திரியமென்னுஞ் சர்ப்பங்களை
மனதினிடத்தில் உறுதியானவிவேகமென்னுந் தண்
டினால் தேவேந்திரன் வச்சிராயுதத்தைக் கொண்
மலைகளைப் புடைப்பதுபோல, கெடும்படியாகவடிக்
வேண்டும். உபசாந்தத்தினும் சமபாவத்தை யடை
ந்து துன்பமில்லாததனமான து, முழுதுஞ் சுகாகா
மான தனதாத்மஸ்வரூபஸ்திதியைப் பெறும் ; இத
வேமோக்ஷமென்று பலசித்தர்சொன்னார்கள்.† —லெ
கரு. அவ்வநுபவம்விளங்கு நிமித்தம் விசாரத்திற் காரம் பித்தல். ளிவுடைய சித்தர்குழாங்கள் விளங்கமாகப்பேசிய
னுபவார்த்தங்களை தெளிவாகக்கேட்டு, செருக்குகி
றகொடியகோபமுள்ள கருடனது சத்தத்தைக் கே
ட சர்ப்பத்தைப்போல சனகாரசன் கலக்கமுற்று, (
ளிர்ச்சிபொருந்தியசிங்காசனத்திலிருந்து தனதரச
மனைக்குவந்து, மந்திரிமுதலிய யாவர்க்கு முத்தர
கொடுத்து, தனது வீட்டிற்புகுந்து குளிர்ந்த சன்
ச்சாரத்தினாற்செய்த மேலுப்பரிகையில் தனியனாயி
ந்து முன் சிரவணமான அருத்தத்தை மிகவும் விச
ரிக்கத்தொடங்கினான்.¶ — பறக்கின்ற பக்ஷிகளி
கசு. லோகாசார தூடணம். றகைப்போல சதாகாலமும் பறைத்தலைந்து நசிக்
ன்ற சகத்தினடையைப்பார்த்து வாய்விட்டுழு
சொல்லத்தொடங்கினான். மிகவுநைந்து அவத்தை
களிற் சுழன்று சஞ்சலப்படு மிச் சகத்தினிடத்தி
நான் அதிகரிக்குமயக்கத்தினால் பெருங்கல்லின் ம
றிவிழுகிற பொடிக்கற்களைப்போல், அந்தோ! சுழ
றுவருந்திவேன்.— ஒருகாலமும் முடியாமலிருக்கின்
கஎ. ஆயுள்தூடணம். காலத்துவமான இதனிடத்தில் என்னனிக்கைய
ள எனதாயுளென்னு மற்றுமுருமானது, ஒருசுக
நேரமுமில்லை ; இத்தாயுளை மிகவும் பெரிதாகநி
யித்து வலிமையுள்ள வாசையினிடத்தில் விழுந்த
யான் றளர்ச்சியடைவதென்ன, தாலபத்திரிறும் (
ட்ட என்னைப்போல இழிவுள்ளவர்களார், ஒழுங்கி

---

† இ-ம். மிட்காமபுண்ணிய பரிபாகத்தினால் சித்தசுத்தியும், அச்சித்தசு
யாற் சாதனசதுஷ்டயமும், அச்சாதன சதுஷ்டயத்தால் முத்தியை யடை
தற் கதிதீவிரமுமுண்டா யேகாந்தனாயிருக்குஞ் சமயத்தி லாதிவாகிக சரீரி
னசித்தர்களுசாவிக்கொண்டிருந்த மகாவாக்கியார்த்தங்க ளவனுக்குச்சிரவ
மாய் அதனான்மனனநிதித்தியாசனஞ் சமாதிசாக்ஷாத்கார முண்டாகும் பெ
ட்டாத்மவிசாரத்தை யறிவே குருவாய் நின்றுணர்த்தியதாம்.

¶ இ-ம். ஆத்மாநாத்ம விசாரணைசெய்யத் தொடங்கினதாம்.

கஅ. இராசபோகதூடணம்.

லாத ஆயுளை கனமாக கூறத்தக்கதோ சீ, சீ, — அளவில்லாத அண்டங்களில் நானுருகின்ற பூமியைப்பார்க்கு மளவில் அணுவளவுமில்லை ; துன்பம் பொருந்தாநின்ற இச் சகத்தை பெரியதாக விரும்பி, நிற்கின்றதே யாச்சரியமாச்சரியம், இமைப்பில் இனிமையாகியும். உதாரமாகியும், செய்யப்படாததாகியுமிருக்கின்ற பொருளிதுவென்று சொல்லும்படியான பழமையாகியசகத்தில், ஒருவஸ்துவை யாவது கண்டிலன் ; இத்தொடர்பாகியதன்மை என்னவதிசயம்.

கக. போகதூடணம்.

— மேலானவர்களுக்கு மேலாயிருப்பவர்களும் தினங்களினுல் கீழ்ப்பட்டவர்களுக்குங் கீழாவார்கள், இப்படி நிலையில்லாத செல்வத்தை உறுதியாக நினைக்கின்றமனமே ? இன்னினைப் பென்னகாரணம். நீங்காத மகாபோகங்களும், மகான்களும், சுற்றத்தோடும் உண்டாகியுண்டாகி முற்காலம் சஞ்சலமுற்றிறந்தார்கள் ; இப்பொழுது இவ்விதத்திலுள்ள வஸ்துக்களனைத்திலும் நிச்சயமென்ன.

உ0. பிரமன் முதலியோர் பெருஞ்செல்வதூடணம்.

— பூலோகமும், அதையாளு மரசர்களும், அவரது செல்வங்களும், நசித்தவைகள் நுட்பமான மணலுக் கொப்பாகும் ; தெய்வலோகமும், அதற் கரசராகிய தேவேந்திரர்களும், அவரது செல்வங்களும், மரித்தவைகள் ஆகாயத்தின் மீன்களையொத்திருக்கும் ; எண்ணிக்கையுள்ளசகங்களும், பிரமர்களும், அண்டங்களும், சிவகோடிகளும், நசித்தநதளவில்லை ; வருத்துமனமே? பார்க்கப்பட்டவைகளெங்கே, உனது வாழ்க்கையினது நிலையெங்கே.

உக. காலதூடணம்.

— ஓர்பொருளாகச் செல்லாதமாயையென்னும் இருண்டவிராத்திரியில், தேகாகாரமயக்கமென்னுங்கொடிய நீண்டசொப்பனமாகிய மித்தையில் ஆசையற்பம்வைத்தேனுயின் கற்காத கீழ்மகனுனேன், சீ, சீ, யானெப்போதும் காண்கின்றகாலங்களனைத்தும் நசித்தேபோகும், நசியாமலொன்றுவது நன்மைபொருந்திய வழகுள்ள காலத்தைப்பார்த்திலேன்.

உஉ. தனதூடணம்.

— மத்தியிலாவது, அந்தத்திலாவது, ஆதியிலாவது, நன்மையாகிய வஸ்துக்களொன்றுவது, பூமியிலில்லை ; உண்டான வஸ்துக்களியாவும்நாசமென்னுமலத்தினுல் பூசப்பட்டதல்லவா, தினங்கடோறும் கடுமையான பாவவிருத்திகளையும் நாள்கடோறும் வருத்துகின்றதுன்பங்களையும், நாள்கடோறும் ஓர்வரம்பின்றிய தீமைகளையும், மூடர்கள் சரீரநடனத்தாற்செய்கின்ருர்கள்.

உங. புறப்பொருளை யியதிகளைந்தித்தற் காதாரமான புறம்பிலு

— பாலப்பருவனுய் அஞ்ஞானத்திலமூழ்துவான் ; நல்லவெவ்வனப்பருவனுய்ஸ்திரீகளால் மிகவும்வருத்தப்படுவான் ; மூப்புப்பருவமுடையவனுய் சம்சாரத்தினுல் தளர்ந்து மரணமடை

ள்ளதேகத்தைநியதி செய்வான். அதன் பருவங்களைத் துதித்தல்.

வான் ; மேலிவன் எந்தக்காலத்தில் என்னசற்கிருத்தியத்தைச்செய்வான் ; மாயையினடனே யிருந்தவிதமென்ன, சகங்களனைத்தும் நடனசபையாகவும், இந்திரியம் பலவாத்தியங்களாகவும், மனப்பசாசம் நடனஞ்செய்யும். —

உச. அறன் பொருளின்பத்தை நோக்கி யாவையுங் குற்றமுள்ளவஸ்துக்களெனத் தள்ளுதல்.

சத்தினதுசிரசின்மேல் அசத்து வீற்றிருக்கும், சகத்திலெப்பொழுதும் தெளிந்த நல்ல தருமத்தின்முடியில் சதாகாலமும் பொல்லாங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் ; இகழ்ச்சியற்றவின்பத்தினதுசிரசின்மேல் துக்கங்களிருக்குமேயானால், இக்குறிப்புள்ள எனக்கு கொள்ளத்தகுதியான குற்றமற்றவஸ்துவேது —

உடு. மனமே சுகதுக்கமாமென்பதை விசாரித்தல்.

கண் விழிக்கின்றதும், மூடுகின்றதும், சகத்தினுற்பத்தி லயமாகப்பெற்ற மேலான பிரமாதிகளுண்டா யிருக்கின்றதால் நிந்திக்கப்படாத அற்பன்மையுள்ளவர்கள் முன்பு, என்னை யொத்தவர்கள் என்னவென்று சொல்லப்படுவார்கள் ; இழிவுசொல்லுதற்கரிதாயிருக்கின்ற அதிசயமான சம்பத்துகளும் மனதுவருந்தினல் ஆபத்துக்களாம், நீக்குதற்கரிய அதிசயமானவாபத்துகளும், மனதுவிரும்பினல் சம்பத்தாகும். —

உசு. மாயாகாரண மனதே யாமென்பதை மன்னித்தல்.

வெப்பமுள்ள சம்சாரவாழ்க்கையையல்லவா துன்பங்களனைத்திற்கும் உற்பத்திஸ்தானமாய்ச் சொல்லப்படுகின்றது ; அம்மா ! இந்தச்சகத்தினிடத்தில் முழுகுகின்ற வுயிர்களுக்கு இன்பமுண்டானதெப்படி, அஞ்ஞானமாகிய சம்சாரமென்கின்ற விருக்ஷமானது வினைபத்திரபுட்பக் காய் கனிகளாலும் அளவில்லாமல் வளரும்படியாக இந்த மயக்கஞ் செய்கின்ற மனமே வேராகும் ; இம்மனதுதான் சங்கற்பமென்று சொல்லப்படும். —

உஎ. மனதை நிக்கிரகிக்கக்கா ளிப்படுத்தல்.

சங்கற்ப நாசத்தினலாநுவாக மனோநாசம்வந்தெய்தும் ; கேடற்ற வேரான மனமானதிறந்தால் பிறப்பிறப்பென்கின்ற விருக்ஷமுநாசமாகும் ; இவ்விடத்தில் ஆத்மரத்தினமாவோவென்னைத் திருடுகின்றசோரனைப் பார்த்தேன், பார்த்தேன், இவனுடையமானது மனமாம், வளராநின்ற இந்தமனதினல் வெகுகாலந்துன்பப்பட்டேன், இப்போதுகெடுப்பிப்பேன் —

உஅ. மனதை யடக்குங்காரணந்தெரிதல்.

இவ்வளவுகாலம் மனமென்கின்றமுத்தைச் சிக்ஷையென்னும் தமர்செய்திலேன், இப்போது சிக்ஷைசெய்து பொருந்திய விவேகமென்னுஞ் சூத்திரத்தினல் அழகாகக் கோவைசெய்துதரிப்பன், சகலமுமுணர்ந்த சித்தர்களாகிய வாசாரியாரால் யாவையுந்தெரிந்தேன் ; சுத்தமான பிரமாநந்தத்தைத் தெரிவிக்கின்றசுகபோதமாகிய ப்ரகாசத்தையடைந்தேன் ; மெதுவாக இவனொன்றும் நானொன்றும் இவ்விடத்தினை வென்னவென்று மகத்தியத்தை மனதிற்கெடுத்தேன் ; திரும்பவுந் தே

உகூ. சுகபோதந் தானு யிருக்கின்ற சமாதி யடைதல்.

டேன்," — என தாத்மஞானத்தைப் பேதஞ்செய்யும னமென்கின்ற பெரிதானசத்துருவை யிருந்தபலத் தினல் பிளந்துவெற்றியடைந்தேன்; என்னை வாதனை செய்த துன்பங்களனைத்தையும் போக்கினேன்; உப சாந்த வாழ்வையடைந்தேன்; இப்படிசாதிக்கப்பட் டவிவேகஞானமே உன்னைத்தொழுதேனென்று, ச னகராசனானவன் என்னைக்கெடுத்த மனோசஞ்சலங்க ளனைத்தையுங் கெடுத்து தானே சித்திரப்பதுமை யைப்போலச் சமாதியிலிருந்தான். — மௌனமாய்ச்

௩௰. சமாதியிற்சுகம் பெற்றுச் சகத்தில் வெளிப்படல்.

சித்திரத்தைப்போல வெகுநேரஞ்சமாதியி லிருந்து, சனகராசன் நாசமானமனதை திரும்பாத நல்ல வுப சாந்தமுள்ள பூரணமனத்தினல் சகத்தின்ரூபத்தை பொருந்திப் பார்த்தான், முயற்சியாற் செய்யப்பட் ட பொருளியாது, கைவசமாகத்தக்க பொருளியா து, குற்றமுள்ள கற்பனையாது, குறிக்கும்போ தெனக்கி யாவுஞ் சுபாவஞானமாம். — பரிசுத்தமாய்

ஙக. சாக்ஷாத்காரவநுபவ விலாசங்கூறல்.

ஆத்மஞான ஸ்வரூபமாகிய எனதுஸ்வரூபத்தை யல் லாமல் வேறுபொருள் தோற்றக்கண்டிலேன், நான் வாராதவஸ்துக்களை விரும்பேன், வாராநின்ற வஸ்து க்களியாவையும்வெறுக்கேன், சதாகாலமும் தன்னி லையிலிருக்கின்ற எனதாத்மஞானஸ்வரூபத்தில் திர மாயிருப்பேன், சொன்னபடி வந்து வருகின்றதோ அது வரக்கடவ தென்றுசொல்லி பிரமானந்தத்தி ன்முழுகி சனகராசன் றெருமைப் பட்டான்.—

ஙஉ. சகசாநிஷ்டையிற் சேவன்முத்தனுய்ச் சஞ்சரித்தல்.

ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற ப்ரகாசத்தையுடைய சூரியன் தினங்களை இச்சாவெத்தனமில்லாமனடப் பிக்கின்றதுபோல, அடிக்கடிவந்து தானேயுண்டாகி யயிருத்தியங்களை பற்றில்லாமற் செய்வோமென்று சனகராசன் சிந்தித்து, நிமையே வேயமாகவருகின்ற எதிர்காலத்தையும், இறந்தகாலத்தையும், அற்பமா கினுஞ் சிந்திக்காமல், ஜனமுள்ள வர்த்தமான காலத் தின்றொழிலில் ஒருநிமிடநேரத்தில் நகைத்துகேலோடு சஞ்சரிக்கத்தொடங்கினன் ¶ — சித்தர்களாற்சொல்

ஙங. சனகராநுபவத்தைக் கூறி யிவ்வநுபவம் வருவ தாத்ம விசாரத்தா லன்றி யேனைய வற்றாற் கூடாதெனல்.

லப்பட்ட ஆத்ம விசாரணையினல் சனகராசனன வர் அடையத்தக்க வாத்மலாபத்தை அடைந்ததே யல்லாமல், உபசாந்தமுள்ளமனது வேறொன்றினல் வந்ததன்று. தாமரைக்கண்ணனையுடைய ஸ்ரீராமா! கு ற்றமற்றதாயும் அழகாயு மிருக்கின்ற தனதாத்ம விசாரணையினல் பரமபதத்தை யடைவதே யன்றி, ஆசாரியரில்லாத னர்செய்யுங்கிரியையால் ஆத்ம

¶ இ-ம். சனகராஸ்யீக மாயாசித்தர் வாக்கியங்களைக்கேட்டுச் சகுணாகப்பெ ற்ற ஸ்வானுபவத்தாற் சர்வம் பிரமமயமா மென்பதை யுணர்ந்ததுவாக விளங் கினரென்பதாம்.

௫௪. இட்டா மசன்மம்வேண்டுமெனல்.

ஞானஸ்வரூபத்தை யடையலாகுமோ. — ஆத்மாவுக்குப் புறம்பான பதப்பிராப்திகளைவிரும்பி முயற்சிக்கின்ற கருமத்தை பூமியின் கண்ணுள்ளவர்கள், விசேடமான சுகபோதமானது மிகவு முண்டாகவேண்டுமென்று முன்புசெய்தா லாத்மலாபமாம், அச்சமாகியவாபத்துக்கள் விளைகின்றபூமியாயிருந்து துன்பசமுத்திரமாய் பயமான விஷவிருக்ஷங்களுக்கு விதையாயிருக்கின்ற அஞ்ஞானத்தைக் கெடுக்கவேண்டும். — ப்ரகாசிக்கின்ற சிந்தாமணியாகிய இருதயமென்னும்பெட்டியில் இருக்கின்ற ஞானமானது, கலக்கமில்லாத ஞானிகளுக்கு, சித்திக்கப்பட்ட பொருள்களைகற்பகவிருக்ஷத்தைப்போல க்ஷணத்திற்கொடுக்கும், ப்ரகாசிக்கின்ற ஆத்மவிசாரணையைப் பெற்று அறியாமைகெட்டு சுகபோத முதயமானவர்களை, ப்ரகாசிக்கின்ற வச்சிரகவசந்தரித்தவர்களை பாணங்களைப்போல, இராகத்துவேடமுதலிய விகற்பந் தாக்காது. — பிரமசூரியனைமறைத்து களங்கமாயறிவின்றிமதர்த்து விரிந்து திரும்ப வொணாதி யிருக்கின்ற அகம்பாவமென்னு மேகமானது, ஞான மென்னுஞ் சண்டமாருதத்தினால் சின்னாபின்னமாகும், மேன்மையான பரமபதத்தைவிரும்பினால் தனது மனதின் கண்ணுள்ளவிச்சையை முன்னங்கெடுக்கவேண்டும்; பலமானபூமியை முந்தினதாகவுழுதல்லவா விளையாநின்ற தானியலாபத்தை யடைகின்றார்கள். ‡—

௫௫. அக்கிட்காமத்தா லுண்டாயின விசாரணையின் பலனைக் கூறல்.

௫௬. அவ் விசாரணையால் அகங்காரநீங்கிஞான முதிக்கு மெனல்.

சனகராசன்கதை முற்றிற்று.

புண்ணியபாவனன்கதை.

அவதாரிகை.

முன்கதையிற் சிதானந்தாகார மோக்ஷமாமென்பதைவெளியிற் சித்தோபசாந்தியைக்கூறி, இவ்வுபாயம் கொஞ்சம் வருத்தத்திலும் வருமென்பதையறிவிக்கு நிமித்தஞ் சகோதரர்களைப் போதித்தவுத்தலனுபவமுதித்த புண்ணியபாவனன்கதையை நிரூபிக்கிறார்.

௧. இப்பிரமாணுபவமாயாநாசத் ததிக்கு மெனல்.

மோகமென்னும் வற்சநாபிக்கொடியானது உண்டாகி வளர்தற்குக்காரணமாகியும், துக்கமென்னுஞ் சர்ப்பமானது தனித்திருந் தாசாகூதி செய்வதற்கொப்பற்ற விடமான தேகாதிகளை நானென்று பார்க்குமஞ்ஞானமானது ஒன்றானவாத்மஞான முதயமாகு ல்பவிக்கும். — இந்தவுலகம் அசத்தென்பதை எப்பொழுதுங்கண்டு நீக்கி தண்மையாகப் பார்க்கின்ற

௨. மாயா நாசவுபாயங் கூறல்.

‡ இ-ம். ஞானமுத்திக்குங் கிரமங்களை முறையேயுணர்த்தியதாம்.

வர்கள், சனகராசனைப்போல ருட்சுமவறிவினால் தனிமையானபரமார்த்தத்தை பருவகாலத்திலறிவார்கள். அஃதன்றி, திரவியங்களினாலும், மானிடர்களினாலும், கிரியைகளினாலும், வானவர்களினாலும், வரமாட்டாது. — பிறப்பிற் பயந்தவர்களுக்கு தங்கள்முயற்சியேகதியாம்; இவ்விடத்திருடோறும் இவனுனென்கின்ற அற்பவுணர்வு கெடுமானால் களங்கமில்லாததாய் சகத்தனைத்துமான விசாலஞான முண்டாயிருக்கும், மனது விசாரணையைப்பொருந்த தனதுமேலானவாத்மஞானந் தெரிசிக்கவரும். — பற்றுதலும் விடுதலுமென்றுசொல்லப்பட்ட விரண்டிடப்பற்றுவதும், விடுவதும் பொருந்தினவவ்விரண்டும், மனதின்வடிவமாய் அதுவேமகாபந்தமன்றிவேறோயில்லை, மூகிர்ந்த விராகத்துவேடங்களால் வருமாசையையும் துன்பத்தையு நீக்கி நிறைந்தவிருப்புவெறுப்பை கெடுத்துச் சலியாதிருப்பாய். — மயக்கமில்லாமையும், அகித்தமில்லாமையும், அஞ்ஞானமில்லாமையும், துன்பமில்லாமையும், வேண்டுந்தொழிலில்லாமையும், நீக்குந்தொழிலில்லாமையும், இயக்கமில்லாமையும், ஒருவிகற்பமுமில்லாமையும், அச்சமில்லாமையும், வாட்டமில்லாமையும், பகையில்லாமையும், குறைவொன்றுமில்லாமையும், கீழ்மையில்லாமையும், கொடுமையில்லாமையும், வஞ்சகமாய்ப்பேசலில்லாமையும்—வீடுபற்றிரண்டையுநீக்கின சத்துக்களிடத்தில், வேண்டுவாதனைகளில்லாமல் முன்சொல்லிய குணங்களானவை பொருந்தியிருக்கும். வலிமையுள்ள சிங்கனொன்றைந்து நூக்கிரத்தால் கட்டுப்பட்டு, பசைகாரத்தினினடயிற்பொருந்த மயக்கமென்னு மச்சங்களைப்பிடிக்கின்ற பெரிதாகிய வாசனையென்று சொல்லப்பட்டவலையாம். — வாதனையென்கின்ற இந்தவலையை ஞானமென்னுங் கத்தியினாலறுத்து, அடிக்கின்ற கூற்காற்றினால் சிதறுகின்றமேகத்தைப்போலமனதிறந்திருப்பாய். விருக்ஷத்தை கோடாலியினால் கெடுப்பதுபோல களங்கமானமனதை பரிசுத்தமனதினால் குற்றமில்லாமற்கெடுத்து, மேலான பாமபதத்தில் இடமாகவிருப்பாய். ‡— போதல், வருதலும், உறங்குதல், விழித்தலும், இருப்பதும், நிற்பதும் ஆகியசகத்தொழிலனைத்து மிச்சையென்று அழுத்தமாய் அகத்திச்சையை விட்டுவிடுவாய்; அலைகின்ற மனமானது, இயல்பானவாசனையினால்ஞானத்தின்பின்செல்லுதல், மாலிசவாசனையினால் கேசரியைத்தொடருகின்ற

க. முயற்சியாற் பேதஇருஷ்டி நீக்கி ஆத்மதரிசன முண்டாமெனல்.

உ. விருப்புவெறுப்பில் பேதநீக்கிய சைவற்றிருக்குமெனல்.

௩. அச்சமதிருஷ்டி. யின் குண முணர்த்தல்.

௪. விருப்புவெறுப் பறும்படி வாசனைத்தியாகம் வர வேண்டுமெனல்.

௫. வாசனைகாசமுபாயங்கூறல்.

௬. பின்னும் வாசனையைநீக்க வேண்டி. வைப் புறுத்திக் கூறல்.

‡ இ-ம். ல்வாழுபவமுகித்தற் சஞ்ஞானமுதலிய வாசனையை நீக்கு முபாயத்தை யறிவித்ததாம்.

கூ. மனோநாசத்தில் வாசனாக்ஷயமு முத்தியுமுண்டாமெனல்.

பூனையை யொப்பாகும். — சிம்மத்தின்வீரத்தினால் கிடைத்த ஊனத்தினுகின்ற பூனையைப்போல, தொடர்பாகச் செல்லுகின்றமனதும் அறிவினாலுண்டாகிய விடய வஸ்துக்களைப் பிடித்துக்கொள்ளும். விஸ்தாரமாகக் காணப்பட்ட திரிஸ்யத்தை பிடிக்கில் மனநாசமாகாது, பந்தநீங்காது, இடங்கொண்ட திரிஸ்யத்தை நீக்கினால் மனோநாசம்வந்து நிருவாணமாகும்.—

க0. ஆத்மதரிசனமறிவித்தல்.

நான் இவைகளென்பதாகிய இரண்டுமில்லையென்று சிந்தித்து மகாமேருவைப்போல ஸ்திரமாயிருப்பாய், களங்கமற்ற வாகாயத்தைப்போல நின்மலமன துடையவனாய், நன்மையானமனதில் ஆத்மாவும் சகமுமாயிருக்கின்ற ஞாதாவும், ஞேயங்களின் மத்தியில் மேலாகவிளங்கிய ஞானமென்கின்ற வுனதாத்மஸ்ரூபத்தை, நீவிடாமற் றெரிந்து கொள்வாய்.—

கக. இதுவுமது.

இனிமையான வஸ்துவும் இனிமையைக் கொள்கின்றவனுமாகிய இவ்விரண்டையுநீக்கி, இவைகளின் மத்தியில் தனிமையாகப் பிரகாசிக்கின்ற இன்பத்தையாராய்ந்து ஆத்மஸ்வரூபமாயிருப்பாய்; பலவற்றைப்புசிப்பவனும் பொசிக்கப்பட்டவஸ்துவும் இரண்டின்மத்தியில் எப்போதும் பற்றில்லாம லிருக்கின்ற அதைப்பிடித்து அதற்குள்ளிருப்பாய் —

கஉ. இச்சையு மகம் பாவத்தையுநீக்கவேண்டுமெனல்.

ஆசையினாற் கட்டுப்பட்டா லுயிர்வாழமாட்டார்கள்; கயற்றினாற்கட்டி லுயிர்வாழ்வார்கள்; ஆசையினால் இச்சாபந்தத்தை சங்கற்பநாசத்தாற் கெடுப்பாய். நானென்றுசொற்லப்பட்ட பாவனையை நானென்று சொல்லப்படாத வொருகத்தியினாற்கெடுத்து குற்றமற்ற ஆத்மபாவனைசெய்து எழுபிறப்பில்லாத மோக்ஷத்தையடைந்து, § — சகலவுயிர்களுக்கும் பயமில்லாதநிலையில், ஸ்ரீராமா? இருப்பாயென்றுவசிட்டர்சொல்ல,

கங. அகங்காரத்தியாகத்திலும் தேகத் தியாக நன்றெனல்.

தொழில்கள் தொடர்ந்திருக்கின்ற நானென்னும்பாவனையின் ஆசையைத் தீர்ப்பாயென்று சொல்லிய வுமதுவாக்கியத்தை கருதுமிடத்தில், மிகவுமாழமாம்; கொடியவகங்கார நாசத்தை செய்வதைவிட சரீரமென்னுங்காரண மொழிக்கின்றேன். —

கச. அகங்காரத் தியாகத்துக் கிரண்டுபாய முண்டெனல்.

நானென்பதைக்கெடுத்தால், சரீரமும்வேரோடறுத்த விருக்ஷத்தைப்போல நசிக்குமென்று, உயர்வான ஸ்ரீராமன்சொல்ல, வசிட்டமாமுனி சொல்லுவார். ஸ்ரீராமா? அகங்காரவாசனையை நீக்கும்விதம் பிரகாசிக்கின்ற தேயமென்றும் ஞாயமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுவிதமாக ஓதியுணர்ந்தவர்கள் சிந்திப்பார்கள்.

§ இ-ம். மனோவாசனை யகம்பாவமென்னு மிரண்டினையு நீக்கி வீடடையவேண்டுமென்பதாம்-

௧௫. அவ்விரண்டில் தேயத்தியாகமறிவித்தல்.

இந்த நமது பொருளுக்கு ஜீவிதமாம், இந்தவஸ்துக்கள் நமக்கு ஜீவிதம், செல்வமான இப்பொருளையல்லாமல் நாமென்பதில்லை, நம்மையல்லாமல் இடை-த்தவிப்பொருள்களில்லை என்னுமனத்தி னிச்சயத்தை நீக்கி புத்தியால்விசாரித்து நாமும் விடயங்களும் வேறுவேறென்று. — யாதும் பொருள்களுக்குடையோமல்ல பொருளும் நம்முடைய தல்லவென்று தெளிவடைந்து உள்ளகுளிர்ந்து, யாவையும் லீலையாக செய்கின்றமனதினாலும், பற்றில்லாத நிச்சயத்தினாலும், வாசனையையிழக்கின்றதே, அருளையருளுகின்ற மோக்ஷத்துக்குச் சாதனமான ஸ்ரீராமா ? தேயத்தியாகமென்றுணர்வாய். ‡ — தன்னுடைய வாசனை கெட்டு அனைத்தையும் சமமான புத்தியினுற்பார்த்து நானென்று சொல்லப்படாத சரீரத்தைத்தள்ளினுல் இவ்வாசனுக்ஷயமே களங்கமில்லாத ஞேயமாம். அகங்கார வடிவான சொல்லப்பட்ட வாசனையை முறிந்து லீலையாகவிட்டவர்கள் மோக்ஷசத்துக்கள் ¶—

௧௬. இதுவுமது.

௧௭. ஞேயத்தியாகங்கூறல்.

இராகமற்றவர்களே ஞேயத்தியாகத்தைச் செய்கின்ற சீவன்முத்தர்களாம். கிரியைகளோடும் மூலங்கெடும்படி வாசனையைக் கெடுத்து மனஞ்சாந்தமடைந்து செய்வமையான ஞேயத்தியாகஞ் செய்தவர்கள் குற்றமற்ற விதேகமுத்தராம். வெற்றியையுடைய ஸ்ரீராமா ? இந்தவிரண்டினுடைய தியாகமும் ஒன்றாய்க்கொண்டு சமானமாகும். — தேயத்தியாகமும், ஞேயத்தியாகமும், சீவன்முத்தர் விதேகமுத்தரிடத்தில் பொருந்தியிருப்பன ; தேயத்தியாக ஞேயத்தியாகங்கள்பிரமத்தையடைந்தன ; தேயத்தியாக ஞேயத்தியாகங்கள் துன்பமனைத்தையுநீக்கின ; தேயத்தியாகஞேயத்தியாகங்கள் தேடுதற்கரியமோக்ஷமாம். §—

௧௮. இவ்விரண்டு தியாகத்தின் பெருமைகூறல்.

௧௯. இதுவுமது.

சூழ்ந்திருக்கின்ற சகதுக்கங்கள் தன்னைத்தொடர்ந்தால், ஒருபோதினும் அழுந்துதலும் மிதத்தலுமில்லாத அவர்களே சீவன்முத்தர்களாம். மேலானகளிப்பும், பயமும், கோபமும், தரித்திரமும், அழுக்காறும், துன்பமுமாகிய எழுநிலையுடைய பிணைவகளைப் பாராதமனத்தோனே சீவன்முத்தனாம் — அழுக்கியவத்தையைப்போல சாந்தமான பாவனையிருக்கினும்பக்குவமானமனதினுல் நிர்க்கசொப்பனத்திப்பறுபவர்கள், எப்போதும் நிர்த்துக்கலையணிந்து பூர்ண

௨௦. சீவன்முத்த இலக்கணங்கூறல்.

௨௧. இதுவுமது.

‡ இ-ம். தேகத்தின் சம்பந்தங்களையொழித்தல் செடாசனுராசமே தேயத்தியாகமாம்.

¶ இ-ம். தேகோவாசனையைக் கெடுப்பதே ஞேயத்தியாகமென்பதாம்.

§ இ-ம். தேயத்தியாக ஞேயத்தியாகமென்னு மிரண்டும், சீவன்முத்தி விதேகமுத்திகளாகுமென்பதாம்.

சந்திரனைப்போல, சத்துக்கள்விரும்ப முழுதும்பிரிவில்லாதவர்களே சீவன்முத்தர்களென்று சொல்லத்தகுந்தவர்கள். — புறம்பிலுள்ள வஸ்துக்களின் பற்றைவிடுத்தால், அகப்பற்றை திருஷ்டினி யென்று சொல்லுவார்கள், மறப்பின்றி வஸ்துக்களி லிருக்கிற

உஉ. இச்சையைமுழுதுங்கெடுக்கவேண்டுமெனல்.

சகல இச்சையையு நீக்கினல், முத்ததிருஷ்டினி யென்று சொல்லுவார்கள் ; திரபாயெனக் கிதுவாகுமென்று உண்டாகின்ற பாவனையே திருஷ்டினியாகும். விடுக்கக்கூடாத சொர்ன்னவிலங்காகிய இத்திருஷ்டினியைத்தொந்தமறக்கெடுக்கவேண்டும். — உள்ள

உங. இதுவுமது.

திலதென்று சொல்லப்பட்ட சமஸ்தபாவனைகளிலும் எப்பொழுதுமிகாமல் இச்சையைக் கெடுத்து, பூரணமானதுடையவனாய் பந்தவிச்சையு மோக்ஷவிச்சையுமாகிய வினைகளையும் சுகதுக்கங்களையும் முழுமையுந்தள்ளி, பரிசுத்தமுள்ள நல்லகெம்பீரமாகிய ஆத்மஞானஸ்வரூபத்திலிருப்பாய் †—துரையுமலையு மின்றிய பெருங்கடல்போல அசைவற் றிருப்

உச. ஆத்மவிசாரமுடையவர்க்குரிய-ச-நிச்சயமறிவிக்கத் தொடங்கி-க-வது நிச்சயத்தி னிலக்கணமறிவித்தல்.

பாய், மனித வடிவமுடைய ஸ்ரீராமா ? வேறொன்றையாஞ் சொல்லக்கேட்பாய், குற்றமற்ற விசாரணையுள்ளவர்களுக்கு ஆகிய நிச்சயங்கள் நான்குண்டாகும் ; பாதமுதற்சிரசந்தமான சரீரம் நான் மாதாபிதாக்கள் என்னைப்பெற்றவர்கள் என்பதொருநிச்சயம்.—உண்

உரு. இரண்டாவது நிச்சயத்தினிலக்கணமறிவித்தல்.

மையை நினையாதபடியினல் இந்நிச்சயம் கொடியபந்தத்தை யுடையதாம் ; இருக்கின்ற சகலவஸ்துக்களினும் அதீதனாகியும் நெல்லினது வாலினுஞ் சூட்சமமாகியு மிருக்கின்றவனே ? யானென்று சொல்லப்பட்ட இரண்டாவதாகிய நிச்சயமானது அடையுமானல் மோக்ஷமுண்டாகும் : இது சத்துக்களுக்குள்ளதாகும். — சகங்களனைத்துமெனது ஸ்வரூப

உசா. மூன்றுவதுநிச்சயநான்காவது நிச்சயமென்னு மிரண்டினிலக்கணமறிவித்தல்.

மும் யானழிவில்லாதவனென்று சங்கோச மில்லாமற் காண்பது மூன்றுவது நிச்சயமாம் : அதுகுறைவற்ற மோக்ஷமாம். கெடுதலடைகின்ற சகமும் அறிகின்ற யானுமாகிய சகலமு மசத்தியமே ; ஆகாயம் போல யாமெப்போது நீங்கிலமென்பது நான்கா நிச்சயமாம் : ஈதொப்பற்ற மோக்ஷமாம் —முன்புசொ

உஎ. இந்நான்கு நிச்சயத்தின் பலாபலனைக் கூறல்.

ல்லப்பட்ட நிச்சயமென்றும் பந்ததிருஷ்டினியை யுடையதாம் ; பரிசுத்தமுத்த திருஷ்டினியை யுடைய மூன்றும் சொச்சமாய்குற்றமற்ற சீவன்முத்தர்களிடத்திற் ப்ரகாசிக்கும். இம்மூன்றுக்குள் சகலமுநானென்று வொப்பற் நிக்சயத்தைப் பொருந்துவனயின்,

---

† இ-ம். முத்தர்களின் சிறப்பையும் பெத்தவிடுதியையுங் கூறினதென்பதாம்.

பின்பு மனமானது சுகதுக்கங்களையடையாது. † —

உஅ. ஆத்மாநாத்மவிலக்கணமறிவித்தல்.

சூனியமும், ப்ரகிருதியும், மாயையும், பிரமமும், சிற்ப்ரகாசமும், அறிவும் குறைவில்லாத புருடனும், ஆத்மாவும், ஈசானனும், சிவமும், நித்தியமுமானவிவைகளை பிரமமென்று சொல்லலாகும்; ஒன்றென்னு மிரண்டென்னும் விரிந்தவேற்றுமையினால் உயர்வானசகத்தையுண்டாக்குகின்ற விளையாட்டினால் பிரமசத்திவளரும்.—

உகூ. ஒன்றிலும்பற்றற்றிருக்கவேண்டுமெனல்

ஏகமென்கின்ற பிரமஸ்வரூபத்திலுள்ள ஓட்பற்றசத்தியானது, அந்தவொருமையினால் இருந்துவளருகின்றது ஸ்ரீராமா? உனதென்றும், அன்னியாதென்றும், இறந்ததென்றும், இருப்பதென்றுஞ் சொல்லப்பட்ட விடயங்களிலும் தொழில்களிலும், எப்போதும் சுகதுக்கங்கள் மனதிற் றரிக்கவேண்டாம்.—

கூ0. செவியபுது விலக்கணங்கூறல்.

எல்லாவற்றிலு மதீதமாய் பரமபதத்தைப்பிடித்து மனமானது, எப்போதுங் குளிர்ச்சியாய் சுகதுக்கங்களை யடைவதாகாதவர்கள் பிறவியையடையார்கள்; சற்குணமுள்ள மித்திரனிடத்திலும், துற்குணமுள்ள சத்துருவினிடத்திலும், சமத்துவமாகியயதார்த்தவியங்க ளுள்ளவர்களே சொல்லிய முறையிற் செல்கின்ற உத்தமர்கள் பதத்தை யடையார்கள். —

கூக. இதுவுமது.

தாழ்வு மேன்மையுமாகிய இரண்டையு நினையார்கள்; விருப்பு வெறுப்படையார்கள்; கிரியாக்கிரியைகளை நீக்கினவர்கள், தெரிந்த பிறவியிற் சேரார்கள்; அறநாகப்பாசத்தியாயவர்க்கு மின்பமானவைகளை இனிமையாகப் பேசுகின்றவர்கள், கெடாதின்ற ப்ருமஸ்துக்களில் எல்லாவற்றின் குணத்தையறிந்தவர்கள் பதத்தையடையார்கள். —

கூ௨. அனுபவியினது லீலையை நிரூபித்தல்.

தேயவாதனையைவிட்டு பூரணமாகித் தெளிந்து கலக்கமறையாமல் சிவன்முத்தியாகியபாவனையினால், அனாதாத்மஞானஸ்வரூபமடைந்து சுகானலமும் ஸ்ரீராமா? உலகத்தின்கண் விளையாடுவாய். பொய்யான இச்சையை விட்டு பற்றுதலைக்கெடுத்து, வாசனையைவிட்டு, உள்ளேசிதாகாசமாய் புறத்திலுள்ள வாசாரங்களனைத்துஞ்செய்து, எக்காலத்தும் வேண்டின ப்ரகாரம், ஸ்ரீராமா? சகலத்திலும் விளையாடுவாய்.—

கூக. இதுவுமது.

உலகத்தில் புறம்பிலுள்ள கிரியைகளிலாரம்பஞ்செய்து, தனித்த மனதில் ஆரம்பமெவ்வளவு மில்லாமல் உள்ளே செய்யாதவனாய் புறம்பிற்செய்பவனாய், ஸ்ரீராமா? உலகத்தின் கண் விளையாடுவாய். தேகமானென்றபகுத்தவகம்பாவம்விட்டு மனந்தெளிந்து ஆகாயத்தைப்போல சொச்சமாய் களங்கமொன்றுமின்றி பலசிலைங்களி

† இ-ம். முதனிச்சயத்துக்குப் பக்குவம் மற்றமூன்று நிச்சயத்துக்கு முந்திய ப்ரயோசனமாமென்பதாம்.

ன்றி, ஸ்ரீராமா! வேண்டியபடி சகத்தின்கண் விளையாடுவாய். — உரிமையுள்ள வுதாரத்தை யுடையவனாய்க் கடினமான வாசார மில்லாமல் ஆசாரங்களுக்கு எளிதாகப்பின்சென்று பலவிதமாகிய சகல வஸ்துக்களுக்கும் ஆதாரத்தைப்பார்த்து வேண்டிய ப்ரகாரம், ஸ்ரீராமா! சகத்தின்கண் விளையாடுவாய்; அறிவையுடையவனாய் நிராசையுள்ளே நிறைத்து வெளியில் காமக்கிரியைகளைத் தவிர்த்தவன்போல அகத்துளுள்ளே குளிர்ந்தவனாய் வெளியில் வெப்பமுள்ளவனாய் சதாகாலமும், ஸ்ரீராமா! சகத்தின்கண் விளையாடுவாய். † — இவனுறவன், இவன்பகைவன், இவனு னென்கின்ற இந்தப்பொய்யை, ஸ்ரீராமா! நீ சற்று நினையாதே. பயனின்மையைப்பிடித்த வற்பமனதுடையவர்களுக்கு இத்தப்ரகாரமாம்; அறிஞருக்கு உலகமுழுதும் நீங்காதுறவாகும். ஐக்கியமில்லாத சமமயக்கத்தினால் நீ பகைவனென்றும், நீ யுறவென்றுஞ் சொல்லுவார்கள்; அதனைத்தோறும் களிப்புற்ற மயக்கமான திருஷ்டியாகும்; எதார்த்த திருஷ்டியினால் சகங்களனைத்தும் பகையுமாம் உறவுமாகும். § —

௯௪. அனுபவியினது லீலையைநிரூபித்தல்.

௯௫. திருச்சுதிருஷ்டியிற் சகலமும் பிரியவடிவமாமெனல்.

இவ்வனுபவம் விளங்கும்பொருட்டு முன்னுள்ளதாகிய ஒரு கதையைக்கேட்பாய். கங்காதீரத்தில் இருடி புத்திரரும், சமானமற்ற மயேந்திரமலையினது பக்கத்தில் வாழுகின்றவர்களும், அரிய தவத்தை யுடையவர்களும், தீர்க்கதவனென்னும் ரிஷியானவர் பெற்றவர்களுமாகிய நான்கு வேதங்களையுமாராய்ந்தறிந்த புண்ணியனென்றும் பாவனனென்று நாமத்தையுடையவர்கள், பிதாவுடன் கங்காதீரத்தில் தவமியற்றுங்காலத்தில், விட்டாவியமாகச்செய்து தபோபலத்தால்காலமுதிர்ந்து புண்ணியனென்ற நாமமுள்ள புண்ணியவான் ஞானமடைந்தான். — அவன் றம்பியாகிய பாவனனென்னும் பெயரையுடையவன், ஞானமடைந்தது அரைவாசியானபடியினால், விளங்குகிரணங்களையுடைய சூரியனுதிப்பதற்குமுன்னம் அருணோதயமாக செந்தாமரைப்பூசதங்கையின் வாய்க்கொப்பாய், அறியாமையும் உண்மைஞானமுமில்லாமலூசலைப்போல அவன் வருந்துகின்றான். தவமுடைய தீர்க்கதவனென்கின்ற பிதாவானவர் விடயபோகத்திலாசைகளனைத்தினும் பற்றி நீங்கி. — காலங்காரணமாகச முசார வாழ்க்கையில் ஆசையைவிட்டு, தொ

௯௬. இவ்வனுபவ நிச்சயங்கூறி யிதைத்தெளிப்படுத்த நிமித்தம் புண்ணிய பாவனன் ஞானமடைந்த கதைத்திருஷ்டாந்தமாகக் கூறல்.

௯௭. பாவனனது பக்குவங் கூறல்.

௯௮. விதேகமுத்தியடைதல்.

† இ-ம். வாசனைக்ஷயஞ்செய்து பூரணத்துவேத்தியமாய் விளங்கியவல்லருடானுபவத்தினலுலகத்திலிச்சையானபடி சஞ்சரிக்கலாம்.

§ இ-ம். சகலசீவர்களுந் தனதம்சமாயிருக்கின்றபடியால் அவைதனக் குறவாகுமென்பதாம்.

றிலென்னுமகங்காரப் பகுதிகளுக் கிடமாகுங்கூடுபோன்ற சரீரத்தை கங்காதீரத்திருக்கின்ற மலையினிடத்தில் தானேவிட்டுவிட்டான். சங்கற்பத் தொருசுமையைச் சுமப்பவன், குறித்தவிடத்தில் கொண்டு போய்ப் போடுவதுபோல, சரீரத்தைவிட்டு ஆசைபொருந்தின பற்றுக்களொன்று மில்லாமல் புட்பவாசனை யாகாயத்திற் பொருந்துவதுபோல பிரமானந்தத்தை யடைந்தான். —

ருகூ. புண்ணியபாவனனுபவக்கூறல்.

தொழிலில்லாததாகியும், சுகமென்னுந் துன்பமில்லாததாகியும், பழமையான ஞானோதயமாகும் இடமாகியு மிருக்கின்ற தனதாத்மஸ்வரூபத்தைப்பெற்ற கெடாத சத்துவடிவமான முனியுடல்மரிக்கவும், அவனது பாரியானவள் தாமரைப்பூவிலிருந்து நீங்குகின்ற வண்டைப்போல சரீரத்தை நீக்கினாள். கண்களையொத்த மாதா பிதாக்கண் மரிக்கப்பார்த்து இனிச்செய்யவேண்டிய கருமங்களை விதிப்படி செய்யும்பொருட்டு வழிபடுகின்ற புண்ணியனெத்தனைஞ் செய்தான் ; பாவனனும் துக்கமென்னுஞ் சமுத்திரத்தி லழுந்தி மயக்க மடைந்தான். —

சா௦. இதுவுமது.

பாவனனானவன், என்னைப்பெற்றதாயே ! தாயே ! யென்பன் ; பிதாவே ! பிதாவே ! யென்பவன் ; அய்யோ ! ஐயோ ! வென்பன் ; இதென்ன ! விதென்ன ! வென்பன் ; துன்பத்துக்குச் சகிக்கமாட்டாதவனாய் நெருப்பை மிதித்தவனைப்போல வனங்களெல்லாமோடுவான் ; தனக்கெதிரிருக்கின்ற தமையனைப் பார்த்துத்தெளியான் ; மிகவுந்தளர்வையடைந்தான். தளர்ச்சியில்லாத தமையனானவன் மின்னலையொத்த சரீரத்துக்கு மரிப்பது சுபாவமேயென்று மற்றொன்றையுஞ் சிந்தியாமல் கருமத்தை விதிப்படி செய்தான். —

சாக. ஞானோபதேசங் கூறல்.

வேதமார்க்கத்தின்படி கரும நிறைவேற்றியபின்பு, துன்பத்தினால் வாய்மூடாமலழுகின்ற தம்பியைவந்தடைந்து, பூரணஞானத்தையுடைய புண்ணியனானவன் பாவனனைப்பார்த்து மனதைவருத்துகின்ற துன்பத்தை யுறுந்தாய் ? நீயே னீக்கவில்லை, பொறுமையிருந்த வுனது தந்தையானவர் உனது மாதாவோடும் அடைந்திருக்கின்ற இடத்தின் சிறப்பைக்கேட்பாய், குறைவுநிறைவு இல்லாதது எப்போதும் தனதிடமாய் தன்மயமாய் குற்றமில்லாததான மோக்ஷமென்னுஞ் சொல்லத்தக்கதாம். —

சாஉ. விட்டினிலக்கனன் கூறியவை துறப்பிப்பிக்குஞ் சங்கற்பனையையறி

யாவருக்கும் அடையத்தக்கவிடம் அப்பதமேயாகும் ; அதுவே ஞானவான்களுக்குந் தத்துவஸ்வரூபமா யிருக்கும் ; தன்னைவிட்டுநீங்காத அப்பரமபதத்தில் வாழாநின்ற பிதாவைப்பார்த்து தம்பி ? நீ தளர்வடைவது ஞாயமோ, ஆற்றினீ ரோட்டத்து

விக்கத்தொடங்குதல்.

க்கு அடையும் பள்ளத்தின்நிரளைப்போல, சநநங்க டோறும் தொடர்பாய் நீங்கின பெற்றவுனது மாதா பிதாக்களுக்கு கணக்குண்டோ, மனைவிபுத்திரர் முதலிய வுறவினருக்கு ஓரளவுண்டாமோ. — காலங்கடோறும் பெரியவனத்தில் காய்க்கின்ற கனிகளைப் போல, சநநங்கடோறும் மிகுந்தவுறவினர்களை நினைக்கின்றகாலத்தில் மரணமடைந்தவர்களுக்கு வியசனப்படவேண்டினல் கற்பகாலமட்டுங் கதறினலும், ஒருவரம்புண்டாயிருக்குமோ. உருவமில்லாத அறியாமையென்னுங் கானற்றிடலில் வாசனையென்னும் வேனிற்காலத்தில் சுழலுகின்ற வெவ்வியகானற் ப்ரவாகசலமானது சுகதுக்கமென்னு மலைகளை யடித்துக்கொண்டு வேற்றுமை யோர்வரம்பில்லாமற் பிரனும்.—மனைவிமுதலிய பந்துவும், பகையும், சினேகமும், வெறுப்புவிருப்பும் தாழ்வுமேன்மை முதலியவைகளை உருவமாயுண்டான சகமானது, தனது பெயர்மாத்திரத்தினல் மிகுந்து பரவுகின்றதே யல்லாமல், வேறென்றினலுண்டாமோ ; நல்லபந்துவாகநினைத்தால் நல்லுறவேயாவார்கள் ; பகைவராக நினைத்தால் பகைவராவார்கள் ; கொல்லுகின்ற விடமும் பிழைப்பிக்கின்ற வமுதமுமாகிய இரண்டின்குணங்களைப்போலவும் குறித்திடுகின்றபாவனை பந்தமானது கெட்டாலுண்டாகுமோ. — ஒன்றான ஆத்மாவிலுண்டாய் சகல வடிவங்களுமாகிய அறிவுக்கு, பகையென்று முறவென்றும் சொல்லுவதெப்படி ; இல்லாமற் கெடுக்கின்ற ஊன்களினலும், உதிரங்களினலும், சருமங்களினலும், கட்டியிருக்கின்ற அஸ்திக்கூடான சரீரத்திலிருக்கின்ற நாமாரென்றும் விசாரிக்கில் இருந்தவனீயே ; உன்மனதினல் சிந்தித்துப் பார்ப்பாய் ; மாசற்ற பிரம திருஷ்டியினது கிரமமாகப் பார்த்தால், நசிக்கின்ற துன்பமுள்ள நீயென்பதுமில்லை நானென்பதுமில்லை, புண்ணியனென்றும் பாவனென்றுஞ் சொல்லப்பட்டநாமும்போய் ஞானந்தோற்றும் —போன தீவுகடோறும் நீ செனித்த சென்மமானது, எண்ணமுடியாது ; இந்த நாவலென்னு மகாதீவில் முன்னங்குயிலாகப் பிறந்தாய் ; பின்பு மிருகங்களும், மேகங்களும் மலைகளும் விருக்ஷங்களும், ஊர்வனங்களும், பறவை இனங்களுமாகிய இவைகளிடத்தில் கழிந்த பிறப்பின் திரளானது சொல்ல முடியாது. அவைகளில் உனதுறவினர்களா யிறந்து போனவர்களுக்கெல்லாம் நீ வியசனப்படாததென்ன; அதுமட்டுந்தானே, இன்னமளவற்ற தேசங்களிற் செனித்து

௬௩. சகத்தின்பந்துக்களுக்களவின்றெனல்.

௬௪. பாவனையே சுகதுக்கமாமெனல்.

௬௫. பேதபாவத்தையே பேதஞானத்தைக்கூறல்.

௬௬. சகமித்தையாமென்றறிவிக்கு நிமித்தமச்சநநாந்தரங்களைக்கூறல்.

௪௭. சகமித்தையாமென்றறிவிக்கு நிமித்த மச்சகங்காட் தரங்களைக்கூறல்.

பதங்களைச்சொல்லக்கேட்பாய். — கோசலதேசத்திலும், தசார்ணவதேசத்திலும், பௌண்டரதேசத்திலும், குச்சரதேசத்திலும், துமாரதேசத்திலும், கோகன்னதேயத்திலும், போசலதேசத்திலும், ஏகயதேயத்திலும், சாளுவதேயத்திலும், அரசனாகவும் குரங்காகவும், கிருமியாகவும், கலைமானாகவும், நீர்க்காக்கையாகவும், பக்ஷியாகவும், சற்பமாகவும், கழுதையாகவும், அளவற்ற பிறவிகளை நீசமஸ்த வாசனைகளினால் செனித்தபோதிலுண்டாகிய உனதுறவினர்க்கு வியசனப்படாத ஞாயமென்ன. — அளவற்ற சனனங்கடோறும் செனித்தவர்க்கெல்லாம் மாதாபிதாக்களையென்னுமிடத்தில் விசாலமான வனத்தில் விளங்கியவிருக்ஷங்கள் கொடுக்கின்றசருகை எண்ணினத்துக்கொப்பாம். துன்பமடைய ஞாயமில்லை, கேள்குழந்தாய் ? தளர்ச்சியில்லாமல் பாவமும் பாவமுமில்லாமல் சரையுமரணமுமில்லாத உனதாத்ம ஸ்வரூபத்திற்றடையின்றி மனம்பொருந்தப் பார்ப்பாய் ; துன்பத்தைவிட்டு அறியாமையைநீக்கி யறிவில் உள்ளபடியாக வுனதாத்மஸ்வரூபத்தைக் காண்பாய். —

௪௮. இச்சனனமரணமற்ற வாத்மாவைத் தெரிசிக்கவேண்டுமெனல்.

அதை நீ காண்கின்ற ஞானதிருஷ்டியில் பலவானவிச்சையென்னும் படலமுண்டாகும் ; அதை நீக்கி, இருதயதாமரையில் சொச்சமான வுணர்வையுடைய உனதுமனதினால் உன்னுளுன்துஸ்வரூபத்தை இப்படிப்பட்டதென்று பார்த்து, மயக்கங்களனைத்தையும் இறையளவேனு மில்லாமற்கெடுத்து, நிருவாணசுகத்தை யடைந்திருப்பாய் தம்பியேயென்று, நமையன் சொன்னானென்று ஸ்ரீராமனுக்கு வசிட்டமுனிசொன்னார். † —

௪௯. தன்னைத்தெரிசிக்கி லானந்த வடிவமாவாயெனல்.

புண்ணியபாவனன்கதை முற்றிற்று.

மாவலிகதை.

அவதாரிகை.

முன்கதையில் திரிஸ்யத்தி லகம்பாவனிவிர்த்தியையுந் திருக்குவில் அகம்பாவத்தையுஞ் செய்வதனும் சர்வமுந் தன்மயமாய் விளங்குமனுபவத்தைக்கூறி, மேநிட்காம புண்ணியத்தினால் விடயானந்த மிகுதி பிரமானந்தத்தின் பொருட்டாகுமென்பதை யறிவிக்கு நிமித்த மாவலிகதையை நிரூபிக்கிறார்.

† இ-ம். மாதாபிதாக்கள் பிரிவிற்படுந்துன்பத்தை முன்னிட்டவர்களும், நாமும் மித்தையே யாமென் றறிவித்ததையறிந்த ஞானமே சர்வமுமாய் விளங்குகின்ற நமதாத்மஸ்வரூபமாமென் றுணர்ந்திக்கும்படி யனுக்கிரகித்ததாம்.

க. பாவனன் ஞானமடைதல்.

புண்ணிய முனிவன் போதிக்க ஞானம் ப்ரகாசித்து பாவனனுடைய இருதயமானது, விடியற்காலங் கண்ட ஜகத்தைப்போல ப்ரகாசிக்குந்தோற்ற மிட்ட ஞானமுடைய இரண்டுபேர்களும் சித்த புருடர்களாய் விவேகஞானத்தினது சித்திக்க வாத்மஞானத்தையடைந்து முன்சொல்லிய வனத்தில் வசித்தார்கள்.

உ. விதேகமுத்தியடைதல்.

— தங்களுக்கு வேண்டிய காலங்களைத்தும் விநோதமாக விளையாடி வெகுகாலஞ்சென்ற விதேகமுத்தியை யடைந்து திரியுமெய்யுமில்லாத தீபங்களைப்போல உபசாந்த மடைந்தார்கள். மரணமடைகின்ற சீவர்களெவர்க்கும் குணங்க ளிம்முறையைப் போலவாகும்.

ங. சர்வமுக்தனது பிரியவடிவாமென றறிவித்த வ்வனுபவமுதிப்பதற் கிச்சாத்தியாகம் வேண்டுமெனல்.

‡ —ஆசையற்ற சமமடைந்தவர்களுக்கு சமஸ்தமும் பந்துவாயிருக்குமாகுல் பகைத்தலும் விரும்புதலும் வேண்டுமோவென்ன ; ஆசையினுல் யிருந்தவாசையின் பாரத்தை விடுமேயன்றி பெருகவளர்க்கக்கூடாது மனதினு லாசையைவளர்த்தால், அது சித்தனையென்னு மக்கினிக்கு விறகாகும்.

ச. அவ்விச்சாத்யாகத்திற் சுகமுதிக்குமெனல்

— அவ்வாசையென்னு மவ்விறகுநசித்தால் சித்தையென்னு மக்கினி நசிக்கும், இதுவுண்மையாகும். தேயத்தியாகமாகிய மகாரதத்திலேறி சகலருக்குந்திக்க வுதாரமான கருணைதிருஷ்டியினுல் ஆசையினுல் மிகவும்வாடாநின்ற ஆம்பமான ஜகத்தைப் பார்த்து, ஜீவத்தையுடைய ஸ்ரீராமா? குறைவில்லாத விருப்பாய்.

ரு. இதுவுமது.

— ஸ்ரீராமா? சொச்சமேயும், ஒருமையக்முமில்லாததாயும், வியாதிகளைத்து மில்லாததாகியுமிருக்கின்ற சத்தியமான பிரமமான மிச்சயமதுவாகும். சந்தேகமில்லாமல் இந்நிலையை யடைந்தால் அறிவில்லாதவர்களாயினும், மயக்கத்தையடையார்கள். ஸ்ரீராமா? நீ இப்பிரகாரம் வாழக்கடவாய்

சு. இச்சை நீக்குதற் குரிய சாதனங்கூறல்.

¶ —நல்லவறிவும் நல்லவிவேகமும் என்கின்ற விரண்டையுமிருல் துன்பமீங்கும் ; ஒருவனையாவ தடைந்தாலும் பலவஸ்துக்களையும் உறவுகளையும் தொடர்பில்லாமல் கெடுத்து, தனது தயிரியத்தினுலல்லாமல் துன்பங்களைத்து நீங்காவாம்.

எ. நிராசையுள்ள மனதின் பெருமையைக் கூறல்.

—வைராக்கியத்தினுலும், ஞானசாத்திரங்களினுலும், மகத்துவமுதலான மேன்மையான குணங்களினுலும் வருத்தப்பட்டு மனதை யாத்மவாழ்வடையச் செய்தால், துக்கங்கள்போகும். மூன்றுலகங்களி லுண்டான செல்வங்களும் தொருக்து இலாபத்தைக்கொடுத்

‡ இ-ம். இவ்விருவருஞ் சீவன்முத்தராயிருந்து விதேகமுத்தியை யடைந்தனரென்பதாம்.

¶ இ-ம். விடயவிச்சையினது நீக்கத்திற் பிரமநிச்சயமுதிக்குமென்பதாம்.

தாலும் கைவல்லியத்தை யடைகின்ற மனதுக்கொப்

அ. மனதிற்குரிய விச்சாவிச்சையின் பலாபலனைக்கூறல்.

பென்று சொல்லமாட்டார்கள். — தன்பாதத்திலிருக்கின்ற செருப்பானது, சகங்களனைத்தும் தோலால்மூடின் தன்மையைப்போல, மனது பூரணமானால் சகலமானது அமுதமாக நிறையும். கனமுள்ள நிராசையினால்நிறைந்தமனமானது, ஆசையின்மூழ்காது; இச்சையினானிறைந்த மனமானது குறை யெப்போதுந்திராது. — அகத்தியமுனி நுகர்ந்த வுததியைப்

௯. இச்சையாற் கெடாத மனதி[illegible]வைக்கூறல்.

போல நல்லமனதைக்கெடுக்கின்ற ஆசையில்லாத மனதைப்போல பூரணசந்திரனும்பிரகாசியாது; சுகத்தைக்கெடுத்த பாற்சமுத்திரமு நிறையமாட்டாது; வாசனைபொருந்திய தாமரையிலிருக்கின்ற இலக்குமி சிறப்புள்ள முகமும் நன்மையாக வுண்டாகாது. —

௧0. மனதிற்கு இச்சாபந்தநீங்கலேமுத்தியாமெனல்.

சந்திரனைமேகமறைக்கின்றதுபோலும், வெண்மையானவிடத்திற் றீற்றிய சுன்னச்சாந்தைக் கெடுக்கும் மையைப்போலவும், நல்லமனதை இச்சாபசாசமானது தேயுசைக்கெடுக்கும்; அடைந்த வாசைகளனைத்தையுங்கெடுத்து வலிய சங்கத்தினச்சத்தைக் கெடுத்து பக்குவமானமனத்தின் ஆசைக்கட்டானது நாசமானால் மோக்ஷம்வேறுண்டோ ¶ — இத்தன்மை

௧௧. இச்சையை சுருக்கிக்கெடுப்பதைபறிவித் திஃது பெருக்கிற்கெடுப்பதையுமறிவிக்கத்தொடங்கல்

கூடாவிடின், ஸ்ரீரா? மாவலியைப்போல நன்மையானபுத்தியினால் ஞானத்தையேயடைவாய். அத்தன்மையதே நன்மையென்றுசொல்லவும், மகாமுனியைப்பார்த்து அப்படிப்பட்டதெதுவென்று, ஸ்ரீராமர்கேட்க, — அரியதவத்தையுடைய வசிட்டமுனி

௧௨. மாவலியின் பெருமையுரைத்தல்.

சொல்லுவார். தனதுபுயங்களினால் ஜகங்களனைத்து நடுங்கும்படி சயஞ்செய்தவன்; ஈஸ்வரன் விஷ்ணுமுதலிய சகலருந்தாழும்படி பெருமையுள்ளவன்; அநாதியாமெனக்கூறப் பாதாளலோகத் தரசுசெய்

௧௩. மாவலிதனித் திருந்தல்.

யுஞ் சமானமற்ற வசுரராசன்; — மகாபலிச் சக்கரவர்த்தியென்னு நாமமுடையவன்; மேன்மையான விரோசனனுடைய புத்திரன்; வலிமையுள்ள பத்துகோடிவருடம் இராசாவானவன்; காவலினால் விளங்குகின்ற மகாமேருவினுடைய முடியிலிருக்கின்ற இரத்தினங்களைப்பதித்த மேவுதற்கரிய பிரகாசம் பொருந்திய பலகணிகளையுடைய மேல் வீடடை

¶ இ-ம். மனமானது சிற்சுகமாய்ச் சகவிச்சையை நீக்குதலே மோக்ஷமாமென்பதாம். [முன்கதையிற் கூறவேண்டிய இப்பத்து கவிதையை யின்னூலாசிரியர் இக்கதையிற்கூறினதென்னவெனிற், சமாதிக்கருளிய இவ்விச்சாத்தியாகஞ் சகசத்துக்குவரும் பொருட்டெனக் கொள்க.]

கச. அரசை வெறுத்தல்.

ந்து, ‡ — ஒருநாள் தனியேயிருந்தவனாய் இவைகளையெண்ணினான். மிகுந்த போகங்களை வெறுத்து சம்சாரத்தை நினைத்தான்; சமானமற்ற மூன்றுலகங்களிலுள்ள செல்வங்களை வெகுகாலமா யனுபவிக்கக் கொடுக்கின்ற நமது மகாராசாங்கத்தினால் என்னப் பிரயோசனம்.

கரு. போகத்தை வெறுத்தல்.

— அடைந்தகாலத்தில் இன்பமாய் எவ்விடத்திலாகிலும் அற்பநேரத்தினீங்குகின்ற இச் செல்வத்தினது இன்பத்தைச் சொல்லுமிடத்தில், அடையப்பார்க்கின்றவைகளும் நேற்றைப்போல இன்றைக்கும் செய்ததைச் செய்வதேயல்லாமல் வேறு செயல்களைப் பார்த்திலம்.

கசு. போக்கியத்தை வெறுத்தல்.

— புசித்தவைகளே திரும்பவும் புசிக்கப்படுகின்றது; ஒருநாட் காணப்பெற்றகாட்சியே திரும்பவுங் காணப்படுகின்றது; மகிழ்ச்சியாகக் கொண்டவலங்காரமே திரும்பவுந் தரிக்கப்படுகின்றது; என்றுசொன்னால் சொல்லிய மேன்மையான சத்துக்கள் வெறுப்புற்று வெட்கப்படாமற்போவார்களோ.

கஎ. காலத்தை வெறுத்தல்.

— புசிக்கின்றவைகளும் இன்பமென்று சொல்லுவதையே திரும்பத்திரும்பப்புசித்து அறிவு திருத்தமில்லாத அற்பமான குழந்தைகளைப்போல ஒழுக்கந் தெரியாமல் வருத்தப்படுகின்றோம்; தினமும், பக்ஷமும், திங்களும், வருடமும், யுகங்களும், முன்பொருந்தி வந்ததேயன்றி புதிதாக வேறொன்றும்வராது.

கஅ. நித்தியவஸ்துவை விசாரித்தல்.

— செய்யத்தக்கனவாகிய அனேகங்களையுஞ் செய்தும் இச்செய்கையினால் உயிர் வாழப்பெற்ற தென்ன. தொழில்கள் பின்பில்லாத ஒருபொருளானது, சகத்தின்கண் சந்தேகமில்லாமல் எதினாற்கிடைக்கும், அவ்வஸ்துவானது மயக்கமுள்ள விடயபோகத்தினால் விடுபட்டு மேலேவருமார்க்கமெது, § —

ககூ. முன் பிது போதித்த வசனம் ஞாபகப்படல்.

அழிவற்றதாகியும் விடயத்துக் கயலாகி யிருக்கின்ற அப்பொருளைச் சேருகின்றமார்க்க மெதுவென்று சிந்திக்கும்பொருட்டு மனதிலொன்றைச் சிந்தித்து கண்கள்மலர புருவத்தைநெரித்து அதிசயித்து ஒருகணத்தில் அறிந்தோமென்று, —

உ0. அஃதை யாலோசனை செய்தல்.

தனதுள்ளத்திற்பொருந்த நினைத்ததை தானேசொல்லினான். எல்லாமுணர்ந்த முதன்மையான எனதரியபிதாவாகிய விரோசனனை பூர்வ மிவ்விடத்தியான்கேட்டேன்: இந்தப்பிரகாரமே அவருஞ் சொன்னாரென்று மாவலி

‡ இ-ம். பண்ணிய பரிபாகத்தினாற் சித்தசுத்தியும், அச்சித்தசுத்தியாற் சாதனசதுஷ்டயமும், அச்சாதனசதுஷ்டயத்தால் முத்தியை யடைவதற் கேதுவான வாத்மவிசாரமும் உதித்ததனு லனித்தியவஸ்துவை நிந்திக்கத் தொடங்கினதாம்.

§ இ-ம். சகமுமனித்தியவஸ்துவென்றறிந்து நீக்கி நித்தியவஸ்துவைவிசாரிக்கத் தொடங்கினதாம்.

யானவ னிவைகளனைத்தையுஞ் சொல்லுவான். —

உக. சித்தியவஸ்துயாதெனவிசாரித்ததனை மனனஞ்செய்தல்

எனதுபிதாவே? துக்கமும், சுகமும் என்றுசொல்லப்படுவனவாகிய சகலத்தினுடைய மயக்கங்களனைத்தும் இறந்தவொப்பற்ற விடமியாது; மனதின்கொடிய மோகமானது தீர்கின்றவிடமியாது; ஆசைகளனைத்தும் பற்றற விடுபட்டவிடமியாது; தயவாகவனுக்கிரகஞ்செய்வாய். —

உஉ. இதுவுமது.

ஆசையற்றதாய் இளைப்புகளனைத்துமவிடும் விஸ்ராந்திஸ்தானமியாது; பேராநந்தம் வியாபித்திருக்கின்ற விடமியாது, பராபரத்தைத் தெளிந்தறிந்திருக்கின்ற நீர் என்பனைத அறுத்துக்கொண்டிருக்கின்ற துன்பத்தை விடுத்து இளைப்புகளனைத்து நீங்குதற்கு சொல்லென்றுகேட்டேன் ‡—

உ௩. சித்தையாசாங்கமாகத் தொகுத்துக் கூறத் தொடங்கித் தேயவிலக்கணங் கூறல்.

எனது பிதாவானவர் அப்போது சொல்லுவார்; யான்சொல்ல மகனே? கேட்டாய் முடிவில்லாமல் மிகவும் வியாபகமாகியும் மட்டின்றி விஸ்தாரமாகியும் அழகுள்ளதாகியு மிருக்கின்ற ஓர் தேயமுள்ளது, அவ்விடத்தினது கூட்டங்கள் வைத்துண்டாகி விளங்கி வசிப்பதற்கு அதுவேயிடமாக ப்ரகாசிக்கும்.

உ௪. அரசனிலக்கணங் கூறல்.

இப்படியாகிய தேசத்தில் பஞ்சமகா பூதங்களுமில்லை; மண்டலங்களுமில்லை; காடுகளுமில்லை; தீர்த்தங்களுமில்லை; பரிசுத்தமுள்ள தேவர்கள் முதலாகிய பழமையான வாத்மாக்களுமில்லை; மகாப்ரகாசமென்கின்ற அரசன் ஒருத்தனேயிருக்கின்றான்.—

உ௫. அமைச்சனிலக்கணங்கூறல்.

அவன் சர்வஞ்ஞனாகியும், சர்வவியாபகனாகியும், சர்வகாரணனாகியும், குற்றமற்றவுபசாந்தனாகியும், பரிபூரணமாய் மௌனமாயிருக்கின்ற குணத்தையுடையவன்; தவறில்லாத விவ்வாசனுமமைந்த மந்திரியினது வசமாக தொழில்களனைத்தையும் தானேநடத்திவிக்கும்;

உ௬. இதுவுமது.

மந்திரியானவன் சிந்தித்தால் க்ஷணத்தில் இல்லாததுள்ளதாகும்; உள்ளதுமில்லாததாகும்; இந்தமந்திரிக்கு ஒன்றிலுமனுபவிக்கவல்லமையில்லை; ஒன்றையுமறிந்திலன்; அரசனை விடாமல் நடக்கின்றகுணத்தினால் மிகவுஞ் சகலத்தையுஞ்செய்யும்.† —

உ௭. இவ்வரசாங்கத்தைப் பகுத்துவினவுதல்.

இந்த மந்திரியானவன் இராசாவினுடைய சந்நிதியில் சகலத்தையுமடக்கி, அந்த வரசனானவன் எப்போதும் தனிமையாகவே யிருப்பன், குற்றந்தானென்று அருவிச்செய்த வெனதுதந்தையை, யான்மகிழ்ச்சியுற்று அறிவினால் முன்சொல்லப்பட்ட விதங்களனைத்தையும் தெரிந்துக்கேட்டேன். —

உ௮. இதுவுமது.

மிகவும் விஸ்தாரமாய் ஆதியொழிக ளில்லாமலிருக்கின்ற ப்ரகாசமாகிய அ

---

‡ இ-ம். துக்கநிவிர்த்தியாய்த் தடையற்ற வாநந்தத்தையடைய விரும்பினதாம்.

† இ-ம். பிரமத்தை யுருவகப்படுத்தி தொகுத்துச்சொன்ன தென்பதாம்.

ந்தத்தேச மெப்படிப்பட்டது? அதையடைகின்றகாரணமெது? அதெதினாற்கிடைக்கும்? அந்தத்தேசத்தில்நாசமில்லாதவந்தவரசனார்? மந்திரியெவன்? §—

௪௯. மந்திரியின் வலிமைகூறல். பூமிகளனைத்தையும் விளையாட்டினால் செயஞ்செய்த வெனதுபுயத்தினால் அவ்வரசன் அவ்வமைச்சனோடும் சயிக்கக்கூடாமல் வலிமையுண்டா யிருக்கின்றவனியார்? கிருபைசெய்வாயென்று நான்கேட்கவும், எனதுதந்தையானவர் சொல்லுவார். வேகத்தையுடைய மிருந்த வலிமைபொருந்திய மந்திரியினது கடுமையை யார்தான் தாண்டவல்லவர். —

௫௦. இதுவுமது. தேவருமசுரரும் அளவற்றகோடிக ளொன்றாய்க்கூடி மேவினாலும் வென்றவர்களல்ல, சூலஞ் சக்கர முதலாகச் சொல்லப்பட்ட அரிய வாயுதங்களனைத்தையும் அவன்மேல்விடுத்தால் கல்லில்மோதிய பூவைப்போல துனியானதுகெடும். —

௫௧. அம்மந்திரியை வெல்லு முபாயங்கூறல். அவ்வமைச்சன் அவ்வரசனை வெளிதாகச் செயித்தால், அவனுக்கு வணங்குவான், இல்லாவிடில் மகாமேருவை அசைத்தாலும் இவனை யசைக்கக்கூடாததாம். அனுபவயுத்தியையுடைய வறிவினாலல்லாமல், முழுதுஞ் செயிக்கப்படான், —

௫௨. சித்தரகசியத்தைவெளிப்படுத்திச் சொல்லத்தொடங்கல். அப்படி அந்த மந்திரியைப் பொருந்தினால் கோபத்தையுடைய சர்ப்பத்தைப்போல எரிப்பான்; அரசனோடும் மந்திரியானவன் தனியேயரசாட்சிசெய்கின்ற அந்தத்தேசமு மதிலுள்ளசகலமும் உனது துன்பமறும்பொருட்டு கேட்பாயென்று விரித்திதைச்சொன்னார். —

௫௩. தேயமுதலிய மூன்றையுங்கூறல். முன்னமே யாஞ்சொல்லிய தேயமானது ஒப்பற்ற முடிவிறந்த மோக்ஷமாகும்; இராசாவென்று சொல்லியது வாக்யமற்றவிரத்தினத்தைப்போல பிரகாசிக்கின்ற தன்னிடத்தில் வேறுபடாத ஆத்மதத்துவமேயாகும்; அப்படிப்பட்டவாசனால் படைத்தமந்திரியானவன் மனமாகும்.—

௫௪. யூகமென்பதைக்கூறல். விடயங்களனைத்தையும் ஒருமிக்கக்கெடுத்து நல்வயிராக்கியத்தை உடையதாவதே மேலான யுத்தியென்று சொன்னோம்; மனமானது கிராசையினால்வெல்லப்பட்ட குணமானது, சண்டைசெய்கின்ற மதத்தையுடைய யானையானது தொழுவத்தினால் அகப்பட்ட

௫௫. பிரமத்தையரசா தன்மையாம். ¶—ஞானநூலையுணர்ந்தறியாதவர்கக்கமாக வுருவகப் படுத்தமனதைநான்குபங்காகப்பிரித்து, அடைந்தவிடத்தியதைச் செய்கு யபோகங்களிரண்டுபங்கும், ஞானசாஸ்திரமார்முத்தியை மூன்றுவித க்கத்திலொருபங்கும், அனுக்கிரகம்பெற்றவாசாரி

§ இ-ம். இத்தேசமுதலிய வற்றைச்செயிக்கப் பகுத்துச் சொல்லும்படி கேட்டதென்பதாம்.

¶ இ-ம். தேயமுதலிய நான்கையும் யுத்தமுதலிய நான்காகப் பிரித்துச்சொன்னதாம்.

மாகக்கூறத்தொடங்கி முதலுத்தியைகூறல்.

யராராதனையிலொருபங்காகவுஞ்செலுத்தினால், நி
றைந்தவஞ்ஞானாந்தகாரம்போய் ஞானப்ப்ரகாசமா

௩௬. இரண்டாவது யுத்தியைக் கூறல்.

னது வந்துநிற்கும். —கொஞ்சமறிந்தவர்கள்மனதை
நான்குபங்காகச்செய்து, இந்திரியவசத்திற் செல்லு
கின்ற போகங்களிலொருபங்கும், ஆசாரிய வாராத
னையிலிரண்டுபங்கும், விசாரித்தறிகின்ற ஞான சாஸ்
திரார்த்தங்களை மனனஞ்செய்வதில் ஒருபங்காக
வுஞ்செய்தால், செவ்வையான விவேகத்தினால் பரத

௩௭. மூன்றாவது யுத்தியைக் கூறல்.

த்துவமறியு ஞானமேநிறையும்.— ஞானத்தையடை
ந்தவர்கள் மனதை நான்குபங்காக நிறுத்தி, அயிக்கி
ய ஸ்வரூபத்தை யறிவிக்கும் ஞானசாஸ்திரங்களிலு
ம் நிராசையிலும் ஸ்வானுபவத்திலும் மகானாகிய சற்
குருவாராதனையின் மார்க்கத்திலுஞ் செலுத்தினால்,
குற்றமற்றதாயிருக்கின்ற நல்லமோக்ஷமானது எளி

௩௮. இவ்வுத்திக்குச் சகாயங் கூறல்.

தாகவே வந்துகிடைக்கும் — மிகுந்த வறிவினாலும்
விசாரணையினாலும் ஆத்மதரிசனமும் இராகமும் நீ
யொருமிக்க எப்போதுங் கைவசமாக்குவாய். நிலையா
கிய இராகத்தினால் தகுந்த ஆத்மவிசாரணையும், அ
வ்வாத்ம விசாரணையினால் ஒழிவில்லாத இராகமும்,
ஒன்றுக்கொன்று தொகுப்பாய்; நிறைந்தசமுத்திர
மும்தொடர்பானமேகமும் அமைவதுபோலவாம்.—

௩௯. இச்சகாயத்தோடு முத்தியையடையுமாறு கூறல்.

தேசாசாரந்தவறாமல் உறவினர்க்குரித்தான நல்ல
திரவியங்களைச்சம்பாதித்து, அப்பொருளினால் இனி
மையான சாத்மீககுணத்தில் மேன்மையான சத்து
க்களைச்சேர்ந்து, அவர்களால் வயிராக்கியத்தையடை
ந்து, அந்த வயிராக்கியத்தினால் ஆத்மவிசாரணை
யைச்செய்து, அந்த விசாரணையினால் உண்மைஞா
னத்தைத் தெளிவுற்றால், மோக்ஷமுண்டாகும். —

௪௦. முன்விசாரித்த வனுபவத்தை மனனஞ்செய்ததினாற் சுகித்தல்.

இப்படியென்று முன்னமே எனது பிதாவானவர்
சொன்னார். தெய்வசகாயத்தினால் ஒன்றையும் விடா
மல் இப்பொழுதறிந்தேன்; ஞானத்தை யடைந்தே
ன்; போகத்திலிருந்த விச்சையை இப்போது நீக்கி
இராகமென்கின்றசெல்வத்தினானிறைந்து சொச்சமா
ய் உபசாந்தமென்னு மமிர்தத்தினால் சீதளமான பர

௪௧. நிதித்தியிற் காக்ஷிப்படல்.

மசுகத்தையடைந்தேன் — அகோவகோ! இவ்வனு
பவத்தை வெகுநாள் அறியாதவனானேன்; இப்போ
தறிந்த மகிழ்ச்சியை என்னவென்று சொல்லுவேன்!
எல்லாநினைவுகளு முபசாந்தமாய் சுகதுக்கங் களி
னால் துன்பமுற்றவர்கள் வருந்தாமலிருக்கின்ற வி
டமிதுதான், ஆத்மவாழ்வையடைந்தவர்கள் பொரு
ந்தாநின்ற பதமிதுதான், உபசாந்தத்தின் மாக்ஷி

௪௨. பரோக்ஷார்த்தத்திற் ச

மையிதுதான். — இப்படியென்றுசொல்லி நானர்
எனதுஸ்வரூபமியாதென்று விசாரித்து, நான் ப்ரகா

க்தேக நீக்கி யபரோக்ஷமா யநனினிற்றற் பொருட்டாசிரியரைச் சிந்தித்தல்.

சிக்கும்படி தனது ஸ்வரூபத்தை யுணர்ந்திருக்கின்ற நமது குருவாகிய சுக்கிராசாரியரை வணங்கி விசாரித்து உண்மையை நினைக்குமளவில், அந்த ஞானங்கெடுமென்று நினைத்து சுக்கிராசாரியரை நினைக்கவேண்டுமென்று கண்களைக் குவித்து பூரணமானவன் பிறகு தியானித்தான். ‡ —

௬௩. ஆசிரியரைத் தரிசித்துத் துதித்தல்.

உண்மையான சச்சிதானந்தாகாயமே ஸ்வரூபமாயிருக்கின்ற சுக்கிராசாரியார், ஆத்மா வாழ்வையடையாநின்ற மாவலியின் முன்னே தோன்ற, அவ்வரசனு மகிழ்ச்சியோடு வணங்கி, கையினிறைந்த இரத்தினங்களினாலும் நல்ல புட்பங்களினாலும் பாதத்திலருச்சனைசெய்து சொல்லுவான், எனதாசாரியரே ? தேவரீரருளானது என்னைத் தூண்ட அடியேன்சொல்லுவதைக் கேட்டனுக்கிரகஞ்செய்வீராக. —

௬௪. உலகமுதலியவெல்லாமிருக்கின்ற தியாதென விசாரித்தல்.

இவ்விடத்திலுள்ளதென்ன ? அப்பாலிருக்கின்றதென்ன ? அளவுசொல்லப்பட்டதென்ன ? அளவில்லாததென்ன ? பேசுகின்றவனார்? கேட்கின்ற நீரார் ? இந்த நிலைபெற்றஜகமியாதென்று மயக்கந் தீரும்படி யனுக்கிரகஞ் செய்வீரென்று கேட்க, அவன்கேட்ட சகலமுந் தெரியும்படி பகுத்து அந்த மாவலிக்கு சுக்கிராசாரியானவர் நன்றாகத் தெரிவித்தார். —

௬௫. இவ்வேழுமுதலிய யாவுஞ் சின் மாத்திரமேயெனவுபதேசித்தல்.

நான்கற்பகவிருக்ஷத்தையுடைய தேவலோகத்துக்கு விரைவோடுஞ் செல்ல வந்தேன், பலவாகப்பேசியும் ப்ரயோசனமென்ன ? சுருக்கமாகச்சொல்லுகின்றதைக் கேட்பாய். தோற்றமாக இவ்விடத்துள்ளதும் ஞானமே ; சமஸ்தமான புறம்பிலுள்ள விடங்களும் ஞானமே ; அளவுள்ளதும்ஞானமே ; அளவில்லாமற் செறிவுள்ளதும்ஞானமே ; சொல்லுகின்ற யானும் ஞானமே ; கேட்கின்ற நீயுமே ஞானமே ; ஜகமும் பூரணஞானமே. —

௬௬. இவ்வநுபவத்திலமர்ந்தென்றருளி யேகுதல்.

இந்நிலையே சுருக்கமாம். இச்சித்தாந்தத்தை மனதிற்றரித்துக்கொண்டு இவ்வாசகங்களுக் குறியவறிவினால் உனது ஸ்வரூபத்தை நீயே சிந்திப்பாய் ; நிர்விகற்பமாயிருந்து பார்ப்பாயானால், அதினால் முடிவானபரமபதத்தையடையக் கடவாய். ஒப்பற்றவரியவைத்தையுடைய சத்தியவிரதர்களும் ஆதனமாயொருகைங்கரியத்தில் ப்ரவேசித்தார்கள் ; நாமும் போவோம். — என்றுசொல்லிசுக்கி

௬௭. இவ்வநுபவத்தை மன்னித்தல்.

ராசாரியர்போனபின்பு, சகலமு ஞானமாகிய சகத்தைப்பார்த்துநினைத்து, ஒவ்வொன்றும் ! என்றனக்கு சுக்கிராசாரியார்சொல்லியது எதார்த்தமே ; முதன்மையாகியபூமியுஞானமே, திரிலோகமு ஞானமே, எனது ஸ்வரூபமுஞானமே, நல்லனான்குதிக்குகளும்

‡ இ-ம். முத்தியையடைதற்குதவிய பல்வகைத்திக்குச்சமாயமு மச்சமாயத்துக்குச் சாதனமுமாகிய விஷயங்களை யறிவித்ததாம்.

ஞானமே, ஸ்தாபிக்கும் கிரியைகளனைத்தும் ஞான
௯௮. நிதித்தியிற் காக்ஷிப்படல். மே. — காணப்படுந் திரிஸ்யமும் காக்ஷியும் ஒழிந்து களங்கமற்ற ஸ்வரூபமாய் விளங்குகின்றசந்தோ தயமாய் எப்பொழுதும் ப்ரகாசிக்கின்ற பிரமவஸ்துவானேன். பந்தப்படுத்துகின்ற விடயமில்லாத ஞானமே யுருவமாய் ஏககாலத்தில் எவ்விடத்தும் வியாபகமாகியும், உபசமனமான ஞானகாசமாகியும், அறிவாகியு மிருக்கின்ற மகத்தாகிய பூரண வஸ்துவேயான் —
௯௯. சமாதியடைதல். ஓங்காரின்ற ஞானமாத்திரார்த்தமாகிய ப்ரணவஸ்ரூபத்தை மனதிற் சிந்தித்து அறிதுயிலானதியானருடனாய் சங்கற்பங்களனைத்தும் விடுபட்டுகொள்ளாநின்ற செயல்களும், ஏடணைத்திரியமும், சந்தேசமும், மனனமும், அறிவும், விடயமும் இவைகளைத் தாங்குகின்ற ஞாதாவுமாகிய சகலமுநீங்க, தனித்த சித்திரத்தைப்போல வெகுநேரஞ் சமாதியிலிருந்தான்.—
௱. சச்சிதாநந்தமாய் விளங்குதல். வாயுவில்லா விடத்துள்ள தீபப்ரகாசத்தைப்போல சலனமற்றிருந்த மாவலிச் சக்கிரவர்த்தியானவன், இராகத்துவேட நீங்கி பூரணமாய் சிந்தையென்கின்ற களங்கமில்லாமல் தோன்றுஞ் சந்தாமர்த்திரத்தினு லொளிவிட்டுப் பிரகாசித்த விதத்தைக் கூறில், வலிமையுள்ளமேகங்களில்லாத சரற்காலத்தில் மிகவுந் தெளிந்தவாகாயத்தைப்போலுமாம். —
௱௧. சகசத்துக்கு வெளிப்படல். அவ்விடத்தந்தப்ரகாரமே அந்த மாவலியானவன் சமாதியிலிருக்க, அவனது பணியைச் செய்கின்ற அவுணர்கள் அரண்மனையினது மேல்வீட்டை யடைந்தார்கள், மேன்மையான மகாபலியும் நீங்குதற்கரிய நிருவிகற்பமான நிலைமிருந்தசமாதியில் வெகு நேரம் தங்கிநின்று அதன்பின்பு விழித்துக்கொண்டு அறிந்து மமதையற்ற மனதுடையவராய். —
௱௨. சாக்ஷாத்காரமடைதல். நிராசை பொருந்திய மனத்தினல் இராசகாரியங்களை முழுதுஞ்செய்து, ஆபத்துக்களிடத்திலும் சம்பத்துக்களிடத்திலும் சமதிருஷ்டியாக குற்றமற்ற கருத்தினல் ஒருமைப்பாடாய் சுகதுக்கங்களில் எவ்வளவேனும் மிதவாமலுமமிழாவலும் சமபாவனையிற்றுனகவிளங்கினன். ‡—ஒழியாமல் அவனுடைய மன
௱௩. மாவலி ஞானவாசனுய் மனதை மந்திரியாக்கிச் சகலமுந்தன்வசமாயர சாக்ஷி செய்ததுபோலச்செய்வாயெனல். திலுண்டாகிய இஷ்டசிந்தனையும் அனுஷ்ட சிந்தனையும் அளவில்லாததாகவும், உண்டானதும் இல்லாததுமான பதார்த்தங்கள் அளவில்லாததாகவும், விரிந்திருக்கின்றவனைத்திலும் விஸ்தாரத்தியடைந்து, பின்பு எந்தவிடத்திலெதைப் பொருந்தினன், பரத்திலும் இகத்திலுமுள்ள ஆசைகளில் பாயாநின்ற மனதை

‡. இ-ம். சிரவணமுதம் சாக்ஷாத்காரபரியந்தமுள்ளவனுபவத்தைக் கூறியதாம்.

ருச. மனதைச்செயித்து முத்தியடைவா யெனல்.

தனதிதயாம் பரத்தில் வைப்பாய் —எவ்விடத்திலெவ்விடத்தில் மனதுசென்று குழந்தைகளைப் போல விடயங்களில் விழுந்தழுந்தாநின்றது, அவ்விடத்திலவ்விடத்திலிருந்து திருப்பி அகண்டாகார ஞானத்தில் அடையச்செய்வாய். குறிப்பாய் இந்தப்பிரகாரஞ் சாதனைசெய்து மனமென்னுமதயானையை கொடிய துன்பமறும்படி கட்டி சகலவிசாரணையினாலும் மோக்ஷமடையப் படுவதாம்.‡—

மாவலிகதை முற்றிற்று.

பிரகலாதன்கதை.

அவதாரிகை.

முன்கதையில் இச்சாத்தியாகபலத்தினாலுண்டான விசாரத்தாற் சடவராசாங்கஞ் சித்தசாங்கமானவனுபவத்தை யறிவித்து, இவ்வனுபவமீஸ்வரானுக்கிரகத்தினாலும் வருமென்பதை யறிவிக்க நினைத்தும் பிரகலாதன்கதையை நிரூபிக்கிறார்.

க. பகைவை வசப்படுத்தவாலோசித்தல்.

பின்னும் ஒருகதையைச் சொல்லக்கேட்பாய். பிரகலாதனென்னு நாமத்தையுடையவனும் தனதறிவினால் மெய்ஞ்ஞானமான தத்துவஸ்ரூபத்தை அடைந்தான்; அதைச்சொல்லுவோம். இரணியனென்னு நாமத்தையுடைய தானவர்களுக்கரசன், மரணமடைந்தமாத்திரத்தில், துன்பமிருந்த அவனது புத்திரன் மனநொந்துற்று இவைசொன்னான். — என்னுடைய பிதாமுதலிய தானவர்கள் என்குலத்திலுள்ளவர்கள் அளவற்றவர்கள், மகாமேரு வற்பமென்னும்படி சரீரநிலையை பெரிதாக வுடையவர்கள், தாமரையிடமாகப்பிறந்த பிரமாவினதிகாரத்தைக்கெடுக்கவல்லவர்கள், சொடுக்கவல்லவர்கள், தரிக்கும் துளசிமாலையையுடைய விஷ்ணுவென்னும் அக்கினியில் இலவம்பஞ்சு கெடுதல்போல நசிந்தார்கள் — அவர்களுக் கொப்பான பெரிதானவர்கள் கற்பாந்த சண்டமாருதத்தால் கெடுகின்ற சிறுமலைகளைப்போல இறந்தவர்கள், பொடிமணலைப்போல அளவில்லனவாம்; இக்காலம் அம்மானுக்குப்பயப் படாதவர்கள் ஒருவருமில்லை; எனக்குப்பகையாகிய ஒளிநிறைந்த சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவை செயித்தற்கு,

உ. பகைவன் வலிமையையுணர்தல்.

ங. பகைவனைச்செயிக்குமுபாயமுணர்தல்.

‡ இ-ம். இவ்விதமாக மனோவிச்சையை நீக்கி ஞானம்பெறுவாயென்பதாம்.

ச. மூர்த்தியுபாசனைசெய்யச் சிந்தித்தல். உபாயமீதொன்றே. ¶ — எந்தப்பிரகாரமாக நினைத்தாலும் இதற்குவேறாக மேலானகதியில்லை ; திருப்பாற்கடலில் வசிக்கும் விஷ்ணுவினது அடைக்கலமன்றி வேறடைக்கலமில்லை ; மனமானது இந்தக்ஷணந்தொடங்கி நாராயணனது பதத்தைச்சேரக் கடவது, பக்தியையுடையவனாய் பாவனையினால் நானே யவனாகி பிரியாதிருக்கக்கடவன். —

ரு. அஷ்டாக்ஷரத்தின் பெருமையையுணர்தல். இச்சித்த சகலமும் எளிதிற் கொடுக்கின்ற நாராயணாய நமவென்கின்றமேலான திருமந்திரமானது, என்மனதில் ஆகாயத்தினிறையுங் காற்றைப்போலவிட்டு நீங்காம லுள்ளே சேர்ந்திருக்கக்கடவது. விஷ்ணுவை வணங்கி ஆராதனைசெய்பவர்கள், இசைந்த விஷ்ணுவே தாமாக அந்தவாராதனையைசெய்யின் முத்திலாபமாம் ; அல்லாவிடிவில்லை —

சு. மூர்த்தியின் சகுணவுருவத்தைச்சிந்தித்தல். அந்தமார்க்கத்தினால் விஷ்ணுஸ்வரூபமேனாய் விஷ்ணுவை ஆராதனைசெய்வன், இச்சரீரமானது விஷ்ணுவினது ஸ்வரூபமாம், இந்த வடிவத்தில் பிராணவாயுவின் வடிவமாய் கட்டுப் படுவோன் பராபரனாகிய இந்தவிஷ்ணுவே பிராணவாயுவில் முன்செல்லுதலால் இரண்டாவது விஷ்ணுவாய் புறம்பில்வசிப்பான். ‡ —

எ. அகத்திலாராதித்தல். அந்த ப்ரகாரமாகிய இந்தவிஷ்ணுவை, சமஸ்தவுபசார வஸ்துக்களையும் மனதினால்கற்பித்து எப்போது மாராதனையைச்செய்வேனென்று நினைத்து, பூசாதிரவியமான பாரங்களனைத்தையுமெடுத்து மனதினால் சிவந்ததான இரத்தினபாத்திரங்களும், தூபங்களும், தீபங்களும் வாசனாத்திரவியங்க ளனைத்தையுநிறைத்து, —

அ. புறத்திலாராதித்தல். இரத்தினாபரணங்களும் சொன்னவஸ்திரங்களும், வாடாத சொன்னபுஷ்பங்களும், நல்லமுதுமாகிய எண்ணிக்கையற்ற பூசாதிரவியங்களனைத்தையும் மனதினாற் பாவனைசெய்து ஆராதனைசெய்து, தணிவில்லாத வன்பினால் முன்னேகொடுத்த புறம்பிலுள்ள திரண்டதிரவியங்களினால் சர்ப்பசயனத்தையுடைய விஷ்ணுவை அகத்திற் பூசித்ததுபோல, அன்புற்றுபுறத்திற் றேவக்கிரகத்திலு மாராதனைசெய்தான். —

கூ. அசரீரியாவரு மாராதித்தல். அப்படியே அந்தக்ஷணந்தொடங்கி அகண்டாகார ஸ்வரூபமாகிய பிரமவஸ்துவான விஷ்ணுவினுடைய பதங்களை ஆராதனைசெய்தான். அப் பிரகலாதனைப்போல வாளாயுதத்தையுடைய அவுணர்களும் தீமையானகுணங்களை நீக்கி சகலரும் அரிக்கு அடிமைப்பட்டார்கள். அரசனதுகுணமல்லவா பரந்த சிவர்க

¶ இ-ம். முன்னுள்ளயாவு மனித்தியமாய்ப்போனது காரணமாகச் சித்தசுத்தியுண்டாயதனாலனித்தியத்தையடைய விவேகமுதித்ததென்பதாம்.

‡ இ-ம். மூர்த்திகையத் தியானிக்கு முறைமையை யுணர்த்ததாம்.

௪௦. தேவர்கள் ஐயமுறல்.

ளின்குணங்கள்.§ — அப்படியே, திதிபுத்திரர்களாகியவசுரர்களும் அவர்களுக்கரசாகிய பிரகலாதனும் சிவந்த கண்களையுடைய விஷ்ணுவினிடத்தி லிருக்கின்ற கோபம்விட்டு, நூதனமானபக்தியினால் அடிமைபுகுந்தார்களென்று தேவேந்திரனும் தேவர்களும்கேட்கவும் அச்சத்துடனாச்சரியமடைந்து, மிகுந்த பாவத்தையுடையவர்கள் எமதுபெருமானுக்கு ஏவ

௪௧. தேவர்கள் வினவுதல்.

பாகியது என்னவென்று சந்தேகமடைந்து, — க்ஷீரசமுத்திரத்தில் நித்திரைசெய்கின்ற விஷ்ணுவின் முன்னேபோய்ச்சேர்ந்து தோத்திரஞ்செய்து, தேவேந்திரன்முதலிய தேவர்கள் மேகநிறத்தை யுடைய விஷ்ணுவைப்பார்த்து, அக்கினியான பாவத்தையுடைய தயித்தியரனைவரும், உன்மைப் பாவனைசெய்து உமதுருவமா யிருப்பார்களானால் இதை மாயையெனவெண்ணினோம், இதென்ன! — கொடிதானகொ

௪௨. இதுவுமது.

லையைச் செய்யும் வல்லமையுள்ள அவுணர்கள் குணங்களெவ்விடம், பெறுதற்கரிய முடிவாகிய சாந்தமெவ்விடம், விஷ்ணுவின்பத்தியைப் பெறுவதெவ்விடம், கொடிதான தீமையையுடையவர்கள் சற்குணங்களை கலந்தார்களென்றுசொல்லுவது சொல்லேயல்லாமல், வியாபகமுள்ள விஷ்ணு சிவ? உனது பத்தியானது சண்டாளருக்கெல்லாம் கிடைக்குமோ! —

௪௩. சுவாமியானவருண்மையைக்கூறல்.

என்றுசொல்லிய தேவர்களுக்கு எமதுபெருமானாகிய விஷ்ணு, தேவர்களே? அச்சப்படாதிருங்கள், சயஞ்செய்கின்ற பிரகலாதனுடனவன் திரும்பவுஞ் சனியாத சாந்தத்தையடைந்தான்; கொலைசெய்கின்ற துன்பமின்றி தத்துவருமான திருஷ்டியினால் மோக்ஷத்தையடைவன், ஆகையால் ஒன்றும் இதனில் வருந்தவ

௪௪. தேவருமசுரருமுறவாதல்

மென்று அறியத்தக்கதில்லையாம் — நன்மையுள்ளவர்கள் பொல்லாங்கைப் பொருந்தினும் கெடுதலாரும்; தீமையுள்ளவர்கள் நன்மையைப் பொருந்தினுநன்மையேயாரும்; சகலரும்போற்றினென் றவனைக்கிரகித்து எமதுமகானாகிய விஷ்ணுவும் அவ்விடத்து மறையவும், பேரலைகளுற்றிருக்கின்ற திருப்பாற்கடலிலிருந்தும் விண்ணுலகத்தையடைந்து தேவர்களனைவரும் பகைவரென்று சொல்லப்பட்ட தானவருடன் கூற்றமற்ற உறவானார்கள். ¶ — அஸ்திருவிர்கின்ற

௪௫. மிராமையுண்டாதல்.

பரபத்தியினால் இமைமோக்ஷியாமல், சதாகாலமும் அன்புபெருக வியாபகமுள்ள விஷ்ணுவை அவுணர்

§ இ-ம். பிரகலாதன்முதலிய யாவரு மூர்த்தியையுபாசித்த மூர்த்தி வடிவமானார்களென்பதாம்.

¶ இ-ம். அரியினும் தேவர்களு மசுரர்களுந் தமதிடத்திலுள்ள ஐயாக்கிலுமன்பிற் கலந்தனரென்பதாம்.

க்கரசனுகிய பிரகலாதன், ஆராதனைசெய்தான். வழிமையிற்சுழலுகின்ற திரிகரணங்களுந் தவருத பூசாபலத்தினுல் முதன்மையானவிவேகமும் ஆநந்தமுதிர்ச்சியும் வயிராக்கியமும் உண்டாய்வளர்ந்தன. —

கசு. போகப்பற்றுநீக்கல். நான்குசாதன முதலியகுணங்கள் உண்டாய் இவன்மனது ஆசையாகிய போகங்களில் வருந்துகின்ற பற்றுக்கள் நீங்கின. குளிர்ச்சியையுடைய முத்தானது நாளந்தோடுஞ்சேரில் பற்றுத லுண்டாகுமோ, ஆதலினுல் போகங்களிலழுந்தாமல் மனது விஸ்தாரத்தியடைந்தது,—

கஎ. மூர்த்திப்ரசன்ன மாதல். பூரணவடிவையுந் தரிசியாமல் போகத்தினிடத்திலுமழுந்தாமல் தொங்கின ஊசலலைவதுபோல நன்மையுள்ள பிரகலாதனுடைய மனமானது சுழலுவதை, மூன்றுலகத்துக்குஞ் சாக்ஷியாகிய திருமாலானவர்திருவுளத்திலறிந்து, அறிவானகுணத்தையுடையவ னுராதிக்கின்ற ஏகாந்தமான பூசாக்கிரகத்தில் தான்வந்துசேர்ந்து,§ —

கஅ. ப்ரத்தியக்ஷமானமூர்த்தியையாராதித்துத்துதித்தல். மும்மூர்த்தியாய் நின்ற முதன்மையான காரணமானது வந்தடைந்தவிதத்தைப்பிரகலாதனறிந்து, தேவதேவனுகிய விஷ்ணுவைமுன்னேசெய்ததிலும் இரட்டித் தாராதனைசெய்து, எவர்களாலுந் தரிசிப்பதற்கரிய எமது சுவாமி ப்ரசன்னமானுனென்று அன்பினுல் அசுரேசன் அந்த

ககூ. இதுவுமது. விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்தான். — அண்டமென்கின்ற வொப்பற்றவீட்டில் அரிதான பொருள்சேர்ந்திருக்கின்ற பண்டாரமே? சூரியனைப்போல உதயாத்தமனமில்லாமல் ப்ரகாசிக்கின்றபிரமமே? தரிசித்த வாத்மாக்களனைவர்க்கும் கருணைக் கண்ணுகிய பரவஸ்துவே? இலக்ஷுமிக்கு நாயகனுனவரே? வந்தனம் வந்தனம், மிகவும்வந்தனம். —

உ0. இதுவுமது. மேலானவனுய் உலகத்தையுண்டாக்குகின்ற லீலையையுடைய ஞானமுடையவனே? பதினன்கு உலகத்திலும் சாராதமேலான நல்லவஸ்துவே? ஆலிலையின்கண் ணுள்ளவனுய்நித்திரைசெய்தகடவுளே? தத்துவமே? தயாஸ்வரூபமே? பூலோகங்களுக்கு நாயகனுனவரே? வந்தனம் வந்தனம், மிகவும்வந்தனம்.—

உக. இதுவுமது. துன்பமிகுந்த அவுணர்களென்கின்ற கிளைகளையுடைய தாமரைப் பூவிற்கு நீண்டபனியானவரே? வேதமார்க்கத்திற்செல்லுந்தேவர்களென்கின்ற விகசிதமான தாமரைப்பூவுக்கு சூரியனுனவரே? வேற்றுமையைக் கெடுத்தவர்களிருதயமென்கின்ற பெரிய தாமரைப்பூவிற்கு வண்டானவரே? ஆத்மாக்களுக்கெல்லா நாயகனுனவரே? வந்த

§ இ-ம். பக்குவிக் கனுக்கிரகஞ்செய்ய வுபாசனுமூர்த்தி யெழுந்தருளினதாம்.

உஉ. பிரமானந்தம் வேண்டல்.

ணம்வந்தனம், மிகவும் வந்தனம். —இப்படி பலதோத்திரங்களைப் பிரகலாதன்சொல்ல, மனங்களித்தருள்செய்து அன்பையுடைய பிரகலாதனே ? திரும்பவும் சனியாததான வரத்தைக்கேளென்று விஷ்ணுவானவர்சொல்ல, சகலரிருதய கமலங்களிலும் வசிக்கின்ற முதன்மையான வஸ்துவே ? துக்கமற்ற மேலானவானந்தமியாது, அதையேயனுக்கிரகஞ் செய்வாயென்று பிரகலாதன் சொன்னார்.

உ௩. அனுக்கிரகஞ் செய்தல்.

— மனதிலுள்ள மயக்கங்களனைத்து நீங்கி தெளிவான பிரமானந்தத்தை யடைந்து, சுத்தப்பிரமத்தில் விஸ்ராந்தியையடையும் பொருட்டு, முடிவான வாத்மவிசாரம் உண்டாகக்கடவதென்று கரகமலத்தைச் சிரசின்மேல்வைத் தனுக்கிரகஞ்செய்து, பின்மலனனவிஷ்ணு மறைந்தருள, அவனைத் தோத்திரத்தினால் மிகவும்வணங்கி புட்பத்தை வருஷித்து விதேகிகளுக்குமேலானபிரகலாதன் வணங்கினான். ¶

உ௪. தனித்திருந் தாத்மவிசாரத்துக் காரம்பித்தல்.

— குளிர்ச்சிபொருந்திய நீண்டசமுத்திரத்தில் அலையைப் போல புருஷோத்தமன் மறைந்தபின்பு, இனிய பதுமாசனத்தி லிருந்து கடவுளினுதோத்திரங்களை துதித்தபின் பிறவியைக்கெடுக்கின்ற வொப்பற்ற சுவாமியானவர், பிறவாத வாத்மவிசாரணையை தொடுத்திட்டித்தார், யானாரோமென்று உன்னே விசாரிப்போமென்று சிந்திப்பான்.

உ௫. பஞ்சபூதவடிவமான சகத்து இயானென்றெனல்.

—முன்னமே எவனுயிருந்த யானே, இந்தப்புவியாடம்பரத்தில் நீங்காமலிருந்தும், நின்றும், ஓடியும், அழுதும், நகைத்தும், களித்தும், வருந்தினவனுகிய நானெத்தன்மையன் ; நாநாவிதமாகிய உலகம் நானல்லவன் ; மலைகளும், கற்களும், திரணங்களும், மண்களும், மரங்களுமாகியும், புறம்பாகியும், சடமாகியுமிருக்கின்ற இச்சகத்தை யானென்று சொல்லத் தகுந்ததோ,

உ௬. பௌதிகமாகிய தேகமுஞ் சத்தவிடயமுமியானன்றெனல்.

—அசத்திலிடத்திலுண்டானதாகியும், மூடமென்பதாகியும், பிராணவாயுவினாற் சஞ்சரிப்பதாகியும், அற்பகாலத்தில் நசிப்பதாகியுமிருக்கின்ற சடமானசரீர நானுவனோ ; நிலையில்லாததாகியும், சூனியத்திலுண்டானதாகியும், ஆகாரமில்லாத தாயுமிம், அறிவில்லாததாகியும், அற்பவுணர்வில் காதுக்குப் புசிப்பாகியுமிருக்கின்ற கேட்கின்ற சத்தவிடயமியானுவேனோ ;

உ௭. பரிசவிடயமும் ரசவிடயமு மியானன்றெனல்.

—தொக்கினாலல்லாமல் அறியக்கூடாததாகியும் தனித்து தோற்றமில்லாமல் கணநேரத்தில் நசித்து வியாபகருானத்தினலறிக்குதனக் கறிவில்லாமலுமிருக்கின்ற பரிசவிடயானுவேனே ; காற்றில்லாமற் சஞ்சலமாகியும், சடரூபமாகியும், ஆசையிருந்த

¶ இ-ம். உபாசித்தவன் வேண்டின பரமசுகமுறிப்பதற் கேதுவான விசாரமுதிக்கக் கடவதென் றருளினரென்பதாம்.

தாகியும், க்ஷணத்திலிறக்கின்றதாகியும், நாவிற்குப்புசிப்பாகியும், பதார்த்தங்களி லுண்டானதாகியுமிருக்கின்ற சடமான ரசவிடயமான நியானவனோ ; —

உ௮. உருபவிடயமுங் கந்தவிடயமுமியானன்றெனல்.

கணத்தி லிறக்கின்ற சகத்திலும், பார்வையிலும், புணர்ந்தும்புணராத ஞாதாவினிடத்தி லிறக்கின்ற சடமான ரூபவிடயனானவனோ ; வளைவானமூக்காலும் அறிவில்லாமையினல் குறிக்கப்படுவ தாகியும், சடமாகி தனக் கறிவில்லாததாகியும், வாசனையி லற்பமுறைமைகளைப் பொருந்தினதாகியு மிருக்கின்ற சடமான கந்தவிடயனானேமோ ; — மமகாரமிறந்து

உ௯. ஆத்மதரிசனமாதல்.

சங்கற்பமனைத்தும்விட்டு இளைப்பில்லாமல் பஞ்சேந்திரமயக்கம்விட்டு, மாசற்ற ஞானமாகியும், செயலின்றி, அறிகின்றவிடயநீங்கிய ஞானமாத்திரமாகியும், கனமான வுள்ளிலும், புறம்பிலும், நிட்களமாகியும், சுத்தமாத்திரமாகியும், பிறப்பில்லாததாகியுமிருக்கின்ற எனதுஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கக்கண்டேன், இது நிச்சயம். † — ஆ ! ஆ ! இந்தவேளையிலென்னைத் தெரிந்துகொண்டேன் ;

௩௦. ஆத்மவியாபகமான பிரமத்தைத் தரிசித்தல்.

உள்ளப்ரகாரமாய் அறிகின்றமார்க்கத்தில் நீங்காத வேற்றுமைகெட்டு அறிவுக்குள் ப்ரகாசமான ஆத்மஸ்வரூப மிதுதானே ; சலனமின்றி யெங்கும் வியாபகமாயிருக்கின்ற யானாகிய தத்துவஞானத்தில் உலகங்களனைத்தும் பொருந்தாநின்ற சூரியன்முதல் கடபரியந்தம் ப்ரகாசிக்கது. —

௩௧. சுயஞ்சுத்தைத் தரிசித்தல்.

உள்ளேயிருக்கின்ற ப்ரகாசத்தினுல் அக்கினிப் பொறிகளானவை ப்ரகாசிப்பதுபோல, பஞ்சேந்திரியமும் தெளிவாகவறிகின்ற வென்னுல் மிருந்து விசித்திரமாகி ப்ரகாசித்தன ; தள்ளப்படாத பிரமா முதலான தனிமையான கற்பமுடிவில் சீவர்களெல்லாம் வெட்டவெளியான வப்பிரளய காலத்திலும் எனது ஸ்வரூபமே திரும்பாமற் ப்ரகாசிக்கும். —

௩௨. சுயஞ்சித்தைத் தரிசித்தல்.

இதுவென்று மியாவென்றும் மனதிற் பற்றுகின்ற நினைப்பெங்கே ; அளவில்லாமலிருக்கின்ற சகங்களனைத்தும் பூரணமாய் ப்ரகாசிக்கின்ற ஞானஸ்வரூபமாகிய எனக்கு, விரிகின்ற மனோபாவனை நினைக்குமிடத்துண்டோ. முடிவில்லாத ஆநந்தமுடைய சமானமில்லாத உபசாந்தஞானமாகிய எனது திருஷ்டியே சகங்களனைத்திலுமாம். —

௩௩. ஞானகுணத்தினை மனனஞ்செய்தல்.

பார்க்கப்பட்ட பார்வைகளனைத்தும் சூட்சுமவறிவாகிய பார்வையொன்றேயாம். உண்டாக்கப்பட்ட சீவர்களியாவையும் அகமாகியும் நிரீஸ்வசம்பந்தமில்லாத ஞானமாகியும் தா

---

† இ-ம். அநாத்ம வஸ்துவை யொழித் ஹாத்மவஸ்துவான கூடஸ்தனைத் தரிசித்தவனாயினனென்பதாம்.

க்குதற்கு வேறொருவஸ்துவில்லாத ப்ரத்யகாத்மாவாகியுமிருக்கின்ற என்னையன்றி நீக்கப்பட்டதில்லாத எமது நிமித்தம் வந்தித்துத் துதிப்போம்.—

௬௪. ஆத்மாவிற் சத்திகளனைத்துமுண்டாதல்

மிகவுஞ் சொச்சமாய், சமத்துவமாய், விகாரமில்லாததாய், அதீதமாய், செல்காலமிகழ்காலவருங்காலமென்று நினைக்கின்ற மூன்றுகாலமுமில்லாததாய், வேறாக நினைக்கின்ற நினைவில்லாமல் அபேத ஞானத்தினால், மாசுஷிமையான நாநாவிதசத்திகளனைத்து வேரேயுண்டாக்கப்பட்டன.—

௬௫. அதீததரிசனம்.

ஒன்றிலும் பற்றில்லாதிருக்கின்ற ஞானத்திற்கு சமமேயல்லாமல் வேறு காணப்பட்டதில்லை; மசனத்திற் கொட்டாத படியினால் வார்த்தைகளினாற் சமமான ஆத்மா தோன்ற மாட்டாது; பார்ப்பதற் கிடமாகியும் பித்தையாகிய வஸ்துவைப்போல சொச்சமாகியுமிருக்கின்ற கொடாதவிராசையை நிறைத்தால் சமபாவனையானது அலையில்லாத சமுத்திரத்தைப்போல மிருக்கும்.—

௬௬. பந்தமடையுமுயிர்களுக்கிரங்கல்.

தொழிலும் தொழிலில்லாமையுமாகி மயங்குகின்ற தொழில்களில் சேர்ந்தவறிவானது வலையிலகப்பட்ட பக்ஷியைப்போலக் கட்டுப்படும். ஆகையினால் இராகத்துவேடமாகிய இரண்டினாலும் வருகின்றகொந்தமான மயக்கத்தினால் ஜீவர்களனைத்தும் பூமிக்குள்ளிருக்கின்ற கிருமியைப்போல ஒன்றும் நீங்காமலாகும்.—

௬௭. தன்னைத்தானுந் துதித்தல்.

மிகவுந் தெளிவாக விளங்கு மாத்மாக்களனைத்திற்கும் மனதிறுமையாமோ? நெடுங்காலத்தின் பின்பு உன்னையடையப்பெற்றேன்; இப்பூரண ப்ரயோசனத்தை யார்பெற்றார்கள்; குருதிருவாக்கியங்களினால் விசாரிக்கப்பட்டாய்; கூடஸ்த பிரமவயிக்கியத்தை யடையப்பெற்றாய்; வேற்றுமைகளனைத்தையும் நீக்கினாய்; சச்சிதானந்தஸ்வரூபமாகப் ப்ரகாசிக்கின்றாய்; எதுவானாலும் பாதகமேதுமோ அதனாலின்றவுன்னை மிகவுந்தோத்திரஞ்செய்வோம்.—

௬௮. ஐக்கியவஸ்துவான தன்னைத் தரிசித்தல்.

காரணமில்லாமையும், நீயே நாதனாகியும், ஞானஸ்வரூபமாகியும், முடிவில்லாததும், தான்மாத்திரமாகியும் அண்டத்திலுள்ள ஜீவர்களுக்குக் குருவாகியுமிருக்கின்ற பரமாத்மாவான இறைவனே? உன்னை வணங்குகின்றேன். மேகங்களில் மறையாதபூரணசந்திரனைப்போல ஈனமான நினைவுகளில், மறைபடாதப்ரகாசஸ்வரூபமே? உன்னைவந்தனஞ்செய்வேன்.—

௬௯. பிரமாநந்தத்தி லிப்பாவமிருந்தா லில்லையெனல்.

நினைக்கின்ற மறைப்பொன்றும் இல்லாத விகாரமாய் அகண்டமுமாயிருக்கின்ற ஆநந்தஸ்வரூபத்தில் தானேப்ரகாசித்து, தனது வசமாகிய வெளது ஸ்வரூபத்தை நான் வணங்குவேன். அசையாதிருந்தும் அடங்கிய சாந்தமடைந்தும் அந்தந்தத் தொழிலில்லாததாம். சகல தொழில்களைச்செ

௪௦. சகலமுமாத் மாவினால் விளங்கு மெனல்.

ய்துமந்தப்பற்றில்லாததாம். — தளிர்களையசைக்கின்றகாற்றைப்போலமனமுதலானநடக்கின்ற அந்தக்கரணங்களை இந்த ஞானாத்மாவானவன் அசைப்பான்; வல்லமையையுடையசாரதி நடத்தாநின்ற குதிரைக் கூட்டங்களைப்போல, தன்னுடையதாகித் துன்பம் பொருந்த இந்திரியங்களனைத்தையும் சதாகாலமும் அவனே தாங்கும்.

௪௧. எவற்றினுள்ளும் விளங்குகின்றதெனல்.

— இவனே தேகேந்திரியங்களாற் றேடப்படுகின்றவன்; இவனே வாக்கினாற் றுதிக்கப்படுகின்றவன்; இவனே மனதினாற் றியானிக்கப்படுபவன்; இவனால் மரணமயக்கங்கணீங்கின; இவனே வெளியிலடையத்தக்கவன்; இவனன்றோ அறியத்தக்கவன்; இவனியாவரது இருதயகமலத்தில் இராநின்ற கானத்தையுடையவண்டாம்.

௪௨. முன்மறைந்த பொருளிப்பொழுது வெளிப்பட்டதெனல்.

—விருப்பமுற்ற போகங்களில் இராகத்துவேடமுமெனக்கில்லை; எதுவராத்தக்கதோ அதுவரக்கடவது; எது போகத்தக்கதோ அதுபோகக்கடவது; பாவமிருந்த இந்த வஞ்ஞானமென்னுஞ் சத்துருவினால் விவேகமென்கின்ற வருத்தமற்ற வஸ்துக்களனைத்தையும் நீங்கினேன்; ஞானத்தினாலந்தவஸ்துக்களைப் பெற்றேன். ¶ —

௪௩. பிரமஸ்வரூபமே தனதுஸ்வரூபமா மெனல்.

சாத்திரங்களில் வருந்தியவிவேகமுள்ள மனதினால் சம்சாரத்திலமுழ்ந்திய மனத்தைக்கெடுத்து, துன்பஞ்செய்கின்ற வகம்பாவநீங்கி, அத்துவிதமியானத்தினாற் றுவிதபாவனைவிட்டு, ஆசைவற்றநிலையில் ஒப்பற்றகேவலமாயிருந்தேன். வினையான பாவனையற்று, அகம்பாவநீங்கி மனம்போய், ஒருசெயலுமில்லாமல் தனக்குத்தானே சமானமான கேவலமாகிய பரிபூரணமானஞானாத்மாவில் எனதுஸ்வரூபமிருக்கும்.

௪௪. அகம்பாவநீக்கி யைக்கியமானேனெனல்.

ஆசையென்கின்ற பந்தத்தைக்கெடுத்து, சரீரமென்னுங்கூண்டை நீங்கி இறப்பையடைகின்ற வகம்பாவமென்னும் தனித்தபக்ஷியானது எங்கேபறந்து போயிற்றோ; குற்றமற்றநீயே நானுகும் நானேநீயாகுமென்கின்ற ஒன்றிரண்டாககூறும்சங்கதியினாற்றிரும்பவுமொன்றாய் மேலான நீயே நானாகவும் நானே நீயாகவும் ஐயிக்கியமானோம்.

௪௫. ஆத்மாவை வாழ்த்துதல்.

— நீங்காத சகத்தின் செல்வங்களனைத்தும உடையதாயிருந்தும் நீயில்லாமற்போனால், கண்ணில்லாதவர்களுக்கு பெரிதானவழகுமிகுந்த ஸ்திரீகளைப்போல ப்ரகாசிக்கமாட்டாது. நாசமில்லாத தெய்வமே சய, உபசாந்தம்பொருந்துமிடமே சய, வேதங்களனைத்திற்கு மதீதமான

¶ இ-ம். பொருளெல்லாமென்பது, சமாதியின்கண் ணவகவடாய் விளங்காநின்ற வாகந்தமெனக்கொள்க.

சசு. சமாதியடைதல். தே சய, வேதங்களுண்டானஸ்தானமே சய, § —உ
ண்டாகுங்காரணமே சய, எப்பொழுதுமிண்டாகாத
காரனமே சய, எங்ஙானுமிறக்கின்ற காரணமே சய,
எப்போது மிறவாதகாரணமே சய. இப்படியென்று
சிறக்கின்றமனதிற் றியானித்து, இரணியனதழகிய
புத்திரன்பரவிய பேதமற்றமேலான நிருவிகற்ப ச
சஎ. சமாதியநுபவத்தைக் கண்டல். மாதியில் ஆநந்தத்தையடைந்தான். —நிருவிகற்பமா
னசமாதியில் ப்ரகாசிக்கின்ற சித்திரத்தைப்போல
திரமடைந்து ஐயாயிரவருடங்கழிய மாறாத ஒரே
திருஷ்டியிலிருக்க, மாணிக்கங்கள் சூழ்ந்திருக்கின்ற
பாதாளலோகத்தில் வேந்தனில்லாமல் அவுணர்க ள
னைவரும் கருடன்முதலான பறவைக்கூட்டங்கள் கிரி
கிக்க, கலங்காநின்ற தடாகத்திலுள்ள மச்சங்களின்
சஅ. திருமால்சகத்தியை யாலோசித்தல். கூட்டத்துக்குச் சமானமானார். ‡ —இப்படியான
காலத்தில், சகலமாகிய சகங்களினது நீதிகளியாவை
யும் இரக்ஷிக்கின்ற ஸ்ரீவிஷ்ணுவானவர், திருப்பாற்
கடலில் அறிதுயில்செய்து துளிக்கின்ற மழையை
யுடைய கார்காலத்திற்செய்யும் நித்திரையை நீங்கி,
ஒருகால் இரட்சிப்புள்ளதிருவுளத்தில் உலகத்தினட
சகூ. இதுவுமது. க்கையை ஆலோசனைசெய்தார். — வேற்றுமையில்
லாத உபசாந்தபதத்தை பிரகலாதனடைந்திருக்க,
பிரமதேவன் சிருஷ்டியானது அழிவுற்றன ; கொடிய
வாளையுடைய நிசாசரர்கள் இல்லாததினுல் குற்றமு
ள்ளதானவர்களில்லையென்று போரற்று தேவர்கள
னைவரும் வுபசாந்தமாகிய ஒப்பற்ற மோக்ஷமடைவா
ருo. இதுவுமது. ர்கள்.—அமரர்களுபசாந்தத்தை யடைந்தால், பூமி
யில் முன்னிட்டுச்செய்கின்ற யாகங்களும், தவங்கள
னைத்தும்,கெடுவதாய், ப்ரயோசனங்களனைத்தும்பொ
ருந்தாமல் எல்லாநசிக்கும். ப்ரயாசமாகச் செய்யப்
பட்ட யாகாதிகிரியைக ளனைத்தும் நீங்கினுல் சகமா
னதடங்கிடும், தனிமையிற் சகமடங்கினுல் விளங்கு
ருக. இதுவுமது. கின்ற சிருஷ்டியழிந்துவிடும். —இப்படிப்பட்ட சிரு
ஷ்டியில்லாமல் சூரியசந்திரர்களோடும் யாவுமிறந்தா
ல், பின்பு நாமுமிந்தவுருவத்தைவிட்டு பேதமற்ற த
ற்பதத்தையடைவோம், நியமித்தகாலத்தைவிட்டு ம
த்தியில் பழமையானசகங்களனைத்துநாசமானுல்நினை
க்க நன்மையைக்கண்டிலம் ; இதற்குத்திரமானவுபா
ருஉ. இதுவுமது. யத்தை அறிந்தனம். — அசுரர்கள்வாழக்கடவது ; வா
ழ்ந்தால்யுத்தமுண்டாகும் ; யுத்தமுண்டானுல்தேவ
ர்களுண்டாவார்கள் ; தேவர்களுண்டானுல் யாகமுந்

§ இ-ம், விசாரத்திலுதித்த ஸ்வானுபூதியை மனனஞ்செய்து அதை நிதித்தியிற் காட்சிப்படுத்தி அறிந்ததென்பதாம்.

‡ இ-ம், ஸ்வானுபூதி மாத்திரமாய் விளங்கினுரென்பதாம்.

தவசுமுண்டாகும் ; அவைகளுண்டானல் ஆகியவொ
ப்பற்ற சிருஷ்டி யுண்டாகும் ; இவைகளல்லாவி
டில் சிருட்டியுங்கெடுமாதலால், குறைவற்ற அசுரேந்
திரனாகிய பிரகலாதன் இச்சரீரத்தோடு ஊழிகாலம்
௫௩. திருமால்சந்நிதியை யாலோசித்தல். வாழக்கடவன். — பரமேஸ்வரனல் இரட்சிக்கின்ற
தெய்வநீதியானது, ஸ்திரம்பொருந்தும்படி இந்தப்ர
காரஞ்செய்ய வேண்டுமென்று சிந்தனைசெய்த சிவ
ந்தகண்களையுடைய விஷ்ணுவானவர், சர்ப்பசயன
த்தைவிட்டு சத்தியலோகத்தையொத்த பெரிதான
பாதாளலோகத்தில் அசுரர்க்கரசனனபிரகலாதனது
௫௪. சமாதியினின்றுஞ் சாக்ஷாத்காரத்துக்கு வெளிப்படல். சமீபத்திலடைந்தார். ¶ — கருடவாகனத்தில் வசி
ப்பவனும், வெண்சாமரஞ்சேர்ந்திருக்கின்ற சிவந்த
கரங்களையுடைய இலக்குமி வாழ்கின்ற வலதுபக்க
த்தையுடையவனும், பஞ்சாயுதங்கணிறைந்த இரு
புறத்தை யுடையவனுமாகிய தேவர்களு முனிவர்க
ளும்வணங்க, அருள்செய்யுந் தலைவனை விஷ்ணு,
௫௫. சமாதியினின்றும் வெளிப்படல். பிரகலாதனை யறிவாயென்றனுக்கிரகித்து, —பாஞ்ச
சன்னியத்தொனியை யெழுப்பினன் ; ஆகாயம் பூமி
திக்குகள் பிளக்கும்படியாகவும், ஓங்கிய அதிராநின்ற
பேரொலியினல் நன்மையையுண்டாக்குகின்ற தற்ப
தத்திற்கலந்த நன்மையையுடைய பிரகலாதன் மெ
௫௬. இதுவுமது. ல்லமெல்ல அறிவுற்றான். — சைதன்யசத்தியானது
பிரமரந்திரத்தினின்றும் பிரிந்து முன்னுள்ள ப்ரகா
ரம் நாடிகளினல் எவ்விடத்துமமைந்து கலந்தலை
யுற்றனவாய் நவத்துவாரங்களிலும் பொருந்த பரா
பரத்தையறிந்த பிரகலாதனது அறிவுண்டாயிற்று.

௫௭. இதுவுமது. அறிவுண்டாய் உள்ளிற்பிராணனென்னும் கண்
ணாடியின்சாயையாகப் பிரதிபலித்து விடய வஸ்துக்
களைப்பார்த்து, அவ்வறிவானது வேறான விடயத்தில்
பிரிவற்றமுகமானது, கண்ணாடியினல் இரண்டாதலை
யடைந்ததுபோல, மனக்குணத்தை யடைந்தது —

௫௮. இதுவுமது. அற்பமாகமனது மூளைத்தமாத்திரத்தில், முகை
விரிந்த நீலோற்பலத்தைப்போல, அழகியகண்கள்
மெள்ளவிழித்தன. நிற்பதாகி யிருக்கின்ற நரம்புகளி
லும், இந்திரியங்களிலும், உணர்வுகணிறைய நல்ல
௫௯. இதுவுமது. பிராணவாயுவு மபானவாயுவு மெங்குநடந்தன.— அ
மைதியான தென்றற்காற்றிலகப்பட்ட தாமரைப் பூ
வைப்போல, பிரகலாதனசைந்தான் ; இமைநேரத்தி
னுள்மனதுதடிப்புண்டாய் தெரிகின்ற கண்ணும், ம

¶ இ-ம். சீவன்முத்தனன பிரகலாதன் விதேகமுத்தியை யடைந்தாற் பர
மேஸ்வர நியதி தவறிப்போமென் றாலோசித் தவனெப்போதுஞ் சீவன்முத்த
ன யரசிலிருக்கும்படி மனதிற் சிந்தித் தவனிருக்குமிடத்துக் கெழுந்தருளின
ரென்பதாம்.

னமும், பிராணனும், சரீரமும், ப்ரகாசிக்க, பொறு
மையின் மிருந்தபிரகலாதன் அருள் வடிவமுள்ள வி
௯௦. சமாதியினின்றும் வெளிப்படல்.
ஷ்ணுவானும்படி ப்ரகாசித்தான்.—விகசிதமாய்க்கண்
கள்பார்த்தன ; மனமும் பூரணமாக நிறைந்தது ; அ
ப்பொழுது அப்பிரகலாதனை விஷ்ணுவானவர் மிரு
க்கருணையுடன்பார்த்து அனுக்கிரகஞ்செய்வார் ; ப
ரிசுத்தமான பிரகலாதனே ? தேவேந்திரன் றுதிக்கின்ற
௯௧. சகசநிஷ்டையை யனுக்கிரகித்தல்.
உனது செல்வத்தைவிரும்பிப்பார்ப்பாய் ‡— சரீரத்
தைப்பார்ப்பாய், காலமெல்லாதகாலத்தி லனதுசரீரத்
தைவிட்டுவிட நினைப்பதென்ன, பற்றுதலும் விடுத
லுமாகிய சங்கற்பமானது னொராதவுனக்கு, அபாவ
மும் பாவமும் சரீரத்திற் றொடர்ந்தால் குறைவென்
ன, சமாதியைவிட் டெழுந்திருப்பாய், பரிசுத்தமான
௯௨. சீவன் முத்தனுக்கு மரணஞ் சிறப்பன்றெனல்.
பிரகலாதனே ? சீவன் முத்திப்பதத்திலிருப்பாய்.— சீ
வன்முத்தனுகிய நீ யிந்தச் சரீரத்தோடும் நீதியைக்
காக்கின்றவனும் சம்சாரபாரமில்லாமல் கற்பமளவு
மிருக்கக் கடவாய். அக்கினியானதெரிக்க பன்னிரண்
டு சூரியரெரிக்க சகமனைத்தும்கெடாமலிருக்க வீணு
௯௩. பெத்தனுக்குமரணஞ்சிறப்பாமெனல்.
க நீ மரணமடைவானேன்.—ஆசையாகிய கயிற்றினு
ல்கட்டுப்பட்டு பருகின்ற அந்தக்கரணமானது அப்
பாசமார்க்கத்திற்சென்று இளைத்து சம்சாரத்தைச்ச
மக்கின்றதொழிலினுல் மனம் சஞ்சலமானவர்களுக்க
ல்லவா, இமைபொருந்திய மரணமானது உலகத்திற்
௯௪. சீவன்முத்தனது ஆயுளேசிறப்பாமெனல்.
சிறந்திருப்பது.— அகப்பாவத்தைநீக்கி ஒர் பற்றில்
லாமல் சகலமும் சகத்தைக் யொடுக்கின்ற சமத்துவ
மானவர்கள் ஆயுளேசுகமாம், மிருந்தாரகமும் து
வேடமுமில்லாமல் உள்ளேகுளிர்கின்ற வழியினுல்
உலகங்களுக்குச் சாட்சியானவர்களுடைய ஆயுளே
௯௫. பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளெனல்.
சிறப்பாம். — பற்றுகின்றவனும் பற்றுகின்ற விடய
ங்களுமாகிய இவ்விரண்டும் சொல்லுகின்ற பந்தமா
ம் ; அதுமாட்டபோது உபசாந்தமுண்டாகும், அவ்
வுபசாந்தநிலையாக வடைந்தபோது மோக்ஷமென்று
ம்பெயராம். அந்தநிலையை நீ யடைந்தபடியால் வெ
ற்றியுள்ள வீர சிங்காசனத்திலிடத்தில் ப்ரகாசிக்
௯௬. பட்டாபிஷேகஞ் செய்யத்தொடங்கல்.
கும்படியாய் இருப்பாய். — ஒலியைச் செய்கின்ற
சங்கத்தொனியினுல் சத்திக்க, குற்றமற்ற தேவர்கள்
மங்கலத்தொழிலைச்செய்து துதிக்க, சித்திரத்தி லெப்
போதுமானே உனக்கு மகுடத்தைத்தரிப்பன், கற்
பகாலபரியந்தம் நீ யாசாகஞ்செய்யக் கடவாயென்று

‡ இ-ம். சமாதியினின்றுக் திரும்பினவனைச் சகத்திற் சர்வப் பிரமையமாய் விளங்குகின்ற நிதிசயாகத்தமான வனதுசெல்வத்தைப் பாரென்றனுக்கிரகஞ் செய்தாரென்பதாம்.

௬௭. பட்டாபிஷேகந்தரித்தல்.

அநுக்கிரகித்து, — மங்கலதீர்த்தங்களை கொண்டு வருகவென்று சொல்லி அபிடேகஞ் செய்துவித்து, சங்குசக்கரத்தைத் தரித்திருக்கின்றகரங்களினால் சுயமாக தேவர்குழாங்கள் தோத்திரஞ்செய்ய, அழகிய இரத்தின கிரீடத்தைத் தரித்து, விஷ்ணுவானவர் அசுரேசனை பிரகலாதனுக்கு இவைகளைச் சொன்னார். — அசைத்தற்கரிய மகாமேருவும் பூமியும், சூரியனும், சந்திரனுமாகிய இவர்கள் உள்ள காலங்களெல்லாம் அரசாக்ஷிசெய்து உயர்வாகக் கடவாயென்றநுக்கிரகஞ்செய்து, பொய்யாகிய மாயையினது ஒரு சிருஷ்டியானது மறைதலைப்போல க்ஷணநேரத்திலிருந்த தேவர்கள் கூட்டத்தோடும் விஷ்ணுமறைந்தார். ¶ —

௬௮. எப்பொழுதுஞ் சீவன்முத்தனா யிருக்கும்படி யநுக்கிரகித்தல்.

௬௯. ஆத்மாவிற்கரைந்த மனம் எங்ஙனம் வெளிப்பட்டதெனின்.

என்றுசொல்லிய வசிட்டமுனியை இராமன்பார்த்து, அப்படிப்பட்ட வசுரர்களுக்கு இராசாவாய் மோக்ஷமடைந்த ஞானவான், அவனது மனம் உண்மையான பிரமத்தில் தன்மயமானபின்பு விஷ்ணுவினுடைய சங்கத்தொனியில் உண்டான தெந்தப்பிரகாரம், — என்றுகேட்க, இராகவருக்கு அரியதவமுடைய வசிட்டர்சொல்லுவார். அக்கினியில் வறுக்கப்பட்ட விதையாமென்று சொல்லும்படி சுத்தவாதனையானது சம்சார பாரமில்லாத சீவன்முத்தர்களனைவர்க்கும், இருதயத்திலிடத்தில் சகநமென்னுமுளையானது, திரும்ப வில்லாததாகவேயிருக்கும். —

௭0. மனதுருவநாசமாயருவத்தோடு மிலாப லாபங்களின்றிச் சீவன்முத்த ரிடத்திற் சுத்தவாசனையாகத் தங்கியிருக்குமெனல்.

௭௧. சுத்தவாசனையிருக்கின்ற கிரமத்தைப்போதித்தல்.

பரிசுத்தமாகியும், பிரமயாகியும், தோற்றம் உண்டாதல் வுதாரமாகியும், சுத்தமானசாத்துவித குணத்தைப்பொருந்தி விட்டுவிடாமற் கலந்ததாகியும், பரிசுத்தமான ஆத்துமசத்தியான மயமாகியும், ஓராரம்பமுமில்லாதாகியு மிருக்கின்ற சுத்தவாதனையானது, எப்போதும் சுழுத்திவாதனையைப்போலச் சீவன்முத்தர்களிடத்தி லிருக்கும். —

௭௨. அடங்கியிருந்த சுத்தவாசனை வெளிப்படுமெனல்.

ஆயிரவருடமானாலும் சரீரமான திருந்ததனால் உள்ளம் மேவியிருக்கின்றதாகிய அச்சுத்தவாதனையானது, மிருதுவாக ஒருபக்கத்திலிருந்து சீரணத்தையடையாததா யுண்டாகும். மிகுந்த அவ்வசுத்தவாதனையினால் பரிசுத்தமான நன்மையையுடைய சீவன்முத்தர்கள் விழித்துக்கொள்வார்களென்று சொன்னார். ‡ —

பிரகலாதன்கதை முற்றிற்று.

¶ இ-ம். நியதிப்படி இத்தேகத்தோடுஞ் சீவன்முத்தனாய்ச் சகசானந்தமயமதியாகச் சுகித்திருக்கும்படி யநுக்கிரகித் தெழுந்தருளினா ரென்பதாம்.

‡ இ-ம். சீவன்முத்தனது, பிராரத்த மனுபவிக்கு மிமித்தம் பரத்திற்கலந்த மனது பரமாகவே வெளிப்படு மென்பதாம்.

காதிகதை.

அவதாரிகை.

முன்கதையில் உபாசனாமூர்த்தி யனுக்கிரகத்திலுண்டான விசாரத்தால் சுவானுபூதி ப்ரத்யக்ஷமாய்த் தன்னைத்தவிர சகமில்லையென்றறிந்ததையறிவித்து, இவ்வாத்மானுபவ முண்டாவதற்கிடரான மித்தையாமாயையைத் தரிசித்து அதை நீக்கவேண்டுமென்பதை யறிவிக்கு நிமித்தங் காதிகதையை நிரூபிக்கிறார்.

க. மாயாவிசித்திர மறிவிக்கத் தொடங்கல்.

சநநமரணமென்னும்நாமத்தையுடைய, இம்மாயையினதுபெருமையை முடிவுண்டாகச் சொல்லக்கூடாததாம். மிகவும்பெரிதாகிய தனதுமனதைச் செயித்தால் நாசமாம்; அப்படியல்லாமல் மற்றொருவகையினாலும் தள்ளக்கூடாது. சிறப்புள்ளவலிய சகத்மாயையின்மிகுதியிலிருக்கின்ற அதிசயந் தோற்றும்படி நினக்குச்சொல்லுங்கதையை, மறதியற்றசித்தத்தையுடையவனாய் கேட்பாயென்று, மனுகுலத் திறைவனான ஸ்ரீராமனுக்குவசிட்ட முனிசொல்லத் தொடங்கினார். —

உ. காதிதவத்துக்காக மகாவிஷ்ணு ப்ரசன்னமாதல்.

பூலோகத்தில் கோசலமென்னுந் தேசத்தில்பிராமணசிரேஷ்டன்காதியென்று வழங்குகின்ற நாமத்தையுடையவன், ஒரு காரியத்தை மனதினினைத்து உறவினரை விட்டு ஒருவனத்திற்புகுந்து ஒரு தடாகசலமத்தியில் பொருந்தி அழகிய கண்டமட்டும்முழுகின்று நல்லதவத்தைசெய்து எட்டுமாதஞ்சென்ற காலத்தில், பெருமை பொருந்திய கிருபையினால் விஷ்ணுவந்து அக்காதியின் முன் ப்ரத்யக்ஷமாய், உனதுகருத்தென்ன தருகின்றோ மென்று சொல்லவும், —

௩. மாயையைத் தரிசிக்க வேண்டல்.

சலத்தினின்றுங் கரையில் வந்து காதியென்கின்ற தவத்தையுடையபிராமணனானவன் நமஸ்கரித்து, உலகமென்னுமண்டலத்தில் அளவற்ற வாத்மாக்களுடைய இருதய தாமரையில் நீங்காதிருக்கின்றபிரமமே! அச்சுதா! அநந்தனேயென்றன்பினாற்றுதித்து, நிச்சலமான பிரமத்திற் கலந்திருந்து பிறப்பிறப்பின் வடிவத்தினால் உலகங்களாய்ச் சஞ்சலப்படாநின்ற வதிசயத்தை செய்வதா யிருக்கின்ற நீ படைத்த மாயாஸ்வரூபத்தை தரிசிக்கும்படியருள்வாயென்று, — பிராமணன் பிரார்த்திக்க,

௪. மாயையைத்தரிசித்ததை நீக்குவாயென்றருளி யேகுதல்.

மாயையைக் காணக்கடவாய், நீ பார்த்தையேயானால் அதை நீக்கக்கடவாயென்றனுக்கிரகித்து, திருமாலானவர் கந்திருவ நகரத்தைப்போல மறையவும், பிராமணன், கருணாஸ்வரூபியை தரிசித்த சந்தோடத்தினால் எப்போது மகமகிழ்ச்சியடைந்து, அவ்வனத்தில்தவத்துடன் சிறிதுநாளிருந்து, தானேயொருதினம்

மனதில், விஷ்ணுவானவ ரருளிச்செய்த வாக்கியத்
தைச்சிந்தித்து, தேனுள்ள தாமரைப் பூக்கணிறைந்
௫. மாயையை த்தரிசித்தல். ததடாகத்தில் மூழ்கும்படி சென்று, — தீர்த்தத்
தில் மூழ்கி, அச்சலத்தில் செய்யப்பட்ட விதிப்படி
க்கு வேத மந்திரங்களையும், தியானங்களையும், காதி
யானவன் மறந்துவிட்டு, பந்துக்களிருக்கின்ற தனது
வீட்டில், தன்னை வியாதியினால் மரித்தவனாகவும்
பந்துக்களனைவரும் இரண்டுபக்கத்திலும் கூடிக்கொ
ண்டுகதறவும், பாரியாள் காற்கடையில் விழுந்தலர
வும், புத்திரவாஞ்சையையுடைய வன்னையானவள்,
தன்னியபானம் பண்ணக் கொடுப்பனபோல கட்டி
க்கொண்டு அக்கினியை மிதித்தவள்போல பதைப்
௬. இதுவுமது. பதைத்துத் தளர்ச்சி யடையப்பார்த்தான். — இச்
சமயத்தில், அதற்கடுத்த காரியங்களைச்செய்து அழா
நின்ற வுறவினர்கள், அக்கினியை மூள்விக்க, சரீரமி
யாவும் சாம்பராகி மயானத்திற் பொருந்தப்பார்த்தா
ன், அந்தத்தீர்தமத்தியில் இருக்கின்ற காதிதன்மன
தினுள் குற்றம்பொருந்தியவருத்தமிகுந்த புத்தியினா
ல்குற்றமற்ற தன்னிடத்தில் தன்னா லுண்டாகப்பார்
த்த மயக்கம்பொருந்திய கிரியைகள், மேனடக்கின்
றயாவையும், ஸ்ரீராமா? கேட்பாயென்று வசிட்டமு
னிசொல்லத் தொடங்கினார். — இந்தப் பூமியில்
௭. இதுவுமது. ஊணதேசத்தில் ஒரு நகரத்தின் முடிவில் இராநி
ன்ற நீசனென்னும் நாய்க்கெரிப்போர்கள் குலத்தில்,
கரிய ப்ரதமைபோன்ற வொரு பெண்ணினது வயற்
றிலொரு கருப்பமாய் வருத்தமுற்று வளர்ந்து சனி
க்கும்பருவம் வந்தபொழுது கைக்குழந்தையாகப்
பிறந்து வளர்வுற்று, வெந்துபோன கரிக் கட்டை
யைப்போல நிறத்தையுடைய ஆண்மகனாய், இழி
விற் றனக்குத்தானே சமானமாகி, நாய்க் கெரிப்போ
ருடையவமிசத்தில் பிறந்த வொரு நீசப்பெண்ணை
௮. இதுவுமது. கலியாணஞ்செய் தொற்றுமையானான். — மலைக
ளிலும், வனங்களிலும், முதலிய எவ்விடத்திலும்
மனதும் பிராணனும்போல் ஒத்துவாழ்கின்ற காலத்
தில், பூமியின்மேல் தனதுவமிசம் விளங்கும்படிபிள்
ளைகளைப்பெற்றான். சிறிதுநாளில் மூப்புவந்தடை
ந்து நரைமிக வுண்டாகவும், தழையாற்செய்த வீடு
தூரத்திற் கட்டிக்கொண்டு மகா தபசிகளைப்போல
அதில்வசிக்கின்றகாலத்தில், தனது பிள்ளைகளுக்கும்
௯. இதுவுமது. மூப்புவந்து பொருந்திற்று. — பாரியாளுக்கும் பிள்
ளைகளுக்கும் தனக்கும் ஒருமித்து மூப்பு வந்ததைப்
பார்த்து வருத்தப்படுகின்றகாலத்தில், தன்னை நீங்க
லாக எல்லாரையுங் காலன்கொல்ல, எப்பொழுதும்

வாய்விட்டழுது தனிமையிலிருப்பதைச் சகிக்கமா
ட்டாமல் நினைவுகெட்டு ஓராசையு மில்லாதவனாய்
அனேகதேசங்களில் வெகுகாலஞ் சுற்றிநின்றவன்,
கீரமென்கின்ற நதியையுடையதேயத்தில் ஓராசன
து பட்டணத்திற்புகுந்து, விண்ணுலகத்திற் சொர்
ணமயமான வீதியைப்போலிருக்கின்ற ஒருவீதியிற்
௧0. மாயையைத் தரிசித்தல். செல்லும்போதில்,—இந்நகரத்தரசன் மரணமடைந்
தனன். பூமியையிரக்ஷிக்க வேறோராசனை எடுத்துக்
கொண்டு வரத்தக்கதாக வுறக்கப்படி. சொர்ணங்களி
னாலும் நிறைந்த இரத்தினங்களினாலும், அலங்காரஞ்
செய்து அனுப்பிய பட்டத்தியானையானது, அரசனை
யென்று தேடிக்கொண்டு சேரோவா, கழுத்துவருவத்
தொடிருக்கின்ற இந்தநீசனை அந்தயானைபார்க்கவும்,
துதிக்கையினால் மத்தகத்திலேற்றிக்கொண்டு சூரிய
னோடுஞ்செல்லுகின்ற உதயமலைக்கொப்பாய்ப் பலவா
௧௧. இதுவுமது. த்தியங்களோடு, — எட்டுத்திக்குகளும் சப்தமயமென்
றுவனைக்கும்படியெய்துவினை, இவனே அரசனென்று
அறைகையுடையஸ்திரீகள் அலங்காரஞ் செய்தார்கள்.
பழயமந்திரிகளும் சேனாதிபதிகளும் பணிவைத்தலை
மேற்கொண்டார்கள். பூமிபாலனாய் பூமியெங்கும்
நீதியை முறைமையிற்செலுத்தி முறைமையினால்
கவலையென்கின்ற வண்டப்பற்றலை நாமகுறித்து, சோ
லைப்பறக்கைகொடுக்க வதாக்கையுடைய மாதுர்க
ளிச்சிக்கும்படி, கீரதேசத்தில் விளங்குகின்ற இர
த்தின சிம்மாதனத்தின்மேல் விளக்கத்தின் மிருந்
௧௨. இதுவுமது. தான். — இப்படி எட்டுவருடம் மேலான கவலையெ
ன்றுமாமத்தையுடைய கயிற்கெரிக்கு நீசனாவன்
லோந்திரனைபோற்றுவாருக்கில், ஒருதினத்திற்றனி
த்தவனாய் சரிரத்திலுள்ள வாபரணங்க ளனைத்தையு
நீக்கி, தானொருவனாக விட்டுகொண்டு வெருப்பற
த்தில்நீசவேடத்தோடுமலைவத்ததாத்தில், அங்கே
டத்திலறியமிறத்தையுடையவர்கள் வீறுதைத்தை
நிறைக்கின்றகையுடையவர்கள் கைப்பெரிக்கும்
௧௩. இதுவுமது. கண்டார்கள் எதிரேவந்தவர்கள் — அவர்களில்
ஒப்பற்ற கரியமிறத்தையும் சிவந்த நேத்திரங்களையு
முடைய மூப்புள்ளவனொருவன், விளக்கமுடைய நல்ல
கீரநாட்டுக் கதிபதியானவனை பார்த்தமாத்திரத்தில்,
ஆசைபோடும் கடைந்தவென்கிற பிறியினாலும்ற
பழையமாமத்தைச் சொல்லி, பழைய வுறவாயிருக்கி
ன்ற நீ எங்கேபோனாய்! வாசஞ்செய்வ தெங்கிடம்!
நல்லதுழ்ழிறைவ இப்பொழுது பார்த்தேனென்று இவ
ன்வம்சத்தின் பிராமங்களைத்தையும் உள்ளாகா
௧௪. இதுவுமது. ரம் தெளியச்சொன்னான். — தனது நீசத்தன்மை

யைச்சொல்லிய அந்தணேசனே, கவலனென்னு மன்ன
னவன் நிந்தித்துப் பெருஞ் சத்ததுட னதட்டி
அவ்விடத்தினின்றும் சீக்கிரமாக அந்தப்புரத்துக்
குச்செல்லுதலும், இவைகளனைத்தையும் கனம்பொ
ருந்திய குண்டலத்தையுடைய இராசஸ்திரீகள் பல
கணிவாசலினின்றும் ப்ரத்தியக்ஷமாகப் பார்த்து,
அதிசயத்து, அவ்விடத்திருந்த மந்திரி முதலியவ
ர்கள் நின்றவிடத்திலேகண்டு, பூமிக்கரசனான இ
வன்கடையனுகிய சண்டாளனுரும், மேலென்ன செ
ய்யத்தக்கது என்று திடுக்குற்று ஏக்கமுற்று துன்ப
த்தையடைந்தார்கள். இவ்வரசன் கலங்காமல் மன
திற்சிந்தித்து. — அவைகளனைத்தையும் அறியாதவ
கரு. மாயையைத்தரிசித்தல். னைப்போல மறைத்துகொண்டு முன்னேயைப்போல
சிம்மாதனத்திலிருக்கவும்; அவ்வரசனே முன்ன நெ
ருக்கமாகிய மாதரும், அமைச்சரும், மற்றுள்ளவர்க
ளும், பரிசிக்கக்கூடாத பிரேதத்தைப்போலபார்க்கா
தவர்களாய், அவ்விடம்விட்டு நீங்காமலிருந்தார்கள்,
அந்தச் சனங்களோடு கூடியிருந்தும் வேற்றுமையா
கி இவன்றனியேயிருந்த குணத்தைச்சொல்
லில், அறிவுநிறைந்தவித்தையும் திரவியமும் எதுவு
மில்லாமல் மறுதேயத்தில் பொருந்திய வழிநடப்ப
கசு. இதுவுமது. வனைப்போலுமாம். — அத்தருணத்தில் சகலரும்
புலையனுகிய நாய்க்கெரிப்போனென்பவனுல் வெகு
நாள்பாவத்தையே யடைந்தோம்; பாவம்போ யினி
மேலொரு பிராச்சித்தத்தினுலும் கதியை யடையமா
ட்டோம், பரிசுத்தமாகும்பொருட்டு அக்கினியிற்
ப்ரவேசிப்போமென்று நிச்சயஞ்செய்து, அப்பட்ட
ணத்திலுள்ளசகலரும் குழந்தைகள் முதலாக வார்த்
திகர்கள் பரியந்தம் ஒருமிக்கக்கூடி, சண்பகப்பூவில்
மொய்க்கின்ற கிருமிகளைப்போல, அக்கினியிற் ப்ர
வேசித்தார்கள். அரசனுகிய சண்டாளன் மிகவுந்
கஎ. இதுவுமது. துன்பமுற்று, — நன்மையான கூட்டத்தைச்சேர்ந்த
த்தினுல் மனந்தெளிந்து நன்மையுண்டான நாய்க்கெ
ரிக்கின்ற நீசராசன் சிந்திப்பான். கீழ்மையான நமது
தொடர்ச்சியினுல் இந்தத்தேயத்திலுள்ளவர்கள் கீழ்
மக்களாகி அக்கினியிற்பிரவேசமாய் நாசமடைந்தா
ர்கள்; துன்பத்தோடும் இனியிருந் தென்னவென்று
சிந்தித்து உயிரைவிடும்படி நிச்சயித்து அக்கினியிற்
ப்ரவேசிக்கும்போது, அனலிற்பட்ட தளிரைப்போ
லசிவந்தவக்கினியானது கடைஞ்சன் சரீரத்திலெரிக்
க, சலத்தின்முழுகியிருக்கின்றகாதியின் சரீரமானது
பதைபதைத்தது; — மகாமாயையினின்று நீங்கிதெ
கஅ. இதுவுமது. ளிந்தகாதியானவர், நான்குகடிகையில் மயக்கநீங்கி,

நாமார், என்னபார்த்தோம், என்னசெய்தோமென்று சகலத்தையு மனதினினைத்து, நீரினின்றுங்கரையேறி, அம்மா! இப்படியல்லவா சீவர்களனைத்தும், காட்டினுள்ளிருக்கின்ற கோபமுள்ள வியாக்கிரமத்தைப்போல வோடி, குற்றரிறைந்த பிராந்தியில் மனமயங்கி சஞ்சலப்படுகின்றாரென்றுநினைத்து, துன்பநீங்கினான். ¶ — அந்தநினைவோடும் சிலதுநாட்கழித்து ஆச்சிரமத்து இருந்தான். அவ்விடத்தில் ஓரதிதிவர, மிகுந்தமகிட்சியோடும் தேனும் பழங்களும் விருப்பத்துடன்புசிப்பித்து, சூரியாஸ்தமனமான சந்தியாகாலத்தில் தங்க ணியமங்களைச்செய்து, தகைமையான சயனங்களைச்சேர்ந்து, இரண்டுபேர்களும் ஆத்மஞான சாஸ்திரங்களிலுள்ளகதைகளை பேசுகின்றசமயத்தில், கூடச் சயனித்திருக்கின்ற அதிதியை காதிமுனியானவர்பார்த்து, உத்தமமாகிய முனியே? உனது சரீரமுலர்ந்து தளர்வடைந்ததென்ன.

௧௯. காதிமுனி கண்ட சாக்கிர சொற்பனந் தீர்க்க, சொற்பனமாயறிவிக்குகிமித்தம்வந்த அதிதியைவினவுதல்.

௨0. முனிவினவுக் கதிதி யுத்தரங்கூறல்.

என்றுகேட்ட காதிமுனிக்கு அதிதிசொல்லுவார். இப்பூமண்டலத்தில் வடதிக்கில் செல்வம்விளங்கிய தெளிவான்புகழையுடைய கீரமென்கின்ற தேயத்தில் அன்புள்ளவர்கள்விரும்ப நானொரு மாதமிருந்தேன், சிரமந்தீர யான் வசிக்கின்றவூரில் ஒருவனென்னிடத்தில்வந்துசொல்லுவான், இந்தநாட்டுக் கிராசாவாய் இந்தவூர் மாறுபட்டுப்போகாமல் எட்டுவருடம் இவ்விடத்தொருவன் அரசபோகமனுபவித்து, பின் பவனது நாய்க்கெரிக்கு நீசனென்கின்றமரபுதெரிய. —

௨௧. இதுவுமது.

அவ்வரசன் அக்கினியிற்ப்ரவேசித்து மாணமடைந்தான். அவ்விடத்தில் பிராமணர்கள் அக்கினியிற்ப்ரவேசித்திறந்தார்கள் எத்தன்மையென்று சொல்வேன்! என்று சொல்லக்கேட்டு, அத்தேயத்தைவிட்டுப்போய் அலைகளையுடையதேவதீர்த்தமானபிரையாகையென்னு நதிதீரத்தில் அப்பாவத்தை நீக்கும்பொருட்டு, தனக்குத்தானே சமானமான வேதவிதியினால் பிராச்சித்தங்கள்செய்து சாந்தராயண விரதஞ்செய்திளைத்தேன். — இப்படியென்று அதிதி சொல்லவும், காதிமுனி நமதுசரித்திர மிதுவென்று தனது தனிமையான மனதிலாச்சரிய மிகுந்து, தனக்குள்ள நீசடையாய்விரும்பி, முன்விளங்கிய வியல்பைக்காண முன்னுள்ளதேசங்களை நீங்கிப்போய் ஊனமண்டலத்திற்புகுந்து, தான்பிறந்து வாசஞ்செய்தவிடங்களனைத்தையும்பார்த்து— முன்புதான்பார்த்தவண்ணம் சகலத்தையுங்கண்டு, நெருங்கியசடா

௨௨. முனியானவர் நீசனாய்ச் செனித்த விடங்காண்டல்.

௨௩. முனியானவர்நீசனாயரச

¶ இ-ம். காதிமுனி ஈஸ்வரானுக்கிரகத்தினால் மாயை நீக்கும்பொருட்டதன் தூற்கடனு கடனு சாமர்த்தியத்தைத் தரிசித்தாரென்பதாம்,

செய்த விடங்கா ண்டல்.

மகுடத்தை மிகவுமசைத்து மனதிலதிசயித்து பிரம தேவனது நானுவிதமான தொழிலைப்பார்த்தும் மே ைடந்தான், அந்த ஞானமண்டலத்தைக்கடந்து அற ருவிளங்கிய ஸ்ராட்டை நெருங்கிவந்து தான் முன் னாகசெய்த சகலத்தையும் குறைவில்லாமற் கண்டு கேட்டுமுணர்ந்தான். †—முன்சொல்லியவிஷ்ணு வானவர் எமக்குத்தெரிவித்த மகாமாயையானது இதுதானே, ஆச்சரியமானவிதை அறிவினுல் நன் ருகத்தெரிந்துனமென்றுநினைத்து, சீக்கிரமாக அந் தேசத்திலிருந்து நீங்கி பெரிய மலைச்சாரில்வந்து ஒப்பற்றதவத்தையுடையவன், ஒரு உள்ளங்கைநீ ர்த்தம்புசிப்பாகி விஷ்ணுசந்தோஷிக்கின்ற அரியத வத்தைச்செய்தான்.

உச. சாக்கிரசொற்பனமானது சாக்கிரமாயினதை விசாரித் தக்கனவ்தோற்றிவித்த மாயையிய நீக்கி ஞானமடையு நிமித்தமூர்த்தி யுபாசனை செய்தல்.

— ஒருவருஷத்து சென்றமாத்தி ரத்தில் அந்த மலையினதுபக்கத்தில் அரியதவத்தை யுடைய காதியினுச்சிரமத்தில், விஷ்ணுவானவர் நீல மேகத்தைப்போற் ப்ரத்தியக்ஷமாய் யிருந்து தவ சையுடைய காதிமுனியைப்பார்த்து, இவ்வண்ணமா மாகவிளைந்த வெம்முனையுடைய மாயையினதுமகிமை யைகபாவமாகப்பார்த்தாய், இனிமேல்வேண்டுவதெ ன்ன? மலையிற்செய்கின்ற மெய்யானதவம் இயாது? நிமித்தமென்றுகேட்க,

உரு. மூர்த்தி ப்ரசன்னமாய் மாயையைத்தெரிவித்தோம், மேல் வேண்டியது இயாதென்று வினுவுதல்.

— தோத்திரஞ்செய்து வண ங்கி நமஸ்காரஞ்செய்து கரியவுயர்வுள்ள மேகத்தை ப்பார்த்து பூரித்த சாதகப்பக்ஷியைப்போல மகிழ்ச் சியையுடைய காதிமுனியானவன், அழகிய திருபா திருஷ்டியையுடைய விஷ்ணுவைப்பார்த்து, பிரபுவே நீகாட்டிய கன்மாந்தகாரமான மாயையை ப்ர யாசமாக இப்படிப்பட்ட தென்றறிந்தேன்; வைராய த்துதித்த வந்தமாயையினது, ஆச்சரியத்தை யா னறியவில்லை; பிராந்தியானது சத்தியமான தென்ன வென்றுகேட்டான்.

உசு. சாக்கிர சொற்பனஞ் சாக்கிரமான வத்தரங்கம் இடாதென முனி வினவுதல்.

— விஷ்ணுவானவர் அதற்குச் சொல்லுவார். பிராமணு? இப்படியிருக்கிய சகலமும் மனதினிடத்திற்பொருந்த இருப்பதேயல்லாமல் புற ம்பிலிருப்பது ஒருகாலத்திலு மில்லாதுதாம். காரண மில்லாதசொற்பனமும், பிரமையும், மதமுமயக்கமெ யமார்க்கங்களிலேயாவரும் ஒழுங்காகப்பார்த்து அனு பவிக்கின்றார்கள், சித்தத்திலுள்ளனவே சகலிருப்ப தாம்.

உஎ. மாயையின் அந்தரங்கத்தைப்போதிக்கத் தொடங்கல்.

¶—அனவின்றிப் பரந்திருக்கின்ற சகக் கூட் டங்களனைத்தும், அளவில்லாமல் அமர்ந்திருப்பதற்

உஅ. இதுவுமது.

† இ-ம். முனிபானவர்கண்ட சாக்கிரசொற்பனத்தைச் சாக்கிரமாக விஷ்ணு சொல்லியதைக்கேட்டு அதை ப்ரத்தியக்ஷத்திற்பார்த்து இதுதான் மாயாவிசித்ரமென் றறிந்தானென்பதாம்.

¶ இ-ம். மயக்கத்திற்றோற்றிய ப்ரபஞ்சஞ் சத்தியமாகத்தோற்றினதை யறி விக்குநிமித்த மித்தையானமனமே ப்ரபஞ்சமாமென் றறிவித்ததாம்.

ஷிடமான மனதினால், இக்கடையனுடைய நீசத்தன்மையை வெளிப்படுத்தினால் இதி லதிசயமென்ன, மிகுதியான பத்திப்பாச்சலின் ப்ரதிபாமாத்திரத்தின் வசத்தினால் கடையான நீசத்தன்மையை அறிந்துளதாம் ; முன்புதொடர்ந்துவந்த அதிதியும் அந்தப்ரகாரமே மயக்கங்களனைத்தையும்பார்த்தான். —

௨௯. மாயையின் அந்தரங்கத்தைப் போதிக்கத் தொடங்கல்.

பார்த்த வந்தப்ரகாரமே நாய்க்கெரிக்கு நீசத்தன்மையை, காகதாலீயசம்பந்தத்தினால் வண்டுகள் வாசஞ்செய்கின்ற ஊணமண்டலத்துங் கீரமண்டலத்துமுள்ளவர்களுடைய மனதிலும் பத்திபாய்ந்துள்ளது, எண்ணுகின்ற விரண்டு பத்திபாச்சலும் ஏககாலத்தில் அளவற்றபெயர்களுக்கும் முன்னே தோற்றும், சொல்லப்பட்ட மனத்தன்மையானது காகதாலீயஞாயத்தைப்போல அதிசயமானநடையாம். —

௩௦. இதுவுமது.

அப்படியல்லவா ; ஒரு சொற்பனத்தையே அளவற்றமனிதர்கள் தனித்தனி பார்ப்பார்கள். கைவசமான வொரு விளையாட்டினால் குழந்தைகள்பலர் களிப்பார்கள், சொல்லிய கடைஞ்சனாகிய அந்த நீசனானவன் ஊணமண்டலத்திலுள்ள அழகியவீட்டில் தவறும லக்குறிப்பினால் அந்தப்ரகாரமே முன்னே

௩௧. இதுவுமது.

பிறந்திருந்தான், — அக்காரணத்தினால் உறவினரனைவருமரணமடைய அயலான நாட்டை யடைந்தான். வெண்கொற்றக் கொடைநிழலைச்செய்ய கீரமண்டலத்தில் இராசாவாகி பின் பக்கினியிற்ப்ரவேசித்து, உத்தமமான உன்மனதில் வீணைகினைக்கின்ற சம்மந்தமாயிருக்கின்ற வதனால் நீசனியல்பானது அந்தப்ரகாரமாக ப்ரதியலித்தது. ‡ —

௩௨. இம்மாயையின் மயங்கினவர்கள் அஞ்ஞானியென்றும் மயங்காதவர்கள் ஞானியென்று மறிவித்தல்.

இவனென்றும், அவனென்றும், நானென்றும், இதுவென்றும், அதுவென்றும், எனதென்றுஞ்சிந்திக்கின்ற அறிவில்லாதவர்கள் துன்பத்திலழுந்துவார்கள் ; பூமிமுதலியவனைத்தும் யாமென்கின்ற வுண்மையை யறிந்தவர்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியையடையார்கள் ; பூமியில்

‡ இ-ம். சகலகற்பனையும் வைத்திருக்கின்றமனம் ஓர்காலத்திலொன்றைவெளிப்படுத்தி லதிலென்ன வியப்பென்றும், காகதாலீய ஞாயத்தைப்போல வுன்மனதில் நீசத்தன்மை பத்திபாய்ந்தபடியே யதிதிமனத்தினுங் கீரமண்டலத்தார்மனத்தினும் ஏககாலத்திற் பத்திபாய்ந்தபடியால் விசித்ரமாகக் காணப்பட்டதென்றும், அநேக ரொரு சொற்பனங் கண்டதுபோலச் சொல்லப்பட்ட யாவருமேககாலத்திற் நீர்க்க சொற்பனமென்னு முனது நீசப்பிறப்பையு மரசாக்ஷியையு மக்கினி ப்ரவேசத்தையுங் கண்டார்களென்றுஞ் சொற்பனங்கண்ட டொருவன் ஏகதேசத்திற், சாக்கிரமாய்க் காணப்படுவதுபோல வுனக்குத்தோற்றின சாக்கிரசொற்பனஞ் சாக்கிரமாகத் தோற்றினதென்று மறிவாயென்பதாம்.

நிறைந்த வஸ்துக்களில் வேற்றுமையுள்ள மனதினால் பாவனையோடு புத்தியிற்பொருந்தமாகி அதில் ஆசையை யடையமாட்டார்கள்; இவ் வஞ்ஞானிகளின்மயக்கத்தில் தத்துவஞானத்தை யறிந்தவர்கள் வருந்தமடையார்கள்.— ஞானமானது, பூரணத்தை யடையாததினால் மனதில்பொருந்திய மயக்கத்தைப் பார்த்து, இழிவென்றுதள்ள வறிந்தாயில்லை; இதனை யிம்மயக்கத்தில் க்ஷணத்தில் நீ மிகவு மகிழ்ந்தனை- இம் மிகுந்தமோகமென்னுஞ் சக்கரத்துக்கு மனதே யச்சாகும்; அம்மனதை விவேகவல்லமையினாற் கெடுக்கில் அம்மாயை வருத்தமாட்டாது. ¶ —

௩௩. இம்மாயையின் மயங்கினவர்கள் அஞ்ஞானியென்றுமறிவித்தல்.

நீயெழுந்திருந்து மலையின்குகையினிடத்தில் பத்துவருடம் தவத்தைச்செய்தால், பூரணமாய் முடிவொன்றுமில்லாத மெய்ஞ்ஞான முதிரக்கடவாயென்றனுக்கிரகஞ்செய்து, பின்பு விஷ்ணுவானவர் வணங்குதற்குரிய தோற்றமானவடிவம் எழுந்தவிடத்தின்மறைந்துபோக, துன்பம்பொருந்திய மயக்கங்கள் விடுபட்டு, குற்றமற்ற காதிமுனியானவர், கற்பனைகளனைத்தையும்பற்றில்லாமற்கெடுத்து, அரியதவத்தைச்செய்தார். — பத்துவருடத்தில் ஞானத்தாற் பூரணமானவனாய் வாழ்ந்தான்; பின்பு முன்னதான ஒப்பில்லாத சம்பாதத்தையடைந்துமேலானவனாய் அச்சமும், துன்பமுநீங்கி, அநுபவிக்கின்ற போகத்தில் இச்சையில்லாமல் உள்ளப்பிரகாசமாய், எப்போதும் ஆநந்தமேஸ்வரூபமாகிய ஜீவன்முத்தியை யடைந்தவனாய் விஸ்ராந்தியடைந்து, பூரணச் சந்திரனைப் போல மனது பூரணமானான். § —

௩௪. தவஞ்செய்யி னிம்மாயைநீங்கி ஞானமுதிக்குமென்றநுக்கிரகித்தேகுதல்.

௩௫. ஞானமடைதல்.

காதிகதை முற்றிற்று.

உத்தாலகன்கதை.

அவதாரிகை.

முற்கதையில் மனோரூபமான மாயையைத் தரிசித்ததற்குக்காரணமான பிரமத்தைத் தரிசிக்கிற் சகலமில்லாவை யில்லையென்று சொல்லி, இவனுடைய மாத்மவிசாரஞ்செய்தபடி சமாதிகூடியதனால் ஸ்வபாவமா யனுபவிக்கு நிரதிசயானந்தத்தை யறிவிக்குநிமித்தம் உத்தாலகன் கதையை நிரூபிக்கிறார்.

¶ இ-ம். மாயாரூபமான மனதைக்கெடுக்கி லஃது கெடுமென்பதாம்.

§ இ-ம். சமாதியின் கண்ணுதிக்கு மனோவிசித்திரத்தைப் பார்த்த வதை யதிக காரணமான சைதன்யத்திற் கரைக்க, சச்சைதன்ய மொன்றே ப்ரகாசிக்குமென்றறிந்தாலகத்தினால், பூரணமானானென்பதாம்.

க. மாயையானதுஸ்வானுபவமில்லாதவர்களை வருத்துமென்றறிவித்தல்.

இந்தப்ரகாரமே இந்தமாயையானது, மிகவும் விஸ்தாரமாய் சயிக்தற்கரியதாய் உயர்ந்து, தாழ்ந்து, கொடிய மகாமயக்கங்களை உண்டாக்கி பிரமத்திற் பொருந்தியிருக்கும். அந்தப்ரகாரத்தினால் சொல்லுகின்றேன், சதாகாலமும் பிரமஸ்வரூபத்தை யடையாதவர்களை, சமுத்திரத்தைப்போல வருகின்றதுன்பத்தில் இந்த மாயையின்குணமானது அழுத்திவிடும். — மனோசயமாத்திரமான தெய்வமருந்தாலன்றி சுநமென்னும் கொடியவியாதியானது சத்தியமே, மற்றெந்த முயற்சியினாலும் நீங்காது. சற்குணத்தின் மிகுந்த ஸ்ரீராமா? கிரமமாகவைத்த வர்த்தமானகாலத்தில் க்ஷணத்தில் வன்னச்சிரம கிரமமாக வருகின்ற தொழிலை புறம்பிற்பிடித்து, வராநின்ற வருங்காலத்தையும், சென்றகாலத்தையும், மனதில்லாதவர்கள் உள்ளே நினைக்கமாட்டார்கள், — சங்கற்பத்தையும், ஆசையையும், போனதை நினைப்பதையும் க்ஷணந்தோறும் ஒழிப்பாயானால் கேடுற்ற மனோலயமானது அதுவேயாகும்;

உ. மாயாநாசவுபாயமானதுமனோநாசத்தைத் தவிர வேறின்றெனல்.

ங. மனோநாசவுபாயம்ப்ரத்யாகாத்ம ஸ்ருபதெரிசனத்தைத்தவிர வேறின்றெனல்.

மனோநாசத்தைப் பொருந்துகின்ற ஞானமானதுபிரிவில்லாத ப்ரத்யாகாத்மஞானமாம்; அந்தஞானத்துக்கு மனோபாவமென்றுசொல்லுவது அவ்விடத்திலில்லாமல் இயல்பையுடைய தாமாதலினால் மனோவிகற்பமானது இல்லாமற்கெடும். —

ச. ஆத்மதரிசனத்துக் குபாயஞ்சுருதி குருவாக்கியத்தில் மனதைச் செலுத்துதல்.

மனோபந்தமானது, முழுதுநீங்குதலே மறைவில்லாத உண்மையும், மேலானசிவமும், பிரமாவத்தையும், சர்வக்ஞத்துவமும், பூரணாநந்தமும், களங்கமில்லாததுமாம். பொருந்திய வஞ்ஞானத்தைக்கெடுத்து நிடைச்சாகத்தினால் நிச்சயமாக குற்றமற்ற சற்புருடர்களிடத்திலும் குற்றமற்ற வாக்மஞான சாஸ்திரங்களிலும் எப்பொழுதும் மனதைச்சேர்த்து, —

ரு. அதனால்விடய விச்சையைக்கெடுத் தாநந்தபோதமாவாயெனல்.

சதாகாலமும் சொல்லுதலும், விடுதலும், பற்றுதலும், கண்மூடுதலும், கண்திறத்தலுமாகியசகலதொழில்களையுஞ்செய்தும், சிந்தனையில்லாத ஆநந்தத்தையுடையவனாய் சற்சின்மாத்திரபாருகருமூர்த்தாய்? வர்மூக்கடவாய்? களங்கமாகிய திரிஸ்யத்தை நீங்கி, மனதின்களங்கத்தைக்கெடுத்து ஆசாபாசமென்னும் கோரையையறுத்து உன தாத்மஞானத்தில் பிரமஸ்வரூபனாயிருப்பாய். —

சு. அபேத திருஷ்டியினாற் சமாதிகூடிச் சின்மாத்திர மாவாயெனல்.

சுபாசுபமாகிய சங்கேதமான பொருள்களில் இச்சையென்கின்ற விசேஷகாவியாதியை பொருந்தாதவனாய் சலனம்பொருந்திய இராகத்துவேடமில்லாமல், ஞானரசமான பிரமமே தானாகவாழ்வாய். கணக்கின்றி நான், இவன், அவன், இது வதுவெனவென்று சொல்லுவதாகிய வாதனைகளைக் கெடுத்து, பிரம மொன்றேயென்று ப்ரகாசிக்கின்ற

ளிட்டையில் விஸ்ராந்தியடைந்து சற்சின்மாத்திரபரனாக, ஸ்ரீராமா ? நீ நிலையாகவாழ்வாய். — என்னனும் அன்னியருமென்றுஞ் சொல்லப்பட்ட நினைப்பறும்படி உலகத்தின்கண் துவிதமிறந்து, அத்துவிதமாய் கனமுள்ள வயிரஸ்தம்பத்தைப்போல ஆத்மஞான ஸ்வரூபத்தைப் பிடித்து அந்நிலையைத் தரிசித்திருப்பாய். பாவமின்மையுடன் மாசின்மையாய் பூரணமாகிய தனது ஞானத்தில் பொருந்துத லெப்போதுண்டாகுமோ, அப்பொழுதே பிறவிமயக்கத்துக்கு மூலமாகின்ற பேதமானது நீங்கிப்போம். — பேராநந்தவிரசத்தின் நிலையினுடையசுபாவத்தைப்பார்ப்பாய் ; பின்பு நிற்கின்ற வருதற்கரிய நல்ல தேவாமிர்தமானது, வந்துபொருந்தினாலும் உயிரைப்பிரிக்க வராநின்றமருந்துக்கு சமானமாம் சோர்வில்லாத உண்மை ஞானமுடைமையானது மனமானதுபருத்து பெருங்குமானால் தூரமாகும் ; கறுத்தமேகமானது சூழும்படி மறைக்கின் பூரணசந்திரன் கண்ணுக்குக் காட்சியுண்டாகுமோ. § — தேகமட்டும் இச்சையையுடைய புத்தியினால் தானல்லாதவனுத்மாவை ஆத்மாவென்று அன்புபொருந்துவதால், புத்திரர்களும் இல்லாளுமாகிய சம்சாரமென்கின்ற நினைப்பினால் மனமானதுவளரும் ; விஸ்தாரமாகின்ற அகங்காரவேற்றுமையினால், மமதையான களங்க விளையாட்டினாலும் உரித்தான ஈடேதனதென்கின்ற பாவனையினாலும் மனமானதுவளரும் — ஆதிவியாதியினது விஸ்தாரத்தினாலும் அலைகள்மாறி சம்சாரத்தில் விசுவாசித்துத் தங்குதலினாலும், நீங்குதலுக்கும், பிடித்தலுக்கும், இலாபமான வெத்தனத்தினாலும், சஙகங்கேடாறும் குழந்தையான ஸ்ரீராகவா ? மனமானதுவளரும். ஸ்திரீகள், இரத்தினங்கள், திரவியங்கள், முதலானவைகளிலுண்டான ஆசையினாலும், இலாபத்தினாலும், வராநின்ற வுலோபத்தினாலும், வருகின்ற காலத்தில் இவைகள் நல்லனவாம், இங்ஙன்மையினால் மனமானது, பெருத்து பூரிக்கும். ¶ —

எ. சின்மாத்திரதரிசன மானபோதே பவத்தைநக்கொடுக்கும் பேத நீங்குமெனல்.

அ. பேதரூபமான மனத் தடிக்காவிடிற் பேரானந்த மூதிக்குமெனல்.

கூ. மனத்தடிப்புற்ற தறிவித்தல்.

கo. இதுவுமது.

துராசையென்கின்ற பாலைப்புசித்து பழமையான போகமென்கின்ற வாயுவினால், தொடர்பான பலமுண்டாய் இச்சிக்கப்பட்ட மார்க்கத்திற் சஞ்சரித்து மனமென்னுஞ் சர்ப்பமானது, மிகவும் பெருக்கும். ஸ்ரீராமா ? நீ கேட்பாய், பழைய உத்தாலகமுனியை

கக. பஞ்சவிடயங்களாற் பருக்கின்றமனமெனு தெடியவி ஃ அங்கெடுமென்பதற்குந் திருஷ்டாந்

§ இ-ம். மாயைக்கு மூலமான மனதைக்கெடுக்கி லப்பொழுதே சச்சிதாநந்தமாய் விளங்குவா யென்பதாம்.

¶ இ-ம். தேகோமுதலிய வகம்பாவத்தினாலுண்டான வாதிவியாதி முதலிய சங்கற்பத்தால் மனம் விர்த்தியடையு மென்பதாம்.

(மறிவிக்கத் தொடங்கல்.)

ப்போல பஞ்சபூதங்களையும் தூளியாய்ப் போகச்செய்து வருத்தமற்றபுத்தியினால் மனதில் விசாரிப்பாயென்று, வசிட்டமுனிசொன்னமாத்திரத்தில், ¶ —

கஉ. இராமன் வினவுதல்.

நீரருளிச்செய்த உத்தாலகமுனியானவர், எந்தமார்க்கத்தினால் பஞ்சபூதத்தையுங்கெடுத்து, தனக்குட் சிந்தித்ததென்னவென்று ஸ்ரீராமன்கேட்க, வசிட்டமுனியானவர் : கிருபையுள்ள ஸ்ரீராமா? விரிந்த பஞ்சபூதத்தை ஆத்மவிசாரணையினால் கெடுத்து, பிரமத்தையடைந்து அத்துவிதநிலையையுடைய உத்தாலகமுனியினது கதையை நாம்சொல்லக்கேட்பாய். § —

கங. முனியின் முமூக்ஷுப் பருவமுணர்தல்.

கந்தமாமனதென்கின்ற மேன்மை பொருந்தியமலையில் கருப்பூரம் பரிமளிக்கின்ற பூங்கொத்துகளையுடைய வனங்கள்சூழ்ந்த மலைச்சாரலில் வசிப்பவன் ; உத்தாலகனென்னுநாமத்தையுடையவன் ; குற்றமற்றவன் ; முனிசிரேஷ்டன் ; முன்புகொஞ்ச வறிவையுடையவன்; விசாரணையுடையவன் ; பரிபூரணவாழ்வில்மனதிற்றுன்பங்கெட விஸ்ராந்தியடையாதவன், புத்தியினதுநன்மையைத் திருத்தமாகப் பெற்றவன் †

கச. விஸ்ராந்தியுள்ள பரமபதமியாதென விசாரித்தல்.

பரிசுத்த மார்க்கத்தினாலும், நிட்காமதவத்தினாலும், ஞானசாஸ்திரார்த்தங்களினாலும், இயமமும் நியமமும்பொருந்துந்தன்மையினாலும், குற்றமற்ற நல்ல விவேகமானது வரவும், அந்த உத்தாலகன் இத்தன்மையாகச் சிந்தித்தான் துன்பமற இளைப்பாறும் இடமியாது, மறுசநநமென்னும் கெடுதலில்லாத மேன்மையான பதமியாது, இதுவல்லவா முன்னதாக சீக்கிரத்தில் அடையத்தக்கது. —

கரு. போகவிச்சை யெப்போதென துள்ளத்தினின்று நீங்குமெ மெனல்.

மனோசங்கற்பமில்லாத நிருமலமான பிரமபதத்தில் நெடுங்காலம் கலந்து ஏகமாய் விளங்காநின்ற மகாமேருவின் முடிவில் பொருந்திய மேகத்தைப்போல யான் இளைப்பாற எப்போதுகிடைக்கும். தளர்வில்லாமல் இதைச்செய்து இனி யெதைமுயற்சிக்கத்தக்கதென்று சலனமாகிச்செல்கின்ற அளவற்றபோகசம்பத்துகள் எனதுமனதின்கண் ணின்றும் எந்தக்காலத்தில் விடுபட்டுப் போகும். —

கசு. ஆத்மசுகமெப்போது வருமெனல்.

மனனமென்கின்ற அலையையடித்து மதத்தோடும்வளர்ந்த இச்சையென்னுஞ்சமுத்திரத்தில் பரிசுத்தம்பொருந்திய அறிவென்கின்ற வங்கத்தினால் முழுகாமல் எக்காலத்தில் கரையேறுவது. சதாகாலமும் கிரியாக்கிரியைகளில்லாமைகளும் நீங்கி பற்று

¶ இ-ம். உத்தாலக முனியைப்போ லிம்மனதைக் கெடுக்கவேண்டு மென்பதாம்.

§ இ-ம். உத்தாலகமுனி ஞானமடைந்த மார்க்க மிதுவென்றறிவிக்கத் தொடங்கினதாம்.

† இ-ம். சித்தசாந்திவந்து விஸ்ராந்தி வாயில்லை யென்பதாம்.

நல் விடுதலில்லாமல் அகத்திற் சுப்ரகாசமானபதத்தைப் பொருந்தி எப்போது மனங்களராமல் நின்று மகிழ்ச்சியையடைவேன். — நினைக்கின்ற சங்கற்பத்தைக்கெடுத்து, ஆத்மாவிலடங்கி மேகஞ்சூழ்ந்தமலைக்குகையில் சுருங்கல்லைப்போல நிருவிகற்பசமாதியினால் எப்போது சலனமற்றநிலையிலிருப்பன். ஒருமைபெற்ற தியானத்தினால், இளைப்பாறுகின்ற எனதுசிரசின்மேலுள்ள மயிரினால்பறவைக்கூட்டங்களானவை கூண்டுகட்டி எக்காலத்தில் குடியிருக்கும்.—

கஎ. சமாதியப்போதுகூடுமனல்.

மனதிலிந்தப்ரகாரஞ் சிந்தித்து, உத்தாலகமுனியானவர், உள்ளே பரவசத்தையுடையவனாய் ஒன்றானபிரமத்தியானத்தைச் சாதிக்கும்பொருட்டு, இருந்தவிருந்தவிடங்கடோறும் வேகத்துடன் பாய்கின்ற மனக்குரங்கானது விஷயமென்னும் கொம்புகளிற்றாவுதலால், துன்பத்தின்றன்மைகளில்லாத மகிழ்ச்சியை யடைகின்ற ஸ்வரூபசமாதியை யடைந்திலன். ¶ —இப்படி. கானகத்திலிந்தப்ரகாரம் நிலையில்லாமலலைகின்ற உத்தாலகன், பின்பொருநாளில் புறம்பிலுள்ள விஷயதிருஷ்டிதவிர்த்தபடியால், பொல்லாதமனமாகிய குரங்கானது திடமான அந்தகாரமூடினதுபோல, சமாதிகளில் அகம் வருத்தமுற்று, தருமமிருந்து மலையில் வருத்தத்தோடுஞ் சுழன்று மிகவுஞ்சோர்ந்து சுழன்றான். † — ஒருவருமில்லாததாகியும் யாவராலு மடையக்கூடாததாகியுமிருக்கின்ற குகையானது, சேராநின்ற மோக்ஷவீடமென்றுசொல்லப்படும். அக்குகையில் ஒருபொழுது தனித்துச்சென்று மலைக்குன்று மணித்தரையின்மேல் மான்றோலைவிரித்து அதின்மேல் ஆராயாநின்றமனதினது தொழிலைச்சுருக்கி புத்தனைப்போலத்தியானிப்பான் — பத்மாதனத்தில் பௌத்தனைப்போல, வடக்குமுகமாய் இரண்டுபீசத்தையும், இரண்டு குதிகான்மேல்வைத்து, பிரமாஞ்சலி செய்து தடைவாசனையினால் மயங்குகின்றமனதைத் திருப்பி, தடையில்லாத நிருவிகற்பசமாதியினிமித்தம் இந்தப்ரகா

கஅ. சாமாதி டை வில்லையெயனல்.

ககூ. ஒன்றிது தரிகொள்ளாமற்சுழலுதல்.

உ0. நிருவிகற்பசமாதியினிமித்தம் ஆசனங்கட்டியிருத்தல்.

உக. இதுவுமது.

¶ இ-ம். விடயசுகந் துன்பமென்று வருந்திப் பரமசுகங்கூடாமற் பரதவித்துக்கொண்டிருக்கின்ற நிவாரதா முண்டாயினதென்பதாம்.

† இ-ம். மனமான தொருகாற்பாவைவடிவத்தை விடுதலுமனோரதபரிகற்பிதமான வாசத்தவிடயத்தை யடைதலு மொருகா லஃதை விட்டிஃதைகிரித்தலு மொருகாற்பயமடைந்த பக்ஷியைப்போலத் துள்ளிபோடுதலு மொருகாலிராசதகுண ப்ரகாசத்தையுஞ் சத்துவகுணம்பரத்தையுந் தமோகுண வந்தகாரத்தையும் பார்த்ததென்பதாம்.

உஉ. சமாதியிலசைவா விருக்குமிடத்துதித் தவாவிக்கொண்டு விடயத்திற்சுழலாநின்ற மனதைக்கண்டதை வெளியிற் செலுத்தாமற் றடுத்துத் தன்வயப்படுத்தும்பொருட்டு விசாரமுகத்தா லதன்குற்றங்களைக்களையத் தொடங்கிப்போகங்களைக் களைதல்.

ரம் விசாரித்தான்.¶ — வாராய்மூடத்தன்மையுடைய மனமே? உனது பொய்வாழ்வுகளில்ப்ரயோசனமென்ன, நீங்காத துன்பமே முடிவிலுண்டாகின்றதொழிலில் சத்துக்களடைவார்களோ, தெவிட்டாத வமுதமாகிய உபசாந்தியைநீக்கி கெடாநின்ற போகத்தை யிச்சிப்பவர்கள், அழகுபொருந்திய புஷ்பங்களையுடைய கற்பகவனத்தைவிட்டு கொடுமை மிகுந்த விடம்போன்ற வெப்பம்பொருந்திய பாலைவனத்திற் பொருந்துவர்போலாம், —

உ௩. சாந்தியே சுகமாமென் றுசரிதைகிரியைக்களைதல்.

பிரமலோகத்திலடைந்தாயானாலும், பாதாளலோகத்திலடைந்தாயானாலும், சாந்தமென்னும் பெருமைநிறைந்த வமுதத்தைநீங்கி, அம்மேலான நிருவாணசுகத்தைக் கூடமாட்டாய். ப்ரயோசன்மானதுபோல நாநாவிதமாய் உள்ளத்தில் அதின்மயரூபமே சுபாவமா யிருக்கின்ற இத்தொழில்கள் மகாதுன்பமாம்; எப்போது மின்பமாகமாட்டாது. —

உ௪. பஞ்சவிடயத்தின்றொழில்களைக் களைதல்.

சத்தமுதலிய விடயங்களிற் செல்லும் இச்செயல்களினால், தவளையைப்போலப் பயித்திய முடையதாயிருக்கின்ற மூடமனமே? விடாமல் வீணாகவே னுழலுகின்றாய். யாதினாற் கிஞ்சிற்றின்பமடைந்தாய், யாதிற் பரமசுக மடைகின்றாய், சதாகாலமு நிறைந்த வமுதமாயும் சமமாயு மிருக்கின்ற அந்தச் சாந்தத்தில் நீ நிலைபெறாத விதமென்ன. —

உ௫. சுத்தபரிச விடயங்களைக் களைதல்.

விரிகின்ற மூடத்தையுடைய மனமே? விருதாவாகவுண்டாய் பருக்காநின்ற காதின்றொழில்களைக்கூடி சத்தவிடயத்தைத் தொடராநின்ற புத்தியினால் அசுணப்பக்ஷியைப்போல மரணமடைய வேண்டாம். தொக்கின் வியாபாரத்தைப்பொருந்தி பரிசவிடயமான மூடத்தன்மையினால் துயரமேதுவாக, பெண்யானைக்காசையான ஆணானையைப்போல, எப்போதுந்தவிராத ஆபத்தையடையவேண்டாம். —

உ௬. ரூபரசகந்தவிடயங்களைக் களைதல்.

ஒளிபொருந்திய ரூபவிடயசமூகத்தை பார்க்கின்ற கண்ணினுடைய தொழிலைப்பொருந்தி மனமே? நீவெப்பம்பொருந்தியதீபமென்றறியாமல்மரணமடைகின்ற விட்டிற்பூச்சியைப்போல வெந்துபோக வேண்டாம். கொடியமனமே? நாக்கினுடையதொழிலைப் பொருந்தி, அற்பம்புசித்து புசிப்புகளினது இரசவிடையவாசனையினால் இரையையுடையதூண்டிலைக் கிரிக்கின்றமச்சத்தைப்போல நாசமடையாதே. தேனுக்காசித்த ஞிமிறைப்போல தாமரைமலர்போன் றிருதயத்துள் சுவா சமார்க்கத்திற்சென்று வாசனை விடயத்தை

¶ இ-ம்- சமாதியினிலக்கணங்களை யறிவித்ததாம்.

[உஎ. ஐந்துவிடயங்களையுங்கூட்டிக்களைதல்.]

தேடுதலினால் மனமே? நீகெட்டுப்படாதே.— சொல்
லிய அசுணப்பக்ஷியும், யானையும், பதங்கப்பக்ஷியும்,
மச்சமும், வண்டும், சத்தமும், பரிசமும், உருவமு
ம், சுவையும், கந்தமும் என்று நேர்நிரையாய் வைக்
கப்பட்ட விவற்றுள், ஒன்றினுலொன்று மரணத்தை
யடையும். நிலையைக்கெடுக்கின்ற அப்பஞ்சவிடயமு
ம் ஒன்றாகச்சேர்ந்து மெலிவு செய்யப்பட்டவர்களுக்
கு அகமகிழ்ச்சி யெங்கேயுண்டாகும் ; உன்னைக் கட்
டுதலுக்கு இந்த வாசனையென்பதே கயிற்றாம் பின்
னினவலையாம் ; குற்றத்தோடு மெழாநின்றமனமே ?
அவ்விடயவாசனையே நீங்குமானால், அதுவே யுனக்
கு சமானமில்லாதவெற்றியாம். ‡—யாதுப்ரயோசன

[உஅ. அற்பமானமனதில் அகண்டமானசித்து யெப்படி யிருக்குமெனல்.]

மாக உனக்கு இவ்விடத்தில் இந்த ஆக்ஞை நான்செ
ய்கிறேன், முதிர்ந்த ஆத்மஞான விசாரணையில் முத
ன்மையான சத்துக்களுக்கு ஒருமனமுமில்லை ; வியா
பகமாகிய முடிவில்லாத ஞானத்துக்கு சூட்சுமமான
ஸ்திதி என்மனதில் நியமமாயுண்டோ ; களிறு, வில்
வப்பழத்தில் நுழையுமோ. — மாமிசம்பொருந்திய

[உகூ. தேகமுதலியவைகளைக் களைந்ததற்கு விலக்ஷணமான வாத்மஸ்வரூபத்தைத் தரிசித்தல்.]

சரீரத்தில் பாதமுதலாக சிரசுபரியந்தம் வேறுவேறு
கவாராய்ந்தும் நானென்பது அச்சரீரத்திலில்லை, நா
னென்னும் தன்மையான தெவ்விடத்தி லிருக்கின்ற
தெது ; திக்குகளனைத்திலும் வியாபித்தமேலானஞா
னஸ்வரூபமாகிய காணப்படாததாகி சலனமில்லாமலெ
வ்விடத்தும் தானாக விளங்கினதென்று சகங்களனைத்
தையும் பார்ப்பேன். — மேன்மைபொருந்திய அந்த

[௩௦. ஆத்மதரிசனமாயிருக்கின்ற மனதைக் கண்டிக்கத் தொடங்கல்.]

ஞானத்துக்குபெயர், கற்பனையும், ஏகத்துவமும், அநே
கத்துவமும், மகத்துவமும், அணுத்துவமும் என்று
சொல்லுகின்ற நாநாவிதமாகிய அடையாளங்களைக்க
ண்டிலேன். சுபாவமான ஞானமானதினால் யான்காணு
ம் எவ்விடத்தில் வேற்றுமையுள்ளமனதே ? நீயேது

[௩௧. மனதிற்கு உருவமின்றெனக்கண்டித்தல்.]

ன்பங்கொடுக்கும் காரணமாகவுண்டானாய் —முதிர்ந்
த விவேகத்தினாலுண்டான ஞானார்த்தவலியினால் இ
ப்படிப்பட்ட வுன்னை சீக்கிரமாகக் கெடுக்கின்றேன்,
துன்பத்தையுடைய மனதே ? நீ காணக்கடவாய்.
இது மாமிசம், இது ரத்தம், இது அஸ்தி, இவை
கள் உள்ள பிராணனாய் நிறைந்தகாற்று ; இவ்விடத்
திலிவைகளில் நானென்பது பொருந்தினதெங்கே.—

[௩௨. இதுவுமது.]

மாமிசங்கள்வேறு, இரத்தம்வேறு, அஸ்திவேறு,
சரீரத்தில் கன்மேந்திரியங்கள்வேறு, ஞானேந்திரிய
ங்கள் வேறு ; நானென்பது எவ்விடத்திற்பொருந்தியி

‡ இ-ம், மனதைப் பிரமாநந்தத்திற் செலுத்தும்பொருட்டுப் பஞ்சவிடய முதலிய போகங்களிற்செலுத்தாமற் றடுத்ததென்பதாம்.

ருக்கும் ; விசையாகியகண்ணிது, தொக்கிது, பருத்தகாதிது, நாசியிது, பசைபொருந்தியநாக்கிது ; இவ்விடத்தில் நானென்று சொன்னதெங்கே.—நானென்பதெங்குமாயிருக்கும், அற்பமு மிவைகளில் நானென்பதல்லாததாம். இப்படிவிளங்காநின்ற இவ்வனுபவதிருஷ்டியே திருஷ்டியாம், வேறுமார்க்கமில்லை.

௩௩. சித்தைச் சடமயக்குமோவெனின்.

குற்றமற்ற ஞானவடிவமாகியவென்னை, அறிவில்லாத வஞ்சகமுள்ளமனதே ? பசுவின்கன்றை வனத்திலுள்ளசெந்நாயானது மருட்டுவதுபோல, மிகவும் வருத்தப்படுத்தினாய்.—தேவாதீனமாய் ஆத்மவஸ்துவை கைவசமாயபகரிக்கின்ற அஞ்ஞானமென்னுந் திருடனை இப்போது தெளிந்துகொண்டேன் ; திரும்ப விவனைச்சாரேன்.

௩௪. இனிமனதின்வசத்திற்செல்லேனெனல்.

பஞ்சேந்திரியங்கள் ஒன்றியவாசனையைவிட்டிருந்தும் ஸ்பரிசிக்கின்ற புறம்பில் தங்கடங்கள் விடயங்களில் தாவுகின்றன. ¶ —வாசனையானது, இந்திரியங்களனைத்துக்குங் காரணமல்லாததாம் ; ஆதலினால் மூடமாகிய பஞ்சேந்திரியங்களே ? நீங்கள் உள்ளத்தினது குற்றமுள்ள வாதனைகளைக் கெடுத்து, தொழில்களனைத்தையுஞ் செய்வீர்களானால், வருத்தஞ்செய்கின்றதுன்பங்கள் ஒன்றானாலும் அற்பமும் எப்போதும் பொருந்தாது.

௩௫. பொறிகளை மனோவாசனையிற் செல்லாமல் நீக்குதல்.

—கூண்டுசெய்கின்ற தனது வாயினாலினால் மரணமடைகின்ற கோசகாரப்புழுவினது கூட்டத்தைப்போல, திரிஸ்யத்திற்றாவுகின்ற இந்திரியங்களென்னுங் குழந்தைகளே ? மயக்கத்தினால் வீணாகக்கெடுவீர்கள். இந்திரியங்களனைத்திற்கும் வசிக்குமிடமாகிய மனதே ? அடங்கி இந்திரியங்களுடன் நீ வேறுபடாமல் ஆத்மஞானத்தை நேரோபார்ப்பாய். பற்றில்லாமல் ஏகமாய் நிருவாணசுகமாயிருக்கின்ற ஞானஸ்வரூபத்தை நிலையாகப்பொருந்துவாய்.

௩௬. மனதைப்பொறி வசத்திற்செல்லாமற் றடுத்துப் பொறிவசத்திற் செலுத்துதல்.

—குற்றநீங்காத விடயமுள்ள விடேசியாகியும், அளவில்லாததாகியு மிருக்கின்ற யானென்கின்ற வாசனையானது, நீக்கும்படி களங்கமில்லாமல்விட்டு, ஆசைகளனைத்தையும் கெடுப்பதென்கின்ற மந்திரவுபாயத்தினால் மறுபிறப்பு நீங்கி, ப்ரகாசம்பொருந்திய பகவத்ஸ்வரூபமாய் மனதே ? பயங்களனைத்துந் தீர்ந்தவிடமாவாய்.

௩௭. மனோசங்கற்பத்தைக் கெடுத்து ஆத்மசுகத்திற் சுகிப்பேனெனல்.

சங்கற்பமே வீசப்பட்ட விருக்ஷமாகவும், ஆசையே கொடிகளாகவுமிருக்கின்ற நீயென்னும் வனத்தைத்தறித்து, நீண்டஞானபூமியில் விளையாடுவேன்.—வேண்டினப்ரகாரம் விளையாடல்செய்து பிரமபதத்தைப் பொருந்தினேன் ; தனிமையானேன் ; சயமடைந்தேன் ; இவ்வி

௩௮. மங்கலகரமான பிரமஸ்வரூபமாய் அதி

¶ இ-ம். ஆத்மஸ்வரூபத்தைத்தவிர மனதிற்கோருருவ மின்றெனத் தரிசித்தநாம்.

ஸபின சத்தியினி பல்லைத் தரிசித்தல்.

டத்தில் உயர்ந்த மோக்ஷஸ்வரூபியானேன் ; தொழி
லில்லாதவனானேன்; பகுப்பற்றேன் ; வேறிடமில்லா
தவனானேன். மிகுந்த தெளிவுடைமையும், விளக்க
முடைமையும், தத்துவப்ரகாசமுடைமையும், ஞான
முடைமையும், நீங்காதவுண்மையும், சிறந்த சுகமு
டைமையும், உபசாந்தமுள்ள குணமுடைமையும்,
சற்சருமத்தின் மகிழ்ச்சியுடைமையும், பூரணவுடை
மையும், பெருமையுடைமையும், நற்குணமுடைமை

௩௯. இதுவுமது.

யும், —மறைப்பில்லாமையும், உதாரமான குணமும்,
கெடாதப்ரகாசத்தையுடைமையும், பூரணத்தன்மை
யும், சகலமுந் தன்மயமான குணமும், பயமில்லாமை
யும், ஒன்றாகியதன்மையும், சித்தசாஞ்சல்லிய மில்
லாமையுமாகிய ஒழிவில்லாமல் என்னுடன் பொருந்
தியிருக்கின்ற இந்தக் குணங்களென்கிற உத்தமிக
ளாகிய கமலலோசனிகள் சமானமில்லாதவர்கள் ;
ஏகபாவனையான ஆத்மஸ்வரூபத்தை யடைந்த வெ
னக்கு எப்போது மனைவியர்களாக மனதைக் கிரகிக்

௪0. ஞானம்பெற்றுமகிச்சர்பிரார்த்த கன்மசேடம் நீங்கும்பொருட்டுயோகம் வக் தடுத்ததை யறிவிக்கத் தொடங்கிப் பிரணவ வுச்சாரண மறிவித்தல்.

கின்ற ஸ்திரீகளாம். † — அலையாமல் தன்வசப்
பட்டு வியாபித்த புத்தியினது தொழிலினால்
இந்தப்பிரகாரம் வலிமையாகச் சிந்தித்து, கருங்
குவளைப் புட்பமானது கொஞ்சம் விகசிதமா
னதுபோல பாதி திறந்த விழியையுடையவனாய்ப்
பத்மாசனத்திலேருந்து, பிரணவத்தை உத்தம
னான உத்தாலகன் உயர்ந்தசத்தத்தினால் உரி
மையாக தடையில்லாமல் உச்சரித்தான். —

௪௧. பிரணவத்தின் முதற் கூறுணவகாரத்தையுச்சரித்தல்.

ஞானஸ்வரூபமாகிய பிரணவத்தை உச்சரியாநின்
ற உத்தாலகமுனியின் ஞானமானது பிரணவஸ்வரூ
பமான பிரமத்தைப்பார்க்கவும், தனிமையானபிர
ணவமானது, சார்பில்லாமல் எந்தமட்டும் உயர்ந்தநி
ன்றதோ வந்தமட்டும் உயர்வாகவும், வியாபகமாகவு
ம், நிருமலமாகவுமிருக்கின்றஞானத்தினிடத்தில், மூ
ன்றரைமாத்திரையையுடையதாகிய பிரணவஸ்வரூப
த்தில் அகாரத்மகமான முதற்பங்கு வெளிப்படவொ
லித்து, எவ்விடத்தும் மாகநிலைப்பட்ட பிராணவா
யுக்கள் சத்தத்தையெழுப்புகின்ற சரீரத்தில் மிகவும்

௪௨. இதுவுமது.

ப்ரகாசித்து வொலிக்கின்றகாலத்தில், — இந்தப்
பிராணவாயுவை புறம்பில் நீக்க வல்லமையாகிய இ
ரேசகமென்னுநாமமுடைய கிரமமானது, சரீரமெல்
லாவற்றிலும் நிறைந்துயர்ந்திருக்கின்றது ; அகத்திய
முனியாவர், சமுத்திரத்தை ஆசமனஞ்செய்துபாழா
க்கினதுபோல, கொன்று பாழாக்கினது. பிரிவில்லா

† இ-ம். சடித்தியங்களையுங்கண்டித்து ஆத்மஸ்வரூபத்தைத் தரிசித்ததன் சு
பாவசத்திகளோடும் விளையாடிப் பரமசுகியா யிருந்தாரென்பதாம்.

தஞான இரசநிறைந்திருக்கின்ற பிரமாகாயத்தில் பித்ராணவாயுவுநிறைந்திருந்தன. இருதயமென்னும் பெவ்ரியவக்கினிநிறைந்து அந்தச்சரீர மியாவையுமெரித்திருக்கின்றது; பிரணவத்துக்கு இதுவே மூந்தின கிரமத்தினவத்தையாம். † — அந்த ரேசகாவத்தையானது வேண்டியமட்டும் ப்ரகாசித்ததேயன்றி அடையோகத்தினுலல்லவாம்; அடையோகமானது கொடியதுன்பத்தைக் கொடுக்கின்றதல்லவா.

சங. பிரணவத்தி னிரண்டாங் கூறுன உகர முச்சரித்தல். அதன்பின்பு பெருமைபொருந்திய பிரணவத்தினுடைய இரண்டாவதாகிய உகராத்மகமானபங்கு தடையில்லாமலிருக்கின்ற சமநிலையாமவகரத்தில், அசைவில்லாத கும்பகமென்னும் பெயரை இடப்பட்ட தனித்தகிரமமானது கூறும், இந்தப்பிராணவாயுவான சகலத்திற்குமுண்டானது —

சச. இதுவுமது. புறம்பிலும், உள்ளிலும், கீழிலும், மேலிலும், திசைகளிலும், ஆகாயத்திலும், முயற்சித்தசையாத பிராணவாய்வுக்குளானவை பூரணமாகி, குவிந்திருக்கின்ற துருத்தியினிடத்தில் தடைப்பட்டவைபோலநிலையாயிருந்து உண்டாகி, முதன்மையாக சரீரத்தையெரித்த வக்கினியானது ப்ரகாசத்தினையுடைய இடியைப்போல க்ஷணநேரத்திலணைந்தது; பனியினது வெண்மையைப்போல சரீரமானது, வெண்ணீருகி நன்முகத்தெரிந்தபடியினுல், அச்சரீரத்துக்கு, சரீரஅஸ்திகளனைத்தும் வரிசையாகத் தோற்றி நரம்புகளுடனிருந்தது. —

சரு. இதுவுமது. சுகமாயிருக்கின்ற கருப்பூரசயனத்தில் நித்திரை செய்வதுபோல அஸ்தியின்வரிசைதோற்றினது. காற்றினுல் அந்நீருனது வேகமாகக்கிளம்பி க்ஷணநேரத்தில் ஆகாயத்தைச்சுற்றிக்கொண்டது; ப்ரகாசமாகிய சரற்காலத்தில் செறிந்த பனிமேகத்தைப்போல ஓரிடத்திற்போய்ச்சேர்ந்தன, எதிரில்லாத இந்தவவத்தையை வேண்டுகின்றபரியந்தம் இயல்பையுடைய பிரணவத்தின் இரண்டாவதிலானகிரமத்திலடைந்தது. § —

சசு. பிரணவத்தின் மூன்றுங் இந்தவவத்தை ப்ரகாசித்தது அடையோகத்தினுலல்ல; அடையோகமானது, மகாதுன்பத்தைக்கொ

† இ-ம். ஞானதிருஷ்டியிலிருந் துச்சரித்த வகாரநாதமானது வெளிப்பட்டுப் பிராணநாதஞ் சரீரமுழுதுநிறைந்து சத்திக்குஞ்சமயத்தில், இரேசக்கிரமத்திற் சிதாகாயத்திற் பிராணநிறைந் திதயத்திலுண்டான ஞானக்கினியாற் சரீரமுழுது மெரித்ததென்பதாம்.

§ இ-ம். இரண்டாவதான உகாரநாதமானது சமமாய்நிறைந்து பிராணன் கும்பகமாய்ச் சரீரமுழுதுநிறைந்து அக்கினியையவித்து வெண்ணீறு வடிவமா யஸ்திநரம்பு சாலைதோன்றச்செய் தந்நீற்றை யெழுப்பிச் சிதாகாயத்திற் சேர்த்ததென்பதாம்.

௨௬. மகாரமுச்சரித்தல்.

க்கின்றதல்லவா. அதற்குப்பின்பு பிரணவத்தினது மகாராத்மகமான மூன்றாய்கூறாகி அமைவான மூப சாந்தத்தைக்கொடாநின்ற அவசரத்தில், பொலிவுள்ள பூரணத்தினால், பூரகமென்னுநாமமுள்ள கிரமமானது, பிராணவாயுக்களுக்குண்டானது; வருத்தமில்லாத அந்தச்சமயத்தில் பிராணன்களனைத்தும் அறிவின் அமுதத்துட்போயின. — சொரிகின்றபனியிற்

௨௭. இதுவுமது.

குளித்ததற்குச்சமானமாக அதிக சீதளத்தைப்பொருந்திய பிராணவாயுக்களனைத்தும், முறைமையினால் ஆகாயத்திற்பொருந்திய புகையானது, குளிர்ந்த மேகமானதுபோல, ஆகாயமத்தியிற்பொருந்த சந்திரமண்டலமாய் கலையின்கூட்டமானது, நிறைந்திருக்கின்ற அச்சந்திரமண்டலத்தில், அமுததாரையைபிராணன்கள் பொருந்தப்பெற்ற ப்ரகாசிக்கின்ற வாகாயத்திலிருந்து இறங்கியவமுததாரையானது, மிகுதினசரீரச் சாம்பலில்போய் விழுந்தது. — சிவனது சிர

௨௮. இதுவுமது.

சிலிருந் திறங்காநின்ற தேவகங்கையையொத்த அமுததுவருஷத்தினால் களங்கமில்லாததாய், ஒப்பற்ற சதுர்ப்புயங்களோடும் சந்திரப்பிரகாசமாய் இருபையை யுடைய திருமால் வடிவத்தைப்போல காணத்தக்கதாய், பலமாக ப்ரகாசிக்கின்ற வுத்தாலகமுனியின் சரீரந்தோன்றினது, அமுதமயமாகிய பிராணன்களனைத்தும் அந்தச்சரீரத்தை நிறைவித்து வியாபித்து உள்ளேயிருக்கின்ற குண்டலிசத்தியை ஆராதனை செய்து சுற்றிநின்றன ‡ — இந்தப்பிரகாரத்தால் பத்

௨௯. பஞ்சபூதகாரியமான வுடலைப் பிரணவத்தாற் கெடுத்து, ஞானவடிவமாகிப்பாகியவிடயங் களையு மகிற்செல்லு மனத்தையும் அப்படியேகெடுக்கத் தொடங்கல்.

மாசனத்திலிருந்த உத்தாலகமுனியானவர், தேகஸ்திதிகொடாமல்செய்து, பின்பு மதமுள்ள வண்டைப்போல சுழலாநின்றமனதை பலத்தினாற்றடுத்தான், மௌனத்தையுடையவனாய் மிருதுவான பிராணபானன்களுடைய வேகத்தைப்பார்த்து மெல்லெனவுண்டாக்கினான்; விஷயத்தினின்று தாவு மிந்திரியங்களை வருத்தப்பட்டு வேறுபடுத்தினான்; எவ்வளவேனுமில்லாமல் புறம்பிலுள்ள விடயத்தை நீக்கி ஞானன். — பற்றற்ற இடமுள்ள அறிவையுடைய வுத்

௩0. மூலவாசல் முதல் நவத்துவாரபந்தனஞ்செய்தந்தா வி

தாலகன், உள்ளத்திற்றோற்றுகின்ற விடயங்களனைத்தையும் நீக்குகின்ற திருஷ்டியினால் இல்லாததாகச்செய்தான். மூலவாசலையடைத்து சரீரத்தி னவத்து

‡ இ-ம். உபசாந்திமயமான மகரநாதமானது நிறைந்த பிராணன் பூரகத்தினால் வாய்வுகளறிவின் முகத்திற்செல்லக் குளிர்ச்சியடைந்த பிராணவாய்வுகள் சிதாகாயத்திற் கலைகணிறைந்த ஞானசந்திரனுயதினாலுண்டான வமுதமிறங்கித் தேகத்தை சுனைக்கச் சுவேதவடிவா யதிலமுதமயமான பிராணநிறைந்து குண்டலிசத்தியைப் பூசைசெய்தது என்பதாம்.

டயங்களைத் தள்ளி மனதை யிதயாம்பரத்தி லடக்கல்.

வாரங்களிலுள்ள வாய்வுகளனைத்தையும் குற்றமின்றி முகவாசலையடைத்தால், புறத்துள்ள துவாரங்கள், கடத்துக் கடைபடுகின்றதுபோல மதித்தடைத்தான். இறந்ததென்னுந்தன்மையைச் சார்ந்த மனதைமேலான இதயாகாயத்திலடக்கினான்.—பலத்தையுடையமதயானையை தந்திரத்தினால் மலையிலுள்ளபடுகுழியில் சேர்ப்பதுபோல மனதையடக்கி, சரற்காலத்தாகாயம்போல நிருமலமானதெளிவையடைந்து ப்ரதிபலிக்கின்றகுணத்தினால் உதித்துக் கொண்டிருக்கின்ற விகற்பங்களியாவையும் நீக்கினான். திரும்பத்திரும்ப வாத்தக்கன வேண்டியப்ரகாரமே வந்துண்டாக, சத்துருக்களை கத்தியினால் வீரன்கொல்லுவதுபோல கொடியமனதால் விரிந்த விடயங்களைக் கெடுத்தான். —

௫௧. இதயாம்பரத்தினின்று மனோசங்கற்ப மியாவையுங் கெடுத்தல்.

விகற்பங்களனைத்து மிறந்தவுடன், இதயாம்பரத்தில் விவேகசூரியனை உலகத்திலுள்ள மையைப்போல மறைத்துப் பரந்த வந்தகாரத்தைப் பார்த்த வப்பொழுதே, தனக்குள்விளங்கிய விவேகத்தினால் அவ்விருளைக்கெடுத்தான். உள்ளத்தின்கண்ணுள்ள இருளானது, நன்றாய்நசித்த மாத்திரத்தில், ப்ரகாசம்வந்தடைய, அந்தமுனிவன் அதனையுங்கண்டு நீக்கிக்கெடுத்தான். அவ்வொளி நீங்குதலும் மனஞ்சுழல்வுற்று அர்த்தசாமம்போல் நித்திரையடைந்தது.—நீங்காத நித்திரையையும் கெடுத்தான்.

௫௨. சமாதிக்கண் டோற்றின ஐந் தவத்தையையுங்கெடுத்தல்.

௫௩. இதுவுமது.

நித்திரைநீங்கவும் சூனியவாகாசஞானம்வந்தது ; அவ்வாகாயஞானம், அழிந்தமாத்திரத்தில் அவன்மனதுமோகத்தையடைந்தது ; அம்மோகமானது, வருந்தாமல் மனதைவிட்டு நீங்கும்படி மேலானவாங்கதிருஷ்டியிருந்தவுத்தாலகமுனியானவர், நீங்காத இராவைக்கொடுக்கின்ற விருளை, இந்த வுலகத்தின்கணின்று நீக்குகின்ற சூரியனைப்போல் தள்ளினான். † —

௫௪. மனஞ் சைதன்யத்தையடைதல்.

அத் தன்மையானகாலத்தில், இருட்டும், ப்ரகாசமும், நித்திரையும், மோகமுதலான சகலத்தையு மறுத்துத்துறத்தி, நிலைபெற்ற ஒப்பற்ற நிருவிகற்ப சமாதியையடைந்து, ஒரு க்ஷணநேரம் மனமானது விஸ்ராந்தியடைந்தது. துன்பம்விடுபட்டவுடன், சகலவடிவங்களாய் ப்ரகாசிக்கின்றஸ்வரூபஞானத்தைநன்

---

† இ-ம். சமாதியின் மனோவிகற்ப நீங்கின பின் னந்தகாரந் தோன்றவதனை ஞானதிருஷ்டியாற் கெடுத்து, அதன்பின் ப்ரகாசந்தோன்ற வதனைச் சுயம்ப்ரகாசத்தாற் கெடுத்தபின் சுழுத்திதோன்ற வதனை நனவிற் சுழுத்தியாற் கெடுத்தபின் சூனியாகாய போதந்தோன்ற வதைச் சிதாகாயத்தாற் கெடுத்தபின் மூலாங்காரமான மோகந்தோன்ற வதைப்பரிபூரண திருஷ்டியாற் கெடுத்ததென்பதாம்.

௫௫. மனஞ் சின்மாத்திர மாதல்.

மைபொருந்திய அணைதடுக்க நின்றெதிர்வுற்று முன் னுள்ளவிடத்தினிறைகின்ற சலத்தைப்போல அடைந்தது. — வெகுகாலப் பழக்கத்தினாலும் தனதுண்மை ஞானத்தி னனிபவத்தினாலும், தங்கமானது ப்ரகாசிக்கின்ற சிலம்பானதுபோல, மனது ஞாநாகார மடைந்தது. வஞ்சகமும் வலிமையுமுள்ள மலமின் குணநீங்கி சின்மயத்தையடைந்த மனமானது, மிகவுஞ் செவ்விதாக சேற்றினுள்ளிருந்த கடத்தைப் போல சீக்கிரமாகச் சித்தானது.—

௫௬. முனிபூரணஞானத்தை யடைதல்.

தங்காநின்ற விடயக்காக்ஷியைவிட்டு நிருமலமாய் சிற்சாமானியத்தை, சமுத்திரசலமானது, அலைமுதலான பருப்புகணீங்கி சாமானிய மடைந்ததுபோல, ஞானமானது சேர்ந்தது. எவ்விடத்திலு மொப்பற்றஞானமாய் ஞானத்தையடைந்த வுத்தாலகமுனியானவன், அளவற்ற போகசிந்தனைவிட்டு, அவ்விடத்தில் அண்டங்களைத் தாங்கி, மேலான வியாபகமாய் நிருமலமான ஞானகாயவடிவமானான்.—

௫௭. முனி ஆனந்த சாகரமாய்ச் சத்தாசாமானிய மாதல்.

அந்தச் சிதாகாரமான விடத்தில், திரிஸ்யமும், தரிசனமும், இல்லாமல் அளவில்லாததாகிய பரமசுகத்தையுடைய செவ்வையான வநுபவானந்தத்தை, அமுதநிறைந்த தெள்ளியசமுத்திரத்தில் முழுகினதுபோல பொருந்தினன். உண்மைதவிர மற்றவைநீங்கி அதீதத்தன்மையையுடையவனாய் ஒப்பற்ற ஞானபதஞ்சேர்ந்தான் ; சதாநந்த சாகரமானான் ; எங்குநிறைந்த சத்தாசாமானியமே வடிவமானான்.—

௫௮. முனிசிதாநந்தவடிவியமாய்விளக்குதல்.

உத்தாலகனென்னும் பிராமணனுடைய அறிவென்கின்ற அன்னமானது, ஆநந்தமாகிய நிலையானதடாகத்தில் வந்துபொருந்தினது ; சரற்காலத் தாகாயத்தில் ப்ரகாசிக்கின்ற பூர்ணச்சந்திரனைப் போலவும், காற்றில்லாத தீபத்தைப்போலவும், சித்திரத்தினது வடிவத்தைப்போலவும், அலையில்லாத சமுத்திரத்தைப்போலவும், சலத்தை சூலாகக் கொண்டு வருஷியாத ஆகாயத்திலுள்ள மேகத்தைப்போலவும், ஆத்மாவிற் றிரமாயிருந்தான். †—

௫௯. தேவர்கள் முனியைப் பரிசோதித்தல்.

இந்த பெரிதான வுலகத்தில், பிரமபதத்திலிருக்கின்ற அந்த உத்தாலகமுனியைப்பார்த்து, சித்தர்கள், தேவர்கள் இன்ன மநேகர்களும்வந்து சூழ்ந்தார்கள் ; தேவஸ்திரீகள் நிறைந்தார்கள், தேவேந்திரன் ஒப்பற்ற தெய்வலோகத்தை தயவோடுங்கொடுக்க, அவ் வுத்தாலகமுனியானவர் அவ்விடத்திலுள்ள சகலத்தையும் விருப்பமில்லாமல் நீங்கினான். —

௬0. முனியார் ஆனந்த

மாலையையணிந்த ஸ்திரீகள் இங்கிதாசங்களை, குழந்தைப் பருவத்தில்

† ஹை௫-ம். ஸ்வாநுபவமடைந்த கிரமங்களை விவரமாயறிவித்ததாம்.

போதமாய் விளங்குதல்.

அறியாதவனைப்போல எவ்வளவேனும் கலக்கமில்லாத ஆழ்ந்தகருத்தையுடைய வுத்தாலகன், தேவர்களது மேலான போகக்கருத்தைநீங்கி அத்தன்மையான தன தானந்தவீட்டில் ஆறுமாதம் உத்தராயணகாலத்தில், ஓங்கிவிளங்கியப்ரகாசிக்கின்ற சூரியனைப்போலப் பொருந்தினன்.

௬௧. முனியானவர் ஆனந்தபோதமாய் விளங்கல்

— முதன்மையான மும்மூர்த்திகளும், தேவர்களும், சித்தர்களும் வாழாநின்ற ஜீவன்முத்தியான பதத்தைப்பெற் றரியதவத்தையுடைய வுத்தாலகமுனி, நிறைந்திருக்கின்ற வானந்தத்தில் ஒழிதலில்லாத பூரணத்தினல் ஆநந்த முதிர்ந்த அதீதபதத்தையடைந்தான். ஆவதாகிய பேரானந்தமு மதுவில்லாததுமாகிய அந்தஞானத்தினல் ப்ரகாசித்தான்.

௬௨. முனியானவர் ஆறுமாதம்ஸ்வரூபசமாதியிலிருத்தல்.

— ஒருக்ஷணநேரமானலும், நூறுவருடமானலும், அப்பிரமபதத்தைப்பொருந்தின சத்துக்கள், வராநின்றசாநத்தைக்கொடுப்பதற்கு காரணமாயிருக்கின்ற விடயங்களை யடையப்பட்ட இத்திருஷ்டியைவிரும்பார்கள். மாட்சிமையான இச் ஜீவன்முத்தியில் உத்தாலகமுனியானவர் ஆறுமாதங்களினல் சமீபத்திற்பொருந்தாதபடி சுவர்க்காதிபதப் பிராப்தியைநீக்கி சமாதியிற் பொருந்தியிருந்து விழித்துக்கொண்டான்.

௬௩. முனியானவர் சித்தர்கள் சோதனைக் குட்படாமை.

— கண்விழித்து சித்தர்கணங்களைப் பார்த்தனன்; அச் சித்தர்களும், மேலான இவ் வுத்தாலகமுனியை அன்புடன் ஸ்தோத்திரஞ்செய்து, பகவானே? எமதுவணக்கத்தை நீர்பாரும், தெய்வலோகத்தில் கொண்டுபோய்விடும், இத் தெய்வவிமானத்தில் சந்தோஷித்தேறுவாய், தேவேந்திரபதத்தின் சுகமானது உலகங்களிலெல்லாம் இல்லாதது, ஒரு கற்பபரியந்தம் அந்த ப்ரயோசனத்தை யனுபவிப்பாய்.

௬௪. இதுவுமது.

பகவானே? செய்த தவங்களியாவும் சுவர்க்கத்தை யடையு நிமித்தமேயென்று மனமலர்ச்சியாய் சொல்லிய சித்தர்களை மகான்களென்றுபார்த்து முகம்விகசித்தாராதனைசெய்தான்; மயங்காதவன், முதன்மையான தேவபோகத்தை மிகவும் விரும்பாதவன், வெறுக்காதவன், திடமுள்ளவன், தேவர்களே? போங்களென்றுசொல்லி, § — தேவர்குழாத்தை விட்டவனாய், தனது கிரிகையில் முயற்சித்திருந்தவனைப்போல

௬௫. சாதக்களோடுஞ் சஞ்சரித்தல்.

கபந்த நீங்கியிருக்கின்ற இவ்வுத்தாலகனை, அந்த சித்தர்களும் பின் சிறிதுகாலமனுசரித்து வருவா ன்கின்ற மனதைவிடுத்து தாங்களே நீங்கினர்கள் ஜீவன்முத்தனுகிய வுத்தாலகமுனியும், காட்டிலு உண்மையானமாதவர்களிடத்திலுமிருந்து திருவா

§ இ-ம். அமராபோகம் விடமாமெனக்கண் டாத்மசுகத்தி லமர்ந்திருந்ததாம்.

௬௬. சமாதியிலுஞ் சகசத்திலுமா யிருத்தல்.

சகத்திலவேண்டியமட்டுஞ் சஞ்சரித்தான். — ஒரு நாளளவும், ஒருமாதமளவும், ஒருவருடமளவும், அநேகவருடமளவும், அளவாகியவொவ்வொருகாலத்தில் அபேதசமாதியில் கூடிக்கலக்கும், விழித்துக்கொள்ளும். அந்தநாள்முதற்கொண்டு வராநின்ற கிரியைகளில் பொருந்தியும் நிருவிகற்ப சமாதியாகவே யிருந்தான்; ஒன்றாகி அவன்மனது, ஏகத்துவத்தை யடைந்துநின்றது.

௬௭. சத்தா சாமானியமா யிருத்தல்.

— விரிந்த மனதினதவஸ்து, அயிக்கியமானகலைத்தலை பழகுதலினால்பூரணஞானம் நிரந்தரமாகப்பெற்று, உலகத்தி னிறைந்திருக்கின்ற சூரியகிரணத்தைப்போல எவ்விடத்திலுஞ் சமமாயிருந்தான். இறத்தைக்கொடுக்கின்ற சிற்சாமானியத்தின் அயிக்கியத்தை அநேககாலம் இருந்து பழக்கஞ்செய்ய துன்பநீங்கிய அதினால் சத்தாசாமானியத்தை யடைந்தான்.

௬௮. சுயஞ்சித்தாய் விளங்குதல்.

— சித்திரமாதச் சூரியனைப்போல காண்கின்ற இந்தச் சகங்களில்தோன்றி மறையாத உத்தாலகன், மகத்தாயிருக்கின்ற பூரணாநந்தமான சிவன்முத்தி பதத்தினது ப்ரயோசனத்தினால், உபசாந்தத்தையடைந்த மனதையுடையவனாய், சகமும் சங்கேதமுநீங்கி, சரற்காலத் தாகாயம்போல வியாபகமாயிருக்கின்ற மாசற்ற வுபசாந்தமான உண்மையான ஸ்வயம்ப்ரகாசநிறைந்த ஞானஸ்வரூபமானான். †

௬௯. உத்தாலக முனிபெற்றதனுபவஞ் சத்தாசாமானிய மென்றதைத் தெளிவிக்கலுஞ் சொல்லத் தொடங்கல்.

— இப்படிசொன்ன வசிட்டமுனியை உதாரமுள்ள ஸ்ரீராமனானவர், சத்தாசாமானியமானது யாதென்று கேட்க, அந்த வசிட்டமுனி சொல்லுவார். தன்மனது விபரீதபாவனையின்றி வியாபகமான சிற்சாமானிய ஸ்வரூபமாய், பொருந்திய பாவனையினது கிடத்தாற்கரைந்துபோகுமானால் அச் சிற்சாமானியமே சத்தாசாமானியமாம்.

எ0. இதுவுமது.

— சொல்லுகின்ற முயற்கொம்பைப்போல நிச்சயமாக திரிஸ்யம்விடுபட்டும் ஆத்மசைதன்யத்தில் விருத்திஞானம் லயமானால் சொச்சமாகிய அச்சிற்சாமானியமே சத்தாசாமானியமாகும். தோற்றுகின்ற புறப்பொருளும் உட்பொருளுமாகி நாநாவிதப்பொருளுமாகியும், உடல்களுமாகியுமிருக்கின்ற இச் சகலமுங்கொடுத்து நீங்கி மனது சித்தாய்நிற்குமானால். அச் சிற்சாமானியமே சத்தாசாமானியமாகும்.

எக. இதுவுமது.

— வேறோயானப்பட்ட விடயங்கள் நினைக்கப்படாமலும், ஒன்றுந் தவிராமலும், கூர்மத்தின் அவயவத்தைப்போல தாமே ஆத்மாவிலிறக்குமேயானால், அவ்வாத்மாவே சத்தாசாமானிய

† இ-ம். சமாதியின்கணின்றுஞ் சகத்திற் சத்தாசாமானிய மடைந்த கிரமத்தை யறிவித்ததாம்.

யாகும். முதன்மையான சீவன்முத்தர்களும் விதேக முத்தர்களுமான இவ்விரண்டுபேர்களுக்கும், எப்போதும் சேர்ந்திருக்கின்ற பரமதிருஷ்டி இச்சத்தா சாமானியமாம் ; இதனையும்துரியாதீதபதமாகும்.§—

எஉ. ஞானதிருஷ்டியின ருமையை யுரைத்தல்.

ஆராய்ந்தறிந்து சமாதியைப்பெற்ற வவர்களுக்கும், அதுபூதியிலிருந்து அதுவாய் வெளிப்பட்டவர்களுக்கும், நிறைந்து தோற்றுவதாகியும், மூடர்களுக்குத் தெரியாததாகியுமிருக்கின்ற இப்பரம திருஷ்டியானது, முறிவுபட்டு சஙகங்கெடாநின்ற சீவன்முத்தர்களாகிய ஞானவான்களனைவரும் அந்தரத்தில் வீசுகின்ற வாயுவும் பெரிதாகியபூமியில் அறுசுவையும் போல பிரியமாட்டார்கள். †—

எங. மும்மூர்த்திமுதலி யோருக்குள்ள இந்த ஸ்வாநுபவத்தி னுத்தாலக முனியிருந்தானெனல்.

மும்மூர்த்திமுதலான தேவர்களும், என்னை முதலாகவும், நாரதனைமுதலாகவுமுள்ள இரிஷிகளும், அடைந்தது இப்பரம திருஷ்டியேயாம். பேதமுள்ள பதங்களனைத்தையும் கெடுத்து, ஒழிவில்லாத விச்சத்தாசாமானியத்தில் ஆசைதீர்வதெந்தமட்டுமோ, அந்தமட்டும் சகமானவீட்டிலுத்தாலகன் வசித்திருந்தான்.—

எச. உத்தாலகமுனி ஞானமடைந்த பின்பு யோகத்தினாற் காயசித்தி பெற்று மஃநற்பமெண் றகற்றி விதேக முத்தியை யடைதற்கான சமாதிசெய்யத்தொடங்கல்.

அநேககாலங்கழிந்தபின்பு, கந்தமான பருவதத்திலுள்ள அழகியகுகையில், அந்த உத்தாலகமுனியானவர், சரீரத்தைவிட்டு விதேகமுத்தித்தன்மையனாய் இருக்கக்கடவேன் ; இதுதீர்ப்பென்றுசிந்தனைசெய்து மிகவு நன்மையுள்ள பல்லவாசனத்தில் கட்டிய பத்மாசனத்தி லிருந்தான்.—

எரு. சமாதியி னிலக்கணங் கூறல்.

பாதிதிருஷ்டியாக பார்த்திருந்து, மூலவாசலையடைத்ததினால், உட்டுளையாகிய நவத்துவாரமுமடைந்தது. மனதினால் இந்திரியங்களையும் விடயங்களையும் ஒன்றாக்கி அலையில்லாத சமுத்திரத்தைப்போல தனது பூரணஞானத்தைத்தியானித்து, நிறைந்திருக்கின்ற பிராணவாயுவின் விரைவைநிறுத்தி சரீரம்வளையாமல் நெறிப்பாகிய கழுத்தையுடையவனாய்,—

எசு. இதுவுமது.

நாக்கினடியிற்சென்று உண்ணாக்கினடியையுடையவனாய், நீங்காத முகவிளக்கத்தை யுடையவனாய், உள்ளிலும், புறம்பிலும், மேலிலும், கீழிலும், பாயாநின்ற விடயங்களிலும், சூனியாகாயத்திலும், மனதுங் கண்ணும் பொருந்ாதவனாய், கெடுவதாகிய

---

§ இ-ம். சாக்ஞசித்தில் மனங்கரைதலும், சித்துக்கரைதலும், வேறுதிருஷ்டி நீங்குதலும் யாவுஞ் சின்மயமாய் விளங்குததுமாகிய சிற்சாமானியஞ்சதாநந்தமாய்க் கரைந்த சத்தாசாமானியமே துரியாதீதமென்பதாம்.

† இ-ம். விசாரமுகத்தா லறிந்தவறிவு சமாதியினாலாநந்தமானவருக்கு மவ்வாநந்தஞ் சகத்திலாநந்தா தீதமாய் விளங்கினவர்களுக்கு மிவ்வனுபவம் விளங்குமேயன்றி மற்றவர்களுக்கு விளங்காதென்பதாம்,

௭௭. கைவல்ய சுகமாதல்.

த்தடாந்திகளைப் பொருந்தப்பெறாதவனாய், — சரீரத்திலுள்ள பிராணவாயுவின் வேகத்தைத் தடுத்து, அதனால் சொச்சமாயும், ப்ரகாசிக்கின்ற முகத்தையுடையவனாய், சரீரத்திலுருவமானது, உள்ள ஞானஸ்வரூபமாயும், உண்டாகுதலால் புளகாங்கிதமானவன் சரீரஸ்வரூபம் உள்ள ஞானஸ்வரூபமாகி, பழக்கமுற்ற சிற்சாமானியமாகி, அவ்விடத்தில் அப்போது அச் சிற்சாமானிய வற்பியாசத்தினால், மனதிற் பரமானந்தத்தையடைந்தான். —

௭௮. அனுபவமானதை யறிவித்தல்.

பரமானந்த வெள்ளத்தை புசித்ததனால் சிற்சாமானியநீங்கி, தானேமுடிவில்லாமல் சகலத்தையுங்கிரகிக்கின்ற சத்தாசாமானிய பதத்தையடைந்தான்; குறைவின்றிய சாந்தியுள்ளவனாயிருந்தான்; சித்தத்திலுள்ள வருத்தங்களனைத்தையும் விட்டான்; அளவைக்கொடுக்கின்ற ஆநந்தமில்லாத பேரானந்தத்தினால் முகவிகசிதமானான். —

௭௯. விதேக முத்தனாதல்.

மாசில்லாதபதத்தையடைந்து சரீரபுளகாங்கிதத்தைவிட்டு, ஒருநிமிஷத்தில் மனதுங்கரைந்து, சமப்பிரமையுநீங்கி, மகாசத்துவமுள்ளவனாய், சித்திரத்தைப்போலவும், மேகமில்லாதவாகாசத்தில் பூர்ணசந்திரனைப்போலவும், ஸ்வரூபபதத்தில் சிலநாளிற்சேர்ந்து, சூரியப்ரகாசத்தினால் மாத்தின் பனிமைகளானவை சோஷிக்கப்பட்டதுபோல, உத்தாலகமுனி பிரமப்ரகாசத்தி லயிக்கியமானான். † —

உத்தாலகன்கதை முற்றிற்று.

சுரகுகதை.

அவதாரிகை.

முன்கதையிற் சமாதியினிடமாயுண்டான ஜாக்ரத்திலும் மனோரூபமான சகம் விஸ்ராந்தியடைந்ததைச் சொல்லி, இவ்வனுபவாத்மவிசாரணையிலுமுதிக்கு மவ் விஸ்ராந்தியே ஜீவன்முத்தி சாதனமென்பதை யறிவிக்குமித்தஞ் சுரகுகதையைச் சொல்லுகிறார்.

௧. சுருதி குரு வநுபவத்தினால் விசாரிக்க வேண்டுமெனல்.

இம் மார்க்கத்தினால் அறிவை அறிவினாலறிந்து, சகத்திற்சஞ்சரித்து முடிவில்லாத பரிபூரணப்பதத்தில் விஸ்ராந்தியடையக்கடவாய். பார்க்கப்பட்ட விடயங்களியாவு நசிக்கும்படி. சதாகாலமுஞ் சாதனை செய்து, அப்பதத்தை யடைகின்றபரியந்தம், ஞான

---

† இ-ம். ஜீவன்முத்தி தன்மையினின்று நீங்கித் தானே விதேகமுத்தியையடைந்தாரென்பதாம்.

சாஸ்திரத்திஞலும், சற்குருவிஞலும், தனிமை
மனதிஞலும், பந்தமில்லாத தத்துவஞானத்தை
மனக்கண்ணையுடைய ஸ்ரீராமா? விசாரணை செ
யடையவேண்டும். — வயிராக்கியத்திஞலும்,
யநீங்கும்படியான சாதனத்திஞலும், ஞான ச
ரார்த்தங்களிஞலும், அறிவிஞலும், ஆசாரிய
சத்திஞலும், இயமநியமங்களாலும், ஆகாரின்
மார்க்கங்களிஞல், மேலான ஸ்வரூபபத மடை
டும். அல்லாமலும், அறிவொன்றிஞல் பொருந்
காரும். சுபாவமான சற்குரு உபதேசத்தை
ற்று அதிகநுட்பமாய் நிருமலமாயிருக்குபாஞ
ருமைபொருந்திய சாதனம் முற்றுமில்லாத
தாலும் அவ்வறிவிஞல் மோக்ஷமடையலாம்.

உ. சுருதிகுருவனுபவத்திஞல் விசாரிக்கவேண்டுமெனல்.

இப்படிசொன்ன வசிட்டமுனியைப்பார்த்து
த்திலுள்ள விபகாரத்திலிருந்தும் சமாதியனை
ஏகமாகிய ஞானமடைந்தவனைப்போல ஒருவ
பத்தைநீக்கிஞன்; மற்றொருவன் தொழிலில்
ஞய் ஏகாந்தஸ்தானத்தில், சமாதியையடைந்
இவ்விருவர்களில் மேலானவன்யாவன், செவ்
கச்சொல்லுவீரென்று ஸ்ரீராமர் கேட்டமாத்
ல், வசிட்டர் சொல்லத்தொடங்கிஞர். ‡ — மூ
னத்திஞல் உண்டானவுலகம், அநாத்மாவெ
னர்ந்த சந்துக்களுக்கு, உள்ளத்தில்தோற்று
குளிர்ச்சியெதுவோ அதையேசமாதியென்று
லப்படும். பற்றில்லாமல் சகத்தோடு சம்பந்த
ல்லையென்று இடமாக குளிர்ச்சியாக மேலா
ன்றஸ்வரூபசமாதியில் ஒருவனிருப்பான்; ஒரு
பகாரத்தோடு மிருப்பான்; — இந்த விரண்
ருடையமனதும் குளிர்ச்சியாகவிருந்தால்,
பாடு எவ்வளவுமில்லை; அம்மனதின் குளிர்
அளவில்லாத நவப்ரயோசனமாம். இந்த
யில்பற்றியிருக்கின்றவனது மனமானது, செ
சஞ்சரிக்குமாஞலும் துன்பம்வராமாட்டாது
மையாகிய அதற்குச்சமாதானம் உன்மத்த ந
ப்போல மேன்மையுண்டாயிருக்கும். ¶ —
மில்லாத உன்மத்தநடையையுடையவன், வ
றந்த மனதுடையவஞஞல், அவனடையான

௩. ஞானவான்களது தாரதம்மியத்தைவிஞவுதல்.

௪. சமாதியிலக்கணமறிவித்தல்.

௫. இதுவுமது.

௬. வாசனைக்ஷயத்தி லிருவருஞ்சரியெனல்.

§ இ-ம். பக்குவன் சமாதிமுதலியவற்றை வேண்டானுயினுமாசா
சவிசாரஞ்செய்து மறிவொன்றையாவது விரும்ப வேண்டுமென்பதா

‡ இ-ம். விபகாரத்து மேகாந்தத்திலுஞ் சமாதியிஞல் ஞானமடை
ளிலியாவர் மேலாவரென்பதாம்.

¶ இ-ம். மனமான தாகந்தத்திஞற் குளிர்தலே சமாதியாதலி
வேற்றுமையின் றென்பதாம்.

ந்தவன்சமாதிக்கு தீர்ப்பாகச் சமானமாம் ; மிகுந்த விபகாரமுடைய ஞானிகள், மகாரணியத்தையடைந்த ஞானிகள், வேற்றுமையைத்தேடுமிடத்தில், ஒருவரொருவருக்கு அதிகமாகார்கள் ; இரண்டுபேருஞ் சமானமாய் சந்தேகமில்லாத மோக்ஷத்தை யடைந்தவர்களே. ¶ — வாசனைகெடுமானால், இந்த மனமானது, செய்கின்றதொழிலைச்செய்தும் நல்லொழுக்கமுடையமனது வெகுதாரிநீங்கில், பக்கத்திலிருந்தவர்கள் சொல்லுகின்றவசனம் உணராததுபோல தான் செய்யாததாம். ஆலமனதுசெயலைவிட்டாலும் வாதனைநிறைந்திருக்குமானால் அழுகையுடைய சரீரவசைவற்றாலும் சொப்பனத்தில் மலையிலேயின்று பள்ளத்தில் விழுபவர்களைப்போல தொழிலைச் செய்கதாகும். ‡ — நீங்காத விபகாரங்களை செய்கின்ற மனமானது, விபகாரத்தைவிட்டு நீங்குமானால், அதுசீவசுகசமாதியும் சலனமற்ற நிருவாணமும் மேலான வானந்தமும் என்றே யறிந்துகொள்வாய். மனதினது சலனமும் நிலையும் என்கின்ற விரண்டும் தியானமும் பாவமும்தியானமும் என்கின்ற விரண்டும் திருஷ்டிக்கும் நிலையுள்ள காரணங்களாகும், ஆதலால் இந்த மனதுண்டாகின்ற குணத்தைக்கெடுப்பாய். — சிந்தனைருபமாகிய வாசனையில்லாமலிருக்கின்ற திடமாகிய மனதையே, தியானமென்று சொல்லுவார்கள். அவ்வுபசாந்தியும் ஆக்கைவல்லியமும் எப்போதுமந்த மனமேயாகும். இம்மேலான நிருவாணபதநிமித்தம் வாதனையானது, அற்பமாகக்கரையவேண்டும். சதாகாலமும் வாதனையில்லாதமனமானது, செயலிறந்த நிருவாணபதத்தை அவ்வாசனைக்ஷயத்தினாலடையும்.—

வாசனையானது, மனதினுடைய தொழில் நீங்காத துன்பத்தைநபருக்கச்செய்யும் ; ஆகையினால், வாசனையைமிகவுந்தேயும்படி செய்வாய். கூட்டமாகிய வகேகவஸ்துக்களில் யானென்கின்ற பாவனையை மனதினால்கெடுத்து எவ்விடத்திருக்கவேண்டுமோ, அவ்விடத்தில் மலைகளிலாவது வீட்டிலாவது மற்றெவ்விடத்திலேயானாலும் நீ வசிப்பாய். — இல்லறத்திலிருப்பவர்களும், சமாதானமனதையுடையவர்களும், அகங்காரமாகிய குற்றமற்றவர்களுமாகிய விவர்கள்பொருந்தாநின்ற வீடானது, ஏகாந்தமனமாகிய கானகமோயாம். யடைவீதியிற்போயறின்றவர்கள் போக்

எ. வாசனைக்ஷயம் வரவேண்டுமெனல்.

அ. மனோசஞ்சலநீக்குதலே சமாதியாமெனல்

கூ. இதுவுமது.

கO. தத்துவஞானத்தினால் வாசனைக்ஷயஞ் செய்யின் வீட்டிலானாலுங்காட்டிலானாலு மிருக்கலாமெனல்.

கக. அகங்காரநீங்கினவர்களிருக்கு மிடம், ஞானமிறந்தவர்களிருக்கு காடுமாகாதேயெனல்

¶ இ-ம். வாசனைக்ஷயம்வைத்தவன் விபகாரியானாலு மேகாந்தியானாலுமேற்றற்குறைச்சலின்றி யொருதன்மைய ராவரென்பதாம்.

‡ இ-ம். வாசனைக்ஷயம்வரின் றொழில்செய்துஞ் செய்யாதவன், அஃதிருந்தாற் றொழிலைவிட்டும் விடாதவனென்பதாம்.

குவரத்தாக சஞ்சரித்தும் பம்ருததினல் வழிநடப்பவர்க்கு கடைவீதியில் போகாதவர்களுக் கொப்பாவார்கள். சுகபோதம் பூரணமானவர்களுக்கும், அந்தப்ரகாரமே, நகரமும் வனத்தையு மொத்திருக்கும். § — நித்திரையும் விழித்தலும், படித்தலும், போகுதலுமாகிய விவைகள் தொடர்ந்து வந்தாலும், அந்தர்முகமாகிய தொடர்ச்சியின லெப்போதும்வசிக்கின்ற வீடும், நகரமும், தேசமுமாகிய அனைத்தும், காட்டைப்போல பார்ப்பவர்களே மேலான வழிவையுடையவர்கள். குற்றமற்ற அந்தர்முகத்தினல் சகலமு ஞானகாயமாய்விடும். பிராணனுக்குச் சமானமானவனே ? மனதில் குளிர்ச்சியானதுவந்து அகநிறையுமானல் சகங்களனைத்தும் குளிர்ச்சியாம். —

கஉ. அகத்தி லுள்ளது புறத்தி லுமுள்ளதெனல்.

கங. இதுவுமது.

மனமானது, மயக்கத்தினல் வேகுமானல் சகங்களனைத்தும் காட்டாக்கினியைப்போல வெந்து தோற்றும். உண்டாகின்ற ஆத்மாக்களனைத்திற்கும் அகத்திலிருப்பதே புறம்பிலுமுண்டாயிருக்கும். அமிர்தமிருக்கின்ற சுவர்க்கலோகமும், பூமியும், வாயுவும், ஆகாயமும், தொகுப்பாகிய மலைகளும், நீண்ட ஆறுகளும், திசைகளும், சூழ்ந்திருக்கின்றசகலமும், அமுத்தமாகிய அந்தக் கரணதத்துவத்தினுடைய பிரிவுகளாக புறம்பினிற்பனவாம். ¶ — ஆத்மஞானத்தில் சுகத்தை யடைகின்றவனும், இந்திரியங்களால் கிரியைகளை செலுத்துபவனும், நீக்காநின்ற சுகதுக்கவசத்தில் அடையாதவனு மிருக்கின்றவன், சதாகாலமும் சமாதியைப்பொருந்தினவன். சகல வுயிர்களும் நினைக்கின்ற தனதுயிரைப்போலவென்று, பிறர்திரவியங்களை ஓடுபோல இகழுகின்ற வுலகவச்சத்தினலல்லாமல் சுபாவத்தினல் பார்த்தவனே சகலத்தையும்பார்த்தவன். — மரணமானது இப்போதுவந்தாலும், கற்பமுடிவில் வந்தாலும், ப்ரகாசிக்கின்ற ஞானவான்கள், சேற்றிலமுந்திய தங்கத்தைப்போல களங்கத்தையடையார்கள். சகலமுமாயும், ஞானதிருஷ்டியாயும், விஸ்ராந்தியடைந்து, கெடுதலும் ஆதியந்தமில்லாமல் ஏகமாகியும், ஆநந்தமாத்திரமாகியும் ப்ரகாசமாகியும், சகங்களில்லாததாகியு மிருக்கின்ற அடையாளத்தையுடையதாமென்று வேதங்கள் சொல்லும். † — எல்லாமென்றது முதலாகச் சொல்லிய சகலமும் ஞானமறிவிக்கு நிமித்தமேயாம். பொருந்

கச. சமாதியடைந்தவனிலக்கணமறிவித்தல்.

கரு. ஞானவானிலக்கணமறிவித்தல்.

கசு. ஞானம் பெற்றவரில்லற

§ இ-ம். வாசனருபமான மனேசங்கற்பமிறந்தலேசுகாகாரமானவேதாந்தஸ்தான
¶ இ-ம். மனதெப்படியோ வப்படியேயாவும்விளங்குமென்பதாம். [மென்பதாம்
† இ-ம். உள்ளும் புறம்புஞ் சிதாநந்தானுபவமாய் விளங்குகின்றவர்க டொழிலைச்செய்தலுஞ் செய்யாவிடினு மபேதமேயென்றறி யென்பதாம்.

ஞானிக் கிழிவுங் குறைவற ஞானிக் குயர்வுமின் றென் றறிவித் திதற் குத் திருஷ்டாந் தமறிவிக்கத்தொ டங்கல்.

றுரைத்தசொற்களினா லென்னப்ரயோசனம், வீணல்லவா, ஆகையால் இந்நாமங்களனைத்தையும் பிரமவாசகமான பிரணவமென்றே தெளிவாய். நன்மையையுடைய ஸ்ரீராமா? இவ்விடத்திந்த வனுபவத்துக்கு முற்காலத்தில் உண்டாகிய வோர்கதையையான்சொல்லக்கேட்பாய். மலைச்சார்பில்வசிக்கும் புன்மையர்களென்கின்ற கிராதர்குலத்தில் சுரகு வென்னுநாமமுடையவன்சரித்திரமானது அதிசயமுள்ளது — இமயமலையின்முடிவாகிய கைலாசபருவதத்தில் ஏமசடர்களென்கின்ற யுத்தஞ்செய்கின்ற நீண்டவிற்களைத்தரித்தவேடர்களுண்டு,

௧௭. சுரகுவேந்தர்க்கு விசார முதித்தல்.

அவர்க்கிராசாவானவன் சுரகுவென்கின்ற நாமமுடையசலனமற்றசுத்தவீரன்மதிநிலையினாலும், அரசநீதியினாலும் சிஷ்டபரிபாலனத்தினாலும், துஷ்டநிக்கிரகத்தினாலும், சகமார்க்கத்தைச் செய்கின்றகாலத்தில், நமதுவல்லமையினால் சகத்தைவருத்துவோமானால் அவர்களின்பமக்கல்லவா — அப்படியல்லாமல் தருமசாஸ்திர ப்ரகாரமானதண்டத்தின் முறைமையை செய்யாமற்போவமேயானால், பிராணிகள் காப்பவனில்லாமல் வீணாகக்கெடும். இந்தவராசாங்கம் கொடியதென்று உஞ்சாலடுகின்ற மனதையுடையவனாய்மனதுவருத்தமடைந்தான்.

௧௮. சற்குரு தரிசனமாய்த் துதித்தல்.

பலமிருந்தயசத்தையுடையசுரகுவினிடத்தில் மாண்டவியமுனியானவர்வரவும், சுரகுவானவர் வணங்கித் தோத்திரஞ்செய்துமேன்மையையுடையமுனியே? உமதுவரவினால் யான்மிகவுஞ் சுகத்தையடைந்தேன், சத்துருக்களின் அத்தில் நிலைக்கப்பெற்றேன். — தருமங்களனைத்தையு மறிந்திருக்கின்ற பகவானே? நீர் வெகுகாலமாய் தளர்ச்சியிராதிருக்கின்றீர், அரியகருமமுடையேனது சந்தேகத்தைத்தீர்ப்பீர், சந்தேகத்தைப்போல துன்பமுண்டோ. பெரிதானபூமியில் எனது செங்கோலின் கீழுள்ளவர்கள் எனதனுக்கிரகத்தினாலு நிக்கிரகத்தினாலும் சுகதுக்கங்களை பொருந்தாநின்ற துன்பங்களைப்பார்த்து, ஆண்சிங்கத்தின்முன்பு யானையைப்போல கலங்குகின்றனன்.

௧௯. மனதை யமைக்கும்படி வினவுதல்.

— சூரியனதுப்ரகாசத்தைப்போல எவ்விடத்து நிறைந்திருக்கின்ற சமமானது எனதறிவில் பொருந்தும்படி கிருபையினால் அறிவிப்பாயென்ற வரசனுக்கு, மாண்டவிய முனியானவர் சொல்லுவார். ஒப்பற்ற ஆத்மவிசாரணையில், சுதனமோரத்தில், வராநின்ற சரற்காலமானது உண்டான மாத்திரத்தில் மூடுபனிகெடுவதுபோல, மனதின்களங்கமானதுபோகும். ¶— வானோர், இவ்வுலகமெப்படி

௨௦. இதுவுமது.

௨௧. ஞானமு

¶ இ-ம். சுரகுவேந்தனது இராசநீதிப்படிசெய்யு மனுக்கிரக நிக்கிரகத்தினா லுயிர்கள் வருந்துவதைமுன்னிட் டாத்மவிசார முண்டானதென்பதாம்.

பதேசித்தல்.

வந்தது, சனனமும் மரணமும் எப்படிவந்ததென்று உள்ளத்தின்கண் நீங்காம லிந்தப்பிரகாரம் விசாரித்துப்பார்க்கில், மகத்தான பதத்தை யடைக்கடவாய். தானாகிய சுபாவத்தையுடையவனாய் இராநின்ற உனதாத்மவிசாரணையினால் தனக்குத்தானே மனமானது நீங்குகின்றப்பிரகாரமுண்டாகி தனது வடிவத்தை விட்டு விஸ்ராந்தியடைந்து துன்பத்தை நீங்கும். —

உஉ. பவத்தை நீக்குதற்குச் சாந்தி வேண்டுமெனல்.

வாடுதலின்றி குளிர்ந்த வென்னுடைய மனதுக்கு இந்தவுலகத்திலுள்ள காரியங்கள், சிவந்தபுள்ளிகளையுடையயானைக்கு பசுவினது குளப்படியைப் போல தோற்றும்; இறுதியுள்ளமனதுக்கு அறுகிய பூமியிலுள்ள கிரிகைகள் அற்பமேயாகிலும் கடத்தற்கரியதாகும்; கோவின்குளப்படியிலுள்ள அறுகியசலமும் வார்த்திகமுள்ள மனதுக்கு அளவுங்கரையுங் காணக்கூடாத சமுத்திரமல்லவா. —

உ௩. ஆத்மதரிசன முண்டாகுமார்க்க மறிவித்தல்.

சகத்தை எவ்வளவெவ்வளவு நீக்கினையோ, பரமப்பிரகாசமாயொளிவீசாநின்ற பரமாத்மாவானது, அவ்வளவவ்வளவுண்டாகும். எந்தநாள்மட்டுஞ் சகலமும்விட வில்லையோ அக்காலமளவும் உண்மையாகிய வஸ்து வந்தடையாது. சகலகிரியைகளும் விடுபட்டால் மிஞ்சினவதிருக்குமே தானாகும், மனத்தொடர்ந்த பில்லாமல் பேதங்களனைத்தும் நீங்காவிடின் பூரணமாகிய பரமாத்மஸ்வரூப ப்பிரகாசந்தோற்றமாட்டாது. —

உ௪. சகலகற்பனையு நீங்கினவிடத்து ஞானமுதிக்குமெனல்.

சாமானியமாயிருக்கின்ற கனகமுதலியவஸ்துக்கள் ஒன்றுமைதோற்றுதலால் ஆத்மஸ்வரூபத்தை அடைவதெப்படி, ஆகையினால் ஆத்மாவையடைய விரித்தமாக சகலவிடயங்களையு நீக்கவேண்டும். துன்பநீங்க பாவையும்விட்டாயானால் மிஞ்சினதே நாசமில்லாததோஷமாம்; மேன்மையான பரமபதமுமாகும். சாருமென்று காமத்தையும், கீர்த்தியையு முடைய வேடராசாவே? —

உ௫. வாசனை நிவிர்த்தியே ஞானமாமெனல்.

சகலமான காரணகாரியங்களுடைய பாரம்பரியமான குணத்தையுடையதாகிய வுலகத்திற்பொருந்திய விடயங்களில் அருந்தான வாசனையினால் மிகவுமோங்கிய மனதைக்கெடுத்து ப்ரகாசிக்கின்ற சரீரவாசனையையும் மேல்விடுவையாயின் குற்றமற்ற நன்மையான வஸ்துவுண்டாகும். கீர்த்தியையுடைய வாசனையென்றசொல்லே தனதிடத்திற்பொருந்த தவிரேஷ்டனை மாண்டவிய முனியானவர்போயினர். ¶ —

உ௬. அரசனாத்மதரிசனஞ்செ

பின்பு, வேடர்க்கரசனானவனேகாந்தஸ்தானமடைந்து, நல்லறிவினால் எப்பொழுதும்

¶ இ-ம். இராசகாரியங்களைச்செய்து மதனால்வருஞ் சுகதுக்கங்கள் தாக்காததற்கு நித்தியானந்த சிதனமான வாத்மாநுபவத்தை யடையும்விசாரத்தை யனுக்கிரகித்தா ரென்பதாம்.

ய்யும் பொருட்டு அநாத்மாவான தேகத்தை நியதி செய்தல்.

யானென்பதாரென்று விசாரித்தான். பாதிசிரசுபரியந்தமாகியதனிமையான சரீரத்தையானென்று சொல்லுவது அதிசயமாகும்; யான் சடமாகிய சரீரத்தை விசாரிப்பேன்; துன்பத்தைச்செய்கின்ற இச்சரீரமானது மாமிசமென்புமுதலானவைகளிறைந்திருக்குஞ்சடமாம்; ஆதலினானல்ல.—பத்திந்திரியங்களுமெனக் கன்னியமாதலாலும் சடமென்கிற பழியினாலும் யானல்ல; சரீரமுதலிய இக்கூட்டமெனக்கில்லனவாதலால் யானல்ல; மிஞ்சினதெதுவென்றுபார்க்கில் கலந்திருக்கின்ற சீவனேமிஞ்சினதாம்; இச்சீவனும் ப்ரத்தியகாத்மாவாலறியப்பட்டது. திரமாகிய ப்ரத்யேகாத்ம சைதன்யத்தினால், தெரிகின்ற விச்சீவனும் மேலான வாத்மதத்துவ மாகமாட்டாது.—

உஎ. அநாத்மாவான இந்திரியங்களையுஞ் சீவனையுநியதி செய்தல்.

உஅ. ஆத்மதரிசனஞ் செய்தல்.

இச் சீவனையும் நீக்குவன்; தெரிகின்ற பொருளானவனே; மிஞ்சினதாய் விகற்பமில்லாமல் நின்மலமாகிய பூரணஞானமே யெனது ஸ்வரூபமாம். திருமாலும், பிரமாவும், உருத்திரனும், தேவேந்திரனும், நமனும் இவர்கண்முதலிய விடங்கடோறும், உருட்சியையுடைய முத்துகளுக்குள் நூலென்பதைப்போல, தோற்றுகின்ற வித்தமேலான ஞானமானதிருக்கும். § —பகவானாகிய இந்த வாத்மதத்துவமென்னும் மேலான ஞானசத்தியானது, உலகநடையென்னும் வியாதியில்லாமல் பயப்படுகின்ற ஒப்பற்ற வுருவத்தை யுடையதாகியும், திசைகளெல்லாம் வியாபித்தும் எந்தவஸ்துக்களிலும் பூரணமாயும், சூட்சுமமாகியும், பாவாபாவங்களுமில்லாமல், பிரமதேவன் வாசஞ்செய்கின்ற சத்தியலோகபரியந்த முண்டானதாகியும், —சத்திகளனைத்தினுக்கும் இச்சிற்சத்தியானது, வசிக்கப்பட்ட ஸ்தானமாம்; வேறுவேறுள்ளதாகி, பந்திபந்தியாகி, இவ்வுலகத்தில் காணப்பட்ட சகலமும் நாநாவிதமாக ஞானமசைகின்ற விஸ்தாரமேயல்லாமல், அற்பமும் வேறில்லையாம். தொந்தமான வாசனையில்லாமல் விடயங்களைவிட்டு, எழுபிறப்பிலுந் தொடாநின்ற மயக்கமுநீங்கி, —சுழுத்தியவத்தையில் நிலைபெற்றவனது செயலைப்போல, குற்றமற்ற சமத்தையுடையவனாய், திடமாகிய ஆத்மதத்துவத்தில் வசித்தேனென்று சகலமும் விடுபட்டு, விவேகத்தினது உண்மை நிச்சயத்தினால், அரியதபசையுடைய விசுவாமித்திர முனியானவர் பிராமணமுறைமையைப் பெற்றதுபோல, மேன்மையுள்ளபிர

உகூ. ஆத்மவியாபகத்தைத் தரிசித்தல்.

௩0. ஆத்மசத்திய சகலமாகவும் விளங்குகின்ற தென்றறிதல்.

௩க. ஆத்மஸ்வரூபமாதல்.

---

§ இ-ம். தேகமுதலிய சடவஸ்துக்களை நியதிகளைந்து மிஞ்சின சித்துருபத்தைத் தரிசித்தானென்பதாம்.

௩௨. சகலமு மாத்மஸ்வரூப மென்றறிந் தரசாளுகை செய்தல்.

மபதத்தை, சுரகுவானவ னடைந்தான். — மேன்மையான குணங்களொன்று மில்லாது கழுத்திய டைந்தவனது மனோவிருத்திக்குச் சமானமாய் சுரகுவரசன், அலைவற்ற கொழுந்தினுல் பிரகாசிக்கின்ற சித்திரதீபத்துக் கொப்பானான். நல்லவனாய் கிரமும் மித்திரமும், விருப்புடன் வெறுப்பும், மச்சரமும், தொந்தமும், நல்லறிவு மறியாமையும் என்கின்ற யாவையும்பறாமல் பிரகாசித்தான். ¶ —

௩௩. இல்லறத்திலிருந்து ஞானம் பெற்றசுரகுவேந்தற்குந் துறவறத்தி லிருந்து ஞானம்பெற்ற பார்த்திபமுனிக்கு மெவ்வள வுமுயர்வு தாழ்வின்றி விளங்கி ய வநுபவ சம்பாஷணையைச் சொல்லத் தொடங்கல்.

அத்துவிதயோகமுற்ற சுரகு என்னும் உத்தமனுக்கும், பர்ணாதனென்னு நாமத்தையுடைய இராசரிஷிக்கும் நல்ல வன்பினுல் வாராநின்ற நன்மையை இன்பமாகக் கேட்பாய், மலைபோ லுண்டாகிய புயத்தையுடைய ஸ்ரீராமா வென்று வசிட்டமுனி சொல்லுவார். —

௩௪. பார்த்திபற்கு விரத்தியுண்டான வேதுவை யுரைத்தல்.

பாரசீகர்குலத்தில் பரிகனென்னும் பூமிக்கரசனாகிய வீரமண்டாமணியையுடையவன், சுரகுவென்னு நாமத்தையுடைய அரசனுக் கிஷ்டமானவன், பத்துவருஷ மழையில்லாமையால் இயாவரு மரணமடைய கொடிய துராக்கினி மிருகலைப்பார்த்து நடுக்கமுற்று வாடினான். — துன்பமாகின்ற தனது நாடுவிட்டுப்போய் ஆரணியத்திற் சென்று அன்னம்புசிப்பதி லாசைவிட்டு, தவத்தைச் செய்து உதிர்ந்தசருகு புசிப்பாக பர்ணாதனென்கின்ற நாமத்தைப்பெற்று, தவத்தினதுகுணத்தினுல் நலமான வாத்மஞானத்தைப்பெற்றான். அவனது நல்லதவத் துக்குச் சமானமானதுண்டோ. — ஒப்பற்ற முன்னு லகமென்கின்ற மடத்தில் ஞான்றுபட்டிருந்த பர்ணாதமுனியானவர், வாய்மையைப் பொருந்தி யிருக்கின்ற சுரகுவென்னு நாமத்தையுடைய அரசனிடத்தில் வருபவனாய் எதிரேதோற்றவும், அச் சுரகுவானவன் அன்போடடைந்து இரண்டுபேர்களும் அன்பைப் பொருந்தியிருந்து, இத் தன்மையாகிய வநுபவங்களைப் பேசத்தொடங்கினார்கள் — உண்மை இத்தினத்தில் யானடைதலினுல் நீங்கற்கரிய சயமெய்தி வினை நீங்கினதென்றுசொல்லிய சுரகுவென்னு நாமத்தையுடைய விராசனை, பர்ணாதமுனியானவர்பார்த்து, உன்னிடத்திலெய்து மாண்டவியமுனி யானவர்போதித்த ஞானத்துக்குச் சமானமாக தன்னைவாழ்விக்கும் உண்மையான ஞானபதத்தை, நானும்

௩௫. பார்த்திபற்குஞான முண்டாதல்.

௩௬. அரசனு முனியு மநுபவ த்தையும் உசாவ த்தொடங்கல்.

௩௭. முனிவர நுபவம் பெற்ற தறிவித்தல்.

¶ இ-ம். விசாரமுகத்தா லாத்மநிஷ்டனாய்ச் சர்வம்பிரமமென்னு மநுபவத்தினுற் சுகதுக்கந்தாக்காமற்சுகவடிவாயிருந் தரசாட்சிசெய்தாரென்பதாம்.

௩௮. அரசனை முனி வினவுதல். அடைந்தேனென்றுசொல்ல.— மிகவுந் தெளிவுற்று கெம்பீரமாக சமதிருஷ்டியினால் இவ்வுலகத்திலுள்ள காரியங்களை, அரசனைசெய்கின்றாயோ. பிரிவுற்றகாலத்தை அறியாநின்ற உனதுசரீரமானது, கூட்டமாகிய மனோவியாதியும் வியாதியும் தொடரவில்லையோ —அடைகின்றகாலத்தில், இன்பமாகிய செல்வத்திலழுந்தாமல் நடுவாக நிற்கின்றாயோ.

௩௯. இதுவுமது. சங்கற்பம்விட்டு விஸ்ராந்தியடைந்து தடையில்லாத உபசாந்தமாயும், கைவல்யமாகியும், சஞ்சல மொன்றுமில்லாத நடையைப்பற்றி மேலானதாகிய யிருக்கின்ற சமாதியைப் பொருந்தினையோ.

௪0. சமதிருஷ்டியாலரசுசெய்கின்றாயா வென்றமுதல் வினாவுக்குத்தரம். ‡ —சும்மாயிருந்தாலும், இடைவிடாமல் தொழிலைப் பொருந்தினாலும், ஆத்மஞானி எப்போதுதான் சமாதியைவிட்டு நீங்கினவனாவன். நிறைந்த ஞானமுண்டான மனத்தையுடையவர்கள், உலகவிபகாரங்களைச்செய்தாலும், பிரிவில்லாத உண்மை நிஷ்டையையுடையவராய் சமாதியைவிட்டு நீங்கமாட்டார்கள்.

௪௧. பாவிக்கும்போதப்பாவனை யக துக்கத்தைக் தொடர வில்லையோவென்ற விரண்டாம் வினாவுக்குத்தரம். § —உதாரமுள்ளவனே? பூரணமான சாந்தியில்லாதவர்கள், பிரமாஞ்சலியுடனே பத்மாசனத்தைப்பெற்றாலும், சமாதியிற் பொருந்தார்கள். இச்சையென்னுந் துரும்புக்கு அக்கினியாயிருக்கின்ற ஆத்மஞானமொன்றே மேன்மையான சமாதியாகும். சாந்தியில்லாமற் சும்மாயிருக்கும் அதுசமாதியல்ல.

௪௨. போகங்களிற்சென்று மனிலழுந்தாதிருக்கின்றாயோ வென்ற மூன்றாம்வினாவுக் குத்தரம். † —எப்போதும் ஒருவழிப்பட்டதாய் மனோசமனடைந்து தத்துவஞானத்தையறியில், அந்தஞானமே மேலானசமாதியாக மனதிற் பூரணமானவர்கள் சொன்னார்கள். மயக்கமில்லாத சத்துக்களறிவு அற்பமும் தாக்கின்ற தொழிலின்றிறத்தை மறவாதே, காலத்துக்கொப்பாக தனதாத்மஸ்வரூபத்தை நிமிஷமுமறக்கமாட்டாது.

௪௩. நிருவிகற்ப சமாதியையடைந்தாயோவென்ற நான்காம்வினாவுக்குத்தரம். ¶ —செவ்வையாகச் செல்லுகின்ற வாயுவானது தனது நடையினைமறவாத நீதியைப்போல, ஞானிகளறிவானது பேதமற்ற வாத்மஞானத்தையே மறவார்கள். பிரிவில்லாதவறிவில் ஒற்றுமையையுடையவர்கள் சமத்து

---

‡ இ-ம், பரிகமுனி தனதிஷ்டரான சுரகு சகசசமாதியினின்றும், அரசாட்சிசெய்கின்ற வனுபவத்தை நான்கு விதமாகப்பிரித்துக் கேட்டனரென்பதாம்.

§ இ-ம், சகலமுந் தனதல்லாசமாய் விளங்குஞ் சமாதிநீங்காத வறிஞர்சந்நிதியிற் சகலமுஞ் சேட்டிக்கு மென்பதாம்.

† இ-ம், பாவனையென்னு மிச்சாந்துரும்பை பாவனாதீதமென்னும் ஞானக்கினியெரித்தலினது துன்பவின்பங்களை யெங்ஙனந் தொடரு மென்பதாம்.

¶ இ-ம், உண்மைஞானமான தன்னைப்பிரியாமலாத்மாநந்தத்தை யனுபவிக்குமாபோகிக ளெங்ஙனம் விடயயோகத்திலழுந்துவாரென்பதாம்.

௬௪. பார்த்திப முனி சந்தோஷித்துரைத்தல்.

வத்தையுடைய சத்துக்கள் நெருங்கிய விபகாரவேற்றுமையை நீக்கினவர்கள் பிரமபதத்தை யடைந்தவர்கள். * —ஆதலினால் பலவாகவும் ஒன்றாகவுமிருக்கின்ற சரீர விபகாரங்களினாலும், காலம்போகாத மேலான வாக்கியத்தினாற் ப்ரகாசித்து அறிவையுடையவர்கள், எவ்விடத்திலிருக்கின்றார்கள்; அதிசயமாக பேதமில்லாமல் அறிவையறிந்தாய்; பிரமபதத்தையடைந்தாய். —

௬௫. இதுவுமது.

பூரணசந்திரனைப்போல உள்ளே குளிர்ச்சியடைந்தாய்; மனதின்கண் அகம்பாவமென்னும் துக்கங்கெடவும், களங்கமறவும் பூரணமானாய், நீக்கப்படாத வாத்மவிச்சயத்தை அடைந்ததானே சுயமாக எவ்விடத்தும் ப்ரகாசிக்கின்றாய்; தெளிவையுடைய சாருவே யென்றுகேட்ட பரிகனென்பவர்க்கு, சாருராஜனனவர்மேற் சொல்லுவார் §—

௬௬. பின்னுமா சன்றன தனுபவத்தைச் சுருக்கிச் சொல்லுதல்.

விரிந்த வசனங்களினால் இலாபமென்ன, ப்ரயோசனங்களனைத்தும்விட்டு எப்போதும் சமமாக மனமானது, தனக்குட்ப்ரகாசித்து உண்டான பிரமானந்தமாய், ஒப்பற்ற பேரா ஞானதிருஷ்டியுண்டாய், திரமாக வாத்மஞானம் ப்ரகாசிக்கின்றது என்று சொன்னான். † —

சாருகதை முற்றிற்று.

பாசவிபாசன்கதை.

அவதாரிகை.

முற்கதையில் நிரதிசயானந்தமான குளிர்ச்சியை சமாதியாதலாலும் உள்ளவர்களாராயினு மவர்களே சகவிஸ்ராந்தியடைந்தவென்றார்களென்றுசொல்லி, பல்வனுபவமில்லாவிடில் வெறுமிதமான வருத்தமுண்டா மென்பதை யறிவிக்குமித்தம், பாசவிபாசன் சம்வாதத்தைச்சொல்லுகிறார்.

௧. சுகபோகமுள்ள வர்க்குத்துன்பமொருபோது மின்றெனல்.

இந்தப்ரகாரம் சாருபரிகனென்றுசொல்லப்பட்ட இவ்விருவர்களும் முலகத்தினது முறைமையை விசாரித்து, அன்புசெய்து, ஒருவருக்கொருவ ராஜாக்களை செய்து விரும்பி தங்கள் செய்கையி லிருந்தார்கள்.

* இ-ம். பிறந்தறியும்போதும் பிரிவற்ற ஞானவடிவமாய் விளங்குதலின் ஸ்வரூபசமாதியைப் பெற்றவரென்பதாம்.

§ இ-ம். சாருவேந்தன் சொல்லிய வநுபவத்தைக்கேட்டு அகம்பாவநீங்கியானந்தசீதளமான ஸ்வரூபசமாதியைப் பெற்றுவென முனிசொன்னானென்பதாம்.

† இ-ம். சித்தின்பநீங்கிப் பேரானந்ததிருஷ்டியாற் சஞ்சரிக்கின்றேனென்னப்போ தவ்விருவரு மாத்மசுகத்திற் கலந்திருந்தன ரென்பதாம்.

எப்பொழுதும் அத்தியாத்மஞானமே ஸ்வரூபமாகியும், அந்தர்முகமாகியும், மகிழ்ச்சியடைந்து ஆத்மஞானத்தைவிடாமல் அனுபவிப்பவர்களுக்கு எவ்வளவு மொருவருத்தம்வாராது. —

௨. ஜீவனை எருதாக வுருவகப்படுத்தி அவன்படுந்துன்பத்தை யறிவித்தல்.

இச்சையென்னும் வலியகயிற்றி னிணங்களினால் பந்தமுற்று, அரியவியாதியென்னும் ஈக்கடிக்குத் திடுக்குற்று, குற்றம்பொருந்திய போகமென்னும் தடிகளாலடிபட்டு, அஞ்ஞானமென்னும் தார்க்கோலினாலலைந்து, துற்கருமமென்னும் குழியிலேவிழுந்திருந்து, கொடியசம்சாரமென்னும் கானகத்திற்சுற்றி, மகாமோகமென்னும் தழைநிழலில் வெற்றியையுடைய ஸ்ரீராமா! ஜீவனாவிடபம் நித்திரைசெய்யும் —

௩. ஜீவனைக்கரை யேற்றவேண்டுமெனல்.

அடைபட்டதுக்கமென்னும் கனத்தசுமையைச்சுமந்து வருதல்போலுதலென்னும் இவ்விரண்டும் உடம்புண்ணாய் அளவற்றசங்கமென்னும் பள்ளத்தில்விழுகின்ற ஜீவனாகிய விடபத்தை, இந்தக்குட்டையிலிருந்தும் ஒழிவற்ற முயற்சியினால் எடுத்தலே வல்லமையாம். மேலான ஞானவான்களது நட்புண்டானால், கப்பலையுடையவர்கள் வங்கத்தைக்கொடுப்பதுபோல, சம்சாரசாகரத்தைத்தாண்ட யுத்தியைக் கொடுப்பார்கள். † —

௪. ஜீவன்சிவமாதற்கு மகான்கள் சகாயமன்றியுமனதின் சகாயமுக்கியமாய் வேண்டுமெனல்

ஆத்மஞானிகளாகிய இரசமுள்ளகனிகளும் புஷ்பங்களுநிறைந்த குளிர்ந்தசோப்பானது, எந்தவிடத்திலில்லையோ, அந்தவிடம் பேய்த்தேரையுடைய பாலைவனமாம்; அவ்விடத்தில் வாசஞ்செய்பவர்கள் அஞ்ஞானிகளல்லவா; செல்வமும், சிநேகமும், சாஸ்திரமும், உறவும், கிரியைகளும் முதலியயாவுஞ் சகாயமாகாது; ஒழுங்குள்ளமனமே ஆத்மாவையடையத்தக்க பாகதியிலேற்றுதற்கு சகாயஞ் செய்யவேண்டும். —

௫. மனமானது தேகத்தைச் சடமென்றறிவிற் சித்தைத் தரிசிக்குமெனல்.

செவ்வையாய் நீங்காமல் உடன்பொருந்துகின்றசிநேகமாகிய மனதமாத்திரத்தைச்சேர்ந்து கொஞ்சம் விசாரிக்குமளவில் ஜீவன் வாழ்வையடையும்; நஞ்சாகிய விம்மாமிசசரீரத்தை முறியாநின்ற விறகுக்கும், ஓட்டுக்குஞ் சமானமாக முதிர்ந்தமனதினால் பார்த்திருந்தால், இந்தவளவினால் தேவர்களும் வணங்காநின்ற பூரணஞானத்தை உணர்ந்தடையலாம்—

௬. சித்ததரிசனத்தாற் றுரியதிருஷ்டி வெளிப்படுமெனல்.

மகா சமுத்திரத்தைக் கொப்பாகியும், வாக்கியங்களைத்திற்கு மதிதமாகியும், சமானமில்லாததாகியும், பற்றற்றதாகியும், கேவலமாகியு மிருக்கின்ற நிறைந்த ஞானப்பிரகாசத்தின்து சுவாலையோடுஞ் சேர்ந்து, குற்ற மறும்படியாகவும் அசை வறும்படியாகவும் விளங்காநின்ற மறைப்பில்லாத துரியதிருஷ்டி

† இ-ம்- ஜீவனது சிதாபாசத்தன்மையை நீக்கிச் சிவமாக்கும் பொருட்டுஞானவான்களது சகாயம் வேண்டுமென்பதாம்.

யானது வெளிப்படுமாயின், அதனோடு அதுதானே சமானமான முறைமையினால் சுழுத்தியடைந்தவர்க்கு சமீபமாக உவமிக்கத்தக்கதாய்த் தோற்றும். —

ஏ. அகம்பாவ நீங்கின அத்துரியமே பிரமானந்தமாக விளங்குமெனல்.

ஆகிய வத்துரியவவத்தையானது, உருவமனைத்தையும் தரித்திருக்கும் ஆகாயத்தைப்போல வியாபகமுள்ளதாம். இதிலுள்ள மனதுடன் சேர்ந்த அகம்பாவமிருந்தால் எவ்வஸ்துக்களிடத்திலு நிறைந்திருக்கின்ற குறைவில்லாத பிரமானந்தமாகப் பிரகாசிக்கும்; ப்ரகாசிக்கின்றபரமாத்மஸ்வரூபமாகும்; *அான்மிகவு முயற்சிசெய்யிலிருக்கும்; சுழுத்தியையடையவர்கள் குணத்தைப்போல தம்மிடத்தில் தோற்றத்தக்கதாம். —

அ. பிரமானந்த வடிவமான துரியமேயாவுமாய் விளங்குமெனல்

சொல்லிய வத்துரியமானது வசனங்களுக்ககப்படாது; அதற்கிலையாயிருந்தால் பொருந்துவதாகும். வரம்பற்ற இவையெல்லாம் அவ்வாத்மஸ்வரூபமாகும். பிருத்வீவாயுபாதிகளையடையதானது, பிரிவில்லாமலடங்கினால் உள்ளும்புறம்புமாகிய எவ்விடத்தும் சராசரவடிவமாகிய குற்றமற்ற தேவதேவனை பிரமவஸ்து சுயமாகவே யனுபவப்படும்; —

கூ. சாக்ஷாத்கார வனுபவமுண்டாகுங் கிரமமறிவித்தல்.

இவ்வனுபவம் வந்தபின்பு விடயவாசனைகள் கெடுவதாம்; அதன்பின்பு பேதமில்லாத வஸ்துவினுடைய ப்ரகாசமுண்டாகும்; அதன்பின்பு கெடுதலின்மையில்லாத சமபாவனையினால் ஆத்மஸ்வரூபத்தில் வேறுபாடுதல் உதிக்காதுண்டாகும் மகான்களுக்கும் இவ்வனுபவமே மறிக்கப்படாத ஸ்வரூபமாம். † —

கo. மனமானது வெளிமுகத்தைக்கெடுத்தகமுகப்படி லாகத்த முண்டாமதின்றேயில்லையென்பதற்குத் திருஷ்டாந்தமறிவித்தல்.

விடயசம்பந்தமான மனதை விவேகமுள்ள மனதினாற்கெடுப்பித்து, குற்றமற்ற ஆத்மாவையனைத்தறிவிக்கார்களாயின், ஒருநாளும் சம்சாரதுக்கம்வசிக்காது. மனதிறந்தால் நிறைந்த ஆகாசத்தினுல் வியாபகமுள்ள ஆத்மாவினது ஞானப்பிரகாசிக்கும். சொல்லுகின்ற இவ்வனுபவத்துக்கு ஒருகதையுண்டு குலத்திலெளிமையுள்ளவனே, கேட்பாயென்று ஸ்ரீராமனுக்கு வசிஷ்டமுனியானவர் சொன்னார். —

கக. முனிவரிருவருண்டெனல்.

சையமென்கின்ற பெரியமலையின்மேல் தவத்தையுடைய அத்திரிமுனியானவர், வசிக்குமாச்சிரமத்தில் வாழும்படியாக இரண்டுமுனிவர்கள் ஓரிடத்தில் வாசஞ்செய்பவர்கள்; உண்மையாகிய அந்தவிரண்டுபேர்களுக்கும் பெருமைபொருந்திய புத்திரர்கள் விபாசனென்றும், பாசனென்றும், இரண்டுபேரவதரித்தார்கள்; நெருங்கிய சிநேகிதத்தையுடைய அவர்கள், —

கஉ. முனிவரிருவரும் பிரிதல்.

கிரமமாய் வளர்ச்சியடைந்திருந்தார்கள்; ஒன்றேயிரண்டாயினதுபோல சலனமற்ற மனமுடையவர்கள்,

† இ-ம். சிவஞானவன் சிதம்பரத்தன்மையை நீக்கிச் சிவாகாரமாய் விளங்குமாதை யறிவித்ததாம்.

அவர்கள் பிதாவும் தாயும் மரணமடைய, துக்கத்து
டன் இனிசெய்யவேண்டிய மாதாபிதாக்களுக்குள்ள
கிரியைகளை முடித்து உள்ளபாசத்தினால் வருத்தத்
துடனழுதுக்கொண்டு இரண்டுபேர்களு மிரண்டிட
த்திற் பிரிந்துபோனார்கள். —அளவற்றகாலங்கானக

கங. முனிவரிரு வருங்கூடிமுகமனுரைத்தல்.

த்தில்வாசஞ்செய்து, அருமையானதபத்தினால் சரீர
த்தைவாட்டி, நிறைந்த இச்சையைவிட்டுநீங்கி. இரு
வருஞ்சேரப்பெற்றார்கள். நட்பினால் மனதும், நேத்
திரமும், மகிழ்ச்சியடைந்து மேலான விபாசமுனி
சொல்லுவான் ; வளராநின்றசகத்தில் எனக்குநல்லு
றவானவனே ? நெருங்கிய எனதுபிராணனைப்போல
வந்தாய் ; —இதுபரியந்தம் வெகுகாலமாய் எவ்விட

கச. பாசனைப் பார்த்தாத்மானுபவத்தை விபாசன்வினாவுதல்.

த்தில்வசித்தாய், நீனேதுக்கந்தீர்ந்தாயோ, சமத்து
வமாக உனதாத்மஸ்வரூபத்தை நீ யுணர்ந்தாயோ,
பூரணஞானம்லபித்ததோ, சதுரையுடையபாசனே ?
சுகத்தைப்பெற்றாயோ, சொல்லுமென்றுகேட்டவச
னத்தைக்கேட்டு, முதிர்ந்தவுண்மையினால் விபாசன்
முகத்தைப்பார்த்து பாசனிவைகளைச்சொன்னான்.—

கரு. நீங்கவேண்டியதை நீக்கி யடையவேண்டியதை யடையாவிடினொன்னம் பரம சுகமுண்டாகுமெனப் பாசனுரைத்தல்.

பிராணனைப்போலிருக்கின்றவெனதுறவானவரே?
எனது விதிவசத்தினால் உம்மைத் தரிசித்தேன் ;
மனதிற்குளிர்ச்சியை யடைந்தேன் ; குற்றமுள்ள சங
டத்திற்சுழலுகின்ற வெனக்கு சிறப்புள்ளசுகமுண்டா
கும்விதமெப்படி, அறியத்தக்கவையறிகின்ற மட்டும்
மனது கெடாதமட்டும் சஞ்சலமானது நீங்காதமட்
டும் மிருந்த நன்மையுண்டாகும் விதமேது. —

கசு. இச்சைநீக்கி ஞானமுண்டாகும் பரியந்தமெப்படி சஞ்சல மனை நீங்குமெனல்.

மனத்திலுள்ளவைகளும் இச்சைகளைத்தும், இட்டி
யகோடாலியினால் வெட்டப்படும் தருவைப்போல,
பருத்தமூலத்தோடு கெடுகின்றமட்டும், ப்ரத்யக்ஷ
ஞானத்தையடையுமட்டும், அனர்த்தமான வேறுபா
டுநீங்கி சமமுண்டாகுமட்டும், பிரமஞானம் வருமட்
டும், பிறந்திறக்கின்ற துன்பமேயன்றி சிறந்தசுக

கஎ. ஆத்மஞானத்தையடையாதவர்கள் பிறப்பிறப்பிற் சுழல்வார்களெனல்.

முண்டாகும்விதமேது. — அந்தஞானமென்னும் வி
யாதிக்கு மகாவிரதமாய்வாராநின்ற ஆத்மதத்துவ
மென்னும் பயனை விரும்பாதிருந்தவர்களுக்கு, கொ
டிய சஙஸாரமென்னும் விஷோகவியாதியானது மேலு
மேலும்வரும். சுகதுக்கத்தினது நடுவில் அகப்பட்டு
ம், சஙஸாரணத்தில்விழுந்துசலனப்பட்டும், விசாலம்
பொருந்திய சகத்திலுழலாநின்ற ஜீவகோடிகள் சரு
கைப்போலபயனடையார்களென்றுசொன்னான்.*—

பாசவிபாசன்கதை முற்றிற்று.

* இ-ம். அடையவேண்டிய விதப்படி யாத்மசுகத்தை யடையாவிடிற் சங
ஸாரண மெய்யனை நீக்குமென்பதாம்.

வீதகவ்வியன்கதை.

அவதாரிகை.

முற்கதையில் சித்தசங்கங்கூடாவிடில் சித்தவிஸ்ராந்தி கூடாதென்பதையறிவித்து, இஃதுண்டாதற்கேதுவான சித்தநிரோதனத்துக்குச் சங்கத்தியாகமும், பிராணநிரோதனமுங் கொஞ்சஞ்சகாயமாமென்பதையறிவிக்குநிமித்தம் வீதகவ்வியன்கதையை நிரூபிக்கிறார்.

௧. ஞானத்தாற்பவத்தைக் கெடுக்கவேண்டுமெனப்போதித்தல்.

இப்ப்ரகாரமே நல்லவனுபவமாகிய வினாவுகளை தங்களுக்குள் தாங்களே பேசிக்கொண்டு வசிக்குமிரண்டுபேர்களுக்கும் சிந்திக்கப்பட்ட நல்லகாலத்தினால் கைவல்யசுகத்தைக் கொடாநின்ற உண்மைஞானமானதுப்ரசன்னமாயிற்று. அத்தன்மையினாற்சொல்லுகின்றேன் ; கொடியசங்கத்தை ஞானத்தினாலல்லாமல்கெடுக்க ஆசையென்னுங்கயிற்றினால் கட்டுப்பட்டதுயரான மனதுக்கு வேறொருமார்க்கமில்லை.—

௨. அந்தஞானமியாதினாலுண்டாகுமெனில்.

பற்றில்லாமல் மாசின்றியமனது, தொழில்களைச் செய்தும் பந்தத்தையடையாது ; பற்றுள்ள மனது அளவற்றதவத்தைப்பெற்றாலும் பந்தத்தையேயடையும். அகத்திலாசையில்லாமல் நல்ல செயலைச்செய்கின்றசீவனானது புறச்செயல்களைச்செய்தாலும், பற்றில்லாமற் செய்யாவிட்டாலும், செய்பவனும் புசிப்பவனுமாகிய இருவர்களுடைய குணத்தைப் பொருந்தாது ; ¶—என்றுசொல்லவும்,

௩. பற்றறுதியுண்டாவதற்கப் பற்றைநான்காகப்பகுத்துவினாவியவதிலிரண்டிற்குத்தரங் கூறல்.

பற்றென்பதெவ்விதமானகுணத்தையுடையது, எந்தப்பற்றினாற் பந்தமடையும், அடைதற்கரிய மோக்ஷத்தை எந்தப்பற்றினாலடையலாம், தொடராநின்ற பந்தத்தை கெடுக்கின்றப்ரகாரமென்ன, சொல்லவேண்டுமென்று கேட்ட ஸ்ரீராமனுக்கு, வசிட்டமுனிசொல்லுவார். சரீரத்தையும், சரீரியையும், பிரித்தறிவதொன்றையுஞ்சிந்தியாமல் சரீரத்தைநம்புதலேபற்றாகும். அப்பற்றாற் பந்தமுண்டாகும்.

௪. மூன்றாவதற்குத்தரங்கூறல்

§ — சகலமு மாத்மஸ்வரூபமே நானிவ்விடத்தில் எதைவிரும்புவேன் எதைவெறுப்பேன் என்பது பற்றில்லாததாம். மிகுந்த துக்கந்தீர்ந்த இப்பற்றின்மையானது சீவன்முக்தர்களுடையசரீரத்தில் பொருந்தும் ; நானில்லை, பிறருமில்லை, மேன்மைபொருந்திய சுகங்களைத்தும் பொருந்திப் பொருந்தக்கடவது, பொருந்தாவிடின் பொருந்தாத

¶ இ-ம். மனோசீவன்களுக்கு விடயப்பற்றறுதி யுண்டானால் ஞான முதிக்குமென்பதாம்.

§ இ-ம். ஆத்மதரிசனமின்றி தேகமயமாயிருத்தலே பற்றாகும். அதுவேபவத்தைக்கொடுக்கும் பற்றென்பதாம்.

தாய்ப் போகக்கடவதென்று சொல்லியப்ரகாரம், மனதிற் பற்றின்மையுண்டானால் மேலான மோக்ஷத்துக் கிதுமார்க்கமென்றறிவாய். ¶ — தொழிலின்மையைவிரும்பமாட்டார்கள் ; தொழிலையும் விரும்பார்கள் ; விளைக்கின்றபயனைவிட்டு முன்சொன்ன விரண்டையுஞ் செய்தால், சமானமானவர்கள் பொருந்திய பற்றில்லாதவர்களென்று சத்துக்கள் சொல்லுவார்கள். வராநின்றகருமத்தின் பயன் முதலானவைகளை கருமத்தினால்நீக்காமல்மனதினால் சாமர்த்தியமாகத்தள்ளுதல் பற்றில்லாததென்று அறிவாய். இதனால் வளருகின்ற செயல்களியாவிலும் குற்றநீங்கி அடைதற்கரியமோக்ஷத்தையும் இலாபமாகக்கொடுக்கும். ‡ — கிருமிகீடமுதலாகிய அநேகசநநங்களில் உயிர்களியாவு மநேககாலமும் உண்டாகி சமுத்திரத்தி னலையைப் போல கெடுகின்றதன்மை குற்றத்தைக்கொடுக்கின்ற பற்றினுடைய பரப்பாகும். பற்றானதிரண்டு ப்ரகாரமாகும் ; அவைகளிலொன்றுமூடாநின்ற அந்திப்பற்றென்றும், மற்றொன்று அவந்திப் பற்றென்றுஞ் சொல்லப்படும். சொல்லிய அந்திப்பற்றானது, மூடர்கள் பொருந்தத்தக்கதாம் ; குறைவற்ற வாத்மதத்துவத்தை அறிந்தவர்களுக்கு ஆபரணங்களாக அவந்திப்பற்றானது பொருந்தும். † — ஆத்மதத்துவ ஞானத்தினாலும் விவேகத்தினாலும், கிரமமாக வுண்டானதாகியும் திரும்பவும் பவமானது நெருங்காததாகியுமிருக்கின்ற மேலாகிய அவந்திப்பற்றிதுவேயாகும். இதுவல்லாமல், அந்திப்பற்றெதுவென்னில், மேலாகிய ஞானமில்லாமல் சரீரமுதலாக பொருந்துகின்ற வஸ்துக்களினால் உண்டாகிய சகத்தினிடத்தி லுண்டாகப்பட்டபவங்களை திரும்பவுடையதாகும். குழந்தாய் ? இவ்விரண்டுபற்றுகளையும் இப்படியென்று தெளிந்துகொள்வாய். § — சங்குசக்கரத்தைக் கரத்திற்றரித்த சிவந்தகண்ணையுடைய விஷ்ணுமூர்த்தியானவர், அவந்திப்பற்றினது வயத்தினால் மெலியாமல் பலவிதமான செயல்களினால் சகல சகங்களை

௫. நான்காவதற் குந்தரங் கூறல்.

௬. முன் சொல்லிய விரண்டு பற்றிருக்கு மிடத்தைச் சொல்லுதல்.

௭. பற்றுகளி னிலக்கணமுரைத்தல்.

௮. வணங்கற் பாற்றுன பற்றின் பெருமையையுரைத்தல்.

¶ இ-ம். சர்வம் பிரமமயமாய்விளங்குதலின் விருப்புவெறுப்பின்றிச்சுயமானவணங்கற்பாற்றுன பற்றே வீட்டைக்கொடுக்கும் பற்றென்பதாம்.

‡ இ-ம். கிரியாக் கிரியைகளிற் பயனைக்குறியாமற் றற்பயனுய்ச் செய்வதே பற்றறுத்தலென்பதாம்.

† இ-ம். இவ்விரண்டுபற்றிற் பெத்தனுக்குரிய தொன்று, முத்தனுக்குரிய தொன்றுமா மென்பதாம்.

§ இ-ம். ஞானத்தைப்பற்றிய தன்மயமாக்குத லொன்றுந் தேகத்தைப்பற்றிய தன்மயமாக்குத லொன்றுமா மென்பதாம்.

த்தையு நன்மையாக விருதையுடனிரட்சிக்கின்றார்; வருத்தமில்லாத மெய்ஞ்ஞானபதத்தைச் சேர்ந்திருக்கின்ற சித்தர்களும், சுகராட்சகராய் முன் சொல்லியப்ராகாரமே விளையாடிக்கொண்டு அவைத்திப்பற்றினால் பரந்திருக்கின்ற உலகரூபத்தில் பொருந்தியிருந்தார்கள். ¶ — கேட்டிய நன்றென்கின்ற பாவனையினாலும், ஒளிசெய்கின்ற போகசைத்தினாலும், மனமானது நெருங்கி விடுதலெல்லாத அந்தப் பற்றினால், வெறும் பிரேதத்தைமொய்க்கும் கழுகைப்போல போகத்திலிவிழும். கேட்டிய அந்தியென்னும் பற்றையுடையவர்களுக்கு பலவாயங்களும் வீடாகச் செய்யப்பட்டன; சமானமாகிய அந்திப்பற்றுள்ளவர்களென்கின்ற இவ்விறையால் நாகாக்கினி யெரிக்கவொண்டிருக்கும். ‡ — ஞானமென்கின்ற நேத்திரமானது தெளிவாக விளக்கமாய் கொடிய மாயாகாரியமான விஷயத்தினின்றும் திரும்பி, விருப்பம்பொருந்திய பற்றென்பது எவ்விடத்திலுமில்லாத பெருமைபொருந்திய மனதுடனிருப்பவர்களே சீவன் முத்தராம். நிச்சயமாக எக்காலமும், எந்த வஸ்துக்களிலும் இருப்பவனுகியும், சகலவுயிர்களோடும் இருப்பவனுகியும், எத்தொழிலையுஞ் செய்பவனுகியு மிருக்கின்ற சீவன்முத்தனுடைய இந்த மனநிலையுடைய சுபாவத்தைக்கேட்டாய்.—செயல்களினும், இலைகளினும், பொருள்களிலும், ஆகாயத்திலும், மேலிலும், கீழிலும், சூழ்ந்திருக்கின்ற திக்குகளிலும், புறம்பாகிய போகக்கூட்டங்களிலும், ஞானத்தைக் கொடுக்கின்ற பிராணனிடத்திலும், சிரசிலும், முகத்திலும், நாக்கிலும், கண்களிலும், நாசியிலும் புருவத்திலும், அகங்காரத்திலும், சிவனிலும், இருதயாம்பரத்திலும், சாக்கிரத்திலும், கனவிலும், சுழுத்தியிலும், வெண்மைமுதலாகிய பஞ்சவன்னங்களிலும் நானாவிதவிறங்களிலும்,—சஞ்சலத்திலும், இடத்திலும், ஆதியிலும் மத்தியிலும், அந்தத்திலும், சமீபத்திலும், தூரத்திலும், சரீரத்தினவயவங்களிலும், பல திரவியங்களிலும், ஆத்மாவிலும், சத்தாதிமுதலிய தன்மாத்திரைகளிலும், பெருமையாகச்சொல்லுகின்றவாக்கியத்திலும், உலவுகின்ற வருதலிலும், போதலிலும், நா

௯. பயனிலைப் பற்றினிழிவையுரைத்தல்.

௰. பற்றினமிலக் கணத்தைச் சொல்லி சீவன் முத்தன் மனநிலைக் கணத்தைச் சொல்லத்தொடங்கல்.

௧௧. இதுவுமது.

௧௨. இதுவுமது.

¶ இ-ம், சஸ்வாதிகளும் வணக்கப்பாற்றுன்பற்றினு லுலகங்களிற் சீவன் முத்தித் தன்மையோடும் விளங்குகின்றனா ரென்பதாம்.

‡ இ-ம், சிலர் பயனிலைப்பற்றினு லுலகங்களிற் பெத்தத் தன்மையோடு பல நரகத்தி லழுந்துகின்றன ரென்பதாம்.

லத்தினது குணங்களிலும், ஓரற்பமும்பற்றுமல் ஞானத்தில் விஸ்ராந்தியடைந்து, ப்ரகாசிக்கின்ற திரிஸயங்களில் கொஞ்சம்பழகினாலும், எவ்விடத்தும் விராகமடைந்து ஜீவன்முக்தன் மனது பிரமாநந்தத்திலிருக்கும். ¶—

கங. ஜீவன்முக்தர் இலக்கணங் கூறல். சொல்லிய அச்ஜீவன்முக்தத் தன்மையிலிருந்து பற்றென்பதில்லாமல் சிதாகாசத் தன்மையைச்சேராத ஜீவன்முக்தரானவர்கள், இச்சகத்தில் தொழில்களனைத்தையுஞ் செய்யக்கடவன் இரக்கடவன். ஆநந்தபோதனான ஜீவன்முக்தன் தொழிலைச் செய்தாலும், குற்றமில்லாமல் விட்டுவிட்டாலும், கிரியைகளினால்தரும் ப்ரயோசனங்கள், கறுத்தமேகங்கள் நாநாவிதமாக வுண்டானபொழுதும், ஆகாயத்தில் சம்பந்தியாத தன்மையைப்போல, எவ்வளவும் சேரமாட்டாது. —

கச. சிதாநந்தமடைந்த இலக்கணங் கூறல். அல்லாமலும் அந்த விடயாபிசத்தையும் நீர்ப்பாகத் தள்ளி விடயத்தினாந்தமாகிய ஞானத்தின் னிறைந்து உபசாந்த முடையவனும் ஸ்படிகமணியைப்போல உள்ளே ப்ரகாசத்தைப் பொருந்தி ஜீவனானவன் ஆத்மாவி லொன்றுபட்டு நிற்கக்கடவன். நன்று பதிந்திருக்கின்ற ஞானசகத்தையுடையவராகியும், மகான்களாகியும், அறிவுள்ளவராகியும், மேன்மையை நன்றாகப் பெற்றவர்களாகியும், இந்திரியவியாபாரங்களில் மயிலிறகைப்போல நின்று சஞ்சரிப்பார்கள்; மகாமேருவைப்போல மனதினிலைதளரார் —

கரு. ஆநந்தாதீத முண்டாகுங் கிரமமுரைத்தல். விடயங்களைவிட்டு நீங்கினால் மனமானதுகெடும்; அந்நிலையானது, தொழில்களைத் தவில்லாத நிறைந்தநானாச்சமுத்தியாகும்; இதையெப்போதும் ஒழியாத பரிச்சயமே செய்யச்செய்ய, சத்துக்கள் பிரிவற்ற முதிர்ந்த துரியமாமென்றுரைப்பார்கள். குற்றமற்ற இத் துரியானுபவத்தில் நிலையையடைந்து குறிப்பில்லாத வாநந்தத்தையடைய தனித்த சுபாவத் தோட்பாட்டினால் ஆநந்தாதீதம் கூடும். —

கசு. ஆநந்தாதீதமே துரியாதீதமெனல். அந்தவாநந்தாதீதமாகிய மகாநந்தமென்கின்ற ஞானாதீதத்தை பெற்றிருப்பவனே, இரண்டில்லாத யோகியென்றுசொல்லலாகும். துரியாதீதத்தையும் அடைந்தவனாகும். கட்டுப்படுகின்ற சகலமான துன்பங்கள், தாமசகுணத்தினால்வந்த நாநாவிதமான வபிமானங்களீங்கி பரமசுகமானது, கெடுதலில்லாத தனது ஸ்வரூபமாகிய சத்தினிடத்தில், நல்லசலத்திலுப்பைக்கலந்ததுபோல, நன்றாகவொன்றுபடும். —

கஎ. வேதங்கள் மத்தியகத நிலை சடாசடமென்கின்ற இரண்டு பார்வையின் மத்தியில் தனிமையாயிருந்த பரதத்துவமான ஸ்வரூபத்

¶ இ-ம். ஜீவன்முக்தனது மனமானது, கிரியைமுதலிய வெவற்றிலும் பற்றின்றி ஞானசுகமாகவே விளங்குமென்பதாம்.

யே பிரமமெனச் சொல்லுதெனல்.

தை, மார்க்கமாகிய பிரகதாரண்ய வுபநிடதமுதலாகிய சுருதியானது, ஸ்ரீராமா ! எப்போதுஞ்சொல்லும். விடயங்களும், ஞானமும், பொருந்துங்காலத்தில் பரமார்த்தத்திற்பந்தகலாய் சொல்லிய பரம சுகமானது, இடமாகிய வநுபூதியினது ஸ்வரூபமாகும். அதலினால் அதுவே பிரகாசிக்கின்ற பிரமமென்று சொல்லும். —

௧௯. சுழுத்தியே கனவிற் சுழுத்தியாமெனல்.

விடயங்களும் காசுதியும்சேருகின்றகாலத்திற் சேர்ந்த வாயுக்கோளமானது, மிகவும்நிறைப்பானதாம் ; விடயங்களால் கட்டுப்பட்டால் பந்தனமாம் ; விடயத்தைவிட்டு நீங்கினால் இடம்பொருந்தியமோக்ஷமாம். விடயமும் காசுதியும் சேருகின்றகாலத்திற் சேர்ந்த வநுபூதியானது, துன்பமில்லாததாம் ; தெளிவாக வவ்விடத்தி லிப்படிப் பிடித்திருப்பாய் ; உனது நினைவில்லாகிய கனவிற் சுழுத்தியை யடைவாய். —

௧௯. கனவிற் சுழுத்தியே துரிய வியாபகமாய் விளங்கு மெனல்.

அச்சுழுத்தியே துரியத்தானத்தையடையும் ; அவ்விடத்தானத்தில் ஆத்மாவானது, ஆலமன்று சூட்சமமென்று இரண்டிய பிரத்யக்ஷமென்று அப்பிரத்யக்ஷமென்று ; சேதனமும், அசேதனமும், சத்தும், அசத்தும், என்கின்றவைகளுமென்றுசேர ந்தவென்ற காரணமென்று, இதரமென்று, ஏகமென்று அநேகமென்று, உலகமென்று இதமென்றுநிதிசே காணப்பட்டவைகளாய் மனமுதலிய வாதிக்கிரியங்களுக்கும் ஸ்தானமாயிருக்கும். ¶ —

௨௦. மனதின் சங்கோச விகாச பலனை யுரைத்தல்.

அதுவே பதிதபதமாகலினால் அது வஸ்துவென்று எவ்விடத்துமதுவேயாகும். உரியதாகிய மோக்ஷமென்று சொல்லப்பட்டது, தேவலோகத்திலும், பாதாளத்திலும், பூமியிலும்பார்க்கில் இல்லை ; இச்சைகளெல்லாம் நசித்தகாலத்தில், பரக்கமனமிப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். உயர்வாகிய மோக்ஷமானது, எனக்குள்ளதென்று உண்டோ வென்னலுமென்னாமல் இருப்பவனைத்துணைவருமான்டாகும். —

௨௧. மனதைக்கெடுப்ப தற்குச்சாந்தி வேண்டு மெனல்.

மனதின் மனமாயிருக்கல் நீக்கிக்கொள்ளவதற்கு சாதனமாம் போகாது ; வலிய பந்தம் நிலையாயிருக்கும். சகலத்துக்கு மதிகமாகி வடிவல்லாமலுமாகி வியாபகமாகி ஆகாசத்தைபமாகிற்குமானால், இனிமேலதிகெடப்பாகிய பந்தமென்பதேது, நல்வினைத்தொடர்பாகிய மோக்ஷமென்பதேது, மூலத்தோடு மனதைக்கெடுப்பாய். மேன்மையாகத் தன்னைத்தெரிந்து பூரணமாய் நின்மனமனதாய் நன்மையான உபசாந்தத்தைப்பொருந்தினவர்கள் ஒன்றையும் அறியமாட்டார்கள். —

௨௨. சாந்தி யுண்டாவ தற்கு

எரிக்கப்போகின்ற அடுப்பென்னும் கருவேல்லனத்தை

¶ இ-ம். அநுபவத்தி னிலக்கணத்தையு மனதையடையும் விரதத்தையு மறிவித்ததாம்.

நிராசைவேண்டு மெனல்.

வொட்டுகின்ற கோடாலியாகவும், பிரமசுகத்தைபொருந்தாநின்ற விடமாகவும், சந்தோஷஞ் சாந்தியென்கின்றதருவுக்கு புட்பக்கொத்தாகவு மிருக்கின்ற இந்நிராசைவரின், தளர்ச்சிநீங்கும். நிராசையை யாபரணமாகத்தரித்து நீங்காத வலங்காரஸ்வரூபத்தை யுடையவர்களுக்கு, அந்தோ! ! பூமியானது பசுவின் குளப்படியாகவும், மகாமேருவற்ப முளையாகவும், திக்குகள் பறவைக்கூண்டாகவும், மூன்றுலகமும் ஓரற்பமான திரணமாம்.¶ — சரீரத்துக்கு விலட்சணமாக

உ௩. ஞானவான்கள் பரஞானத்திலிருக்குமுறைமையைக்கூறல்.

ஆத்மஸ்வரூபத்தைத் தரிசித்தவன், சரீரத்தையதிக்குபோது மறியமாட்டான்; கரும்பின் கட்டியானது, அக்கினியிற் காய்ந்தகாலத்திலும், அரிந்தகாலத்திலும், இரசங்கெடாத விதத்தைப்போல, தெளிவுற்ற ஞானவான்பொய்யாகிய மயக்கத்தினால் வேற்றுமையாகான். கூடியபாரபுருஷனிடத்தில் மனதையுடைய பெண்ணானவள், அன்பினால் கிரகக்கிருத்தியங்களை பண்ணுவதுபோல, செயலைச்செய்தாலும் பிரமத்தினது நிலைமையைப்பிரியான். — விடயங்களில் இச்சையில்லாததினால் மனதில்பொருந்திய சாந்தியே

உ௪. பற்றறுதியே விதேகமுத்தித்தன்மையா மெனல்.

மோக்ஷத்தைக்கொடுக்கும். சொல்லிய மோக்ஷமானது, சரீரத்துடன் கூடியிருந்தாலும், இல்லாமற்போனாலும், ஆசையைக்கெடுத்த மகான்களுக்கு ப்ரயோசனப்படுமென்று சொல்லுவார்கள். விஸ்தாரமான விடயவிச்சைநீங்க சுகிப்பவர்கள், ஆநந்தமுண்டான சீவன்முத்தர்களாம்; வளராநின்ற விடயவிச்சைகளினும் அடிமைப்பட்டு சுகிப்பவர்கள், பந்தமடைந்தவர்களாம்; சொல்லிய விருவர்க்குமேலான மூன்றாவதானவனே விதேகமுத்தனாம் ‡ —

உ௫. சீவன்முத்தரது சகசநடையைத் தெரிவித்தல்.

வருங்காலத்திலுள்ள செய்கைகளில் இச்சியான்; நிகழ்காலத்தில் வருகின்றதொழிலின் மார்க்கத்தி லிருப்பான்; செல்காலத்திலுள்ள தொழில்களை மனதில் நினையான்; தொழில்களனைத்தையுஞ் செய்வான்; பந்தத்தில் கலந்தவர்களிடத்தில் மனதுவையான்; துன்பத்தின்மிகான்; ஒப்பற்ற பத்திமான்களிடத்தில் பத்திமானவன்; வஞ்சகரிடத்தில் வஞ்சகனவன்; குழந்தைகளிடத்தில் குழந்தையாவன்; விருத்தர்களிடத்தில் விருத்தனவன்; தீரர்களிட

உ௬. இதுவுமது.

த்திலும் அப்படியே தீரனாயிருப்பான். — எவ்வளவுமுள்ளவிடத்திலெவ்வளவு முள்ளவனாகவும், துன்ப

¶ இ-ம். நிராசையால் சாந்தியுண்டாயதனு லாத்மதரிசனமா யதில்மனங்கரையின் யாவுமற்பமா மென்பதாம்.

‡ இ-ம். ஞானிகளையும் விதேகமுத்திபரியந்தம் கிரமமாகச் சொன்னதென்பதாம்.

ம் பொருந்தின வர்களிடத்தில் வெப்பம் பொருந்திய துன்பமடைந்தவனுகவும், நிலைமையைவிடாத வறிவையுடைய உண்மையுள்ளவானந்தமானது பூரணமாகத்தோற்றுகின்ற செம்மையுள்ளவனுகவும், புண்ணியமான தனது சிறப்பைச்செய்பவனுகவும், அந்த ஞானமில்லாத ஞானமுடையவனுகவும், தெளிந்தவனுகவும், இரசமுடையனுகவும், இளைத்த மனமில்லாதவனுகவும், பரிசுத்தமாகவுமிருக்கின்றனீவென்றுந்தனைவன், சூரியன் குளிர்ந்தாலும், சந்திரன் சுறுத்தாலும் அக்கினியதோமுகமாகநோக்கினாலும், அச்சமுற்றுநிசயப்படான். ¶ — இதுவென்றுகாணப்பட்டசகலமும் ஞானஸ்வரூபமாம்; இந்தப்பிரகாரம் சகல சத்திகளும் பிரகாசிக்குமென்று அற்புதங்களில் சிவன்முத்தர்கள் அதிசயமடையார்கள். சலனத்தினசைவினுல் வேறானதுபோலத் தோற்றுகின்ற பறவையானசுழியைப்போலவும், ஆகாயத்தில் மயில்விறகை முன்பு சீக்கிரமாக வசைத்தமாத்திரத்தில் முத்தின் றிரளானது சத்தியம்போலத்தோற்றுதல்போலவும், பாரமாயிருக்கின்றவுலகமானது மனோசஞ்சலத்தால் சீக்கிரமாகத் தோற்றும் † — என்றுசொல்லவும் எதிலுலசையும், எதிலுலசையமாட்டாது, மனதை திருத்தஞ்செய்கின்ற மார்க்கமெது, சொல்லென்றுகேட்ட ஸ்ரீராமனுக்கு, வசிட்டமுனிசொல்லுவார். என்னுக்கு வெண்ணெய்போலவும், பனியினிடத்தில் நிறைந்த வெண்மையைப்போலவும், மனத்தினசைவானது கலந்து நிலைத்தோற்றும். § — மனோநாசத்தினது மார்க்கமிரண்டு, யோகமும் தெளிந்தஞானமுமாம்; யோகமானது, மனதிற்பொருந்திய செயல்களை ஒருவழியிற்செல்லத்திருப்புதல், பரிசுத்த ஞானமானது யாவுஞ் சுகமாகப்பார்ப்பதாம். மனமெதுவென்றால் மேன்மையான வாகாயத்தை யாபரணமாகத்தரித்தவர்கள் வேதத்தையுடைய பிராணவாயுவி னசைவாகுமென்று முன்சொல்லியது. ‡ — சொல்லப்பட்ட பிராணனுது தடைப்பட்டால் மனதுங் கெடும்;

உஎ. பிரமிச்சயத்தைச் சொல்லி யதன்சங்கற்பமான மனோசாஞ்சலியத்தை நீக்கும் பொருட்டு அச்சலனமே சகத்தா மெனத் தெரிவித்தல்.

உஅ. சஞ்சலநீங்கி நிச்சலமான பிரமத்தையடைய மனதினசைவுறாசையாமையுஞ் செவ்வையு மியாதெனிலதற்குமுக்கினவினாவுக்குத் தரக்கூறல்.

உகூ. இரண்டாம் வினாவுக்குத்தரக்கூறல்.

௩௦. பிராணபந்தன வுபாயம் இயாதெனல்.

¶ இ-ம். யாதியாதெப்படி யெப்படியோ வதுவதப்படியாய்த் தானிருந்து நிரதிசயானந்தமாய் விளங்குவ தென்பதாம்.

† இ-ம். மனோ சாஞ்சலியத்தை நீக்குதற்குபாயஞ் சொல்லத் தொடங்கினதாம்.

§ இ-ம். சங்கற்பமே மனத்தி னசைவா மென்பதாம்.

‡ இ-ம். மனத்தசைவைக் கெடுப்பதற் கதன்விருத்தியை யொருவழிப்படுத்துகின்ற யோகமும், அறிவி னாகந்தாரூபமுள்ள ஞானமுமாம், அம்மனம் பிராணசலன மென்பதாம்,

மனோசஞ்சலங் கெட்டால், சூரிய னத்தமனமானால்
சகத்தின்றொழில் நீங்குதல்போல, சநநம் நீங்கும்
என்று வசிட்டமுனி சொல்லவும், சரீரமென்கின்ற
வீட்டில், இதயாம்பரத்தி லெப்போதும் வேகமாக
வோய்வில்லாமல் சுழலுகின்ற பிராணன்முதலிய வா
ய்வுக்க ளசைவை மாற்றுகின்ற விதமெது வென்று
௫௧. பிராணாயாமவுபாயம் பத்துவிதமாக வறிவிக்கத் தொடங்கல். ஸ்ரீராமன் கேட்க, — வசிட்டமுனி சொல்லுவார்.
ஆத்மஞானசாஸ்திரங்களுடன் ஞானிகளைச் சிந்தித்
தடைந்து, வைராக்கியத்தை மிகவு முயற்சி செய்து
அப்பியாசித்த வினைகளினால், சம்சாரமாகிய நடை
விலங்கைநீங்கி, ஒப்பற்றநிராசையானது நிறையுமா
னால், அன்புற்ற பிரமநிஷ்டையினால், சதாகாலமும்
ஒன்றாகவே விளங்கும்படி அதற்கடுத்த சாதனத்தி
௫௨. முதலாவது இரண்டாவது முறைத்தல். னால், — ஒன்றாகிய தத்துவத்தின் திடாப்பியாசத்தி
னால், இப்பிராணனானது தடைபடும். உடலிலுண்
டாகும் பூரகமுதலான பிராணாயாமஞ்செய்து திர
முள்ள வப்பியாசத்தினால், உங்சாகமாய தனித்துவிட
த்திருந்து அகத்திலறியாநின்ற ஞானபாவனையினால்,
மேகநிறத்தையுடைய ஸ்ரீராமா? பிராணனில் சலன
௫௩. மூன்றுவது நான்காவது முறைத்தல். மானது மாற்றப்படும். ¶ — ஓங்காரத்தினது உச்ச
ரிப்பினந்தத்தில் உண்டான நாதத்துவத்தி னுண்
மையை, மிகுந்தவனுசந்தானத்தினால் சுழுத்தியடை
பவனது விருத்தி ஞானமானது விடுபட்டால், பிரா
ணனானது தடைப்படும். பரவாநின்ற நாக்கினடினை
ருங்கிய இதழைப்படர்ந்தநாவினால் நீக்கி திடமுள்ள மு
யற்சியினால் ஊர்த்தாந்தரத்தில் உயிரைச் செலுத்தி
௫௪. ஐந்துமாறுமேழு மெட்டு முறைத்தல். னால் பிராணன்றடைப்படும். § — பார்க்கின்ற நாசி
காந்தத்தில் பன்னிரண்டங்குலமளவில் நீண்ட வா
காயத்தில் விருத்திஞானங்களிறக்குமானால், பிராண
ன்றடைப்படும். தேடாநின்ற சாதனத்தினால் ஊர்
த்தாந்தரமார்க்கத்தில் நாக்கின்மேல் பன்னிரண்டங்
குலப்ரமாணஞ்சென்று பிராணனானது, அந்தவளவி
னின்று விருத்திஞானம் விடுமானால் பிராணன்றடை
௫௫. ஒன்பதும்பத்து முறைத்தல். ப்படும். † — புருவமத்தியில் கண்மணிப் பார்வையா
னது ஒப்பற்றசாந்தத்தினால் கெட்டு, அறிகின்ற சவ்
விகற்ப ஞானமானது. அவ்விடத்தி லிறக்குமானால்

¶ இ-ம். ஒன்றான வாத்மஞான வப்பியாசத்தினாலும் யோகாப்பியாசத்தினாலும் பிராணனடங்கு மென்பதாம்.

§ இ-ம். பிரணவாந்தத்திற் சுத்தஞானத்தைத்தரிசிக்கும் யோகத்தினாலும்லம்பிகாயோகத்திற் கேசரிமுத்திரையினாலும் பிராணனடங்கு மென்பதாம்.

† இ-ம். நாசியினின்று வாதசாந்தத்தினிற் பதினாறு மதனந்தத்தி னிற்குஞ் சாம்பவிமுத்திரையினாலும், விசுத்தசக்கரத்தினிற் பதினாலும், அநாகத சக்கரத்தினிற் பதினாலும், பிராணனடங்கு மென்பதாம்.

ஓடாமற் பிராணன்றடைப்படும். நினைக்கின்ற இங்குமார்க்கங்களினாலும், நாநாவித சங்கற்பத்தினாலும், கற்பிதமான வேற்றுமையினாலும், அநுக்கிரகஞ்செய்கின்ற வாசிரியராலும் ஆசனங்களினாலும், சலனமில்லாமற் பிராணன்றடைப்படும். ¶ —

௩௬. இரண்டாம் வினவுக்குத்தரஞ் சொல்லி மூன்றாம் வினவுக்குத்தரங் கூறுதல்.

இந்த யோகயுத்திகளனைத்தும் வருத்தமில்லாமல் செய்கின்ற சாதனத்தினால், இப்பொருத்தில் வாய்த்த இனிச்சனியபுதவர்களுக்கு ஸ்தந்திரமாகவரும், அப்பியாசத்தினால்மேலான பிராணனது சலனங்கெடுமாகில், மனதும் விஸ்ராந்தியடையும். மனது விஸ்ராந்தியடையுமானால் அடையத்தக்க பாகநிமிச்சமாகும். † —

௩௭. யோகத்தினுண்மையைச்சொல்லி ஞானத்தினுண்மையைப் பிரிவாகச் சொல்லத் தொடங்கல்.

விகற்பமான வாக்கியங்களனைத்துந் தற்பதத்தையாத்தடையாமற் றிரும்புகின்றதே, அந்தத்தற்பதமே வேறுபாடின்றி மிஞ்சுமென்று பெரியோர் சொல்லவும், வெற்றியையுடைய ஸ்ரீராமன், யோகமார்க்கத்தை சொல்லிமனமானது இந்திரியவழிகளிற்செல்லாத சமத்துவத்தைச்சொன்னீர், இனிமேற் றத்துவஞானத்தையும் சொல்லுமென்று கேட்க, அதற்கு முனி சொல்லுவார். —

௩௮. முதலுமிரண்டு முரைத்தல்.

ஆதிமத்தியாந்தரகிதமானதேதற்றோதனை ஸ்வரூபமாயிருக்கின்ற பிரமமானது, இவ்விடத்தில் சுயம்பிரகாசமாயிருக்குமென்கின்ற இந்த நிச்சயமே குற்றமற்றவுண்மைஞானமாம். மேலிருக்கின்ற கடரூபமாகிய பதார்த்தங்களின் சமுசாரத்தையும் குற்றமற்ற வாத்மாவேயல்லாமல்வேறில்லையென்று அறிகின்றதுவே யாத்மஞானம். ‡ —

௩௯. மூன்று நான்கு முரைத்தல்.

மூன்றுலகங்களிலும் மெய்யானவஸ்துவை அறிகின்றதானமெதுவென்றுசொல்லுமிடத்தில் உலகங்களனைத்தையும்பிரமஸ்வரூபமென்று ஸ்திரம்பொருந்துவதேஞானமாம். உலகங்களனைத்தும் ஆத்மஸ்வரூபமேயாம், இவ்வாத்மஸ்வரூபமாகிய சகத்தில்விளக்குகின்ற பாவாபாவங்களெவ்விடம் உலகங்களினொருங்கியபந்தம்வீடென்று மயங்குகின்ற பேத மெவ்விடம். § —

¶ இ-ம். புருஷார்த்தியான விசேஷமசங்காத்தி ஸித்திக்கின்ற வைராக்கியத்தினையிதனாலுமின்னுமாசாரியர் வைக்கின்ற குறிகளிலடங்கி நிற்குதலினாலும் பிராணனடங்குமென்பதாம்.

† இ-ம். இவ்வனுசந்தானத்தினாற் பிராணபந்தனமாமதனால் மனோசஞ்சலநீங்குமதனால் மனத்திருத்தமும் ஆத்மானுபவமே மிஞ்சுமென்பதாம்.

‡ இ-ம். சதோதயமான சமதாத்மஸ்வரூபமே யின்னணம் பிரகாசிக்குமென்னு நிச்சயமுந் திரிஸ்யங்கள் யாவுந் திருக்குவடிவமேயென்னு நிச்சயமும் ஞானமென்பதாம்.

§ இ-ம். மூவுலகுமாத்மாவென்கிற பரமார்த்த திருஷ்டியும் ஆத்மாவையன்றிப் பாவாபாவங்களின்றென்கிற நிச்சயமும் ஞானமாமென்பதாம்.

௬௦. ஐக்கியமாறு முறைத்தல்.

வேறாகத் திரிஸ்யமென்பனவுமில்லை, மனமென்பதுமில்லை, உண்மையாகியபிரமமே முன்சொன்னவைகளாக நிறையும்; இச்சகலமும் ஏகமாகிய ஞானாகாசமாகும். பந்தமும், மோக்ஷமும், எவ்விடத்திருக்கின்றன; இதுவென்று ப்ரகாசிக்கின்ற வாத்மஸ்வரூபமாய் அடையாளமின்றிய மகத்தாகிய பிரமஸ்வரூபமே நிறைந்திருக்கின்றது; மனமானது சிரணமாய் நசித்தது. ‡ — ஒற்றுமையாக அறிவினாலறியக்கடவாய்.

௬௧. ஏழுமெட்டு முறைத்தல்.

ஆத்மஸ்வரூபத்தை நன்றாகப்பார்க்குமிடத்தில் விருட்சமும், மலைகளும், வஸ்திரங்கள் முதலிய வஸ்துக்களுக்கு எவ்வளவும்பேதமில்லை. சங்கற்பமெங்கேயிருக்கின்றது, சிதாபாசனும் பூமியிலுள்ள வஸ்துக்களனைத்தும் ஆதியந்தமாகப் பார்க்குமிடத்தில் குறைவில்லாத வுபசாந்தரூபமடையும். † —

௬௨. அந்தொய்த ஞானானந்தானத்தி னுண்மையைச் சொல்லியதை யடையும்பொருட்டனுபவஞ் சொல்லுதல்.

அவ்வுபசாந்தஸ்வரூபம் எக்காலமு நீயே யானாய், ஸ்ரீராமா? இரண்டென்று மொன்றென்றும் சொல்லாநின்ற வேற்றுமையினாலும், சாமானியங்களென்று நினைக்கின்ற மயக்கத்தினாலும், தொங்கித்திருக்கின்ற மனதினால் தானாகிய வொப்பற்ற பிரமஸ்வரூபமே. நீண்ட வலையினால் தன்னாற் சிதறுகின்ற பலவானதிரை, நுரை, குமிழிமுதலானதாய் தெரிகின்ற நீரைப்போல, நாமரூபங்களாய்த்தோற்றுகின்றன. — பரிசுத்தமாகியபிரமத்தைத் தழுவித்தொடர்ந்து அந்தர்முகவுணர்வினால் பொருந்தியிருப்பவர்களை, எந்தப்போகமானது வந்துபந்தனஞ் செய்யத்தக்கது. மிருதுவான போகங்கள்முதலாகிய சத்துருக்களைத்தும், விசாரணை மிருந்தவர்களுடையமனதை யெவ்வளவுமசைக்கமாட்டாது. தென்றலினால் மலையசைவதுமுண்டாமோ.

௬௩. அனுபவ விவின்றிடத்தை சொல்லுதல்.

— அலையினாற் சத்தித்த நாநாவிதமான தடாகத்தில் அலைமுதலானவேற்றுமையில்லாமலிருக்கின்றசலத்தைப்போல சொல்லப்பட்ட பலவிதமானநாமரூபங்கள் சங்கற்பத்திலுள்ளனவாகும்; அதத்தில்மெய்யாக வில்லாததாம். கரைக்கண் கூடாதிருக்கின்றவிந்த நிச்சயஞ்சேர்ந்தவறிவையுடையவர்கள் குற்றமற்ற மோக்ஷத்தையடைந்தவர்கள். குற்றமற்றதாய் சுயம்வரத்தரிசித்த அபரோக்ஷவஸ்தும் இவ்விட

௬௪. அனுபவ நிச்சயங் கூறல்.

‡ இ-ம். மனமுதலிய யாவுஞ் சிதாகாயமென்று நிச்சயமும், பிரமானுபவத்தின் மனமில்லையென்று நிச்சயமு ஞானமாமென்பதாம்.

† இ-ம். யாவையு மாத்மஸ்வரூபமாகப்பார்க்கி லொன்றாம் வேற்றுமையின்றென்பதும், சீவனுஞ்சகதது மாகந்தமாயிடின் றன்சங்கற்ப மில்லையென்பதும் ஞானமென்பதாம்.

௬௫. இச்சுவானுபவம் பெறுதற்கு இஃதன்றியின்னுமொரு மார்க்கஞ் சொல்லத் தொடங்கி யதற்குத் திருஷ்டாந்தமறிவித்தல்.

த் திங்கிச்சயந்தான். * — இது மற்றொரு மோக்ஷத்தையடைகின்ற மார்க்கம் சொல்லுவோம். வீரத்தையுடைய ஸ்ரீராமா? கேட்பாய். வீதகவ்விய னென்னு நாமத்தையுடைய ஒரு மகாதவத்தன், விந்தமலையில் வாழ்பவன், ஆசையினுலுயர்ந்த கன்ம காண்டத்தில் வெருவாலிருந்து, துன்பமாகிய அந்தக்கரண வியாதியையும், தேக வியாதியையும், கொடிய சம்சாரத்தையும் கொடுக்கின்ற கிரியையினுல் மிகவும் வருந்தினன். § — நிருவிகற்பசமாதியி லிச்சித்தும் முன்னடத்திய கிரியைகளனைத்தையும் நீக்கிவிட்டான்;

௬௬. ஞானசமாதிக் காதனங் கட்டுதல்.

பன்னசாலையினுள் பொருந்தினன், மான்றோலின் மேன்மருவுகின்ற கட்டியபத்மாசனத்தை யுடையவனுய் குதிகான்மேல்வைத்த இரண்டு கைகளிற் றிரண்ட விரலையுடையவன், இந்தப்பிரகாரம் ஒருமைப்பட்டு சமாதியிலிருந்தான்.—

௬௭. மனதை நிறுத்தி விசாரித்தல்.

விரிந்து திசைகளிற் செல்லுகின்றமனதை மெள்ளமெள்ளப்பார்த்துத் திருப்பி அகத்தினிரந்தரமாகச்செய்தான்; புறம்பிலுள்ள விடயசம்பந்தங்களை நிராமயமாகநீக்கி செலுத்திய மனதின் றிடநிலையைவிரும்பி, குற்றமற்றமனதினுல் நிலைத்த நல்லறிவுடைய வீதகவ்விய முனிவரானவர் நெறிய விசாரணைசெய்தான். —

௬௮. மனதின் றவிடத் துதித்த தனதாத்மஞானத்தினு னின்றமனது பிராண சலத்தினுஞ் சலிக்கின்றதெனக் காண்டல்.

சஞ்சலத்தையுடையது ! இருப்பினை நிறுக்கவும் பிராணனென்னுஞ் சுவைப்பொருந்தி அசையுமனமானது, திடமான நிலையில்லாமல் காற்றிலகப்பட்ட சிறு சருகைப்போல அலையும்; உண்டாகுஞ் சுகமில்லாத கடத்தினின்றும் படத்தைப்பொழிகின்ற படத்திலிருந்து கடத்தையடையும், மயக்கம்பொருந்திய பல விடயங்களில் விருட்சங்களிற்றாவு மாக்கடம்போலுதாவும்,—

௬௯. தனதறிவினு லிந்திரியங்களை நீக்குதல்.

கண்முதலிய விந்திரியங்களாகியும், மனதுக்கு வாசலாகியும், துன்பத்திற்கெல்லாம் நீங்காத வழியான தொழிற் செய்கின்ற பஞ்சேந்திரியங்களை அறிந்து, பார்க்கின்றவனேனாலும். இறவாதின்றனிர் இந்திரியங்களே? வீணுக அய்யோ ! நீங்கள் கலங்குவதேன் ! கொடாது சிற் ஸ்வரூபமாயிருக்கின்ற பகவனும் நானே சகலத்துக்குஞ் சாட்சியாயிருக்கின்றேன். —

௭௦. இதுவுமது.

அத்தன்மையான குணத்தைப்பொருந்தி, அறிவினுன்றிருந்து நான்பார்க்கப்பட்ட சக்ஷுமுதலிய பஞ்சேந்திரியங்களும் வேற்றுமையாகி சுவர்க்கலோகத்தை நீங்கின பாதகாளத்துக்கொப்பாரும். சர்ப்பங்களும், பார்க்கத்திற் போகின்றவர்களும், சண்டாளரும், அந்தணர்க

* இ-ம். ஸ்வானுபூதி விலாசத்தை ப்ரசன்னமாய்த் தரிசிக்கும் பொருட்டுக் கிரகித்ததாம்.

§ இ-ம். கிரியையிற் சுகமின்றி வருந்தினரென்பதாம்.

ளும்போல, பயமடைந்து மேலாகிய ஞானமானது பொறிகளின் சமீபத்திலும் வரமாட்டாது. * —

௫௧. மனதை நீக்குதல். பரலோக பராமுகனாகியும், வேவுகாரனாகியும், விசாலம்பொருந்திய நான்குதிக்கிலும், பிச்சைவாங்க ஓடாநின்றமனமே? வீணாக ப்ரயாசைப்படுதலில் ப்ரயோசனமில்லை; பூமியின்கண் நீயே விஸ்ராந்தியடைந்து விளையாடுவாய்: உன்னை ஞானமென்றெண்ணுகின்றவாசனை அசத்தியமாம். வேற்றுமையானது, மிகுந்திருக்கின்றமனத்துடன், உண்மை ஞானமானது

௫௨. இதுவுமது. ஒருமைப்படாது.—விடயங்களை நானென்னுமகங்காரமாகிய துற்புத்தியே? சுகமாயிருக்கின்றேனென்கின்ற இது குற்றமாம். அகங்காரமதத்தினால் இவனும் அவனும் நானும் என்கின்ற இவ்வாரம்பத்தை மிகவு நீக்குவாய்; உனதுருவ மெதுவென்றால் விசாரணையில்லாததாம்; சூரியனால் அந்தகாரங்கெடுவது போல இப்பொழுது செய்கின்ற விசாரணையினாலழிவாய்.

௫௩. இதுவுமது. முன்னந்தோற்றாமல் இப்போ தெனக்கென்றோருருவுமில்லாத இவ்வொழுங்கினால் பின்னும் தோற்றமாட்டாய்; என்னுடையமனமே? நீ யடைகின்றநன்மையானது பெரிதாம். துன்பநீங்கிய தெய்வசகாயத்தினால் துன்பமில்லாத வசந்தத்தைப் பொருந்தி நான் எப்போதும் நிறைந்த சாந்தத்தை யுடையவனாய், துரியமாகிய எனதாத்மஸ்வரூபத்தில் ஆநந்திக்கின்றேன். † — இப்படியென் றொருமையாகி வா

௫௪. விசாரமுகத்தாற் றத்துவங்களை நீக்கிச் சாம்பவி முத்திரையை முன்னிட்டு நிருவிகற்ப சமாதியிலிருத்தல். தனையிறந்த வீதகவ்வியமுனியானவர் பொறிகளலைவில்லாமல் மனதையுமந்தரத்தினாலிறுத்தினான்; விறகை யெரித்தவக்கினிச் சுவாலையானது, தனக்குள்ளே மிகவுமடங்குதல்போல இவர் பிராணனானது மிடறத்தில் நன்றாக வுள்ளேயடங்கின; நாசிகாக்ரத்தில் ஒட்டசமதிருஷ்டியினால் கண்களானவை கொஞ்சமலர்ந்திருக்கின்ற தாமரைப்பூவுக்கு சமானமாயின. — சிரசும்,

௫௫. இதுவுமது. கண்டமும், சரீரமும், அவயவங்களும், சமமாக கல்லிற்செய்தது போலவும், சித்திரத்தைப் போலவும், முன்னூறுவருடம் இடைவிடாமல் சமாதியிலிருந்தான். மிகுந்த மழைகாலத்தின் வெள்ளத்தினாலுண்டாகிய மணற்குன்றில் இவனதுசரீரம்புதைந்தது; இடத்தையுடைய வீதகவ்வியமகாமுனியானவர், பூமியினுள் சரீ

* இ-ம். சின்மாத்திரமாய் விளங்குகின்ற யான் மனோவசமாய்ச் சஞ்சரிக்கின்ற இந்திரியங்களிற் சேரேனென்றதை வெளிப்படுத்தினதென்பதாம்.

† இ-ம். பேதமாகிய மபேதமாகிய வாத்மாவுக்குச் சம்பந்தமின்றாகியும் விசாரிக்கவில்லாததாகியுமிருக்கின்ற மனதைச் சுகரூபியாயிருக்கின்ற வாத்மாவாவத்தினா னீக்கினதென்பதாம்.

ரமனைசய வில்லையென்று சமாதியைவிட்டெழுந்த
௫௬. சமாதியினின்று வீதகவ்வியமனோருபமாயுண்டானசை ரணங்களைத் தெரிந்துகொண்டோலுவுதல். னன். * — பூமிமறைந்துபடியால் அறிவிலுண்டா
கிய தேகத்திலுள்ள பிராணன்களனைத்தும் புகைக
ளியாமையும் அடைப்பட்டபடியினால் அசைய வி
ல்லை; அதற்கு லறிவுண்டாகி வாசனையான தன் ம
னோருபமாய் இருந்தமையினாலே சகலத்தையும் தெரி
ந்தது; ஒருவனுக்குண்டாகிய கனவைப்போல அந்த வீதகவ்
வியமுனி அவ்விடத்தில் மனதிற்பொருந்த விவக
௫௭. இதுவுமது. ளைப் பார்த்தான்.—மகா பருவகத்தின் சாரலில்த
வசியாக ... இருந்ததும், குற்றமற்ற சுகமு
ள்ள வித்தியாதரனாக ... இருந்ததும், தேவ
ர்களனைவருக்கும்படி தெய்வலோகத்தில் தேவேந்திர
னாக ... இருந்ததும், சந்திரனைச் சடையிற்ற
ரித்த பரமேஸ்வரனுக்கு அன்பாகிய கணேசனாய்
௫௮. இதுவுமது. ஒரு கற்பகாலமிருந்ததும், — மூன்றுகாலமுங் கலங்
காமலிருக்கின்ற ஞானதிருஷ்டியினால் இப்பொழுது சொல்
லப்பட்ட சகலத்தையும் வீதகவ்வியமுனி பார்த்து,
பரமேஸ்வரனுக் கடிமையாகப் பணிசெய்த ப்ரயோ
சனத்தினால் இறந்தகாலங்களைத்தெரிந்து தனக்கு
வல்லமையுண்டாகி பூர்வமாக முற்சனனங்களில் முந்
தியிருந்தபோனது தனது சரீரமுறையும் மறப்பில்
லாமற்பார்த்து, வீதகவ்வியனென்னு நாமத்தையு
௫௯. மறைபட்ட தேகத்தை வெளிப்படுத்த முனிவருமிந்திரனிடத்திற் செல்லுதல். டைய சரீரமாக வரப்பார்த்தான். ‡ — பூமியின்
மறைந்திருக்கின்ற விந்த சரீரத்தை யெடுப்போமென்
றாலோசித்து, வல்லபெருமையையுடைய சூரியனிடத்
திற்சென்று முறைமைப்படி செய்கின்ற பிங்கலனைய
னைத் தனக்கு எப்படியுற்ற சிறைவேறுமென்று, ஒ
ருசித்தனையுடையனாய் புரியட்டகசரீரத்
தோடிய சூரியமண்டலத்தில் காந்தியையுடைய வீதகவ்
விய மனோமயவடிவாக சேர்க்குமாத்திரத்தில்,
சூரியன் தனதிருதயத்திலிருந்து தன்மையைப்பார்
௬௦. பிங்கலன்வருதல். த்து,—சூரியனானவன், முனியின் அபிப்பிராய முழு
துந்தெரிந்து, அந்தமுனியான வீதகவ்விய னென்
னுமாமுனியுடைய நாம சரீரமும், தனதி
டத்தினின்றும் விந்தியமலைச்சாரலிலிருக்கின்ற அம்மு
னியின்சரீரத்தில் போய்ச்சேரும்படி சூரியனால் பக்
கத்திலிருந்தபிங்கலனை வீதகவ்வியமுனியோடனுப்
ப, பிங்கலனானவன் முனியோடெங்கு கரத்திலுள்
ளவிரலினால் பழமையாகிய பூமியைப்பொருந்தக்கிழி

* இ-ம். தேகமுதலியவாவும் தோன்றாத நிச்சமாதியி லிருந்தனனென்பதாம்.

‡ இ-ம். பிரமத்தினின்று சமுசிரமுதல் எடுத்த பலங்களையறிந்து இப்போது வீதகவ்வியனெனத் தெரிந்ததென்பதாம்.

௬௧. மன்னின் மறைந்த தேகத்தை வெளிப்படுத்தல்.

ந்து,—பூமியைத்தோண்டி பிங்கலன்கொடுக்க, சரீரத்தின் மௌனமுனியினதாகிய சூக்ஷ்மசரீரமானது, தூலசரீரத்திற் ப்ரவேசித்தது. முன்சொல்லப்பட்ட பிங்கலனுமவன்போயினன். இப்படியான வீதகவ்வியமுனியானவன், ஸ்நானஞ்செய்து செபம்பண்ணி சூரியனை ஆராதனைசெய்தான்; அறிவுடையமனதினால் நிறைந்த சரீரமானது முன்னையைப்போல திருமேனியும் நன்மை ப்ரகாசித்தது. ¶—சமமும், மயித்திரியும், சாந்தமும், செல்வமும், பிரஞ்ஞையும், திருமையும், சந்தோஷமுமாகிய விவைகள் அமர்ந்திருக்கின்ற குணங்களையுடையவனாய், சகலத்திலும்மனது பற்றில்லாமல் விந்தமலைச்சாரிலுள்ள பூமியைப்பிளந்து செல்கின்ற விசாலம்பொருந்திய நதிக்கரையில் வெகுகாலங்கழிந்து, நின்மலமனதினால் பராபரத்தையுணர்ந்த முனியானவர் சிந்திப்பான். — இந்திரியக்கூட்டங்களை முன்பே நிறுத்தல்செய்தோம்,

௬௨. முனிசகசமாதியையடைந்துக்கொண்டிருந்தல்.

௬௩. யாவிலும் கூடியுங்கூடாமல் சொச்சமாய் விளங்குவேனெனல்.

விரும்பி செவ்வையாகவிருந்தின சின்மாத்திரத்தைச் சேர்ந்து மலையைப்போல ஸ்திரமாகவிருப்போம்; திரும்ப உதயமாகியும் மறைந்து போலாவோம்; மறைபட்டும் உதயமானவனாய் சொச்சமடைந்து சமமாயிருப்போம்.—விருத்திஞான மிருந்தும், சுழுத்தியடைந்தவனாக்கொப்பாவோம், நலிவில்லாமல் சுழுத்தியையடைந்தும், விழித்தவனைக் கொப்பாவோம்; பொதுவாய் அற்பமும்வேறில்லாமல் துரியஸ்வரூபத்தைப்பிடித்து இச்சரீரத்தில் சார்ந்திருந்தும் ஒருசலனமுமில்லாத சுயம்ப்ரகாசமாக நாமாவோம். —

௬௪. இத்தேகத்தினின்றும் துரியவடிவாய்ப்ராகாசிக்குந் தன்மையைச்சிந்தித்தல்.

௬௫. சகசமாதிபெற்றுச் சீவன்முத்தனாயிருத்தல்.

இப்படியென்றுசிந்தித்து நல்ல சமாதியில் ஆறுதினமிருந்து நித்திரைசெய்கின்ற வழிச்செல்பவனைப்போல சென்றழிந்தான். பொருந்திய சித்தியுள்ளவனாய் வீதகவ்வியன் நிறைந்திருக்கின்ற சீவன்முத்திபதத்தைப்பெற்று வெகுகாலம் சுகித்திருந்தான். §—

௬௬. சீவன்முத்தியில் விதேகமுத்தியை விரும்பல்.

நிமைகள்மனதின் விடுதலும் பற்றுதலும் கெட்டுப்போக, வீதகவ்வியமுனியானவர், இராகத்துவேடங்கள் மனதிலில்லாதவனாய் போதலும்வருதலுமாகிய சகலங்களத்தையும் கெடுத்து, சொல்லாநின்ற விதேக கைவல்யமான போகத்தையடையச் சிந்தித்தான்,— சித்தனாகிய வீதகவ்வியமுனியானவர், ஒருதினத்தில் மலைக்குகையையடைந்து கட்டிய பதுமாசனத்தையுடையவனாய் தன்னிடத்திற் குடுனை பேசு

௬௭. தத்துவங்களைத்தையுந் தனதாத்மாவில

¶ இ-ம். முன்புதைபட்ட சரீரத்தோடும் வெளிப்பட்டுப் பின் தூலதேகத்தையெடுப்பித்து அதிற் புகுந்தனனென்பதாம்.

§ இ-ம். சமாதியிலுஞ் சஞ்சரித்தலிலு மொருதன்மையவான சுவாநுபவத்தோடு விளங்கினனென்பதாம்.

ரூபத்திற் கரைக்கச்சிக்கித்து இராகத்து வேடங்களைக்கரைத்தல்.

௬௮. போகசுகதுக்கங்களைக் கரைத்தல்.

வார். மிருதுவானவாசையே, நிராசையைப் பொருந்தக்கடவாய். கோபமேசமமாக வுள்ளே சாந்தியடையக்கடவாய், உங்களோடு வெகுகாலம் விநோதத்தையடைந்தேன். — போகங்களே ? உம்மை வணங்கினேன், உங்களால்வெகுகாலம் சகத்தில்விளையாடின விதம் போதும்போதும். துக்கமில்லாத இந்தமோக்ஷத்தைநமக்குப்போகச்செய்த விஷயசுகங்களே ? உங்களைவணங்கினேன். துன்பங்களே ? உங்களால் சரீரமானது, வேறுதவின்றல்லவா அன்பினால் ஆத்மதத்துவத்தையறிந்தேன். ஆதலினால் ஐக்கியங்கூடிய மோக்ஷத்தை நீங்கள் எனக்குக்கொடுத்தீர்கள், உபகாரஞ்செய்த வுங்களைவணங்குதல் உரியதல்லவா. —

௬௯. தேகமிச்சை நீதியான வினைகளைக் கரைத்தல்.

வெகுகாலமிஷ்டனான சரீரமே ? உன்னைத்தள்ளுகின்றேன் ; உன்னைமுதானமானது, பூரணமாகவும்பியாசஞ்செய்து கெடுகின்றகோட்டை உன்னாலே யுனக்குசம்பாதித்துக்கொண்டாய். ஒளிசெய்கின்ற இச்சையென்னுமாகாவே ? எனதுவசனத்தை கேட்பாய். தமோதி மிகவும்வாட்டமுற்று தளர்வையடையவேண்டாம் ; உபசாந்தனுகிய நானுன்னைநீங்கினேன். சுகிர்தமே ? நீசொல்லுங்கோரமுள்ள நரகம்விட்டு மோக்ஷத்தில் முன்னுகச்செய்தது னுன்னையன்பினால் வணங்குவேன், வாழக்கடவாய். —

௭௦. பிராணன்களையு மனதையுங்கரைத்தல்.

சகோதரமான இஷ்டராகிய சீவர்களே ? உங்களைவழியாகத் தவிர்க்கின்றேன், சுகமாய் வாழக்கடவீர்கள். நான் நடந்துபோவேனென்று இந்தப்பிரகாரம் அகத்திலுதிக்கின்றமனது மீடுஞ்சிந்தைகளுமன்றாகவிட்டு, ஞானபூமியிடமாகின்றவிரவைத்தை மிருதுவாகவுச்சரித்து இவ்விடத்திலுள்ளவஸ்துக்களும், புறம்பிலுள்ளவஸ்துக்களும் மிருதுவத்திலுள்ளவஸ்துக்களும், பருத்தவஸ்துவும், சூட்சுமமாகியமனதிலும் முள்ளதாகிய சங்கற்பத்தினால்வந்த சகலத்தையுநீக்கினேன். ¶ —

௭௧. சத்தவாசனையை யாத்மாவினிடத் தடக்குகும்போ தனை டானவஞ்சயமரனைத் தெரிவிக்குவித்தமதங்கிரமத்தைச்சொல்லத்தொடங்கல்.

பிரணவாயுமாக நீண்டதாகிய சத்தமென்கின்ற நாலோடும் இந்திரியங்கள் பொருந்தின விஷயாதவிஷயங்களைத்தையும், கந்தத்தை வாயு நீக்குவதுபோல நீக்கினேன். ஆகாயத்திலிடத்தில் இருண்ணீங்காததுபோல இருண்மாத்திர முன்னே யுண்டாகி விளங்கவும் நீங்கினேன். பிரகாசமுன்னே யுண்டாக அழகாக க்ஷணமாத்திரத்தில் அந்தப்பிரகாசத்தைப்பார்

¶ இ-ம். ஆசையை நிராசையாகவு, முனிவைச்சாந்தமாகவும், போகங்களை மாபோகமாகவும், விஷயசுகங்களைப் பிரமசுகமாகவும், துன்பங்களை யின்பமாகவும், தேகத்தை தேகிவடிவமாகவும் ஆசையைத் தற்பிரியமாகவும், பிராணனைப் பிராணியாகவும், மனதை யாத்ம விளக்கமாவுங் கரைத்து அவைகளையும் பிரணவஸ்வரூபத்தைத்தாக்கத் தொடங்கினனென்பதாம்.

௭௨. சுத்தஞா சனையையாத்மா வினிடத் தடக்கும்போ துண்டா னவநுபவ மா னைத்தெரிவிக்கு மிடித்த மதன் வி ரமத்தைச் சொ ல்லத்தொடங் கல்.

ந்து நீங்கினான். சொல்லப்பட்ட அந்தகாரமும் ப்ர காசமுமாகிய இரண்டுமில்லாமல் ஓடிப்போயின. —

இந்த அவஸ்தையை மனதினாற்பிடித்துக்கொண்டு வுயர்வான வீதகவ்வியமுனியானவன், அவ்விடத்தி லுண்டாகிய மனதை துரும்பைப்போல முழுதும் ஓரிமைநேரத்தில் ஒழித்தான். அதன்பின்பு அப்பொ ழுது பிறந்த குழந்தையறிவுக்கொப்பாகி மிகவுஞ் சொச்சமாய் உயர்ந்தொளிரும் ப்ரகாசத்தைப் பெறு கின்ற ஞானத்தைப்பெற்று, அரைநிமிடத்தில் கானி மிடத்தில் நினைவைத்தள்ளியிருந்தான். தொந்தத் தையுடைய வாயுவானது சலனத்தை நீக்குவதுபோல ஞானத்தில் குற்றமற்றவன் விடயத்தை நீக்கினான், —

௭௩. இதுவுமது.

சிற்சாமானியத்தைப் பெற்றான்; சத்தாமாத்திர மே ஸ்வரூபமானான்; கனவிற் சுழுத்தியையடைந்து மகாமேருவைப்போல நின்றனன். கனவிற்சுழுத்தியி னுறுதியை யடைந்தபின்பு துரியஸ்வரூபத்தை யெ ளிதிலடைந்தான்; சமீபமாயிருந்தது நிரானந்தமான நித்தியானந்தத்தையுடையவனாய் அசத்தாகியும் சத் தாகியும் நீக்கமுற்ற வாக்கியங்களுக்கு எட்டாததா கிய ஒப்பற்றவஸ்துவே சமானமற்ற வீதகவ்வியமுனி யானவர் தானாகவிருந்தான்.¶ —

௭௪. துரியாதீத மாயப்பின்பு விள ங்குந் தன்மை யையுரைத்தல்.

சூனியமென்பவர் களுக்கு அச்சூனியமாகியும், பிரமமென்பவர்களுக் கப்பிரமமாகியும், விஞ்ஞானமென்பவர்களுக்கு அவ் விஞ்ஞானமாகியும், சாங்கியர்க்குப் புருடனாகியும், யோகிகளுக்கீசனாகியும், குறைவில்லாத சைவாகம த்தாருக்குச் சிவனாகியும், காலமென்பவர்களுக்கு அக்காலமாகியும், மாத்தியர்கட்கெல்லாம் பிரமாண முள்ளமத்தியமாகியும், சமமாய்ப்பார்க்கின்ற மன ந்தையுடையவர்களுக்கு யாவுமாயிருக்கின்றவஸ்துவே தானானான். —

௭௫. இதுவுமது.

சாஸ்திரங்களெல்லாவற்றின் சித்தாந் தமியாது, எல்லாராலும் பார்க்கப்பட்டதியாது, அ றிந்ததியாது, சகலமுமானதியாது, பூமிகளனைத்திலு ம்வசிப்பதியாது, ஓசையுமில்லாத நன்மை யுள்ளதி யாது, ப்ரகாசங்களுக்குப் ப்ரகாசங்கொடுக்கின்றதி யாது, உரிமையுள்ள அனந்தனுபூதியால் ஏகமாய்க்கா ணப்பட்டதியாது, ஏகமாகியுமநேகமாகியுமிருக்கின் றதியாது, மிருந்த களங்கத்தைபெற்றும் பெருமையி

¶ இ-ம். இந்திரியமுதலிய உலகத்தின் விசேஷயத்தகாரமாக வெளிப்பட்ட வாதனையதைக்கண்ட சித்திருற்றள்ள வச்சித்த ப்ரகாசமாய்வெளிப்படுவதனை யதன்வயமாயிருந்த தன்விருத்தியைத்தள்ள அஃது சிற்சாமானியமாய் வெளி ப்பட்ட வது மதற்காதாரமான சத்தாசாமானியமாக வச்சத்துந் தனிவிளக்கமா ன துரியமாய் வெளிப்பட வத்துரியமுந் தனதானந்தமாய் வெளிப்பட்டதனு மதீதமாய் வெளிப்பட்டதாக விளங்கின வென்பதாம்.

ருக்கின்றதியாது, எல்லாமாயல்லாததான தெதுவோ அந்தவஸ்துவே நானானேன். — சகலமானவில்லாததாகியும், அநாதியாகியும், ஆதியாகியும், ஏகமாகியும், பலவாகியும், சகளநிட்களமாகியும், ஆகாயத்தினுஞ் சொச்சமாகியும், பரிசுத்தமாகியுமிலையுடைய வீ(த)னாகியும், இடமாயிருந்து இருபதினாயிரம்வருடமளவும் மகாமகிழ்ச்சியுடைய விருப்பினைப்ரகாரமே உலகத்திற்சஞ்சரித்து, மனதிருப்பவுடைப்பாகாத வென்னைக் கெடுத்து, வீதகவ்வியனென்னும் பரமஞானயானவர் சீக்கிரமாக அத்துவிதமானான். *—

எசு. துரியாதீதமாய் நின்றுவிளங்குந் தன்மையையுரைத்தல்.

வீதகவ்வியன்கதை முற்றிற்று.

உபசாந்திப்பிரகரணம்.

அவதாரிகை.

முன்கதையில் சித்தவிஸ்ராந்தியின்பொருட்டு பற்றறுதிமுதலிய அப்பியாசங்களைச் சொல்லி, அச்சித்தசாந்தியே வேண்டற்குரியதென்பதை யுறுதிப்படுத்து கிறித்தம், இவ்வொன்பது கதைகளின் சாரங்களையெடுத்து உபசாந்திப்பிரகரணமாக நிருபிக்கிறார்.

க. சீவன்முத்தனுக்காகாயகமனமுதலிய சித்திகள் ஏனில்லை எனல்.

இப்படியென்று சொல்லியவசிஷ்டமுனிவரை இராமன் பார்த்து சொல்லுவார்; சீவன்முத்தியையுடையவர்களது சரீரங்களுக்கெல்லாம், ஆகாயகமனஞ் செய்தல்முதலியசத்திகளைப்பார்க்கிலேம். என்னவென்றுகேட்க, அக்கேள்விக்கு உத்தரங்களை இருமையுடைய வசிஷ்டர் தெரியச்சொல்லுவார். — பூரணஞானமுல்லாத பந்தத்தையுடையவர்களும், அவிழ்தங்களினாலும், மந்திரங்களினாலும், தொழில்களினாலும் காலங்களினாலும் யூகங்களினாலும் முயற்சிக்கால், பரவ யகாசகமனாதிகளை பொருந்தியிருப்பார்கள். உண்மைஞானமுடையவர்களுக்கு இச்சித்திகளுசிதமாயினவல்ல, அந்த ஞானவான்கள் அத்துவிதமான வாத்துமநிஷ்டையை இடைவிடாமற் பொருந்துவார்கள். — ஞானிகள் ஞானத்தினால் ஞானத்தினிடத்தில் அமைவதேயன்றி, ஆகாயகமனாதி யிச்சையினின் பின்பிரிந்துசெல்லார்கள். உலகத்திலுள்ள வஸ்து

உ. அணிமாமுதலிய சித்திகளே மாயாவிசித்திரமென்பதை யறிவிக்கு மித்தாமவைகளைச் சீவன்முத்தன் வேண்டானெனல்.

ங. வேண்டிலும் வருமோ வெனின் முன்

* இ-ம். அதீதமேயாதலாலேதப்படியோ வப்படியப்படியெல்லாமாய் விளங்குகின்ற சாக்ஷாத்காரமான விதேகமுத்தித் தன்மையை யடைந்தனரென்பதாம்.

சொல்லிய கிரமங்களால் வருமெனல்.

களின் வேற்றுமைகளனைத்தும் மாயாமயங்களாம்; அம்மாயையானது, கெடும்படி செயித்தவர்கள் திரும்பவு மம்மாயையி லழுந்துவார்களோ, ஞானவான்களு மிச்சிப்பார்களாயின், முன் சொல்லப்பட்ட கிரமத்தினால் சித்தியுண்டாம். — அவிழ்தங்களும், மந்திரங்களும், தொழில்களும், காலங்களும், யுத்திகளுமாகிய விவைகளனைத்தும் நாட்டாநின்ற சித்திகளைக் கொடுக்கும்; நன்மையுள்ள மோக்ஷத்தைக்கொடுக்க மாட்டாது. ஒருவருக்கு சித்தியொன்றிற் றேட்டமுண்டானால் அதை முயற்சித்தால் கிடைக்கும்; பந்தப்படுத்துகின்ற கமனுதியிச்சையானது, பூரணஞானத்தை யுடையவர்களுக்கு வந்துபொருந்தாது. * — ஆசைகளனைத்தும் மரித்துநீங்கினால் கலக்கமில்லாத ஆத்மஞானமுதிக்கும்; ஆசையைவிளைக்கின்ற கமனுதி சித்திகளிடத்தில் முழுகுகின்றவர்களுக்கு அவ்வான்மலாபமுண்டாகாது, என்று சொல்லிய வசிட்டமுனியை, யோகியர் கற்பகாலஞ் சீவித்திருப்பதற்கு யாதுகாரணமென்று இராகவன் கேட்க, திரும்பவும் வசிட்டர்சொல்லுவார். —

௪. ஆயின்வேண்டலாமே யெனின் முத்தியின் மையால் விரும்பார்களெனில்.

௫. முத்திக்குச் சித்தியிழிவாமென்பதைக்காட்டி மேற்சிரஞ்சீவிகளின்யோகமுறைப்படியேயாமென்பதை யறிவிக்கத்தொடங்கல்.

௬. சிரஞ்சீவிக்குப் பிராணபந்தனமே காரணமாமெனல்.

பிராணவாயுவசைந்தாலசைவார்கள்; பிராணவாயுவடங்கினால் மலைக்கொப்பாவார்கள்; பிராணனைத்தரித்ததினால் யோகியர் வெகுகாலமிருவார்கள். பிராணனிடத்திலும்மனதினிடத்திலு முண்டாகின்ற அசைவானது உள்ளிலும் புறம்பிலுமடங்குமானால், மரணமும் வார்த்திகமுமாகிய விவ்விரண்டும் வெகுதூரத்தில் போய்விடும். — உள்ளிலும் வெளியிலும் சலனமில்லாமல் பிராணனு மனதும் அடங்குமாயின், ஒருகாலத்திலும் தள்ளப்படாமல் தாதுக்களனைத்தும் தேகத்தில் வாசஞ்செய்யும். தெளிவாக வறியவேண்டிய வாத்மஞானத்தையறிந்து இச்சைநீங்கி புத்திதெளிவாகி மனதிற்கொள்ளுகின்ற பந்தங்களனைத்தையுங் கெடுத்தவர்களல்லவா தத்துவத்தை மறித் துணர்ந்தவர்கள். ‡ — பின்னும் விவேக ஹிருதயத்தினால் மனது ஸ்வரூபத்திலயிக்கியமாயின், மயித்திரிமுதலாகியநான்கு குணங்களும் எங்கேபொருந்தும், என்றுகேட்ட ஸ்ரீராமருக்கு வசிட்டமுனிசொல்லுவார். அருவமு முருவமுமெ

௭. இந்தேகவாஞ்சையை நீங்கினவர்களே தத்துவத்தை யறிந்தவர்களாமெனல்.

௮. ஞானியின் மனமிறந்து பிறவாமல் மயித்திரியாதி குணங்களோடு விளங்குவதை யறிவிக்கு நிமித்தம் அதனிறந்தவே யிரண்டுவிதமாகச் சொல்லுதல்.

* இ-ம். பிராசையுள்ளஞானிக் காசையுள்ள சித்திகள் கூடாவென்பதாம்.

‡ இ-ம். சிரஞ்சீவத்துக்கான மனோபிராணபந்தனம் ஞானிக்குக் கூடாவென்பதாம்.

௯. மனதினுருவத்தை நசிப்பிக்கவேண்டுமெனல்.

ன்று மனோநாசம் இரண்டுப்பிரகாரமாம். — சீவன்முத்தியில் உருவநாசமானது மனதுக்குண்டாகும், வருத்தமற்ற விதேகமுத்தியில் அருவநாசமுண்டாம். மனதுண்டானால் துன்பமாகும்; அதுமரிக்குமாயின் ஆநந்தம்பெருகும், பாவிக்கின்ற மனமானது எழும்பாதப்பிரகாரஞ்செய்து அம்மனதைக்கெடுப்பாய்.¶ —

௰. உருவாதியாமற் பெத்தரிடத் திருக்கின்ற மனமே மாயைக்குக் காரணமாமெனல்.

ப்ரகிருதிமார்க்கத்தின் குணத்தின்சமைமையை எனதென் றபிமானஞ்செய்தல் தகுதியான தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாமல் வருந்துகின்ற மனமாகும், அம்மனமே சீவனுமாகும். கூட்டமாகிய சுகதுக்கங்களை தொடர்ந்திருப்பதாயும் சுகமுதலானதுகளில் நிலையாயிருக்கின்ற இந்தமனமே பிறந்தமாயையுண்டாவதற்கு முளையாகும். — மனதினுண்மையைச் சொன்னோம், மனோநாசஞ்சொல்ல நீ கேட்கக்கடவாய்.

௧௧. சமதிருஷ்டியிற் சலனமறுதலே மனத்தினுருவநாசமாமெனல்.

மகாமேருவை முச்சசைக்கமாட்டாத தன்மையைப்போல, சமத்துவமான தரிசனத்தில் இனமாகிய சுகதுக்கங்களினால் எவ்வளவு மசைவுபடாமல் இருக்கும் ஞானிகளுக்கு பயனின்றிய மனமானது அறிஞர்கள் நசித்ததென்றுசொல்லுவார்கள்.

௧௨. இதுவுமது.

—மகாசம்பத்துமாபத்தும், புத்தியுமத்தமும், தரித்திரமும் மதங்களும், பொருந்தினவாய் யாவரை வேறுபடுத்தாதோ, அவர்களுக்கே மனமிறந்ததாம். எழுந்த அறியாமையே மனமாகும்; அவ்வறியாமையே நீங்கில், வருத்தமில்லாமல் மனோநாசமென்கின்ற முதலிவு உண்டாகும்,

௧௩. உருவநாசமாய்ச் சீவன்முத்தரிடத் தருவாயிருக்கின்ற மனதினிலக்கணங்கூறல்.

† உண்டானகுணமாகிய மயித்திரிமுதலிய நான்குஞ்சேர்ந்திருக்கும் சத்தவாதனையைப்பெற்று, இனியான மறுசனனங்களும் இல்லாததாகுமோ, அந்தமனது சீவன்முத்தர்களுக் குண்டாயிருக்கும். இந்தமனதுக்கு உருவநாசமானது இதுவேயாகும்; இத்தன்மையானமனதில் நான்குகுணங்களும் வசந்தகாலத்தில் விரிந்த புட்பக்கொத்துகளைப்போல ப்ரகாசிக்கும்.

௧௪. அருவநாசமாம் விதேகமுத்தரிடத்து விளைந்திய விடல்லைக்கூறல்.

— மனதினது அருவநாசமானது விதேகமுத்தனிடத்தில் ஊக்கமறப்பொருருந்தும், பிருதுவாயுள்ள மயித்திரியாதிய சற்குணங்களைப்பெற்றும் மெய்யான சாத்துவிதமானது இறந்ததாய் விதேகமைவல்லமாய் பரிசுத்தமாய் முத்தர்க்கெய்தும் : தொடர்ச்சியாக சாத்துவிதநாசமே வடிவமாய் மனதில் அருவநாசமென்று நாமம்பெற்றிருக்கின்ற ப்ரகாசிக்கின்ற பதத்தில் சொல்லுதற்கு வே

¶ இ-ம், மனமானது பெத்தர்களிடத்துருவமாகவும், முத்தர்களிடத் தருவமாகவும், விதேகமுத்தர்களிடத் தில் இரண்டுமின்றாகவும் விளங்கு மென்பதாம்.

† இ-ம், மனதி னுருவநாசத்தைச் சொல்லியதாம்.

கரு. அருவாசமாம் விதேக முத்தரிடத்தா விளங்கிய வியல்பைக் கூறல்.

ரொன்றுமில்லை. — குணகுணங்களும், செல்வாசெல்வமும், ப்ரகாசிக்கின்ற வுதயாஸ்தமானமும், சந்தோடமு மருளையும், இணங்குகின்ற ப்ரகாசமும், அந்தகாரமும், இராத்திரியும், பகலும், மூன்றுசந்தியும் உள்ளதுமில்லாததும், இவைகட்கு மத்திகளொன்றுமில்லாமையே பிரமபதமாம். அதுவே சம்சாராடம்பரத்தையும், புத்தியையும், சயஞ்செய்தவர்களுக்கு, கந்தத்தைக் கிரிகிக்கின்றகாம்றுமுதலிய வனைத்தினுக்கும்பொருந்துதற்கு ஸ்தானமாயிருக்கின்ற ஆகாயம்போல தந்தசமேயாம். ¶ — துன்பங்களனைத்து

கசு. மனமிறந்தசுகத்தைச் சொல்ல வஃதிறக்கும் பொருட்டு அதன் காரியமானமாயையின்மூலத்தைநான்குவிதமாகப் பிரித்து வினவுதல்.

நீங்கி ஞானமேஸ்வரூபமாய் ஒன்றாகிய சமூத்தியாய்த் தாமதராசதகுணங்கோற்றது; ஆநந்தமிருந்திருக்கின்ற அந்தப் பிரமபதத்தில், ஆகாசசரீரமாய் மகத்துக்களாய் ப்ரகாசிக்கின்ற பெரியோர்கள், மனதுகெட வசிப்பரென்று வசிட்டமுனிசொல்லவும், வளராநின்ற கொடிமுந்திரியையொத்த மாயைக்கு முன்னே சொல்லப்பட்ட விதையாது, அவ் வித்துக்கு விதையாது, அதற் கெதுவிதை, சொல்லப்பட்டவதற் கெதுவிதை, இந்த நான்குவிதையுஞ் சொல்லுவாயென் றிராமன்கேட்டான். — வசிட்டமுனிசொல்லுவார், சம்சாரமென்கின்ற சூழ்ந்தகொடிக்கு உள்

கஎ. முதல் வித்திரண்டாம் வித்தி னிலக்கணங் கூறல்.

ளெழாநின்ற துவக்கமாகிய சுபமசுப மென்கின்ற முளையைக்கொடுக்கின்றசரீரமேவிதையாகும், நின்ற தானசரீரமென்னும்விதைக்குயாதுவிதையென்றால், சுகமரணங்கள் எப்போதும் மிகுந்து வைகிக்கின்ற துன்பமென்னு மிரத்தினத்துக்கு வைக்கவிடமாகிய சம்புடமென்னும் இச்சையின்பின்செல்லுகின்ற மனதேயாம். † — இல்லதுள்ளதென்கின்ற இச் சரீரக்

கஅ. மூன்றாம்வித்தி னிலக்கணங் கூறல்.

கூட்டங்கள் மனதினால் அளவில்லாமலுண்டாகும்; இச்சரீரவிடயங்களையே கனவில் மனமனுபவிக்கும். சகத்தொழில்களென்னுங் கொடிகளே சேர்ந்துச்சுற்றிக்கொண்டிருக்கின்ற துன்பத்தையுடைய மனமென்கின்ற விருட்சத்துக்கு இரண்டுவிதையாம்; பிராணனசைவு ஒருவிதையாகும், வாசனையானது இரண்டாம்விதையாகும், என்று சூரியனதுபழமையானவிசம் விளங்கும்படியாக, வந்தவாசனே? கொள்ளக்கடவாய். ‡ — உதயமாய் எவ்விடத்திலும்பொருந்

ககூ. பிராணனசைவான முத

திய ஞானமானது, பிராணசலனத்தினால் கிரிஸ்யஞா

¶ இ-ம். மனதினருவ நாசத்தைச் சொல்லியதாம்.

† இ-ம். மாயைக்கு வித்து தேகமெனவு மதற்கு வித்து மனமெனவுங் கூறியதாம்.

‡ இ-ம். பிராணனசைவுங் கிரிஸ்யவாசனையுமே மனதிற்கு விதையாமென்பதாம்.

ஸ்வித்தி விலக்க ணங்கூறல். ணத்தையடையும், அத்தஞானத்தை பெரும்முயற்சியின்றியாமல் அடைந்தல் மிகுந்தசிரேயசாம். அறிவானது திரிஸ்யத்தை இச்சையின்றிப்பொருந்தும்; அத்திரிஸ்யங்களே மனதுக்கு எப்போது பொருந்தாதது ன்பமாம். அந்தத்தனிமையாகிய அறிவானது இரும்பாக கழுத்திய நிலைப்போல இருக்குமாயின், அது வேயிருவானமும், அதுவே ஆத்மலாபமும், அதுவே

௨0. இதுவுமது. திருமலமானபதமுமாம், வேறொன்றுமில்லை. —அதனிறல் பிராணசலனத்தினாலும் வாசனையிடத்தில் பிரியத்தினாலும் விடயஞானத்தை பாவச்செய்யாமற் போனால் ஜகம்விடுபடும். அறிவினது பேதமிருதியே மனமாகும்; அம்மனதினால் இச் சகலவுயிர்களும்வாழும். அறிவையுடைய யோகியானவர்களும் பிராணாயாமத்தினாலும், தியானத்தினாலும் அவிற்றத்தினாலும், யுத்திபின்றியங்களினாலும், வேற்றாமையுள்ள மனமடங்குகிறித்தமல்லவா பிராணாயாமஞ் செய்கின்றார்கள்.

௨௧. இதுவுமது. — நன்மைபொருந்திய பிராணாயாமமானது மனதை அடங்கச்செய்யும். சமத்துவத்துக்கு மேன்மையானகாரணமாகும். இவ்வுத்தைகளிலேக்கும், விடயசம்பந்தமான அறிவையெழாமற்செய்யுமென்று, சத்துக்கள் சொல்லுவார்கள். தெளிவாகிய பலவஸ்துக்களை யறிகின்றவறிவை விளக்கஞ்செய்து சேர்ந்திருக்கின்றவாசனையினால் உண்டாவதாய் வெளிப்படையாகக்கண் டதுபயிப்பதாகிய மனதுக்கு, இனி இரண்டாம்வித்தை அடிப்பதியை சொல்லக் கேட்பாய்.

௨௨. வாசனை யான விரண்டா ம்வித்தி விலக்க ணங்கூறல். ¶ — திரமாகிய பாவனையினால் முன்பின் விசாரணையைவிட்டு விடயங்களைச்சேரக் கொளசமாக்குதல் அறியாமையாகிய வாசனையாகும். அதிவேகத்தினால் சிக்கிரத்தில் ஒன்றைக்குறித்துப் பார்த்து உடனேயந்தவடிவமாய், வேறுள நினைவுகளியாவையும் ஒழிக்கின்ற இந்த வாசனையைத்திடமென்று ஆத்மாவும் அவ்வுடம்பிலே அவேசத்தினராய் தோற்றுகின்ற வஸ்துக்களை நல்லதென்று சகித்து மயங்கும்.

௨௩. இதுவுமது. — வாசனையினது வேகத்தின் பாசத்தினால் தனது ஸ்வரூபத்தைவிட்டு, சகலத்தையும் மயக்கத்தோடும் குற்றம்பொருந்துகின்ற புத்தியில் மதவசத்தினால் மயங்குதலைப்போலப்பார்க்கும். இத்தனைத தெளியும்படியாகச்சொல்லில், குற்றம்பொருந்திய காட்சியாது, தானல்லாதவைதானென்கிற பாவனையாது, வஸ்துவல்லாததை சொல்லுகின்ற வஸ்துவென்னுங்

¶ இ-ம். பிராண வியக்கத்தால் பூரணபோதமனைச் தக்கவிடயமாக வெறிரிட்டுதற் சகதுக்க மதுபவிக்கு மனமுண்டாதலினீடுடக்குற்பொருட்டு பிராணாயாமஞ் செய்யவேண்டுமென்பதாம்.

௨௪. வாசனையான விரண்டாம்விந்தி னிலக்கணங்கூறல்.

௨௫. விடயவாசனையேமனதுக் குருவமாமெனல்.

௨௬. விடயவாசனைநீங்கிப் பிரமவாசனையுண்டாயின் மனதிற் குருவநாசமுண்டாமெனல்.

௨௭. மனதிலுருவம் நசித்த சீவன்முத்தர்களின் சிறப்பைக் கூறல்.

கருத்தியாது, அதுவே மனமாகும்; இம்மனதினாற் சனனமரண மூப்புண்டாம். —மிருதுவான திடப்பழக்கத்தினால், பதார்த்தத்தில் பொருந்தாநின்ற வோர் பாவனையினால் மிகவுஞ்சஞ்சலத்தையடையும்; மனதுண்டாயின் சனனமரணமுதலியவைகளு முண்டாகும், விடுதலும் பற்றுதலும் ரூபமாகிய கூட்டங்களிற்பொருந்துகின்ற இவ்வளவையும் பாவனைசெய்யாமல் சகலமும்விட்டு எப்போதிருந்ததோ அப்பொழுதே மனமுண்டாகாது. வாசனாக்ஷயத்தினால் கருத்தொழிந்தால் மேன்மையான வுபசாந்தம்வரும், மனோநாசமுண்டாகும். ¶—உலகவஸ்துக்களில் ஓரிடத்தி லொருநினைவுமில்லையாயின், ஒப்பற்ற மனமென்னுஞ் சூனியாகாயத்தில் மனமானது நிகழ்ச்சியுற உண்டாவ தெவ்வண்ணம். உதாரமுள்ள ஸ்ரீராமா? மனதுக்கு அவ்வளவுதான்வடிவமென்றுகருதுவேன், மேலான சுகத்தினாலும் பொருளை யுண்மையென்பதினாலும், அகத்திற்பொருந்திய பல வஸ்துக்களின் நினைப்பே மனதினதுருவமாம்; படர்கின்றதிரிஸ்யம் கிரியைக் காரமாட்டாதென்று, நினைக்கின்ற ஆகாயத்திலுஞ் சொச்சமானவர்களுக்கு எப்படிமனதுண்டாகும். — சகத்தில்லாததாகப்பற்றுதலும், அதையில்லாததாகப்பாவித்தலும், விசாரணைசெய்து உண்மையாகியவஸ்துவைக் காணுதல் மனோநாசமென்றுசொல்லுவார்கள். சுபாவமாரும்படிசகலத்தையு முள்ளே தள்ளி குளிர்ச்சியான வமிர்தத்தைப்போலும் இந்த மனது சஞ்சரிக்குமானால், குறையாதசெயலைப் பொருந்தினாலும் அம்மனமானது தன்னுருவமில்லாததென்று சுத்துக்களாற்சொல்லப்படும் கூட்டமாகிய மறுபிறப்பைக்கொடாநின்ற வாசனையை நெருங்காதவர்கள், குயவன்சுழற்றிவிட்டசக்கரத்தைப்போல,குறைவில்லாத சீவன்முத்தர்கள் பிராரத்தமுள்ளபரியந்தஞ்சஞ்சரிப்பார்கள். — வருத்தமித்துக்குச்சமானமாய் சுகமல்லாமலிருக்கின்ற மறுபிறப்பில்லாத சுத்தவாதனையை யுடைத்திருப்பவர்கள், துன்பந்தீர்ந்த சீவன்முத்தர்களாம். தத்துவஸ்வரூபத்தைப்பெற்ற மனதையுடையவர்களுமவர்களே; சமமாகவுநின்ற ஞானதீரத்தையடைந்தவர்களு மவர்களே; மனமில்

¶ இ-ம். பிரமானந்த ப்ராதிபலனே சமான விடயானந்தத்தைச் சுகமென்றனுபவித்த புருடன் தன்னைமறந் தவ்வாசனாவடிவமா யவ்விடயமுண்டாயிருக்கிற சகமும் அஃதில்லாவிடித் துக்கமுமாம், அக்கருதுங்கருத்தே மனமாதலினம்மனதிற்கு வாசனைவித்தாயிற் றம்பேத வாசனைநீங்கி மனமிறக்கில் விடயானந்த நீங்கிப் பிரமானந்தம் வெளிப்படு மென்பதாம்.

லாதவர்களுமவர்களே; நின்மலமாகவுமிருக்கின்ற சரீரம்விடில் சிதாகாச ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் அச்சிவன்முத்தர்களே யென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ‡ — உயிரினசை யொன்றாகவும் வாசனையொன்றாகவும் மனத்தின்வித்தானது இரண்டாகும்; இவ்விரண்டிலொன்று நசித்தால் இரண்டுமுடனேநசிக்கும். வாசனையின்வசத்தினால் பிராணனசையும், பிராணனசைவினால் வாசனையுமுண்டாகும்; அதனால் மனமென்கின்றவித்துக்கு வினையும் முளையும் என்ற ஞாயமுண்டாகும். சொல்லாநின்ற வாசனையும் பிராணனசையுமாகிய இவ்விரண்டும் நானாவிதமான திரிஸ்யங்கள் மூலமாகவிரியும். ¶ —

உ௮. நான்காம் வித்தினிலக்கணங் கூறல்.

உ௯. திரிஸ்யத்தினால் வாசனையுண்டாகி அவ்வாசனையால் மனமுண்டாகி அம்மனத்தினால் தேகமுண்டாகி அத்தேகத்தினால் செனித்து மரிக்கின்ற சம்சாரமாயையுண்டான வுற்பத்திக்கிரமமான கற்பனாவிதையாகிய நான்கையுஞ் சொல்லி, இதையொழிக்கச் சுகபோதமாக்குதற் பொருட்டு இதுர்த்தமான நான்குவித்தையுஞ் சொல்லத் தொடங்கித் திரிஸ்யத்துக்கு வித்து சித்தென்றறிவித்தல்.

ஆதலினால், திரிஸ்யத்தைநீக்குதலினால் பிராணனசையும் வாசனையுமாகிய இவ்விரண்டும் விருக்ஷம் வேரற்றதுபோல அடியோடுகெடும்; படராநின்றவிருத்திஞானமே திரிஸ்யத்துக்கு வித்தையாகும்; அறிவேதோற்றுகின்றதல்லால்திரிஸ்யமுமில்லை; என்னையில்லாமல் என்றுண்டாயிருக்குமோ. வேறுவேறாக உள்ளிலும் புறம்பிலும் திரிஸ்யமென்பதொன்றுமில்லை; உதிக்கின்ற ஞானமானது ஒருவிதமான சிருஷ்டியைச்செய்யும். — சங்கற்பத்தினால் திரிஸ்யத்தை ஞானமானது தன்னிடத்திற்றானே பார்த்திடும் சொற்பனத்தில் தனிநடத்தலும் அச்சொற்பனத்தில் சகல தேசங்களும் தன் சமத்காரத்தால் பொருந்துவதுபோல், திரிஸ்யத்தை விருத்திஞானமறியும். பகுத்து முன்னறிந்ததாலும் அறியாததாலும் அறிவுக்கு யாது ப்ரதிபலித்ததோ, அதைப் பரிகரித்தல்பொருந்திய தமது ப்ரயாசத்தினால் விசாரணையுள்ளவர்கள் கெடுப்பதுவே கொடியசம்சாரத்தைக் கெடுத்ததாகும். — அந்தப்ரதிபலமான திரிஸ்யத்தைக் கெடுக்காதிருப்பதுவே மகாசம்சாரத்தைச் சேர்ந்ததாகும்; அதைக்கெடுத்ததே முதிர்ந்த பரமபதியென்று சத்துக்கள் சொல்லுவார்கள். திரிஸ்யமல்லவா அளவற்ற சகலதுன்பம். ஸ்ரீராமா? கலக்கமுற்ற திரிஸ்யமின்

௩௦. சித்தேசத்தாய் விளங்குகின்றதென்றறியிற் சகத்தோயமாயாருபம் நசிக்குமெனல்.

௩௧. திரிஸ்யமகன்ற சித்திற் பிரமசுகமுதிக்குமெனல்.

‡ இ-ம். அசுத்தவாசனை நீங்கின் சுத்தவாசனையுள்ள மனமே யாத்மசாம்யம்பெற்றதாம்.

¶ இ-ம். விடயானுபவத்தால் வாசனையும் அதை யனுபவிக்கும் பொருட்டுச்சலனமுமுண்டாதலால் அவ்விரண்டிற்கும் வித்து திரிஸ்யமென்பதாம்.

மையும் விடயவறிவின்மையும், கொடியசஙமில்லாத நிருவாணசுகத்தைக் கொடுக்கும். சதுரை யுடையவனாய் சடமில்லாதவனாய் விடயானந்தத்தைவிட்டு ஒன்றையுமறியாமல் சஞ்சலத்தைவிடுவாய். ¶ —

௩௨. சயஞ்சித்தி லிலக்கணங் கூறல்.

திரிஸ்யத்தை பாராமலிருக்கின்ற ஞான ஸ்வரூபமாகிய அப்பராமாத்மாவே நீயாம். ஈதுண்மையா மென்று வசிட்டமுனி சொல்லவும், திரிஸ்யமில்லாமலிருக்கின்றவிடத்தில் அறிவில்லாத தெப்படிவரும், ஞானமில்லாதவிடத்தில் திரிஸ்யமெப்படிநீங்கும், செம்மையாகச்சொல்ல வேண்டுமென்றுகேட்ட ஸ்ரீராமருக்கு திரும்பவும் சொல்லுவார். எவ்விடத்திலுமெழுகின்ற பற்றில்லாமல் அறிவின்மையான வொருவிடயத்தில் ஆறுதலும் அறிதலுமில்லாத வாத்மாவே, திரிஸ்யமில்லாததும் அறிவில்லாததுமாம். † —

௩௩. மூற்கூறிய சித்திற் சுகமுதிக்குமெனல்.

திரிஸ்யத்தை யடையாத ஞானத்தைப்பெற்றால் அளவற்றதொழில்களைச்செய்தாலும், திரிஸ்யமில்லாததும், விருத்தி ஞானமில்லாததும், அவ்வாத்மாவாகும்; திரிஸ்யத்தை எவ்வளவேனும் இதயாகாசம் கிட்டாதாயின் அவனேஞானவானும்; சடமாகாதவனும்; விடயவறிவில்லாதவனும்; அவனே சீவன்முத்தனும்; அவனிடத்தில் அறிகின்ற வாசனநாசத்தினால் ஒன்றையும் நினையாமல் குழந்தையறிவுக்கும் ஊமனறிவுக்குமொப்பாயிருக்கும். —

௩௪. இதுவுமது.

அப்பொழுது, திரிஸ்யபாவனையைவிட்டு பூரணமாயிருக்கின்ற விருத்தி ஞானமில்லாத வாத்மஞானத்தை அடையலாகும்; அதனால் திரும்பவும் ஞானமானது ஒன்றிலும்பற்றாமல் ஒருப்பிரகாரமாயிருந்து சகலவாதனைகளும் விட்டு நிருவிகற்ப சமாதியினால், நிறைந்த வாகாயத்தி னீலநிறம்

௩௫. இதுவுமது.

போல, பூரணநந்தநிறையும். — நன்மையாகிய அச்சமாதியைப் பிடித்து திரிஸ்யத்தை நாடாதஞானஸ்வரூபமாகிய ஞானிக்கு, தன் ஸ்வரூபம் தானனபடியினால் தனித்தவாநந்தம்; அந்த வான்மாவி லயிக்கும். நிற்பதும், நடப்பதும், சத்திப்பதும், பரிசிப்பதும், இவைகள் தொடர்புற்றும் அவைகளிற் பற்றுதலில்லாதவன், வலிமையுள்ளதிரிஸ்யமல்லாதவனும் ஆநந்தமில்லாதவனும், ஒன்றையுமறியாதவனும்,பே

¶ இ-ம், திரிஸ்யத்தின் காரணமான சித்தைத்தரிசித்து அத்திருஷ்டியினலத் திரிஸ்யத்தைக் கனாக்கிற் சுகமுண்டாமென்பதாம்.

† இ-ம்- ஸ்வருபஞானத்தில் விருத்தி ஞானமுண்டாகி யஃதே விடயாகாரமாய்த் தடித்தலி னவ்விடயத்தையும் அதை விளக்கும் விடயஞானத்தையு மறியாத வாத்மஞானத்தை விளக்கிவித்ததாம்.

௩௬. இச்சித்துக்கு வித்துசத்தாகுமெனல்.

ராநந்தனுமாம்.† — இந்தத் திருஷ்டியைப் பிடித்து இழிவானதொழில்களுடன் பொருந்தினுலும் துக்க சாகரத்தினின்றுங் கரையிலேறி ஞானச்சிறப்பினது சமுத்திரமாவாய். அந்தமேன்மை பொருந்தியசத்தா மாத்திரம் இந்த ஞானத்தின்விதையாகும்; அந்த ஞானம் முதன்மையானசத்திலிருந்து ப்ரகாசத்திலெளியைப்போலவுண்டாகும்.

௩௭. அச்சத்துக் கிரண்டிலக்கணங்கூறல்.

— அந்த நிறைந்த சத்துக்கு இரண்டுஸ்வரூபமாகும்; ஒன்று பலவிதரூபமாகும், மற்றொன்றொன்றாகிய ஸ்வரூபமாகும், இவைகளைப் பிரித்துச்சொல்லக்கேட்பாய். கடமென்பதும் படமென்பதும் உள்ளதென்று நீங்காமற் பற்றிப்பார்க்கின்ற பாவனைகளானவை, சத்தினது ஸ்வரூபத்தின்பிரிவினு லநேகவிதமானுலும் அது வொன்றே.

௩௮. மூன்றுசத்தையு நீக்கியேகரூபமான சத்தைக்கூறுதல்.

— எவ்வளவேனும் விசேடமில்லாமனீக்கி சத்தாமாத்திரமாகியும், பற்றின்றி ஏகரூபமாகியு, மகத்ஸ்வரூபமாகியு மிருக்கின்ற வதுவே, சத்துக்குப்பொருந்துகின்றபதமாகும். இன்னும்காலசத்தையென்றும், கலாசத்தையென்றும், வஸ்துசத்தையென்றும்,மூன்றுசத்தையையும் நீக்கி, ஏகமான சத்தாமாத்திரத்திற்பொருந்துவாய்.

௩௯. இதுவுமது.

— காலசத்தை கலாசத்தை வஸ்துசத்தை யென்கின்றமூன்றுசத்தையும், நினைக்கின்றவெவ்வேருயிருக்கின்ற செயலை விடுமானல், ஒருதன்மையில் உத்தமமான சத்தாஸ்வரூபத்தையுடையதானுலும், வாய்மையையுடைய சத்தாகாவாம். அநேககருமங்களானவை உள்ளதான விச் சத்தைகளில் பலவுக்கும் காரணமாதலேநோக்கி அழகாகவெவ்வேருனபதத்தைக் கொடுக்குந் தன்மையாதலால்; அக்காலசத்தை முதலானவை எப்படி பரிசுத்தமான சத்தையாமுறைமை.¶

௪0. சுயஞ்சத்துக்கு அதன் முடிவான துரியமேவித்தாமெனல்.

— அந்தசத்தாசாமானியமான வொன்றையும் தனிமையாகப்பாவனைசெய்து, பரிபூர்ணமாயிருக்கின்ற சுயாநந்தத்தை யுடையவனுய் திக்குகளனைத்திலும் நிறைந்துநிற்பாய். சத்தாசாமானியமாத்திரத்தின் முடிவானதெதுவோ அவ்விடத்ததுவேபரிசுத்தாகாரமான விச்சத்துக்குவிதையாம்; அச் சத்தாசாமானிய முடிவினின்று இச்சித்துமுதலிய சுகமனைத்துமுண்டாம்.

௪௧. அத்துரியத்துக்கு வித்து ஞானுநந்த வயிக்கியமான் வத்துவிதமெனல்.

— சொல்லப்பட்ட சத்தாசாமானியத்தினுடைய அந்தத்தில் சங்கற்பிக்கு நினைவுகளனைத்துநீங்கி ஒழிகின்றதெதுவோ அவ்விடத்ததுவே சுகபோகத்தினிடமாம்; முதன்மையாகிய வித் ததுவாகும். குற்றமற்ற அந்த ஞானுநந்த

‡ இ-ம். இச்சித்தே யாகந்தமயமாய் விளங்குமென்பதாம்.

¶ இ-ம். ஏகரூபமான சுயஞ்சத்தை நிரூபித்ததாம்.

பதத்துக்கு விதையில்லையாம், அச்சுகபோதத்தி லயித்து வேற்றுமையில்லாமல் தழுவாநின்ற ஞானமானது நிலைபெற்றிருக்கும்; அந்தப்பதத்தை யடைந்தவர்கள் திரும்பவும் துன்பமடையார்கள். *—சகலத்துக்கும் அதுவேகாரணம்; காரணமான வதற்குக் காரணமில்லை. சகலத்திற்கும் அதுவே சாரமாயிருக்கும்; சாரமாகிய வதற்கு வேறே சாரமில்லை. அதுவாகிய பெரியகண்ணாடியில் சகலபதார்த்தங்களின் பார்வைகளாயிருக்கின்ற அதுவிதுவென்கின்ற சகலமும், கரைகளிலிருக்கின்ற விருட்சங்கள் தடாகத்திற் றோற்றுவதுபோல ப்ரதிபலிக்கும்.—அதுவேநின்மலமும், அதுவே மூப்பற்றதும், அதுவே யாத்மதத்துவமாம். ஸ்ரீராமா! அப்பதம்வந்து பொருந்துமாயின், மனதுவுபசாந்தத்தைப்பெறும்; திரமாயுணர்ந்து அந்த வாத்மஸ்வரூபமாவாய், சநநமில்லாதநிருவாணபதத்தை, நலைவனே? அடையக்கடவாய் என்றுசொல்ல: ஸ்ரீராமனும், அந்தவசிட்டமுனியைப் பார்த்து சொல்லுகின்றார். †—அத்தன்மையுள்ள வித்துக்கள் இப்படிப்பட்டதென்று அனைத்துமுரைத்தாய், முடிவில்லாததென்றுசொல்லிய ஞானாநந்தபதத்தை எந்தமுயற்சியினால் சீக்கிரத்தில் அடையலாகுமென்றுகேட்க, வசிட்டமுனிசொல்லுவார். துன்பத்துக்குவித்தாகிய வினைகளின்விதங்களை மேலுமேலு மென்னவென்ன சொன்னேனோ, அதினதின்முயற்சியினால், சீக்கிரத்திலந்தப்பத மடையப்படும். — சத்தாசாமானியத்தின் முடிவாகிய அதிதபதத்தை யடைந்து, ஒருகாலத்தில் திரளாகியவாசனைகளை புருடப்ரயத்தனத்தினால் இடையூறில்லாமற்கெடுத்து, தனக்குரிமையான தத்துவஞானத்தையறிந்து, நாசமில்லாத ஸ்வரூபமாகிய நிலையிலமர்ந்து க்ஷணப்போதாயினும் பொருந்தினாய்; அந்த க்ஷணத்தில் பொருந்தாநின்ற வவ் வத்துவிதபதத்தை யடைவாய்.—சத்தாசாமானியத்தினதுஸ்வரூபமாகிய நிலையை அடைவாயானால், அதில் கொஞ்ச மதிகப்ரயாசத்தினால் அந்தப்பதத்தையடைவாய். சித்சாமானியத்திற் பொருந்துகின்ற தியானஞ்செய்தால், அச்சத்தாசாமானிய முயற்சிக் கதிகமாக மிகவும் ப்ரயாசைப்படுதலினால் அந்த ஸ்வரூபமடைவாய். § —

௪௨. இதார்த்தமான நான்கு வித்தையுஞ்சொல்லி அதுவேயாவுமாய் விளங்குகின்றதெனல்.

௪௩. இவ்வநுபவத்தினால் மனது சாந்தமா மெனல்.

௪௪. சுவாநுபவமான பிரம ஸ்வரூபத்தை நிச்சயித்து அதை யடையும் வருத்தா வருத்த முறிருபிக்கத் தொடங்கல்.

௪௫. க்ஷணஞ் சத்தினதீதமாயின் உடனேயத்துவிதாநுபவஞ்சித்திக்கு மெனல்.

௪௬. சத்தாயிற்கொஞ்ச வருத்தத்தினாலுஞ்சித்தாயி லதிகவருத்தத்தினாலுமத்துவிதத்தை யடையலா மெனல்.

* இ-ம். சத்தின்வித்தான துரியத்தையு மதற்கு வித்தான வத்துவிதத்தையு மறிவித்ததாம்.

† இ-ம். இச்சுவாநுபவத்தினால் மனமுதலிய சகங்களியாவுஞ் சாந்தமாமென்பதாம்

§ இ-ம். பிரமத்தையடையுமார்க்கத்தின் சுலுவையும் பளுவையுமறிவித்ததாம்.

௬௭. முன்சித்தபரியந்த மற்பியாசஞ் சொல்லிப் பின் நிரிஸ்பவனு சந்தானத்தா லவ்வனுபவ முறியாததையும் வாசனாக்ஷயத்தான் மனமுதலிய யாவு நசிப்பதையுங்கூறுதல்.

முக்தி கேவலமாகிய நிரிஸ்பரிதனையால் லேசமுண்ணத்தையுடைய ஸ்ரீராமா? அப்பழுமறியாது, இவ்விடயஞானத்தின் உதயத்தினால் எப்போதும் எவ்விடத்தும் அனுபவமுண்டாகாது; அவித்யமாகிய வாசனையை ப்ராயாசைப்பட்டுக் கெடுத்தாயானால், அதனால் வெப்பமுற்ற ஆவியாகிய சகலமும் சீக்கிரத்தில் பொடியாகிவிடும். —

௬௮. வாசனையுமனமும் பீசாங்குர ந்ரயமா மெனல்.

முன்சொல்லப்பட்ட ப்ரயாசையின் முற்றுஞ்செய்தாலும், மயக்கமேருவை மூலத்தோடு பிடுங்கிப்பிடுங்கிலும், தொடரும் வாசனையை விடுதற்கரியதாம். நினைக்கின்ற மனது எந்நாட்டும் கெடாதோ பொருந்தின வாசனையானது, அந்நாட்டும் கெடாது; அப்படியே வாசனையானது எந்நாட்டும் கெடவில்லையோ மனம் அந்நாட்டும் கெடாது.—

௬௯. ஞானமுதிக்குமளவு மனமும் வாசனையு மழியாது, இவை அழிக்குமளவு ஞானமுதியா தெனல்.

தத்துவஞானமானது, எந்நாட்டும் வரவில்லையோ அந்நாட்டு மனங்கெடாது; வலிமைபொருந்திய மனது, எந்நாட்டுங்கெடவில்லையோ ப்ரகாசியாமின்றதத்துவஞானம், அந்நாட்டுமடையமாட்டாது. இந்திரியவாசனையானது, எந்நாட்டுங்கெடவில்லையோ அந்நாட்டு ஞானம் கிட்டமாட்டாது; மெய்ஞ்ஞானம், எந்நாட்டுங்கிட்டாதோ அந்நாட்டும் வளர்கின்ற வாசனையானது கெடமாட்டாது. —

௭௦. நிரிஸ்பவிக்கை நீக்கில்லா சனுக்ஷயமும மனோநாசமுந் தத்துவஞானமு முண்டாமெனல்.

இவையாகிய தத்துவஞானோதயமும், மனோநாசமும், வாசனாக்ஷயமுமாகிய இம்மூன்றும் வேறு காரணங்களைப்பெற்று சாதிப்பதற்கரியதாம்; செவ்விதான அந்த மார்க்கத்தினால் விவேகிகளினால் திடமாகிய புருட ப்ரயத்தனத்தினால் ஐம்பொறிகளாலுண்டாகிய போகங்களை தூரத்தினின்றும் இம்மூன்றும் வந்தடையும். —

௭௧. இம்மூன்றுங்காரண காரியமாகாமற் சமமா யனுஷ்டிக்கிற் சித்தசுத்தியை யடையலா மெனல்.

இங்ஙனமாகவே மனோநாசம் வாசனாக்ஷயம் தத்துவஞானமென்னும் மூன்றும் சமத்துவமாக எந்நாட்டும் முயற்சிசெய்யவில்லையோ, அந்நாட்டும் அப்படிப்பட்ட ஸ்வரூபபதமானது, அநேகவருடமாயினும் அடையமாட்டாது. விகாரமில்லாத மெய்போதம் மூன்றும் சமத்துவமாக வெகுகாலப்பழகில் ப்ரயோசனமாகும் மனதில் ஒன்றொன்றாக முயற்சிசெய்தால், நிலைபொருந்தாமல் அப்ப்ரயோசனமாகும்.¶ —

௭௨. பிராணபந்தனத்தினாலும் வாசனை விடுதலுமனோநாசம் தலின்று மெனல்.

சமமாகச்செய்தால், இம்மூன்றும் மனதிலுள்ள பந்தங்களைத்தையும் கெடுக்கும். கெல்லமாக விருக்கின்ற தாமரை தாளானது தாமரைத்தண்டு கெடுமாயின் கெடாதோ; சகலப்பேறும் தொடர்பாகிய வாசனையானது, வெகுகாலத்தியானத்தின் பழக்கத்தாலன்றி மெய்விடத்தாலேயாகாது. —

௭௩. இதுவுமது.

புறம்பிலுள்ள வாசனையை விடுதலும்

¶ இ-ம். ஞானத்ரயசாத்தி துண்மையை யறிவித்ததாம்.

குச்சமானமாம்; பிராணபந்தனமென்று திரமானஞா னவான்கள்சொல்லுவார்கள்: திடமாக அந்த வெத்தனமுஞ் செய்யத்தக்கதாம். வாசனையைவிட்டால் மனமும் மில்லாமையையடையும்; பிராணபந்தனஞ் செய்தாலும் மனோநாசமாம்; உனக்கெதுவிச்சையோ அதைச்செய்வாய்.—பிராணபந்தத்தின் வலிய பழக்கமும், ஆசாரியருபதேசிக்கப்பட்டயுத்திகளும், ஆசனமும், புசிப்பும், தியானமுமாகியவிவைகளினால், பிராணனடங்கும். ஸ்ரீராமா! பற்றுள்ள வியவகாரமில்லாமையும், சம்சாரபாவனையில்லாமையும், ஒருருவமின்றியருவமாய்பார்ப்பதும், இவைகளினால் வாசனாக்ஷயமாகும்.—சத்துருவான வாசனாட்சயம்வந்தால், மனமுண்டாகாது; காற்றினசைவடங்கினால் அளவற்றபுழுதியள் ஆகாயத்திலுண்டாமோ. முன்சொல்லப்பட்ட பிராணவாயுவின் சலனமெதுவோ, அதுதானே துன்பநிறைந்த மனதினசைவாகும்; அதனால் பிராணவேகத்தைத்தடுப்பது நற்குணமுள்ள வறிஞர்க்கு இயற்கையாகத் தவறாமற்செய்யத்தக்கது.—உத்தியினன்மையினாலல்லாமல் மனமானது வெல்லப்படாது; கோபங்கொண்ட மதயானையானது, அங்குசத்தினாலன்றி செயிக்கப்படுமோ. ஒன்றாகிய ஞானத்தையறிதலும், நன்மையுள்ள சத்துக்களுடன் சேருதலும், துக்கவாசனையைவிடுதலும், பிராணசலனமில்லாமலடக்குதலும்,—இந்த நான்குவகையும், மனதையடக்குகின்ற யுத்திகளாகும். குற்றமற்ற விந்தயுத்திகளுக்கு மனமடங்குதல் மேகவுருவத்தில் பூமியிலடங்கிய புழுதிப்போலாகும். சொல்லப்பட்ட யுத்திகளையல்லாமல், மனதை யடமாய்க்கெடுப்பவர்கள், விளக்கை விடுத்து இருளை யிருளினாற்கெடுப்பவர்களுக் கிணையாம்.

பலத்தினால்வேகமாய்முன்சொன்னயுத்திகளையல்லாமல் மனதைச்செயிப்பவர்கள், கெர்ச்சிக்கின்றமதயானையை தாமரைத்தண்டிலிருக்கின்ற வொருநூலினால் கட்டுவர்களாவர்; இளைக்கின்ற அந்த மூடர்களுடையமனது பயத்தோடும் துன்பத்தையடைந்து மிகவுஞ்சிறுமையாய் வருந்துமென்று, பட்டணத்தில்வந்துபயந்தமானைப்போல ஒன்றையு நம்பமாட்டாது ¶-தவசும், யாகமும், தீர்த்தங்களும், தேவதரிசனங்களும், ஆராதனைகளும், தானங்களுமுதலிய பயனில்லாத மயக்கத்தினால், வெகுகாலம் மிருகங்களைப்போல வீண

௫௪. பிராணபந்தனத்துக்கும் வாசனாக்ஷயத்துக்குஞ் சாதனமுரைத்தல்.

௫௫. மனத்தினசைவே பிராணனுதலாலதைத்தடுக்கின் மனமிற்குமெனல்.

௫௬. மனதையடக்குதற்கு இந்நான்கு யுத்திசொல்லுதல்.

௫௭. இந்நான்குயுத்தியையன்றி மனதையடக்கக்கூடாதெனல்.

௫௮. இவ்வுபாயங்களையன்றிமனதையடக்கின் வருந்துமெனல்.

௫௯. சற்கருமத்தையுநீக்கி ஞானதிருஷ்டியால்

¶ இ-ம். இந்நான்குயுத்தியி னொன்றினாலாவது மனதையடக்கி னடங்கும் இஃதில்லாவிடி னடங்காதென்பதாம்.

இச்சாத் தியாகஞ்செய்ய வேண்டுமெனல்.

ர்கள்வாழ்வார்கள். சுகத்தைக்கொடுக்கின்ற இவைகளைவிடுத்து பரிசுத்தமான பிரமஞானத்தை இரண்டில்லாமற்பிடித்து, சகலவிச்சைகளையுங்கெடுத்திருப்பாய்.—

சு0. திருக்குதிருஷ்டியில் மனதைநீக்கிச் சித்தை யடைய வேண்டுமெனல்.

பார்க்கின்ற விடயமற்று நன்றாகி முதன்மையாக சங்கற்பிக்கு நினைவின்றி ஞானபதமாகிய ஒன்றைப்பார்த்து, ஸ்ரீராமா? பந்தத்தையுடைய வெண்ணமில்லாமல் இதயத்திற்பொருந்துவாய். தொழிலைப்பொருந்தினாலும், இலாபங்கருதி அகர்த்தாவாகிய பிரமபதத்தை சமமாகிய செல்வம் ப்ரகாசிக்க அடையக்கடவாய்.¶—

சுக. மனதை விசாரத்தினாலடக்கலாமெனல்.

தன்னுடையமனதை ஏககாலத்தில் விசாரணையினால் கெடுப்பித்த களங்கமில்லாதவன், சுகத்தின் பலனையடைந்தவன். அற்பமானாலும் மனதில்வினவாநின்ற விசாரணையின் வலியை விடாமல் பழகாநின்ற தியானத்தினால் பருமனாய் நாவிதமாகிய ஆயிரம் பணைகளோடும் அநேகமாகும்.—

சுஉ. விசார முக்கியமாய்வேண்டுமெனல்.

தகுந்த விசாரணையென்கின்ற புட்பித்தவிருட்சமானது, பூபீடத்தில் ஒருவேருள்ளதாய் சிந்தையென்னுஞ் சுழற்காற்றானது, அசைப்பதற்கரியதாய் துவளலில்லாத மிகவுந் திரமுள்ளதாம். நிற்பதும், போவதும், விழிப்பதும், உறங்குவதும், இவைகளை யுள்ளவர்கள் மனத்திற்பொருந்திய விசாரணையில்லாதவர்களாயின், நசித்தவர்களாவரென்று சத்துக்கள்சொல்லுவார்கள்.—

சுங. சாதுசங்கத்தோடும் விசாரஞ் செய்ய வேண்டுமெனல்.

நசியாத ஞானதிருஷ்டியினால் நீயேயாவது, மகான்களுடனேயாவது, இடைவிடாமல் இச்சகமியாது நாமாரென்று திடமாக மிருதுவாக விசாரணைசெய்வாய். தடைப்படாமல் உண்மைப்பொருளைத்தேடாநின்ற அந்தியாத்துமவித்தைக்கு விசாரணையே தனிமையாகிய ஞானமாம்; வினாவி யறியத்தக்கவஸ்து, பாலினிரசத்தைப்போல அந்த விசாரணையிற் காணப்படும்.‡—

சுச. அனுபவியினிலக்கணங் கூறல்.

சுகபோதசமத்துவ திருஷ்டியை யுடையவன், தேடாநின்றவஸ்துவுக்கு சமத்துவத்தை முக்கியமாகத் தரித்தவன் ஈனமடையான், மனதிற்பயப்படான், ஒன்றுக்கும் வசமாகான்; உச்சிட்டமானாலும், அபத்தியமானாலும், விஷஞ்சேர்ந்ததானாலும், நொந்ததானாலும், கெட்டுப்போனதானாலும், அன்னமானது கற்கண்டைப்போல அவன்புசித்தால், மந்தமில்லாததாய்

சுரு தேகாபி

கணத்திற் சீரணமடையும். — விஷமானாலும், ப்ரதி

¶ இ-ம். இச்சையைநீக்கி யாத்மஞானத்தான் மனோரூபமாகிய திரிஸ்யத்தைக் கெடுக்கவேண்டு மென்பதாம்,

‡ இ-ம். ஆத்மானாத்ம விசாரத்தால் அனாத்மாவாகிய மனதுநீங்கி யாத்மஞான முதிக்குமென்பதாம்,

மானசீஸ்தினைதைக்கூறல். விஷமானாலும், சிறந்தபாலானாலுங் கரும்பினிரச மா
னாலும், சாதமானாலும், பொசிக்கில், மனமானதுபற்
றாமல் உண்மையையுணர்ந்தவர்கள் சமத்துவத்தை
யடைவார்கள். சிரசையரிந்தவர்களையும், சிரசைக் கா
த்தவர்களையும், பகைவரென்று நட்பென்றார்கள்; இ
டஞானமுள்ள வொப்பற்ற பார்வையினால் அகமகி
௬௬. இதுவுமது. ழ்ந்து சமமாய்ப் பார்ப்பார்கள். — சடமான
பொறிகளை மோகத்தையுடைய திரிஸ்யத்தில் செ
ல்லாமற்படிக்கு சத்துக்கள் மனத்துன்பமில்லா
து அறிவினாற்றடுப்பார்கள். நாசமில்லாத தத்து
வத்தையறிந்து மெலிவில்லாமல் ஞானஸ்வரூபமா
கிய தன்னை அறியாதமூடர்களை, இந்திரியங்கள்
நிலத்திலுள்ள சிறியதுளிரை மான் கூட்டத்தைப்
௬௭. சம்சாரநீக்கமறிவிக்கு நிமித்தஞ்சங்கத்தியாகங்கூறல். போல நசிக்கும்படி தின்னும். ‡ — சங்ககாரண
மாக விடயவஸ்துக்களுண்டாகும்; சங்க காரண
மாக ஆபத்துண்டாகும்; சங்ககாரணமாக இச்சை
யுண்டாகும்; சங்ககாரணமாக சம்சாரமுண்டா
கும். சங்கத்தைக்கெடுத்தலே மோக்ஷமென்று சொ
ல்லுவார்கள்: சங்கத்தைக்கெடுத்தலே சநநத்தைக்கெ
டுத்தல். விடயங்களின் சங்கத்தைக்கெடுத்து தனிமை
யான ஜீவன்முத்தியை, ஸ்ரீராமா? நீபெறக்கடவாய்.-

௬௮. விடயசங்கத்தை நீக்குதற்பொருட்டு அதனிலக்கணமுரைத்தல். என்றுசொல்லிய வசிட்டமுனியை, சகல சந்தேக
மென்கின்றபனிக்கு சரற்காலத்தின் கடுங்காற்றுக் கி
ணையானவரே? இந்தச் சங்கமென்பதியாது சொல்
லுமென்றுகேட்க, வெற்றியையுடைய முனிசொல்லு
வார். பிருந்த பலவஸ்துக்களின் பாவத்திலுமபாவ
த்திலும் பொருந்தாநின்ற விருப்புவெறுப்பை யடை
௬௯. மனவாசனையே விடயசங்கமெனல். தலாகிய அசுத்தவாதனையாம். — சொல்லுமசுத்தவா
தனையே சங்கமென்பதாம். ஜீவன்முத்தி யுண்டாகி
ன்ற சரீரிக்கு மறுசநநமில்லாமல் சுகதுக்கங்களைக்கெ
டுத்த சுத்தவாசனையானது பொருந்தும். ஜீவன்முத்த
ரல்லாது திரமான அஞ்ஞானமுடையவர்கள் அ
சுத்தவாசனையினது நாமமேசங்கமாம். — சந்தோ
௭௰. அச்சங்கநீக்கு முபாயமுரைத்தல். டமும், பொறுமையும், துன்பமும், ஆகிய வினைகள்
வருத்தாமல் நிற்பாயாயின், விரிந்திருக்கின்ற விச்சை
யும் அச்சமும் குரோதமில்லாதவனாய் நீயே சங்கத்
தைவிட்டவனாம். விடமாகிய துக்கத்தினால் மெலியா
மல் கூடினவின்பத்தாற்களிக்காமல் பந்தப்படுத்து
கின்ற இச்சைவசத்திற்செல்லாமல் இருப்பாயாயின்,
௭௧. இதுவுமது. நீயே சங்கத்தைப்போக்கினவன். — சுகதுக்கங்களா
கிய விரண்டிலும் நீ சமத்துவனாகி வந்ததையனுசரி

‡ இ-ம், அநுபவி தேகவிந்திரியங்களை யடக்குந்திற முரைத்ததாம்.

த்தால், நீ யாசையின்பெருக்கமாகிய சங்கத்தை விட்டவன். எப்பொழுதும் இரண்டவஸ்துக்களில் சமத்துவமாக பிரதிவிம்பமான விருதயத்தில் சாந்நுவிதருணத்தையுடையனாய் வராநின்ற காரியங்களைச் செய்து இவ்விடத்திலுள்ள திரிஸ்ய சங்கத்தியாகஞ் செய்து, இராகுநந்த ? பிரமாநந்தத்தை யடைவாயென்று வசிட்டமுனிசொன்னார். *—

உபசாந்திப்பிரகரணமுற்றிற்று.

புசண்டன்கதை.

அவதாரிகை.

முற் பிரகரணத்தில் சம்சார முதற் சத்தாசாமானிய முடிவின் மேலான துரியாதீதபரியந்தம் தெரிவிப்பித்து, இதிற் கற்பனையாகத் தோற்றின மனோசகத்தின் உபசாந்தத்தைச்சொல்லி, இத்துரியாதீதமே சாக்ஷாத்காரமாகவிளங்குவதை யபரோக்ஷமாயறிவிக்கு நிமித்தம் பதினேந்து கதைகளிலுஞ் சிறந்த நிருவாணப்பிரகரணஞ் சொல்லத் தொடங்கிக் காலாதீதமான ஞானத்தையும், அதுகாரணமாகச் செய்யும் யோகத்தின் விசித்திரத்தையும் தெரிவிக்கப் புசண்டன்கதையை நிரூபிக்கிறார்.

௧. யாதினாற்றிருக்கிருஷ்டியுண்டாய்த் திரிஸ்யசேர்க்குமெனின்.

திரும்பவும் வசிட்டமுனி சொல்லுவார். திக்குகளுங் காலங்களுமில்லாததால் மறைப்பில்லாமற் பிரகாசித்து, எல்லாமுமாகியும்; ஆதியந்தமின்றி ஏகமாகியும், சின்மாத்திரமாயிருக்கின்ற நிலையான பிரமமேயானது, மற்றொருவஸ்துவுமில்லையென்று அகத்திற்சிந்தித்து, காணுகின்றவிடயங்களை நானென்னு மகம்பாவத்தைநீக்கி, தேகப்பிரிவில்லாத சிவன்முத்தனாய், —

௨. இதுவுமது.

அத்துவிதஸ்வரூபமாய் உபசாந்தமாகிய மௌனத்தையடைந்து, உனதாத்மஞானத்தில் அளவிறந்த ஆநந்தத்தையடைக்கடவாய். தொடரா நின்ற வஞ்ஞான நினைப்பு எதுவரைமாத்திரம் இருக்கின்றதோ அதுபரியந்தம் பிரமபாவனையைப் பொருந்தாது; சகச்சாலத்தில் போகப்பிரமை பொந்தமாயிருக்கின்றதோ, அவ்வளவும் மனமுதலியவற்றின் கற்பனைபொருந்தும். —

௩. இதுவுமது.

சித்தமு மாயையு மனமுந்

* இ-ம். திரிஸ்யமுதற் சம்சாரபரியந்தமான விடயசங்கத்தை நீக்கிச் சமதிருஷ்டியாற் பிரமாநந்தத்தை யடையவேண்டு மென்பதாம்.

சீவனுமாகிய விவைகள் ஒன்றாயினுமில்லை ; ப்ரகாசிக்கின்ற பிரமமானது சமத்துவமானவேகமாய் பெருங்கடல்போல் உத்தமனான ஸ்ரீராமா? பொங்கிவளர்ந்துகொண்டிருக்கும். எதுபரியந்தம் நவத்துவாரமுள்ளசரீரத்தை நானென்பது எதுவரையும் காண்கின்ற இந்தத்திரியங்களில் பொருளென்கின்ற பாவனையிருக்கின்றதோ, அதுவரையும் சித்தமுதலான

ச. யாதினாற்றிருக்குதிருஷ்டியுண்டாய்த் திரிஸ்யநீங்குமெனின்

வைகளின் மயக்கமுள்ளதாம் — இதுவெனதென்கின்ற ஆசையெவ்வளவோ அந்தமட்டும் சித்தமுதலானமயக்கமாம். மாசற்ற வகமுகமாகிய வதனால் மூன்றுலகமென்கின்ற பனுவில்லாத திரணத்தை ஞானக்கினியில் ஆகுதிசெய்தால், மேகவண்ணனே? சித்தமுதலானபிரமைகள் அவனிடத்தெப்போதும் வர

ரு. அவ்வனுபவிக்கடையாளம் யாதெனின்,

மாட்டாது ; ✻ — ஞானஸ்வரூபமாய் அகண்டனாய் அந்தவரம்பும் இந்தவரம்பும் பற்றுதவனாய் இடத்தைப்பொருந்தி புனதுவியாபகஸ்வரூபத்தைச் சிந்திசங்கற்பத்தை யடையாது கடனுக வுயிரைக் கொலைசெய்கின்ற சத்துருவை, மனதில் வஞ்சகமில்லாததினேகத்தில் உறவானவனேயென்று பார்ப்பவனே பரி

சு. ஆயினுறவுகூடுமோ வெனில்.

சுத்தமாக ஆத்மாவைத்தரிசித்தவன். § — கரையிலிருக்கின்றவிருட்சத்தை வேரோடும் தள்ளுகின்ற ஆற்றைப்போல, விடயவிச்சையும் நன்மையில்லாதமாச்சரியத்தையும் கெடுத்தவர்கள் மகிழ்ச்சியினாலும், அழுக்காறுகளினாலும் குற்றத்தை கெடுத்தவராகும், ஒப்பற்ற தத்துவஞானசாஸ்திரங்களை யுள்ளேபாவனைசெய்து ஆராய்ந்தறிபவர்கள் ஆசையைக்கெடுத்தல், உதயமானசூரியன் இருளைக்கெடுத்தலுங் கொப்

எ. இச்சாசஞ்சலநீக்குவதெங்ஙனமெனில்.

பாம். ‡ — பிடிக்கத்தகுந்தவாக்கியார்த்தத்தை தன்மனதினால் பாவனைசெய்தவர்களுக்கு சொல்லுகின்ற வாக்கியசமூகங்கள் வெந்தபூமியின் சலத்தைப்போல மனதிலடங்கும், அப்பியாசித்து பிரமவஸ்துவை தரிசியாதவர்கள் கண்ணுகியஞானத்தை தரிசியாதவர்கள், யாவருமனேவிருத்தியிலுலர்ந்த துரும்புபோல வீணுகச்சுழலுவார்கள். † — இப்படிப்பட்ட சகல

அ. யாவரும்வன்விசாரணை செய்யவில்லையெனில்

ரும் இந்தஞானம் கெடாமலிருக்க இதையறியக்கருத்தில்லாமல் ரிகழும்வாடினார்கள் ; வீணர்களுடைய

✻ இ-ம். ஒன்றினாலும் மறைவுபடாமற் சுயமாய் ப்ரகாசிக்கின்ற ஞானமே பிரமமென்னுஞ் சுபாவ திருஷ்டியினாற் சுகிக்கிற், பிரமம் ப்ரத்யக்ஷமாயஞ்ஞானமுதலிய கற்பனைகள்யாவுங் கெடுமென்பதாம்.

§ இ-ம். பகையையுறவாகக் காண்பதே குறியென்பதாம்.

‡ இ-ம். பகையையுமுறவையுங்கெடுக்கி விச்சாத்யாகம் வருமென்பதாம்.

† இ-ம். மகாவாக்கியார்த்தங்களைக் குருமுகமாய் விசாரிக்கின் ஞானமுதித்து மனேசஞ்சலநீங்கு மென்பதாம்

மைமையும் அதட்டுதலும் யுத்தகளத்தில் வில்லின் நாணோசையைப்போல மூடர்களிடத்தில் செவிடர்க்குக் கேட்கின்றது; அம்மூடர்கள் வீணுக காலத்தைக் கழிப்பதேயன்றி மெய்ஞ்ஞானத்தையுணரார்கள். §

௯. ஆசிரியர் அறியாமையை நீக்கலாமோ வெனின்.

அப்படியான மூடர்களுக்கு கொடுத்தவாக்கியார்த்தம் சேற்றில்விழுந்த வஸ்துவுக்குச் சமானமாகும்; இளமையையுடைய அவர்களுக்கு சொல்லிய வாக்கியம் ஆகாயத்தைப்பார்த்து நாய்குரைத்தலாம்; பொருந்தியவஞ்ஞானம் ஆபத்திற்காதாரமாம்; உண்மையையறியாதவர்களுக்கு எத்தொடத்தும் வரமாட்டாது; இந்தமாயையானது அறிவில்லாதவர்களுக்குத் துன்பத்தினால் உண்டாகுவதாம். ¶

௧௦. விவேகாவிவேகவிலக்கணம் யாதெனில்.

—சமமானது ஞானிகளறிவுக்கு அற்பமானதாய் பசுவின் குளம்படியாகவாம்; அஞ்ஞானிகளுக்கு துன்பமாய் கரைகாணுத வாழமாம். அளவில்லாததாயும், விடயங்களினால் எண்ணுதற்கரிதாயும், உபசாந்தமாயும், சகலமுமாயும் நினைவுதோற்றுததாயுமிருக்கின்ற சச்சிதானந்த ஸ்வரூபமேயுண்டாயிருக்கும். ‡

௧௧. இச்சகத் துண்டாகும்விதமியாதெனில்.

— சாக்ஷியான அச்சச்சிதானந்தத்திலிருந்து ஞானிவானதுதானே விகாரவடிவமாய் உண்டாகி, சூக்ஷமமென்றும், நடுவென்றும், தூலமென்றும், மூன்றுவிதமாயுண்டாக்க, சத்துவமென்றும், இராசதமென்றும், தாமதமென்றும், மூன்றுகுணமாகும். அநேகசீவர்களுக்கும், இம்மூன்றுவிதமானவவித்தையானது இதுதானே சகத்தைக் கொடுக்கும்.

௧௨. இதுவுமது.

— இந்த அவித்தையினுசேமிராமபத்ரமாகும், அவித்தையினது குணரூபமேயாம். இப்படியிய மூன்றுகுணமும், ஒவ்வொன்று மும்மூன்றாகி ஒன்பதுபாகமாகும். இந்தவவித்தையில் சாத்துவிகத்தின்பங்கு, விருஷிகளும், முனிவர்களும், சித்தர்களும், நாகர்களும், வித்தியாதரர்களும், தேவர்கள் முதலிய தன்மையான சீவர்களாம்.

௧௩. இதுவுமது.

— முன்சொல்லப்பட்ட இந்தச் சாத்விகத்தின்பங்கில் தாமதத்தின்பங்கு வித்தியாதரரு நாகர்களுமாம். இராசதத்தின் பங்கு, உண்டான முனிவருஞ் சித்தர்க ளென்பவருமாம். சுத்தமற்றசாத்துவிகத்தின் பங்குதேவரானசிவன்முதலானவர்களும் இதுவவித்தையின் பங்கிலிடத்தில் வித்தையின் தன்மையடைந்தவராம்.

௧௪. இதுவுமது.

— சுத்தமற்ற சாத்துவிதகுணமான அவ் வித்தையின்பங்கு,

---

§ இ-ம். அறிவு பாத்யகூடமாயிருந்து மறியாமையால் விசாரிக்கவில்லை யென்பதாம்.

¶ இ-ம். விவேகமின்மையாற் போதித்தும் பயன்படா வென்பதாம்.

‡ இ-ம். இச்சக அவிவேகிக்கண்டமாயும்விவேகிகளுக் கற்பமாயுஞ் சச்சிதானந்தமாயும் விளங்குமென்பதாம்.

வித்தையென்று சொல்லப்பட்டதுவாம். இராசத குணமும் பிரிந்த தாமதகுணமும் மூன்று மூன்றாக சிருஷ்டியை உடையதென்றுசொல்லுவார்கள். மிகுந்த தாமதத்தையுடைய புத்தியை யுடையவர்களுக்கு இழிவான விருக்ஷமுதலிய நிறைந்த வஞ்ஞான சரீரத்தைப்பெறும் : ¶ —என்று வசிட்டமுனிசொல்ல

கரு. அறிவு தருவா யஞ்ஞான மிகுந்த தெங்ஙனமெனி னதற் குத்தரங் கூறல்.

அறிவும், விருக்ஷமுதலாகிய சரீரத்தைப்பொருந்தி அறிவு அஞ்ஞான மிகுந்திருப்பது எப்படியென்று ஸ்ரீராமர்கேட்க, வசிட்டமுனிசொல்லுவார். மனமயில்லாததுமிறந்து மனமுமிறந்து சத்தசத்தென்னும் மத்திய கதமென்கின்ற மூர்க்கவடிவத்தை இந்தவறிவு பொருந்தியிருக்கும். — முன்சொல்லிய ஞானமானது, விருக்ஷத்தில் நித்திரைசெய்கின்ற புரியட்டகசரீரமுள்ளதாக, துன்பமில்லாமல் ஊமையன் குருடனென்று சொல்லுவதாய் சடத்தைப்போலாகி, நினைக்கின்ற சத்தாமாத்திரத்தினால் இருக்குமென்று சொல்லிய வசிட்டமுனியை திரும்பவும் இராமர், அன்புடன் விரும்பிக்கேட்பார்.

கசு. இதுவுமது.

‡—சத்தையினாற்று

கஎ. சந்தி லறிவடங்கித் தாபரமாயிருத்தலின் அதுவே சீவன்முத்த னமெனி லதற்குத்தரங் கூறல்.

மையாய் ஞானமானது, தாபரங்களில்நின்றால் இதை மோக்ஷமென்று நினைக்கின்றேனென் றிராமன்சொல்லவசிட்டமுனியானவர் சொல்லுவார். அறிவினால் இந்தச்சகத்தைவிசாரணைசெய்து நித்தியவஸ்துவினது தரிசனத்தில் சத்தாசாமானியத்தை அறிதலைய டைதல் மேலானமோக்ஷமாம்.

கஅ. இதுவுமது.

—திரளான வாசனைகள் முழுதையும் குறிப்பாகவறிந்து நீக்கி சத்தாசாமானியஸ்வரூபமானால், அதுவே தனித்தமோக்ஷமென்றுசொல்லுவார்கள். ஆசாரியருடன் ஆராய்ந்தும்ஞானநூலையறிந்தும், ஆத்மஞான மொன்றைமாத்திரந்தெரிந்து அதனால் சத்தாசாமானியமேதானாகும், அப்படியானதுவே மோக்ஷமாம். §—வித்துக்குள்ளடங்கிய முளைபோல் வாசனைகளானவை அகத்தில் நித்திரையைப் பொருந்தும் மந்தமாம் ; அதுவே சுழுத்தி

கசு. இவ்வறிவு வாசனையோடு மடங்கி னிற்றலிற் பல முண்டா

யவத்தையுமாம் ; அநேக சனனங்களைத்தரும். குற்ற

¶ இ-ம். சைதன்யத்திலோர் ஸ்புரணமுண்டாக வப்போதறிவறியாமை கட்டியதின் மூன்றுகுணமுண்டா யதின்வித்தையின் சத்தசத்துவத்தின் சிவன்முதலிய வீவ்வரர்களும், அவித்தையின் சத்துவத்தி லிருடிமுதலியசீவர்களும், அதனிராசசத்தின் முனிவர்முதலியோரும் அதன்றாமதத்தில் நாகர்முதலியோரும் இராசசதாமசமாதிற் றத்துவங்களும் தாமதத்திற் றாமதந் தாபரவுடல்களுமா யுண்டாமென்பதாம்.

‡ இ-ம். அறிவு தன்னையறியாமையா லஞ்ஞானமயமா யதற்கடுத்த விருக்ஷவடிவம் பெற்றுச் சத்திலிருந்த தென்பதாம்.

§ இ-ம். வாசனைநீங்கிச் சுருதிகுரு சுவானுபவத்தினு லாத்மஞானத்தை யறிந் ததுசத்தி லயிக்கியமாய் விளங்குமாயின் அதுவே முத்தியென்பதாம்.

மெனல்.

ந்தசெய்கின்ற சிந்தனையான துன்னேபிறந்து குமிந்த வாசனைகள் நித்திரையான சுழுத்தியவத்தையில் சடமாயடங்குங்காரணத்தினுல், கொடிய சமுசாரதுன்பத்தைக்கொடுக்கும்.— விருக்ஷங்கள்முதலிய விலைவகளியாவும் சடத்தன்மையுள்ளதாம்; சுழுத்தியை யடைந்தும் மேலும்மேலும் செனித்தற்குரியதாகும்; வித்துகளிற்புட்படும், மண்ணுக்குட்படும் பொருந்துவதைப்போல அவ்விடத் தவைகளில் சுழுத்தியில்லாதவாசனைகள் பொருந்திய விருக்ஷங்களிடத்தி லிருக்கும்.—விசாலம்பொருந்திய வாசனையின் விதையாகிய அச்சுழுத்தியானது மோக்ஷத்தைக் கொடாது; சொல்லாநின்ற விதையல்லாத சுத்தவாசனையே துரியமாகும்; கெடாத மோக்ஷத்தைக் கொடுக்கும், பகையான வசுத்தவாசனையும், தீயும், கடனும், வியாதியும், விடமும், சத்துருவும், கோபமும், அன்புமாகிய இவைகளை யிகழவேண்டியதில்லை; கொஞ்சமாறுலும் மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கும். * —

உ0. இவ்வழி வுவாசனையோடு மடங்கி னிற்றலி ற் பல முண்டா மெனல்.

உ௧. இதுவுமது.

அசுத்தவாசனையின் வித்தாகிய வஞ்ஞானத்தை யெரித்து சத்தாசாமானியவடிவத்தை யடைந்தானவர்களுக்கு, சரீரமிருந்தும் நீங்கியும் பின்பு துன்பநெருங்காது. அடையாநின்ற சித்தத்தியானது வாசனுருபமும் அதன்வித்தாகிய வஞ்ஞான வுருவமுமாம்; நித்திரையே அச்சித்தத்தின் பெயராகும். முடிவில்லாத ஞானத்தைத்தரியாததே கலைஞானத்தில் வல்லமையையுடைய சத்துக்கள், அவித்தையென்று சொல்லுவார்கள். — அவித்தையினது, முதலிலுள்ள சத்துவப்பத்தினுல் அடுத்தவிராசசதாமசமென்னுமிரண்டையும், ஒப்பற்றஞானத்தினுல் ஒழிந்து போமளவுமெரித்து சத்துசவமில்லாமல் சாமானாய்; உயர்வுள்ளபிரமமானது, இச்சகமல்லவென்கின்ற நிச்சயமே நீண்ட வவித்தையாம்; மறிழ்ந்த பிரமமே இச்சகத்தென்னு நிச்சயமே அவித்தையொழிந்த வீடாம். ‡—சிவன்முதலாகியதேவர்களுக்கும், நாரதர்முதலியவிருடிகளுக்குமேலாகியமிகமேலான தில் பொருந்தாநின்ற நிச்சயமானது, குறைந்தாய்? உனக்கும்பொருந்தக்கடவதென்றுறுள,சங்கார்முதலாகியவர்கள் துன்பத்தைப்பொருந்தாதிலையென்னசொல்லுவாயென்றுஸ்ரீராமன்கேட்க, வசிட்ட—

உ௨. சுயஞ்சி த்தாய் விளங்கி யவழிவது தரி சிக்க வேண்டு மெனல்.

உ௩. அவித் தையைக் கெடுக் குமுபாய முரை த்தல்.

உ௪. விருக்ஷத்தின் சு ழுத்தியவவத்தைநீக் கச்சிவன் முதலியோர் ஸ்வாது பவத்தைத்தரி சிப்பித்து அருண்மயமா க்கத்தொடங்கல்.

* ஓடு. அறிவானது முளைப்புள்ள விடயவாசனைகளோடு சுழுத்தியி லடங்கி நின்றுங்கெ லிப்படிப்பவையாதலா லச்சுழுத்தியி லடங்கியிருக்கும் அசுத்தவாசனையை நீக்கித் துரியமாகவிளக்கிடின் முத்தியேயாமன்றி யின்றிகாவென்பதாம்.

‡ இஃம். வாசனையைக் கெடுத்தச் சர்வ பிரமமயமென்னு மநுபவத்தினு லஞ்ஞானங் கெடுமென்பதாம்.

௨௫. அவர்கணிச்சயஞ் சர்வம் பிரம மயமாயிருத்தல்.

முனிசொல்லுவார்.—அற்பமாகியும் விஸ்தாரமாகியும் உலகத்தின் கூட்டமாகி உண்டான விச்சகலமும் களங்கமற்றபிரமமாம் ; ஞானமும்பிரமமே ; உலகமும்பிரமமாம் ; ஐந்துபூதமும்பிரமமாம் ; யாமும்பிரமமாம் ; நமதுசத்துருபிரமமாம் ; சினேகிதரும், சுற்றத்தாரும், பிரமமாமென்பது சங்கரர் முதலானவர்கள் சித்தாந்தம்.—

௨௬. மற்றுள்ளவறிஞர் களுக்குஞ் சகத்துபிரமாநந்தமாய் விளக்குமெனல்.

சகமானது, குருடர்க்கு மிகுந்தவிருளாகவும், கண்ணுள்ளவர்களுக்கு ப்ரகாசமாகவு மிருப்பதுபோல, ஞானிகளுக்கு, ஆநந்தஸ்வரூபமாகவும், அஞ்ஞானிகளுக்கு துன்பரூபமாகவுமிருக்கும் ; சகலமும் பிறிவில்லாத பிரமமென்றுசிந்திக்கில், அவனே பிரமஸ்வரூபமாவன் ; நல்ல வமுதத்தைப் புசித்தவன், அமுதஸ்வரூபத்தை அடைகிறான்.—

௨௭. யாவருக்குஞ் சுயஞ் சித்தே பிரம மென்பதனுபவமாமெனல்.

சுயம்ப்ரகாசமட்டுமே நின்மலமாம் ; யாவருக்கும் அறிவானது, எவ்விடத்திலு முண்டாயிருக்கின்றது, நீங்காத வுபசாந்தஞானம், பிரமமென்கின்றது ப்ரத்யக்ஷயமாகும் ; வழியிற்செல்லுகின்ற தெரியாத ஒரு புருடனை மனதில்லாமற் பார்க்கில், அவ்விடத்தி லெந்தத்தெரிவு நிறைந்திருக்கின்றதோ அதுவே எவ்விடத்திலுமுள்ளதான ஞானமானபிரமமாம் ; அதுயாமாகின்றோம்.—

௨௮. பிரமத்தை வணங்குதல்.

சங்கற்பமனைத்திற்கும் பயனைக்கொடுப்பதாய் எல்லா ப்ரகாசத்துக்கும் ப்ரகாசமாய் எல்லாக்குணங்களு நீங்கி யிருக்கின்ற தனிமையாகிய ஞானாத்மாவை துதிப்பாம். எல்லாச் சங்கற்பங்களு நீங்கி எல்லாச்சுகங்களுநீங்கி எல்லாவாரம்பங்களு நீங்கியிருக்கின்ற தனிமையான ஞானாத்மாவை வணங்குவாம்.—

௨௯. பிரம ஞானியி னநுபவத்தைச் சொல்லுதல்.

இப்படி நிச்சயத்தையுடையவராய் சகலவெண்ணங்களு மில்லாமல் நினைக்கின்றவுண்மையையுடையவர்களாய், அவர்கள்முழுதுஞ் சத்தியமும், சாந்தமும், சமத்துவமுமென்கின்ற நிறைந்த பிரமபதத்தில் ஆநந்தித்திருப்பார்கள். சமத்துவமான நிராசையைத்தொடாநின்ற மனமுடையவர்கள்நிலைபெற்ற ஞானமானது, பூரணமாயிருக்கின்ற தீரரானவர்கள், வாழ்விலுஞ்சாவிலும்விரும்பிவாடார்கள் : † —என்

௩௦. ஞான யோகத்தின் முக்கியமாயிருந்த சீவன்முத்தரது இலக்கணஞ்சொல்லத்தொடங்கல்.

றுசொல்லவும், மெய்ஞ்ஞானலீலையிலுலாவது, நின்றபிரான பந்தனத்திலுமேலாவது, விளங்காநின்ற வசுத்த வாசனையைவிட்டு துன்பநீங்கி மேலான சீவன்முத்தர்கள் இருந்ததைச் சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமன்வினவ, வேதமுனிசொல்லுவார்.—

௩௧. யோகத்துக்குரியது பிராணாயாமமெனல்.

உருரும்பவத்துன்பத்தைக் கெடுக்க யோகமாமுடைய தாகிய யுத்தியான திரண்டுவிதமாகும். மெய்ஞ்ஞான

† இ-ம், சர்வமும் பிரமாநந்தமாய் விளங்குதென்பதை மகான்களநுபவத்தோடும் ப்ரசன்னமாய் விளக்கிவித்ததாம்.

மொன்று, பிராணபந்தனமொன்று, இவ்விரண்டும் யோகநாமத்தைப் பொருந்துமென்றாலும், பிராணபந்தனத்துக்கு யோகநாமமானது மிகவுமுசிதமாம்; இவ்விரண்டும் பரமேஸ்வரன்சொல்லியது — ஒருவனுக்குயோகமானது அரியதாகும்; ஒருவனுக்கு மெய்ஞ்ஞானமானது அரியதாகும். ஆகவிவ்விரண்டில் மெய்ஞ்ஞான முன்னமேசொன்னேன்; மேல்யோகத்தின் கிரமத்தைக் கேட்பாய். தேவாயிதற்குப் பொருத்த ஒரு சரித்திரத்தைச்சொல்லுவேன். நானொருகாலத்தில் தேவேந்திரனதுசபையில் தேவரிஷிகளுடனிருந்தேன்; — அங்கு, நாரதர்முதலிய முனிவர்களால் சிரஞ்சீவிகளின் கதைகளைக்கேட்டேன், அதைநீகேட்பாய். மேருமலையின் ஈசானதிசையில் பதுமராகப்ரகாசமுண்டாகிற கொடுமுடியிலிருக்கின்ற கற்பகவிருட்சத்தினது தென்புறக்கொம்பிற் கட்டிய பெரியகூண்டினிடத்தில் புறாவொரு பறவையிருந்ததுபோல புசண்டனென்னும் பெயரையுடைய வொருவாயசமானது வசிக்கும். — பிரமனுக்கொப்பாக இருந்த புசண்டயோகியைப்போல அநேககாலம் யோகத்திலிருந்தவர்கள், பூமியானாலும் சொர்க்கலோகத்திலும் முன்னுமின்னு மில்லையாம். அப்புசண்டனே தீர்க்காயுசையுடையது, ஆசையில்லாதது மோக்ஷசெல்வமுடையது, பெரியவை பதவியையுடையது, விஸ்ராந்தியுடையது, அன்றியும் மனதிலுள்ள முன்றுகாலத்தையும் வரையறுத்தறிந்தது — என்று தேவசபையில் யாவருங்கேட்கும்படியாக இரண்டுதரமாய் அன்று புசண்டயோகியின் ஞானத்தை நடனமையாக சாதாதபமுனி சொன்னபிரகாரம் நான்கேட்டு, போய்ப்பார்ப்போமென நினைத்து மகாமேருவின்முடியில் வாசஞ்செய்கின்ற கற்பகவிருட்சத்தில் வேறொரு கற்பகவிருட்சம்போல் இருக்கப்பார்த்தேன். — அவ்விடத்தில் மலர்மாரியுடனும், குயிலைப்போலும், அன்னமும் புட்பங்களாகிய கொடிகளோடும், இலைகளோடும், பெரும்பழங்களின் வளித்திருக்கும், சந்திரனிறத்தை யுடையவனாயிருக்கின்ற பிரமதேவனுடைய வாகனமாகிய அன்னக்கூட்டங்களினுடைய குஞ்சுகள், உயர்வானசாமவேத வாணங்களையும், மந்திரங்களையும், சமாதயாரத்தோடுபுச்சரிக்கின்றன — கோகிலங்களும், கிளிகளும், இன்னும் வெகு பக்ஷிகளும், சுப்பிரமணியர்போதித்த சிவஞானத்தை பயிற்சிசெய்கின்ற மயில்களுமாகிய அநேக பட்சிகளைப்பார்த்தேன். பெரியசரீரத்தையுடைய வாயசமூகத்தில், மலையைப்போலும்,

௩௨. முன்பு ஞானத்தினிலக்கணஞ் சொல்லிப்பின்பு யோகத்தினிலக்கணஞ் சொல்லுதல்.

௩௩. ஆப்தர்களால் யோகியின் பெருமையைக்கேட்டல்.

௩௪. இதுவுமது.

௩௫. புசண்டயோகியைக்கண்டல்.

௩௬. புசண்டயோகியினுச்சிறமைச் சிறப்புக் கூறல்.

௩௭. இதுவுமது.

உயர்ந்தவடிவமும், மிகவும் பூரணமான மனதும் மௌனமும், பிராணசலமுண்டாகாமல் அகமுகநீங் காத சுகமுள்ளதாய்,— இருந்த அந்தப்புசண்டன் முன்பு யானடைய, பரவசராய் எதிரேவந்து வசி ட்டனென்றறிந்து, சீக்கிரமாக சிறப்பாகவுந்த நல்ல வரவையுடைய முனீஸ்வரரே யென்றினிதுசொல்லி சங்கற்பத்தினு லுண்டான விசாலம்பொருந்திய கரங் களினால் புட்பத்தைவருஷித்து, — இருப்பாயென் று ஆசனத்தைக்கொடுத்து இருந்தபின்பு, இன்பத் தோடும் அருக்கியமுதலான சகலத்தையும் கொடுத் து, அன்பாயிருக்கின்ற மதுர வசனங்களைச்சொல் லி, மகாமேனி? உமதுதரிசனமென்னும் அமுதத்தின் மகாவருஷத்தினால் எனது கூட்டத்தோடும் யான் ம னமகிழ்ந்தேன்; நீர் வழிநடந்துவந்து சரீரம்வருந் தப்பட்டவர், ¶—தேவரீர் பாததரிசனத்தினால் அனே த்துமறிந்தேன், சிரஞ்சீவியாயிருக்கின்ற மாசற்றபெ ரியோர்களோடும் எனையுஞ்சேர்த்தீர்; அதைப்போ ல நீர்வந்தத்தையும் தெரிந்தேன், என்றாலும் உம துவசனமிர்தத்தைப் புசிக்க விரும்பினே னென்று சொல்ல, அதைக்கேட்டு பரிசுத்தமான நல்லமனதை யுடைய புசண்டயோகிக்கு இந்தவசனத்தைச் சொ ன்னேன்.—பக்ஷிகளுக்கிறைவனே? நீர் சொன்னப் பிர காரமே மெய், வெகுகாலமாய் மரணமில்லாத நின் னைக் காணும்பொருட்டுவந்தேன். நீ எந்தக்குலத் தில் சனனமானாய்? எப்படி தத்துவஞானத்தையடை ந்தாய்? மாட்சிமையான வனநாயுள் எவ்வளவாயிற் று? இச்சகத்தினிடையில் நீ யறிந்திருக்கின்ற தன்மை யென்ன? —சர்வஞ்ஞத்துவமுள்ள யாவனால் நீ யிந்தவிடத்திற் சேர்ந்தி ருக்கின்றாய்? கிரமமாகக் கொள்ளு ம்படி யெல்லாவற்றையும் சொல்லு மென்றுகேட்க, ஒழுக்க மிகுந்த புச ண்டர்சொல்லுவார். யாவருக்குமே லான சிவத்தினமுதானசந்நிதியில், க ஜமுகத்தையும், அஜமுகத்தையும், ஒட்டை முகத்தையும், கரடிமுகத் தையும், பூமியின்பலத்துக்கொப்பான மற்றவதனங்க ளையும் பெற்றிருக்கின்ற சிவகணங்களனேகமுண்டா ம்.—அவர்கள்சிரசிற் குளம்புள்ளவர்களும், குளம்பு ள்ளகரங்களையுடையவர்களும், வயிற்றில்முகத்தையு டையவர்களுமாகிய அளவில்லாதவர்களான அநேக கூட்டங்களோடுஞ் சூழ்ந்திருப்பார்கள். அப்பூதகண

௩௮. புசண்டயோகி பூசித்து முகமன் வசனமொழிதல்.

௩௯. இதுவுமது.

௪௦. பூசித்தபு சண்டயோகி யைக் குசலம் வினவுதல்

௪௧. இதுவுமது.

௪௨. பிரமவிச்சயங்கூறி அதன்க ண் வாழ்பவனான ஜீவன்முத்தனது யோகலீலையை யறிவிக்கு மிழித்த ம், அவரதுபிறப்பும், ஞானம்பெற் றவிடமும், நீண்டவாயுளினளவும், இதுபரியந்த நடந்தசரித்திரங்க ளும், ஏகாந்தஸ்தானம் கிடைத்தது மாகிய விஷயங்களைச் சங்கையவினா வினாதற்கு ஆசைகூர்ந்த முனி வசிட்டனைக் கூறத்தொடங்கல்.

௪௩. சத்திக ணங்களின் சிற ப்பைக்கூறல்.

¶ இ-ம், கேட்டுக்கொண்ட மரபினைக் கூறியதாம்.

ங்களைப்போல, கைலாசகிரியில் சிவன்முன்பு, பூதக ணங்களினால் வணங்கப்பெற்றவர்களாய், மலையினாச் சியும், ஆகாயமும், பூமியும், கானங்களும், சுடுகாடும், உடலும் இடமாகவிருக்கின்ற சத்திக்கூட்டங்கள் ஈசா

௪௪. அஷ்டசத்தியி னுண்றி னூர்தி கண்ட னெனல்.

னனை விருந்துசெய்வார்கள். — ஈசானனிடத்தி லுயர்ந்திருக்கின்ற சனையென்றும், விசனையென் றும், சயந்தியென்றும், அபராசிதையென்றும், நித் தையென்றும், இரத்தையென்றும், அலம்புசையெ ன்றும், உற்பலையென்றும், எட்டுமகாசத்திகளாம்; அவர்களுக்குள் சொல்லிய அலம்புசையென்னுஞ் ச த்திக்கு வாகனமாகவுடைய சண்டனென்கின்ற நா

௪௫. சத்திய லுச்சவஞ் செய் தளித்தல்.

மத்தையுடைய ஓர் வாயசம்.—அவ்விமானங்களை யுடைய அஷ்டவாயில்வரி யத்தையும்பெற்ற அச்சத் திகளனைவரும், இஷ்டமாகிய சிவனுந்தோழிக, அனைவருஞ்சேர்ந்து ஆகாசத்தினிடத்தில் குறைவி ல்லாத திருவிழாவையாரம்பித்து மதுக்களைக் குடி த்து நடனஞ்செய்தார்கள், பாடினார்கள், மகிழ்ந்தா

௪௬. அவர்வா கனங்களுங் களி த்தல்.

ர்கள், சிரித்தார்கள்.—அத்திருவிழாவானது, நடக் குங்காலத்தில் அவர்களுடைய வாகனங்களியாவும் இக்கிரமப்படி மதுக்களையுண்டு ஆகாயத்திலேறா பக் கத்தில் அமருகின்ற இப்பொன் அன்னங்கள் சண்ட

௪௭. அன்னங் களோடுங் காகம் புணர்தல்.

னென்கிற வாயசத்தோடும், — சேர்ந்துவிளையாடி களித்து அந்தவுறவிய காக்கையைக்கூடி, கருப்பத் தையடைந்து மனங்களிக்கின்ற அந்தக்காலத்தில் தேடி முயற்சித்த திருவிழாவை முடித்துக்கொ ண்டு, பரமேஸ்வரனுடைய சத்திகளும் அவர்கள்வ ணங்களும் பாடலோடு நீங்கி மனமகிழ்ச்சியுடன்

௪௮. அபிசங் கருவடைதல்.

தங்கள் தங்களிடத்துக்குப்போனார்கள். — அப்ப டிப்பட்டகாலத்தில், கருப்பமடைந்த பிராமசத்தியி ன் அன்னங்கள் சங்கற்பமற்ற தங்களிஷ்டனாகிய க ருப்பமுண்டான விருத்தாந்தத்தை உண்மையாகச்சொல்ல, மேற்பின்படி கருப்பமடைந்தீர்கள்; எனது இரதத் தையிழுக்கின்ற வல்லமையின்றாயினீர்; உங்கள் வி னைப்பின் வண்ணஞ்சென்று வசியுங்களென்று அரு

௪௯. இருபத் தொருவருடஞ்ச னித்தல்.

ளினுஞ்சொல்லி. — விருவிகற்பமாயினில் தேவியானவ ள் இருந்தாள். அன்னங்கள் கருப்பமுதிர்ச்சியாய் மாதந்தோடசங்கமாயில் காலப்படிப்படி முட்டையி ட்டு குஞ்சாகவாகின்ற சண்டனென்கின்ற காகத்தி ன்புத்திரர்களாகிய அந்தவிருபத்தொரு பேர்களும், பெறுகின்ற வன்னேகளோடும் பிரமசத்தியை வெகு

௫௦. பிரமசத்

காலம் பூசித்தோம். ¶ —பிரமசத்தியானவள், சமா

¶ இ-ம். சனித்தமாவைக் கூறியதாம்.

திபினுன் ஞானம்பெறல்.

தியிலிருந்தும் எழுந்திருந்து அன்பினால் தானேயனுக்கிரகஞ்செய்ய, வாட்டமில்லாமல் மோக்ஷத்தையடைந்தோம் ; உபசாந்தத்தினால் அகமகிழ்ச்சி யடைந்தோம். சங்கமில்லாது ஏகாந்தமாகவசிக்கும் ஸ்தானமெதுவென்று கேட்கும்பொருட்டு குணமுள்ள தந்தையை அலம்புஷையின் பக்கத்திற்போய் இருவரையுஞ்சேர்ந்து வணங்கி,

௫௧. அலம்புஷையினுலேகாந்தஸ்தானம் பெறல்.

¶ —பிரமியென்கின்ற சத்தியினது கிருபையினால் மோக்ஷத்தை அடைந்தோம் ; தனித்த நிருவாணசகத்தில் இருக்கின்ற ஸ்தானத்தைச் சொல்லுவாயென்று நாங்கள்கேட்க, பொருந்தாதஸ்தானம் இந்நல்ல கற்பகவிருக்ஷமென்றனுக்கிரகிக்க, அங்கவர்களைவணங்கி துன்பமறும்படி வந்திவ்விடத்தில் வசித்தோம்.

௫௨. மூன்றுவினவுக்குந் தாஞ்சொல்லித் துதித்தல்.

‡ —அன்றுமுதலாக யான்செய்த கருமங்களனைத்தும் உமது ஸ்வரூபமாய் இன்றுபலித்தது, மேலானஞானவான்கள் சங்கமென்கின்ற நிறைந்தநிலவானது பரிமளமுள்ளவமுதமயமாய தவிராதபிரமசுகத்தை எவருக்குங்கொடாது. இதுநல்லதென்கின்ற ஆத்மாவுக் குறுதியான தாசத்துக்களனுக்கிரகத்தைவிட வேறேயுண்டோ.—

௫௩. தம்பிமாரிறந்ததென்னவென்றிடையில் வினவுதல்.

பிரமத்தையறிந்தேனென்றாலும், உமது கடாக்ஷத்தினால் எனது பாவங்களனைத்தும் சீக்கிரமாகக் கெடுத்தபடியால் இச்சமயமே, மிகுந்தப்ரயோசனத்தையுடையது ஈஸ்வராவென்று, என்னைத் திரும்பவும் ஆராதனைசெய்தான். பின்பந்தப் புசுண்டனை உனது சகோதரர்கள், நீங்கினப்ரகாரமென்ன சொல்லென்றுகேட்டேன்.—

௫௪. தம்பிமார்தேகந்தோஜேன் கூடியிருந்தலற்பமென்றறிந்து விதேகமுத்தி யடைதல்.

இவ்விடத்தியாவரும் அனேக யுகங்களும், அநேககற்பங்களும், ஒத்துவசித்தோம் ; தொந்தமாயிருக்கின்ற எனதுதம்பிகள், தேகங்கள் துரும்பெனத்துறந்து மேலாகிய பிரமபதத்தை அறிந்தவர்களாய் மோக்ஷத்தை யடைந்தார்கள். மிகுந்தவாயுளையும், தருந்த மகிமையையும், வல்லமையையும், பெற்றிருந்தும் தங்கள் சங்கற்பத்தினால் தாங்களே மரித்தார்கள் : † —என்று புசுண்டர்சொன்னவுடன்,

௫௫. நான்காம்வினவை நான்குவிதமாக வினவுதல்

கற்பமுடிவும், அலைவீசாநின்ற பிரளயவெள்ளமும், ப்ரசண்டவாயுவும் உண்டாகுங்காலத்தும், நெருங்கி துவாதசாதித்தர் ளெரிக்கும்போதும், நீ எப்படியிறவாமலிருந்தாயென்றுகேட்க, புசுண்டர் சொல்லுகின்றார். நீண்ட சகத்தின்றொழிலானது எக்காலம் அல்லாமற்போமோ, அக்காலத்தில் யானுமிந்தக் கூட

¶ இ-ம். ஞானம்பெற்றமரபைக் கூறியதாம்.

‡ இ-ம். ஏகாந்தஸ்தானம்பெற்ற வரம்புகூறியதாம்.

† இ-ம். இடையில்வினவின வினவுக் குத்தரஞ்சொல்லியதாம்.

௫௬. மூன்று தாரணையைக் கூறல்.

டைவிடுவேன். — துவாதசாதித்தாளெல்லாரு மெரிக்கும்போதில் ஜலதாரணையினால் ஆகாயத்தை யடைவேன்; மலைகளிடிக்கும்படி காற்றடிக்கில், பருப்பதத்தாரணையினால் அசையாமல் ஆகாயத்தை யடைவேன்; புறமையானசகலமும் மகம்மேருவுடன் சமுத்திர முடிக்கொண்டால், வாயுதாரணையினால் சலமேலின்றி மிதப்பேன். — சர்வசங்காரகாலம் வந்ததானால் பிரமாண்டத்தின் முடிவையடைந்து ஆனந்தமில்லாத அத்துவைத முடிவென்கின்ற சூக்ஷும பிரமபதத்தில், சுழுத்தியென்கின்ற கலந்திருக்கின்ற வைத்தையினால் திரும்பப் பிரமதேவன் சிருஷ்டிக்குமட்டும் இருப்பேன்; பிரமதேவன், பிரமாண்டத்தைச் சிருஷ்டிக்கில் பகுதியினது பெரிதான விக்கூண்டிருப்பேன்;

௫௭. நான்காந் தாரணையைக் கூறல்.

௫௮. இந்நான்கு தாரணையினுந் தேக மழியாமலெப்போதுமிருக்கின்றதே னென்னல்.

என்னுடைய சங்கற்பத்தினால், இந்த மலையினது இக்கொடிமுடியில் பருந்த கற்பகவிருக்ஷம் கற்பங்கள்தோறும் இந்தப்பிரகாரமே யுண்டாயிருக்குமென்று புசுண்டர்சொல்ல, மாமில்லாதவனே? தாரணையினால் அனேககற்பம் நீ கெடாமலிருந்தாய்; மற்ற யோகிகளியாவரும் இறந்ததேனோ, சொல்லென்று கேட்டேன். ¶ — புசுண்டயோகி அதற்குச்சொல்லுவார், அறிவற்றபரமேசுரன் வியப்பான இதை ஆக்கப்பாரார், எனக்கிந்தப் பிரகாரமாம்; அவர்களுக்கந்தப் பிரகாரமாம், வருமென்றதுநீக்கக்கூடாததால், எது எப்படியாமென்றதோ அதனவிடத்தில் அந்தப்பிரகாரமாகுமென்று நீர்கருதும், இதுவே மெய்நிச்சயமாம் † —

௫௯. இத்தாரணைகளிருக்க மற்றயோகிகண்மறிப்பதேனெனில்.

௬௦. ஐந்தாம் வினாவை முடிப்பதற்கு வினாவு நதுங்குந் தாருஞ் சொல்லத் தொடங்கல்.

என்ற புசுண்டயோகியை, பிரமஞானத்தையும், சாஸ்திரஞானத்தையும், அடைந்த நீர் பூரணயோகத்தைத் தொடர்ந்ததனால் பழமையான நின்னாயுத்தினது அதிசயங்கள் உற்றனையனைத்தில் எதிரிட்டது யாதியாதோ, அவைகளனைத்தையும், ஒன்றும் தவிராமல் சொல்லுமென்றுகேட்க, மேலான புசுண்டயோகி சொல்லுவார். — இப்பூமி, கல்லினாலின்றி நிறைந்து மரியும், மருளும், புல்லும், கொடிகளும் இல்லாமற்றிருந்து, சொல்லால் நிறைந்த பதினோராயிரங்காலம் பஸ்பத்தினால் நிறைந்திருந்தது; மற்றொரு யுகத்தில் வசிட்டரிஷியே! மேரு சதுர்யுகம் பொருந்திய நாகங்களினால் நிறைந்திருந்தது. அப்படியிருந்ததுமன்றி, நாலுயுகம் இடமில்லாமல் மலைக்கூட்டங்களினால் நிறைந்திருந்தது. — பூமியானது, நான்குயுகம் அகஸ்தியரில்லாமல் பரந்த விந்தகிரியினால் மறைப்பட்டது. உண்டாகிய சொரூபசிருஷ்டியில், கன்னோ

௬௧. தனதாயுளிற்கண்ட அதிசயங்களைத் தெரிவித்தல்.

௬௨. இதுவுமது.

¶ இ-ம். தாரணையினியல்பைக் கூறியதாம்.
† இ-ம். பரமேஸ்வரனியதி யன்னதமா மென்பதாம்.

பிராமணர்களிச்சிக்க, சூத்திரர்கள் அதைகிலித்தார்கள் ; கற்புள்ளஸ்திரீகள் விரும்பினபடியே நடந்தார்கள். மேலாகிய வசிட்டமுனியே ? இவைகளைப்பார்த்தேன், வேறேகண்டவைகளுமுண்டு சொல்வேன்.

௯௩. தன தாயுளிற்கண்ட சகச்சித்திரங்களைத் தெரிவித்தல்.

சூரியராதியானவர்களுற்பத்தியும், இந்திரோபேந்திரர்களினிலையும், இரணியாக்ஷதனால் திருடிக்கொண்டுபோன பூமியை வராகவவதாரமாய்ப் பிடுங்கி வந்ததுவும், நட்டபமாகச்செல்லுகின்ற கற்பங்கடோறும் சிதறிப்போன வேதங்களைச் சேர்த்துவைத்ததுவும், பாற்சமுத்திரத்தில் மந்தரகிரியினால் அமுதங்கடைந்தெடுத்ததும், யானறிவேன்.

௯௪. இதுவுமது.

—மகத்துவத்தினையுடைய சகத்திலுள்ள இவைகளனைத்தையும் எனக்கிளையவர்களாயினும் அறிவார்கள்; உலகத்திலவதாரமானவர்கள் உம்மை யாதியானவர்கள் தவத்தையுடையநாரதரும், பரத்துவாசரும், மரீசியும், புலத்தியரும், அத்திரியும், தேவேந்திரனும், சனக்குமாரரும், மதஞ்சொரியும் யானைமுகத்தையுடைய விநாயகரும், சுப்பிரமணியரும், பிருங்கியும், ஆதியானவர்கள் சொல்லிமுடியாதவர்கள்.

௯௫. இதுவுமது.

—அந்தப்படி இதுகாலவரையும் சிருட்டிகளினிடத்தில் பலஞ்சேர்ந்தவர்களில் ஓரளவுண்டாமோ. சத்தியவசனத்தையுடைய வசிட்டமுனியே ? உனதுபிறப்பைச்சொல்லில் இதெட்டாவதாம், இந்தவண்ணம் அந்த எட்டாஞ்சனனத்தில் இவ்விடத்திலிரண்டுபேரும் அடைந்தோம் ; உயிர்வாழ்வாவென்று அன்றுவந்ததுபோல இப்போது மென்னிடத்தில்வந்தாய்

௯௬. இதுவுமது.

—நீர் ஒருதரம் ஆகாயத்திலிருந்து பிறந்தாய் ; ஒருதரம் சலத்திலிருந்து பிறந்தாய் ; ஒருதரம் வாசமுள்ள சோலைசூழ்ந்த மலையிலிருந்தும் ; ஒருதரம் சிவந்த வக்கினியிலிருந்தும் உண்டானாய். ஐந்துசிருஷ்டியில் இந்தப்பூமி மறைந்துபோனதும், திரும்பக் கூர்மாவதாரத்தினா லெடுத்ததும், க்ஷீரசமுத்திரத்திலமுதமெடுக்க பன்னிரண்டுதரம் கடைந்தார்கள் ; இவைகளையுமறிவேன்.

௯௭. இதுவுமது.

—மூன்றுதரம் இரணியாக்ஷன் பாதாளத்தில் பலம்பொருந்திய பெரியபூமியை எடுத்துக்கொண்டு போனான் ; விஷ்ணுவானவன் இரேணுகையிடத்தில் ஆறுதரம் பரசிராமனாகப்பிறந்தான் ; திரும்பவும் நாறுகலியுகத்தில் புத்தாவதாரஞ்செய்தான் ; திரிபுராதியர்கள் ஒருதரத்தைப்போல முப்பதுதரம் ஹதமானார்கள்.

௯௮. இதுவுமது.

— தட்ச ப்ரசாபதியானவனிரண்டுதரம்யாகத்தைதபிழ்ந்தான் ; சந்திரமௌலியினால் சக்கரத்துக்கு அபசெயம் பதினாறுமுறைதாம்; ஈஸ்வரனுடன் அருச்சுனர்க்கு பன்றியினிமித்தம் உண்டான கொடியயுத்தம் எட்டுத்தரமாம், தொகுப்பான

௬௯. தன தா புரிற்கண்ட சக ச் சித்திரங்களைத் தெரிவித்தல்.

புசண்டரேதாம் அநாதியாகிய மறை, புருடர்களு டைய புத்திக்கேடாக வுண்டாயிருக்கும். — அறிவின் மார்க்கமாய் வேதமேற்பக் குளைச்சலாம்; உல கத்தின் ஜெப்பிலும், அப்படியே அறிவயங்களாம்; இ தைப்போல புராணக்கூட்டங்களும் பாடம்பலவித விதமாகி அருத்தமொன்றுரும்; புசண்டோதாம் அ மலராமாயணமென்கின்ற காலமுண்டாயினார், அதிசய த்தினுல் இவனுக்குப்பிரகத்தினுல் ஞானசாஸ்திரமான

௭௦. இதுவுமது.

து சொல்லப்படும். — ஞானராமாயணமாகிய இதை வ ல்லவான்மீகிரிஷியானவர் சொல்லியதுபோல, பின்பு ண்டான வான்மீகரும் பண்ணிரண்டுதாமுண்டாக்கினு ர்; இதற்கொப்பாக இராண்டாயிரமான பாரத மாகிய இதையுறுதல் மாட்டினையானை வியாசமுனி செ ய்ததும், அதுபோலவே மற்றவர்களுந் சொன்னு

௭௧. இதுவுமது.

ர்கள். — இராகவர்கள் கெடுப்படியாகப்பதினோராமவ தாரத்தில் ஸ்ரீராமனென்று விஷ்ணுவானவர் இந்தசி ருஷ்டிகாலத்தில் பூமியிலுண்டானவர்; வாசுதேவனு டைய விசாலமுள்ள வீட்டிடத்தில் பதினெருவதாக ம் இந்தச் சிருஷ்டிகாலத்தில் உண்டாகுவன்; சொ ல்லாகின்ற விந்தச் சபைப்பிரமையானது ஒருதரந்தோ ன்றுதலாகவும், ஒருதரந் தோன்றாததாகவும் வரு

௭௨. இதுவுமது.

ம். — உண்டாகிய இதிஸ்யமென்கின்ற இப்பிரமை யா னது, கொடாமல் எப்போதும் ஞானத்தாலினான் நிலை யாகவிருக்கும் சலத்திற்பொருந்திய திரைகளைப்போல் உண்டாகி நாசத்தையடையும். சொல்லப்பட்ட தெ ய்வத்திக்குகளும், மலைகளும், சூரியனும், சந்திரனு ம், நட்சத்திரங்களும், மகாமேருகிரிகளும், சிரு ஷ்டிகளேதாம் வேறுவேறாகவன்னமையாம். மேலான விஷ்டமுனிவே? இவைகளையும் பார்த்தேன். ¶ — நா

௭௩. காலாதீத மான ஞானத்தையறிவிக்கு மித்தன் காலமே வென்ற வதுபவத்தைவிளுவினது றிவித்தல்.

ன்குயுகங்களும், ஒருயுகத்தாற்கொருயும் ஒழுக்க ங்கேளாயின் மாறுபட்டிருக்கும்; என்று சொல்லிய புசண்டயோகியை நியம்பவு சொன்னமையால் சங்கி த்துக்கேட்டேன், தொழிலேலயின் இக்காப்பூமியிற் ச ஞ்சரித்தும் நீர் யாவைகளினை தெப்படி. என்று கே ட்க, யோகிசொல்லுவார் — மகான்களைசிலர்களை செய்

௭௪. அனந்த வாசனைகளை கெடுக்கவேண்டுமென்ல்.

யத்தெரியாதவர்களுக்கு ப்ரமோசனமியாது, உமக்கு த்தெரிக்கிருக்குதாம் இவ்விடத்தில் அடியேனைக் கோ டதை சொல்லுவான் கேட்பீர்; வாதகைனையென்னுஞ்

¶ இ-ம். மாயாவிசித்திரமே சமுத்திய யாவுமாமென்பதைத் தரிசி ப்பித்ததை நிச்சுவிசித்தற் சகத்தின் விசித்திரங்களை விளுவினதை ய றிவித்தாம்.

சூத்திரத்திற்கொக்கும் ; நிறைந்த குற்றங்களாகியபெருமுத்துமாலையைத்தள்ளி சாராமலிருக்கின்ற மனதையுடையவர்களே கூற்றுவனெருங்கான். —

எரு. மனோதுன்பத்தையு மாசையையுங் கெடுக்க வேண்டுமெனல்.

நிச்சயமாகிய விருக்ஷத்துக்கு பிளக்கின்ற அரிவாளாகியும், சரீரமென்னுங் கொடிக்கு எரிபுழுவாகியு மிருக்கின்ற சுழலாநின்ற மனதினது துயரத்தை அடையாதவர்களே கூற்றுவனெருங்கான். நசியாநின்ற சரீரமென்னும்விருக்ஷத்தை சுற்றிக்கொண் டிரங்காநின்ற மனதினிடத்திற் றலையைவைத்துக்கொண்டு சீறுகின்றவிச்சையென்னுஞ் சர்ப்பமானது, நெருங்காத முதன்மையான சத்துக்களே கூற்றுவனெருங்கான். —

எசு. கோபலோபங்களைக் கெடுக்க வேண்டுமெனல்.

இராகத்துவேட மென்கின்ற விஷம்பெருக மனமென்கின்ற புற்றில் லோபமென்கின்ற சர்ப்பமானது வந்துநெருங்கிபுசியாத ஞானவான்களே கூற்றுவனெருங்கான். மிகுந்த விவேகமென்னும் சலம்பெற்றி தேகமாகிய சமுத்திரத்தில் வடவாமுகாக்கினியாய் பரவாமற் கோபவேரைக்கெடுத்து குணத்தையுடையவர்களே கூற்றுவனெருங்கான். —

எஎ. காமப்பற்றைக்கெடுத்து வீட்டில் விஸ்ராந்தியடையவேண்டுமெனல்.

உறுதியாகியசெய்கில் எள்ளு நசிப்பதுபோல கொடிதான மன்மதனால், அழிவுபடாத அறிவையுடையவர்களே கூற்றுவனெருங்கான். நாசமில்லாத நின்மலமாகிய நிருவாணபதத்தில் மனனமிறுதிமிகுந்த துன்பநீங்கி விஸ்ராந்தியடையும், நிலையைப்பெற்றவர்களே கூற்றுவனெருங்கான். —

எஅ. அபேதமான மனோசித்தத்தை வருத்தாதெனல்.

சொல்லப்பட்டவித்தோஷங்கள் சுழலாநின்றபவத்துக்கு வித்துகளாம். வேற்றுமையில்லாமல் ஏகமாகியமகாமனதைத் துன்பஞ்செய்யாது. ஆதிவியாதிகளினுண்டாகி நீங்காத பிரமையினுல் சஞ்சலிக்கின்ற துன்பமானதுவேற்றுமைகெட தீமையில்லாத ஏகமாகிய மனதின் பக்கத்திலுஞ் செல்லமாட்டாது. —

எகூ. இதுவுமது.

இருதயாகாயத்தை இருளாகச்செய்து இராகத்துவேடத்தில் உண்டான சிந்தையானது கெடாத வேற்றுமைகெட ஏகமாகிய மனதின் பக்கத்திலு நெருங்கமாட்டாது. தீமையான வஸ்துக்களும், தீமையானவசனங்களும், துஷ்டாரம்பங்களும், தீமையாகியகுணங்களும், சமோதயமாயிருக்கின்ற சமத்துவத்தையடைந்து ஏகமானமனதினகத்திற்புகமாட்டாது. —

அ0. அபேதவஸ்துவினிடத்தில் மனதைச் செலுத்த வேண்டுமெனல்.

பிரமையும், உபாதியும், களங்கமுமாகிய விவைகளல்லாமல், மெய்யாகிமேலான முத்திக்குரிமையாய் செயலில்லாத தற்பதார்த்த வசத்திற்றொடரும்படியாக மனதைச்செய்யவேண்டும். உண்டாகாநின்ற வெகுகாலம் பாழான பயத்தைக்கொடுத்து அசுத்த மாகிய பேதமென்கின்ற பசாசங்கள் தங்காத தற்பதார்த்தத்தில் அடையும்படி மனதைச்செய்யவேண்டும். —

அக. தன்னைத்

ஆத்மாவை அந்த வறிவினாலறிதலே

தன்னுத்தெரிசிக்கிற் கூற்றுவலீக்குமெனல்.

சகலதுன்பங்களையும் நீக்குதற்கிடமாகும்; உமக்குச்சமானமானவர்களுக்கெளிதாகும்; என் போலிகளுக்கரியதாம். மேலானவையிட்ட முனிவேர்தொழில்களுக்கெல்லாம் அதீதமாகிய சேடமானமுடிவைப்பொருந்தும் இப்படிப்பட்ட பதத்தைகூடத்தில் உண்டாகாமின் றமதிவையுடையவர்கள் எப்படியடைவார்கள். †- ஞானதிருஷ்டிக்கு சமானமாகியும், ஞானவாட்டத்தில் அன்புள்ளதாகிய பிருக்கின்ற சற்குணங்களின் மத்தியின் ஒன்றைப்பெற்று துக்கங்களனைத்தையுங்கெடுத்து, நிறைந்த சுகத்தைப்பெருக்கி மேலாயிருக்குங் காரணமாயிருக்கின்ற ஞானமும் பிராணவாட்டமென்கின்ற ஞானமடைந்தேதென்று புரண்ட முனிசொன்னார்.—இப்படிசொல்லுகின்ற சமயத்தில் தெரிந்திருந்தும், பிராணவாட்டமென்று நீர்சொல்லியதியாது, சொல்லுமென்று கேட்கவும், புரண்டமோதிசொல்லுவார். நீ நிவ்விடத்தி லெழுந்தோபார்க்கின்ற ஐம்பூதசரீரமான வீட்டின்மத்தியில், இதயமாமைரயான குனிர்ச்சியுடைய பட்டத்தி னிடத்தில், பிராணபான வாயுவென்று இரண்டு சேர்ந்திருக்கும்.—தோற்றமடைந்தவர் இந்த பிராணவாயுவினது வலியையுடையவனையை எப்போதும் வருத்தமில்லாமல் அனுசரிப்பன்; மேலாகிய விதயாகாசத்தில் குதியசந்திரரானவன், ஆயாசத்திற் சஞ்சரிப்பன, பறவைகளுடன் சரீரமாகிய யந்திரத்தைச்சமந்துகொண்டு சஞ்சரிப்பார்கள்—நன்றாய் மேனுங்கீழுஞ் சஞ்சரிப்பன; சாக்கிரத்திலும், சொப்பனத்திலும், சுழுத்தியிலும், ஒன்றான சமவடிவத்தையுடையனவைகள் முன்சொல்லப்பட்ட பிராணபானவாயுவென் பிறவிடாமல் இயற்றின்கதியில் எப்போது மனுசரிக்கின்ற வென்க்கு சுழுத்தியவத்தையில் நின்றவனுடைய வாசனைனைப்போல் விளங்குகின்ற வாசனைகளானவைபோயின வாம்.—தாமரைநூலின்றிக்கொண்டது ஒருநாலே ஆயிரம்பங்கு செய்து அதனிலொரு பங்கு சமானமென்றுஞ் சமானமானமல் நிறைந்த சூட்சமமாய் உண்டாயிருந்தும். எதிர்த்து அவ்வாயுவின் னடையினுடைய குணத்தை யறியவறியதாம். கலத்தலாகிய விப்பிராணனுனது விடாமலசைகின்ற சத்தியைப்பொருந்தி நிற்காமற் சஞ்சரிக்கின்ற சரீரத்தினுள், நிற்காமல் புறம்பிலும் அகத்திலும் எங்

அ௪. மந்திய கத ஞானத்தாற் பிராமகத்ததை யடைந்தேதேதோ மிருந்தாற் குமிராணை மேதேக் கினிருக்க வேண்டுமெனல்.

அ௫. பிராணயாமமறிவிக்குமித்த மலீமி யாதெயிற் சொல்லத்தொடங்கிப் பிராணபானவ்தானங் கூறல்.

அ௬. இதயாகாசத்தக்குள்ளச்சிர குதியாய்வலம் வருகின்றனவெனல்.

அ௭. அவைகளின் கதியிற்செல்லின் வாசனைகளற்றுமெனல்.

அ௮. அவைகளின்கதியின்மேன்மையும் பிராணமேலேறுக்குமுறைத்தல்.

¶ இ-ம். வாசனைமுதலிய பற்றுக்களியாவையுங்கெடுத்து தனதாத்மஞானத் தாற் றரிசிக்கில் யமனுக்கு ஞானென் றறிவித்ததாம்.

அஎ. அபானனது கீழ்நோக்கஞ்சொல்லிப் பிராணயாமம் எண்விதமாகக் கூறத்தொடங்கிமுதற் பிராணனையகத்திற் பூரித்தலுட் பூரக மெனக் கூறல்.

அஅ. (உ) அபானனை யகத்திற் பூரித்தவுட் பூரகமும். (ங) அவைகளையகத்திற் றம்பித்த வுட்கும்பகமுங்கூறல்.

அகூ. (ச) அப்பிராணன்புறம்பினின் றுண்ணேக்கடையு முள்ரேசகமும். (ரு) நாசினுனியினிற்கும் புறப்பூரகமும். (சு) நாசியின் றுவாதசாந்தத்தினிற்கும் புறப்பூரகமுஞ் சொல்லுதல்.

கூ0. (எ) பிராணன்புறத்திலும் அபான னுள்ளிலும் ஸ்தம்பிக்கும் புறக்கும்பகமும் (அ) அபானன் புறம்பினின் றுண்ணேக்கும்புறரேசகமுங்கூறல்.

கூக. இப்பிராணயாமத்தான்மனதை யடக்கினோர்வீடயத்தையும் பரிசியாரெனல்.

காலத்தும் திரும்பாமல் மேலேசெல்லுதல் வெப்பம் லாகும்.—இரண்டாவதான வபானவாயுவும், அத்திவாகிய சத்தியைப்பொருந்தி உட்புறம்பில் நீங்காம், சஞ்சரிக்கும், சரீரத்தின்கீழே செல்லும், சாக்கிரத்திலும் சொப்பனத்திலும் இம்மேலான பிராணனானது முழுதுந்திரும்புவது நன்மையாம்; இதைத்தெரிந்தவர்களுக்கு சுகமுழுமையுங்கொடுக்கும்; இந்தப்பிராணன், குணத்தைசொல்லக்கேட்பாய். அடையப்பட்டபுறத்தில் பன்னிரண்டங்குலமளவில் பிராணவாயுவு திரும்பச் சரீரத்திற்புகுதல் பூரகமாகச் சொல்லப்படும்.—புறத்திலிருந்து உள்ளடங்க வருத்தமடையாமல் அபானவாயுவு சரீரத்திற்புகுதலையடையும்; அதையும் பூரகமென்றுசொல்லப்படும். முடிவாகவபானவாயுவுமறைந்து பிராணவாயுவும் இருதயத்தில் எதுவளவும் அசைவற்றிருக்கின்றதோ அதுவரையிலும், கும்பகமென்கின்றவைத்தையாம். சகலகலை ஞானங்களையும் கற்றறிந்தவேதத்தையுடைய வசிட்டரே! மரியாதநல்லயோகிகள், இதையனுபவிப்பார்கள்.—இதயாம்பரத்திரும்பும் தன்மனதில் வருத்தமில்லாமல்பிராணவாயுக்கள் வெகும்முகமாகுதல்செய்ய அகத்திற்பொருந்திபிரேசகமாகும். புறம்போநாட்டமிருந்தபிராணவாயுவானது நாசியினாடுறவி அதனுனிமட்டும்நடையைமுன்னேபொருந்தவெளிப்பூரகமென்றுபெரியோர்கள் சொல்லுவார்கள். விரிவையடையநாசியாந்தத்தினின்று நீங்கிபன்னிரண்டங்குலப்பிரமாணநடையைவேறுனபுறப் பூரகமாமென்றுசொல்லுவார்கள்.—வெளியில்பிராணவாயுவானது அடங்க, அபானவாயுவானது வெளிப்படாமலிருக்க, பூரண அவத்தையாய்விளங்கிய புறக்கும்பமாகும். அபானேதயத்தின்ப்ரகாசரூபமானவாயுவின் உட்பார்வையானது திரமான புறரேசகமாகும்; இதுவேமோட்சத்தையடைவிக்கும்; சதாகாலமும் தியானிக்கப்படும், தடையில்லாமல் புறம்பிலு முள்ளிலும் கும்பகமுதலான நஷ்டகளை தவிராம லறிந்தவர்கள் திரும்பவுஞ் சனியார்கள். §— பிராணவபானவாயுவின் இயல்பாக யான்சொல்லப்பட்ட இவ்வெட்டுகதிகளும் வீட்டைக்கொடுப்பன; இராப்பகலும் விரும்பத்தக்கன; வேகமில்லாமல் இத்தொழிகளில் கூடினவர்களாய் புறத்திற்செல்லாமல் மனதைக்காப்பவர்கள், குறைவில்லாமல் சிறிதுநாட்களில் நிருவாண நிலையைச் சேர்வார்க

§ இ-ம். பிராணபானனை வியத்த முட்பூரகமிரண்டு, முட்கும்பகமொன்று, முள்ரேசகமொன்றும், புறப்பூரகமிரண்டும், பிறக்கும்பகமொன்றும், புறரேசகமொன்றுமாகிய வெண்வகையையுஞ் சொல்லியதாம்.

ன். இதை அப்பியாசஞ்செய்பவர்கள், பிராமணர்கள் ஆயத்தோலேத் தொடுவார்களோ அதுபோலவிடயவி ச்சையையடையார்கள் — சென்றாலும், நின்றாலும், சாக்கிரத்திற் சொற்பனத்தின் மேனினாலும், இங்கப் பார்வையை யுடையவர்கள், பந்த மணியார்கள்; துன்பம் பொருந்தார்கள்; அடையத்தக்க பல ன்களனைத்தும் அடைந்தாரும். இருதய கமலத் தில் நின்றுண்டாகிய செல்கின்ற பிராணவாயு வெளியில் பன்னிரண்டங்குலப் பிரமாணத்தில் இறக்குவிடும். அபானவாயுவும் பன்னிரண்டங்கு லப்பிரமாணத்தில் உண்டாகி இருதயகமலத்தில் அடங்கி யிறக்கும். — கலக்குவருகி ன்ற வெளியிலிருக்கும் அபானனென் கின்ற சந்திரனானது சரீரியானவையுங் குளிரச் செய்விக்கும். பிராணனென் கின்ற சூரியனானவன் சூடாகசொல்ல ப்பட்ட விச்சரீரத்தினுள் பாகமுண் டாக்செய்யும். இல்லாமற் சமூவகி ன்ற அபானனென்கின்ற சந்திரனிடத்திற் சேராநின் ற இயல்பாகியகலைகள் பிராணனென்கின்ற சூரியனு ல் வலிமையாகி விழுங்கப்பட்டது எவ்விடத்திலோ, அந்த மேலானபதத்தை யடைந்தால், பின்பொருது ன்பமுண்டாமோ — அங்ஙனமே பிராணனென் கின்ற சூரியனிடத்திற்சேர்ந்திருக்கின்ற கலைகள், அ பானனென்கின்ற சந்திரனால் வாரிவிழுங்கப் பட்டது எவ்விடத்திலோ, அந்தவேயபதத்தை யடைந்தால் சென்மமானது பின்புண்டாகுமோ. அபானவாயு வா னது, பிராணவாயுவைப் பக்ஷிக்கும்படி பார்க்க, பி ராண வாயுவானதுவிழுங்க, கலந்திருந்த அபானவா யுவைப்பக்ஷிக்கும்படி பார்க்க இவ்விரண்டின் மத்தி யாயிருப்பவர்கள் எப்போதும் ஏறுபவதுன்பத்தை யடையார்கள் — அசைகின்ற பிராணலயத்தினது பக்கத்திற்பொருந்தி அபானவாயுவின் லயத்தில் பக் கத்தையடைந்து பிராணபான மத்தியிற்கூடிய சிதா த்மாவை துதிக்கின்றேன். அபானவாயுவின் பிறப்பும் தவிர்ந்துவிட்ட, மீண்டபிராணவாயுவும் இறந்துவிட்ட, நாசிகாந்தத்துக்கு நேராகிய வாகாயத்தில் சிதாத்மா வை மீக்கமில்லாமற் சிந்திக்கின்றேன். ஒரு களங்க மில்லாமல் கலைகள் சூழ்ந்திருக்கின்ற நல்லதிருஷ் டியினுல் தேவர்கள் வணங்காநின்ற பாமபதத்தை யடைந்தேன். ¶ — என்னுடைய மனமானது பிரா ணனிஷ்டையினுல் சொல்லிய இக்காமார்க்கத்தினுல்

தன்னு ...ற் ...டு. இவ்வெண் விதமான பிரா ணுயாம சாதன ஞ் சொல்லி மே ற் சகத்தையுஞ் சொல்ல வேண் டிப் பிராணு பா ன லயஸ்தானஞ் சொல்லுதல்.

௧௩. அபானனது குளிர்ச்சியு ம் பிராணனது உஷ்ணமு மொ ன்றின்கலைகளையொன்று பக்ஷித் தலு மொன்றையொன்று பக்ஷி த்தலு மிவ்விரண்டி னிறத்தவி ன்மத்தியிற் பூரணமாய்விளங்கு கின்ற சைதன்யத்தை வணங்கு தலுங் கூறல்.

௧௪. இதுவுமது.

௧௫. இதுவுமது.

௧௬. சகசஞ் சொல்லிச் சா

¶ இ-ம். பிராணபான விறத்தலியக்கங்களிற் பூரணமானசித்தைத்தெரிவித்ததாம்

க்ஷாத்கா ரானுப வஞ்சொல்லு தல்.

நின்மலமாகிய பரதத்துவத்தில் எப்போதும் ஒப்பற்றதுன்பந்தீர்ந்தடைகின்ற வழியிதுவாகும். இந்தத்திஷ்டியைப் பிடித்துக்கொண்டு இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும், நினைக்கேன்; மிகவும்நிகழ் காலத்தின்றன்மையை பொருந்துகின்றேன், யானிதையடைந்தேன்; அடையவேண்டிய திதுவென்று நினைக்கேன். வசிட்டமுனியே? அதனால் துன்பமொன்றுமில்லாமல் முடிவற்ற நீண்டபிராணனையடைந்தேன், மயக்கநீங்கினேன். —

கூள. யாதியா தெப்படியோ வ ப்படியப்படியே விளங்குகின்றே னெனல்.

இன்பமடைந்தவர்க ளிடத்திலிருந்தால் இன்பத்தையே யடைவேன், துன்பமடைந்தவர்களிடத்திருந்தால் துன்பத்தையே யடைவேன்; உலகமுழுமையுமுறவாயிருப்பே னாதலினால், தவறுள்ள துன்பங்கெட்டு உயிர்வளர்ந்து சுகித்தேன், உண்டான ஆபத்திலும் மேலானசம்பத்திலும் எவ்வளவுஞ்சலியேன், உலகத்திலுள்ளவர்களுக்கு பொருந்திய சினேகிதனாவேன்; அகங்கார மில்லாதவனால், முனீஸ்வரா? துன்பவொன்று மில்லாத நிறைந்தவுயிரைப்பெற்றிருக்கின்றேன்: என்றும், —

கூஅ. இவைக ளால் ஞானமு மாயுளும் பெற் றேனெனல்.

உமதுகிருபையினாலிவ்வண்ணம் அளவற்ற ஆயுளை யடைந்தேன், தத்துவஞானமும் நன்றாகப்பெற்றேனென்றுசொல்லிய அத்தன்மையான புசுண்டயோகியை, பகவானே? நீர்சொல்லிய ஆத்மதத்துவத்தின்குணமானது அழகுள்ளவதியம்! இதுமிகவுமதிசயமாம்! காதுக்காபரணங்களாகும், இதைக்கேட்டாராயின் யாரதிசயப்படமாட்டார்கள்! நல்ல நலத்தையே யடையக்கடவாயென்று, நிலைபெற்றசூரியன் மத்தியில் வருகாலமிதுவாதலால் தெய்வலோகத்திற்போவேன், நீ வாழக்கடவாயென்றுசொல்லி, —

கூகூ. வசிட்ட ர் விண்ணுலகத் துக்கேகுதல்.

அவரைவிட்டு அவ்விடத்திலிருந்து எழும்பி யானாகாயத்தின்மேற்செல்ல, என்னைவிடாமல் பத்துநாழிகைவழி ஆகாயத்தில்வந்தான்; இரசஞானமுடைய புசுண்டரே? நிற்பாயென்றுவலிமையால் நிறுத்தினன். பரிசுத்த ஞானிகளை நீங்குதல் துன்பமல்லவா, பெரியோனாகிய புசுண்டயோகியைவிட்டு முன் கிருதாயுகத்தில் நீங்கினன்; திரும்பவும் இரண்டாவது நெருங்கிய திரேதா யுகத்தில் தரிசனஞ்செய்தேன்; மலர்ந்த புட்பமாலையைத் தரித்திருக்கின்றமார்பையுடைய ஸ்ரீராமா? நீ பின்பவதாரஞ் செய்தாய்; இந்தக்கதைபுசுண்டயோகியடைந்த மார்க்கமென்று நீ யறிந்துகொள்வாய். * —

புசுண்டன்கதை முற்றிற்று.

---

* இ-ம். சுவாத்மானுபவமு நீண்டவாயுளாகிய ஸ்வரூப சாக்ஷாத்காரமும் பெற்றதைத் தெரிவித்தாம்.

தேவபூசைகதை.

அவதாரிகை.

முற்கதையி னித்தியமான ஞானத்தினலுஞ் சிரஞ்சீவமான யோகத்தினலுஞ் சர்வம் பிரமமயமென்னும் நிருவாணசுகஞ்சொல்லி, இத்தேகமுதலியயாவும் அசத்தியமென்றறிந்து நித்தியமாய் விளங்குகின்ற ஞானமே தேவென்ருராதிக்கவேண்டி பூசையை நிரூபிக்கின்ருர்.

க. அஸ்திமுதலிய தடிப்புள்ள தேக மணுத்துவமு மகத்துவமு மாகுந் தன்மை யிருத்தலி னஃதை யாத்மாவென் றுரைக்கலாமேயெனின், அஃதை யப்படி யாக்குந்தன்மை யுள்ளஞானமேவாத்மா விதன் ப்ரதிபா மாத்திரமே தேகமென்றறிந் தஃதை நீக்குதல்.

இப் பாஞ்சபூதபௌதிகம் தோற்றரவுமாத்திரமேயாம் ; விசாரணையற்ற விக்காலம், இந்தப்ரகார மாகவே தோம்ருநின்றது ; பற்றுதலுடன் இவனென்றும் நானென்றுஞ்சொல்லப்பட்ட சரீரத்தை மனதில் நானெனக் கருதுவது மிருந்தவசத்தியமே ; மிருந்தநரம்புகளினலும், என்புகளினலும், பொருந்திய சரீரத்தை யானெனநினைக்கின்ற மயக்கத்தை நீக்கக்கடவாய் ; சங்கற்பத்தினல் பொருந்திய வுருவங்களுக்கு ஓரளவுண்டாமோ. — இன்பத்தையுடையமெத்தையில் நித்திரைசெய்தும் சொற்பனசரீரமாய் திக்குகளிற்சென்று கலக்கத்தையடைந்தாய் ; உனதென்கின்ற அச்சரீரம் எவ்விடத்திலிருக்கின்றது, ஸ்ரீராகவா ? அறிந்துபார்ப்பாய். சாக்கிரத்தில் மனோராச்சியஞ்செய்வதினல் எந்தச்சரீரத்தினல் மகாமேருவிலும், தேவலோகத்திலும், எப்பொழுது நீயே மயங்கிச் சுழலுகின்ருய் ; உனதென்று சொல்லப்பட்ட அச்சரீரம் எவ்விடத்திற் சேர்ந்திருக்கின்றதோ — நெடியசொற்பனமும், நெடிய மனோவிராச்சியமும், நெடிய சித்தப்ரமையுமென்று இவ்வண்ணஞ்சம்சாரத்தைக்கருதுவாய். தோற்றரவுமாத்திரமாகிய இச்சகமானது, காணத்தகும்படி உவ்வளதுமன்று இல்லாததுமல்லவென்று, வேருனசிந்தையை கெடுத்தலே, இராசாவே ? நன்மையானதரிசனமென்று தத்துவஞானிகள் சொல்லுவார்கள். — தீர்ப்பாக யாம் எவ்விதத்திலும் மரிப்போமென்பது நிச்சயமே. உலகத்தின்கண்ணுள்ளவர்கள் மரணமடைகின்றகாலத்தில் வீணுகப்பரதவிக்கின்றவிதம் ஏனே. வீரனன ஸ்ரீராமா ? எவ்விதத்திலும் பிறந்தவர்களுக்கு சிறிது அற்பசுகம் பொருந்தத்தக்கது, இப்படியற்பமாய்ச் சேருகின்ற ஒவ்வொருவஸ்துக்களில் அகங்கரிக்கின்ற வகங்காரமேன் சொல்லுவாய் — வஸ்துக்களில் வேறுபாட்டை நீக்கி ப்ரதிபாமாத்திரத்தில் நிலைபெற்ற சமமாக சகத்தைப் பார்க்கக்கடவாய். ப்ரதிபாமாத்திரமான

உ. சூட்சுமப்ரபஞ்சத்தைக்காண்பித்துத் தூலப்ரபஞ்சத்தை நீக்குதல்.

ஙு. சூட்சுமப்ரபஞ்சத்தை நீக்குதல்.

ச. இத் தேகங்களின்கம்பாவத்தை நீக்குதல்.

ரு. சமதிருஷ்டியினலிப்ரபஞ்சங்களைநீக்குதல்

சகம், நினைக்கின்ற மனக்கண்ணாடிக்கு களங்கமாகும்.
ஆகையினால் பொருந்தியவனைத்தும் பிரிவில்லாமற்
கெடுத்து மாட்சிமையுள்ள ஸ்ரீராமா? ப்ரதிபாவில்லா
தவனாய்,— எவனுடையமனப்புற்றில் இராகத்துவே

௬. சமத்துவத்தைக் குறித் திராகத்துவேடத்தை நீக்குதல்.

டமென்கின்ற சர்ப்பங்க ளுலாவவில்லையோ, அவ
னென்கின்ற கற்பக விருக்ஷத்தினால் பிறரடையாத
தொன்றுளதா. அறிவின்மிகுந்த ஸ்ரீராமா? கலக்கமி
ல்லாத வுணர்வினால் செருக்கையுடையவர்களாய் சக
லகலை ஞானசாஸ்திரங்களினால் அறிவுமிகுந்திருந்து
ம், தவயற்ற இராகத்துவேடங்கள் நிறைந்தவர்களே
கழுதையைப்போல நீக்கத்தக்கவர்கள். —

௭. பவத்தின் காரணமான சங்கற்பத்தை நீக்குதல்.

இப்பிறவி மயக்கமெனும் சக்கரத்தையுடைய ரத
மானது,சங்கற்பமென்கின்ற வதின் அச்சைசெவ்வை
யாகத்தடுத்தால் ஓடாது. சங்கற்பமென்கின்ற அச்சா
னது, சற் றசைந்ததானால் வலிமையாக யாவர்தடுத்
தாலும் தடுக்கப்படாது. ஞானவல்லமையும், சூட்சு
மயுத்தியும், உண்மையான புருடப்ரயத்தினங்களுமா
கிய இவைகளைக்கொண்டு தடுக்கவேண்டும். —

௮. சங்கற்பவடிவமான மனதைநீக்குதல்.

நல்லஞானத்தையும், நல்லசத்துக்கள் குணத்தை
யும், நல்ல வாத்மஞான சாஸ்திரங்களையும் பொருந்
திய நல்லப்ரயத்தினத்தினால், பொருந்தாத வஸ்துக்
கள் எவ்விடத்திலும் கிடையாததாம். மனமென்கி
ன்ற பொல்லாத வலியபசாசம், துன்பத்தைக்கொடு
க்கும், அச்சத்தைச்செய்யும், தீரமாகிய மாட்சிமை
ப்பட்ட செல்வங்களியாவையும் கெடுக்கும் ; கொலை
செய்யாநின்ற இந்த மனதைக்கெடுத்து எதுவானு
யோ, அதுவேயாய் பூரணமாவாய். — மனமென்கி

௯. மனதின்வலிமைசொல்லியதை நீக்குதல்.

ன்ற கொடியபசாசம் உறுதியாகப் பற்றிக்கொண்டா
ல், நூல்களினாலும் உறவினராலும் நீக்கக்கூடாது ;
ஆசாரியராலும் திருப்புதற்கரியதாம். அப்பசாசமா
னது, விட்டுப்பிரிந்து சித்வேஷமில்லாமல் நிற்குமா
யின், முன்சொல்லப்பட்ட சாத்திரமுதலிய பிரிவுக
ளினால், மிகுந்த சேறில்லாவிடில் சிறியபள்ளத்தில்
வீழ்ந்திருக்கின்ற மிருகத்தை கரையிலேற்றுவிப்பவ
ர்களைப்போல, சாஸத்தைத் தீர்க்கப்படும். — அனு

௰. மகாமோகமானகாரணப்ரபஞ்சத்தை நீக்கி ப்ரத்யேகாத்மாவைத் தரிசிப்பித்திஃதுறுதிப் படுமிதித் தாசிரியவசனத்தைக் காட்டத் தொடங்கல்.

போகத்துடன் அனுபவிக்கப் படுவனவாகிய விஷய
ங்கள் புறம்பில்நீங்க ஆசாரியனது பாதத்தை விரு
ம்பி தரித்து யுக்தியுடன் விசாரணைசெய்து, ஏகமா
கிய பூரணவஸ்துவான தனதாத்மஸ்வரூபத்தை அறி
யவேண்டுமாதலினால், மகாமோகத்தைக் கெடுப்பத
ற்கொன்றாகிய இப்பரமதரிசனத்தை, சந்திரனைத்த
ரித்திருக்கின்ற சடாமகுடத்தையுடைய பரமேஸ்வ
ரன் எனக்குச்சொன்னார் ; அதை யுனக்குச்சொல்ல

கக. ஈசனை நோக்கித் தவஞ்செய்தல்.

தெளிவுற்றும் கேட்பாயாக. ¶ — மேலான கைலாயகிரியில் பரமேஸ்வரனை ஆராதித்து ஒருகாலத்தில் கங்காநதியின் பக்கத்திலிருக்கின்ற பன்னசாலையிற் றவஞ்செய்து சித்தர்குழாங்களோடும் பலசாஸ்திரார்த்தங்களைப் பார்த்து ப்ரயோசனத்தையடைய வெகுகாலம்போக்கினேன். பின்பொருதினம், ஆவணிமாசம், பூர்வபக்ஷத்தில், இயல்பானவஷ்டமிதிதியில், இராக்காலத்தில், பதினோர்நாழிகைக் கழிந்தபோதில்.—

கஉ. இருளிலொளியுண்டாதல்.

மனதுகருங்கி சமாதியைநீங்கிய வெகுப்ரமத்தியோனிருக்க, இக்குகையனைத்தும் ஆரவாரமடங்கினதாய்க்காட்ட சமாதியைப்போலவும், மௌனமாயிருப்பனபோலவும், கட்டியில்லாமல் கத்தியினுல் வெட்டுதற்காள இருளானது மூடிக்கொண்டு, மலையின்குகைகளும் கானகங்களுமற்றெல்லிடத்திலும்நிறைந்து குளியமாயிருக்கின்ற அச்சமயத்தில், விளாவில்லாமலொப்பற்றப்ரகாசமானது என் முன்னே ப்ரகாசிக்கப் பார்த்தேன். —

கங. ப்ரசன்னமான பரமேஸ்வரனைப் பூசித்தல்.

வெண்மைநிறத்தையுடைய அநேகமேகங்கள்போலவும், வெண்ணிறத்தையுடைய சந்திரர்கள் அநேகர்போலவும், ப்ரகாசத்தை சடலினுற் பார்க்குமளவில், நந்திகேஸ்வரர் முன்வர பார்வதியினஸ்கந்தத்தின்மேல் தமது கரத்தைவைத்து அடியோர்களைப்புரக்கும் பரமேஸ்வரன் வரவும், சிட்டர்களோடும் சீக்கிரத்திலெழுந்து ஆராதனைசெய்வதற்கு அருந்திரவியங்களைக் கொண்டுபோய் பலபுட்பங்களை யருச்சித்து தூரத்திலிருந்து வணங்கித் தோத்திரஞ்செய்து, —

கச. உமையைப் பூசித்தல்.

பூரண சந்திரனிலும் குளிர்ச்சியடைந்து, துன்பங்களனைத்தையும் நீக்குகின்ற அழகியகண்களினால் திருப்திதிருஷ்டியைச்செய்த அவளை, நமஸ்காரத்தினாலும், அருக்கியத்தினாலும், பரிசுத்தமான வுபசாரங்களினாலும், குளிர்ந்த நல்லபுட்பங்களின் வருஷத்தினாலும், பரமேஸ்வரனைப் பூசித்தேன்; பரமேஸ்வரியையும் அந்தப்ரகாரமே பூசித்து பாதத்தையவணங்கினேன். —

கரு. சுவாமி வினவுதல்.

பரமேஸ்வரன், பணிகளுக்கிணையற்ற கிளைகளுக்கைகளையும், பார்வதியின்பாக்கியம் சனங்களையும், பிரியமாக அன்போடும் வணங்கினவன்புப், பூர்ணசந்திரனை குளிர்ச்சிசெய்விக்கின்ற குணமான வசனத்தினால், ப்ரகாசத்தையுடைய பரமேஸ்வரன் என்னைப்பார்த்துக்கேட்டார்; உபசாரத்தினால் அன்பந்திர விஸ்தாரத்தியடைந்து குற்றமற்ற சுகங்களைக் கொடுக்கின்ற உனதறிவுகளானவை பிரமபதத்தி னிலையானது. —

கசு. இதுவுமது.

விக்கினமில்லாமல் தவமானது நின

¶ இ-ம். பஞ்சபூதபௌதிக முதலியயாவுஞ் சிற்ப்ரகாச மென்றறிதலின் மாத்திரமாய் விளங்கவேண்டு மென்பதாம்.

க்கு நடந்துவந்ததா, அடையவேண்டியவை அடையப்பட்டதா, திரிஸ்யங்களானவை இறந்தனவாவென்று, சகத்துக்குக்காரணமாயிருக்கின்ற புனிதனை பரமேஸ்வரன்சொல்ல, பரமசிவனை நானமஸ்கரித்து வேண்டிக்கொள்ளுதலினாற் சொன்னேன். தேவதேவனே ? கிரமமாக வுன்னுடைய கிருபையைப் பெற்றவர்களுக்கு பெறுதற்கரிய தொன்றுமில்லை ; விஷய அச்சங்கள் சமீபத்திலும் வரமாட்டாவாம். * —

கஎ. துதிசெய்தல். உலகத்தில், உம்மைவணங்கினவர்களை வணங்காதவர்களில்லை ; தேவரீரை யடைக்கலமாக வணங்கிய மகான்கள் எவ்விடத்தில் வாழ்வுற்றார்களோ அதுவேதேசமும், அதுவேநாடும், அதுவேகிரியுமாம் ; தேவரீரைச் சிந்தித்தல் தொகுப்பாயிருக்கின்ற முற்காற்செய்த தருமத்துக்கு உரியப்ரயோசனமாகும் ; இந்தக்காலம் தொடர்ந்துசெய்யும் தருமத்துக்குசொரிந்தவிருஷமாம் ; இனியடையுந்தருமத்துக்கு விதையாகும். —

கஅ. இதுவுமது. தேவரீரைச்சிந்திக்குஞ் சிந்தனையானது, ஞானமுதமிருத்தற்கு ஒப்பற்றபூரணகும்பமாகும் ; தீரமென்கின்ற நல்லமிலவுக்கு பூர்ணசந்திரனாகும் ; உண்மையான மோக்ஷத்துக்கு மார்க்கமாகும் ; யாவுமாய்விளங்கிய தேவரைசிந்தித்தலென்கின்ற அழகு விளங்கிய சிந்தாமணியை அடியேனடைந்து இல்லாமையையுடைய சகலவாபத்தினது சிரசை மிதித்திருக்கின்றேன். — என்றுதோத்திரஞ்செய்து கரு

கக. இதுவுமது. ணைமுக மலர்ந்திருக்கின்ற முதற்காரணமாயிருக்கிற பரமசிவத்தின் மிருதுவான வுபயபாதங்களை திரும்பவும் வணங்கி நான் கேட்டவொரு பொருளைச்சொல்ல, ஸ்ரீராமா ? விளங்கும்படிகேட்பாய். கைலாயமலையில் வசிக்கின்ற கிருபாசமுத்திரமே ? உமதுகிருபையினால் அறிய வேண்டுவன யாவுங்குறைவில்லாமலறிந்தவெனக்குஐயமொன்றிருக்கின்றது ; அதனிச்சயத்தை யனுக்கிரகிப்பாயென்று சொல்லி. † —

உ0. தேவநிச்சயம் விசாரிக்க வஸ்துசயஞ் சித்தேயெனப் போதித்தல். துன்பங்க ளனைத்தையுங் கெடுத்து சுகங்களியாவையுங் கொடுக்கின்றதேவாராதனையாவதென்னவென்று கேட்கவும், அனுக்கிரகிப்பார். தேவானது எதுவென்றுகேட்கில், தனிமையான விஷ்ணுவுமல்ல, சிவனுமல்ல, ஐம்பூதவடிவத்தாலான சரீரங்களைப்பெற்றதுமல்ல, ஒழிகின்ற மனதுமல்ல, ஆதியுமந்தமுமில்லாததாகியும் சுயமாகியுமிருக்கின்ற ஞானமேதே

---

* இ-ம். உபாசனமூர்த்தி ப்ரசன்னமாய்ச் சுவானுபவத்தை விளக்கும்பொருட்டிவரனுபவத்தை வினவினதாம்.

† இ-ம். பரமசிவத்தைத்துதித்து ஓர் சங்கைவினவினதாம்.

ப்பவராம். — சரீராதிகளை பேதங்களாய் அற்பமா யிருக்கின்ற வஸ்துக்களில் அர்த்தமாய்ப் பூரணமாயி ருக்குமாறு, ஞானமாயும் செய்கையாயும் ஆகியசுரூ பத்திருக்கின்ற ஞானமே பிரமஞானமாதலினால் அந் தஞானமே தெய்வமாகும், ஆராதனை செய்யத்தகுந்த தாகும். ஞானமில்லாத மூடர்களுக்குப் பல்வகைப்பூஜை யெல்லாம் ஆராதனையே ஒழுங்கென்று சொல்லுவார்கள் —

௨௪. இக்ஞானதேவையே யாராதிக்க வேண்டுமெனல்.

சொல்லுகின்றார்க்கும் பதில்கூறுவதை வெளிப்படுக்கு ஞ்சக்தியில்லாதவர்கள், கூக்கேட்குந்தூரம் போகும் விருத்தமுடப்போல ஞானமில்லாதவர்கள் நாமாவிதவ டிவங்களில் ஆராதிப்பார்கள். ஞானிக்கப்படுத்தப் பொருட்களென்று சாஸ்திரங்கள்சொல்லுவார்கள். ஆதி யந்தமில்லாத ஞானமானமே எங்கு மிடங்களிலும் நிறைந்திருக்கும், வலிதான பூரணமாகிய சர்வங்க ளியாவிலும் கொண்டதனால் அந்த ஞானமே தெய் வமாகும். —

௨௫. மற்றவிக்கிரகவாராதனை கூடாதெனல்.

ஞானமும் சர்வபாவனையும் சங்கேதமா மென்கின்ற பூட்பங்களினால் அந்தஞானதெய்வமான நீக்குதற்கரிய வாக்மஞானத்தை ஆராதனைசெய் வதே மனபூஜையாம்; குறிக்கவுருவங்களில் ஆராதி ப்பது ஆராதனையல்ல. அகண்டமென்று சொல்லப் பட்ட ஞானமானது, மார்க்கமாகக்கொண்ட வேறு சாதனங்களினாலும் கிடையாது. இப்படிக்கில் அந்த ஞானத்தின்களிலும் அநந்தமானது பூரணமாம். —

௨௬. ஞானதேவர்க் கனேக விச் சாக்தியாதி பூபமே பூபமாமெனல்.

தெளிவுள்ள ஞானமானது, சகலசாஸ்திரங்களுக் கும் எட்டாததாம். சகலகுருக்களிலும் அடைக்கப் படுக்கும். சுத்தசத்தியாகிய மற்றிருப்பில் சத்தா சாமளியமே ஸ்வரூபமாயிருக்கும்; நீக்குதற்கரிய மனசத்தமாத்திரமே ஸ்வரூபமாகும்; தெய்வமுமி துவேயாகும். நிட்சேபமாக விசுத்தஞானமானது விகற்பமாதலால் ஞானஸ்வரூபத்தைக் கைவிட்டு வேறாகும். ‡ —

௨௭. சுத்தாய் விளக்கிய ஞானமே தேவெனல்.

மூடமாகிய சித்தமானது சோம மனுபாவனைசெய்ய சங்கற்பவிஷயமுடையதும்; பின்பு தேகத்தோடு கலவாதவையோ சத்திகளினது பிரகாசத்துக்குத் தடையின்றி அறியாமையொரு க்கிய மேனுளும்; புத்தியாகும்; அகங்காரமாகும்; மனமாகும். இப்படி சஞ்சரிக்கின்ற மனத்தின்றன் மையைச் சேர்ந்து சமயமானங்களேனத்தையும் பிடித் த்துப்பிடிக்கும். —

௨௮. இதன்விஸ்மரணமே சுற்பஜுமாகிய சகத்வமுருகலியாவுமாமெனல்.

சரீரத்தில் அடைந்தோமென்று நினைத்துவருவதேயென்கின்ற சேற்றிலழுந்தும்; பிறந்து துன்பத்தினால் துன்பத்தையடைய மீளுங் குக்கிரோ துக்கமானது நீளும்; சங்கற்பமுள்ளமட் டும் துயரையடையும்; சங்கற்பநீங்கியவளவில் இன்

௨௯. சங்கற்பரஹிதமான சைதன்யமே நித்தியானந்தமாமெனல்.

‡ இ-ம். ஞானதேவையுமதையர்ச்சிக்கு முறைமையுந்தெரிவித்ததாம்.

விடத்திற்பொருந்திய துக்கங்கெடும். சங்கற்பமே துயரமாகும், அச்சங்கற்பமில்லாதிருக்கில் பிரமாநந்தமாம். — தனது விவேகமென்கின்ற சண்டமாருதத்தினால் சங்கற்பமென்கின்ற மேகத்தைப் போக்கி நிலைபெற்ற சரற்காலத்தாகாயத்தைப்போல நிருமலத்தைப் பொருந்தியிருக்கும்; உனது சங்கற்பமென்கின்ற களங்கத்தை களங்கமற்ற உனது முயற்சியினால் நினக்கு நிவிர்த்திசெய்து மிகுந்த தெளிவையடைந்து பிரமாநந்தசாகரத்தில் மூழ்கி வாழக்கடவாய். * — ஆத்மதத்துவமானது, எல்லாச்சத்தியையுமுடையதாம்; அச்சத்திகள் நடனங்களினால் உண்டாகாநின்ற பந்தமும் மோக்ஷமுமாகிய சகலத்தையுஞ்செய்யும்; சமமாகியும், பரிசுத்தஞானமாகியும், விகற்பவடிவங்களனைத்தையுஞ் செய்கின்றதாயுமிருக்கின்ற இந்தவாத்மாவுக்கு, இச்சாசத்தியும், வியோமசத்தியும், காலசத்தியும், நியதிசத்தியும் மகாசத்தியும், ஞானசத்தியும், கிரியாசத்தியும், தொழிலைச்செய்கின்றகர்த்துருசத்தியும், தொழிலைச்செய்யாத வகர்த்துருசத்தியும், இடமானசத்திகளுமாகிய இவைகண்முதலிய பிரமசத்திகளுக்களவில்லை. அஞ்ஞானமாகிய உல்லாசசத்தி பிறப்பிறப்புகளைக்கொடுக்கும்; சகமுமுதும் விசாலமாகிய நிரோதமென்கின்ற சத்தியினால், சநநமரணங்கள் நீங்கும். ¶ — சகலமாகிய வாராதனைகளிலும் பாவனையைத்தகித்தலே நின்மலபூசையாகும்; வினைவடிவமானசரீரத்தை யானென்கின்றதைநீக்குதலே மேலானவாராதனையாம்; இப்படிப்பட்ட தியானத்தினை லாராதிக்கடவன். ஞானஸ்வரூபமாய் இலட்சஞ் சூரியன் கிரணயளவாமென்றுகூற ப்ரகாசங்களுக்கெல்லாம் ப்ரகாசமாம்; அகத்திலிருக்கு ஞானப்ரகாசத்தையானென்று சேரக்கடவது. — மேலானவாகாயமே எழுச்சியாய் மிகவும் பருத்தகந்தாமாம்; அதற்குக்கீழான அளவிறந்தவாகாயமே சொன்னமயமான பாதபதுமம்; அளவற்றதிசைகள் நீளமாய் உயர்ந்த புசங்களாகும்; நாநாவிதமானசகங்களே படைகளாகும். — அளவிறந்த கோடி பிரமாண்டங்கள் இருதயகமலத்தொருபக்கத்தில் விஸ்ராந்தியடையும்; அந்தவஸ்துவேயாகிய ப்ரகாசத்தையுடைய பரமாகாயத்தின் ஆதியந்தமில்லாத வடிவமிதுவாகும்; விட்டுணுவும், அயனும், உருத்திரனும், தேவேந்திரனும், முதலாகிய

௨௭. சங்கற்பத்தைக் கெடுத்துச் சுகசாகரத்தாம்பதியின் வாழ்வாயெனல்.

௨௮. இந்தேவாகிய சத்திமானுக்குச் சத்தி யளவின்றெனல்.

௨௯. இதுவுமது.

௩௦. தேகோகமீங்கிச் சித்தோகமாயினதன் சுயம்ப்ரகாசந் தெரியுமெனல்.

௩௧ இந்ஞானதேவைப் புருடனுகச் சிறப்பித்துக்கூறல்.

௩௨. இதுவுமது.

---

* இ-ம். இச்சிற்சந்நிதியில் யாவுமுதித்தொடுங்கு மென்பதாம்.

¶ இ-ம். ஆத்மஸ்புரணம் வேறுகவிளங்கிற் கற்பனையாகவுந் தானுகவிளங்கில் இதார்த்தமாகவும் விளங்குமென்பதாம்.

௩௩. சந்நிதி மாத்திரத்திற் சகலத்தையு மசைப்பிக்கின்ற சத்திமானே சத்தனு மெனல்.

தேவர்கள், இவ்விறைவனது ஸ்வரூபத்தில் இந்தச் சகலவுயிர்களும் மயிர்ப்பந்திகளாம். † — காயவிருமான துவக்கங்களைச் செய்வனவாயும், சகமாகிய எந்திரத்துக்கு வினை குத்திரமாயு மிருக்கின்ற ஒழியாத இச்சைமுதலாகிய அநேகசத்திகள் அவனது சரீரத்திற்றங்கியிருக்கும். பிரகாசியாநின்ற விவனே மேலானதெய்வமென்று உணர்ந்த ஞானவான்களால் பூசிக்கப்படுவன்; செம்மையான ஞானமாத்திரமானவன், அனுபவமாய்விளங்காநின்ற மாத்மஸ்வரூபன்.—

௩௪. சத்தன் மகிமையைக் கூறல்.

எவ்விடத்திலும் வியாபகன், யாவராலும் அடையப்படுபவன். அளவில்லாதனவாகாநின்ற பதவிகளுக்கு இடமாகவுடையவன், சந்மாத்திரமே சரீரமானவன், * உலகக்கூட்டங்களை ஒழுங்காகவடக்குகின்ற காலதத்துவத்தை மேலான தாமரைப்பூவாகவுடையவன், பரிசுத்தமான சுயம்பிரகாசம். —

௩௫. ஆறிந்திரியங்களா லனுபவித்து மனுபவியாதஞானமே பரமேசனென் றுராதித்தல்.

கண்ணும், நாசியும், காதும், சருமமும், நாக்கும், மனமுமாகிய சத்திகளினால் இயல்பாக எவ்விடத்திலு முள்ளவிடய வஸ்துக்களைப்புசித்து, சங்கற்பங்களைத்தினுக்கும் அதீதமான எங்கும் பரமேஸ்வரனே யென்று உணர்ந்திருந்து, மேலானதேவதையைவிடாமல் நிற்கின்றபடியே உபாசனை யாராதனையைச் செய்யவேண்டும்.—

௩௬. தன்னைத்தானே யருச்சித்தல்.

தனதாய்மனமான ஸ்வரூபமாய் விளங்காநின்ற தேவாராதனைக்கு நிவேதனமுதலிய உபசாரங்களைத்தரும் முறைமையல்லவாம்; எப்போதும் துன்பமில்லாமல் மகிழ்ந்து கேடில்லாமல் ஒன்றாய் அமுதமாய் நிறைந்த தனதுஞானத்தினால் சுத்தமான வாராதனையைச்செய்யவேண்டும்.—

௩௭. தன்னைத்தானே தியானித்தல்.

நீங்காமல் அகத்திற் சுத்தவறிவாகிய ஞானமேதானே அதுவே இறைவற்றியானமும், அதுவே சமாதியாகிய வாராதனையுமாம். கண்ணும், தொக்கும், காதும், நாக்கும், நாசியுமாகிய ஐந்திலும், பஞ்சவிடயங்களைச் செறிக்குமிடத்தும், நித்திரைசெய்யுமிடத்தும், போகுமிடத்திலும், நடக்குமிடத்திலும், சம்பாஷிக்குமிடத்திலும், முழுதுமஞ்ஞானமாகவேண்டும். —

௩௮. ஞானதேவார்ச்சனையைச் சொல்லியதன் பயனையுரைத்தல்.

பிரகாசிக்கின்ற ஆன்மதத்துவத்திலது, மேலான தியானத்தை பூசாதிவினைகளுடன் செய்கின்ற மாராதனையாகும்; இம்மார்க்கத்திலுலல்லாமல் வேறுமார்க்கங்களினால் மகான்கள் அறிகின்ற வுண்மைஞானம் கிடைக்கமாட்டாது. பூரணத்தியானமான ஆராதனையை, யாவரு மிக்கணப்பொழுது செய்தாலும், பதினொன்றுமாத்திரையில் கோதானபலனாகும். —

௩௯. இதுவுமது.

இயல்புள்ள ஆத்மதேவ

* † இ-ம். ஞானத்மாவின் வியாபகத்தைத் தெரிவித்ததாம்.

வதையை நூறுநொடிநேரம் ஆராதிக்கில், ஆயிரமசுவமேதத்தினது பலனும். அரைநாழிகை யாராதனை செய்பவர்கள், இலட்சமசுவமேத ப்ரயோசனமடைவார்கள். இக்கிரமத்தினால் இலாபமிகுந்த வாராதனையை யொருநாழிகை நேரஞ்செய்தால், இராஜசூயயாகத்தின் பயனும். —

௪0. ஞான தேவார்ச்சனையைச் சொல்லியதன்பயனை யுரைத்தல்.

பாசமில்லாமல் ஆத்மஞானத்தை பதினைந்துநாழிகை ஆராதிக்கில், இலக்ஷமிராஜசூயயாகத்துக் கொப்பாகும். இந்தப்ரகாரம் ஒருதினமாராதனைசெய்யில், குற்றமற்ற பிரமப்ரகாசத்தில் பொருந்தலாகும். இதுவே குற்றமற்ற மேலான யோகமும் இதுவே மேலான கிரியையுமாம். † —

௪௧. தீவினையெலா மறுத்தெனுங் கவிமுத லிவ்விருபத்தொரு கவிதையினானுஞ் சர்வம் பிரமமய மென்னும் பரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய புறப்பூசையைச்சொல்லி யிதற்குச் சாதனமாகிய ப்ரத்யேகாத்ம ஸ்வரூபமாகிய வகப்பூசையைப் போதிக்கத் தொடங்கல்.

ஞானதேவனது புறப்பூசையான திதுவேயாம்; அகப்பூசையை திடமாகக்கேட்பாய். சதாகாலமும் சரீரத்தில்வசிக்கின்ற இந்தத்தெய்வமான இந்தப் பரமசிவத்தை மறவாமல் வருபவனும், இருப்பவனும், நித்திரைசெய்து எழுந்திருப்பவனும், குணமான செல்வவிடயங்களை அனுபவிப்பவனும், தன்னுபவனுமாக தியானித்து, ¶ — பலவாகச்சேர்ந்த வஸ்துக்களிலடைந்து தனது தத்துவஞானமாகிய தருந்த

௪௨. நின்மலவறிவினாற் சுகபோகத்தையருச்சித்தல்.

தீர்த்தஸ்நானத்தினால் களங்கமற்று தவறுதஞானார்ச்சனையினால் மிகுந்த சுகஞானமான சிவலிங்கத்தை விரும்புகின்ற வாராதனையைச்செய்யவேண்டும்; ப்ரகிருதியில்லாத இந்தஞானமானது கூடாதிருக்குமிடமுண்டோ. —

௪௩. அகத்திற்குறிக்கின்ற லக்ஷியங்களை வியாபித்து நிற்றலெனல்.

ஞானதெய்வமானது மனத்திலும், சிந்திப்பிலும், பிராணாபானமத்தியிலும், இருதயத்திலும், கண்டமத்தியிலும், நாவின்மத்தியிலும், புருவமத்தியிலும். நாசிகாந்தத்திலும், முப்பத்தாறுகப் பொருந்திய பதத்திலும், மனதின்றிரிபுநீங்கின உள்ளத்தினிறைந்திருக்கும். —

௪௪. மனமுதலியாவு மயினசத்தியாயுள்ள சத்தனை யாராதித்தல்.

எனதுசரீரத்தில் ஞானப்ரகாசமாய் விளங்காநின்ற தெய்வத்தை, நானென்றுசிந்திக்கின்ற மனமும், விழியும், வாக்கேந்திரியங்களுமாகிய சத்திக்கூட்டங்களனைத்தும் பிரிவில்லாமல், புருடனைவிட்டுநீங்காத குலஸ்திரீகளைப்போல, எப்போதும் ஆத்மாவை நெருங்கியிருக்குமென்று சதாகாலமும் தொடரும் பாவனையைச் செய்யவேண்டும். —

௪௫. சித்தமுதலியயாவும் பரிசாரகரெனல்.

திரிலோகங்களையும் அறிவிக்குமனமானது, என்னுடைய வொப்பற்ற துவாரபாலகனும்; என்றனக்கு நல்லசிந்தையானது உள்வாசலிற் பொருந்

---

† இ-ம். ஞானார்ச்சனையின்கிரமமு மப்பூசையின் பயனளவையுமுரைத்ததாம்.

¶ இ-ம். அகப்பூசை சமாதிஞானமும் புறப்பூசை சாட்சாத்கார ஞானமுமாமென்பதாம்.

திய பரிசாரகனும்; விருத்திஞானங்களானவை முடிவான தேகத்துக் காபாலங்களாம்; ஞானேந்திரியங் கன்மேந்திரியங்கள்பத்தும் வாசல்களாம். என்கின்ற பாவனையொழியாமல், — அவ்வண்ணமான இந்தப் ரத்யக்ஷஞானமே தற்பரஞானமாகிய ஆத்மாவாயான் முடிவாகாமலும், பிரிவில்லாமல் அவமுறாமல் சகலத்தையும் அறிந்தும் ஏகமாயும், பூரணமாய் சகலத்தையும், பூர்ணமாக்கி எக்காலத்திலும் ஒப்பற்ற சமத்துவமாகி இயல்பான வாசாரமும், இயல்பானப்ரகாசத்தைக்கொண்டு சாமானியமில்லாததாயிருக்கின்ற ஞானமாயிருக்கேன், நீங்கேனென்று ஆராதிக்கப்படுவது. — சின்மயமான இவ்வாராதனையினுல் யிருந்த தெளிவை அடையலாம்; சமத்துவமாய் யாவுமாயிருக்கின்ற விசாலமான வழியினுல் சரீரஞானம் அனைமென்றறிந்து இதற் கதீதமாகிய ஞானத்தை அடைந்தவொரு திரவியத்தினுல் சின்மயமானவர்கள், எப்பொழுதும்விட்டு நீங்காமல் ஆராதிக்க வேண்டுமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். — கிடையாததாவொருவஸ்துவை பெறவேண்டுமென்று இதற்காக விதனப்படாமலும், ஆசைமார்க்கத்தினுற் றட்டுப்படாமலும், ஞானத்தினு லாராதித்தல் முழுக்காலும். அன்னபானத்தினுலும், தடையின்றி மேவியிருக்கின்ற சம்பத்தினுலும், சயனத்தினுலும், ஆசனத்தினுலும், வாகனங்களினுலும், சகல வியாதிகளினுலும், ஆத்மசுகத்தையுணர்ந்து வாராதனையச் செய்யப்படுவது. — மனோ வியாதியினுலும் தேக வியாதியினுலும், போகசம்பத்தினுலும், சகல துன்பங்களினுலும், நீதியைச் செலுத்துகின்ற விசாரத்தியாகத்தினுலும், மிகுந்த தரித்திரத்தினுலும், அதிசயமான குற்றமற்ற விருத்தியங்களான பட்டங்களினுல் ஞானத்தைத்தரித்து ஆராதனைசெய்ய, குற்றமற்றபோகத்தைக் கொள்ளுதலாலும், குற்றமுள்ள போகத்தை மாற்றுதலாலும், ஆராதனை செய்ய, — அபேக்ஷையினுல் கிடைத்த வஸ்துவை இனிமையாகப்புசித்து நீக்கிவிட்ட பதார்த்தத்தைப் பொருந்தாமலே ஞானிச்சேயனாம். பயப்படுகின்ற துக்கமுறுதலிய சகலத்தையும் ஞானஸ்வரூபமாய் முடிவின்றிய ஞான தேவாராதனையை தவிராதவர்கள் சித்திக்கவேண்டும். — எப்போதும் சகலரூபங்களினுலும், சகலவிடங்களினுலும், எல்லாம் பிரமமேயென்று தெளிந்து ஆராதனைசெய்யவேண்டும்; அல்லவென்று வெறுக்காமலும் ஆமென்று விரும்பாமலும், கிடைத்தபோகங்களைத்தும்

சுசு. தன்னைச் சித்தாகவே யாராதித்தல்.

சுஎ. ப்ரத்யேகாத்மாவை யாராதித்தல்.

சுஅ. தேகங்கன்மங்களுக்கு முன்னான சித்தையாராதித்தல்.

சுகூ. இதுவுமது.

எ௰. யாவையு முணர்வாகப் பூசித்தல்.

எக. இதுவுமது.

ஞானிகளுக்குப் பொருந்திய சுபாவத்தினால், கடலுக்கு ஆற்றின் கூட்டங்களைப்போல அநுபவித்தற்குரியதாகும்.

௫௨. பூசா திரவிய மீதெனல்.

—இழிவுமுயர்வுமாகிய பார்வைகளெதிரிட்டால் சற்றும்பிடியாமல் தேசமுங் காலமுந் தொழில்களுமாகிய விவைகளுக்கு உரியதாய் சுகதுக்கங்களை குற்றம்பொருந்திய வேற்றுமைகெடக் கைக்கொண்டு ஆராதிக்கவேண்டும். சொல்லப்பட்ட தேவபூசாவிதியில், மகத்தான விவைகளே நல்ல பூசாதிரவியமாம்.

௫௩. திரவிய வியல்பைக் கூறுதல்.

— இப்படிப்பட்ட திரவியங்களியாவும் இனிமையாகிய ஒருசத்தியினாலும் நினைக்கின்ற பாவனையினால் புளிப்பும், உறைப்பும், கசப்பும், துவர்ப்புமாகிய எல்லாவற்றின் அதிசயமான அறுசுவையினால், அற்பமுமில்லாமல் நிறைந்தனவாகிய அச்சாந்தியென்கின்ற விரதத்தினால் அரியதுவமுள்ளவோ மிகவும் பூரணமானது,

௫௪. திரவியசுத்தி சொல்லுதல்.

— உரிமையான சாந்தியென்று சொல்லப்பட்ட இரசசத்தியினால் பாவனைசெய்யில், தொகுத்து விடயங்களாய் பார்க்கின்ற சகலமும் இமைநேரத்திலமுதமாய் பரிசுத்தமான சந்திரனது, சொரிந்த வமுத இரசத்தைப் போலவாம். மேலானசமமானது, சாந்தத்தினால் அறிவினாற் பாவனைசெய்ய, ஞானவஸ்துவா யிருந்தும் சிலையைப்போல விளங்கும்.

௫௫. தெளிவாய்ப்பூசிக்கின் மாயைகெடுமெனல்

— தேசமுங் காலமுஞ்செயலுமாகிய இவ்வொழுங்கினால் அடைந்த வஸ்துக்களினது சுகதுக்கங்களின் மயக்கங்களை யெறிதலினால், தேகத்திலுள்ள தேவதையை ஆராதனைசெய்து இச்சைகளனைத்தையும் அறிவில்லாமலிருப்பாய். மேலான சுத்தமாயையானது, இழிவான அசுத்தமாயையைக்கெடுக்கும், மகாசங்கற்பமான விஷத்தையுங்கெடுக்கும்.

௫௬. ஆசிரியருபதேசமே யறிவைக் கொடுக்குமெனல்.

—நினைத்து அழுக்கினால் அழுக்கைக் கெடுக்கின்ற வண்ணானைப்போல, அசுத்தமாயையை சுத்தமாயையினால் கெடுக்கவேண்டும். சுத்தமாயையானது, காரணப்பொருளல்லாததானாலும், ஆசாரியவசனத்தினால் சொல்லப்பட்ட வஸ்துவாய் காரணமாகப் பொருந்தும். அறிய வ[illegible] ஞானமாகிய தனதாத்ம ஸ்வரூபத்தை தவறாமற்கொடுக்கும்.

௫௭. தனதறிவைத்தானே தரிசிக்கவேண்டுமெனல்.

— ஆசாரிய ரனுக்கிரகத்தின் கிரமமானது, குறிப்பினாற் சீடனிடத்தில் வளர்வுற்று கலக்குமானால் குருவினாற் காட்டற்கரியதாயினும், சீடனுக்கு ப்ரத்தியக்ஷமாயறிய வரிதானாலும், சுயமாகவே பிரமஸ்வரூபமானது ப்ரத்யக்ஷமாகும். பலசாஸ்திரார்த்தங்களினாலும், ஆசாரிய வசனத்தினாலும், பெறுதற்கரிய தனது ஞானத்தினாற் முனையுணர்ந்து அடையவேண்டும்.

௫௮. தனதறிவினாற் கூடா

— ஆசாரியர்வசனத்தினாலும், சாஸ்திரார்த்தங்களினாலும், அல்லாமற்பெறுதற்கும்

விடிந் சுருதிகுரு சுவானுபவத்தி னுங் கூடுமெனல்

அரியதாம். ஆசாரியரும், ஞானசாஸ்திரமும், சிட்டனு ம், விசேடமாயிந்த மூன்றுபேர்களுக்கு மேனில், பா சத்துக்கதிதமான பிரமனையும். பலகாலமிங்ஙனது விச்சங்கமானது பகற்காலம் சகலகிரியைகளையுஞ்செ ய்ப்படுபோலவுஞ்சமற்ற ஞானத்தைக்கொடுக்கும். †-

௫௯. இத் தேவா ராதனையினுஞ் சகத்தோற்றமியல் சாஷாத் கார மாமெனல்.

சொல்லிய மார்க்கத்தினுல் ஞானவான்கள் நாடோ றுந் தேவாராதனை செய்யில், நான்முதலான அடியா ர்களாம் தேவ்திரஞ்செய்யப்படி. மேலா யிருக்கின்ற பிரமபதத்தையடைவார்கள். அலைமானது, இவ்வாற விருக்கும், உள்ளதுபோலத் தோற்றலும். அரியதவி ற் சிறந்த வரிட்டமோ? பாதிபாமாத்திரமேயன்றி வே றொவ்வே. ‡ — மூன் பிரமனுவியானவர்கள ஒன்ற டாகிய வசனங்களைக்கும் தெரிகின்ற தெய்வ ப்பொருளோ அதுவே ஞானமென்று நினைப்பாய்.

௬௦. சித்தின் சத்தியில் வுண்டான இருவகைப்படுவ ச் சிலேண்டியா கக்கூறல்.

அசோசாமான பச்சைதன்னியமானது தோசற்றி இ ரண்டாகவறிகின்ற இரிஸ்யத்தைப்போலவே தொட ரும் ; பரியாயமாமங்களுக்கு மூரியதாய் மனப்பான மையினுல் அகம்பாவத்தையும் பின்தொடரும். —

௬௧. இதுவுமது.

இவ் வகம்பாவத்துக்கு தேசமானையாயெய்தும் கால மானையாயெய்தும், சாமமின்ற தொழிக்கட்டங்களாயி ய சத்திக்கட்டங்க ளுண்டாம். இவைகள் குற்றங்க ளற்றவானது, விகாரத்து மேலாமனடக்கு, அப் போதே யிருந்த புத்தியென்று சொல்லப்பட்டதாய் இவைமிவையுடைய முடிக்கவிடத்தில் வசிக்கும் : —

௬௨. இதுவுமது.

சத்தமும் கிரியையும் ஞானமுமென்கின்ற சத்திக் கூட்டங்களோடுந் சேர்ந்த கூட்டமானது, ஒருமொ டியில் நினைவையுண்டாக்கும் ; சங்கற்ப மென்னும் விருத்தியினது, விதையாமென்று சொல்லப்படு மனமுண்டாகும் ; கொத்தவியாபிரமட்டமாயாம் ; வசனத்துக்கு அதுவே யிடமென்று சொல்லுவார்

௬௩. இதுவுமது

கள். — அதன்மனதுக்கு, மேலான வாக்காலிறுல் உருவாகிய சத்திகளை யமைத்தல், இவ்வமனவென்ப தற்கியதாகும். இதுவே அசைமுதலாகிய அருவங் களையடைந்து பஞ்சமுதி முதலான தத்துவங்களை யு ண்டாக்கும். இசைக்கின்ற ஆகியத்தில் பேர்களுண் டானதுபோல அதிலமேதுமனைசைமயுண்டாகும். ¶ —

† இ-ம். பரத்தியாகத்மாவாகிய தேவையுமலைத் தியவியங்களோடு மா மாறிக்கும் தன்மையு மலஞ்சம்சன்னமாதற தேகத்தையும் விசமமாக வழிவி த்ததாம்,

‡ இ-ம். அகப்பூசைபுறப்பூசையினுற் போதாகத்த புத்தேனேப்போதித்ததாம்

¶ இ-ம். சித்தினகம்பாவமுதற் றிரிஸ்யவாசனை பரியந்தஞ் சொற்றமெனப் படுதாம்.

௯௪. அபக்கு விக் குபதேசிக்கக் கூடாதெனல்.

உலகநாமத்தைப் பெற்றிருக்கின்ற இந்த வாதனையானது, கெடுமாயின் கெடாத வுபசாந்தமாம். அகப்பாவத்திலும், இவ்வுலகத்திலும், கானற்சனத்திலும், உயர்வான நிச்சயமுடையவர்கள் உபதேசிக்கத் தகாதவர்கள், அவர்களை உண்மையையறிந்த சத்துக்கள் மிகப் பாவிகளாமென்று நிந்திப்பார்கள், *— பிரமத்தையறிந்த விவேகத்தை யுடையவர்களுக்கு, பிரமவுபதேசஞ் செய்வார்கள் ; நிரமின்றிப் பிரமையிலிறங்கினவர்களுக்கு, உபதேசிக்க நினையார்கள். சொன்னலது கனவிற்கண்ட புருடனை சாக்கிரத்திலுள்ள குமரிக்கு, கொழுநனாகச்செய்கின்ற தன்மைக்குச்சமானமாம். தவத்தையுடைய வசிட்டமுனியே? நீர் கேட்ட வினவுக்கு தத்துவத்தைச்சொன்னேம்.‡ —

௯௫. பக்குவிக்குபதேசிக்க வேண்டுமெனல்.

௯௬. சுவாமி யெழுந் தருளு தல்.

நினக்கு என்னிடத்தில் அன்புண்டாகக் கடவது : யாம் போவோமென்று பார்வதியும் பரமசிவனும், பரிசனங்கள் பக்கத்திற் சூழ்ந்துவர ஆகாயத்திற் சென்றார். குளிர்ச்சியுள்ள நல்ல புட்பாஞ்சலியை வருஷித்துவணங்கினேன் ; அன்றுமுதலாக அத்துக்க நிவிர்த்தியையுடைய தடையற்ற வானந்தமுண்டாகும் வழியினால், உண்மைஞானத்தைதொடர்ச்சியுடன் ஆராதிக்கின்றேன்.† — இப்போதும், எப்போதும், தவறுமற்செய்கின்ற ஆராதனைக்கிரமத்தினால் வாசனைகள் பாரமில்லாமல் தாய்குகின்றேன் ; அப்பொழுதுகிடைத்த கிரியைகளுடன் ஒழுக்கங்களை புட்பங்களாக இருக்கின்றதேவார்ச்சனையில் குறைவையும், நிறைவையும், இராவிலும், பகலிலும், பார்க்கிலன் —

௯௭. ஞானபூசையா வுள்ளவனுபவங்கூறல்.

௯௮. தனக்குபதேசித்தபடி இராமனுக் காம்பொருட்டுபதேசித்தல்.

ஞாதாவும் திரிஸ்யமுஞ்சேர்தல் ஆத்மாக்களனைத்திற்கும் சமமாகும். அச்சங்கத்தில் ஞானயோகிகளுக்கு கிரிகித்தலாவது அவ்விடத்திலுள்ள தெதுவோ அதுவேயாம் ; அதுவே மேலான ஞானாத்மாவுக்கு ஆராதனையாகும் ; தெளிகின்ற இந்த திருஷ்டியினால் விடயசங்கஞ்சேராத மனதினை லுலகத்தின்கண் ஸ்ரீராமா? நீவசிப்பாய். ¶ — இவ்வண்ணம் சகமென்கின்ற மகாரணியத்தையடைந்து நான்புருதேயென்று சொல்லவும், இராமரானவர் சொல்லுவார் சந்தேகங்களனைத்தையுநீக்கினேன் ; நிகவுந்தவறாமல்

௯௯. இராமனுந் தனுபவமுரைத்தல்.

* இ-ம். சகநிச்சய புத்தியுள்ளவனுக் கிவ்வனுபவஞ் சொல்லுத லிழிவென்பதாம்.

‡ இ-ம் சர்வம் பிரமமயமென் றுபதேசிக்கத்தக்க சீடனையுரைத்ததாம்.

† இ-ம். தமதாசாரிய ருபதேசப்படி போதவிலிங்கத்தை யாராதிக்கின்றேனென்பதாம்.

¶ இ-ம். தனதுசுவானு பவத்தைக்கூறி நீயுமப்படியே பூசித்து விளங்குவாயென்பதாம்.

அறியவேண்டியவையாவும் தெரிந்துகொண்டேன்; சலனமில்லாமல் ஒமது இருமையைப் பெற்றேன்; அற்பமிக்கையுள்ள யானையையொத்த இச்சையைக் கெடுத்தேன்; ஒன்றிலுமிகந்த சலனமில்லாதவனுமானேன்.—பவசாகரத்தின் கரையாகிய முத்தியையடைந்து கற்பனைகளனைத்தையும் நீக்கி வருத்தமற்று பிறகு முடிவியாகத்தெளிந்து பிரமானந்தத்தைப்பொருந்தி அவமகிழ்ந்து மனமானது சுபமானதென்று, முத்துவகுதரனவமிகையுள்ள அற்புதனேயே வசிட்ட முனிவரோடு சொல்லி இன்னமுஞ்சொல்லத் தொடங்கினார். ‡ —

௭௦. இராமன் றனதநுபவ முரைத்தல்.

தேவபூசைகதை முற்றிற்று.

வில்வபலக்கதை.

அவதாரிகை.

முற்கதையில் அபரோக்ஷஞானிகளாற் சர்வம் பிரமமயமென்று நிருவாணகஞ்சொல்லி, அதன்பின்பரமே சர்வமுமாமென்பதை யறிவிக்குநிமித்தம் வில்வபலக்கதையை நிரூபிக்கிறார்.

௧. இந்தஞான தேவை யாரறிப்பதும் இச்சைதடையாதலால் அதை நீக்குதற் பொருட்டநியல்லைக்கூறுதல்.
௨. இதுவுமது.

உலகுவசனமாகிய வருதவருடமானது, பூரணமாகியும் உள்ளே போதுமென்கிற திருத்திபிறக்கவில்லை, இன்னமும் பூரணஞானத்தைச் சொல்லுவாயென்று இராமவன்கேட்க, சிலைபெற்ற மகாஞானி வசிட்டமுனிசொல்லுவார். வஸ்துக்கள் முந்தினவஞ்ஞானத்தில் இனிமையாய், மத்யஞானத்தில் அப்படியே இன்பமாயமாட்டது, — இதைச் சந்தேகமறியாதவர்கள் யாவர். பொருளானது, ஆசைப்படவின்பமாகும்; இச்சையதுபோது கசப்பாகும். ஆசையினால், ஆசையானது, இன்பத்துக்குக் காரணமாகும். அந்தவின்னிமையும் போதுமென்று திருத்திபிறக்க நீங்கும்; ஆசையைநீக்கினால் சமஸமுமிங்கும். * — பலவிதமான விச்சைக சொரிப்பக்கடவது, பாவலை விடக்கடவது, மனமில்லாததாய்க் கவிசுக்கடவது, நிச்சயமானவைனே? சினக்குச்சொல்லுவோம்; அற்பமாகியவாதனையையடையாத அந்தக்கரணத்தினால் செய்யுந் தொழில்களில், வலிமையினால் கலக்கங்களகேயந்தா

௩. வாசனையற்ற மனதினாற் செய்யுந் தொழிலை துன்பமாகாதெனல்.

‡ இ-ம். அக்கமிஷிர்த்தியாய்த் தடையற்ற பிரமானந்தாமுதமா யுள்ளாம்விஷ்ராந்தியடைந்ததாம்.

* இ-ம். இச்சாத்யாக வருத்தியைக்கூறினதாம்.

ச. வாசனு நாசத்தான் மனோநாசமாமெனல்.

லும் துன்பஞ்செய்யாது. — மனமானது, விழிப்பிலுமிமைப்பிலும் உலகத்தையுண்டாக்கிக்கெடுக்கும்; வாசனையைக் கெடுத்தாவது பிராணபந்தத்தினாலாவது மனதைக்கெடுப்பாய். இழிவாயிருக்கின்ற வழியாமையினது உண்டாதலு மொடுங்குதலுமாம் ; உபயத்தினாலும் சுழிக்கப்பட்ட கன்மங்க ளனைத்தும் உண்டாகும் அழியும், —

ரு. மன நசித்த விடமே பரமபதமாமெனல்.

ஆதலினால், ஆசாரியரும் ஞானசாஸ்திரங்களுமாகிய நீங்காத சங்கத்தினாலும், அதன்பலத்தினாலும், அஞ்ஞானத்தையுடைய மனதைக்கெடுப்பாய். பிராணபந்தனம் பண்ணினாலும், அறிவின் சலனந்திரும்படி விட்டாலும், மனமானது கெடும் : அர்தமனோநாசமே மேலாயிருக்கின்ற பரமபதமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். —

சா. பரம திருஷ்டியினால் மனது நசிக்குமெனல்.

திரிஸ்யமும், காட்சியும், கூடியகூட்டத்தில் இவ்விரண்டு, நீங்கியுண்டானவானந்தமே வியாபித்திருக்கின்ற பரமார்த்தமாகும் ; அதற்குமேலாக இனிவேறேவஸ்துவில்லை ; பிரமதிருஷ்டியினால் மனது கெடும், ஒழுங்காகிய மனோநாசமானது பேரானந்தமாம். —

எ. ஞானத்தால்மனது பரிசுத்தமாமெனல்.

அவ்வானந்தந் தேய்தலும் வளர்தலுமில்லையாம் ; தோன்றுதுமறையாது ; ஆராய்ந்தறிந்தஞானவான்கள் மனதுமனமல்ல, அதன்பேர் தத்துவமாம் ; நாநாவிதமான பொருள்களால் வேறுபாடடைகின்றதே மனமாகும், செம்பு சொன்னமாவதுபோல் பொருந்திய ஞானத்தினால் நின்மலமாம். —

அ. சித்தே மனோரூபமாயதீதமாகுதல்.

ஞானமென்கின்ற வுண்மையானது, மனமாகி உலகத்திலொருதரம் தொங்கித்தவிளையாடல்செய்து துரியாவவத்தையைப் பொருந்தி நித்தியமான துரியாதீதவுண்மையாகும். ஆகையினால், பிரமமானது, ஏகமாகியும் மயக்கமுள்ளசகமாய் அநேகமாகியுமிருக்கும். † —

கூ. சர்வம்பிரமமய மென்பதைத் திருஷ்டாந்தரூபமாக வறிவிக்கத் தொடங்கல்.

எல்லாமானபிரமமேயல்லாமல் மொய்த்திருக்கின்ற மனமுதலாகிய வேறுபாடா யிருந்தைவகள் அற்பமுமில்லை ; மனதிலுண்டான ஒருகற்பனையைப்போல எப்போதுந்தோற்றும், அதைச்சொல்லுகின்றேன் அறியக்கடவாய். கல்வியை யுடையவர்களதிசயிக்க நன்றாகியும் அற்பமாகியுமிருக்கின்ற ஓரிதிகாசத்தை, ஸ்ரீராமா ? நீ கேட்பாயாக. —

க0. பிரமஸ்வரூபத்தை வில்வக்கனியாக வுருவகப்படுத்திக் கூறல்.

கோடியும், மகாகோடியும், இலட்சங்கோடிகளு மென்னுமளவைகொண்டிருக்கின்ற காதங்கள் நீண்ட அகலத்துக்கொப்பாகாமற் பருத்தது, நீண்ட மகாகற்பம் வந்திறந்தகாலத்திலும் முதிராதது, அது புராதனமானாலும் பெருமையினையந்த மூன்றும்பிறை

† இ-ம். மனதின்கணுள்ள திரிஸ்யவாசனாரூபமான விச்சைநீங்கினா லம்மனமுதலியயாவுஞ் சின்மாத்திரமாய் விளங்குமென்பதாம்.

௧௧. பிரமஸ்வருபத்தை வில்வக்கனியாகவுருவகப்படுத்திக் கூறல்

யிலும் பெருமையானதாம். — கற்பாந்தத்திலழிகின்ற சண்டமாருதத்திலும், கலக்கப்படாததாயும், பிரமாண்டங்களெல்லாவற்றுக்குங் காரணமாயுமிருக்கின்ற, ஒருவில்வக்கனியுண்டு. சொல்லாநின்றவிக்கு வில்வக்கனியினிடத்தில் உதித்துலவுகின்ற பிரமாண்டங்களானவையொருகாலத்திலுமெல்லைகண்டதில்லை. —

௧௨. இதுவுமது.

எப்போதும் பருவமாகவிருக்குமதனுமுற்பு வருத்தாது; இருக்குமோ மேடபலங்களினது சாரமுழுதையும் பூரணமாகப்பெற்றிருப்பது. பிறரிந்துகொள்ள வியிலுள்ள சதைக்குறைவில்லை; விவரிக்க சதைகளென்றது ஞானவடிவத்தின் சுபாவமேயல்லவாம் *

௧௩. சித்சத்தியின் விலாசத்தை மச்சையாக வுருவகப்படுத்திக் கூறல்.

சந்தான வடிவமாயிருக்கின்ற சித்சத்தியென்னும் சாதுக்காரத்திலுஞ் சாமானகன்வேடத்தில் இருப்பக் குறவிலிடுக்கானது, வியாபித்ததைச் சொல்லுமிடத்து, இதுவிருத்திரைவாகாயம்; இதுகாலத்தின்கலைகள், இது ஆழிவில்லாதநியதி, இது அசைகின்ற செய்கை,

௧௪. இதுவுமது.

இது பிரமாண்டமண்டபம், இது திசைகளென்றும்மென்றுசொல்லப்பட்ட பேதம்பொருந்திய வில்வபலத்திலுள்ள மச்சையானது ஸ்ரீராமா ? பெருமையுள்ள சித்சத்தி சமத்காரமென்று வீட்டுமுறவி சொல்லவும், ஸ்ரீராமருஞ் சொல்லுவார். ஞானத்துக்குருநாதனானவரே ? நீர் வில்வபலமாக சொன்னதறிந்தேன். ¶ — ஆசாரியரே ? வில்வப்பழமென்று சொன்னது பூரண ஞானத்தின் வேறான சப்பாவமே; அதன்பாலமுதலிய வஸ்துக்கள் வியாவும், அந்த ஞானத்தினது வெளியேயாம். அவிழமமேயும், சகலமேயும், சேர்க்குகின்ற ஞானவன்முடந்துக்கு இடமுள்ளவரானீரே ? எப்போதும்பேதகமில்லை. —

௧௫. பூரணப்பழமே அதன்மச்சையும் பிரமாண்டமு மேருமுதலியவையுமென்றல்லோ வப் பிரமமுஞ் சகத்தும் பிரிவின்றி விளங்கு மெனல்.

௧௬. இதுவுமது.

பிரமண்டமென்கின்ற பூரணபலத்திலுள்ள மச்சையானது மகாமேருமுதலிய சகலமுமானதுபோல வேறாயிருக்கும், ஞானமயமான வில்வபலத்திலுள்ள வியாபித்திருக்கின்ற தன்மையானது பிரமாண்டமுதலிய சகல வினைத்துமென்று சொன்னார். ‡—

வில்வபலக்கதை முற்றிற்று.

---

* இ-ம். பிரமசுபாவத்தை யுவமித்ததாம்.

¶ இ-ம். சித்சத்தின் வியாபகத்தைக் கூறியதாம்.

‡ இ-ம். பிரமசத்தியே யாவுமாய்விளங்கு மென்றறிக்கவே சொல்லியதாம்.

சிலைக்கதை.

அவதாரிகை.

முற்கதையில் சர்வம் பிரமவியாபகமென்பதை யறிவித்து, அஃது வேறுபோற் றோற்றினும், பிரமஸ்வரூபப்ரகாசமே யென்பதைத் திருஷ்டாந்தமா யறிவிக்குநிமித்தஞ் சிலைக்கதையை நிரூபிக்கிறார்.

க. சித்தைச் சிலையாகக் கூறல்.

திரும்பவு மொருகதையைப் பேரழகான ஸ்ரீராமா ? நீ கேளென்று வசிட்டமுனியானவர் சொல்லுவார். பிரியாமல் நெருக்கமுற்று மிருதுவாகி விசாலங்கள் முடிவில்லாமல் விளங்காநின்ற வோர் மகாசிலை மாட்சிமைப்பட்டதாகவுண்டு ; அச்சிலையினிடத்தில் விரிந்ததாமரைப் புட்பங்கள் விகசித்திருக்கின்றதுளவில்லை. —

உ. சிற்சுபாவமான சகத்தைச் சித்திரமாகக் கூறல்.

பத்திரங்கள் ஒன்றிலொன்றுசேர்ந்தன, நெருக்கமுற்றன, நேரே சிலது தெரியாதன, சிலது தெரிந்தன, சிலது மேலேதானாயின, சிலது கீழேதானாயின, சிலதுநிலையாயின, வேரில்லாத இதன்மத்தியெல்லாம் விளங்குகின்ற சங்கங்கள் அநேகந்தானாயின, சக்கரங்களும் செய்ததாமரையைப்போல அளவில்லாதாயின :—என்று வசிட்டமுனி சொல்ல,

ங. சிலையன்று சித்தே யென்ல்.

சாலக்கிராமமென்கின்ற நாமத்தையுடையஸ்தானத்தில் நெடியமாலானவர் நிற்கப்பட்டமலையில், அப்படிப்பட்டதான ஒருயர்ந்தகல்லை பார்த்தேன், என்றுசொன்ன ஸ்ரீராமனை முனியும்பார்த்து மலையானது நீ முன்புபார்த்ததன்று, பெரிதானவண்டத்தின் நிலைமைகளானவை அகத்தில்வாசஞ்செய்கின்றசித்தையே கல்லென்றுசொன்னேன்.—

ச. சித்துக்கும் சகத்துக்கும் வேறுபாடின்மையைக்கூறல்.

அநேகமும், ஏகமும், உண்மையா யிருக்கின்ற வுலகங்கள், அகத்திற்றங்கிய ஞானமானது, மேலானசிலையாகும் ; நன்றாய்நெருங்கிக்கெட்டியாய் ஏகமென்றுசொல்லிய ஞானகல்லினிடத்தில், சகக்கூட்டங்கள் ஆகாயத்தில் வசிக்கின்ற வாயுவைப்போல, வாசஞ்செய்யும். பூமியும், ஆகாயமும், காற்றும், மலையும், இக்குமாகிய இவையாவுங்கூடியும் பெரிய கல்புரையுடையதாகாது.—

ரு. சித்திற்சகம் நிச்சலமாய் விளங்குமெனல்.

அழகான கல்லில், தாமரையும், சங்கமும், சக்கரமும், என்கின்ற இரேகைகள்பொருந்துகின்றது, ஒப்பற்ற கழுத்தியவைத்தையாகப் பொருந்தும். அதைப்போல சூக்ஷ்மமாற்றஞானத்தின்கண் சகங்களியாவும் வேறுபாடில்லாமல் இருக்கும். எங்கவிடத்தில் ஏதெப்படியிருந்ததோ அந்தவிடத்தில் அப்படியேயிருக்குமென்று

சு. சகத்து சிற்ப்ரகாசமாய் விளங்குமெனல்.

சத்துருக்கள் சொல்லுவார்கள் —பலவிதமாகிய விரேகைகள் அகத்திற்பொருந்தினாலும் சிலையைப்போல நீங்காதவுலகங்களை அகத்திலடக்கியிருந்தாலும், பே

தம்பொருந்தாமல் சித்தொன்றுமேயாம் ; காடாகவிரம்பிய தாமரைகளனைத்தும் வேறுபடாமல் கல்லாகவேயிருக்கும் ; ஞாயத்தைப்போலு பெருமைபொருந்திய ஞானஸ்வரூபத்தை வேறுபடாமல் சகமனைத்துஞ் அச்சித்துமயமாகும். — பரந்த கல்லிற்பொறித்த தாமரைமுதலியவை உண்டாகி இறந்ததுண்டோ, ஞானத்தில் மூன்றுலகங்களும் அந்தப்ரகாரமேயாம். வில்வபலத்தில் நிறைந்தமச்சையினது சிறமமுன்சொல்லியதுபோல அளவற்ற வேறுபாட்டினால் விரிந்த வண்டங்களானவை குற்றமற்ற சித்தினிடத்தில் நிறையும் வேற்றுமையென்று சொல்லக்கூடாது.—பிரமத்தினது சற்பாவமே ரூபமாகியிருக்கின்ற பெரியசகத்தின் வேற்றுமையாவும் உண்மையாக சிலையினிடத்திலிருக்கின்ற பதுமங்கள்போல, சுழுத்தியாகியும், சாந்தமாகியும், சமத்துவமாகியும், ஞானமாகியு மிருக்கின்ற கைவசப்பட்ட தனதாத்மஸ்வரூபமாகிய இடமாகும். நிலையில்லாத சிருட்டிகளனைத்தும் ப்ரயோசன மில்லாததாம், வடிவங்களனைத்தையும் எப்போதுஞ் சேராதனவாம்.¶—

எ. சகமுற்பத்திலயமின்றி யெப்போதுஞ் சித்தில் விளங்குமெனல்.

அ. பிரமசத்தே ப்ரபஞ்சமாக விளங்கு மெனல்.

சிலைக்கதை முற்றிற்று.

அருச்சுனன்கதை.

அவதாரிகை.

முற்கதையில் துவிதம்போலத்தோற்றுவதும், அத்துவிதாநந்தமாதலாற் சர்வம் பிரமமயமென்பதை ப்ரத்யக்ஷமாகத்தரிசிப்பித்து, இவ்வனுபவிக்கு யுத்தமுதலிய செய்கையும் வேறுபடாதென்பதைத் தெரிவிக்கு நிமித்தம் மேனடக்கு மருச்சுனன்கதை[illegible] நிரூபிக்கிறார்.

க. சர்வம் பிரமமயமாய்விளங்கப் புரியட்டகசரீரம் வந்தகாரணமியாதெனில் அதற்குத்தரங்கூறல்.

இப்படியென்று வசிட்டமுனி சொல்லவும், தெரியவேண்டுவன யாவையும் தெரிந்துகொண்டேன், பார்க்கவேண்டுவன யாவையும் உமது கிருபையினால் பார்த்தேனென்றாலும், சுகபோதமானது வளரும்பொருட்டு திரும்பவுமொன்று கேட்கின்றேன்; நெருங்கிய சகத்தை அநேகந்தரமுண்டாக்குவதாய் கண்ணாடியிற் சாயைபோல தோற்றுகின்ற புரியட்டகசரீரத்தினது உருவமியாது சொல்லுமென்றுகேட்க, வசிட்டமுனிசொல்லுவார். — ஆதியந்தமில்லாததாகியும், உலகங்களின் விதையாகியுமிருக்கின்ற பிரமமா

உ. பிரமப்பிரகாசமான சிவஸ்

¶ இ-ம். கல்லிற்தோற்றுகின்ற சித்திரங்களதற்கு வேறுபடாமலதுவாகவிளங்குதல்போல பிரமத்திற்றோற்றுகின்ற சகமதற்குவேறுபடாமற் பிரமமாகவே விளங்குமென்பதாம்.

புரணமே புரியட்டகசரீரமாதல்

னது அடுத்தவண்ணம் வேறுபாடடையவும் சீவனுகும்; யானென்று நினைவுவேற்றுமைப்பட்டு குற்றமுறவகங்கார மென்பதாம்; மனனஞ்செய்ய மனமாகும். அறிவானது அறிகின்ற நிச்சயத்தினல், புத்தியாகும் விடயங்களாம், இந்திரியங்களாகும். — சரீரமென்கின்ற வெண்ணத்தினல் சரீரமாகும்; கலசமென்னும் கருத்தினல் கலசமேயாகும்; சடாவத்தையுடையவிவ்வுருவத்தை ஸ்ரீராமா? புரியட்டகமாகுமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். பரிசுத்தமான ஞாதா, கருத்தா, போக்தா, சாட்சி, என்றுசொல்லுவது முதலியவற்றின் வேகமாகச்சென்று மேவிய நாமமுள்ள சீவனுகிய சித்தானதை புரியட்டகமென்று சொல்லப்படும். * — புதுமையாயிருக்கின்ற புரியட்டகத்தினுடைய வயத்தினல் சொப்பனத்தின்மேற் சொப்பனம்பிடித்து, நானாவிதமான மித்தியா கற்பனைகளைக் காணுகின்ற தன்மையைப்போல இவ்வுலகமும் விளங்கும். பூமியையளந்த கிருஷ்ணசுவாமியானவர் அனுக்கிரகிப்பதாகிய ஒருமார்க்கத்தைக் கேட்பாய்; அந்தமார்க்கத்தை விசயன்பிடித்து ஆதியந்தமில்லாத பிரமபதத்தில் சீவன்முத்தனுகி சுகசீவியாவன். —

௩. இதுவுமது.

௪. புரியட்டகத்தைச்சொல்லிய தன்விருத்திகண்முதலிய சகத்துமாத்ம ஸ்வரூபமாய்விளங்குமென்பதைகீதாசாரத்தாற் போதிக்கத் தொடங்கல்.

௫. இதுவுமது.

பயப்படாமல் விசயனுனவன், காலங் கழிப்பதைப்போல, ஸ்ரீராமா? காலத்தைத் தள்ளுவாயென்றுவசிட்டமுனிசொல்ல, பெருமானே? விசயனுனவன், எப்பொழுது பிறப்பான்? அவ்வருச்சுனனுக்கு இலக்குமிநாயகனுன கிருஷ்ணசுவாமியானவர் கிருபையினல் எப்படி யுபதேசிப்பதென்று கேட்ட ஸ்ரீராமருக்கு, அரிகிருஷ்ணனுக வெழுந்தருளி விசயனுக்கு இனியுபதேசிக்கு யார்க்கத்தை வசிட்டமுனி சொல்லுவார். ¶ — சதுர்யுக முடிவுகடோறும் சீவர்களியாவையும் கொன்றதொழிலை யமனினைத்து தகுதியாகிய தவத்தைச்செய்வான்; ஒருகாலமெட்டுவருடமும், ஒருகாலம் பத்துவருடமும், ஒருகாலம் பன்னிரண்டுவருடமும், ஒருகால மைந்துவருடமும், ஒருகாற்றிருப்பவேழுவருடமும், ஒருகாலம்பதினறுவருடமும், இந்தப்பிரகாரம் பலகாலந்தெளிந்து தவஞ்செய்வன். —

௬. இயமன்றபஞ்செய்யுங் காலநிருபணம்.

௭. அந்தந்தக் காலத்திற்பூபாரநீக்குதல்.

இவ்வண்ணமே யமனுனவன், தவத்தைத்தரித்து ஒருசீவனையுங் கொலைசெய்யாமல் இருந்தகாலத்தில் அநேக சீவர்களாலும்பேர்தலுக்கிடமில்லாமல் பழைய சகமானது மிகவு நெருங்கியிருக்கும். ஆகையினல் அந்த நானாவிதமான பலசீவர்கள், அளவிறந்தனவா

* இ-ம். சீவசைதன்யத்திலுதித்த வகங்கார, மனது, புத்தி, சத்தம், பரிசம், ரூபம், ரசங் கெந்தமென்னு மெண்வகையும் புரியட்டக சரீரமாமென்பதாம்.

¶ இ-ம். சர்வம் பிரமமயமென்பதை யறிவிக்கத்தொடங்கினதாம்.

யினை, சகாயமுடைய யுத்திகளினாலும் ஆதிமுதல் கண்ணன் பூர்வாசாரத்தை நீக்குவிக்கும், — இக்கட்டாகாரமே காண்டுபுகழும் ஆகிய சீவர்களும், சகமுதலிய யாவு மழிந்து போயின ; அவ்வண்ணம் நீங்கினதோர் கணக்கில்லை. சூரியன்பெற்றமைந்தனவன் அந்தக்காகாரம் ஒழுங்காகவளர்ந்து பல சீவர்களையும் கொலைசெய்து மறைந்தகாலத்தில், பாவமற்ற பத்தத்தைக்கெடுக்கும்பொருட்டு அன்பறிவில்லாத தன்மைத் தரித்து பன்னிரண்டு வருடம் தனித்திருந்த காலத்தில், —

அ. உயிர்களை யழிவைச் செய்த பாபநீக்கும்பொருட்டு இயமன் றவஞ்செய்தல்.

இவ்வாறு பல சீவர்களினும் சேருக்கி யிருக்கின்ற யிருந்தபடியும் யாதினாலேக்குமோ வென்று விஷ்ட்டுணவை பூரித்தனி பவையாக வடைவான் ; இருமாவானவர், இரண்டுருவமாக பூமியிலவதாரஞ்செய்யும், அதில்லாதவேதமுக்கு புத்திரனைத் தருவனம் ; பாண்டவனுக்கு புத்திரனை வழங்கினான், —

க. இப்போதுள்ள பூபாரநீக்குதற் பொருட்டுத் திருமாலிரு வடிவாக வவதரித்தல்.

வாசிட்டனென்று காமத்தையும் விசயமென்று காமத்தையும் தரித்துவருகின்ற காலத்தில், மனம் விசாரிக்கின்ற மாலையை யணிந்த இவ்வுடம்பை யுத்திரர்களான இரிவோதனாதியர்கள், பந்துசனங்களுடன் அருச்சுனன்மேல் குற்றமுள்ள யுத்தத்தைச் செய்ய வருபவர்களாகிய தனதுமாலிகைக் குடைய இறத்தலுக்கு அருச்சுனனுடைய விசாரமுற்று சிக்கிரமாகவில்லையென்பதாகனான் ; அதனினித்தம்பெருஷ்டணரானவர் உபதேசிப்பார். * — விசயனென்கின்ற நாமத்தையுடைய சரீரிக்கு, பிருஷ்டணை யென்கின்ற ஞானசரீரியானது, சொல்லாநின்றதத்துவத்தை நன்றாகக்கேட்பாய். அந்தமில்லாததாய் அதற்கடியதாய் ஆதியந்தமில்லாமல் இருக்கின்ற அனைதும் ஆத்மஸ்வரூபத்தை, அருச்சுனா ? சனனமின்றியிருப்பாய். அப்போது முதல்வருமானது முற்றுமற்றதா யிருக்கும், மாயிசசரீரத்தில் வருகாலத்திலும் சனியாய், மனியாய், சத்தனமே யிருப்பாய். —

கo. தனக்குத் தானே யுபதேசித்தல்.

கக. சரீரத்தின் கண்ணுள்ள சரீரிக்குச் சனன மரண மின்றெனல்.

சனனமானதில்லை இவ்வென்றும் படியான வுருவமில்லை, பின்புநித்த மில்லை, புராதனமானதும் நித்தியமாவெ யிருக்கின்ற நீ கொடாநின்ற வுடம்பிருக்கும் கொத்தமுறும் கொடாது செய்யுந் தினைகளை நீ விடாமல் பலமேட்டைசையாத் தன்னிச் செய்வாய். கவியாத பிரமாத்மனான வொழுங்கை யடைக்கால் அதனைத்திற் பிரமஸ்வருபமா யிருப்பாய். — சல்லாவிடத்தில் சகல காஸ்துவையுந்

கஉ. ஆத்மஸ்வரூபத்தை விசாரித்தல் துதயமாம் பொருட்டுச் சங்கற்பமாகும் பிரமாத்மனை நீஸ்வரூபமானதாகும் யோகஞானமென்று சின்மையறிவித்தல்.

கங. இதுவுமது.

* இஃது பூபாரம் நீக்குவித்தற் பொருட்டு அவதாரஞ்செய் அவசியத்தைத் தெரிவித்ததாம்,

செலுத்தி மேலான விஸ்வரஸ்வரூபத்தை யடைந்து பந்தமடையுஞ் சீவர்களனைத்திற்கும் ஈஸ்வரனாகி சங்கற்பத்தின் பிடிப்பைக்கெடுத்து நீ சமத்துவனாகியும், சாந்தமனதை யுடையவனாகியும், தவத்தையுடையவனாகியும், சந்நியாசத்தையுடையவனாகியும், குற்றமற்ற யோகியாகியும், ஞானத்தையுடையவனாகியும், மோக்ஷத்தையடையக் கடவாயென்றுசொல்ல :

கச. இவ்வாறி னனுபவத்தை வினவுதல். —சங்கத்தைக்கெடுத்தலும், பிரமாற்பணமும், ஈஸ்வரார்ப்பணமும், சந்நியாசமும், வேறுபாடில்லாத ஞானமும், யோகமுமென்கின்ற இவைகளின் பகுப்பெது, சிவந்தகண்களையுடைய மேகம்போன்றவரே ? என்றுகேட்டவருச்சுனனுக்கு கிருஷ்ணரானவர் சொல்லுவார். சங்கற்பங்கெடவும் வாதனைகெடவும் ஓரெண்ணமுமற்றவிடமே, பிரமவஸ்துவென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

கரு. இவ்வாறி னனுபவத்தைச் சொல்லுதல். —ஒன்றென்கின்ற பிரமத்தை யடைவதற்குமுயற்சியே விளங்குகின்ற ஞானமும், அம்முயற்சியே யோகமுமாமென்று சத்துக்கள் சொல்லுவார்கள். சகமும் யானும் பிரமஸ்வரூப மென்றுணராய்ந்தறிதல் ஆகாநின்ற பிரமாற்பணமாகும் ; கருமபலத்தை விடுதலேசந்நியாசமாம் ; துன்பம்பொருந்தியசங்கற்பத்தைக் கெடுத்தலே சங்கத்தைக் கெடுத்ததென்று, சத்துக்கள் சொல்லுவார்கள்.

கசு. இதுவுமது. — வினைவுகளிலெல்லாம் ஈஸ்வரனொருவனேயென்று துவிதநினைவுநீங்குதல்புண்ணியத்தையுடைய ஈஸ்வரார்ப்பணமாகும் ; என்னைச் சிந்தித்து எனக்கன்பனா யாராதனைசெய்து என்னையடைந்து, என்னைவணங்கி, என்னைத் தோத்திரஞ்செய்வையாயின், நானென்கின்ற வுமதுஸ்வரூபப்ரகாசமானது உள்ளேபூரணமாம். பரமமுஞ்சாமானியமுமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுருவம் எ

கஎ. பிரமத்துக்கிரண்டு வடிவ நிரூபித்தல். னக்குண்டாயிருக்கும். * — சங்குசக்கரங்கள் பொருந்திய கைகள்முதலாகவுடைய சரீரமே சாமானியவடிவமாகும் ; கெடாமல் ஆதியந்தமில்லாமல் ஏகமானஸ்வரூபமே பிரமஸ்வரூபமாகும் ; இவ்விடத்திலுண்டாகிய பிரமமென்றும், பரமமென்றும், சொல்லப்படுவனயாவும் இந்தப் பரவடிவமாகும் ; இளையாமலிந்தப் பரவடிவத்தை நீதெளிகின்றபரியந்தம் சதுர்ப்புசங்களையுடைய தெய்வத்தைவணங்கு ; ‡ — அத்

கஅ. பூசா பலனை நிரூபித்தல். தேவார்ச்சனையினால் ஞானமானது பூரணமான வதனால் அப்பிரமபதத்தையு மடைவாய். மேலானபரவ

---

* இ-ம். பிரமஸ்வரூபத்தை யுபதேசித் தஃதடையு மாறுவிதமான மார்க்கத்தைக் கிரமமாகச் சொல்லியதாம்.

‡ இ-ம். சாமானியவடிவம் பரவடிவமென்னு மிரண்டிற் பரவடிவத்தை யடையும்பொருட்டுச் சாமானியவடிவத்தைப் பூசிக்கவேண்டுமென்பதாம்.

டிவாகிய எனதுஸ்வரூபத்தை யடைந்தால் பவவியா திதிரும்ப வடையாது ; கட்டுப்பாடயிலான நீங்கி அந்த ஞானநீங்கி பற்றுவிட்டு பாவடிவமே யுண்மையாய் துன்பவின்பங்களின் றொடர்புநீங்கி இச்சைவிட்டு ஞானமடைந்தவர்கள் அப்பிரமபதத்தையே தொடர்வார்கள். * — ஆசைபொருந்தும் சங்கற்பமில்லாமல் முயற்சிகளியாவையும் சேர்ந்திருப்பவர்களை, சகத்தைப்பொருந்திய ஞானக்கினியினால் கன்மங்களை யெரித்த அறிஞரென்று தத்துவர்கள் சொல்லுவார்கள். சேஷமமும், இனிவருவதான வஸ்துக்களும், சிந்தையில்லாமல், தொந்தமில்லாமல், ஞானமாகிய தத்துவத்தை குற்றமறும்படி பெற்று, சதாகாலமும் உண்டாகின்ற செயல்மார்க்கமாய் சலனமில்லாத விருப்பாய். † — ஆதிகால மதிகரித்தாலும் விந்தமலைபிளந்தகாலத்திலும் ஆசாரியருபதேசிக்கு ஞானசாத்திரத்தினால் போதித்த செம்மையான மார்க்கத்தைஞானவான்கள் மாறுபடுத்தார்கள் ; களங்கமற்ற தத்துவஞானமில்லாத அறிவின்மையினால் வாசனையானது நித்தியரூபமாயிருக்கும் ; குற்றமற்ற தத்துவஞானமென்கின்றபெருங்கடல் மூடிக்கொண்டால், வாசனை அதிற்கரைந்துபோகும் ; ‡ — என்றனுக்கிரகஞ்செய்து கிருஷ்ணசுவாமியும் சித்திரம்போல் மௌனியாய்ப்போல இருக்கவும், சுற்றியிருந்த அருச்சுனன், [மனங்களித்துச் சொல்லுகின்ற விதத்தை உண்மையான ஸ்ரீராமா? நீ கேட்பாய்] ஆசாரியரே? எனதறிவை மயக்கின்ற துன்பமெல்லாம் விட்டொழிந்து சூரியன் பார்க்க விகசித்த தாமரைப் பூவைப்போல பிரமவஸ்துவை கலந்தேனென்று அருச்சுனன்சொல்லுவான். ¶ —

௧௯. சமாதியைச்சொல்லி சகத்தைச் சொல்லுதல்.

௨௦. இப்பிரமானுபவ முதிக்கின்ற பரியந்த முறைமையைக் கூறல்.

௨௧. அனுபவமாதல்.

அருச்சுனன்கதை முற்றிற்று.

சதவுருத்திரர்கதை.

அவதாரிகை.

முற்கதையில் யுத்தஞ்செய்தல் முதலிய விருத்திகளும் வேறுபடாமலாத்மஞான சாக்ஷாத்காரமாய் விளங்குவதைப் பிரித்து, அதனை

* இ-ம். சகளத்தைப் பூசித்தலினறிவுண்டாவதனால் நிஷ்களமான பிரமத்தை யடைவாரென்பதாம்.

† இ-ம். பிரமாக்கினியினு லியாவையுமெரித்துப் பிரமமாய்ச்சகலதொழிலையுஞ் செய்யவேண்டுமென்பதாம்.

‡ இ-ம். சர்விருகுசுவானுபவத்தின் றிடமற்பியாசத்தினும் சகலகன்மமு நீங்கிப் பிரமமாத்திரமாய் விளங்குவனென்பதாம்.

¶ இ-ம். மௌனமாயிருந்து மனத்தைத் தரிசிப்பித்ததாம்.

னுண்டான சகபரம்பரையுஞானதிருஷ்டியினா லாத்மசாக்ஷாத்காரமாய்விளங்குவதை யறிவிக்குநிமித்தஞ் சதவுருத்திரர் கதையை நிருபிக்கின்றார்.

க. சந்நியாசி சமாதியினின்று லகவிபகாரத்தை லீலையாகச் செய்யநினைத்தல்.

திரும்பவும் ஒரு கதையைக்கேட்பாயென்று வீரனான ஸ்ரீராமருக்கு வசிட்டமுனிசொல்லுவார். ஓர் தேயத்திலுள்ள ஞானவானும், சமாதியுள்ளவனுமாகிய ஒரு சந்நியாசியானவர், வெகுகாலமாகச் செய்த சமாதியினால் நின்மலமனதில் ஒருபொருளை கிடைக்கும்படி நினைத்தால், சலம் அலையானதுபோல அப்போதவ்வுருவமாவன் ; —

உ. இதுவுமது.

ஒருதினத்தில் சமாதியை விட்டிருந்தனன் ; நினைக்கின்றவர்களுக்கு பிரதிபையானது தோற்றுமென்று வேதஞ்சொல்லுவதுண்டு. சகத்திலுள்ளவர்க ளியற்றப்பட்ட செய்கையைநாம் விளையாட்டாக மனதினினைப்போ மென்று இவனுடையமனது நினைத்து —

௩. சந்நியாசி தனது சங்கற்பத்தாற்றானே சீவடனாதல்.

மனத்தினசைவுமாத்திரத்தினால்வேறொருபுருடனானான் ; திரும்பப்பிடித்தும்பழைய சந்நியாசியைதானென்று பாவித்தலுக்கு அடைந்திலன். காகதாலீய ஞாயம்போலவடைந்த விச்சையினால் சந்நியாசியாகிய தன்னை சீவடனுமுள்ள வொருவனாக வறிந்து பொருந்தினான். —

௪. சீவடனித்திரை யடைதல்.

மனமானது, மற்றொருவனாகிய சீவடனானவனிவ்வண்ணமாய் பொருந்தப்பட்ட விச்சொப்பனத்தினாலுண்டான பட்டணத்தில் ஒருவீதியிற்சென்று வெகுகாலமிருந்தான். அவ்விடத்தில் விளையாட்டாகமதுவைப்புசித்து களிப்புடையவனாய் தேனைப்புசித்தவண்டைப்போல நித்திரையையடைந்தான். —

ரு. சீவடன்கனவிற் கண்டபிராமணனாய் நித்திரை செய்தல்.

விருக்ஷம்வித்தானதுபோல நித்திரைசெய்கின்ற பிராமணனை தன்னிடத்தில் அப்போதுண்டான சொப்பனத்திற் பிராமணனை ஒப்பற்ற வன்னியனாகப்பார்த்தான் ; மேன்மையான போசனத்தினானித்திரைசெய்து உண்டானசொப்பனத்தில் தன்னிடத்தில் பூமிக்கிராசாவாக அந்தவன்னியனை விளங்கப்பார்த்தான் ; —

௬. அந்தணன் கனவிற்கண்ட வன்னியனா யவன் கனவிற்கண்ட வரசனாதல்.

கனமுள்ள சொப்பனத்தில் மற்றொரு கல்வியையுடைய பிராமணனாகக்கண்டான் ; மனதிற் ப்ரதிபாமாத்திரமாயிருக்குமதனால் வேறொரு நாட்டை அடைகின்றது போலாகி சிலதினஞ் சஞ்சரித்தான் ; அவ்விடத்தில் ஒருநாள் மிகுந்ததொழில்களினால் சரீரம்வாடிதுயின்றான். —

௭. அரசன்கனவிற்கண்ட தெய்வப் பெண்ணா யவள்கனவிற்கண்டமானாகிற்றல்.

இராசாவானவன், ஓரிராத்திரியி னித்திரை செய்து அப்போதடைந்த ஒரு சொப்பனத்தில் தெய்வப் பெண்ணாகப் பார்த்தான் ; அந்தத்தெய்வப்பெண்ணானவள், சுரதப்போரில் பரவசமாகிநித்திரை செய்ய அப்போதனுபவிக்கின்ற சொப்பனத்தில் தன்னிடத்

திற்குளம்படுள்ளபெண்மானையைப்பார்த்தான் ; ஒருபோது அந்தமானானது நித்திரைசெய்தது. —

௮. மான்கனவில்கண்ட பூங்கொடியாதல்.

நித்திரை செய்கின்ற மானானது அதன்புறக்கத்தினால் குற்றத்தான ஒருகொடியாக தன்னிடத்தில் செம்மையாகச் சொப்பனத்திற் பார்த்தது. அரசனே ? மிருகமானும் மனதிற் பொருந்தப்பார்த்ததும் கேட்டதும் மறப்பில்லாமல் விளங்குகின்ற சொப்பனத்தில் சஞ்சரிக்கும்படி நேரும். ஆகையினால் சொல்லக்கேட்டாய். —

௯. பூங்கொடியில் வசிக்கின்ற வனதேவதைநச்சிறப்புக் கூறல்.

புட்பங்களும் மிருதுவான துளிர்களும் காய்களும் விளங்கிய அந்தக் கொடியானது, தனது வனதேவதை யாகிய அந்தத் தெய்வப்பெண் வாழுகின்ற கொடிவீடாயுண்டாக விளங்குகின்ற அவைகளி லுள்ள முனிக்குச் சமானமாய் பலப்படுகின்ற விடயத்தைப் பொருந்திய தனதறிவினால், தனக்குப் பற்றுயசோலை செய்கையில் பொருந்தினதாக தனக்குள்ளே பார்த்தது ;

௰. பூங்கொடிசமூர்த்தியினால் வண்டாதல்.

இனிக்கப்பட்ட சமூர்த்தியத்தை யடைந்த ஞானத்தினால் அறியாமையை நன்றாயனுபவித்து வண்டாக கொடியானதன்னைப்பார்த்தது. அந்த வண்டானது குளத்திற்றாமரைத்தண்டைத் தெரிந்ததற்குள்ளானது. —

௧௧. வண்டியானையைப் பார்த்தல்.

மிடத்தையுடைய இருபிடத்தி பறிகளுக்கும் மனமானது இடத்தில் விநோதமாக சேர்ந்திருக்கும். இதழ்களையுடைய தாமரைப்பூவினால் குங்குமங்கள் வாசஞ்செய்கின்ற தடாகத்தில், ஒருமதயானைவந்து கலக்கியெறிய அதிலுள்ள தாமரைகளும், குளமும், குங்குமமும், தூளியாயின ; அந்த வண்டானது இந்த யானையைப் பார்த்தது ; —

௧௨. வண்டியானையைப் பார்த்தலா லியானையாகவு மியானை வண்டின் பரிசத்தால் வண்டுமாதல்.

அந்த யானையாக வண்டு தன்னைப்பார்த்தது ; பெரியபள்ளத்தில் துதிக்கையையுடைய யானையானது விழுந்தது ; அந்த யானையை ஓரரசனுடைய யானைப்பாகன் கொடியாகப்பிடித்துக்கொண்டுபோய் அவ்விடத்திலொரு யுத்தத்தில் மடியச்செய்தான் ; கன்னப்பக்கத்தி லிருக்கும் சுரும்பின் கூட்டத்தினால் துதிக்கையையுடைய யானையானது இரும்புவண்டானது, —

௧௩. வண்டன்னவினுலன்னமாய்ப் பின்பிலயிறப்பையடைந் தன்னப்பற்றுவிசைபாடுமன்னமாதல்.

கோபித்தகோரா யானையினால் இரும்பையும் அக்குளத்தோடும் அவ்வண்டானது பொடியாகி சேர்ந்தவரையில் அம்சவுணர்வினால் அம்சமாயிற்று ; சமுத்திரத்திற்குற்றத ஜகத்தில் அவ்வன்னமானது வருத்தமில்லாத விலயோனிகளை யடைந்து தடித்திருக்கின்ற சலத்தையுடைய ஓடையிலுள்ள தாமரையில் ஒப்பற்ற அன்னமாயிற்று, —

௧௪. அன்னஞ் சிவோகபாவனையாற் சிவமாதல்.

அவ்வன்னமானது ஒருபோது ஆகாயத்திற் சென்று உருத்திரனுலகத்தில் உருத்திரனைப் பார்த்து மேலானசீதவருத்திரனே யானென்று உண்மை

யாகப் பாவித்தவுடன், உருத்திரனது ஸ்வரூபமாய் இச்சித்தபடி வுருத்திரவுலகத்தில் கூடிய வநேகசிவ கணங்களுடன் சூட்சுமமான வுண்மைஞானத்துடனும், † — சிவனுகச் சஞ்சரிப்பவன் ; முன்னடந்த

கரு. உருத்திரன் முன்னெடுத்த சநநங்களைப் பார்த்தல்.

சரித்திரங்களனைத்தையும் குற்றமற்ற வறிவினலறிந்தான். மறைவில்லாத ப்ரகாசமான இஞ் ஞானசரீரத்தையுடைய உருத்திரனுக வேகாந்தத்திலிருந்து நூறு சொப்பனத்தினது அதிசயங்க ளனைத்தையும் ப்ரகாசிக்கப்பார்த்துச் சொல்லுவார். — அதிசயம

கசு. சங்கற்பமான மாயாவிசித்திரத்தைப் பார்த்ததிசயித்தல்.

திசயம் ! ! இவ்வுலகத்தை மயக்கஞ்செய்கின்ற மாயையானது பொய்யாயிருந்தும், கானற்சலத்தைப் போல உண்மையாகும். இந்தப்ரகாரம் பிரமையாக இந்த மகா மாயாவனத்தில் பலவிடத்திற் சென்று அளவில்லாமற்சுழன்றேன். — எனது மனதளவில்

கஎ. உருத்திரன் சீவடன் முதலிய பவநூற்றையுந் தன்மயமாக்கக்கருதுதல்.

உண்டாகிய கற்பனையினல் முன்பொரு சிருஷ்டியில் யான்சொல்லிய சீவடனென்னு நாமத்தை யுடையவனுனேன் ; பின்னெருசிருஷ்டியில் மகாகலைஞானங்களையுணர்ந்த பிராமணனுனேன் ; பின்னுண்டானதாகிய ஒருசிருஷ்டியில் அரசனுனேன் ; —இந்தப்ரகா

கஅ. இதுவுமது.

ரம் சதயோனியையடைந்து இவ்விடத்திலுருத்திரனுனேன் ; மிகுந்தவருடமும், யுகங்களும், தொழில்களும், பலகழிந்தன ; அவ்வளவுசநநத்தையும் சென்று யாம்பார்ப்போம் ; நன்றுகப்பார்த்து ஒருமையாகச்செய்து சகலத்தையும் ஒன்றுகச்செய்வோம். ✻ —

ககூ. சந்நியாசியின் சங்கற்ப நீங்குதல்.

இப்படியென்று சிந்தித்தவுருத்திரனவன் முன்னிருந்த சந்நியாசியினிடத்தில் போய் அவனை நித்திரையை விட்டெழுப்பி ஞானத்துடன் மனதை ஒன்றுபடச்செய்தவளவில், விழித்துணர்ந்த சந்நியாசியும் நின்ற தனது பிரமைகளனைத்தும் நினைப்புண்டாகப்பார்த்தான்.— சீவடன்முதலான தனது கற்ப

உ0. சீவடனைச் சிவரூப மாக்குதல்.

னரூபத்தை உருத்திரனவ ராலோசித்து சலனமற்ற ஞானகாயத்தின் ஒருபக்கத்தில் சேர்ந்து சீவடன்வாழாநின்ற நாட்டில் தனிமையான வுருத்திரனும் சந்நியாசியு நெருங்கி அச்சீவடன் ஞானமடைய, ஞானத்துடன் மனதை பொருந்தச் செய்தான். —

உக. மூவருங் கூடிச்சேறல்.

மூன்றுபேர்களும், ஞானத்தைப் பெற்றவர்களாய் பழையபழக்கத்தினுல் மிகுந்தவாச்சரியத்தை யடைந்தும் எவ்வளவும் அதிசயமில்லாதவர்களாய் ஒன்றுன சிவரூபத்தைப் பொருந்தியும் தேக மூன்றுரு

---

† இ-ம். சந்நியாசி சீவடன்முத லுருத்திரனீறுக நூறுசென்மமெடுத்த தென்யதாம்.

✻ இ-ம். உருத்திரன் றனது சிவஞானத்தாற் சங்கற்பவடிவமான நூற்றையுஞ்சிவாகாரமாக்க நினைத்ததாம்.

௨௨. மறையவன் முதலிய தொண்ணூற்றொன்பவரையுஞ் சிவமாக்குதல்.

௨௩. சீவன் முத்தராயிருந்து விதேகமுத்தராதல்

௨௪. சங்கற்பரூபஞ் சத்தியமானதென்னவென்றவதற் குத்தரஞ் சொல்லத் தொடங்கல்.

௨௫. சித்தியெல்லாவுமசைதாயிருத்தலிற் சங்கற்பஞ்சத்தியமாயிற்றெனல்.

மானவர்கள் மேலான ருத்திரனும் இவ்வாறு சந்நியாசியும் கூடிப்போய், — பிராமணன்முதலாக வுள்ளவர்கள் சனித்தவிடங்களெல்லாஞ்சென்று இவ்வாறே கேட்டபடி. தங்களுடன்சேர்த்து, தெய்வீகஞானத்தினால் ஒளிர்கின்ற பிரகாசத்தையுடைய ருத்திரர்களாய் ஞானமடைந்தார்கள். முன்சொல்லப்பட்ட ருத்திரனுடனே, உங்களிடத்துக்குப்போங்களென்று அத்தாலுசெய்ய தங்கள்தங்களிடத்திற்குப் போனார்கள். —இவ்வாறும், பிராமணன்முதலான சகலரும், போய் தங்கள்தங்களுடைய மனைவியர்களோடுங் கூடி வாழ்ந்து தங்களுடைய நிலைமையைப்பெற்ற சரீராந்தத்தில் சிவத்தை யடைந்தார்கள் ; என்று வசிட்ட முனி சொல்லியவளவில், இராமன் ஸ்ரீராமன்கேட்டு இதுஆச்சரியமாச்சரியமென்று அதுகள்காரணத்தைக் கேட்கத்தொடங்கினர். ✻ — அவ்விடத்தில் இவ்வாறு முதலானவர்கள் சந்நியாசியினது சங்கற்பத்தினால் வடிவமானவர்கள் உண்மையானதெப்படி, பிறந்த சங்கற்பத்தினது வஸ்துக்களியாவும் மித்தையேயல்லவா, இவ்விடத்திலிதை தெரிவிப்பாயென்று கேட்ட ஸ்ரீராமனுக்கு வசிட்டமுனிசொல்லுவார். — அதிவிடத்தில் யாவும் முன்றே, சித்தானது எங்குமாகாரமெனத்தக்கதே எல்லாமாதலால் அதை அந்தப்பாகாரமாயதையும், அதன்னையே யாதொருகனத்திற் பார்க்கப்படுகின்றதோ யாது சங்கற்பத்தினிடத்திற் சேர்ந்ததோ அந்தவஸ்து எக்காலமும் அவ்விடத்திலுண்டாயிருக்கும் ; அவ்வண்ணமேமுனையானும் ; —சங்கற்பத்திலும் சொப்பனத்திலும்சேர்ந்தவஸ்துவானது எப்படியானாலும், அவ்விடத்தி லுள்ளவஸ்துவானதாயிராமத்தின் முறைந்து விற்ற யப்பிரகாசமாக வென்கின்ற

௨௬. அச்சனையாயி னுயிர்களின் சங்கற்பமனைத்தும் முன்னைமயாக வேண்டுமேயெனிலன்னவைக்கடா வன்னுயிர்கள் சின்மாத்திரமாயிருத் து சங்கற்பிக்கி னசைதன்மையடையா மெனல்.

பரிசுத்தமான தன்மையினாலன்றி சத்தியமாகத்தோன்றாது. யோகத்தையும் ஞானத்தையும் இவ்விடத்திலடைந்திருவ் சகன்முதலிய தேவர்களுமெவ்விடத்திலும்யாவையும் பார்க்கின்றார்கள் —

௨௭. ஆயிற்சீவன் சித்தன்றோவெனின் சித்தாயிருந்து மதனோமறந்த அசிதாகாசனுகங் கோதவிரைசைக மறைந்தற்காதாரமான சின்மாத்திரமே. டா யானுயிற் சங்கற்பித்தபடி கருவிற் கிடைக்குமெனல்.

சித்தியமாயிருக்கின்ற வஸ்துக்களியாவும் ஒன்றான சித்தையுடையவர்களுக்கு எளிதிற்கிடைக்கும் ; செம்மையாக தென்றிசையைப் பார்த்து நடப்பவர்கள் வடக்கு திசையைய டைய

* இ-ம். சந்நியாசியின் ஞானவியாபகத்தினின் றுதித்த சங்கற்பவடிவமான ஞானவடிவமாகவே விளங்கிற்றென்பதாம்.

படியடைவார்கள் ; பரிசித்த சங்கற்பத்தினு லுண்டானவஸ்துவைகருதுபவர்கள் அதையேயடைவார்கள் ; குறைவற்ற தமதாத்ம ப்ரயோசனவசத்தி லுள்ளவர்கள் முன்புசேர்ந்திருக்கின்ற விடயவஸ்துவை நினையார்கள்.— முன்னிருக்கின்ற வஸ்துக்களுக் கிடமாகியும் சங்கற்பத்தைத் தெதிர்த்து இச்சிக்கின்ற மூடபுத்தியானது அப்பொழுதே ஒன்றிலழுந்தாதபடியினால் அந்தவிரண்டையும் இந்தப் புத்தியானது கெடுப்பிக்கும். இனிமேல் யான் வித்தியாதரனுகும், நிலையாயிருக்கின்ற யான் இவ்விடத்தில் பிராமணனுமென்று சிந்திக்க, —

உஅ. பிரமநிட்டர்கள சங்கற்பமுழுது முண்மையாமோவெனிற் சங்கற்பமொன்றி லழுந்துமாயி னஃதுண்மையாம் இரண்டாயி னுகாவெனல்.

இந்த நினைவே ஒருவிடயத்தில் அடைகின்ற பேற்றின் திருஷ்டாந்தமாம் ; அக்காரியமானது சித்தியினிமித்தமாம் ; ஆகையினுல் ஒன்றுன வஸ்துவில் திரம்பொருந்திய சமாதியினுல் சந்நியாசியின் சீவனனது உருத்திரனுகி, உருத்திர ரூபத்தினுல் பொருந்துகின்ற சங்கற்பத்தினுல் அடைந்தவஸ்துவுக்கு உண்மையைப்பொருந்தி, — தெளிந்த சந்நியாசியின் சங்கற்பத்தி லுண்டானவர்களாகிய சீவடனுதியானவர்கள் களிப்புடைய தங்கள்தங்களின் வேறுன சகங்களை உருத்திரரூபத்தினுல் பார்த்தார்கள் ; சத்தியசங்கற்பத்தினுல் தத்துவத்தை யடைந்தார்கள் ; உருத்திரனது ஞானத்தினுல் தனது சங்கற்பித்தினுல் எளிதாகச் சேராகின்ற பட்டணத்திற் சேர்ந்தார்கள். * —

உகூ. சித்தாயிருக் தொன்றி லழுந்தின படியாற் சன்னியாசி சங்கற்ப முழுதுமுண்மையாயிற்றெனல்.

௩௦. சங்கற்பத்தை யுநற்காதாரமான சிவஞானமாகக் கதைத்தலிலர் நூற்றுவருஞ் சீவன்முத்தரா யவரவரிடத்தில் வசித்தார்களெனல்.

சதவுருத்திரர்கதை முற்றிற்று.

வேதாளகதை.

அ வ தா ரி கை.

தன்னிடத்திற் சொற்பன கற்பிதமாகத் தோற்றின சநகபரம்பரைய ளிதார்த்ததிருஷ்டியினும் பிரமசாக்ஷாத்காரமாக விளங்கினதை யறிவித் திவ்வனுபவ நன்குய் விளங்கும் பொருட்டுச் சுழுத்திமவுனமுள்ள வேதாளகதையை நிரூபிக்கிருர்.

௧. மௌனுதீத சுழுத்தி யௌனத்தையுடையவனுப் மனதினது உ

* இ-ம். சைதன்யவியாபகமாயிருந்து சங்கற்பிக்கி லதுசத்தியமாமென்றுமஃதையறிந்த நச்சங்கற்பமாயிருந்து சங்கற்பிக்கி லஃதசத்தியமா மென்றுங் கூறியதாம்.

மாக்கும் பொருட்டுச் சுழுத்திமவுனமாய்ச் சுகிப்பாயென் றுசீர் வதிக்க வவையாதென வினவுதல்

தயமறும்படி அமிழ்த்தாநின்ற களங்கமான சங்கற்பத்தைக்கெடுத்து, அகண்டாகாரமான பிரமபதத்தில் இருப்பாயென்று வசிட்டமுனிசொல்லவும், வாக்குமௌனமும், கரணமௌனமும், காட்டமௌனமுமென்று மாட்சிமைப்பட்ட மூன்றையும் சுழுத்திமௌனத்தையும் தெளியும் பொருட்டு சொல்வாயென்று ஸ்ரீராமன்கேட்க, முனிசொல்லுவார். — வருத்தமில்லாத தவசிக ளிரண்டுவிதமாவர்; ஒருவன்காட்ட தபசியாவன்; பின்னொருவன் சீவன்முத்தனுவன்; செய்கின்ற பிராணுயாமத் தொழில்களில் திடமானசிக்ஷையைப்பொருந்தி இந்திரியங்களை மிகுந்தவலியையுடைய அடையோகத்தினுல் செயித்தவனை, காத்தலையுடைய ஸ்ரீராமா? காட்டத் தவமுனிவனென்றுசத்துக்கள் சொல்லுவார்கள்.

௨. முனிவரிரண்டிற் காட்டத் தவமுனிவ னிலக்கணங்கூறல்.

௩. சீவன்முத்தமுனிவ னிலக்கணங்கூறல்.

—உலகத்தின்றன்மையை யதார்த்தமாக அறிந்து தன்னிடத்தில் ஆத்மாவை சிந்தித்து உலகத்தாருக்கு கிரிகையி லொப்பாயிருந்தாலும், அகத்தி லமைவுபிறந்தவன் நின்மலமான சீவன்முத்தனுகும். இப்படிப்பட்ட சாந்தமுனிவனிடத்தில் மேலான மனத்தினது உண்மைவடிவமாயிருக்கின்ற தகுந்த வுயர்வுள்ள வடிவமாகிய பாவனையே, சொல்லப்பட்ட மௌனவாக்கியத்துக்கு அருத்தம்.

௪. மௌனநான்கிற் காட்டத்தவமுனி வர்க்கியல்பான மூன்று மௌனத்திலக்கணங்கூறல்.

— வாக்கு மௌமானது வசனத்தை யடக்குதலாம்; இந்திரியத்தை யடைக்குதலே தாக்காநின்ற கரணமௌனமாகும்; தனது தொழிலனைத்தையுநீக்கலே காட்டமௌனமாகும். ப்ரகாசிக்கு மனேவிபகாரம்நீக்கமின்றி மூன்றுவிதமாக சொல்லப்பட்டமௌனங்க ளிவைகளேயாகும்.

௫. சீவன்முத்தமுனிவர்க் கியல்பானவோர் சுழுத்திமௌனத் திலக்கணங்கூறல்.

— உறுதியாகச் செய்யப்படுகின்ற இந்தமூன்று மௌனங்களும் காட்டத்தவமுனிவருக்குச் சுபாவமாகும்; ஆதியந்த மில்லாமல் வேற்றுமை யில்லாத துன்பங்கணீங்கிய ஆநந்தமானது, ஆனந்தானுபூதியை யுடையவர்களுக் காயினும், இந்த வனுபூதி யில்லாதவர்களுக்காயினும், இந்தப்பிரமாநந்தமே ஒருதுன்பமு நெருங்காத சுழுத்திமௌனமென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

௬. இதுவுமது.

— பலவிதமானமயக்கத்தையுடைய இச்சகத்தைப்பிடித்து அதற்குள்ள குணங்களையறிந்து நிச்சயத்தை யுடைவனுய் சந்தேகநீங்குவதே சமுழுத்திமௌமாகும். ஞானமயனுன பூரணஞான வடிவமாகிய சிவஸ்வரூபமே இச்சகமெல்லா மென்கின்ற முன்வடிவான சித்தாந்தமே சுழுத்திமௌனமென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

௭. சுழுத்திமௌ

* — சத்தாகவும் அசத்தாகவும் சத்தசத்தாக

* இ-ம், மௌனநான்கி னிலக்கணமு மஃதையுடைய முனிவரிருவ ரிலக்கணமும் விபரமாடறிவித்ததாம்.

ளஞ் *சாங்கியம் யோகமென விரண்டுவிதமா மெனல்.

வும் விளங்காநின்ற யாவும் நித்தியமா யிருக்கின்ற சிதாகாச மென்றெண்ணி சமத்துவமும் சாந்தமுமாகி இருக்கின்றது; சுழுத்தி மௌனமென்று சொல்லப்படும்; சுழுத்திமௌனமானது, யோகிகளுக்கு சாங்கிய மென்றும், பரிசுத்தமாகிய யோகமென்றும், இருவகையாம்.

அ. சாங்கிய யோகம், யோக யோகம் ஆகிய விரண்டி லிலக்கணங் கூறல்.

— தெளிவாகிய கல்வியறிவினாலும், நாடோறும் பூரணநிஷ்டையினாலும், பிரமாண மானவிசாரணையினாலும், பிரமமென் றுணர்ந்தவர்களே சாங்கிய யோகியர்களாகும். யுத்திகளினாலுண்டான பிராணன்முதல் வாயு அடங்கினவிடத்தில் எளிதாக அந்தமில்லாத மேலான பதத்தையடைந்தவர்கள் யோகயோகியர்கள்.

கூ. இவ்விருவரிலக்கண முஞ் சொல்லி யவர்களபிப்பிராயமுமறிவித்தல்.

— நித்தியமாகிய உபசாந்தமானவிடமே யாவருக்கும் பிடிப்பாகும்; நினைக்கத்தகுந்த சாங்கியரடைகின்ற பதமே யோகிகளுக்கும்ஸ்தானமாகும்; கருதத்தகுந்த வாசனைவலையினாற் கட்டுப்பட்ட பிராணனும் மனமுமாகிய இவ்விரண்டும், இயற்றுங் கிரியைகள் முழுதுங்கெடுமாயின் அதுவே பிரமபதமாகும். ‡

க0. சுழுத்தி மௌனிகளபிப்பிராயத்தை யடையுஞ் சாதன மூன் றென் டெனல்.

— விசாரித்துப்பாராமையினால் மனமானது உள்ளதுபோலத் தோற்றும்; விசாரிக்கில் மித்தையேயாகும்; சொப்பனத்தில்தனது மரணத்தை தான் கண்டிருந்தும் மெய்யாமோ, களங்கமற்ற வத்துவித வஸ்துவில் அப்பியாசத் திடமும் பிராணபந்தனமும் மனோபந்தனமுமாகிய இவைகளே சுருக்கமாக மோக்ஷ சத்தார்த்மாகும்.

கக. சாதனமூன்றி னொருமை யுரைத்தல்.

— திடமாகிய ஒருவஸ்துவி னப்பியாசமும் பிராணனொடுங்குதலும் மனமடங்குதலு மாகிய மூன்றில் பக்குவமாயொன்று கிடைக்குமாயின், ஒன்றுக்கொன்று சம்பந்தமான மூன்றும் ப்ரயோசனமாகும். மேலானபிராணனும் மனமும் இல்லையாயின், யாவருக்குநினைவுகள் சேராது. புட்பமும் வாசனையும் எள்ளுமெண்ணையும்போலநிலையாக இவ்விரண்டுமொன்றாகும்.—

கஉ. இம்மூன்றி னொன்றி லுறுதியாகச் சாதிக்க வேண்டுமெனல்

பிராணனு மனமும் ஆதாரமு மாதேயமும் போலவாம். அவற்றிலொன்றுகெடுமாயின், அடுத்தமற்றொன்றுங் கெடும்; சொல்லாநின்ற இவ்விரண்டுங் கெட்டால் மேலாகிய மோக்ஷத்தையுங் கொடுக்கும். மேலாகிய தன தப்பியாசத்தினால் ப்ரத்தியக்ஷமாக எண்ணமானது கெடுமட்டும் ஏதாகிலு மோருண்மையில் நினைவானது அழுந்தவேண்டும்.

கங. இச்சாதனத்தாற் பவமயக்கநீங்கி நனவிற் சுழுத்தி வருமெ

—வெகுகாலமா யப்பியாசிக்கின்ற தன்மையினால் மனதினிடத்தில் ஏகத்துவமான தொன்றுண்டாகும்; அக்கணத்தில் இக்கூட்டங்க ளனைத்தும் கெட்டுப்போகும்; சுகமரண

‡ இ-ம். சுழுத்திமௌனத்தி னியல்பைநன்றாய்ப் பகுத்துச்சொல்லியதாம்.

ன்முறைத் தொடர் கோர் இருப்பிடமா ந்த முறைமைக்கத் தொடக்கல்.

கச. வேதாள வியல்புகூறல்.

த்தின் இரக்க சொரூபனே! இந்த ஆரியத்தில் விழித்து க்கொண்ட வசிஷ்டர் வேதாளமானது கேட்டதே ன்னவெனில், ஸ்ரீராமா! நீ கேட்பாயென்று சவிஸ்தார மாகச் சொல்லுவார்; — விந்தாடவி யென் கின்ற ஒரு வேதாளமானது, மற்றொரு தேசத்தில் வொழுகிய பசியினால் வந்து சேர்ந்து, அப்புற நகரத்தினிடத்தில் அனைவரும் அனைவரையும் புசி க்கவிருக்கும்; முதன்மையாகின்ற வேதாளமானது பசித்தாலும் எதிர்வந்தவர்களைக் கொல்லாமல் ஆரா யாமல் [illegible] இல்லாமலும் கொலைசெய்யா து, [illegible] யாவர்க்கும் [illegible] —

கரு. வேதாளம் வினாக்கூறத் தொடங்கல்.

காட்டிலிருந்து அவ்வேதாளமானது கொடியவ ராக்கிரமித்து [illegible] இதென்றறிகின்ற புத்தியினால் [illegible] ஒருபட்ட னத்தில் வந்து, அவ்விடத்தில் குடியான ராஜ்ஜி யில் சஞ்சரிக்கின்றவனத்தில், அவ்வரசனைக்கண்டு ஆகாயத்தி னிடியைப்போல வேதாளமானது அர சனுக்குச்சொல்லிய விதத்தை, ஸ்ரீராமா! யான் சொல் லக்கேட்பாய்.—அரசனே! என்னைக்காணுவாய்; மே லான வல்லமையுடன் கொடியவனென்றால் உன் னை [illegible]; மேலைக்குப்புசிப் பாகக்கடவையென்று வேதாளஞ் சொல்லவும், குற்ற மில்லாமல் என்னிடத்தி வொருக்குமையாயின், உன் னால் உணவாகிய கொடியவர் போருமென்று அர சனானவன் சொல்லினன். வேதாளமானது, இப்படி யென்று சொல்லிய அரசனுக்கு பதிலுத்தரஞ் சொல்

கசு. வேதாளஞ் சொல்ல வாரம்பித்தல்.

லுகின்றது.—நியாயமில்லாமல் கொல்லேன்; நீ இனிச்சொல்லுவேன், அரசனே! நீ [illegible] மாகச் சொல்லுக்கும் குறைவில்லாதிருக்கின்ற ஞானத் தையுடைய வல்லவனை [illegible] [illegible] ஆரசனே! உன் னுடைய [illegible]

கஎ. வினாவுக்கு விடையளித்தல்.

சொல்லுமென்று வேதாளஞ் சொல்லியது †—எந்த சூரியனது, கதிருக்கு இப்பிரமாண்டங்கள் விரைவும் மின்னுகின்ற அற்புதமான [illegible] ஆகா ? எதனால் முடிவற்ற ஆகாயமென்கின்ற அணுக்கள் [illegible]? உண்டாகிய சொப்பனத் தின்போல் சொப்பனமுண்டாகுமாம் இரிவிக்கும்படிக விளைவு [illegible] எவ்வாறு ஆயிற்று ? —வனமுமது

கஅ. வேதாளம் வினாவின் விடையில் ஐயுற்று வினவுதல்.

கண்டதுவும் [illegible] அந்தத்தன்மை டையிரு ப்பதுபோல, அனாதியாக உள்ளதன்றோ யானுமாம்

ககூ. இராமர் வினவுதல்.

† இ-ம். வேதாளமானது வேத்திரியத்தைக்குறித்துப் பிரமசொரூபத்தைப்பற்றி வினவத்தொடங்கினதாம்.

வேறொன்றாகாத வணுவேது? நிறைந்த பிரமாண்டமும், ஆகாயமும், சீவகோடிகளும், ப்ரகாசிக்கின்ற சூரியனும், மகாமேருவுமாகிய சகலமும், விரிந்த பரமாணுக்களைப்போல கூடிப்பிரியாத அணுவானதெது?—அவயவங்களொன்று மில்லாமல்பரமாணுவாகிய எந்தப்பெரியமலைக்கு, தங்காநின்ற கல்லைப்போல நெருங்கியொன்றா யிருக்கின்ற உலகங்கள் வைரமாயிருக்கும், என்று உயர்வான வேதாளமானது கேட்ட வசனங்களுக்கு நகைசெய்து, ப்ரகாசிக்கின்ற கிரீடத்தையுடைய அரசன்சொல்லியயாவையும், ஸ்ரீராமா? நீ கிரமமாய்க்கேட்பாய் * — உதயமான இந்த ஞானசூரியனுள் சகமுதலிய விச்சகலமும் ப்ரகாசிக்கின்ற, நிச்சயித்திருக்கப்பட்ட நின்மல ஸ்வரூபனான பிரமசூரியனது மிகுந்த பிரகாசமாகிய இந்தச் சூரியன் கிரணத்துக்கு இச்சகங்களியாவு மணுக்களாகும், தோத்திரஞ்செய்யப்பட்ட இந்தச்சூரியனது ப்ரகாசத்தினால் சகத்துண்டாகி ப்ரகாசிக்கும். † — காலசத்தையும், விசும்புண்மை வியோமசத்தையும், கண்ணாயிருக்கின்ற சலனசத்தையும், ஞானசத்தையும், நின்மலமான சேதனத்தையும், முதலியசத்தைகளனைத்தும் நல்லறிவான பிரமமென்னுஞ் சண்டமாருதத்தினால் பொடிப்பொடியாகி அழகியபுட்பத்தினது வாசனையைப்போல, தாங்கொண்டிருக்கின்ற ஸ்வரூப சுபாவத்தினால் ப்ரகாசிக்கும். ¶ — சகமென்னும் பெயரையுடைய தீர்க்க சொப்பனத்தில் ஒரு சொப்பனத்தின்மேல் ஒருசொப்பனமாக, அநேகம்பிடித்தும் தனது வடிவத்தைப் பிரியாமல் சாந்தியினால் வியாபகமான பிரமமொளிரும். வாழைமரத்துக்குள்ளேயுள்ளேயும் மடலேயிருக்கின்றதன்மையைப்போல, அளவற்றசகமுள்ளுக்குள்ளே ஆகியபோது மந்த பிரமமேவிளங்கும். ‡—

௨௰. ஒன்றுவினுவுதல்.

௨௧. எந்தச் சூரியகிரணத்துக் கிந்த சகங்களணுவாகுமென்று கேட்டமுதல் வினுவுக் குத்தரங் கூறல்.

௨௨. எந்தக்காற்றிற் காலமாகாய முதலிய சத்தைகள் ஆகளாமென்றுகேட்ட விரண்டாம் வினுவுக் குத்தரங்கூறல்.

௨௩. கனவின்மேற் கனவுவறினு மதன் வயமாக மயங்காமற் றெளிந்தபடி யிருக்கின்ற தெதுவென்ற மூன்றாம் வினுவுக்கும், அரம்பையைப்போல வகத்திற்செல்லச்செல்ல வேறாகாததெது வென்ற நான்காம்வினுவுக்கு முத்தரங்கூறல்.

* இ-ம். வேதாளம் வினுவாறுக்கு மாசனுத்தரஞ் சொல்லத்தொடங்கினதாம்.

† இ-ம், பிரமசூரியனது ஞானப்ரகாசமானது கிரணங்களுக்குச் சகலசகங்களு மணுக்களாய் விளங்குமென்பதாம்.

¶ இ-ம். நித்தியதத்துவமென்னுங் காலதத்துவமுதலிய சத்தையாவும் பிரமவிலத்தில் ஒன்றாய் நீங்குமென்பதாம்.

‡ இ-ம். சகத்தென்கின்ற தீர்க்கசொற்பனத்திற் சங்கற்பமாகிய சொற்பனாகாலிதமாகத் தோற்றிய யினைகளின்மறைவு படாமற் றன்னைத் தெளிவுற்றிருப்பது பிரமமென்றுங் கதலியைப்பிரிக்க வதன்றண்டே யிருப்பதுபோலப் பிரமத்தை வேறுவேறு செய்தவிடத்துந் தானுகவே விளங்குமென்று சொல்லியதாம்.

உச. எந்த வணுவிற் பிரமாண்டமுதலிய சீவர்களனைத்தும் பரமாணுக்களா மென்றவைந்தாம் வினாவுக் குத்தரங்கூறல்.

சூட்சுமமாய் அறிதற்கருமையினால் முன்சொல்லப்பட்ட பிரமமே பரமாணுவாம்; நீக்குகின்ற முடிவில்லாததினால் நீண்ட மகாமேருவாதியானசகலத்துக்கும் இதுவே தாக்கப்பட்ட காரணமாகும். விசாலமான மகம்மேருமுதலியவைகளை இந்தப் பரமாணுவுக்கு பார்க்கும் பரமாணுவைப்போல, பார்க்குமிடத்தில் துவட்சியாக ப்ரகாசிக்கும், ‡ — அடையப்படாமையினால் பரமாணுவாகிய இப்பிரமமே பூரணத்தினால் பெரியகிரியாகும்.

உரு. அவயவரகிதமான எந்த வணுவுக்குச் சகமச்சையாமென்றவாறும் வினாவுக்குத்தரங்கூறல்

குறைவில்லாதவயவங்களியாவையும் அணிந்தும் அவைகளைத் தரியாத வாத்மாவானவன், குறைவில்லாத மெய்ஞ்ஞானஸ்வரூபமாய் சகலவஸ்துக்களுக்கு மாதாரமாயிருப்பன், அறிதற்கரிய இந்தவாத்மாவுக்கு இந்தச்சகலசகங்களும் விஞ்ஞானவிரசமாகிய மச்சையாகும். § —

உசூ. இதுவுமது.

பொருந்திய விஞ்ஞானமாத்திரத்தினது மத்தியிற் சகமான திருக்குமென்று மேலானவரசன் சொல்லக் கேட்டு மனத்தில் தனதுஸ்வரூபத்தையறிந்து மயக்கமற்ற விசாரணையினால் உபசாந்த மனத்தையுடையவேதாளமானது, ஏகாந்தஸ்தானத்துக்குச் சென்று துக்கமுள்ள உதராக்கினியை மறந்து சலனமில்லாதபரிசுத்தமான சமாதியிலிருந்தது. ⁕—

வேதாளகதை முற்றிற்று.

பகீரதன்கதை.

அவதாரிகை.

முற்கதையிற் சுழுத்திமௌனத்தாம் சர்வம் பிரமமயமாய் விளங்குமென்பதை வினாவிடையினா லறிவித்து, இவ்வனுபவமடைதற் கரிதாயினுஞ், சங்கத்தியாகமுள்ள தனதுமுயற்சியினா லெளிதாயடையலாமென்பதையறிவிக்கு நிமித்தம் பகீரதன்கதையை நிரூபிக்கிறார்.

க. மனந்தெளிந்து

சலனமற்ற அந்தராத்மாவினால், சகலவிடயங்களினிற்குஞ்சக சானுப ல்நின்றும் மனதைத்திருப்பி, இசையத்தக்கவைகளை வமருளிச்செய்தல் ச்செய்து, ஆசையில்லாமல் மெலிவில்லாமல் மனது

---

‡ இ-ம். அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் விளங்குகின்ற பிரமவியாபகத்திற் சகல பிரமாண்டங்களும் பரமாணுக்களாக விளங்குமென்பதாம்.

§ இ-ம். அகோசரமான பிரமஞானத்துக்குச் சாரமான மச்சையாகச்சகந்துவிளங்கு மென்பதாம்.

⁕ இ-ம். சர்வம்பிரமமயமாய் விளங்குமென்ற வுத்தரங்கேட்ட வேதாளஞ் சாந்தியுடனாகந்தாமிர்தம்புசித்தும் சமாதியை யடைந்ததென்பதாம்.

விஸ்ராந்தியடைந்து, சாந்தமனதினுல் அசுத்தமனதை ஆகாயத்தைப்போல நின்மலமாகச்செய்து, சலனமற்ற மௌனியாகவும், ஒருவனுகியும், உபசாந்தமே ஸ்வரூபமாகியும், — சமத்துவனுகியும், மனமானது ஆகாயத்தைப்போல, ஸ்ரீராமா ? நீ மிகவுந்தெளிந்திருக்கக்கடவாய். நின்மலமான புத்தி திடநிறைந்து அறியாமையின்றி, யமைவாகவந்தவைகளை அனுசரிக்கின்ற வேந்தனுகிய பகீரதனைப்போல, குழந்தாய் ? அடைதற்கரியதாயினும் குறைவின்றியடையலாமென்று வசிட்டமுனிசொன்னர். † — இப்படிவசிட்டமுனி சொல்லவும் அவரைப்பார்த்து, எனதாசிரியரே ? பகீரதவரசனுனவன், எந்தமனவல்லமையினுல் பரமசுகத்தையறிந்தான் ? அப்போது தேவநதியை கொண்டுவந்தானென்று ஸ்ரீராமன்கேட்க, நான்குவேதங்களையு முணர்ந்த வசிட்டமுனி சொல்லுவார். ஏகத்துவத்தையறிந்த பகீரதனென்னு நாமத்தையுடைய அரசனுனவன், பூமியின்கண் ஒருவனிருந்தான். — பெரிதான பூமியனைத்தையும் காப்பவன் ; சிந்தாமணியிலும் ஈகையின்மிகுந்தவன் ; கங்காசோபானக்கிரமத்தினுல் பாதாளத்தில் பஸ்பமாகிய தனது பாட்டன்மார்களனைவரையும் கொடிய நரகநீங்கும்படி சத்தியலோகத்தைச்சேர்ந்து சுகிக்கவைத்தவன் ; சந்திரன்போன்ற வெண்மையாகிய பூச்சக்கரக்குடையை யுடையவன். — அப்படிப்பட்ட பகீரதன், எவ்வன காலத்தில் உலகத்தினது துன்பமிகுந்த ஆசாரமாகிய இதைப்பார்த்தவளவில், தன்னுடைய நினைவினினைத்தருட்சுமவிசாரணையினது களங்கமற்ற தோற்றமானது மனதில் நிலைபெற்ற விளம்பருவத்தில் உண்டானததிசயம் ! —ஊழினுல் அளர்பூமியினது புட்பக்கொடியைப்போல விசாரணை யுதயமாக வுதவும் ஏகாந்தஸ்தானத்தை யடைந்து, ஒன்ருேடொன்று பொருந்தாத சமூகமான வியப்புள்ள சகத்தின் சுபாவமான இவைகளைப்பார்த்து மனதில்விசாரிப்பான் ; ஒன்ருவது நூதனமானதில்லை, எப்பொழுதும் போயினவே திரும்பவும் வரும்.—போனபகலே திரும்பவும் வருகின்றது ; போனவிராத்திரியே திரும்பவும்வருகின்றது ; போன வீகையே திரும்பவும்வருகின்றது ; போன யாசகமே திரும்பவும்வருகின்றது ; ஆனபுசிப்பே திரும்பவும் வருகின்றது ; ஆனகருமமே திரும்பவும் வருகின்றது. மோகத்தையுடையவர்கள், ஒன்றிலும் வெட்கப்படாமல்திரும்பத்திரும்ப அதில்முயற்சி செய்வார்கள், —

உ. பகீரதனைப்போலசுகத்தைப் பெறுவாயெனல்

௩. பகீரதன் யாதினு லாத்மானுபவம் பெற்றுக் கங்கையைக் கொண்டுவந்தது மென்ற வினுவினமுதல் வினுவுக்குத்தரங்கூறத் தொடங்கல்.

௪. பகீரதன் மகிமையைக் கூறல்.

௫. விடயதோடதிருஷ்டியினுல் விசாரமுதித்தல்

௬. தனித்திருந்து சகத்தன்மையை விசாரித்தல்.

௭. புவனபோகங்களைக் கான்றனம்போலக் கருதுதல்.

† இ-ம். சகசநிஷ்டையை யனுக்கிரகித்ததாம்,

அ. ஆத்மாகந்த
ங்கொடாத கன்
மத்தை வெறுத்
துப் பூரணாநந்த
த்தைக்கொடுக்கு
ங்கன்மத்தை வி
ரும்புதல்.

இரசமில்லாமல் வாடுகின்ற அத்தொழிலேயே சூழ்
ந்திருப்பார்கள். குற்றமறும்படி எதையடைந்தால்
அடையப்படாத தில்லையென்று சொல்லும்படி யா
வையும்வந்து பொருந்தும் ; அதைச்செய்தலே சுபா
வமாகியதொழிலாம் ; இரண்டுபடுகின்றமற்றசகலகரு
மங்களும் விடுசிகாரோகமாம். * — அஞ்ஞானிகள்
அநேகமாகச் செய்ததையே செய்வார்கள் ; ஞானி

௯. சற்குரு
வைத்தரிசித்துப்
பவத்துன்பத்தை
நீக்குதற் பொரு
ட்டுக்கூறுதல்.

கள் செய்யமாட்டார்கள். சகத்தின்றன்மை யிதுவெ
ன்று மனதிலச்சமுற்ற பகீரதனனவன், ஒருநாட்
போய் திரிதுலனென்னு நாமத்தையுடைய சற்குரு
வினது பாதத்தைவணங்கி, துன்பமிகுந்த பவத்துக்
குப்பயந்து ஏகாந்தமாய் இவைகளைச் சொல்லத்தொ

௰. பவத்துன்ப
நீக்க மியாதென்
றவினவுக்குத் தி
ரிதுலமுனி யஃ
தநீக்கும்பொரு
ட் டாத்மஞான
முபதேசித்தல்.
௧௧. இதுவுமது.

டங்கினன். — முனீஸ்வரா ? சொல்லப்பட்ட மூப்பு
ம், மரிப்பும், மயக்கமுமுதலிய சமஸ்தமானபயத்தை
ச்செய்யாநின்ற அரியதுன்பத்துக்கு முடிவியாது ?
விளங்கும்படியாக அனுக்கிரகிப்பாயென்று பகீர
தன்கேட்க, திரிதுலமுனிசொல்லுவார். அரசனே ?
ப்ரகாசம்பொருந்திய ஞானாத்மாவை பூரணாகாரமாக
ப்பார்க்கில்.— துக்கங்களனைத்தும் அப்பொழுது நீங்
கும் ; இதயத்திலுள்ள பந்தங்களெல்லாங் கெடும்,
பலவாகிய சந்தேகநீங்கும் ; மிகுந்தகருமங்கள் கெ
டும் ; செம்மையாக அறியத்தக்கதானது சின்மாத்
திரமே ஸ்வரூபமாகி இருந்தபரமாத்மஸ்வரூபமாம்.

௧௨. இதுவுமது.

சொல்ல இதைக்கேட்பாய். — எவ்விடத்திலுமுள்
ளதான நித்தியமானது, உதித்தொடுங்குத லில்லாத
து, அழகிய உண்மைஞானமும், உபசாந்தமும், நின்
மலமும், கெடாததும், திரிகுணங்களுந்தங்காததுமா
கிய இப்படிப்பட்ட தொன்றுண்டாயிருக்கின்றதெ
ன்றுசொன்னவுடன், வேறுபாடில்லாத திரிதுல மு
னியைப் பார்த்து, பகீரதன் சொல்லத் தொடங்கி

௧௩. தேகமுத
லிய விருத்திக
ணீங்கிச் சித்தா
யிருப்ப தெங்ங
னமெனில்.

னன். † — தனக்குவேறாகின்ற சரீரமுதலான ஒருவி
டயத்தையும் பாராதவனாய் ஈனமான விபகாரங்களி
யாவும் திரமில்லாமற்போக, தேவராற் சொல்லப்பட்
ட ஞானஸ்வரூபமாகி தடையில்லாமலிருப்பதெப்படி
கிருபையுள்ள ஆசிரியரேசொல்லுமென்றுகேட்க,—

௧௪. சமாதி
யினல்ஞானமுத
யமாகிற் சநகமர
ணநீங்குமெனல்

திரிதுலமுனியானவர் சொல்லுவார். அரசனே ?
மனமானது, இதயாம்பரத்தில் வியாபகமானவறிவி
னால் ஸ்வரூபநிட்டையைப்பொருந்தும் ; பின்புபெரி

---

* இ-ம். இதகன்ம புண்ணியபரிபாகத்தினும் சாதனசதுஷ்டய முண்டாயிற்
றென்பதாம்.

† இ-ம். ஆத்ம ஞானாநந்த சாக்ஷாத்காரம் வருமாயின் பவத்துன்ப நீங்குமெ
ன்பதாம்.

தான சகலவடிவங்களுமான மேம்பாடான செ...
து, இகழ்ச்சியாகிய சுகத்தை சகத்திற் றிரும்ப...

கரு. சமாதிகூ டுதற்குச் சங்கத் தியாகம்வேண்டு மெனல்.

அடையாது; —மனையாள் மனைமுதலிய விவ...
பற்று நீங்குதலும், சுகதுக்கங்கள் சார்ந்தால் சம...
னஞானபாவனை அடைதலும், தனக்குப்பேதம...
தனவாய் எப்போதும் அவைபவங்களின் றேு...
ளாகுதலும், வளப்பமுள்ள ஏகாந்தத்தை யடை...
லும், மானிடக்கூட்டங்களை நீக்குதலும், — ஆத்...

கசு. ஞான ச மாதிக்கிந்த சங்க த்யாகமே மார்க் கமெனல்.

தத்துவத்தில் நீங்காத ஞானநிட்டையும், அசை...
நிற்கின்ற தத்துவஞானத்தி லுண்டான வபரோ...
சானுபவமும், இப்படிப்பட்ட தோற்றமாகிய ஆ...
யாளங்களை யடைவதே ஞானமாக மோக்ஷசெ...
த்தையுடைய சத்துக்கள் சொல்லுவார்கள்; இ...
வேறுயிருக்கின்ற மார்க்கங்களியாவும் வேதனை...

கஎ. தேகோக நீங்கிற் சித்த ப் ரத்யக்ஷமா மெ னல்.

வறியாமையாம். — குற்றத்தை யுடையதான ச...
தை யானென்று நினைத்தல், நசித்தபோதுவே இ...
ராகத்துவேடத்தை நீக்காநின்ற ஆதாரமாக ச...
யாதிக்கு மேன்மைபொருந்திய அவிழ்தமாகும்; ...
தன்னியம் ப்ரத்யக்ஷ மாகுமென்று அனுக்கிர...
ஞானமுனிவனாகிய திரிதலமுனிக்கு பகீரதன்சொ
ல்லுவான். * — கிரியின்மே லிருக்கின்ற விரு...

கஅ. எங்ஙன ந்தேகோக நீங்கு மென்ற வதற்கு ச்சாதனங்கூறல்

தைப்போல நெடுநாளாக வலிமைபொருந்த இசரீ
ரத்தில் திரமாக நானென்றெண்ணுகின்ற நினைப்...
துள்ளுவது எப்படியென்று பகீரதன்கேட்க, சிரேஷ்
டமான வாசாரியர் சொல்லுவார். தனது மனோ...
தந்தினால் நீங்காத போகத்தில் நினைவுதொடர...
கெடுத்து, — வியாபித் திருக்கின்ற சம்பாவ...

ககூ. அத்துவி தஞான மடைத லைக் கூறல்.

பொருந்தினால், வினையான வங்காரங்கெடும். ஆசை
கெட இவைகளனைத்தையும் அறிவினாற் றீரும்படி...
டுத்து துன்பமான சலனமில்லாமல் இருப்பாயானா
ல், யானென்கின்ற தோற்றமானது தெரியாமல் ...
மே கூடஸ்த்தமான வத்துவிதஸ்வரூபமாம்; வேதங்
களாற் றுணிந்த பிரமமு மதுவேயாம். † —...

உ0. விடயசுக ம்விடுதற்குச் சா தனங்கூறல்.

யிருக்கின்ற வன்னாச்சிரம பேதமான விசேட...
விட்டு, பயமில்லாமல் ஈடணத்திரியத்தில் இ...
வும் பற்றில்லாமல் தரித்திரத்தை யுறுதியாகவடை
ந்து, செல்வங்களை போர்செய்கின்ற சத்துருக்க...
குக்கொடுத்து, அகம்பாவத்தை நீக்கி, சரீரத்தி...
தொழிலைவிட்டு, அச்சத்துருக்க ளிடத்தில் பி...

* இ-ம். இச்சாதனங்களாற் பவமுக்தொழிலும் பற்றறநீங்கி மிச்ச... ஞானம் வெளிப்படு மென்பதாம்.

† இ-ம். விடயசுகம்விட்டுப் பிரமசுகஞ்சேரிலகம்பாவ நீக்கிசீயத்துவித...பிர மமாவாயென்பதாம்.

௨௧. இங்ஙனம் நிற்றினீயே பிரமமாவாயென்றருள்செய்தல்.

யையவாய்க்கி எனையும்விட்டு, — பாரமில்லாமல் இப்படிநின்றால், உயர்வுக்குயர்வாகிய பிரமம் நீயாகக்கடவாயென்று அந்த திரிதலமுனிவரானவர் சொல்லக் கேட்டு, மலையுடன் பொருந்துகின்ற புயத்தையுடைய பகீரதன், மனதில் செய்வதான குணத்தை விரும்பி னானாகியமான தனது தொழிலில் பகீரத வாசனி ருப்பதானான். * — சிலகாலம் போனபின்பு சிறப்பான யோகாக்கினிஷ்டோமயாகஞ்செய்து, நீதியாக வளர்த்த சம்பத்தெல்லாம் பாத்திராபாத்திரம்விசாரித்து தகுதியான பிராமணர்கள், தெய்வங்கள், உறவினர்கள், முதலான வந்தவர்களுக்கு கொடுத்து, தனித்திருக்கும் மந்திரமொன்றேயல்லாமல் முன்னிருந்ததில் ஒன்றுமில்லாதவனானான் — சகலருங் கண்ணீர்விட்டழ சகலமு மினிமையாகவிருக்க தனது தேசத்தை அடையத்தகாத சத்துருக்களுக்குக் கொடுத்து, தனித்திருக்கின்ற வேர்வஸ்திரத்தை யுடையவனான பகீரதன், நினைத்தற்கரிய முனிவனுய் ஞானமுனிவர்கள் குணத்தையடைந்து, தன்னுடைய வீடுதற்கரிய தேசத்தை விட்டு, தனியனாய் சஞ்சரிக்கத் தொடங்கினான். — வனத்திலாவது, நகரத்திலாவது, பார்த்தவர்க்கரியதாக பறைய ஆலயமோடாவது, மலைமேடாவது, காடுமேடாவது திரிந்து அடைந்தான்; மனதிலுள்ள இச்சையை எனைத்தையும் நிலைநிறுத்தில் வெளிப்படுத்தினான்; இப்பொழுதே மேலான சாந்தத்திலுள்ள ஆத்மாவினிடத்தில் விஸ்ராந்தியடைந்தான். § —

௨௨. செல்வமனைத்துந் துறத்தல்.

௨௩. துறவியாய்த்தனியே சஞ்சரித்தல்.

௨௪. அகம்பாவமின்றி பரமாத்மஞான முதயமாய் விஸ்ராந்தியடைதல்.

பூமியெல்லாஞ் சஞ்சரித்து, ஒருதினம் சத்துருவுக்கு தான் முன்புகொடுத்த விளக்கமான பட்டணத்திற்புகுந்து, சகலகாலங்களையும் சமித்தபகீரதன் அசத்தியமில்லாத மந்திரிகள் எனேமோர்கள் வீடுதோறும்போய் பிச்சையாகிறான். விட்டத்தையுடைய விக்ஷட பகீரதனைச்சேர்ப்பார்த்து எதிரேபார்த்தவர்கள் கண்ணீர்விட்டழுதார்கள். — சிறந்த வரதனைகள்செய்து அரசாட்சிசெய்து இராட்சியாயென்று இவன் பட்டணத்தைப் பெற்றிருக்கின்ற சத்துருவும் சொல்லவும், பிச்சையேயல்லாமல் வேறொன்றையும் விரும்பாமலிருந்து, சிலநாள் ஞானத்தினையென்று யாவரும் பார்க்கத்தகாத அபமானமேயுடைய கதை புறப்பட்டான். † — சாந்தமேஸ்வரூபமாகிய மனதுதளர்ச்சியில்லாமல் ஆனந்தமடை

௨௫. ஞானத்தால் தேசமோனமேய்தி நிற்றல்.

௨௬. ஆத்மயோகத்தானந்தபோக மெய்தி நிற்றல்.

௨௭. சமாதிஞானமெய்தின சமய

* இ-ம். சர்வசங்கற்பப் பரித்தியாகத்தினால் பகீரதன்பிரம்மி யாகம்சுய முண்டாமென்பதாம். [அதஞானம் பெற்றானென்பதாம்.

§ இ-ம். சர்வசங்கற்பப் பரித்தியாகஞ்செய்து ஆத்மநிஷ்டையிலிருந்தானென்பதாம்.

† இ-ம். சமாதியனுபவங் கைகூடின தென்பதாம்.

ஞானமுதிக்கும்பொருட்டாசிரிய ரெதிரிட்டிருவரும் பிரமானந்தலீலையாகச் சஞ்சரித்தல்.

ந்து, ப்ரகாசம்பொருந்திய தனதாத்மதிருஷ்டியில் விளையாட்டையடைந்து, வரப்பட்டதிரிதுலாகிய சற்குருவைதோத்திரஞ்செய்துகூடி, மலைகளிலும், கானகங்களிலும், நாடுகளிலும், அவர்கள்சஞ்சரித்தார்கள். —

உ௮. சகசஞானமுதயமாதல்.

ஆசாரியரும் சீடனும் பூரணமான சமத்துவத்தை யடைந்து, இரண்டுபேரும் குணத்திற்சமமானவர்களாய் விளையாட்டினால் சரீரத்தைச்சுமந்து, கருப்பத்தி லுண்டாகிய சரீரமிருந்தென்ன போயென்ன இச்சித்தபடிசஞ்சரித்து ஒற்றுமையாக உள்ளபடி இருக்கக்கடவதென்று நன்றா யாலோசித்து, —

உ௯. தமதுசிதானந்த போகத்தாற் றேவபோகமுந்திரணமாகநீங்குதல்.

துக்கமடையாத. சுகத்திலும், துக்கத்திலும், நடுவிலும், சுகமடையாதவர்களாய், திரவியங்களும், ஸ்திரீகளும், இசைந்த செல்வங்களும், அணிமாமுதலிய வஷ்டவயிஸ்வரியங்களும், முன்பாக விருப்பமுற்று சித்தர்கள் கொடுத்தவைகளை ஆசையில்லாமல் மிருதுவான திரணத்துக்கொப்பாகி விட்டுநீங்கி, மற்றொருமேன்மையான தேயத்தில் போயினார்கள். † —

௩௰. ஸ்வரூபசாக்ஷாத்காரமாய்விளங்குதல்தெரிவிக்கும்பொருட்டரசாங்கஞ்செய்யும்படி பிராரத்த கன்மங்கூட்டிவித்தல்.

புத்திரனில்லாத அந்தப்பெரியபட்டணத்தரசன் மரித்தமாத்திரத்தில், மந்திரிகளனைவரும் நன்மையையுடைய அரசனெவனென்றுயோசிக்குங்காலத்தில், அற்பமான பிச்சையையுடைய முனிவனாகிய அழகையுடையபகீரதவரசனைப்பார்த்து, ப்ரகாசிக்கின்ற கிரீடத்தையுடைய அரசனாகச்செய்ய, —

௩௧. முன்னோட்டோர் விருப்பப்படியதற்குமானுதல்.

பகீரதனனவன் இராசாவாகி அனேகம் பெரிதான படைகள் சூழும்படியாக பூமிபாலனஞ் செய்வதை பழைய பட்டணத்தோராகிய மந்திரிமுதலியவர்கள் கேட்டுவந்து, கிரமமாக நீர் முன்புவைத்த எங்களுடைய வரசன் இறந்தான், நாங்களனைவரும் ஆதரவு காண்கிலேம், நீரே இராசாவாகவேண்டும். —

௩௨. உபசாந்தனயிருந்தரசுசெய்தல்.

ஆசியாமல் வலியவந்த செல்வத்தை வெறுக்குதல் நல்லதன்று சம்மதிக்கவேண்டுமென்று நினைத்து, மனங்களிப்பினால் பிரார்த்திக்கப் பார்த்து அழகுவிளங்காநின்ற மார்பையுடைய பகீரதவரசன்போய் திடமான பூமிமுழுவதையு மாண்டு இருக்கும்போது, மகாமௌனத்தையும் உபசாந்தத்தையும் சமத்துவத்தையுமடைந்து, ஆசையில்லாமல், * —

௩௩. இரண்டாம் வினவுக்குத்தரங்கூறல்.

மாச்சரிய மில்லாமல் வந்த வியவகாரங்களின் ஒருமார்க்கத்தி லிருந்து, துதிக்கப்பட்ட அதிசயமில்லாதவனாய் பாட்டன்

† இ-ம். சகசசமாதி கைகூடினதாம்.

* இ-ம். துறந்த மனவல்லபத்தாற் பிரமசாக்ஷாத்கார சுகமாய் விளங்கினாரென்பதாம்.

மார்கள் கரையேற மிருந்த வநேகவருடங் தவஞ்செய்து, நிந்தனையற்ற தபசினால் தேவநதியைக் கொண்டுவந்து இந்தப் பூமியின்மேல் புகழுழியாயல் ஸ்தாபித்தான்.†—

பகீரதன்கதை முற்றிற்று.

சிகித்துவசன்கதை.

அவதாரிகை.

முற்கதையின்முன் புறப்பற்றையு மதனுலகப்பற்றையு நீக்கிப்பின்றனது முயற்சியினாற் பிரமசாக்ஷாத்கார மடைந்ததைத் தெரிவித்து, இவ்வனுபவம்ப்ரதிபந்த சேடத்தினாற் றானடைவதற் கரியதானாலு மநேகவுபாயங்களாற் போதிக்குமாசாரிய வல்லமையினா லுண்டாமென்பதையறிவிக்குநிமித்தஞ் சிகித்துவசன் கதையை நிரூபிக்கிறார்.

௧. மனதைக்கைத்துச்சிகித்துவசனைப்போலவுணர்விற்சுகிப்பாயெனல்.

மனமென்கின்ற பெரியபட்சியை முன் னீக்கித்துரத்திய சிகித்துவவரசனைப்போல, உபசாந்த முடையவனாய் உனதாத்ம ஸ்வரூபத்தில் மூழ்குவாயென்று வசிட்டமுனி சொல்ல, ஆநந்தானுபவ போதமாயிருந்துள்ள அந்தச் சிகித்துவசனானவன் யார்? ஆசிரியரே? அனைத்தையுந் தாங்காநின்ற ஞானமானது மேலுமேலும் பூரணமாவதற்கு அனுக்கிரகிப்பா யென்று அவ்விராமன்கேட்க, தவத்தையுடைய வசிட்டமுனியுஞ் சொல்லத்தொடங்கினார். —

௨. சிகித்துவசனிலக்கணங் கூறல்.

துவாபரயுகத்தில் முதலிற்பிறந்தவன், ஏழுமனுக்களிறந்தகாலத்தில் சூரியனுக்கொப்பான மாளவதேயத்துக்கரசன்சிகித்துவசனென்னு நாமத்தையுடையவன், நீதியையுடையவரசன், ஆசைமுதலாகிய துற்குணமில்லாதவன், கொடைமுதலியசற்குணங்களியாவுமுள்ளவன், சொற்கலகமற்ற மௌனத்தை யுடையவன், சமமுந் தமமுமாகிய குணங்கணிறைந்தவன், மிகவு நன்மையையுடையவன்; —

௩. மனைவியோடுஞ் சுகித்திருத்தல்.

சுராட்டிரதேயத் தரசன்பெற்ற சூடாலையென்னுந் தவப்பெண், மயிலுக் கொப்பானவள், கெடாத சற்குணத்தினால்தனக்குத்தானே சமானமானவள், அச்சூடாலையை அச்சிகித்துவசன் கலியாணஞ்செய்தான். தளர்வற்ற மனமொத்து பிரிவில்லாமல் செய்யப்பட்ட கிரியைகள் வேறுபாடில்லாமல் பெருமையுள்ள சகலகலை ஞானங்களுக்கும் வல்லமையுள்ளவர்களாய் இருவர்மனமு மொன்றாய் இ

---

† இ-ம். பிதாமகாள் முதலியசேவர்களுய்யும் பொருட்டுத் தபோமன வல்லமையாற் கங்கையைக் கொண்டுவந்தா னென்பதாம்.

௪. சனை வருமென்றதற் கஞ்சுதல்.

னிமையுடன் வாழ்ந்தார்கள். — இரண்டுசரீரத்துக்கும் ஒருபிராணனைப்போல இரண்டுபேருங்கூடிஎவ்வன்னசுகத்தை இன்பமாகப் புசித்தார்கள்; சிறப்பையுடைய வருடங்களானவை இப்படியே அளவின்றி நீங்கின வளவில், ஒரு நிச்சயமு மில்லாத யௌவனமானது உடைபட்ட கடசலத்தைப்போல ஓடிப்போக, புனலினுள்ள கோகனகத்தின்மேல் பனிக் கட்டியைப்போல மூப்புவந் தெய்தியது. —

௫. விடமாகா துபவ நீக்குமெலல்.

உள்ளங்கை சலத்தைப்போல, நாடோறு மாயுளானது மிருதுவாகக்குறிந்துபோக, மிகுந்து வருஷிக்குங்காலத்திலுள்ள சுரைக்கொடியைப்போல, நீங்காதவோராசையே விசாலமாக சரற்காலத்தில் நதியின்சலத்தைப்போல எழிலானது சீக்கிரத்திற்போக சரீரத்திற்பொருந்திய நல்ல இன்பங்களனைத்தும், வில்லைவிட்டுநீங்கின அம்புகளைப்போலசெல்லும். *—

௬. நித்தியசுகத்தைக் கொடுக்கின்ற ஞானமார்க்கமே மானந்தை நீக்குமென்றலோசித்தல்.

வாழையானது, அடைந்த கருப்பத்தைப் போல, ப்ரயோசனமற்ற தொழிலானது இராகத்தையடைந்தது. உரிமையாக அவ்விடத்தவர்கள் சிந்திப்பார்கள். எதைப்பெற்று மனமானது திரும்பாதிலுஞ்செல்லாததோ அது மிகவுநன்மையாம்; இச்சமுசாரத்தின் முழுகுபவர்களுக்கு அப்பகுப்பருமையாம்; திரமாக அத்தியாத்துமஞானசாஸ்திரமே சமுசாரப்பிணியை நீக்குமவிழ்தமாம். — இருவர்களும் ஆத்துமதத்துவஞானமாகிய ஒன்றினுமேலயல்லாமல் மற்றொன்றினுல் சாககீய்காதென்று சிந்தித்து, நிலைபெற்றவாத்மஞானத்தினராயும், அதில் மனதுடையவர்களாயும், அதை யடைந்தபிராணனை யுடையவராயும்,

௭. சாதனங்கத்துடன்கூடி யாத்மவிசாரஞ் செய்தல்.

எப்போதும் சொல்லப்பட்ட அதி னிட்டையையுடையவராயும், அதற்கடுத்த சந்துக்கள் சார்பையுடையவராயும், அறிஞர்கள் ஆராதனைக்கடுத்த செய்கையினுல் சற்றுமிடைவிடாமல் பழக்க முள்ளவர்களாயும்,—தமக்குள் தாங்களறிந்தவர்களாயும், அதற்கடுத்ததான ஒழுக்கத்தைப்பூண்டு நெடுங்காலம் மிருந்த களிப்புள்ளவர்களாயும், ப்ரகாசித்தார்கள்.

௮. சூடாலை தனித்தாத்மவிசாரஞ் செய்தல்.

பின்னர்ந்த விவேகப்பெண்ணுன சூடாலையானவள், மறுமைக்காகிய நன்மையானபதக்கிரமத்தினுல் மூதறிஞரானவர்கள் அனுக்கிரகித்த சாஸ்திரார்த்தங்களைத்தரிக்க, தருந்தமாத்திரம் தெரிந்து நன்றாய்க் கேட்டு,‡ —நித்தியாதகாரியமும் காரிய மில்லாமையும் இரண்டு மில்ல

௯. ஆத்மாவும் அஃதைமறைக்கு மோகமும் மஃதையுடைவநு அஃ

* இ-ம். சுரைவரின் சுவானுபவங்களனைத்து நீங்கி மரணமுண்டாமென வெளிராசை தோற்றிற்றென்பதாம். [பவமாய் விசாரிக்கத் தொடங்கினதாம்
‡ இ-ம். இருவருமாத்ம விசாரஞ்செய்வதிற் றீவரமாகச் சூடாலை தனித்த

துதிக்கும் இடமுமாகிய நான்கையும் விசாரிக்கத் தொடங்கி முன் னுத்மஸ்வரூபத்தை விசாரித்தல்.

மல் தாவள்யமாய்விளங்கிய நல்லறிவிஞல் சூடாலையானவள் விசாரணை செய்கிருள். தெளிவாக ஆத்மாவை முன்னேபார்த்து யானென் றெதைச் சொல்லுகின்ருேம், மனதில் நீங்காத இந்தமோகமியாது, இஃது யாருக்குரியது, எந்தப்ரகாரம் யாதிஞல் எவ்விடத்திலுண்டானது,—முன்னே தோற்றுவதான தேகத்தை நானென்னில், சடமாகவு மூடமாகவு மிருப்பதஞல் நானென்றுரைக்கத்தக்கதன்று. இவ்விதமான தேகத்தை யறிந்தசைப்பிக்கின்ற பத்திந்திரியங்களையு நானென்னில், தண்டிஞ லோட்டை யசைக்க அஃதசைவதுபோல சபலசித்தத்திஞல் மூடமாய்த் தனியேயிருக்கின்ற இப்பத்திந்திரியங்களும் அசைகின்றன, அதஞலும் நானல்லனவாம்,— இந்திரியங்களையசைப்பிக்குஞ் சங்கற்பமென்கின்ற சத்தியையுடையதாகிய மனதை நானென்ருல், அதுவும் கவண்டிஞல்வீசச் செல்லுங்கல்லைப்போல புத்திநிச்சயத்திஞல் அசைகின்ற சடமாகுமதஞல் நானப்புத்தியுமல்லவாம் ;— புத்தியை யசைப்பிக்கின்ற தீயவகங்காரத்தை நானென்ருல், ப்ரயோசனமில்லாததாய் பாராதீனமாய் குழந்தைகளின் பிரமையில் பிசாசுந் தோற்றும்விதத்தைப்போல சீவஞற்ருேற்றுகின்ற விதுசடமாம் ; ஆதலாலிவ்வகங்காரமு நானல்லவாம். அகங்காரத்தை வசைக்குமென்றுரைத்த சீவன் நானென்னில் அதுவுங்கிரியையே வடிவமாய்பிராணுகாரமாய் அகத்தில் இருதயத்துற்று மிகவுமிருதுவாயிருந்தும் ப்ரத்யேகாத்மாவாம் சுகிக்குமதஞ லச்சீவஞு நானல்லவாம். ¶ — சீவனைச் சுகிப்பிக்கின்றவிதுவே ஆத்மாவாகிய வுண்மைஞானமென்று உணர்ந்தேன். இவ்வறிவானது விடயங்களாற் களங்கமடையாமல் தெளியும், எனதாத்மஸ்வரூபமாய் நித்தியமான ஞானஸ்வரூபமா மிதஞல் சீவன்சீவிக்கும். இஞ்ஞானஸ்வரூபத்திஞல் விடயவஸ்துக்களிற் பிரமிக்கின்ற சீவன் சீவிக்குந்தொடர்பைச்சொல்ல நினைக்குமிடத்து, வாயுவிஞல் வரும் வாசனைபோலவும் பள்ளத்திற்றங்குஞ் சலம்போலவுமாம் ; † —மித்தையாகியும் மூடமாகியுமிருக்கின்ற விடயங்களின் உணர்ச்சியால் ஞானஸ்வரூபசத்தியானது களங்கமுள்ள சடரூபமாய், மிகுந்த சலத்துக்குள் அக்கினியைப்

௧௦. இந்திரியங்களைக் கண்டு தேகத்தையுமனதைக்கண் டிந்திரியங்களையு நியதிகளைதல்.

௧௧. புத்தியைக் கண்டு மனதையுமகங்காரத்தைக் கண்டு புத்தியையுநியதி களைதல்.

௧௨. சீவனைக்கண் டகங் காரத்தையும் ப்ரத்யேகாத்மாவைத் தரிசித்துச் சீவனையுநியதிகளைதல்.

௧௩. ஆத்மதரிசனமா யதஞற் சீவன்விளங்கினதறிதல்.

௧௪. மோகவிலக்கணமுமஃதுடையவனையும்விசாரித்தல்.

¶ இ-ம். சித்தைத்தானெனக்கண்டு சீவன் முதலியவற்றைத் தானல்லவெனத்தள்ளியதாம்.

† இ-ம். ஆத்மாசுயம் பிரகாசரெனவு மதஞற்சீவன் விளங்குமெனவு மறிந்ததாம்.

போல தனதுருவத்தைமறந்து சீவனும், உண்மையாகியசிற்சத்தியானது, இந்தப்ரகாரஞ் சீவனாய் விடயத்தைவிரும்பிதலினால், ஐயோ! மித்தையாகி, மூடமாகி, ஆத்மஞானத்தினாற்றெரிவிக்கத்தெரிந்தது.§—

கடு. மோகமுதிக்குங்காரணம் விசாரித்தல்.

இந்த ஆத்மஞானமானது, யாதினாற் றெரியப்பட்டதென்றால், தன்னாலன்றி வேறொன்றினாலுமில்லை. முடிவற்றகாலத்தினால் அறியத்தக்க வாத்மஞானத்தையறிந்தேன், அம்மம்மா!!! முதன்மையான சித்துவியாபகத்தை அந்தமாக சிந்தியாததினால் ஆறிந்திரியமுதலிய வனைத்தும் உண்டாயினவாம்; அவ்வறிவைச் சிந்தித்தால் அம்மனமுதலிய சகலமுமித்தையேயாம்.‡ — அளவற்ற பூரணஞானமே இவ்விடத்திலுள்ளதாம்; இந்தப்பூரணஞானத்தை மகாசத்தையென்றுஞ் சொல்லுவார்கள்.

கசு. இவ் விசாரங்களா னாத்மாவே பிரமமென்னுமத்துவித ஞானமுதய மாதல்.

துன்பமிகுந்த மாசுநீங்க சமத்துவமாய் அகம்பாவமற்ற ஸ்வரூபமாகி சுயம்ப்ரகாசமானது, ஏககாலத்தில் ப்ரகாசிப்பதாயும், நித்தியமாயும், சுத்தமாகியுமிருக்கின்ற இடமுள்ள மேலான பிரமமென்றும் பரமமென்று நாமத்தைத்தரித்து வழங்கும்.—

கஎ. சகத்திலிச்சொரூபானுசந்தான முதிர்ச்சியாயிற்றெனல்.

இந்தப்ரகாரம் நாடோறும் தனதான்மஸ்வரூபத்தில் சுகிக்கின்ற மனோதிருட்டியினால் தவறாத சுபாவமான நிலையினின்று அவாநீங்கி விடயசங்கமெவ்வளவு மில்லாமல், தொந்தம்விட்டு செய்கையில்லாமல், விருப்பு வெறுப்பொன்றுமில்லாமல், பற்றில்லாதவியல்பான செயல்களைச்செய்து மேலான பிரமப்ரயோசனத்தினால் மனம் பழுத்து. —

கஅ. அத்துவித ஞான வபரோக்ஷசாக்ஷாத்கார ஸ்வரூப மாதல்.

உள்ளத்திற் பொருந்திய பரிபூரணத்தையடைந்து உவமானங்களுக்கு அதீதமாய் யாவராலும் ஆராய்ந்தளவிடக்கூடாத நிச்சயமாகிய தனது விவேகத்திலுண்டான மிகுந்தவப்பியாசமிக, தனதாத்மஸ்வரூபமானது ப்ரத்யக்ஷமாய் மிருதுவான புட்பக்கொடியைப்போல விளங்கினாள். நிந்தித்தற்கரிய புதுமையான பேரழகுமிகுந்த இந்தச் சூடாலையின்றேயுசை இனிமையாகச் சிகித்துவசன் பார்த்து,†—

ககூ. சூடாலையினழகைப் பார்த்தரச னதிசயித்து வினவுதல்.

இதுநான்பார்த்தறியாத அழகென்று அதிசயித்து சிகித்துவராசன் சொல்லுகிறான். முன்னேவ்வனத்திலுள்ளவழகை திரும்பப் பெற்றவள்போல

§ இ-ம். ஆத்மா தன்னை விடயமாகக்கண்டு மயங்கினமயக்கமே மோகமென்று மஃதுள்ளவன் சீவனென்று மறிந்ததாம்.

‡ இ-ம். ஆத்மாவே சீவன்முதலிய சகத்தாகவிளங்குமேயன்றிவேறின்றென்று மனுபவமாயறியாததே மோகமுண்டாவதற்குக் காரணமாயிற்றென்பதாம்.

† இ-ம். சமாதியினின்று நீங்கிச் சகசநிஷ்டை கைகூடிச் சர்வம்பிரமமயமென்கின்ற நிரதிசயானந்த சாக்ஷாத்கார வடிவமாகப் பிரமதேசசாய் விளங்கினாளென்பதாம்.

வும், பேறதை யபேட்சையாக வடைந்தவன் போலவும், தேவாமிர்தம் புசித்தவன்போலவும், யாவருக்கும் பொருந்துதற்கரிய பிரமபதத்தை அடைந்தவன் போலவும், பூரணத்துவம் நிறைந்தவன் போலவும்,

௨௦. சூடாலையி னறிவைப் பார்த் தரச னதிசயித் துவினவுதல்.

காணப்படுகின்றனையே? நீ விளங்குகின்றாய். — போகத்தையபேட்சியாமல் உபசாந்தமாயும், ஆசையின்றி நிற்பதாயும், ப்ரகாசமுண்டானதாயும், கெம்பீரமாயும், உன்மனமிருக்கும் தன்மையென்னை? சரீரத்திற் பெற்றிருக்கு மழகும் மனதிலுள்ள வழகும் உண்டானதெப்படி? நீ சற்றுஞ்சொல்லென்று கேட்டதிலேயவனுக்கு சூடாலையானவள் சொல்லுவாள், §—

௨௧. அறமுண்டானதற்குக்காரணமான வாத்ம சாக்ஷாத்கார சித்தியாரத்த வனுபவ விலாசத்தை யறிவிதாகப் பகுத்துச்சொல்லுதல் ௨௨. இதுவுமது.

அற்பமுமில்லாமல் அற்பமுமானதாயிருக்கின்ற இச்சயத்தை நீக்கி மகத்தான சேடித்த பொற்பற்ற ஞானஸ்வரூபத்தைப்பெற்றேன்; அதினால் அழகையுடையவளாய்ப் ப்ரகாசிக்கின்றேன். அனைவருக்குமாயும், ஒருவனேயாயும், உற்பத்திநாசமில்லாததாயும், மிகுந்தவெகுவோ வதைத் தெரிந்து கொண்டேன்; அதனாலே அழகையுடையவளாய்ப் ப்ரகாசிக்கின்றேன். — பொய்மையாயிருக்கும் போகங்களை அனுபவியாமலிருந்தும், அனுபவித்ததுபோல சுகத்தையடைந்து துன்பமடையாமல் இராகத்துவேஷம் நீங்கினேன், அதினால் அழகையுடையவளாய் சுகிக்கின்றேன். பெரியனவிராகத்துவேடமாகிய விரண்டின் மனக்கொழுள்ள தோஷியாகவும், ஞானமாகிய மகாமாதர்மன் பக்கமாய் சாஸ்திரதிருஷ்டியிற் சுகிக்கின்றேன், அதினால் தேகவழகையும் மனவழகினையுமடைந்தேன்.

௨௩. இதுவுமது.

— அற்பமுங்குறைவில்லாத சகங்களை ஊர்த்துவமும் அமுர்தமான வெளியையும் பூரணமாயிருப்பவளென்று ஆத்மாவில் நாமிப்பேன், அதினால் யான் சிறந்தவழகை யடைந்தேன். நிராசா இச்சைக்கையும் விட்டேன்; விலக்ஷணமாய் அசத்தியத்தாமிய சேஷ்டிதத்தை பூரணமாகப் பெற்றேன்; அதினால் அழகுடைத்தவளாய் ப்ரகாசிக்கின்றேன்.

௨௪. இதுவுமது.

— கண்களினாலும், பலவித இந்திரியங்களாலும், மனதினாலும், ஒன்றை தெரியப்பார்ப்பேனே அத்திரியத்தையே அற்பமும் பாராமல் அச் சகல விலக்ஷணமாய் அற்பமாகத சைதன்யத்தை அகத்தின்கண் சுகமாகப் பார்ப்பேன்; அதினால் உண்டாயின வழகென்று சூடாலையானவ ளருளாக, அவைகளை வசிப்பி யாரதுவளையும் அச் சூடாலையை மதியாமற் சிரித்து, சிகித்துவசராசன்

§ இ-ம், அரசனாசிக்கமுண்டான காரணம் வினவினதென்பதாம்.

மற்றொன்றைச் சொல்லத்தொடங்கினன். ¶ —
வஞ்சிக்கொடிபோன்ற
இடையை யுடைய பெ
ண்ணே? தகாதவசன
த்தைக்கூறினய். அறிவி
ல்லாதவர்களைப்போல ம
யங்குகின்றய், மேலாகி
யவாசரது செல்வத்தில்
விளங்குகின்ற நீ ஆத்மா
வில் எங்ஙனம் விளங்கு
வாய், அற்பமான சகத்
தைவிட்டு அற்பமல்லா
த பூரணவஸ்துவை அ
டைந்தசத்துக்கள் ப்ரத்
தியக்ஷமானசகத்தைசே
ரார்களாயின், பஞ்சினு
மிருதுவான பாதங்களை
யுடையவளே? அந்தச
த்துக்கள் ப்ரத்தியக்ஷமாகப்ரகாசிப்பது எங்ஙனங்
கூறுவாய்? —அநுபவியாதபோகத்தினல் யானுண்
மகிழ்ச்சியானேனென்று அப்போகத்தை நீக்குபவ
ர்கள் தரித்திரரைப்போல அபாக்கியவான்கள் எப்ப
டிவிளங்குவார்கள், சொல்லக்கடவாய். செவ்வையா
கச் சகத்தைப்பார்க்கிலேம். வேறே யாத்மாவைப்பா
ர்ப்போம் என்றுசொல்லுபவர்கள், இருந்துசொல்ல
ப்பட்ட இந்தவசனத்தைத்தவிராமல் அவர்கள் ப்ர
காசிப்பதெவ்வண்ணம், கூறுவாய்? * — ஆத
லினல்பேதைமை யுடையவளாயும், அறிவில்
லாதவளாயும், சஞ்சலமுள்ளவளாயும், பல வச
னங்களினலும் மிகவுஞ் சந்தோஷிக்கின்றயென்
றுசொல்லிவெளிப்படச்சிரித்து அரசனனவன்
வேறேரிடத்திற் சென்றுன். சூடாலையானவ
ள், அவ்வறியாமைக்கிரக்கமுற்று ஆத்மஞான
த்தில் விஸ்ராந்தியடைந்து, சகியாதவனய் வே
ற்றுமையாக எனதுவாக்கியத்தை அரசனறியவி
ல்லையென்று சொன்னள், — பின்பும் இராசாவுஞ்

உரு. தலைவனிடத்துள்ள வன்பினுற் பக்குவ
மில்லாதகாலத்திற் போதிக்கத்தகாத சுவானு
பவ சாக்ஷாத்காரமாகிய பரஞானத்தைப் போ
தித்தும், அதைசிரவணத்தின லுண்டான வப
ரஞானயுத்தி நான்கினல் மறுக்கத்தொடங்கிச்
சமாதியிற் சேடித்த வஸ்துவானதினலும், அ
ஃதையறிக் தந்துமயமானதினலும், சகசத்தி
லொன்றிலும் விருப்பு வெறுப்பின்மையினலு
ம், வாக்கியார்த்ததிருஷ்டியினலும், சாக்ஷாத்
காரத்திற் சர்வவியாபகமான வொன்றுதலின
லும், பூரணமானதினலும், அணுவுக்கணுவான
வஸ்துவைத்தரிசித் ததுவாயிருக்கின் றதினலு
ம், விளங்குகின்றே னென்கின்ற ஏழுருத்தத்
தையும், அரசபோகத்திற் றிகழ்கின்றவர்களா
த்மபோகத்தி லெங்ஙனந்திகழ்வான். தேகத்
தைநீக்கித் தேகியானவன் பின்பெங்ஙன மந்
தேகமாய் விளங்குவான், போகத்தைவெறுத்த
தரித்திர னெங்ஙனஞ் செல்வத்திற் றிகழ்வான்
காண்பவையை நீக்கிக் காண்பவனு யிருப்பவ
ன் வசனத்தி லெங்ஙனம் விளங்குவானென்
னு நான்குயுத்தியினுன் மறுத்தானெனல்.

உசு. இதுவுமது.

உஎ. சுவானுபவத்தை யிங்ஙன மிழத்தலுக்கிரங்கி யிவனுக்கிவ்விதார்த்தத்தை யற்புதங்களோடு மறிவிக்குமித்த மணிமாதிசித்தியை யடையத் தொடங்கி யாதனங்கட்டல்.

உஅ. இதுவுமது.

¶ இ-ம். பிரமானந்தமே வடிவமாய் விளங்குகிறேனென் றுன்னமயா யறிவித்தானென்பதாம்.

* இ-ம். சூடாலை கூறிய வேழுருத்தத்துக்கும் பகுத்துச்சொல்லும் விவேகமின்றி நான்கினடக்கிச் சொன்னராயினு மஃதின்மூன்றிற்கோருத்தியும் இரண்டுக்கோருத்தியும் மற்றிரண்டுக்கு மிரண்டுத்தியுமா யமைத்துக் கொள்ளவேண்டு மென்பதாம்.

குடாலேயும் முற்காலம்போல வேற்றுமையில்லாமல் வெளுகாவஞ் சுகித்தார்கள். பிருங்க வைராக்கியமுடையவனாய் அமைவாசனுமற்று பில்லாதிருக்கும், குடாலேயானவள் யானகவிளைத்து போலவனையனைய வாளைத்தெப்ப, செய்வோமென்று பிருங்கமோகங்கள் வினிதாள்பரீக்ஷ, சகலத்தையுமீந்தி வாசம்பண்ணுமானாத்தில் சகாசனத்தில் இருந்து, ¶ — பிராணையாமுவை வேதமேனுக்குப்படியாக வெளுமான் அப்பிபாசித்தான் : என்றுவசிட்ட முனிசொல்ல, ஸ்ரீராமனர் கேட்டு, பிரமன்முக்கட்டு வெளுமான் அப்பியாசஞ்செய்தால் அரிதான சாதனைச்செய்கல் முதலிய சித்திகளைத்தையும் கொடுக்கத்தக்கதாகியாது? அருள்மொழியாதகோடை, வசிட்ட முனிசொல்லுவார். — செல்வமுடைய சித்தினிட்ட முனிசொல்லுவார். — செல்வமுடைய சித்தி யோகம்கேட்கின்றபடி ஆவாரசன் வகைக்குரத்திலில் யோகங்கேட்கின்றபடியா வதைச்சொல்லுகின்றேன். இராமா! பிராணன்முதலிய வாயுவின்பிறத்தினது குணமாகி, ஆசிய பிரயோசனத்தைக்கொடுக்கின்ற மார்க்கத்தைக் கேட்கக்கடவாய். எல்லாவும் வாசனையில்லாமல் நிற்கும்படிசெய்து, மனதிலேயேத்தில் இச்சாதனைத்து நிற்குக்குக்க வாசனையே அடைந்திருந்து, — முதலிய இராக்காசங்களினது சுருக்கத்திலும், முதலிய ஆசனமுதலான குறிக்கின்றதாபிகளின் விதானமுறையினாலும், உணவிலும், சயனத்திலும், பரிசுத்தத்திலும், பிருங்கமுள்ள யோகசாஸ்திரங்களிலும் பொருட்சியிலும், அதனையுமிலும், போலனைத்து க்களின்சாரிலும், மற்றும் சகலத்தையும் நீக்குவ லாலும் சேர்க்க பிராணாயாமத்திலும், — குரோதமுதலியனவைகளையும், போகங்களையும், நீக்கு தலிலும், பெயோர்களுக்கு குறித்தகாலத்தில் ஒழிய தாகமும், வித்தும், தீர்மிலனவத்தில், வைகைகள் பிராணன்களானவை தேகமுடையின்றபடியால் ஆக்கையுடைகளின்றவையாக்கும் அடைந்தவர்களுக்கு பரிசனங்களைப்போலச் சகத்தைதாழுகும்படி செய்யும் ; மோக்ஷத்தைக்கொடுக்கும் ; சகலசித்தியையுங்கொடுக்கும். ‡ — ஆத்மபோட்டனின

உ௯. ஆகாயக மனமுதலியசித்திகள் வருமார்க்கியாதெனவினவுதல்.

௩0. பிராணாயாமத்தால் சித்திகளுண்டாகுமெப்போசங்களையறிவிக்கத் தொடங்கல்.

௩௧. இ-வுரை.

௩௨. இ-வுரை.

௩௩. ஆத்ம

¶ இ-ம். சாமவேத முன்னிட்ட பாவிக்கப்பிராயத்தத்திலும் யோகம்வைத்தநித் த தென்பதாம்.

‡ இ-ம். இச்சாதனத்துக்கிதமான வாசனைகளைத்தையும் தள்ளிக் கேதுத்து வாரஞ்சிறுகல் முதலியசாதனங்களிலும் பிராணன்களைமாகுதை பயிலும் புருடனுக் கப்பிராணஇவாயுவே வலைப்போலச் சகமுதலியவற்றைச் சமா நிணமாக்கு மென்பதாம்.

வேஷ்டனியி னிலக்கண முரைத்தல்.

யென்னுநாமத்தையுடைய ஒப்பற்ற வொருநாடியானது, நூறு நாடிகளினடுவே பொருந்தியிருக்கும்; இராகத்தையுடைய வீணையினங்கத்திலுள்ள விருத்தத்தைப்போலவும், நீர்ச்சுழியைப்போலவும், விருத்தமேயாகும். பொருந்திய இடங்களைத்தும், அடையும் பிரமாவினிடத்தும், எறும்பினிடத்தும், உண்டான சகலசீவர்களிடத்துமுள்ளசரீரங்கடோறும் உண்டாகி யடைந்திருக்கும்,—

௩௪. குண்டலிசத்தியி னிலக்கணங் கூறல்.

குளிர்ச்சியின் வருத்தத்தினால் நித்திரைசெய்கின்ற பாம்பினுடல்போல கெட்டியாகவளைந்து சதாகாலமும் அசைவற்ற ஆந்திரவேட்டனிகையானது பிராணவாயுவினு னிலையாயிருக்கும், வாழையினது மிருதுவான மலரைப்போல அயத்திலும் மேன்மையாக மிருதுவானதாகும். அவ்வாந்தரவேட்டனிகையினிடத்தில் ஒருகுண்டலிசத்தியானது பரிசுத்தமாய் குற்றமற்றமேலானதாய் சத்திகளனைத்திற்கும் சயத்தையடையக் கொடுக்கும்.—

௩௫. இதுவுமது.

கோபமிருந்த பெண்சர்ப்பத்தைப்போல பெருமூச்சுவிடும்; சதாகாலமும் வதனமேலாயிருக்கும்; எப்போதும் சலனத்துக்குக்காரணமாகும், மனப்பெட்டியைச்சேர்ந்திருக்கின்ற நாடிகளியாவுங் இக்குண்டலிசத்தியினிடத்தில் பந்தப்படும்; இதனது நாமம் குண்டலினி சத்தியாம். விளங்குகின்ற பரிசமான ஞானத்தினது கலையினாற் பரிசுத்தமாகும். † —

௩௬. இக்குண்டலி சத்தியின் பாவனையே கலைகண் முதலிய வாய்ப்புரியட்டக சரீரமாமெனல்.

அக்குண்டலி சத்தியானது சிந்தனையினாற் கலையாகும்; ஞானத்தால் ஞானமாம்; சீவனத்தினாலுறுகு பொருந்திய சீவனாகும்; மனனத்தினால் மனமாகும்; சங்கற்பத்தினால் அளவற்ற சங்கற்பமாகும்; நிச்சயவறிவினால் புத்தியாகும்; அகம்பாவத்தால் வரப்பட்டவகங்காரமாகும். இப்படிப்பட்ட புரியட்டகமென்னு நாமத்தைப் பொருந்தும். —

௩௭. குண்டலினிசத்தியே பிராணனான ரூபமாய்ச் சீவனுக்குச் சலனமானத்தைக் கொடுக்குமெனல்.

குண்டலினியென்கின்ற சீவசத்தியானது, மிகவுநன்மையதாக தேகத்திற் புணர்ந்திருக்கும் பிராணமயமான வுருவமாதலினால் கீழிலுமேலிலும் வருதலும் போதலுமாகும்; உறுதியில்லாமல் சமஸ்தமுமாய் ஊர்த்தமுகத்திற் சென்றுஞ்சு செல்லும்; சகலமுமாய் அதோமுகத்திற் றிரும்பினுந்திரும்பும்; தடையில்லாமல் சீவனாய் மரணத்தையடைகின்ற பிராணவாயுவும் அந்தக்குண்டலிசத்தியேயாம். —

௩௮. அக்குண்டலினிசத்தி பிராணசலன மின்றி யசைவறுவிக்கிற்

நடுவிடத்தில் எவ்விதத்திலும் செல்லுதல் நீங்கலக்கெடுத்து இக்குண்டலிசத்தியின்றால், அகத்திற்சேர பிராணவாயுவைத்தடுத்தலினால் நிலைபெற்ற சீவர்களுக்கு வியாதிவர

† இ-ம். சதநாடியின் மத்தியின் விளங்கிய வாந்தரவேஷ்டனியி னியல்பையு மவிதனிடமாக விளங்கினகுண்டலி சத்தியினியல்பையுந் தெரிவித்ததாம்.

சாமானா வியாதியுண்டாகாவெனல்.

மாட்டாது என்றுசொல்லவும், ஆதியும் வியாதிகளு மாகிய இரண்டுமுண்டாகுதலையும் கழிதலையும் உடன தமிருடையினும் சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமனர் கேட்டவளவில் வசிட்டமுனி சொல்லுவார். * —

௩௯. ஆதிவியாதி யிரண்டையும் மியாதென்றவிளுவுங் கூத்துரங்கூறல்.

சரீரத்தின் துன்பத்தை வியாதியென்பார்கள்; அந்தக்கரணவாசனையை ஆதியென்று சொல்லுவார்கள். பேதமுள்ள ஞானத்தினால் உத்தியினது முலத்தில் ஆதியானதுண்டாயிருக்கும், உயர்வுள்ள ஞானமில்லாமையினாலும், இந்திரியங்களை அடக்கப்படாதபடியினாலும், தங்காலின்ற மனதில் விஸ்தாரமாய் ஆசையும் அகங்காரமும் வளர்தலினாலும்,— இவை

௪௦. இதுவுமது.

யடைக்கோம், இவையடையவில்லையென்கின்ற அவதனத்தினால் மோகங்கொட்டிப்படும் அங்கோசு மிகவுமுண்டாக மனமாகையில், மிருத்த பவிகையப்போல ஆதியானது நெருங்கும். மிருக்துவைசையானது, வெளிப்பட்டு முடாமலையானது முதிருங்காலத்தில் மியாதிக்கவிபகாரத்தையல்லாமல் கொடியவியகாரங்களைச்செய்கின்றதினால் சரீரவியாதியுண்டாகும். † —

௪௧. வியாதியுண்டாகுதலின் காரணமுறைத்தல்.

அற்புதியினாலும் கொடிய தேசங்களில் சஞ்சரித்தலினாலும், அற்கால வியவகாரங்களினாலும், செய்கின்ற சிருத்தியங்களில் கட்டிப்பிடிம் பொல்லார்களினாலும், அற்சனசங்கத்தினாலும், கொடிய வஸ்துவை யுண்டாலும், அசாரத்தினாலும், அவினைப்படைப்பிணைத்தலாலும், அசாரமயினாலும், — நாம்புகளிடத்தில் கருதுங்களினதுமாத்தலினாலும், நல்லவிராமனா

௪௨. இதுவுமது.

தார்கள் சிரத்தல்பொருக்களினாலும், நல்லபிராணவாயுவானது ஓடி மிகவுந் நின்றுமின்னாமகவும் மேடுகமுந்த நிறுதலையடையும். அதையடைக்கால் மேடுஆமென்பாப்படி முன்சொல்லப்பட்ட குற்றங்களாலே, முவாமகமின்ற மேவளிற்கலைத்திலும், வருஷைவலைது, முவாமகமின்ற கூகாலத்திலும், ஆக்காமிர் குறைகளையும் பிறைகளையும் பெறுகின்றதுபோல தேகத்தின் மிருத்த வியாதியுண்டாகும். § — பவுருவ சனாத்திலுள்ள தாலும்

௪௩. ஆதிவியாதியுண்டாகும் ஸ்தானமுறைத்தல்.

இச்சனத்திலுள்ளதாலும், அபானதாலும், அசாபானதாலும், அசாவினமிய மிருக்கவையாசேபெறுமினை, அது தன்னிடத்தில் அவ்வண்ணமே கிகிதிக்கின்ற னாம். இவ்வண்ணமாய் ஆதிகளும், வியாதிகளும், பரனாம். இவ்வண்ணமாய் ஆதிகளும், வியாதிகளும், ஞாந்த சூக்கத்தினாலுண்டாகும்; சொல்லப்பட்ட இந்த

* இ-ம், குண்டலினிசக்தியி னனைசெபமகோபுமஹிமையே வக்கோர் மிகித்தியு மென்பதாம்.

† இ-ம், வாசனைகுபமானவாதியும் தேகவருத்தமான வியாதியு மதனிலக்கண முமஹிமைத்பத்தியுங் கூறினதாம்.

§ இ-ம், செயற்கைத் தொழிலே வியாதி யுதிப்பதற்குக் காரண மென்பதாம்.

ஆதிக ளானவை இரண்டுவிதமாய் நசிக்கின்றகிரமத்தை, ஸ்ரீராமா ? நீயான்சொல்லக்கேட்கக்கடவாய் *-

௪௪. ஆதியானது சாமானியஞ் சாரமென விரண்டாமவற்றிற் சாமானிய வாதி கெடுகின்ற மார்க்கமுரைத்தல்.

ஆதியானது, சாமானிய மென்றும் சாரமென்றும் இரண்டு விதமா மென்று சொல்லுவார்கள். சாமானியமானது சரீரத்திலுள்ள வியாதியாம் ; சாரமானது பிறப்பாகும். முழுது மிச்சரீரத்திலுள்ள வியாதியானது தனக்குரியவஸ்துவை யடைந்தால் நாசமடையும், பாவனையான ஆதிக ளில்லாவிடின் உண்டாகும் வியாதியானது நீங்கிப்போகும். —

௪௫. சாரவாதிக சிக்கின்றமார்க்கமு மாதியினு லுண்டாகாதவியாதிபிறக்குமார்க்கமுங்கூறுதல்.

சாரமென்கின்ற சநநவியாதியானது, ஆத்மஞானத்தினு லல்லாமல் எவ்வளவுநீங்காது, திரும்படி இது பழுதையென்கிற அறிவினாலல்லாமல் சர்ப்பம்கெடுவதுண்டோ. சுமைமிகுந்த ஆதியி லுண்டாகாத சரீரவியாதியானது, மந்திரத்தினாலும், அவிழ்தத்தினாலும், அநேகவயித்திய சாஸ்திரங்களை யப்பியாசித்த மிகுந்த வழிவினையுடையவயித்தியரென்றும், உரைத்த இத்தன்மையாற் கெடும் ; இதையாஞ் சொல்லவேண்டியதில்லை : ¶ —என்று சொல்லிய வளவில், ஆதியிலிருந்து வியாதியானது எப்படியுண்டாகும் ? பின்பெதினாற்கெடும் ? மலைக்கொப்பானவரே ? நீர் சொல்வாயென்று ஸ்ரீராமன் கேட்டமாத்திரத்தில், வசிட்டமுனி சொல்லுவார்.

௪௬. ஆதியி லெங்ஙனம் வியாதியுற்பத்தி லயமாயிற் றென்கின்றவினு விரண்டிற்கதனுற்பத்தியைக்கூறல்.

நிலையாயிருந்து மனது கலங்கவும் சரீரங் கலங்கும், சரீரங்கலங்கினலெதிரேவந்துபொருந்திய வொன்றையுந் தெரியாமல் நேரான மார்க்கம் விட்டு தீயமார்க்கத்திற் பிராணனோடும். — அர்த்தசந்திரபாணமானது தைக்கின்ற மிருகத்தைப்போல வழிதப்பியோடும், கலக்கத்தினால் பிராணவாயு நிறைந்திருக்கின்ற சமமில்லாமற்பரந்துசெல்லும் நாடிகளு நிலையி னிற்கமாட்டாது. சொல்லாநின்றசீரணமாகியும் அசீரணமாகியும் மிகுந்த சீரணமாகியும், அசனமானது தங்குகின்ற சரீரத்துக்கு நாடிகள் பிராணன்களுடைய சலனத்தினால் நமனாகும்,— சரீரத்தினுள்

௪௭. இதுவுமது.

௪௮. இதுவுமது.

விரோதத்தினால் தரிக்கின்ற அன்னமானது, வேறுவடிவமாய் தீராத வியாதியாகும். அத்தன்மையால் ஆதியினால் வியாதி பிறக்கும், தொடர் பில்லாமல் ஆதியானது கெடுமானல் நோய்களு நாசமடையும்.

---

* இ-ம். பஞ்சதன்மாத்திரையிலாதியும் ‖ பஞ்சபூதத்தில் வியாதியு முண்டானதை யறிவித்து, அதுகளிரண்டு விதமாய் நசிப்பதைச் சொல்வதாம்.

¶ இ-ம். அபிமதவஸ்து லபிதத்தாற் சமானியவாதியும் ஆத்மஞானத்தாற்சாரவாதியு மணிமந்திரவவிஷதங்களினு லாதியிலுதியாம லசனாதிக்கிரமவிரோதங்களினு லுண்டான வியாதிகளு நசிக்குமென்பதாம்.

உச்சரிப்பான மந்திரத்திலும் யோகங்களிலுள்ள
ற மார்க்கத்தை சொல்லக்கேட்பாய். ‡ — சன்னிதத்
௪௯. வியாதி யினாசங் கூறல்.
தில் வியாதிகளானவை கடாக்ஷத்திலும் மருளிலோ
சனத்தைச் செய்கின்றதோ, அப்படியே யால
ய முதலிய மந்திராக்ஷரங்களின் பாவனையிலும் அ
னேக்கிய காரியங்களைச்செய்யும். மெய்யாகவேஜன்ம
மாகிய பரிசுத்தமாகிய தெருவிலும், சுத்தங்களின்
சார்பிலும், பொன்னைப் படிகங்களிலும் நல்ல
தங்கமானதுபோல, அழிவில்லாமல் மனது பரிசுத்தமா
௫௦. இதுவுமது.
டையும் — பரிசுத்தமாக மனது தெளிந்தால் சரீரத்
தில் ஆனந்தமேயாம்; மெதுவான பிருதுவான்
பூரணசந்திர ஜோதியாலும் சங்கங்களாலும் நன்
மையாக பிரகாசிக்க படட்டாதோ. சாத்வீகத்தை
யுடைய மனதுதெளிந்தால் பிராணவாயுக்களும் பிர
மாணம் சஞ்சரிக்கும்; புத்தி அன்னமும் பிராணா
யச் சீரணத்தையடையும்; அதுவே வியாதியொன்
௫௧. குண்டலினி சக்தியினுஞ் சீவனுக்குமபேதங் கூறல்.
று முண்டாகாது. * — ஆதிவியாதிகளான வியாதிகள்
உண்டாகி வளிக்கின்ற மார்க்கங்களைச் சொன்னேன்;
முன்சொல்லப்பட்ட குண்டலினி சக்தியினது போகத்
திலும் முன்சொல்லிய யோகத்தைக் கேட்பாய். ரு
ச்மமற்ற புரியப்பட்டதென்னது ஒருகாலத்தைத் தரித்து
சீவனுக்கு, பிராணவாயு வென்கின்ற யாகத்தைத்தரி
த்த குண்டலி சக்தியானது, யாவர்க்கும் பெரிய
௫௨. குண்டலினி சத்தியின்றியோகத் தினாலுண்டான சித்திகளுன்னை யறிவிக்கத்தொடங்கி பிராணாயாமத்தால் முண்டாகிய விரல்யுடன் சித்திமாற்சு கூறல்.
புட்பத்தைப்போல இருக்கும். — சொல்லப்ப
ட்ட குண்டலி சக்தியை, பூரகப் பறக்கத்தி
னால் பூரணஞ்செய்து பிரகாசிக்கும்படி. பின்
றால், அப்பொழுது மகாமேருவைச் சொல்லா
நிற மலைகள் யாண்டாலும்; மிகவுஞ் சரீரம் வரு
க்கும். பூரகத்திலும் பிராண விசேஷம் இருக்கி
ன்ற சரீரத்தை சொல்கின்ற வழியானது மே
ருவிலும் ஒருபோதே அகாயமத்து செய்விக்
௫௩. இதுவுமது.
கும். — சர்ப்பத்தைப்போல வேகமாய் தண்டைப்
போலுயர்ந்து குண்டலி சக்தியானது விளிக்குமே
மேலெல்லாம் வரிசையைப்போல, சரீரத்தைக் கட்டிய
நாடிகளைத்தும் தான்பிடித்து தேகமெல்லாம் பின்
யாதகன்னாம், வாயுவினால் விரைந்து தேசத்தையான
து சலத்தின் மத்தியிலிருந்திலும் எழும்புகின்ற
௫௪. இதுவுமது.
தொட்டுப்போல, மேலே விளங்கிக்கும். — இப்படி
சகாயமே மிகவுமாயிரம்வரிக்கின்ற யோகத்திலும் யோ

‡ இ-ம் ஆதிவியாதி மனக்கலக்கத்தினா லுண்டான வெனவறிவித்ததாம்.

* இ-ம். வியாதிகள்மனம் தெளிந் தாகத்தான துவி வரிக்கும்மாம றிவித்ததாம்.

கியானவர்கள், ஆகாயத்திலெழும்பிக்கொத்திக்கிரிகிக்கின்ற தூண்டிலிலடைந்த மச்சத்தைப்போல, சஞ்சரிப்பார்கள். குண்டலினியென்கின்ற சத்தியானது, சுழிமுனைக்குட் சென்று பிரமரந்திரத்தின் மேலாகப் புறப்பட்டு மேலொருபன்னிரண் டங்குலத்தினது அளவிலடைவதாகி, —

௫௫. சித்ததரிசன சித்திமார்க்கங்கூறல்.

நாடிகளனைத்தையும் தடுக்கின்ற விரேசகத்தினால் இரண்டுநாழிகை அடைந்திருந்தால், நீண்டவாகாயகமனஞ் செய்பவர்களை தரிசிக்கலாம். ஞானநுட்பத்தினால் சமீபத்திற் செல்லுகின்ற ஞானதிருஷ்டியினால் ஆகாயத்தில் அணிமா முதலிய நல்லவஸ்துக்களைக் கொடுக்கின்ற சித்தர் குழாங்கள், சொப்பனத்திற் றோற்றுவதுபோல, நிலையாகத் தோற்றும். —

௫௬. பரகாயப்ரவேச சித்திமார்க்கங் கூறல்.

பன்னிரண்டு விரலளவு வதனத்தின் முன்புசென்று இரேசகத்தினுடைய அப்பியாசத்தினால் நிலைபெற்ற பிராணனானது வெகுகாலம் நிலையாயிருக்குமாயின், பரகாயப்ரவேசஞ் செய்யும், என்ற வசிட்டமுனியை ஸ்ரீராமர், சூட்சுமமார்க்கத்திற் போவதற்கும் பருமனாக வாகாயத்தை நிறைவதற்கும் சரீரத்திற்கு அணுத்துவமும் மகத்துவமும் கொடுக்கும் வண்ணமெப்படி? ‡ —

௫௭. இச்சித்திகளையடையத் தேகத்துக்குச்சூக்குமத்துவமுந்தூலத்துவமுமெய்யான முண்டாயிற்றென்னுமினுவுக்குத்தரங் கூறல்.

கிருபை செய்வாயென் றிராமர்கேட்கவும், வசிட்டமுனிசொல்லுவார். ஒன்றாகியும் சின்மாத்திரமாகியும், சமத்துவமாகியும், பரிசுத்தமாகியும், உபசாந்தமாகியும், ஒருசம்பந்தமுமில்லாத வஸ்துவாகியும், சூட்சுமத்தில் மிகவுஞ் சூட்சுமமாகியும், சகமல்லாததாகியும், சகத்தைச் சேராததாகியும், பொருந்தியிருக்கின்றது ஒன்றுண்டு; அதுவே சங்கற்பத்தையுடைய தன்னைத் தானே பிரிவாகச்செய்யும். —

௫௮. இதுவுமது

அநேகமான கலக்கஞ் சூழ்ந்தபோது சீவனாகும்; சங்கற்பமென்று சொல்லப்பட்ட பிரமையினால் கலங்கப்பட்ட சீவனானவன், மூடமாய் குழந்தைகள் பார்க்கப்பட்ட பசாசைப்போல, மித்தையாகிய விந்தச் சரீரத்தைப்பார்க்கும். அநேக சீவர்களும் இப்படியே எங்ஙனமெனைக் கருதுகின்றார்களோ அந்தப்ரகாரமே சகத்தில், மனதின்கண்ணுள்ள திடத்தினால் அதைப் பார்ப்பார்கள். —

௫௯. இதுவுமது.

திடமான பாவனையினது அப்பியாசத்தினால், அறிவில்லாதவர்களும் ஒன்றையொன்றினும் கெடுத்து விஷத்தை யமுதமாக்கி, அமுதத்தை விஷமாக்கி, பொருந்தியிருப்பார்கள், மேன்மைபொருந்திய மெய்ப்பாவனையால் இவ்வுடலானது தூலமாயிற்று, தோற்றப்பட்ட விச்சரீரமானது திரும்பவும்

‡ இ-ம். நான்குசித்தியுண்டாகுங் கிரமமறிவித்ததாம்.

௬௦. இவ்வணிமாதி யஷ்டசித்திகளையுஞ்சூடாலைபெற்றுவிளங்குதல்.

அசாத்தியபாவனையால் சூட்சுமதேகமாம். * — அணிமாமுதலிய அஷ்டசித்திகளையு மனகாமனையு யடையுமின் பாவனையாலுண்டான யுத்திகளும், இந்த மார்க்கமே யாகும் ; தெளிவிலும் யோகத்தினது சித்தியை தெரியார்களுக்கு தெளிவாகும். சாதனாமடைய அணிமாமுதலிய குணசம்பத்தை அப்பியாசிக்கின்ற கருத்தினுடைய இராத்திரிகளையு முடைய சமுத்திரந் தூற்ற சங்கலைகளிலும் சூடாலையானவள், லீலையைப்போல் வளங்கொண்டு வெளியில்லாததாகவன்

௬௧. நாநாவித வுபாயங்களாற் போதித்துமறிவுண்டாகாமையா லுபேக்ஷித்திருத்தல்.

ப்பாள். ‡ — கலைகளை யொழுகோமும் பிரியாதவள் ஆதம்பாமுதலிய ஞானத்தை பிறந்த அனதுபுருடனுக்கு பலயந்திரங்களினும் தெளிவித்தும், அந்த அரசனுடைய பரிபக்குவ ஞானத்தில் விஸ்ராந்தியடைதலில் யோகாசிரியார் சூடாலைக்குப் பொருந்திய குணங்களையும் குற்றங்களையும் கவனியாமல் யாதுமேபோல தெளிந்திலன்.

௬௨. இதுவுமது.

— தன்னாத்மஞானத்தில் விஸ்ராந்தியடையாதிருக்கும் அந்தப் புருடனுக்கு தனது நல்லஞானசம்பத்தை புணர்த்திலள். சூத்திரத்து மார்க்கத்தைச் சொல்லுவாரு முண்டோ, என்று வசிட்டமுனி சொன்னவளவில், மகரிஷிகளையுடைய சூடாலையானவள் வருத்தஞ் சொல்லவும், அந்தச் சிகித்துவசனுடைய ஞானத்தை யடைந்திலனே தலாய், ஆசாரியரே ? மற்றவர்களெப்படி. தெளிந்து

௬௩. வல்லமையுள்ள வாசிரியர் போதித்துமறியாத வறிவுமே லெந்நன முண்டாமெனி லாசிரிய வாக்கியத்தினம்பிக்கை யுள்ள சிட்டனறிவே சாதனமாகுமென்டாகுமெனல்.

கொள்ளுவார்கள். ¶ — அவையும் வகையை சொல்லுமென்று ஸ்ரீராமன் கேட்கவும், வசிட்டமுனி சொல்லுவார். பிரபோ ! சிகத்வசன், நன்றாகில் மாத்திரம் மன்னனைச் செய்யுமாம். ஆசிரியனிடம் வாக்கியஞானத்துக்கு பரிபக்குவமான சிட்டனறிவே காரணமாகுமென்று சொல்ல, இருமபலுமுனிக்கு ஸ்ரீராமன் சொல்லுவார். — சிட்டனறிவே

௬௪. சிட்டனறிவே யேதுவென் றாலாசிரியசனமே மதுவன்றோ

காரணமும் ஆசாரியசகாயகாரணமாக, மேலான ஞானத்துக்கு வருவதெப்படி. ? என்றுஸ்ரீராமன்கேட்க, வசிட்டமுனியானவர் அதற்குச் சொல்லுவார்.

---

* இ-ம். அகோசாமான சைதன்யம் பாவனையாற் சித்தந் சகத்தானாவது போல, சிவனறுத்துவ பாவனையால் சூக்குமத்துவமு மகத்துவ பாவனையாற் றூலத்துவமு மவனது பாவனுவடிவான தேகத்துக்கு வருமென்பதாம்.

‡ இ-ம். கலைகளை யப்பியிக்குமிசித்த சிர்சித்திகளைப்பெற்றளென்பதாம்.

(அணிமாதியஷ்டசித்தியாவன.) அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவ மென்பனவாம்.

¶ இ-ம். பக்குவமின்றியகாலத் தெய்வீகத்திருவன்மையைப் போதிக்கிற மாகாது வடியாதென்பதாம்.

௬௫. இதுவுமது. (வெனில் அஃதே யேது வென்பதற்கோ ரிதியாசமுரைத்தல்.)

விந்தமலையின் மகாரணியத்தில் ஒருவேடன் பெரிய சம்சாரி ; அவனொருதினம் புல்லுகள் நிறைந்த காட்டில் நடக்கின்ற மார்க்கத்தி லோர்பலகறையைப்போட்டுவிட்டு அழுகையுடன்றேடினான்.— மூன்றுதினந் தேடினபின்பு, பூர்ணசந்திரனை யொத்த ஒரு இரத்தினத்தை எதிரேகண்டான் ; ஏக்கமுற்று பலகறையைத்தேட, சத்தவுலகமும் விலைபெறத்தகுந்த இரத்தினத்தை வேடுவனேபெற்றான். அதைப்போல பக்குவ காலத்திற் செய்யும் பிரம வுபதேசத்தினாலும், வேதாந்தசாஸ்திர ஞானத்தினாலும், அறிவுண்டாம், ஆசாரிய ருபதேசத்தினால் திரமாகவொன்றைநினைக்க மற்றொன் றுதயமாம். ‡ —

௬௬. சீடனறிவுமுயற்சிக்குமாசிரியர்வாக்கதன் பயனுக்கு மேது வெனக்கூறிச் சூடாலையின் கூட்டரவால் நித்திய விவேகந் தோற்றிற்றெனல்.

சுகம்பொருந்திய வியாபக ஞானத்துக்கு ஆசாரிய ருபதேசமானது காரணமாதலைக் கிட்டாததானாலும், பலகறையானது நல்ல விரத்தினங் கிடைப்பதற்கு காரணமானதுபோல காரணமாகப் பயனைக் கொடுக்கும். குலவாகின்ற சிகித்துவ வரசனானவன், ஆத்மஞான மில்லாததினால் மயக்கமடைந்து மிகவும் லகுவாய்ப் பொருந்துகின்ற தனது செல்வங் காடாக்கினியென்று நினைத்து துக்கமடைந்தான் ; —

௬௭. இல்லறத்தருமப்படி தானமுதலியவைகளைச்செய்துந் துன்பநீங்காமையாற் றுறவறத்திற் றவஞ்செய விரும்பி தேவிக் குரைத்தல்.

அரியதானங்கள் அநேகங்களைச்செய்தான் ; விரதங்களை மிகுதியாகச்செய்தான் ; தீர்த்தங்களிலெல்லா முழுகினான் ; துன்பமில்லாமையை அவைகளாலு மடைந்திலன். மிகுந்த துன்பத்தினால் மனதுலைந்து ஒருதினந் தனியேயிருந்து தனதுமடியின்மேற் சூடாலையை வைத்துக்கொண்டு மகாவெப்ப மடைகின்ற துன்பங்க ளனைத்தையும், அவளுக்குச் சொல்லுவான்.— ஆளப்பட்டவரசாட்சியிலும், அனுபவித்த சம்பத்திலும், இப்போதுயானிச்சைவிட்டேன் ; நெடியகாட்டினிடத்திற் செல்லவிரும்பினேன் ; துன்பவின்பங்களும் ஆபத்துச் சம்பத்துகளுமாகிய யாவும் மாசுநீங்கப்பட்ட வாரணியத்தில் வசிப்பவர்களை துன்பஞ்செய்யாது ; பூமியினிமித்தம் பிரமிக்கவேண்டுவதில்லை ; காணத்தகுந்ததனதுயிர்ச்சார்பு பொருட்சார்பில் பற்றுநீங்காதிருக்கும் இராச்சியத்தைக்காட்டிலும் வலியவனம்நன்மையாம்.—

௬௮. இதுவுமது.

௬௯. இதுவுமது.

ஆசையில்லாமல் ஏகாந்தமா யிருக்கின்றமனதைப்போல குளிர்ச்சிபொருந்திய சந்திரனும் பிரமதேவனும் சொர்ன சமுகத்தை யடைந்திருக்கின்ற தேவேந்திரனும் இன்பமடையார்கள். ஆதலால் வனத்திற் செல்லுகின்றவே

‡ இ-ம், குருவாக்கியங் காரணமாகச் சீடன்முயற்சிக்கின் ஞானமுதிக்குமாதலி னதுவேகாரணமா மென்பதாம்.

௭௦. அரசன் கருத்து முதிருமித்தல் கூடாமல் வனஞ் செல்வதை விதிப்படி தடுத்தல்.

ன்னை நீ குற்றமென்றுதள்ளாதே ; தலைவன் விரும்பியது குலஸ்திரீகள் மாற்றார்கள் ; நுண்ணிய விடையையுடைய பெண்ணேயென்று சொல்லிய அரசனுக்கு சூடாலைசொல்லத்தொடங்கினாள்.¶—வசந்தகாலத்தில் புட்பங்கள் ப்ரகாசிக்கும் ; சரற்காலத்தில் காய்கள்ப்ரகாசிக்கும் ; அம்முறைமைபோல உரியகாலத்தில் செய்யப்பட்ட கன்மங்கள் ப்ரகாசிக்கும் ; மூப்பினால் சரீரமானது தளர்ந்தால் நட்புற்ற விச்சைகெட, கானகத்திற்செல்லலாம் : எவ்வன்னகாலத்திற் செல்லுதல் முறைமையன்று, செல்லா திருப்பாயென்று

௭௧. வனஞ்செல்லக் கூடாதென்ற சூடாலை வசனத்தை விதிப்படி தடுத்தல்.

சூடாலைசொன்னதற்கு மன்னன்கூறுவான். — தடுக்காமலிருப்பாய் ; ஏகாந்தமானகானகத்தில்யான்சென்றிருப்பேன் ; எவ்வளவுந் தங்கமாட்டேன். கச்சிறுக்கிய தனத்தையுடையவளே ? நீ சிறுபெண்ணுதலால் என்னுடன் வருவதற்குக்கூடாது ; நீ பூமிபாலனஞ் செய்து நீங்காமலிருப்பாய் ; நல்லவீட்டில் நின்றுநாயகனீங்கினல் சம்சார மிளைக்காமல் கெடாம விரட்சிக்குதல் குலஸ்திரீக்குத் தவமென்று சொல்லி

௭௨. அரசன் யாருமறியாது வைராக்யமாய் வனஞ் செல்லல்.

ஸ்நானஞ் செய்யும்பொருட்டு சென்றான். — பகற்காலம் போனபின்பு சந்தியாவந்தன நியமங்களைச்செய்து, மனையாளுடன் இன்புற்ற பஞ்சணைமெத்தையைப்போல பூமியினித்திரைசெய்து, அர்த்தசாமத்தில் நித்திரைசெய்யும் வஞ்சிக் கொடிபோன்ற சூடாலையானவள் உள்ளேயிருக்க மிருதுவாக வெழுந்திருந்தவளறியாதபடிபோய், தெரிந்தவனைவர்களுக்கும் நகர்சோதனையாகச் செல்வோமென்று, எல்லாரையுநிறுத்தி வெளியிற்சென்று பட்டணத்தினின்று நீங்கினான்.—மூடத்தன்மையை நீங்காதபெரி

௭௩. மந்தர வெற்பின் சாரலையடைதல்.

யசம்பத்தே உன்னை வணங்கினேன் நிற்பாயென்று நிறுத்தி, தானேசென்று காட்டிற் ப்ரவேசித்து பன்னிரண்டுநாளில் அநேகமலைகளையும், அநேகநதிகளையும், கடந்து மனிதர்கள் போகக்கூடாததாகிய மந்தரமலைக்கு பக்கமான வனத்திற்சென்று, இதழ்கள்விரிந்ததாமரைத்தடாகமும், பூங்காவனமும்,சூழ்ந்திருக்கின்ற வந்தஸ்தானத்தில் வாசஞ்செய்வதானான்.—

௭௪. தவவேடம் பூண்டு நியமப்படி தவத்தைச் செய்தல்.

பன்னகசாலை செய்தான், வேணுத்தண்டஞ் செய்தான், கமண்டலத்தையுஞ்செய்தான், செபமாலையும், வஸ்திரமும், காய்கனிகள்வைக்கத் தகுந்தபாத்திரங்களும், மிருகசருமமுமாகிய விவைகளை சேகரஞ் செய்தான். மேல்,மேலானதபசைச் செய்யத்தொடர்ந்து உதயமான முதற்சாமத்தில் சந்தியாவந்தனமும் செ

¶ இ-ம். நித்தியாநித்தியவஸ்து விவேகமுண்டாயதனுனிகபரவிச்சை விராகமுதித்ததென்பதாம்.

எ௫. தவவேட பூண்டு நியமப் டி தவத்தைச் சய்தல்.

பமும், இரண்டாஞ்சாமத்தில்புட்பமெடுத்தலும், இப்படியே கன்மங்களுண்டாக்கி, — மூன்ருஞ்சாமத்தில் தேவாருச்சனேயும், நான்காவது சாமத்தில் கனிகாய்களைப்புசித்தலும், படர்ந்த விராமுழுதும் செபமுமாகும்; இப்படிசொல்லப்பட்ட சிகித்துவராசன் தவஞ்செய்தான். இந்தவமண்மனேயி லிருக்கின்ற சூடாலேயானவள், பாதிராத்திரியில் விழித்துக்கொண்டாள்; தனதுபக்கத்திலிருந்த அரசனேக்காணுதவளாய் துன்பமடைந்து, செல்வத்தினின்று நீங்கி, மன்னவன் கானகத்திற் சென்ருனென்று இரக்கத்துடன் மெலிந்து,

எசு. தலைவித லவனைப் பார்த் மேனடக்குங் ரியங்களை யா லாசித்தல்.

¶ — கொழுநனேயல்லாமல் குலப்பெண்களுக்கு வேறேகதியில்லே; ஆதலின், இராசாவையாங் கூடவேண்டுமென்று மனதிற் சிந்தித்து, பலகணிவாயலால் வெளிப்பட்டு ஆகாயத்திற் சென்று, ஆகாயத்திலுள்ள சித்தர்கள் மிச்சமான விதோ வொருசந்திரனென்று சொல்லும்படி வதனமானது விளங்க செல்லுகின்றவள், அவ்விடத்தில் ப்ரகாசம் பொருந்திய வடித்த கத்தியோடும் இராத்திரியில் ஒருவனுகச் செல்கின்ற அரசனேப் பார்த்து, சூடாலேயானவள் சிந்திப்பாள். —

எஎ. காணுங் ாலமிதுவன்றெ ாத் திரும்பிவீடு ருதல்.

இனிமேலிவன் செய்யத்தக்கன வென்னவென்று சிந்தித்து மேல் நடப்பவை யாவையும் பார்த்தாள்; மதுர வசனமுள்ள சூடாலே யானவள், தன் சிந்தனேயினின்று திரும்பினுள்; இப்பொழு திவ்வரசனே நாமடையுங் காலமல்ல, இராகத்து வேடங்கெட பின்னடைவதே நியதிமார்க்கமாமென்று திரும்பிப் பழைய பதியில்வந்தாள். கேட்டவர்களுக்கு அரசனொரு காரணத்தினுற்போனுரென்று யாவருக்குஞ் சொல்லி, —

எஅ. தலைவனு ந்தரவின்படியர செய்து மீண் டுகுதல்.

தெய்வப்பெண்ணுக் கொப்பான சூடாலேயானவள், இராசநீதியினுல் பூமியை சமதிருஷ்டியினுல் தனிமையாக விரட்சித்தது கிரமமாக பதினெண் வருடனீங்க, சூடாலேயென்பவளும் தனதரண்மனேயில் வாழ்ந்திருந்தாள். சிகித்துவசன் குற்றமிகுந்த வனத்திலிருந்தான்; அவனிடத்தில் யாஞ் செல்வதற்கு இதுதகுந்த காலமென்று இராத்திரியிலே வெளிப்பட்டு ஆகாயத்திற் சென்ருள். —

எகூ. தலைவனை ங்கண்டு தலைவிவி சனப்படுதல்.

வாயுவின் ஞேளிலேறி தெரியாமற்சென்று மந்தரகிரியைச் சேர்ந்து, முத்துமாலேயும் மிகுந்த விரத்தின பரணங்களும் இல்லாமல் கருகியுலர்ந்துபோன சரீரமாய் ஒருசரீர மிருந்ததைப்பார்த்தாள்; தனது தலைவனென்று தெரிந்திலள்;

¶ இ ம். புறப்பற்ருகிய வுயிர்ச்சார்பு, பொருட்சார்பு, துன்பமெனக்கண்டு அவைதைத்துறந் தகப்பற்றைநீக்கத் தவஞ்செய்ததாம்.

மகாயோகத்திலும் தனது காயகஞ்சன வாசனென்று அறிந்துமிருந்து துன்பங்களை யொழிந்தானைக் கண்டு, அவன் னிடத்தில் மனதுடன் சொல்லத்தொடங்கினான். †— ஐயனே! ஐயனே! அஞ்ஞானமானது, மிகவும் கொடியது; ஆதலால் இம்மெய்ஞ்ஞானமே துன்பமற்றுளன்; பிரியமற்றவர்க்கு ஞானமும் சம்பத்தும் மோக்ஷமுமானவிவைகளை இப்போதே தந்தருளினீர்; வேறொரு குறைவேதுமில்லை சிறியனாகிய இங்ஙனம் பாவியாள் என்று நிந்தியாதபடி. மற்றொரு சரீரத்தை யெடுத்து விமானமேறிப் போயினள்; அறியாமை நீங்கும் மனதுடையவனுமாய் அரசனிருந்தான்— பக்குவமாயிருக்கையில், இந்த நிர்மலமான நிலையில் ஞானமானது பிரகாசிக்கும்; இப்படியாம் தருக்கமென்று சிந்தித்து ஒப்பற்ற சித்தியானந்தத்தில் தான் வேறற்றுமாய், மேலான பொருளிரானவன் குமாரனும் ஆகாயத்திலிருந்து தனது தலைவன்றான் வருகின்றான். அந்தக்ஷணமே அவ்வரசன் பார்த்து சிங்காசனத்திலே ருந்து எழுந்திருந்து பூசைசெய்யலாகு செய்தான்.—

சொர்ணமயமான வடிவுடையவனும், வெண்மையான புண்ணியமான ஸ்நானத்தையுடையவனும், வெள்ளை வஸ்திரத்தைத் தரித்தவனும், முனிவர்களுள் பூரணமானவனும், நல்ல புத்திமானிகளைச் சேர்ந்த மேன்மை நிறைந்தவனுமான அவனைப் பார்த்து, இவ்விடத்தில் எழுந்தருளுமென்று சித்துவனரசன் தன்னிடத்திலுள்ள, ஆசனங்கொடுத்தான்; பிரமனுடைய குமாரனும் திருப்திகொண்ட ஸ்பானதைத்தையுடைய இராஜரிஷியே! உன்னைவணங்கினேனென்று மதுரமாகச் சொல்லி, — ஆசனத்திலிருந்த அரசன் சொல்லுவான். தேவருஷியாகிய நீர் வருகையினால் இப்பொழுதெல்லாம் ஆதலால் பாவமனைத்தும் நீங்கிப்போகின்றதென்று, அநுக்கிரகமாகவுனைச் செய்து சங்கற்ப மாத்திரம் தெரிந்ததென்று நினைத்தான். இந்தப்பிரமமுனியும் மகாபுத்திமானாகிய அரசனைப் பார்த்து, உபசாரமுறையும் விசாரமும் பாவனை செய்து பின்னர் சொல்வான்;— ஆதலால் பெருந்தவப் பயனாயுள்ள மனதிலும் மாயையினின்று விடுபட்டு விடாது அறிவாலுண்டான மோக்ஷத்தைத் தொடர்ந்து செய்தீரோ, மனதையொழித்த அரசனுடைய பந்தத்தை நீக்கி தன்னுடைய செய்கைகளை விடுதலையாகக் கருதி வசித்தல், சந்திரசேகரிக்கும் தவமென்று

௪௦. போதித்தற்கு தெய்வீக வடிவமெடுக்க வாலோசித்தல்.

௪௧. தேவகுமாரனுக்கு தெரிசனங் கொடுத்தல்.

௪௨. பிரமரிஷியு மகரிஷியு மொருவருக் கொருவர் உபசரித்தல்.

௪௩. புத்திரன் அறிந்த வரச முனிக்கும் பிரம முனி முகமன் கூறல்.

௪௪. இதுவுமது.

† இ-ம். பக்குவமுள்ளவருக்குப் பதிவுக்கும் பார்க்கும் ஞானத்தைக் கொடுத்தவன் போதிக்க வெழுந்தருளித் துறந்துவந்த வழியாமதைச் சொல்லத் தொடங்கினான் அந்நிலையுருக்கி றென்பதாம்.

அரு. முனியை மூன்று வினு வினவுதல்.

ன்ற வியப்புக் கொப்பாகும். § — இப்படியென்று சொல்விய பிராமணனைப்பார்த்து மன்னன்சொல்லுவான் ; இவ்விடத்தில் எனதுதன்மைகளனைத்தையும் கடவுளாதலால் நன்றாயறிந்தாய் ; இதிலதிசயமுறும்படி நின்றாய், நீராருடைய புத்திரர் ? உமது நாமமென்ன ? இங்குவந்த காரியமென்ன ? சொல்லவேண்டுமென்றுகேட்க, ஒன்றுந்தவிராமல் சொல்லக்கேட்பாயென்று பிராமணகுமாரன் சொல்லத் தொடங்கினான் —

அசு. ஒரு சிறிது தியானத்தாற்கும்பவடிவெடுத்தலையோர் வரலாறாகக்கூறுதல்.

நாரதனென்றோரந்தணன் மெய்ஞ்ஞான தீபத்தையொத்தவன், நல்லசலத்தையுடையகங்கைக்கரையிலிருக்கின்ற அழகியவிடத்தில் நிட்டையிருந்தான். அச்சமாதியினின்று நீங்கி ஒருநேரமிருக்கின்ற சமயத்தில் விளையாடுகின்ற வொருசத்தமானது காதிற்புக அந்த மார்க்கத்தைக்கண்டான் ; அழகிலுயர்ந்த வரம்பைக்கும், திலோர்த்தமைக்கும், ஒத்தவர்களாகிய சிலதேவஸ்திரீகள் கூடிவந்தார்கள் ; —

அஎ. இதுவுமது.

தேவநதியில் சலக்கிரீடையில் சந்தோஷிப்பவர்களும், புருடர்களை சமீபத்திற் காணுதபடியால் வெட்கமில்லாமல் வஸ்திரமில்லாதவர்களுமாகிய அவர்கள்வரவைப்பார்த்து, மனமானது தாவிக்கொண்டுபோய் பரிசுத்தமான விவேகத்தைவிட்டு, விடயசுகத்தையடைவதற்கு, பிராணனலைவுற்று, தொடர்ந்திருக்கின்ற குற்றமற்றநாரதனது மனமானது நிலைபிறழ்ந்து இந்திரியமுமொழுகிற்று. —என்று முனியானவர் சொல்லவும்,

அஅ. ஞானிக்கெங்ஙனம் காமமுதிக்குமென்றிடையிலரசன் வினவினதற்குத்தரங்கூறல்.

உமது வசனமாகிய இனியவமுதத்தினால் மனஞ்சாந்தியானேன் ; ஆனாலும் வேறேசொல்லுகின்ற வசனம்பரமார்த்தத்தைப்போல அறிதற்கரியது, உனதுற்பத்தியை சுருக்கிச்சொல்லுவாய் ; பின்பு மேலானஞானர்த்தத்தைப்ராத்தித்துக் கேட்கின்றேன் மேலேசொல்லுவாயென்று அரசனானவன் சொல்ல, சூடாலையாகிய பிராமணகுமாரன் உரைப்பார். —

அகூ. தாதுகடத்திற் கருக்கொண்டுவளர்தல்.

நிலைபிறழுமனமென்கின்ற மதத்த மதயானையை நாரதமுனியானவர், நல்லவிவேகமென்னும் குற்றமற்றபெரியஸ்தம்பத்தில் நல்லவழியென்னு மங்குசத்தினால் அன்பென்னும் வடகயிற்றாற் பிணித்துதழுவாநின்ற பளிங்குகடகத்தில் இந்திரியத்தைவிட்டான் ; பாலைநிரம்பவும்விட்டான் : செழுமையான சந்திரன் க்ஷீரசாகரத்தில் வளருதல்போல, கருப்பமானது வளர்ந்துசிறப்புற்றது.

கூ0. புறப்பாடு கூறி நாமம்வந்த

கடத்திலிருந்து வெளியில்வந்த புத்திரனுக்கு வித்தையென்கின்ற குறைவற்ற சம்பத்தாகிய சமூகங்க

---

§ இ-ம். போதிப்பதி னம்பிக்கையுண்டாகும்படி. பிறந்தகால வியற்கையைக் கூறித் தனது முகப்படுத்திக் கொண்டதாம்,

காரண முரைத்தல்.

ளைக்கொடுத்து, பிரமதேவனிடத்தில் என்னைக் கொண்டுபோய, பிரமாவும் நமக்குக்கடமையென்றுபொளத்திரனை யெனக்கு தத்துவஞானமாகிய முடிவைத் தரிசிக்கும்படி தெரிவித்தான்; உடனே யத்தினத்தில் அப்பிரமாவுனால் நான் கும்பத்தில் பிறந்தபடியால் கும்பமுனி யென்கின்ற ஓர் நாமத்தையடைந்தேன்.—

௬௬. பிறப்பும் நாமமுங்கூறி வரவைக்கூறல்.

செம்மையானசாஸ்வதி எனக்குமாதாவாம்; வாயத்திரியானவள், சிறியமாதாவாம்; குற்றமற்ற நான்கு வேதமென்கின்ற சினேகிதரோடும் லீலைசெய்துகொண்டிருந்தேனென்று கும்பமுனிசொல்ல, ஆசாரியரே? உம்மைத்தரிசனஞ்செய்தேன், அனேகமேன்மைய இவ்வடிவினைத்தையுமடைந்தேன், ஆரசனுனவன் சாதுவன்மையென்று சொன்னான், கும்பமுனியானவர் அதற்கிவ்வண்ணம் சொல்லத் தொடங்கினார். † —

௬௭. அரசன் வரன்முறையை வினவுதலுக்குத் தரங்கூறல்.

உமக்கு முன்னெனதுவரலாற்றைச் சொன்னேன், நீரார்? இங்கென்னசெய்கிறாய்? என்றதற்கு நீரும் உமதுவரலாற்றைச் சொல்லுமென்று கும்பமுனிகேட்கவும், அரசன்சொல்வான்; பவத்துக்கு மனதுபயந்து செயலற்றவனாய்த் தவஞ்செய்வேன், நாமந்த சிகித்துவஜன்; பட்டணத்தில் அரசாட்சியைவிட்டு இவ்விடத்திலிருக்கின்றேன்; சகலத்தையுமே துயரமெனத் தள்ளிவிட்டேன்;—இவ்வாறான

௬௮. அறத்துவெய்யுந் தவமுந் துன்பமாயிற்றென்ற அரசனுக்கு அத்துன்பத்தை நீக்கச் சித்தாந்தியினுன் ஞானமுநிப் பிக்கும் பொருட்டுச் சகல்கோடிப்பது ஞானமேயன்றித் தவக்கிரியைக் கொடாதெனல்.

லோ, தவக்கிரியைக்கு உண்டான சகலமுஞ் சம்பாதித்து நடத்தியும், அனேகத்துயரைநீக்கி உலைநத்தற்கரியவெளியதுன்பத்தையடைந்தேன்; உலகிற்கரியமுனிவே? யாற்றியவிடமாயிற்று, என்றாரசன்சொல்லவும், கும்பமுனி சொல்லுவார். ஆசாரியரரிவிக்கு ஞானமானது உண்மையாகவேதான் பிரமமாக்கினாலும்; தவத்தொழிலானது காலத்தைக்கழிக்கின்ற வினையாட்டல்லவா. — ஆரசனே?

௬௯. கிரியைப்பேற்பயன் வாசனையாதலி லவ்வாசனை நசிக்கிற் கிரியை நீங்குமெனல்,

ஞானமில்லாத சகலருக்கும் கன்மமே கதியாகும்; சற்குருத்தியானது அசுத்தவாசனையோயாமலிருந்தபடியாது; ஆதலால், கன்மமுந்தொழிலையுமடைவதையடைப்படி. வேலிக்கும் அனேகமனைத்து விருதுவதால் முந்தினாவிருதுக்களின் பயன்கள் அவ்விடத்திற்குமேனவெதேதுபோல, அசுத்தவாசனைகொட்டால், கிரியையிலும் வாட்டப்பட்ட பயோசனமும் தவிர்த்துபோமும். — பறவைகள் ஒருகாலத்தி

௭௦. சர்வம்பிரமமய மென்னும்

லக்கொடாத ஈனவிலிருந்தன்மையைப்போல, சந்தசவ

† இ-ம். பிரமத்திலின்றும் பாதசமுனாடா யசிதப் பிரமமாய் விளங்குமான்மேலறிவிப்பதைக் குறிப்பாயதியும்பொருட்டுத்தானதியானமே இச்சரீரமாயிற்றென்பதை நாரதமுனிபுத்திரனெனவோர் வரலாறுகச்சொல்லியிருக்கின்றதாம்.

ஞானம் வந்தால் வாசனை நசிக்குமெனல்.

முள்ளவாசனை நீங்கிய கிரியையும்மேற்பயனைக்கொடுக்கமாட்டாது ; சர்வம்பிரமமென்கின்ற பாவனையினுல் அஞ்ஞானநீங்கிவிட்டால் அசுத்தவாசனையுண்டாகாது ; கானலிற்சலமிருக்கின்றதென்று நிச்சயிப்பவர்களுண்டோ.—வாசனையை மட்டுநீக்கினுல் சராமரணங்கள் சநநமானது பொருந்தாததாகிகுற்றமற்ற பரமபதமுண்டாகும் ; வாசனையுடன் பொருந்திய மனமானது வேற்றுமையான வஞ்ஞானமே யாகும், வாதனை நீங்கியமனமானது, சனியாத வாத்மஞானமாம். குற்றமற்றஞானத்தினுல்சீவனுனவன்பிரமவஸ்துவையறிந்தால்சநநமடையாது ;

௯௬. வாசனைநசிக்கிற் பிரமானுபவ முண்டா மாதலா லவ்வாசனையுள்ள மனமாகிய வஞ்ஞானத்தைக் கெடுத்தவ்விதின்றிய ஞானமனதினுற் பிரமசிந்தனை செய்யிற் பவத்துன்ப நீங்குமெனல்.

௯௭. அறிவை விரும்பாமலுங் குருமுகமாய்ச் சித்தென்னுமுத்தியானது சகத்துத்பத்தி லயமெனகின்றபந்த மியாதென்று விசாரித்தித்தை நீக்கி யத்தை யடையாமலு மேல்வருந்து கின்றுயெனல்.

ஞானமே மிகவுநல்லதென்று பிரமாமுதலாகியபெரியோர்கள்சொல்லியிருக்க நீர்விரும்பாதிருந்ததென்ன ? நானுர் ? இச்சகம் எப்படி உண்டாயிற்று ? எவ்விடத்திலிறக்குமென்றுகருதாததென்ன ? அறிவில்லாதவர்களைப்போல சோர்கின்றதென்ன ? மகானுன வாசிரியரை வணங்கி பந்தமோக்ஷம் எவ்விதமென் றறியாததென்ன ? — பூரணஞானத்தினுல் சமதிருஷ்டி யுள்ளவர்களை தரிசித்தடைந்து நிரந்தரமாய் பெருமையாகவிசாரித்தால் மோக்ஷமடைகின்ற சூட்சுமஞானமானது கிடைக்குமென்று கும்பமுனி சொல்லவும், கண்களிலானந்தபாஷ்பம் பொழிந்து அழுது அரசனுரைப்பான். ஆசாரியனே ? எளியேன்தேவரீர்றெரிந்தேன். † — அஞ்ஞானத்தினுல் மகான்களுடையசமூகத்தைவிட்டு இந்தத் தனிமையான காட்டில் வந்தேன் ; துன்பம்பொருந்திய பாவங்களனைத்தையும் இப்பொழுது தவிர்ந்தேன் ; காட்டிலிருக்கின்ற அடியேனை நீரடைந்து கடமையாக வறிவிப்பதால், ஆசாரியருநீர்தான், எனதுதந்தையுநீர்தான், எனது சிநேகிதனு நீர்தான், திரமுள்ள சீடனுய் உமதுபாதத்தைவணங்குகிறேன், கிருபைசெய்யவேண்டும், —

௯௮. சாது சங்கத்தால் விசாரஞான முதிக்குமெனல்.

௯௯. தேவரீ ராசிரியரா யடியேனை யடிமைகொண்டனுக்கிரகஞ் செய்ய வேண்டுமெனல்.

உதாரமுள்ளதாகியும் அறிந்தால் துயரங்களைத்தையு நீக்குவதாகியும் சதாநந்தமான வஸ்துவாகியுமிருக்கின்ற நீ யுணர்ந்தவஸ்துவெதுவோ அதையெனக்குச்சொல்லுவாய், பிரமதேவனுக்குச் சமானமானவரே ? யென்றுசொல்லிய அரசனுக்கு கும்பமுனி

௧00. நித்தி யாநந்த மாகும் பொருட் டனுக்கிரகிக்கு மெனதுவாக்கியத்திற் சித்தமேகாக்கிரப் படு

¶ இ-ம். வாசனுட்சயம் வரிற் கிரியாபலநீங்கிப் பரஞானமுண்டாய்ச் சநநமரண நீங்குமென்பதாம்.

† இ-ம். ஞானசுக முண்டாவதற்குக்காரணம் ஆத்மவிசாரமென்றறிவித்ததாம்;

மாயி னுரைப்பே னெனல். சொல்லுவார் ; வேகமாய்த் தாவியெழாநின்றமனதில் ஒன்றுபட்டறிவாயானல் நினக்கு ஞானத்தைச் சொ

௪0௧. இதுவுமது. ல்லுவேன். — உரைத்ததை கிரிகிக்காமல் விளையாட்டினல் கேட்குமவர்களுக்கு உரைத்தவாக்கியம் சொல்லியும் ஓர்ப்ரயோசனமில்லை ; அந்தகாரத்தில் கண்களுக்கு அறியும்பலனுண்டாமோ· என்றுகும்பமுனிசொல்லவும், அரசன் சொல்லுவான். உமதுகிருபையினல் நீரிவ்விடத்திற் சொல்லிய சர்வார்த்தமும் வேதரியமமென்று உண்மையாக கிரிகித்துக் கொண்டுநன்ருகச் சிந்திப்பேன், † —

௪0௨. எளிதாய்க்கிடைத்ததையிகழ்ந் தரிதாய்க் கிடைத்ததைப் புகழ்ந்த வறியாமையை நீக்கு நிமித்தஞ் சிந்தாமணி கதையைச் சாமானியமாகச் சொல்லத்தொடங்கல்

என்றரசன்சொல்ல, அழகுநிறைந்த கும்பமுனிசொல்லுவார். ஒன்றுந்தெரியாத குழந்தைக்கு உரிமையான பிதாசொல்லுவதுபோல, வெற்றியையுடைய வரசனே ? நானுமக்குச் சொல்லும் வசனத்தை தடுத்துக்கேளாமல் நன்மையென நினைத்துக் கேட்பாயென்று அறிவுண்டாகக்

௪0௩. இதுவுமது கூறத்தொடங்கினர்.— அரசனே ? இஃதொரு கதையைசொல்லக்கேட்கக்கடவாய் ; இந்தக்கதையில்பொருந்தியவருத்தத்தை பின்பு யான்சொல்லுவேன். முற்காலத்தில் ஒருபெரியவர், மிகுந்த சம்பத்துடையவன் சொல்லாநின்ற கலைஞானங்கண் முதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லமையுடையவன், ஆத்மஞானமில்லாதவன் ; அப்படிப்பட்டவன்மேலானசிந்தாமணியை மிகவுமுயற்சித்து தேடத்தொடங்கினன். —

௪0௪. இதுவுமது மிகுந்த பிரயாசமுள்ள தபசினல் தீரமாகவடையவேண்டுமென்கின்ற முயற்சியினல் தகுந்த சிந்தாமணிகிடைத்தது ; வருத்தப்பட்டு முயற்சித்தவர்களுக்கு ஏன்கிடையாது. மிகுந்த ப்ரகாசமுள்ள சிந்தாமணியானது, தன்னெதிரிற்றோற்றி சந்திரன்போலப்ரகாசிக்கவும், அதைக் கைவசப்படுத்தாமல் பல

௪0௫. இதுவுமது விதமாகச் சிந்தித்தான். — இது சிந்தாமணியல்ல வேறேயொரு வற்பமணியாகும் ; சிந்தாமணியானது வருத்தப்பட்டு வெகுநாள் தேடி வாழுங்காலமெல்லாநீங்கி மெலியுங்காலத்திலல்லாமல் கிடைக்குமோ, துன்பப்பட்டாலும் பாவிகளுக்குக் கிடையாது, நல்லவர்களிற் சிலபேர்களுக்குக் கிட்டும் ; தங்கள்தங்கள்கன்மத்தை எண்ணமல் சோர்வுற்ருல் அவர்களு

௪0௬. இதுவுமது க்குச் சீக்கிரத்திலடையுமோ ; — யானேமானிடன் எனதுதவமோ சொல்ப்பம் வல்லமைகளோ வென

† இ-ம். முற்போதனை நிட்பலமானதுபோல வாகாமலுறுதிப்படுத்திக்கொண்டுபதேசிக்கத் தொடங்கின தென்பதாம்,

க்கம்பமுமில்லை தாரித்திர முள்ளவன் இப்படிப்பட்ட வெனக்கு காணற்கரிய சிந்தாமணியானது எளிதாக முன்னே தோற்றுமா, இன்னமுந் தேடுவோமென்று நல்லசிந்தாமணியை எடுக்கவில்லை ; பரிசுத்தமுள்ள அந்த சிந்தாமணியும் போய்விட்டது ; தீய

௧௦௭. எளிதாய்க் கிடைத்ததையிகழ்ந்தரிதாய்க் கிடைத்ததைப் புகழ்ந்த வறியாமையைநீக்குநிமித்தஞ்சிந்தாமணிகதையைச்சாமானியமாகச்சொல்லத் தொடங்கல்.

வர்களுக்கு நன்மையுண்டாமோ.—திரும்பவும்வருத்தமுற்றுத்தேடினான். வெப்பமுற்று சிறிதுநாள்சுற்றவும், அவ்விடத்தின் மறைவாகிசிலசித்தர்கணங்கள் அவனைப்பரியாசஞ் செய்யும்பொருட்டு உடைந்தவளையலின்றுணுக்கைஎதிரேகாண்பிக்க ஒருமணியிருக்கப்பார்த்தான் ; அறிவில்லாதவன் மாட்சிமைப்பட்டசிந்தாமணியிதுவென்றுசந்தோ

௧௦௮. இதுவுமது

ஷித்து அதிசயித்து கிரகித்தான்.— வெந்தமணியை விரும்பி செல்வங்க ளனைத்தையு நீக்கினான். கிடைத்த காச்சுக்கல் சகல செல்வத்தையுங் கொடுக்கும் ; மற்றத்தனங்க ளென்னத்துக்கென்று நினைத்தான். இந்நாட்டில் கொடியவர்களுண்டு, சுகங்கிடையாது ; இத்தேசங் கொடியதென்று கானகத்திலிருந்து இன்பமடைவோமென்று நீங்கினான். †—

௧௦௯. அறியாமைக் கிரங்கக் கூடாதென்பதை யுறுதிப்படுத்து நிமித்த மியானையின் கதையைச்சாமானியமாக நிருபித்தல்.

சுகிக்கலாமென்று நினைத்து கிடைத்த கல்லினால் துன்பங்க ளனைத்தையு மடைந்து தாழ்வை யடைந்தான். மற்றொரு கதையைச் சொல்லக்கேட்பாய் ; புத்திக்குப் பூரணமாக அறிவைக் கொடுப்பிக்கும் பழைய இந்த வனமத்தியில் ஒரு யானையானது யானைகளுக்கு மேலாக மிகவு முன்னித முள்ள

௧௧௦. இதுவுமது.

தாம். — வச்சிராயுதத்தைக் காட்டிலும் நீளமாய் கூர்மையை யுடையதாய் வலிமையா யிருக்கின்ற இரண்டு தந்தங்களை யுடையதான யானையுடன் பழகி இருப்புக் கயிற்றால் பாகன்பிணித்து விலங்கிட்டான் ; குற்றம் பொருந்திய அநேகங்கட்டுகளினால் மனஞ்சோர்ந்து இரண்டு தந்தங்களினாலும் நெருக்கிவைத்த வலியகட்டுக ளனைத்தையும் ஓரிர

௧௧௧. இதுவுமது.

ண்டு முகுர்த்தத்தில் கெடுத்தது. — விலங்கு முறிந்த தன்மையைப் பார்த்தவனாகிய மேலான மாவுத்தன், கலக்கமுற்று யானை மத்தகத்தி லிருந்து தவறிப் பூமியில் விழுந்தான் ; அவன் விழப்பார்த்த யானையானது கிருபையினால், சுகிக்கும்படி கொல்லாமனீங்க, பின்பு அந்த மாவுத்தன் திரும்பவு மெ

† இ-ம். சிந்தாமணியின்குணந் தெரியி னய்யனந் துன்பம்வாராததுபோலச் சகலத்தியாகத்தி லுண்மைதெரியி னஃதெளிதிற் கிடைக்கினு மரிதிற் கிடைக்கினுமப்போதே துன்பமற்ற பரமசுகத்தை யடையலாமென்பதைக் குறிப்பாற் சொல்லியதாம்.

றாந்திருந்து தனியாக வோடித்தடன்போய் அந்த யானையைத் தேடிவெதிரேசென்றான்.—ஒருகாட்டினிலே அந்தயானையையடைந்தான்; ஒருமிருப்பிலேதான்றி உலர்ந்த இலைகளினாலும் கொடிகளினாலும் மறைவுசெய்தான்; யானையானது சிறிதுநாட்சஞ்சரித்து அவ்விடத்தில் வருகின்றகாலத்தில் படுகுழியில் விழுந்தது; அந்த மாவுத்தனானவன், அழுந்தக்கட்டினன். பிணைக்கின்றயானையானது இப்பொழுதுந்துன்பத்துடன் இருந்தது.— அநேகமாளிகையில் காலமிருக்கின்ற ஓட்டற்ற மாலையைப்போல, இருந்தயானையானது பூர்வத்திற் றனது முன்னே வீழ்ந்து சத்துருவாகிய மாவுத்தன் தலையறுக்கும் திறம்படியாகக் கொன்றால் காளகத்துக்குரியது கொடிய படுகுழியில் பிணிப்புற்று கலங்கவேண்டியதில்லை. அக்கதையைப்போல, விசாரித்து நிகழ்காலத்தால் இனிவருங் காலத்தின் காரிய காரியங்களைப் பாராதவர்கள் துன்பத்தை யடைவார்கள். ¶ — இப்படியென்று கும்பமுனி சொன்னவளவில், சிகித்துவ அரசனானவன் எனதுபிதாவே? சிந்தாமணியினாலும் வெற்றியையுடைய யானையினாலும், சொல்லிய கதையாகிய விளிப்பாயென்றுகேட்க, இலையாவிருக்க கும்பமுனி சொல்லுவார். விருத்தசாஸ்திரார்த்தங்கள் சகலமுமுணர்ந்தவனும், நன்மையான குத்துவருமான விவேகமுவனும், கல்லசிந்தாமணியைத் தேடினவனும்,—என்றுசொல்லியது உன்னையேயாம்; நீ சகலசாஸ்திரங்களையு மப்பியாசித்ததினாலும் நிலைபெற்ற உபசாந்தத்தை யடைந்தாயில்லை; சிந்தாமணியென்ற தேதுவென்றால், வந்தாய்கொடு துன்பங்களியாவும் கெடுக்காது அச்சகலத்தியாகத்தை நேடமுயற்சித்து அபாசாஸ்தியை விடுத்து,— இவ்வளவாயும் உறவையுநீக்கி இங்குக் காட்டினிடத்திலிருந்தாய், உனது தேகத்தைவிட்டுகிறேன். அப்படி சகலத்தியாகமானது நிறைவாகின்ற காயத்தில் அந்தவிதமாக விகற்பமேவானமானது மனதில்கொள்ளும், ஆகாயத்தை மறைக்கும் கரியமேகத்தைப்போல, உன்னைமறைவுசெய்ய, இப்படிப்பட்ட சகலத்தியாகமானது மேலான சுகமல்ல மதத்துமேல்ல,—வேறென்று மேலானதுண்டென்று நினைத்து அச்சகலத்தியாகம் அநேககால முயற்சிசெய்தால் வருமென்று பயனின்றிய விகற்பமானது மனதில் நிறை

௧௧௨. அறியாமைக்கிரக்கக்கூடாதென்பதையுமறிப்படுத்தி சிந்தாமணியின் கதையைச் சாமானியமாக விருமித்தல்.

௧௧௩. இதுவுமது

௧௧௪. இவ்விரண்டு கதையையும் பகுத்து வினவுதற்கு முற்சிந்தாமணியைக் கூறல்.

௧௧௫ இதுவுமது

௧௧௬. இதுவுமது

௧௧௭. இதுவுமது

¶ இ-ம். வல்லமையுள்ள யானையாயிருக்குமட்டின்றிய மனிதனால் வருத்துவதுபோலப் பூரணஞானமானது, அற்பசங்கற்பமான வறியாமையால்வருத்துவதைப்பார்த்து தலைதைக் கெடுக்கவேண்டுமென்றறிவித்ததாம்.

ய மேலான சர்வத்யாகமானது நீங்கினதாம். சன்மார்க்கமுள்ள சகலத்யாகமென்னும் இரத்தினம்போக, உனதுதவமாகிய காச்சுக்கல்லை உணர்வில்லாத விகற்ப திருஷ்டியினும் பார்த்து அதுநன்மையென்று துன்பப்படுகிறாய்.— மட்டில்லாமல் இலேசாய்க்கிடைத்த சுகத்தைத்தள்ளி அரிதாகிய அற்பமான வஸ்துவில் மனதுபொருந்தினவர்களே, உயிர்க்கொலைஞர்களென்றும், கொடியவரென்றும், சத்துருக்கள் சொல்லுவார்கள். வளப்பத்தின் மிகுந்த மேலான சிந்தாமணியானது நீ கிடைத்ததென்றுகருதின தவத்தினால் தளர்வைநீங்கினையில்லை ; ஒருபளிங்கின் ப்ரயோசனத்தையுமடைந்தாயில்லை ; யானையென்றுசொல்லியதினிமேற்கேட்பாய்.*—மதத்தையுடைய யானையென்று சொல்லியது உன்னையேயாகும் ; வயிராக்கிய மென்பதும், விவேகமென்பதும், அதனுடைய நீண்டதந்தங்களாகும் ; உனதறியாமையையுடைய குணங்களே யானைமேலேறி நடக்காநின்ற மாவுத்தனாகும் ; நாநாவிதமாக வுன்னை மெலிவுசெய்கின்றது மிகுந்த வஞ்ஞானமாகும் ; அந்தவஞ்ஞானத்தினா லுண்டான துன்பங்களில் நடாத்துகின்ற அந்தமாவுத்தனால் யானையைப்போல் நிதறுகின்றாய் ;—இருப்புக் கயிறும், விலங்குகளும், ஆசாபாசமென்று சொல்லப்பட்டனவாம் ; நீ இவைகளாற் பந்தப்பட்டாய். சொல்லப்பட்ட இரும்பினும் இச்சைமிகவு முறுதியாம் ; இரும்புச்சங்கிலிகளும், காற்றளைகளும், வெருகாலமானால் தேய்ந்துகெடும் ; வளர்கின்ற விச்சையானது மேலுமேலும் நெடிதாக உறுதியாகவளரும் ; —பலமுள்ள இருப்புக் கயிற்றையும், தளைகளையும், ஆனைமுறித்ததென்றது, பூமியிலுள்ள இப்போகங்களனைத்தையும் நீ முன்னமே இச்சையில்லாமற் கெடுத்துவிதமாகும். வீரத்துவமில்லாத மாவுத்தன் மத்தகத்தினின்று விழுந்ததென்பது உமதுவிரத்தியில் அஞ்ஞானங்கெட்டதாகும் ; மிகுந்தவாசையை யொழித்தால்பின்பு சவுக்கியத்தைக் கொடுக்கின்ற வஞ்ஞானமுண்டோ.—

செல்வமயக்கத்தை துறவினாற்கெடுக்க வெண்ணினால் அஞ்ஞானமானது ஓடாதினைத்து, வெட்டுகின்ற கருவிலிருக்கும் பேயைப்போல இருந்தலையும். மயக்கங் கெடும்படியாக செல்வங்களனைத்தையும் விவே

௧௧௮. இவ்விரண்டு கதையையும்பகுத்து வினவினதற்கு முற் சிந்தாமணியைக் கூறல்.

௧௧௯. யானைக் கதையைப் பகுத்துக்கூறல்.

௧௨௦. இதுவுமது

௧௨௧. இதுவுமது

௧௨௨. இதுவுமது

* இ-ம். சிந்தாமணிதேடினவன் முதலிய திருஷ்டாந்தத்துக்குச் சாக்ஷியை தேடின வரசன்முதலிய தாஷ்டாந்தங்களாற் சகலத்யாகமென்னுஞ் சிந்தாமணி யுனக்குலகுவாய்க்கிடைத்து மறைமயிகழ்ந்து தவமென்னுங் காச்சுக்கல்லினாற் றுன்பப்படுகிறாயென்று விசேடமாய் நிரூபித்ததாம்.

கத்தினால் நீக்கினால், வெட்டித்தள்ளிய விருட்சத்தி லிருக்கும் பசாசைப்போல, அஞ்ஞானமானது விரைவில் நீங்கும். — அளவற்ற போகங்களனைத்தையும் ஒழித்தால், அஞ்ஞானத் தொடர்புகளனைத்துநீங்கும்; வெட்டுப்பட்டு விழுந்த விருக்ஷத்திலிருந்து விழுந்துபோகின்ற பட்சியின் கூண்டுகளைப்போல, கானகத்தை நெருங்கி நீயடைந்தமாத்திரத்தில் அஞ்ஞானமானது விழுந்தது; தடையற்ற சகலத்யாகமென்கின்ற ஒப்பற்ற கத்தியினால் அவ்வஞ்ஞானத்தை கெடுத்திலை. — அதைக்கொல்லாமையினால் திரும்பவு முண்டாகிவளர்ந்த அறியாமையினால் மிகவும்வருந்தினாய். மதத்தையுடைய யானைக்குமாவுத்தனானவன் படுகுழியை வகுத்தானென்றதுதான் நிர்மாக நினைக்கு தவமென்கின்றதுயரை மிகுந்த வஞ்ஞானமானதுகொடுத்ததாகும்; கேடுநிறைந்தபடுகுழியின் மேலுமேலுங் கொடிகளென்பதுதுன்பமிகுந்த தவத்தைச் சார்ந்தசத்கிருத்தியங்கள். ‡—

௧௨௩. யானைக்கதையைப் பகுத்துக்கூறல்.

௧௨௪. இதுவுமது

௧௨௫. சகலத்யாகத்தை முன்விட்டுத் தடுக்கத்தடுக்க வவனே பற்றுக்களனைத்தையுங் கண்டு நீக்கித்தேகமுதலிய வற்றையு நியமிக்கைத் தொம்பத ஸ்வரூபத்தை யடையும் பொருட்டு, ஏன் ஞானத்தையுஞ் சகலத்யாகத்தையு மிழந்தாயெனல்.

இவ்விதமா யிப்போதும்துன்பமென்னுந் தவமாகிய இந்தப்பள்ளத்தில் கொடிய வாள்திறத்தையுடைய மாவலியானவன் சிறையி லடைபட்டவனாய் மிகுந்தபாதாளத்தில் இருப்பதைப்போல நீ இருக்கிறாய், தவறாத வசனத்தையுடைய மிருதுவானசூடாலையானவள் சொல்லப்பட்ட ஞானத்தை இழந்து ஏன் வருந்துகின்றாய், சகலத்யாகத்தை ஏன்விட்டுவிட்டாய், சொல்லென்று கும்பமுனிகேட்க, — அரசன்சொல்லுவான். எனதுபூமியைவிடுத்தேன், அரண்மனையைவிடுத்தேன், செல்வத்தைவிடுத்தேன், பாரியாளைவிடுத்தேன், இந்தசகலத்யாகமானது இப்பொழுது நீக்கினதைக்காட்டிலும் வேறியாது சொல்லவேண்டுமென் றரசன்கேட்கவும், கும்பமுனிசொல்லுவார். நீ நாடுமுதலாக சேர்ந்திருக்கின்ற சகலத்தையும் விட்டுவிட்டாலும் சகலத்யாகமல்லவாம். — நினக்கு சகலத்திலுமாசையுண்டு. அந்த ஆசைகளனைத்தையு மொருங்கேநீக்கி சத்துக்களுக்குரிய பிரமானந்தத்தை அடைவாயென்று கும்பமுனிசொல்ல, அரசன்சொல்லுவான், வளமைநிறைந்த சகத்தைவிட்டதுசகலத்யாகமல்லவானால் எனக்குடையதுயானகமே, மலைக

௧௨௬. உயிர்ச்சார்பு, பொருட்சார்பு, நீக்கினேனெனிலஃதுசகலத்யாகமன்றெனல்.

௧௨௭. வனப்பற்றிருக்கின்றதென்றறிற் தஃதை நீக்கினேனெனினஃதுஞ் சகலத்யாகமன்றெனல்

‡ இ-ம். யானைமுதலிய திருஷ்டாந்தத்துக்கு, அரசன்முதலிய தார்ஷ்டாந்தங்களாற் சகலத்யாகமுதித்த விடத்துநீங்கின வஞ்ஞானத்தை யங்ஙனங் கெடுக்காம லதனான்வகுக்கப்பட்ட தவத்துன்பத்தில் வீழ்ந்து வருந்துகின்றாயென்றதை நீக்கும்பொருட்டு விசேடமா யறிவித்ததாம்.

ளினாலும், மரங்களினாலும், நிறைந்திருக்கின்ற கானகத்தில் விரும்பப்பட்ட வாசனையை நீக்கினேன். —

கஉஅ. வனப்பற் றிருக்கின்றதென்றறிந் தஃதை நீக்கினேனெனி னஃதுஞ் சகலத்யாக மன்றெனல்.

இப்பொழுது யான் சகலத் தியாகமென்பதை அடைந்தேனென்று அரசன் சொல்லவும், கும்ப முனியானவர் பழங்கள் நிறைந்த விருக்ஷங்களும், உயர்ந்தகிரிகளும், நீங்கினால் சகலத்தியாகமல்ல ; சகலத்திலும் நினக்குத் துன்பமிகுந்தவாசையுண்டு, அந்தத்துயரை நீங்கினால் பரமசுகமென்று சொல்ல, பரிசுத்தத்தையுடைய முனியே ? இதுவுமல்லவானால்சொல்லுவேனென்று அரசனானவன் சொல்லுவான். —

கஉகூ. வஸ்திரமுதலிய பற்றுக்க ளிருக்கின்றதென்றறிந்தவைகளைத் தகனஞ்செய்து நீக்குதல்

வஸ்திரமும், தண்டமும், உருத்திராக்ஷத் தாவடமும், மான்றோலும், மண்பாத்திரங்களும், கமண்டலமும், எனக்கிருக்கின்றன ; என் பிதாவே ? இவைகளை நீக்குகின்றேனென்று சேர்ந் தக்கினியினா லெரித்து மனமகிழ்ந்து வேறுசரீரமாய் நட்பற்றனன். ஆசையில்லாதவ னானேனென்று அநாதிஞானஸ்வரூபியான கும்பமுனியினது வதனப்பார்த்து, சிகித்துவவரசன்சொல்லுவான். — அம்மம்மா !!! தேவகுமாரனாவும்மால் அறிவைப் பெற்றேன்; துன்பத்தினின்று நீங்கினேன், தனிமையாக களங்கமொழிந்தேன், இப்படிப்பட்ட தென்று சங்கற்பத்தினாற் பொருந்திபிறிதொன்றில்லாமல் சகலத்தையு நீக்கினேன், செவ்விய பதார்ந்தங்களின் கூட்டங்க ளியாவும் பிறவியைக் கொடுக்கின்ற பந்தமாம். — பதார்த்தங்களானவை எவ்வளவெவ்வளவு நீங்கினவோ, அவ்வளவவ்வளவும் தெளிவுள்ள மனமானது ஆநந்தத்தைப் பெறும். போருகளைச் செயஞ்செய்து அவ் வாநந்தத்தை யடைந்தேன், மயக்கத்தைச் செய்கின்ற பந்தங்களை நீங்கினேன், களங்கமற்ற நிருவாணியாய் தேவரீர் கிருபைசெய்யாநின்ற சகலத்யாகத்தைப் பெற்றேன், வேறென்ன விருக்கின்றன வென்றரசன் கேட்டான், ¶ — கும்பமுனி சொல்லுவார். நீ ஒன்றையாவது நீக்கவில்லை, இச்சகலத்யாகவபினயம் வீணென்று சொல்லுமளவில், அரசனானவன் மனதிற்சிந்தித்து திரும்பவுஞ் சொல்லுவான். கொடிய பஞ்சேந்திரியங்க ளென்னுஞ் சர்ப்பங்கள் சார்ந்திருக்கின்ற வெள்ளெலும்புகளும் மாமிசங்களுமான சரீரமொன்றே அடியேனுக்கு இவ்விடத்தில் மிஞ்சினது, இச்சரீரத்தை இப்போதே க்ஷணவில் நீக்குகின்றேன், —

கநo. சகலத்யாகத்தை யடைந்தேனெனல்.

கநக. இதுவுமது

கநஉ. இஃதுஞ்சகலத் தியாகமன்றெனி லிந்திரியங்களுக் கிடமானதேகந் தானிருக்கின்ற தென்றறிந் தப்பற்றையும் நீக்குகின்றேனெனல்.

பார்ப்பாயென்று ஒருமலையிலேறி அரசன் விழுகின்றசமயத்தில், மேலான கும்பமுனியானவர், இவ்விடத்திலிதென்னகாரியம் ? இச்சரீரமானது, அறிவி

கநந. தேகத்யாகமுஞ் சகலத்யாகமன்றெனல்.

¶ இ-ம், புறம்பாயுள்ளபற்றுக்களியாவுந்தானே கண்டு கழலும்படிசெய்வித்ததாம்

௩௩௪. பரமார்த்த மானதை நீக்க லே சகலத்தியாக மெனவும் அஃதியா ததனை நீக்கு முபாய மியா தெனல்.

௩௩௫. பிரம சங்கற்பமான ம னமே சகலபதமு யுமிருக்கின்றதெ னல்.

௩௩௬. சித்தத் யாகமே சகலத்தி யாகமாதலே பர மசகத்தைக்கொ டுக்குமெனல்.

௩௩௭. சித்தத் யாகமே யாத்மா வெனி லதன் கா ரணமு முருவமு மதைக் கெடுக்கு முபாயமு மியா தெனில்.

௩௩௮. மனதி ற் குருவம் வாச னை அதின் கார ணமகம்பாவமா மெனல்.

௩௩௯. அகம் பாவத்தி னுதித்த தே யத்தக் கார ணமாமெனல்.

ல்லோதலேனோ ? உனக்கென்னை குறைமையைச் செய்தது, இறந்து ப்ரயோசனமென்னை ? இளமையான பருவின் கன்றை பலம்பொருந்திய எருமையானது கோபித்தது ப்போல நான் துக்கித்து சரீரத்தை விட்டாலும் சகலத்யாகி யாகமாட்டாய். — யாதொரு சரீரத்தைச் சித்தன்றதோ சமஸ்தத்துக்கும் காரணத்திற்கும் விதையா யிருப்பதோ அதையறிகையாயின், அரசனே ? சகலத்யாகமாம். உண்மையான இதுவென்று கும்பமுனி சொல்லவும், சரீரத்தையாதைக்கு சமஸ்தத்தைக் பிருவி க்கும்விதையாகி காரணமின்றதெதுவோ, அதைச் சிக் குமவிதத்தை சொல்லுமென்று அரசன்கேட்டான்; - சற்குணமிதைத்த கும்பமுனி சொல்லுவார், சகல பதார்த்தங்களிலும் சார்ந்திருக்கின்றவிடமாய் பெ ருமைபொருந்திய சிவமென்றும், பிரமமென்றும் பொருந்திய நாமங்கள் அநேகத்திற்து, ப்ரயோசன முள்ள சடமும் அசடமும் அல்லாததாய் மயக்கத் தில் சிக்கியமனதை சத்துக்கள் சகலமென்று சொல் லுவார்கள்; சகமுமது பந்தமுமிச்சித்தமே. — பல க்கன்மங்களுக்குப் பீசமாய் மரத்தை யசைக்கின்ற வாயுவைப்போல, சித்தமும் சரீரத்தை யாட்டிவைப்ப தும் மனமாகும்; இம்மனதை விட்டுவிட்டே, கள ங்கமற்றவரசனே ? சகலத்யாகமாகும், அச்சகலத்யா கமே பிரமத்வமாகும். சொல்லப்பட்ட மற்ற யாவும் மிகவும்பயப்படுகின்ற வெய்யிலதுவப்பமே. — சகல த்யாகத்தைப் பண்ணி உபசாந்த முளையுடையவனும் து வேஷமில்லாமல் இயல்பான குணத்திலும் நிலைபெ ற்றால், சொல்லப்பட்ட ஸ்வரூபமேதுவோ அப் பிரமஸ்வரூபமும் உனதாத்மஸ்வரூபமும் அபின்ன மாய் ப்ரகாசிப்பதென்று கும்பமுனி சொல்லவும், அரசன் சொல்லுவான், பிரபுவே சொல்லியமனதுக் குச்சொல்லப்பட்ட காரணமேயாது ? உருவமேயாது ? எவ்விதமாய் நாசமடைவதைச் செப்பிச்சொல்லுமா மென்று கேட்க, — இதுப்பவும் கும்பமுனி சொல் லுவார். மனத்துக்கு வடிவானது வாசனையேயாம்; மனமென்று சொல்லப்பட்ட சொல் வாசனையினது பரியாயநாமங்களாகும். விறகுகளிலும் கூடியிருக் கின்ற கூண்டாகிய யமோவின்றதே மனமாகிய வி ருட்சத்துக்கு விளைவின்ற வித்தாகும், அரசனே ? நீ அறிந்துகொள்ளாய், — முதலிலுண்டாகிய இவ்வ கம்பாவத்தின் முளையானது அஹங்காரமாய் விச் சுவிட்டதாய் சொல்லும் வடிவில்லாமல் உண்டாகு ம், அந்த முளையை புத்தியென்று சொல்லுவார்கள். சொல்லப்பட்ட இந்நிலையாகுடைய புத்தியென்கின்

ற முளையினிடத்தில், நிறைந்து வளர்தலையுடைய கிளைகளை சங்கற்பமென்று சொல்லுவார்கள். வேறுபாடு இவையாதலினால், சித்தமும் புத்தியும் பெரிதாகிய மனமென்பன யாவும் அகங்காரத்தினது நாமங்களாம். — இப்படிப்பட்ட மனமென்கின்ற கொடிய விருட்சத்தினது கிளையை நாடோறும் தறித்து, வேரோடுங் கெடுப்பாய். வினையையுடைய வாசனையென்னும் கிளைகள் வெருவான காய்களைக் காய்க்கும், ஞானமென்னுங் கத்தியினால் அகத்தில் தறித்தால் கெடும். பாவனைகெடவும் ஆசைகெடவும் மகாமௌனமாய் எதிர்வந்ததைச்செய்பவர்கள் அகத்தின் மனதைச் செயித்தவர்கள். அவ் விருட்சத்தின் கிளைகளை வெட்டுதல் கௌணமென்று சொல்லுவார்கள். அதனது மூலத்தைக்கெடுத்தலே முக்கியமென்றுசொல்லுவார்கள். † — ஆதலால் மிகுந்த சன்மார்க்கத்தினால் அந்த மனமென்னும் விருக்ஷத்தினது மூலமாகிய வகம்பாவனையை, நீ களைந்தெறிந்தால் மனமுண்டாகாதென்று கும்பமுனி சொல்லவும், அரசன் சொல்வான். தனிமையான மனவிருட்சத்தின் பீசமாகிய அகம்பாவனையை, மேலான தவமுடைய முனியே ? எரிக்க அக்கினி யேதென்றரசன்கேட்கவும், கும்பமுனி திரும்பவுஞ் சொல்லுவார். யானாரென்று சிந்திக்கின்ற ஆத்மஞான விசாரணையே மனதினது பீசத்தைகெடுக்கின்ற அக்கினியெனவும், அரசன்சொல்லுவான். ¶ — எனதறிவினால் யான் அநேகவிதமாகச்சிந்தித்துப்பார்த்தேன் ; அறிவின்மையாதலின் இவ்வுலகமும்யானன்று, இம் மலசரீரமும் யானன்று, இந்திரியங்களும் யானன்று, சிந்திக்கின்ற மனமும் யானன்று, தொடர் பாகின்ற புத்தியும் யானன்று, அபிமானித்தெழுகின்ற தீயவகங்காரமும்யானன்று, என்றரசன் சொல்லவும், கும்பமுனியானவர் இவைகள் நீ யல்லவாயின், நீ வேறேயார் ? சொல்வாயென்றுகேட்க, அரசன் சொல்லுவான். சகலத்தையுமுண்டாகி இரட்சித் தடக்குகின்ற களங்கமற்ற சைதன்னியமாத்

௧௪௦. மனதைக் கெடுக்கு முபாய மறிவித்தல்.

௧௪௧. அகம்பாவத்தை கெடுக்குமுபாயங் கூறல்.

௧௪௨. விசாரமுகத்தால் முன்பற்றறிய்கிய சகத்து முதலியவைகளை யறிகின்ற வறிவைக் கொண்டு பார்க்கினவைகள் சடமாயிருத்தலாலவைகளியானன்றென்றதனினின் விடுத்தவைகட்குச் சாட்சியாய் விளங்கிய சயஞ்சித்தே சேடித்திருத்தலாலஃதே தானெனத் தரிசித்தானெனல்.

† இ-ம். இந்திரியத்தோடுந் தேகப்பற்றைநீக்கிச் சித்தத்யாகஞ்செய்யும்பொருட்டதனுருவமாகிய வாசனைமுதலிய சங்கற்பங்களைக் கெடுத்தல் கௌணமெனவும், அதன்மூலமாகிய வகம்பாவத்தைக்கெடுத்தல் முக்கியமெனவு மிரண்டுவிதமாகக் கூறினதென்பதாம்.

¶ இ-ம். அகம்பாவத்தைக் கெடுக்கின் மனமுண்டாகாதாதலா லஃதையாத்மஞான விசாரத்தாற் கெடுக்கவேண்டு மென்பதாம்.

திரமாகிய ஸ்வரூபமேயான். ¶ —

௪௫௩. தொம்பதத்தை தரிசிப்பித்து, தற்பதத்தை தரிசிப்பிக்கத்தொடங்கி நியதிகளைந்த சடம்வேறுசித்துவேறு யிருமைப்பட்டிருத்தலைச் சின்மாத்திரமா யொருமைப்படுத்து நிமித்த மச்சொரூப ஞானப்ரதி பலனமாகத்தோற்றிய சகத்து மதையறிந்த விருத்திஞானமு மஃதைத்தானென்கின்ற வகம்பாவமுதலியவுங் கற்பிதமாகக் காண்பிக்க வவ்வகம்பாவத்தின் காரணமியாதென விஞவுதல்.

இப்படிப்பட்ட ஞானஸ்வரூபமாகியவெனக்குஒருகாரணத்தையுங்கண்டிலன்; துன்பத்தையுடையமனவிருட்சத்தின்வித்தாகிய அகம்பாவத்தை தள்ளுகின்ற மார்க்கத்தைத்தெரிந்திலன்; தள்ளத்தள்ள ஓடிவராநின்ற விவ்வகம் பாவத்தினால் மனந்தளர்ந்தேனென்று அரசன்சொல்ல, கும்பமுனி சொல்லுவார். அரசனே? காரணத்தை யல்லாமல் ஒருகாரியமுண்டாகாது, முன்னுகின்ற அகம்பாவத்தின் காரணத்தைப்பார்த்துசொல்லுவாயென்றுசொல்ல, மன்னவன் சொல்லுவான். —

௪௫௪. அகம்பாவத்தின் காரணமறிவெனி லதன் காரணமியாதெனல்.

அகம்பாவமென்கின்ற குற்றத்திற்கு காரணமானது போதமாகும்; அப்போதமானது இவ்விடத்திலயிக்கும் விதமென்ன? திரிஸ்யத்தில் போதமுண்டாதலினால் இளைக்கின்றேன். காணப்பட்ட திரிஸ்யத்தை நீக்கும் விதமெப்படி சொல்லுவாயென்றரசன்கேட்க, கும்பமுனிசொல்லுவார், அறிவின்காரணத்தை நீ சொன்னால், பின்பு விளங்குங்காரணத்தையும் காரணமல்லாததையும் உனக்குயான் சொல்வேனென்று சொல்ல, அதற்கரசன் சொல்வான். —

௪௫௫. விருத்திஞானம் விடயத்தைப் பற்றியெழுதலி னவ்விடயங் காரணமா மஃது நசிக்கி னகம்பாவஞானமு நசிக்குமெனி லவ்விடய நீக்கினவிடத் தறிவெங்ஙனம் விளங்குமெனல்.

சரீரமுதலாகிய வஸ்து சத்தையினால் அறிவுண்டாகும், அந்த வஸ்து சத்தை அசத்தியமானால் அறிவில்லை, அகம்பாவ ஞானமென்கின்ற மனத்தின் விதையும் ஒடுங்கிவிடுமென்று அரசன் சொல்ல, அதற்குக் கும்பமுனி சொல்லுவார். விரும்பிய சரீரமுதலான வஸ்துசத்தையிருந்தால் அறிவுண்டாயிருக்கும்; சரீரமுதலான பறவஸ்துக்களில்லாத சமயத்தில் விளங்கிய ஞானமானது எப்படியிருந்ததென்றுசொல்லென்று கேட்க, அரசன்சொல்லுவான். -

௪௫௬. தேகமுதலியவிடயமெங்ஙனநீக்குமதைப் பற்றியெழுகின்ற வறிவெங்ஙனந் தனியேயிருக்குமெனி லங்ஙனந்தனியே யில்லாமையாற் றேகங்காரணமாகா, அஃது தங்ஙனமாகவே யிப்போதங் காரியமாகா, அஃதங்ஙனமாகவே வதனாற்றோற்றிய வகம்பாவ முதலிய யாவு மித்தையாய்ப் பிரமப்ரதிபாமாத்திரமாய் விளங்குதெனல்.

கரசரணமுதலவயவங்களாதியாகச்செய்யப்பட்ட கருமத்தின் பயனையுடையதாய் அனுபவிக்கப்பட்ட சரீரமானது, எனதாசிரியரே? இல்லையென்கின்ற விதமெப்படி யென்றரசன்கேட்க, கும்பமுனி சொல்லுவார். கருமத்தினாலுள்ள இக்காயங்காரணத்தைப் பொருந்தாததனால் போத

¶இ-ம். ப்ரத்யகாத்மஸ்வரூபமாய்விளங்கியகூடஸ்தஸ்வரூபமானனென்பதாம்

மென்னுங்காரியமுமில்லையாகும்; அந்தவறிவும்பிரமை யேயாம். மிருகதிருஷ்ணையினால்வருவனவாகிய அலம்பா வமுதலிய சகலமுமில்லாததாகும்; காரணமல்லாமல் வரப்பட்டவஸ்துக்களிரச்சுவிலுண்டானசர்ப்பத்தை ப்போலமித்தையாம். *--இப்படிசொல் லவு மிச்சகத்துமுதன்மையாயிருக்கின் றபிரமன் உண்டாகிய பலசிருட்டியாகி ய இச்சகமிருந்தன. அந்தப்பிரமன் இ ச்சகத்துக்குக் காரணமல்லாத மார்க்க மெதுவென்றரசன் கேட்கவும், கும்ப முனிசொல்லுவார். சிருட்டிக்கு முன் னே கேவலமாய் உபசாந்தமாகிய பிரமஸ்வரூபமே சத்தாய்ப்பிரகாசிக்கும்; அவ்வொன்றைத்தவிர இரண் டில்லாத காரணத்தினால் மேலான பிரமாவும்காரண த்தையுடையான், என்றுசொல்ல. — அரசன் கும்ப முனியைநோக்கி, மேலானபிரமமானது பிரமாவுக்கு காரணமல்லவா வென்று கேட்க, கும்பமுனி சொல் லுவார். கைவல்யமாகியும், கெடாததாகியும், அளவி ல்லாததாகியும், உபசாந்தமாகியும், பரிசுத்தமாகியும், இறத்தலும், சனித்தலும், துன்பமும், வியத்தமும், எப்பொழுதும் நெருங்காமல், பாவமிறந்து ஆதியந்த மிறந்து அத்துவிதமாக நிறைந்து அரிதாய் சிந்தனை நீதமாகியு மிருக்கின்ற பிரமஸ்வரூப மிருக்கும். அறி தற்கரிய அப்பிரமமெப்படி காரணமாம்? யாதினால் கருத்தாவாகியும் போக்தாவாகியுஞ் சேரும்விதம்?—

ஆகையினால் இச்சகம் எவ்வளவும் பண்ணப்பட் டதன்று; சேர்ந்திருக்கின்ற இவ்வுலக முண்டானது மில்லை, சித்துமாத்திரத்தின் மேன்மையான சங்கற் பமே பிரமாவாகும்; உண்மையாக ஞானத்தைத்தவி ரவேறே யொன்றுமில்லை; ஞானமாத்திரத்தில் உண் டான சிருஷ்டியானது, அந்தஞானமேஸ்வரூபமென் று சொல்லப்படும். இருக்கின்ற சகலமும் சலனந்தீர்ந் த பிரமஸ்வரூபமே; ஆகலால் சொல்லப்பட்ட கரு த்தாவும், போக்தாவும், இவ்விரண்டுமல்லாதவன். †

௧௬௭. தற்பதத்தைத் தரிசிப்பித்து வசிப்பதத்தைத் தரிசிப்பிக்கத் தொடங்கி விடயமும், போதமும் காரணகாரிய மாகாதெனக்கூற வலெத்தன்னைக் கூறுஞ் சகத்துக்குப் பிரமன் காரண மல்லவாவெனி லியாவுஞ் சத்தாமாத்திரமா யிருத்தலிற் காரணமாகானெனல்.

௧௬௮. அங்ஙனமாயின் பிரமனுக்குப் பிரமன் காரண மன்றோ வெனி லவ்வாறுமில்லையெனல்.

௧௬௯. சர்வம் பிரமமய மெனல்.

* இ-ம். பிரமப்பிரமாமாத்திரமாகப் பாஞ்சபூத பௌதிகந் தோற்றினதே யன்றி யாதொருருவமின்மையா லதுவுமதனாற் றோற்றிய யாவையுஞ் சிற்பி ரகாசமாய் விளங்குதலாற் காரணகாரிய மிரண்டுமின்றென்று தற் பதார்த்த த்தைத் தரிசிப்பித்ததாம்.

† இ-ம். பிரமப்பிரமாமாத்திரமாய்ச் சகத்துவிளங்குதலாற் சகமே யில்லை, இவ்வணமாம்போ தெவ்வணங் காரியமாம், இங்ஙனங் காரியமாகாதபோது பிர மனெவ்வணங் காரணமாவன் இவர்க்குக்காரணம் பிரமமென்றாலது சசாதிய ம் விசாதியஞ்சுகதபேதமறத்தானேதானால் விளங்குதலி னெங்ஙனங் காரண மாமாதலாற் காரணகாரியமின்றிச் சின்மாத்திரமே விளங்குமெனத் வசிபதவரு த்தத்தைத் தரிசிப்பித்ததாம்.

௧௬௦. சர்வம் பிரமமே யென்னு மறையை யிரு வழியால் அநு ஞானிக்கெடுமெ னல்.

[illegible]

௧௬௧. அநுஞானியின் விளக்க [illegible]

[illegible]

௧௬௨. [illegible]

[illegible]

௧௬௩. [illegible]

[illegible]

* [illegible] ம், ஆதலால் சர்வம் பிரமமென்னும் [illegible] சாக்ஷியில்லாமற்போனதா [illegible] ஞானியின் சிவஸ்வரூபமாய் விளங்குகின்றதென்பதாம்.

டி கும்பமுனி யருள்செய்ததைக்கருதி தனதாகிய இப்பிரமபதத்தில் ப்ரகாச மாகசேர்ந்தடங்கினன். மனதையும், பார்வையும், மிகு வசனத்தையும் நீங்கினவன் ஒருக்ஷணத்தில் அந்தப்பிரமபதத்தில் பூரணமானன்.‡ —

௧௫௪. நிதித்தியின் காக்ஷியிற் றுக்க நிவிர்த்தியுந்தடையற்ற வானந்தமுதலிய வனுபவ முண்டாயிருக்குதோ வென்றாசிரிய ரனுபவம்வினவுதல்.

இருகடிகைநிதித்தியிலிருந்தறிந்து அரசன் விழித்தமாத்திரத்தில் மேலான கும்பமுனிசொல்லுவார். உள்ளதாகியும், நன்றாகியும், நிருமலமாகியும், பரிசுத்தமாகியும், மிருதுவாகியும், நிருவிகற்பங்களனைத்தினுக்கும் நிலையாகியு மிருக்கின்ற செல்வமிகுந்த இந்தப் பிரமபதத்தில் ஆனந்தமாகி துக்க நீங்கினையோ? ஆத்மஞானத்தில் தெளிவடைந்தாயோ? வராநின்ற பிரமை நீங்கினையோ? அறியத்தக்கதை நன்றாயறிந்தாயோ? பார்க்கவேண்டியதைப் பார்த்தாயோ? வென்றுகேட்டார்.—

௧௫௫. பெற்றவனுபூதியின் விலாசத்தைச்சொல்லுதல்.

அரசனானவன், அதற்குச் சொல்லுவார். பகவானே? உமதுகிருபையினால் மகாசம்பத்தாகிய வின்பத்தினால் மிகவுமகத்தாகி சகலத்துக்கு முயர்வாகி மிஞ்சியபரமபதத்தையறிந்தேன், அகோ! அகோ!! பிரமஞானத்தைத் திடமாகப்பெற்ற மகத்துக்கள் குழாத்தையடைந்து தெளிவான வமுதமாய்ப் பேரானந்தத்தை நிறையக்கொடுக்கின்றவராகிய வுமதுசங்கத்தினால் ஒருபொழுதுங்கிடையாதபராவமுதத்தை அடையப்பெற்றேன். —

௧௫௬. சென்றகாலத்துக்கிரங்கினவுதலுக்குத் தரங்கூறல்.

அளவில்லாததாகிய இந்தப் பராவமுதமானது அடியேனுக்கு பூர்வத்தில் அரியதானதென்னவென் றரசன்கேட்க, கும்பமுனிசொல்லுவார். மனதிற் சாந்தமடைந்து போகத்திற் கசப்புவந்துவலிய விந்திரியங்களதத்திற்றிரும்பி மன வஞ்ஞான நசித்தபோதே, வனத்திலுண்டாகும் சிவந்த குசும்பாசலமானது களங்கமற்றவஸ்திரத்தில் ஒளிவடைவதுபோல, சீடனுடையமனதில் மேன்மையான சற்குருவாக்கியம் கலந்து நன்மையாகும்; தேகத்திலுள்ள களங்கங்களும் விருக்ஷத்தினது கனிகளைப்போல நழுவிப்போகும். —

௧௫௭. இங்ஙனம்பெற்ற வனுபவப்படி ஸ்திரமாய் நிற்பாயெனல்.

மனதில் இரண்டென்றும், ஒன்றென்றும், நினைத்தலே யஞ்ஞானமாம்; இவ்விரண்டு நீங்குதலே ஞானமாகும், தெளிவான பரகதியுமதுவேயாகும். தெளிவுற்று மோக்ஷத்தையடைந்தாய், மனதையுந் தவிர்த்தாய், ஞானசம்பத்தையுடையவனாய் தள்ளப்பட்ட களங்கத்தைவிட்டு மகா மௌனியாய் தனித்திருப்பாயென்று கும்பமுனிசொல்லவும், சீவன்முத்தர்கள் கொள்ளப்பட்ட செயல்களனைத்தும் மனதினாலல்லவா, கொள்ளப்பட்ட மனதை யன்றி நடக்குந்

‡ இ-ம் சந்தேகம் விபரீதமின்றி யாத்மஸ்வரூபத்தைத் தரிசித்தானென்பதாம்.

கஙஅ. சமாதி யிற்றியானித்தல் முதலிய தொழி லொன்றுமின்றி யெங்கனம் கூடு மெனி லதற்குத் தரங்கூறல்.

தன்மை யாது?— சொல்லவேண்டுமென்று சீடனா னவன்கேட்க, குருமுனிவர் சொல்லுவார். மனமென் னுஞ்சொல்லியது மற்பொருளன்று; அனாதியான சகல ங்களைக்கொடுக்கின்ற வாசனைகளேயாம்; வாசனைபட் டன்னைத்தெளிந்துகொண்டால் அதனால் சாதி யில்லை; [illegible] அருந்தவர்கள் கருமங்களிற் சஞ்ச ரிக்கின்ற சித்தவாசனைகளையடக்கிக்கொண்டாரது அவ் வுயர்வுள்ளமனதை சாக்ஷியென்று சொல்லுவார் கள்; ஞானமில்லாதமனதை மனமென்றழைப்பர்.—

கஙக. இதுவுமது.

ஞானமுள்ள மனதை, சாக்ஷியென்று சொ ல்லுவார்கள்; ஞானமில்லாதவர்கள், மனதினை யறி யமாட்டார்கள்; ஞானமுற்றவர்கள், சாக்ஷி யுத்தியறிந்தவர்கள். யாதொன்று வளர்க்கும் மோக முதலிய இவைகளையும் கொடுக்கின்ற தோ ஆகிய வாசனைகளையும் கண்டு சமனமாய் வயம் பண்ணுவர்களென்றோ, இங்கிடத்தில் அது வேயென்று சொல்லுவார்கள். அவ்வாறாய ஞானிகள் ஒன்றையுங் கைக்கொள்ளாமல் மனோவாசனை யில் லாமல் இடமாக இருப்பார். * —

கச0. பிராரத்தமுண்டான வப் ரணம் பிராமணர் விசாரித்தல் தன் மனதைக் கைவிட்டுத் தொழிலை யொழிக்க சமாதியடைய விரும்புஞ் சலனசலனமின்றி யுயிக்கும் கூட மெய்யுணர்வெனி லதற்கு த்தரங்கூறல்.

மனமில்லாதவர்கள் பிறவி வெரு ண்டிருக்கிறார்கள், பின்புண்டாயினும் அவர்களது சம்சாரமில்லாது; பிர பஞ்சத்தின்மையினாலே சஞ்சலத்தினின் றண்டாதவருஞ் அவர்களுக்கு அவ ரவர்களுடைய இராமனைப்போல ன்றுக்கு சஞ்சலத்தைக்கொடுக்கும் ஞானமும்படைத்து மிருப்பாரென்று குருமுனிவர், ஆராமன்சொல்லு வான். அமிர்தமான வடிவைப்பது? அந்தமனவயா னையும் இராமனென்றுக்கிருக்கும். சொல்லுவா

கசக. இதுவுமது.

னென்றாமன்கேட்க, குருமுனிவர் சொல்லுவார்;— சமு த்திரத்தின் அலைகளுக்குப்போல சகலங்களைக்கும் கா ரணமாகிய சித்தத்திரமேயாகும்; அசித்தத்திரமா னது, புத்திமயமிருக்கிறதில் நினைப்பதற்கானது போலேயிருக்கிற அந்தச்சலனமில்லாமல், சஞ் சரிக்கும்; பிரமம், சித்தத்திரம், சத்தியம், பி ரமமுதலிய ஆதேயவாக்கியங்கள் பரமாத்துமாவைச்சொல் லிய பாவனையாக ஒன்றென்றுக்கு, இத்தை...

* இடம். வாசனாசுரூபமான மனதிற்றின்மைதான் மறைந்தபின், இராமனது ஞானத்துடன் கூடிய வெளிப்புறத்தில் அவிவேகமுமாகிய செய்யுள் தொழிலாற்றலைத் தக் கொடுக்குமனதுக்கு மனமென்றுபேர். சித்தசுத்தனுடன் கூடிய சமுகத்தின் ஞானமயமாய்ச்செய்யும் வினையால் முத்தியைக்கொடுக்கும் மனதுக்கு மன மென்பெயரின்முனிதலா லக்ஷிமணையுதிக்கும் மனவாக்கியார்த்தப்படி. சல னசலனமின்றிச் சுயஞ்சோதியே நியாய் விளக்குமென்பதாம்.

யற்மூடர்கள் பார்ப்பார்கள்; சித்தானது கொஞ்சமசைந்தமாத்திரத்தில், சகசிருட்டியுண்டாகும். — தோன்றின சகசிருட்டியை ஞானகமாகப்பார்த்தால் அது இறந்துபோகும்; திடமாகவறியாததன்மையினால், பழுதையில் சற்பமென்பவர்களைப்போல, நிரிஸ்யமாகப்பார்த்தார்கள். ப்ரத்யக்ஷமாகின்ற ஞானசாஸ்திரங்களிலுலும், சாதுசங்கத்திலும், தடையற்றஅப்பியாசத்தினலும், சிலகாலத்தில் மனமானது விமலமாகசந்திரனைப்போலநின்றல் பழமையான அநுபூதிமயமாகவேஞானசம்பத்தான் அவர்களுக்கு இந்ததிருஷ்டிதோற்றும். ¶ —

௧௬௨. பிரமத்திலுண்டானஸ்புரணம்பிரமமாய் விளங்குதென்பதைக் கையால் டீ தொருமையாய்ச் சமதியடையு நிமித்தஞ்சலனசலனமின்றி யமிக்கியக்கூடும் விதமெக்கான மௌனி லதற்குத்தரன்கூறல்.

௧௬௩. சமாதியிற் றனது ஸ்வாநுபூதியினின்று ஸ்புரிக்கின்ற ஸ்புரண மெதிரிடாமற் றன்மயமாக்கிக்கொள்ளெனச் சமாதியில் வைத்தல்கூடுகிமித்தந் தனியே வைக்கிவோத்தல்.

சகத்தினுடைய உற்பத்திலயத்தின் தத்துவத்தைச் சொன்னேன்; இந்த அருந்தத்தை சுகமுண்டாக வப்பியாசித்து சிந்தித்துவழுவாமல் விரும்பியபடி நீக்குதலில்லாமல், நேரிட்டவனைத்தையும் பிரமபதத்துக்காகச் செய்திருப்பாய். சகலத்துக்கும் திலதமாகிய சுவர்க்கலோகத்தை யானடைவேன், இதுவே, காலமாம், —

௧௬௪. இதுவுமது

சத்தியலோகத்தினின்றும், தெய்வலோகத்தையடைந்து அவ்விடத்திலென்னைப்பார்க்கானுயின் எனதுபிதவாகிய நாரதமுனியானவர், படப்படும்படி கோபிப்பார்; அன்புள்ளசிட்டர், மேலான வாசாரியரை கோபம்வரும்படிசெய்ய எவ்வளவுங்கூடாது, அதாகனே? மயக்கமில்லாமல் வேற்றுமையைக்கெடுத்து சங்கோசித்து, இந்தத் திருட்டியி லிருப்பாயென்று கும்பமுனிசொல்லி, † — யாம் போகின்றேமென்று கும்பமுனியானவர் மறையவும்: அரசனானவனினைக்கின்றான். குளிர்ச்சியாகியும், பரிசுத்தமாகியும், உபசாந்தமாகியும், தெளிந்த வமுதலூற்றுக் கொப்பாகியுமிருக்கின்ற இந்த வொப்பற்ற பதவியானது, எனக்குள்ளிருந்தவிதம் ஆச்சரியமாச்சரியம்!!! குற்றமற்ற வென்னை சாத்தாமாத்திரத்தில் விஸ்ராந்தியடையச் செய்ததென் றரசன்சொன்னான். — உண்டாகிய வாதனைகளிறந்து சலனமற்று நிலையினீங்காதவனுய் மௌனமாகியும், நிருவிகற்பமாகியும், இச்சையனைத்துமற்ற இடத்திலமர்ந்து கல்லைப்போலவும், மரத்தைப்போலவும், மதிலைப்போலவும், சமாதியிலிருந்தான்.

௧௬௫. சித்திழிற்கண்டபோதகற்போத மேதானுகவியப்புறுதல்.

௧௬௬. வியப்புற்றபடி சமாதிகூடல்.

¶ இ-ம். உற்றியும் புனலும்போலச் சுயஞ் சைதன்யமு மதன்ஸ்புரணமும் விளங்குதேயன்றி வேறின்றெனக் காரணத்தைத் தரிசித்ததுவாக நிற்கிற்காரியமு மதுவாக விளங்கு மப்போது சலனுசலன மின்றி யமிக்கியமான நிருவிகற்பசமாதி கூடுமென்பதாம்.

† இ-ம். நிருவிகற்பசமாதி கூடுநெறியையறிவித் தகன்றனரென்பதாம்.

கசுஎ. ஆசாரியர் சொன்னபின்னு மெழுந்திருந்தல்.

கசுஅ. சாமாதியிலனைவருமிருந்தாலேப்பார்த்து ஆசேவித்தல்.

கசுக இருவருமது

கஎ0. இருவருமது.

கஎக. ஸாமிய ... சத்துவசேடமென்னமிருக்குமெனல்.

கஎஉ. தேக ... சத்துவசேடமிருக்குமெனல்.

சென்ற குருமுறைமியென்றுதுரைந்த குடாவேயானவன் மு ன்னுமிய புட்டக்கொடியென்ற தனை அருமானை - ந்து, ¶ — ஆசாரியர்த்திருமேனைச் சங்கைப்பரத்திற் புரும் தான் ; பூரிமானையும் வரதுபாமலெனப் பிரபித்தான்; முன்னுமுடந்த சென்றது. திருமனையும் குருமுறனி யாய் தலைவனிருக்கின்ற வனத்தையடைந்து அங்கனி டத்தி லக்கனை யவர்ப்பர்த்தான் ; அவனைப்போலவே தி ருவிசுறமானதிலி விருக்கனையைப்பார்த்து, — மாத வானைத் தெரிவிப்போமென்று மின்னுத்தொவிமி னுஞ் சத்திக்தலையிலும் அறிக்கதில்லை ; மேறுமேல க்கரித்து, இந்தக் குடாவேயானவன், அனேகர் கவி முப்படிகளையும் மேடுமேடுக்தமுனைக்கிலவன் ; இ தென்னவென்று லிமாசைக வாதுமிக்கின்ற குருபவடி. வக்கையுடையா—நித்தமுனையாகன், பிராயத்திற் கவிதான், சந்தேசமா!!! இத்தக்கவிமானைசாரித் தைக் கேட்கிறேல்; இருபாத்தில் அறிவுக்குமிகுதியா மிய சத்துவசேட மிருக்குமானின் காயகனைச்சேர் ந்து மிருதுவாக திராமக வாழ்வோம் ; சத்துவசேட மில்லாவிடின் மாது மடக்கவுருவாக்கை விட்டு,—

மறுமிறப்பா அவனடையாது. குற்றமற்ற பிராமத் தை யடைவோம். விசாரித்தமென்று மிக்கித்து பரித்திலுமும், மன்னிலுமும், அம்மான் அறிவு க்கு விசையமைப்பெறுத்திய சத்துவசேடமானது கெடுதலில்லாமல் இருபாத்தில் இருக்கைப்பார்த் தாமென்று வினிட முறுமெனவல, § — இதைக்கேட் டவும், ஸ்ரீமான்சொல்லுவார். சொல்லப்பட்டவை அமுறைக்கிட்டு, கட்டைப்புக்கலைப்போல பசி சத்தானை குருவிருந்து யிலைவைக்கறைத்தது இன் விடத்திற் சத்துவசேடமானது எப்படிப்பிடமெ ன்றுகேட்க, தனக்கினைப அறிவிக்கவிருக்க வினிட மாமுறைவியானவர் சொல்லுவார். — விசைகக்குள் புட்டமும், புறமையும், கொருந்தி யிருப்பதுபோல, இருபாத்தில் அறிவுக்குமானமிய சத்துவசே டமிருக்கும் ; சென்றுத்தவும் மயேமானவனும் வயிலமாதன சரீரமியாது ; மேமவிக்கவியருக்கும் மிய ககுதக்கவிடமிட்டமான் மூத்தமானமாகும் † —

¶ இ-ம். ஆசாரிய சதுக்கிரமத்தி வழைமமான தனது விமையூடுதிலைக்கிர மாய் மிருவிகற்பமாதி யடைக்தவென்பதாம்.

§ இ-ம். இக்காமதி சென்றுத்தமை, விதேகமுத்தமனெவன் றைமுற்துகன்றிப் பார்க்கின் சென்றுத்திருவ்வாமி வினைகளைத் துக் கடைநென்பதாம்.

† இ-ம். சத்துவசேட மிருக்குக்குள்ளமை விறுமினைதற் றுத்தால் கூறினைதாம். சத்துவசேடமென்பது, அறிவுக்கு வித்தாமியாத்தில் அக்கமுடைய சென்று த்திபரிபக்தம் கரையாமடைவி மூன்னைதாயமிருகி யிருந்தல்லனவெனக.

களங. சித்தா ய்ச்சென்று சத் திலடங்கியிருந்த சித்தைவெளிப்ப டுத்தல்.

ஆதலினால், ஸ்ரீராமா ? அத் தெய்வகன்னிக்கொப் பான சூடாலையானவள், அக்கும்பவடிவத்தை விட்டு குற்றமற்றதாய் ஆகிமத்தியாந்தரகிதமான சித்தினு ள்ளேபுகுந்து, மேன்மைபொருந்திய சத்துவசேட மடைந்திருக்கின்ற அரசனதுமனதை சலிக்கச்செ ய்து, குற்றமற்ற தனதுசரீரத்தில், கூண்டிலடைகி ன்ற பட்சியைப்போல, திரும்பவந்தடைந்தனள். —

களச. சத்தினி ன்றுஞ்சித்துவிக சித்தல்.

கும்பமுனிவடிவமாய் பூமியில் தன தாசனத்திலி ருந்தவளாய் பிள்ளாங்குழலைப்போலபாட சாமகா னஞ் செய்துகொண்டிருக்க, கட்டையைப்போ லிரு ந்தவரசன் சரீரத்தில், சாத்துவிதகுணத்தை யடை ந்திருக்கின்ற ஞானமானது, வண்டுக்கொப்பாக பாடு கின்ற சாமகானத்தைக்கேட்டு, மெல்லமெல்ல ஆதி த்தகிரணத்தைச்சார்ந்த தாமரைமலரைப்போல விக சிதமாய் அவனுடையமனது நிலையாகி, — கும்பமு

களரு. ஆநந்த த்தோடு மாசிரிய ரைத்தரிசித்து வ ணங்கித் துதித் தல்.

னியைப்பார்த்தனன். இன்பமிகுந்த மனதையுடை யவனாய் தடையற்ற கிருபையினால், என்னைச் சுகிக் கச்செய்யும்பொருட்டு முன்பெழுந்தருளிய குருநா தன் சுயமாகவேவந்தாரென்று, நல்லபுட்பங்களைச் சொரிந்து வணங்கித்துதிசெய்ய, பூமிக்கரசனைபின்ப ந்தக்கும்ப முனியானவர்பார்த்துச் சொல்லுவார். ¶

களசு. சீடன் சமாதி சுகத்தை க்கண்டு சந்தோ டித்தல்.

இவ்விடத்திலிருந்து நீங்கினநாள் துடங்கி இன் றையவரைக்கும், உன்னிடத்தி லென்மனமானதுபிரி வற்றிருந்தது ; தெய்வலோகமும் உனது சங்கத்தை ப்போல இன்பமல்லவென்று கும்பமுனிசொல்ல, பெருமையிற்சிறந்ததெய்வமே ? உம்மாற் சுகத்தைய டைந்தேன் ; பரிசுத்தமாகி சுகசமாதியில் துன்பமற் றேன் ; —நிருவிகற்பசமாதியிலுள்ள ஆநந்தமானது

களஎ. ஆசிரிய ர் அவ்வநுபவவி லாசத்தை நான் குவிதமாகப் பகு த்து வினவுதல்.

புண்ணியநிறைந்த சுவர்க்கத்திலுமில்லை ; தனிமை யாகி அவ் வாநந்தத்தையடைந்து தெய்வலோகத்தி லும், பூலோகத்திலும், உலாவுவனென்று வேந்தன் சொல்ல, கும்பமுனிசொல்லுவார். அரிதான பிர மாநந்தவாழ்வில் வருத்தங்களனைத்து நீங்க சுகித் தாயோ ? —வேற்றுமையேயுருவமாயிருக்கின்ற துய

சஎ. இதுவுமது.

ரங்களை கெடுத்தாயோ ? வரும்பொழுது இனிமையா கிய சங்கற்பத்தில் கொண்டசுகத்தை குற்றமென்று மூலத்துடன்கெடுத்து சமதிருஷ்டியை அடைந்தா யோ ? எதிலும் விடுதலும் பற்றுதலுநீங்கி நேர்ந்த காரியங்களைச்செய்து சுகமடைந்தாயோ? † —இப்படி

களஅ. அநுபவ விலாசத்தை த்

யென்று கும்பமுனிகேட்க, உமது கிருபையினாலும்

¶ இ-ம், சமாதியி னிரதிசயாநந்தமாய்க் கரைந்த வறிவெவ் வநுபவத்தோடும் வெளிப்பட்ட டாசிரியரை யத்தவடிவமாகத் தரிசித்ததாம். [வினதாம்.

† இ-ம், சுட்டறப்பெற்றச் சுகாநுபவத்தைச்சுட்டிற்றரிசிக்கப் பகுத்துவி

சொல்லுதல்.

என்பங்கிலுள்ள தேவாதீனத்திலும், திரிஸ்யமலை
த்து நீங்கினவதீதத்தில் மனாநிலையாயிருந்த சம்சா
ரத்தினது முடிவைப்பார்த்தேன் ; வரப்பட்ட இலா
ங்களனைத்தையும் திடமாகவடைந்தேன் ; கேட்ப
ற்கும் பார்ப்பதற்கும் விரும்புவ தொன்றுமில்லை
எப்பொழுதும் பூரணமானேன் ; துன்பநீங்கினேன்

௧௮௦. அனுபவ விலாசத்தைச் சொல்லுதல்.

பவநீங்கினேன் ;—பயமற்றேன் ; மோகமற்றேன் ; ப
றற்றேன் ; சமமாய்நின்றேன் ; மேன்மையடைந்தேன்
சகலமுமானேன் ; ஒருதொழிலுமில்லாதவனானேன்
ஆகாயத்தின் றன்மையையொத்த தெளிவையுடை
வனாய் உபசாந்தத்தையடைந்தேன். மயக்கத்தினது
தொழிலையெல்லாம் தாண்டினமனத்தையுடைய சிகி
த்துவசனென்னு நாமத்தையுடைய அரசன்சொ
ன்னான். ¶ — அப்படியே இருவரும் ஆன்மதத்துவ

௧௮௧. சகசதிருட்டியினாற் சாக்ஷாத்காரவனுபவமுண்டாகும் பொருட்டாசிரியருஞ் சீடனும் ஒன்றாகச் சஞ்சரித்தல்.

௧௮௨. தாங்கள் கொண்ட கோலமே கோலமாகச் சஞ்சரித்தல்.

தினது அழகான விசாரணையினாலும், தெளிகின்
வசனங்களினாலும், அழிவில்லாதவன்பின் மிகுந்தவ
கள்தங்களிற்றாங்கள் அறிந்துகொண்டு,விருப்பத்தை
யுடைய கானகங்களிலும், தடாகங்களிலும், மலைக
லும், வேற்றுமையின்றி எவ்விடத்திலுஞ் சுகித்தா
கள்.—சுபாவமானஞானத்திலும், அன்புள்ள தொழ
ல்களிலும், ஒப்பில்லாதவர்கள், இராகமும் துவேட
முமாகிய மயக்கத்தை யொருங்கேயொழித்து தெ
றற்காற்றுக்கு சலியாத மகம்மேருவுக் கொப்பானவ
கள், சொல்லப்பட்ட சரீரத்தில் ஒருபொழுதுவிபூதி
யைப்பெருமையாகத்தரிப்பார்கள் ; ஒருபொழுதுவா
சனையுள்ள சந்தனத்தைத்தரிப்பார்
கள் ‡—கொஞ்சகாலம் கூடவேவாழ்

௧௮௩. முன்பு ஞானமும் போகமும் வீடுமின்றளிப்பே னென்றபடி ஸ்வரூப ஞானத்தைக் கொடுத்துப் போகங் கொடுப்பதற் கதின் பற்று நீக்கப் பரிசோதிக்கச் சிந்தித்தல்.

ந்திருந்து, மதுரவசனத்தை யுடை
சூடாலையானவள், அரசனை மனநி
பார்த்து, தன்னைப்பிரிந்திருக்கிறன்
லைவனை சிகித்துவசன் அனுபூதிய
ல் மிகவுமுறுதியுள்ளவனாய் துன்ப நீங்கினான். மிகு
த அழகையுடைய இளமையாகிய சம்பத்தும் புட்ப
ங்கணிறைந்த வரண்மனையுமாகிய சகலமும் இல்லா
மையைப்போல சுகிக்கின்றவர்க ளில்லாமையினா

௧௮௪. ஸ்திரீயிச்சையைப் பரிசோதிக்கச் சிந்தித்தல்.

வீணாய்ப்போகும். — பூரணஞானத்தை யடைந்த
ர்கள் சுபாவமாக வலியவந்ததை தவிரும்படியாக வி
டுவார்களானால் தத்துவத்தை அறிந்ததென்ன, சுன்
மார்க்கமுள்ளவரசன் நம்மிடத்தில் கலியாணஞ்செய

¶ இ-ம். நீக்கவேண்டினபேதநீங்கி யடையவேண்டின வபேதமடைந்ததை
ப் பதினோர்துவிதமாகப் பகுத்துச் சொல்லியதாம்.

‡ இ-ம். இராகத்துவேடமின்றி யேதேதப்படியோ வதுவதப்படியாய் வி
ளங்கினானெனவறிந்ததாம்.

வதற்கு உண்டாகிய வொருத்தியை அழிவுற்றவுணர்
விஞல் இவ்விடத்தி லுண்டாக்குவே மென்று மன
இனினைத்து, — நாயகனைப்பார்த்து கும்பமுனியான
சூடாலைசொல்லுவாள். தேவலோகத்தில் இன்றைய
தினம் ஒருநிலைபெறும்படிசெய்யும்திருவிழாவுண்டு ;
அவ்விடத்தில் பொருந்திய நாரதருடன் நானும், அ
சைவர விருக்கவேண்டும் ; மேலான நியதியின் பல
த்தை யாவர்செயிப்பார்கள் ; அஸ்தமன பர்வதத்தி
ன்மேல் சூரியன் போகின்றசமயத்தில், இதோ சீக்
கிரமாக இவ்விடத்தில்வருவேன் ; —நீங்குதற் கரிய
வறிவுடன் நீ இவ்விடத்திலிருப்பாயென்று, ஒருவா
சனை பரிமளிக்கும் புட்பக்கொத்தை சிகித்துவ வரச
னுக்குக்கொடுத்து ஆகாயத்திலெழும்பினுள் ; அவ
ன்கண்ணுக்குத் தெரியாதவரைக்கும்போய் சுமந்தகு
ம்பனென்கின்ற சரீரத்தைவிட்டு தனது சூடாலைவடி
வமுள்ளவளானுள்.—தேவேந்திரனுனவன், இருக்கி
ன்ற தெய்வலோகத்துக் கொப்பாகிய தன் அரண்ம
னையிற் புகுந்து யாவருமறியாதபடி அரசநீதியில் இ
ராசகாரியங்களை முறைமையாகச்செய்து, சந்திரனை
ப்போல குளிர்ந்தமுகத்தையுடைய சூடாலையானவ
ள், திரும்பவும் கும்பமுனிவடிவமாகி நாயகனிடத்தி
ல் வந்திரங்கி மிகவுஞ் சுருங்கினமுகத்தை யுடையவ
ளைப்போலாகி, — பனிமூடிய சந்திரனைப்போலவும்,
தாமரைமலரைப்போலவும், சோம்பலாய் மிகவும் வ
தனஞ்சுருங்கி மனதிற்றுன்பமற்ற கும்பமுனியானசூ
டாலையானவள் சேர்ந்தவளவில், பரிசுத்தமுள்ள கண
வனுன சிகித்துவசனும் கும்பமுனியைப்பார்த்து, சீக்
கிரமாக வெழுந்து பிரார்த்தனைசெய்து எனது பிதா
வே ? துன்பமடைந்தவர்களைப்போலக் காணப்படுகி
ன்றுய் ! துன்பமென்ன, கெடுப்பாயென்று, — உண்
மை ஞான மடைந்தவர்கள் தளரார்கள் ; சந்தோஷி
யார்கள் ; தாமரையிலையானது கூடியிருந்த சலத்தில்
பொருந்துமோ, என்றரசன் சொல்லவும், வஞ்சகவ
டிவத்தையுடைய கும்பமுனி சொல்லப்பட்ட வேய்
ங்குழலினேசையைப்போலஅதிசயமாகவொருசரித்திர
த்தை சிகித்துவவரசனுக்குச் சொல்
லுவாள். †—திரமாகச்சமத்துவமன
திில்சேர்ந்தவர்கள், தேகமிருக்குமட்
டும் கன்மேந்திரியங்களோடும் பொ
ருந்தார்களாயின், ஞானிகளல்லவஞ்
சகராவார்கள். சுயமாகவேவந்தடை

கஅரு. திருவிழாவைக்குறித்துச் செல்லவேண்டுமெனல்.

கஅசு. சகசசமாதியிலிருத்திச் செல்லுதல்.

கஅஎ. அரசாட்சிசெய்து வருதல்.

கஅஅ. ஓர் பாசாங்குரைக்க முகம்வாடிநிற்றல்.

கஅகூ. அரசன் றேற்றுதல்.

கசுO. பிராரத்த கன்மசேட மனுபவித்து நீக்கவேண்டு மென்பதை யுறுதிப்படுத்து நிமித்த நீங்காத தேக கன்மத்தை நீக்கும்படி நினைத்து வருந்துவார்களெனல்.

† இ-ம். மாபோகத்தைக்கொடுக்கு நிமித்தம் பரிசோதிக்கத்தொடங்கினதாம்.

[illegible]

‡ இ-ம், யாவராலும் பிராரத்தகன்ம மநுபவித்துத் தீரவேண்டுமென்பதாம்

சிக்கின்ற விபசாரிகளைப்போல போகத்தொடங்கினு
யென்றுசொல்லிய வென்னை, அந்த ரிஷியானவர் மிக
கசுஎ. அருவா சமுனிசபித்ததா க்க ற்பித்துச் சொல்லுதல். வுங்கோபித்து, — நீ இங்ஙனமிசைத்தலால் இரவுக
ள்தோறும் அழகிய வாபரணங்களையணிந்த பெண்
ணுகி இருப்பாயென்று மூதுணர்ந்தமுனிவன் சாப
மிடவும், அந்த வசனத்தைக்கேட்டழுது முனிவன
து பாதபங்கயத்தை துதித்து, வேண்டிக் கொள்வத
ற்கு சிந்தித்தேன் ; நொடியில் முனியானவர், மறை
ந்துபோனர். அதைப்பார்த்து மனம்வருந்தி இவ்வி
டத்தில்வந்தேன் ; பெண்ணுருக்குணம் எனக்கு நீங்
கசுஅ இதுவுமது காது.—ஆசாரியர், தேவர்கள், முனிவர்கள், முதலா
னவர்கள் குழாங்களைத் தரிசிப்பதற்கு நாணுமல் இ
ராத்திரியில் பெண்ணுகி எப்படியிருப்பேனென்றுகு
ம்பமுனிசொல்லவும், சிகித்துவ வாசனுனவன் தேவ
ர் பயப்படாதிரும் ; இரங்குதலால் வருகின்ற ப்ரயோ
சனமென்ன ; நியதிவல்லமையினுல் வருவது வரட்டு
ம் ; சரீரத்துக்கல்லாமல் களங்கமற்ற வாத்ம ஞானத்
கசுகூ இதுவுமது திற்பொருந்தாது —ஞானத்திஞன் முதிர்ந்த நீர், து
யரினிடத்தில் மூழ்குதற்குரியதாமோ ; அறிவில்லா
த மூடர்களல்லவா மனதிற் றுன்பப்படுவார்களென்
று தெளிவித்து, தங்களிற்றுங்கள் பிரியாமல் சுகது
க்கங்கள் பேதமில்லாமலிருந்தார்கள். அவ்வளவில் நீ
திநிறைந்த கும்பமுனிக்கு பெண்வடிவந் தரச்செல்
உ00. இரவிற் பெண்வடிவம் வருதல். வதுபோல சூரியன்மறைந்தான்.¶— மாலைப்பொழு
துவரவும், நித்தியகன்மங்களைசெய்திருந்தார்கள் ; அ
க்காலத்தில், முன்னேயிருக்கின்ற வேந்தனது முகத்
தைப்பார்த்து கும்பமுனியானவர், தளர்வுடன் கூறு
வார். இச்சரீரமானது பூமியில் விழுவது போலும்,
பெண்குறிகள் மேலெழுகின்றதுபோலும், விளங்கு
வதுபோலும், மிகுந்த வெட்கத்தோடுங் கூடிய பெ
ண்தன்மையானது அரசனே ? என்னைவந்து சுற்றி
உ0க. பெண்ணி னவயவங்க ளைக்காட்டுதல். க்கொண்டது ; —அளகம் வளருகின்ற தைப்பார், த
னம் வளர்கின்றதைப்பார், கூடவருகின்ற வஸ்திரத்
தைப்பார், நெருங்க முன்குறியும் பின்குறியுமுடைய
பெண்வடிவமானதைப்பார், அரசனேயென்று துக்க
ப்பட்டவனுய் உபசாந்தமுள்ள கும்பமுனியுமிருந்தா
ர். அரசனும், சோர்வுற்றிருந்த வாசிரியரைப்பார்த்
உ0உ. வத்தகன்ம மனுபவிக்கக்கடவதென்றிரக்கமுற்றிருத்தல் து,—ஞானவானுகிய நீர் நியதிமார்க்கத்தை நன்றாக
த் தெரிந்தனை ; வாத்தக்கது வந்தால் துன்பப்படா
தேயென்று வேந்தன்சொல்ல, மேலான கும்பமுனி
யுஞ்சொல்லுவார். இனிச் செய்யவேண்டியதென்ன!

¶ இ-ம். இரவிற் பெண்வடிவு வருதலைநோக்கி வியசனமாகக்கூறினதையா
த்மாவுக் குண்டோவெனத் தேற்றினதாம்.

[illegible]

§ [illegible]

ழ்ந்த வனங்கள்தோறும் சிவந்தவாயையுடைய மயில்போன்ற சூடாலையும் சிகித்துவவரசனும் சஞ்சரித்தார்கள். மும்மூன்றுநாளில் கொடிய வாளாயுதத்தையுடைய வேந்தன் நித்திரைசெய்கின்றசமயத்தில்

௨௦௯. இடையிலாசுசெய்தல். சூடாலையானவள்,—அடிக்கடிபோய் அரசனது தேசத்தை நீதியாக நடப்பித்து, படுக்கையில் நீங்காதவளைப்போலத் திரும்புவள். விவாகஞ்செய்த மதனிகையென்னு நாமத்தையுடைய பாரியாளாகிய சூடாலையானவள் இப்படியிருந்த சிறிதுநாளின்பின்பு, மன

௨௧௦. செல்வத்தி விராக முளவோ வெனப்பரிசோதிக்கத் தொடங்கல். திலொன்றைச் சிந்தனைசெய்வாள்.†—இவ்வுலகத்திற் பொருந்திய போகங்களில் இவ்வரசனுக்கெப்போதும் ஆசைபொருந்தாது ; மிகுந்த தேவபோகங்களினால் சோதிக்கவேண்டுமென்று நினைத்து, தானப்பியாசஞ் செய்திருக்கின்ற அணிமாமுதலிய வித்தைகளினால் நான்குபுறத்திலுந் தேவர்கள் சூழ்ந்துவரதேவேந்திரன் இந்தக் கானகத்திற் றோற்றும்படியாக

௨௧௧ இதுவுமது ஒரு மாயைசெய்தாள்.—வந்திருக்குந் தேவேந்திரனை அரசனானவன்பார்த்து நமஸ்கரித்து முன்னே வாராதனைசெய்து, முதன்மையானவரே ? நீர் இவ்விடத்தில்வர என்னதருமத்தை முன்செய்தேனோ வென்று சொல்ல, தேவேந்திரனும் அச் சிகித்துவ வரசனைப் பார்த்து அன்பினால் இவ்வண்ணஞ்சொல்லுவான்.—

௨௧௨ இதுவுமது உமதுகுணத்தி னன்மையினால் தேவர்களோடு மியான்வந்தேன் ; தேவலோகம் உமக்கேயாகக்கடவ தென்று அவ்விடத்திலுள்ளஸ்திரீகள் உமது வரவைப் பார்த் திருக்கிறார்கள் ; அரம்பைமுதலிய தெய்வஸ்திரீகளது அம்புசமலரைப்போல முகமானது விகசி

௨௧௩ இதுவுமது க்க சூரியனைப்போல் வருவாய்.—கற்பகாலமட்டுமிருந்து தேவபோகங்களனைத்தையும் விசித்திரமாகப்புசிக்க, சீவன்முத்தியையுடைய வரசனே ? க்ஷணநேரந்தாங்காமல் வருவாயென்று அழைக்கும் பொருட்டு வந்தேனென்றுசொல்லிய தேவேந்திரன் சொல் விசித்திரங்களைக்கேட்டு, மேவான வரசன் கூறுவான்.—

